வெளியீடு : 17-1-2017 Issued : 17-1-2017

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஆகஸ்ட் 5, 2016—தொகுதி 8—எண் 1

Friday, the 5th August 2016—Volume 8—No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

5–8–2016

உள்ளடக்கம்

		பக்கங்கள்
	ஆளுநரும் அமைச்சரவையும்	v-x
	Governor and Council of Ministers	xi-xvi
	பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்	xvii-xx
	பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி)	xxi-xxxi
1.	**வினாக்கள்–விடைகள்**—	
	உடுக்குறியிட்ட வினாக்கள்	1-43
2.	**கவன ஈர்ப்பு**—	
	திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி விசைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் உற்பத்தித் திட்டம் குறித்து	43-48
	*திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்	43,45-46
	மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்	43-45,47-48
3.	**மானியக் கோரிக்கைகள், 2016–2017, விவாதமும் வாக்கெடுப்பும்**— தொடர்ச்சி	
	(அ) கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ஆ) கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (இ) கோரிக்கை எண் 53–சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை	49-91,110-256
	மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி	49,68-69,87, 91, 114-115, 118-120, 122, 127-129, 137-138, 168-169, 197-200, 209-254

பக்கங்கள்

3. மானியக் கோரிக்கைகள், 2016–2017, விவாதமும் வாக்கெடுப்பும்— *தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை *(ஆ) கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை* *(இ) கோரிக்கை எண் 53–சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை*	*தொடர்ச்சி*
திரு. மா. சுப்பிரமணியன்	56,111-118, 120,123-125, 132-133, 135, 138-140, 253
மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா	111-112, 115-116, 126, 130-131, 133, 139-140, 141-142
**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்*	120-121, 201-203, 205
**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்*	121, 124
**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி*	125-126, 200-201
**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்*	131-132
மாண்புமிகு திரு. பி. தங்கமணி	135-137
**திரு. சு. ராஜேந்திரன்*	140-141, 143-150
**திரு. விருகை V.N. ரவி*	150-161
திரு. மு.க. ஸ்டாலின்	157, 251
**திரு. வி.எஸ். காளிமுத்து*	161-168
மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு	170
மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்	170-171, 204-205

பக்கங்கள்

3. மானியக் கோரிக்கைகள், 2016–2017, விவாதமும் வாக்கெடுப்பும்— *தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
(ஆ) கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
(இ) கோரிக்கை எண் 53–சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை } *தொடர்ச்சி*

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்*	171
**திரு. தூசி கே. மோகன்*	171-178
**திரு. ஐ.பி. செந்தில்குமார்*	55-56, 74-75, 178-196
**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்*	196-197
மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு	203-204
மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்	206-207
மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்	207
**மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்*	208-209
திரு. அர. சக்கரபாணி	253
திருமதி எஸ். விஜயதரணி	254

4. விதி 110–ன்கீழ் அறிக்கை—

நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் மின்னணு கொள்முதல் திட்டம் மற்றும் புதிய கட்டடங்கள், வலங்கைமானில் ஒருங்கிணைந்த நவீன அரிசி ஆலை, கோட்டூர் மற்றும் நீடாமங்கலம் பகுதிகளில் சேமிப்புக் கிடங்குகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை	91-100

பக்கங்கள்

5. வேளாண்மைத் துறை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை குறித்த முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி—	100-109
திரு. எம். தமிமுன் அன்சாரி	100-101
திரு. உ. தனியரசு	101-104
* *திரு. சே. கருணாஸ்*	104-106
திரு. கரி. இராமசாமி	106-107
* *மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு*	107
* *மாண்புமிகு திரு. இரா. காமராஜ்*	107-108
**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு*	109
6. அறிவிப்பு—	
பேரவை அலுவலில் மாற்றம்	190-191
7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்	257-258

ஆளுநரும் அமைச்சரவையும்

ஆளுநர் – முனைவர் கோ. ரோசய்யா

அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

பொது, இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, பொது நிருவாகம், மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல் மற்றும் உள் துறை

2. **நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச் சீட்டுகள், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் (பயிற்சி)

3. **வனத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:**

வனம்

4. **பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:**

பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம், செயற்திட்டப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்

5. கூட்டுறவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:**

கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்,

6. மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி. தங்கமணி:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு மற்றும் இலஞ்ச ஒழிப்பு சட்டம்

7. நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல், சிறப்புத் திட்டங்கள் செயலாக்கம்

8. மீன் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**

மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

9. சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள்

10. உயர் கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல்

11. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி, இரவலர் காப்பு இல்லங்கள், மாற்றுத் திறனாளிகள் நலன் மற்றும் சமூக சீர்திருத்தம் மற்றும் சத்துணவுத் திட்டம்

12. தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:**

தொழில்கள், எஃகுக் கட்டுப்பாடு, சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் மற்றும் சிறப்பு முயற்சிகள்

13. சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்:**

சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு

14. உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

15. கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:**

கைத்தறி மற்றும் துணிநூல்

16. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:**

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

17. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

18. பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:**

பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

19. வேளாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

20. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் அரசு அச்சகம்

21. வருவாய்த் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:**

வருவாய், மாவட்ட வருவாய் நிருவாகம், துணை ஆட்சியர்கள், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்கள் பதிவு

22. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:**

குடிசைத் தொழில் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள்

23. வணிக வரித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:**

வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம்

24. பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்:**

பள்ளிக் கல்வி, தொல்பொருளியல், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

25. சுற்றுலாத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

26. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:**

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு மற்றும் வக்ஃபு வாரியம்

27. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

28. தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன்:** *தகவல் தொழில்நுட்பம்*
29. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி:** *ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்*
30. கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. க. பாஸ்கரன்:** *கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராம தானம்*
31. இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்:** *இந்து சமய மற்றும் அறநிலையங்கள் மற்றும் தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு*
32. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி:** *பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள் மற்றும் சிறுபான்மையினர் நலன்*
33. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி:** *கால்நடை பராமரிப்பு*

GOVERNOR AND COUNCIL OF MINISTERS

GOVERNOR — DR. K. ROSAIAH

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1.	**Chief Minister**	..	**The Hon. Selvi J Jayalalithaa:** Public, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, General Administration, District Revenue Officers, Police, Home
2.	**Minister for Finance, Personnel & Administrative Reforms**	..	**The Hon. Thiru O. Panneerselvam:** Finance, Planning, Legislative Assembly, Elections and Passports, Personnel and Administrative Reforms, Personnel and Administrative Reforms (Training)
3.	**Minister for Forests**	..	**The Hon. Thiru Dindigul C. Sreenivasan:** Forests
4.	**Minister for Public Works, Highways and Minor Ports**	..	**The Hon. Thiru Edappadi K. Palaniswami:** Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Highways and Minor Ports
5.	**Minister for Co-operation**	..	**The Hon. Thiru Sellur K. Raju:** Co-operation, Statistics, Ex-Servicemen Welfare

6. Minister for Electricity, Prohibition & Excise	..	**The Hon. Thiru P. Thangamani:** Electricity, Non-Conventional Energy Development, Prohibition and Excise, Molasses and Prevention of Corruption Act
7. Minister for Municipal Administration & Rural Development, Implementation of Special Programme	..	**The Hon. Thiru S.P. Velumani:** Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply, Implementation of Special Programme
8. Minister for Fisheries	..	**The Hon. Thiru D. Jayakumar:** Fisheries and Fisheries Development Corporation
9. Minister for Law, Courts & Prisons	..	**The Hon. Thiru C.Ve. Shanmugam:** Law, Courts and Prisons
10. Minister for Higher Education	..	**The Hon. Thiru K.P. Anbalagan:** Higher Education including Technical Education, Electronics, Science and Technology

11. **Minister for Social Welfare & Nutritious Noon Meal Programme**	..	**The Hon. Dr. V. Saroja:** Social Welfare including Women's and Children's Welfare, Orphanages and Correctional Administration, Integrated Child Development, Beggar Homes, Welfare of the Differently Abled and Social Reforms & Nutritious Noon Meal Programme
12. **Minister for Industries**	..	**The Hon. Thiru M.C. Sampath:** Industries, Steel Control, Mines & Minerals and Special Initiatives
13. **Minister for Environment**	..	**The Hon. Thiru K.C. Karuppannan:** Environment and Pollution Control
14. **Minister for Food & Civil Supplies**	..	**The Hon. Thiru R. Kamaraj:** Food, Civil Supplies, Consumer Protection and Price Control
15. **Minister for Handlooms & Textiles**	..	**The Hon. Thiru O.S. Manian:** Handlooms & Textiles
16. **Minister for Housing & Urban Development**	..	**The Hon. Thiru Udumalai K. Radhakrishnan:** Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board and Accommodation Control, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

17. Minister for Health & Family Welfare	..	**The Hon. Dr. C. Vijaya Baskar:** Health, Medical Education and Family Welfare
18. Minister for Milk & Dairy Development	..	**The Hon. Thiru S.P. Shunmuganathan:** Milk and Dairy Development
19. Minister for Agriculture	..	**The Hon. Thiru R. Doraikkannu:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Waste Land Development
20. Minister for Information & Publicity	..	**The Hon. Thiru Kadambur Raju:** Information & Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing and Government Press
21. Minister for Revenue	..	**The Hon. Thiru R.B. Udhaya Kumar:** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Weights and Measures, Debt Relief including legislation on Money lending, Chits, Registration of Companies

22. Minister for Rural Industries	..	**The Hon. Thiru K.T. Rajenthra Bhalaji:** Rural Industries including Cottage Industries, Small Industries
23. Minister for Commercial Taxes	..	**The Hon. Thiru K.C. Veeramani:** Commercial Taxes, Registration and Stamp Act
24. Minister for School Education & Sports and Youth Welfare	..	**The Hon. Thiru P. Benjamin:** School Education, Archaeology, Youth Welfare and Sports Development Department
25. Minister for Tourism	..	**The Hon. Thiru Vellamandi N. Natarajan:** Tourism, Tourism Development Corporation
26. Minister for Labour	..	**The Hon. Dr. Nilofer Kafeel:** Labour, Population, Employment and Training, Newsprint Control, Census and Urban and Rural Employment and Wakf Board
27. Minister for Transport	..	**The Hon. Thiru M.R. Vijayabaskar:** Transport, Nationalised Transport and Motor Vehicles Act
28. Minister for Information Technology	..	**The Hon. Dr. M. Manikandan:** Information Technology

29. Minister for Adi Dravidar & Tribal Welfare	..	**The Hon. Tmt V.M. Rajalakshmi:** Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour
30. Minister for Khadi & Village Industries Board	..	**The Hon. Thiru G. Baskaran:** Khadi and Village Industries Board, Bhoodan and Gramadhan
31. Minister for Hindu Religious & Charitable Endowments	..	**The Hon. Thiru Sevvoor S. Ramachandran:** Hindu Religious & Charitable Endowments and Tamil Official Language & Tamil Culture
32. Minister for Backward Classes & Minorities Welfare	..	**The Hon. Tmt. S. Valarmathi:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Overseas Indians, Refugees & Evacuees and Minorities Welfare
33. Minister for Animal Husbandry	..	**The Hon. Thiru P. Balakrishna Reddy:** Animal Husbandry

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. ப. தனபால்

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்

மாற்றுத் தலைவர்கள்#

திரு. ஓ.கே. சின்னராஜ்

திரு. பி.எம். நரசிம்மன்

திரு. வி.வி. இராஜன் செல்லப்பா

திரு. S. செம்மலை

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்

திரு. P. வெற்றிவேல்

செயலாளர்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன்

20-6-2016 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். ..	கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. க. பூபதி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.எல். ..	இணைச் செயலாளர்
திரு. ம.ச. சந்திரமௌலி, . எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல். ..	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. அ. வீரராஜேந்திரன், எம்.ஏ., பி.எல். ..	இணைச் செயலாளர்
திரு. இராம.சோ. கிரிதரன், பி.ஏ., பி.ஜி.எல். ..	இணைச் செயலாளர்
திரு. கி. சீனிவாசன், எம்.ஏ., பி.ஜி.எல். ..	பேரவைத் தலைவரின் சிறப்பு தனிச் செயலர்
திரு. து. கணேசன், எம்.ஏ., பி.ஜி.எல். ..	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. இரா. சந்திரசேகரன், பி.காம்., பி.ஜி.எல்., டி.சி.பி. ..	பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர்
திரு. ந. இரவிசந்திரன், பி.எஸ்.சி., பி.எல். ..	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி ச. ஆண்டாள், . பி.எஸ்சி., பி.ஜி.எல். ..	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி லி.சு. வசந்திமலர், எம்.ஏ., பி.ஜி.எல்., எம்.ஏ. ..	துணைச் செயலாளர்
திரு. பா. சுப்பிரமணியம், பி.காம்., பி.ஜி.எல். ..	துணைச் செயலாளர்
திருமதி இரா. சாந்தி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல். ..	துணைச் செயலாளர்
திரு. ச. ஜெயகணேசன், பி.எஸ்சி., பி.ஜி.எல். ..	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. அ. அய்யன்பெருமாள், எம்.ஏ., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர்
திரு. செ. பாண்டியன், எம்.ஏ., எம்.ஃபில்., பி.எல்.	..	துணைச் செயலாளர்
திரு. மு. ஆதிசேஷன், . எம்.காம்., பி.எட்., எல்.எல்.பி.	..	துணைச் செயலாளர்
திரு. ப. பத்மகுமார், எம்.எஸ்சி., பி.எட்., பி.எல்.	..	துணைச் செயலாளர்
திரு. மு. கருணாநிதி, பி.ஏ., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர்
திரு. ப. சிவராமன், எம்.ஏ., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. கி. சூரியநாராயணன், எம்.ஏ., பி.ஜி.எல்., டி.டி.எல்., டி.எல்.எல்.	..	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி பி. தேன்மொழி, எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்., பி.எல்.	..	துணைச் செயலாளர்
திருமதி டி.வி. ஜெயஸ்ரீ, பி.ஏ., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர்
திரு. வ. பூபாலன், பி.காம்., பி.ஜி.எல்.	..	தலைமை நிருபர்
திருமதி ஸ்ரீ. ஸ்ரீவித்யா, பி.எஸ்சி., பி.ஜி.எல்.	..	தலைமை நிருபர்
திருமதி சி. சாந்தா, எம்.காம்., பி.ஜி.எல்.,	..	தலைமை நிருபர்
திரு. மு. கருணாகரன், எம்.காம்., பி.எல்.	..	சார்புச் செயலாளர்
திருமதி பா. ரேவதி, பி.எஸ்சி., பி.ஜி.எல்.	..	சார்புச் செயலாளர்

திரு. கோ. ரமேஷ், பி.எஸ்சி., பி.எல்	..	சார்புச் செயலாளர்
திரு. கலோ. சிவக்குமரன், பி.எஸ்சி.	..	சார்புச் செயலாளர்
திரு. ஜி. பாண்டுரங்கன், பி.ஏ., பி.ஜி.எல்.	..	சார்புச் செயலாளர்
திருமதி பெர்லின் ரூப்குமார், எம்.ஏ., பி.எல்.	..	சார்புச் செயலாளர்
திரு. ஜி. கணேஷ், பி.எஸ்சி., பி.எல்.	..	சார்புச் செயலாளர்
திரு. சு. பாலகிருஷ்ணன், பி.ஏ., பி.எல்.	..	சார்புச் செயலாளர்
திருமதி சீ. உஷா, பி.காம்.	..	சார்புச் செயலாளர்
திருமதி வெ. சகுந்தலா, பி.ஏ.	..	சார்புச் செயலாளர்
திரு. த. ரகுபதி, எம்.காம்., பி.ஜி.எல்.	..	தலைமை நிருபர்
திரு. சி. ஸ்ரீதரன், பி.காம்., பி.எட்.	..	தலைமை நிருபர்

பேரவை உறுப்பினர்கள்

(அகர வரிசைப்படி)

பெயர்களும் தொகுதிகளும்

1.	அம்பேத்குமார், திரு. எஸ்.	..	வந்தவாசி (செ.வ.)
2.	அம்மன் கே. அர்ச்சுணன் திரு.	..	கோயம்புத்தூர் தெற்கு
3.	அரசு, டாக்டர் ஆர்.டி.	..	செய்யூர் (செ.வ.)
4.	அரவிந்த் ரமேஷ், திரு. எஸ்.	..	சோழிங்கநல்லூர்
5.	அருண்குமார், திரு. பி.ஆர்.ஜி.	..	கோயம்புத்தூர் வடக்கு
6.	அலெக்சாண்டர், திரு. வீ.	..	அம்பத்தூர்
7.	அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு.	..	திருச்செந்தூர்
8.	அன்பரசன், திரு. தா.மோ.	..	ஆலந்தூர்
9.	அன்பழகன், திரு. க.	..	கும்பகோணம்
10.	அன்பழகன், திரு. கே.பி.	..	பாலக்கோடு
11.	அன்பழகன், திரு. ஜெ.	..	சேப்பாக்கம்—திருவல்லிக்கேணி
12.	அன்பில் மகேஷ் பொய்யாமொழி, திரு.	..	திருவெறும்பூர்
13.	ஆடலரசன், திரு. ப.	..	திருத்துறைப்பூண்டி (செ.வ.)
14.	ஆண்டி அம்பலம், திரு. மெஆ	..	நத்தம்
15.	ஆறுக்குட்டி, திரு. வி.சி.	..	கவுண்டம்பாளையம்
16.	ஆறுமுகம், திரு. பா.	..	கந்தர்வகோட்டை (செ.வ.)
17.	ஆஸ்டின், திரு. எஸ்.	..	கன்னியாகுமரி
18.	இரத்தினசபாபதி, திரு. ஏ.	..	அறந்தாங்கி
19.	இரவிச்சந்திரன், திரு. கே.எஸ்.	..	எழும்பூர் (செ.வ.)

20.	இராதாமணி, திரு. கு.	..	விக்கிரவாண்டி
21.	இராமசாமி, திரு. கரி.	..	காரைக்குடி
22.	இராமச்சந்திரன், திரு. ஆர்.டி.	..	குன்னம்
23.	இராமச்சந்திரன், திரு. எம்.	..	ஒரத்தநாடு
24.	இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர்.	..	அருப்புக்கோட்டை
25.	இராமலிங்கம், திரு. கே.வி.	..	ஈரோடு மேற்கு
26.	இராஜன் செல்லப்பா, திரு.விவி.	..	மதுரை வடக்கு
27.	இராஜா, திரு. எஸ்.ஆர்.	..	தாம்பரம்
28.	இராஜேந்திரன், திரு. இரா.	..	சேலம் வடக்கு
29.	இராஜேந்திரன், திரு. சி.வி.	..	பர்கூர்
30.	இன்பசேகரன், திரு. பி.என்.பி.	..	பெண்ணாகரம்
31.	இன்பதுரை, திரு. ஐ.எஸ்.	..	ராதாபுரம்
32.	ஈஸ்வரப்பன், திரு. ஜே.எல்.	..	ஆற்காடு
33.	ஈஸ்வரன், திரு. எஸ்.	..	பவானிசாகர் (செ.வ.)
34.	உடுமலை K. ராதாகிருஷ்ணன், திரு.	..	உடுமலைப்பேட்டை
35.	உதயகுமார், திரு. ஆர்.பி.	..	திருமங்கலம்
36.	உதயசூரியன், திரு. தா.	..	சங்கராபுரம்
37.	உமா மகேஸ்வரி, திருமதி கு.	..	விளாத்திகுளம்
38.	எடப்பாடி கே. பழனிசாமி, திரு.	..	எடப்பாடி
39.	எழிலரசன், திரு. சி.வி.எம்.பி.	..	காஞ்சிபுரம்
40.	ஏழுமலை, திரு. டி.எ.	..	பூந்தமல்லி (செ.வ.)
41.	கடம்பூர் ராஜூ, திரு.	..	கோவில்பட்டி
42.	கணேசன், திரு. வெ.	..	திட்டக்குடி (செ.வ.)

43.	கணேஷ், திரு. ஆர்.	..	உதகமண்டலம்
44.	கதிர்காமு, டாக்டர் கா.	..	பெரியகுளம் (செ.வ.)
45.	கருணாநிதி, கலைஞர் மு.	..	திருவாரூர்
46.	கருணாநிதி, திரு. இ.	..	பல்லாவரம்
47.	கருணாஸ், திரு. சே.	..	திருவாடனை
48.	கருப்பணன், திரு. கே.சி.	..	பவானி
49.	கலைச்செல்வன், திரு. V.T.	..	விருத்தாசலம்
50.	கனகராஜ், திரு. ஆர்.	..	சூலூர்
51.	கஸ்தூரி வாசு, திருமதி வி.	..	வால்பாறை (செ.வ.)
52.	காந்தி, திரு. ஆர்.	..	ராணிப்பேட்டை
53.	காமராஜ், திரு. இரா.	..	நன்னிலம்
54.	கார்த்திகேயன், திரு. க.	..	ரிஷிவந்தியம்
55.	கார்த்திகேயன், திரு. ப.	..	வேலூர்
56.	கார்த்திக், திரு. நா.	..	சிங்காநல்லூர்
57.	காளிமுத்து, திரு. வி.எஸ்.	..	தாராபுரம் (செ.வ.)
58.	கிரி, திரு. மு.பெ.	..	செங்கம் (செ.வ.)
59.	கீதா, திருமதி, ம.	..	கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
60.	கீதா ஜீவன், திருமதி பி.	..	தூத்துக்குடி
61.	குணசேகரன், திரு. சு.	..	திருப்பூர் தெற்கு
62.	குமரகுரு, திரு. இரா.	..	உளுந்தூர்பேட்டை
63.	கோதண்டபாணி, திரு. மு.	..	திருப்போரூர்
64.	கோவிந்தராசு, திரு. மா.	..	பேராவூரணி
65.	சக்கரபாணி, திரு. அர.	..	ஒட்டன்சத்திரம்
66.	சக்திவேல், திரு. எ.பி.	..	சேலம் தெற்கு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

67.	சக்ரபாணி, திரு. மு.	..	வானூர் (செ.வ.)
68.	சண்முகநாதன், திரு. எஸ்.பி.	..	ஸ்ரீவைகுண்டம்
69.	சண்முகம், திரு. அ.	..	கிணத்துக்கடவு
70.	சண்முகம், திரு. சி.வி.	..	விழுப்புரம்
71.	சத்திய நாராயணன், திரு. ப.	..	தியாகராய நகர்
72.	சத்யா, திருமதி ப.	..	பண்ருட்டி
73.	சந்திரசேகரன், திரு. சி.	..	சேந்தமங்கலம் (ஆ.வா.)
74.	சந்திரசேகரன், திரு. துரை.	..	திருவையாறு
75.	சந்திரசேகர், திரு. இரா.	..	மணப்பாறை
76.	சந்திரபிரபா, திருமதி மு.	..	ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.)
77.	சம்பத், திரு. எம்.சி.	..	கடலூர்
78.	சரவணன், திரு. எஸ்.எஸ்.	..	மதுரை தெற்கு
79.	சரஸ்வதி, திருமதி பொன்.	..	திருச்செங்கோடு
80.	சரோஜா, டாக்டர் வி.	..	ராசிபுரம் (செ.வ.)
81.	சாமி, திரு. கே.பி.பி.	..	திருவொற்றியூர்
82.	சித்ரா, திருமதி கு.	..	ஏற்காடு (ஆ.வா.)
83.	சிவகுமார் (எ) தாயகம் கவி, திரு. ப.	..	திரு.வி.க. நகர் (செ.வ.)
84.	சிவசுப்பிரமணி, திரு. வே.பொ.	..	மொடக்குறிச்சி
85.	சின்னதம்பி, திரு. ஆர்.எம்.	..	ஆத்தூர் (செ.வ.)
86.	சின்னராஜ், திரு. ஓ.கே.	..	மேட்டுப்பாளையம்
87.	சீத்தாபதி, திருமதி, பெ.	..	திண்டிவனம் (செ.வ.)
88.	சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர்.	..	விருதுநகர்
89.	சுதர்சனம், திரு. எஸ்.	..	மாதவரம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

90.	சுந்தரராஜ், திரு. ஆர்.	..	ஒட்டப்பிடாரம் (செ.வ.)
91.	சுந்தர், திரு. க.	..	உத்திரமேரூர்
92.	சுப்பிரமணியன், திரு. எஸ்.ஜி.	..	சாத்தூர்
93.	சுப்பிரமணியன், திரு. மா.	..	சைதாப்பேட்டை
94.	சுப்ரமணி, திரு. பெ.	..	தருமபுரி
95.	சுரேஷ் ராஜன், திரு. என்.	..	நாகர்கோவில்
96.	செங்குட்டுவன், திரு. டி.	..	கிருஷ்ணகிரி
97.	செங்கோட்டையன், திரு. கே.ஏ.	..	கோபிசெட்டிபாளையம்
98.	செந்தில்குமார், திரு. ஐ.பி.	..	பழனி
99.	செம்மலை, திரு. S.	..	மேட்டூர்
100.	செல்லூர் கா. ராஜு, திரு.	..	மதுரை மேற்கு
101.	செல்வமோகன்தாஸ் பாண்டியன், திரு. எஸ்.	..	தென்காசி
102.	செல்வம், திரு. கு.க.	..	ஆயிரம் விளக்கு
103.	செல்வராசு, திரு. எம்.	..	முசிறி
104.	செழியன், முனைவர் கோவி.	..	திருவிடைமருதூர் (செ.வ.)
105.	சேகரன், திரு. கே.வி.	..	போளூர்
106.	சேகர், திரு. வி.	..	பட்டுக்கோட்டை
107.	சேகர்பாபு, திரு. பி.கே.	..	துறைமுகம்
108.	சேவூர் ராமச்சந்திரன், திரு. எஸ்.	..	ஆரணி
109.	சௌந்தரபாண்டியன், திரு. அ.	..	லால்குடி
110.	தங்கதுரை, திரு. ஆர்.	..	நிலக்கோட்டை (செ.வ.)
111.	தங்கப்பாண்டியன், திரு. சௌ.	..	ராஜபாளையம்
112.	தங்கமணி, திரு. பி.	..	குமாரபாளையம்

113.	தங்கம் தென்னரசு, திரு.	..	திருச்சுழி
114.	தமிமுன் அன்சாரி, திரு. எம்.	..	நாகப்பட்டினம்
115.	தமிழ்ச்செல்வன், திரு. தங்க.	..	ஆண்டிப்பட்டி
116.	தமிழ்ச்செல்வன், திரு. ரா.	..	பெரம்பலூர் (செ.வ.)
117.	தனபால், திரு. ப.	..	அவினாசி (செ.வ.)
118.	தனியரசு, திரு. உ.	..	காங்கேயம்
119.	திண்டுக்கல் சி. சீனிவாசன், திரு.	..	திண்டுக்கல்
120.	திராவிடமணி, திரு. மு.	..	கூடலூர் (செ.வ.)
121.	துரை. கி. சரவணன், திரு.	..	புவனகிரி
122.	துரைக்கண்ணு, திரு. இரா.	..	பாபநாசம்
123.	துரைமுருகன், திரு.	..	காட்பாடி
124.	தூசி கே. மோகன், திரு.	..	செய்யாறு
125.	தென்னரசு, திரு. கே.எஸ்.	..	ஈரோடு கிழக்கு
126.	நடராஜன், திரு. அ.	..	பல்லடம்
127.	நடராஜ், திரு. ஆர்.	..	மயிலாப்பூர்
128.	நந்தகுமார், திரு. ஏ.பி.	..	அணைக்கட்டு
129.	நரசிம்மன், திரு. பி.எம்.	..	திருத்தணி
130.	நல்லதம்பி, திரு. அ.	..	திருப்பத்தூர்
131.	நிலோபர் கபில், டாக்டர் (திருமதி)	..	வாணியம்பாடி
132.	நீதிபதி, திரு. பா.	..	உசிலம்பட்டி
133.	நேரு, திரு. கே.என்.	..	திருச்சிராப்பள்ளி மேற்கு
134.	பரமசிவம், டாக்டர் வெபபா.	..	வேடசந்தூர்
135.	பரமேஸ்வரி, திருமதி மு.	..	மணச்சநல்லூர்

136.	பலராமன், திரு. ப.	..	பொன்னேரி (செ.வ.)
137.	பவுன்ராஜ், திரு. எஸ்.	..	பூம்புகார்
138.	பழனி, திரு. கே.	..	ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
139.	பழனியப்பன், திரு. பெ.	..	பாப்பிரெட்டிப்பட்டி
140.	பழனிவேல் தியாக ராஜன், திரு.	..	மதுரை மத்தி
141.	பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே.	..	குறிஞ்சிப்பாடி
142.	பன்னீர்செல்வம், திரு. ஓ.	..	போடிநாயக்கனூர்
143.	பன்னீர்செல்வம், திரு. வி.	..	கலசப்பாக்கம்
144.	பாண்டி, திரு. ச.	..	முதுகுளத்தூர்
145.	பாண்டியராஜன், திரு. க.	..	ஆவடி
146.	பாண்டியன், திரு. கே.ஏ.	..	சிதம்பரம்
147.	பாரதி, திரு. பி.வி.	..	சீர்காழி (செ.வ.)
148.	பார்த்திபன், திரு. என்.ஜி.	..	சோளிங்கர்
149.	பாலகிருஷ்ணா ரெட்டி, திரு. பா.	..	ஒசூர்
150.	பாலசுப்பிரமணி, திரு. ஆர்.	..	ஆம்பூர்
151.	பாஸ்கரன், திரு. க.	..	சிவகங்கை
152.	பாஸ்கர், திரு. கே.பி.பி.	..	நாமக்கல்
153.	பிச்சாண்டி, திரு. கு.	..	கீழ்பெண்ணாத்தூர்
154.	பிரகாஷ், திரு. ஒய்.	..	தளி
155.	பிரபு, திரு. அ.	..	கள்ளக்குறிச்சி (செ.வ.)
156.	பிரின்ஸ், திரு. ஜே.ஜி.	..	குளச்சல்
157.	புகழேந்தி, திரு. சு.	..	மதுராந்தகம் (செ.வ.)
158.	பூங்கோதை, டாக்டர் (திருமதி)	..	ஆலங்குளம்

159.	பெரியகருப்பன், திரு. கே.ஆர்.	..	திருப்பத்தூர்
160.	பெரியசாமி, திரு. இ.	..	ஆத்தூர்
161.	பெரியண்ணன் அரசு, திரு.	..	புதுக்கோட்டை
162.	பெரியபுள்ளான் என்கிற செல்வம், திரு. பெ.	..	மேலூர்
163.	பென்ஜமின், திரு. பா.	..	மதுரவாயல்
164.	பொள்ளாச்சி V. ஜெயராமன், முனைவர்	..	பொள்ளாச்சி
165.	பொன்முடி, முனைவர் க.	..	திருக்கோவிலூர்
166.	மணிகண்டன், டாக்டர் எம்.	..	இராமநாதபுரம்
167.	மணியன், திரு. ஓ.எஸ்.	..	வேதாரண்யம்
168.	மதிவாணன், திரு. உ.	..	கீழ்வேளூர் (செ.வ.)
169.	மருதமுத்து, திரு. அ.	..	கெங்கவல்லி (செ.வ.)
170.	மனோகரன், திரு. அ.	..	வாசுதேவநல்லூர் (செ.வ.)
171.	மனோ தங்கராஜ், திரு. த.	..	பத்மநாபபுரம்
172.	மனோரஞ்சிதம், திருமதி நா.	..	ஊத்தங்கரை (செ.வ.)
173.	மனோன்மணி, திருமதி ப.	..	வீரபாண்டி
174.	மஸ்தான், திரு. கே.எஸ்.	..	செஞ்சி
175.	மாசிலாமணி, டாக்டர் இரா.	..	மயிலம்
176.	மாணிக்கம், திரு. கி.	..	சோழவந்தான் (செ.வ.)
177.	மாரியப்பன் கென்னடி, திரு. சோ.	..	மானாமதுரை (செ.வ.)
178.	முத்தையா, திரு. எஸ்.	..	பரமக்குடி (செ.வ.)
179.	முருகன், திரு. ஆர்.	..	அரூர் (செ.வ.)
180.	முருகன், திரு. பி.	..	வேப்பனஹள்ளி

181.	முருகுமாறன், திரு. என்.	..	காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
182.	முருகையா பாண்டியன், திரு. ஆர்.	..	அம்பாசமுத்திரம்
183.	முஹம்மது அபூபக்கர், திரு. கே.ஏ.எம்.	..	கடையநல்லூர்
184.	மூர்த்தி, திரு. கே.எஸ்.	..	பரமத்தி வேலூர்
185.	மூர்த்தி, திரு. பி.	..	மதுரை கிழக்கு
186.	மெய்யநாதன், திரு. சிவ.வீ.	..	ஆலங்குடி
187.	மைதீன்கான், திரு. டி.பி.எம்.	..	பாளையங்கோட்டை
188.	மோகன், திரு. எம்.கே.	..	அண்ணா நகர்
189.	ரகுபதி, திரு. எஸ்.	..	திருமயம்
190.	ரங்கநாதன், திரு. ப.	..	வில்லிவாக்கம்
191.	ரவி, திரு. சு.	..	அரக்கோணம் (செ.வ.)
192.	ராசேந்திரன், திரு. சபா.	..	நெய்வேலி
193.	ராதாகிருஷ்ணன், திரு. வி.	..	மயிலாடுதுறை
194.	ராமர், திரு. எ.	..	குளித்தலை
195.	ராமஜெயலிங்கம், திரு. ஜெ.கே.என்.	..	ஜெயங்கொண்டம்
196.	ராமு, திரு. அ.	..	குன்னூர்
197.	ராஜலெட்சுமி, திருமதி வி.எம்.	..	சங்கரன்கோவில் (செ.வ.)
198.	ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன், திரு. ஈ.எம்.ஆர்.	..	அந்தியூர்
199.	ராஜா, திரு. சி.	..	சங்கரி

200.	ராஜா, திரு. டி.ஆர்.பி.	.. மன்னார்குடி
201.	ராஜேந்திர பாலாஜி, திரு. கே.டி.	.. சிவகாசி
202.	ராஜேந்திரன், திரு. சு.	.. அரியலூர்
203.	ராஜேந்திரன், திரு. வி.ஜி.	.. திருவள்ளூர்
204.	ராஜேஷ் குமார், திரு. செ.	.. கிள்ளியூர்
205.	லெட்சுமணன், திரு. ஏ.எல்.எஸ்.	.. திருநெல்வேலி
206.	லோகநாதன், திரு. கோ.	.. கீழ்வைத்திணான்குப்பம் (செ.வ.)
207.	வசந்தகுமார், திரு. எச்.	.. நாங்குநேரி
208.	வரலட்சுமி, திருமதி ம.	.. செங்கல்பட்டு
209.	வளர்மதி, திருமதி சீ.	.. ஸ்ரீரங்கம்
210.	வாகை சந்திரசேகர், திரு.	.. வேளச்சேரி
211.	விருகை V.N. ரவி, திரு.	.. விருகம்பாக்கம்
212.	விஜயகுமார், திரு. க.நா.	.. திருப்பூர் வடக்கு
213.	விஜயதரணி, திருமதி எஸ்.	.. விளவங்கோடு
214.	விஜய பாஸ்கர், டாக்டர் சி.	.. விராலிமலை
215.	விஜயபாஸ்கர், திரு. எம்.ஆர்.	.. கரூர்
216.	விஜியகுமார், திரு. கே.எஸ்.	.. கும்மிடிப்பூண்டி
217.	வீரமணி, திரு. கே.சி.	.. ஜோலார்பேட்டை
218.	வெங்கடாச்சலம், திரு. என்.டி.	.. பெருந்துறை
219.	வெங்கடாஜலம், திரு. கோ.	.. சேலம் மேற்கு
220.	வெல்லமண்டி ந. நடராஜன், திரு.	.. திருச்சிராப்பள்ளி கிழக்கு

221. வெற்றிவேல், திரு. ச. .. ஓமலூர்

222. வெற்றிவேல், திரு. P. .. பெரம்பூர்

223. வேலு, திரு. எ.வ. .. திருவண்ணாமலை

224. வேலுமணி, திரு. எஸ்.பி. .. தொண்டாமுத்தூர்

225. ஜக்கையன், திரு. எஸ்.டி.கே. .. கம்பம்

226. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்

227. ஜெயந்தி பத்மநாபன், திருமதி சி. .. குடியாத்தம் (செ.வ.)

228. ஜெயராமகிருஷ்ணன், திரு. இரா. .. மடத்துக்குளம்

229. ஜெயலலிதா, செல்வி ஜெ .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

230. ஸ்டாலின் குமார், திரு. செ. .. துறையூர் (செ.வ.)

231. ஸ்டாலின், திரு. மு.க. .. கொளத்தூர்

232. நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ், டாக்டர் (திருமதி) .. நியமனம்

233. வெற்றிடம் .. திருப்பரங்குன்றம்

(தஞ்சாவூர் மற்றும் அரவக்குறிச்சி தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெறவில்லை.)

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. ஏ.எல். சோமையாஜி .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

துன்முகி, ஆடி 21, திருவள்ளுவர் ஆண்டு—2047

2016 ஆகஸ்ட் 5, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஒல்வது அறிவது அறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாதது இல்."

தம்மால் எதைச் செய்ய முடியும் என்பதையும், அதை எப்படிச் செய்ய வேண்டும் என்பதனையும் அறிந்து, செயலில் சோர்வடையாமல் தொடர்ந்து முயல்கிறவர்களுக்கு முடியாத செயல் என எதுவும் இல்லை.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

26—

புறவழிச் சாலை

***72—திரு. சு. ரவி:**

மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், செம்பேடு ஊராட்சி, குருவராஜப்பேட்டைக்கு புறவழிச்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், செம்பேடு ஊராட்சி, குருவராஜப்பேட்டையில் புறவழிச் சாலை அமைக்க ஆய்வு மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் தாய்த் திருநாட்டின் அன்னைத் தமிழகத்தை முதன்மை மாநிலமாக உருவாக்கிட தொலைநோக்குத் திட்டம் 2023-ஐக் கொண்டு வந்து, முன்னோடி முதல்வராக மட்டுமல்ல, முதன்மைத் தமிழகத்தை உருவாக்கிட உண்ணாமல் உழைத்து, உறங்காமல் விழித்து, வாழ்ந்துகொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

எனது தொகுதிக்குட்பட்ட குருவராஜப்பேட்டையில் ஒரு புறவழிச் சாலை அமைக்க பரிசீலிக்கப்படும் என்றும், கும்பிட்ட கரங்கள் விலகுவதற்கு முன்னே கேட்டதையெல்லாம் கொடுக்கிற மாண்புமிகு அம்மா அவர்கள் புனித ஆட்சியில் பரிசீலிக்கப்படும் என்ற நல்ல பதிலை வழங்கியதற்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு திரு. அ. நல்லதம்பி அவர்கள்.*

திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் நகரப் பகுதியில் போக்குவரத்தைச் சரிசெய்திட*

2016 ஆகஸ்ட் 5]

மற்றும் கூட்ட நெரிசலைக் குறைத்திடும்வகையில் நிலுவையில் உள்ள புறவழிச் சாலையை அமைத்துத் தந்திடவும், அச்சமங்கலம், கதிரிமங்கலம், இராசாமங்கலம் ஆகிய பகுதிகளில் இடத்தைத் தேர்வு செய்யும் பணியை முடித்து, புறவழிச் சாலையை அமைத்துத் தருமாறும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் புறவழிச் சாலைக்கு நிலம் எடுப்புப் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நிலம் எடுப்புப் பணி நிறைவு பெற்ற பிறகு, புறவழிச் சாலை அமைக்கும் பணி தொடரும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள்.*

திரு. அ. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டை இந்தியத் திருநாட்டிற்கே வழிகாட்டியாக உருவாக்கிவரும் எங்கள் ஒப்பில்லா தலைவி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த பல்லடம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லடம் தொகுதியில் திருச்சி முதல் கோவை வரை செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் பல்லடம் நகரம் அமைந்துள்ளது. இதன் மத்தியில் கோவை முதல் திருச்சி வரை செல்லும் நெடுஞ்சாலை இருக்கிறது. நகரத்தின் மத்தியில் அரசு மருத்துவமனை மற்றும் வியாபார நிறுவனங்கள் நிறைந்துள்ளன. வாகனங்கள் அதிகமாகச் செல்கின்ற காரணத்தினால், போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. குறிப்பாக, விசேஷ காலங்களில் வாகனங்கள் செல்ல முடியாமல் நகரத்தைக் கடப்பதற்கு சுமார் ஒரு மணி நேரம் ஆகிறது. ஆகவே,

பொது மக்களின் நலன் கருதியும், போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் பொருட்டும், பல்லடம் நகருக்கு புறவழிச் சாலை அமைத்துத்தர மாண்புமிகு அம்மா அவர்களது அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் ஏற்படுகின்ற போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக புறவழிச் சாலைகள் அமைக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேசிய நெடுஞ்சாலையில் கோரியிருக்கிறார். எனவே, பல்லடம் பகுதியில் உள்ள போக்குவரத்துச் செறிவைக் கணக்கிட்டு, அதனடிப்படையில் தேசிய நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து தேவையான நிதியைப் பெற்று, புறவழிச் சாலை அமைப்பதற்கான நடவடிக்கையை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் அன்புத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், 'நமக்கு நாமே' வெற்றி நாயகர், அண்ணன் தளபதி அவர்களுக்கும் தலைவணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பம்மல் மற்றும் அனகாபுத்தூர் செல்லும் வழியில் கடந்த 5 ஆண்டு காலமாக போக்குவரத்து நெரிசல் தொடர்ந்து இருந்து வருகிறது. ஆகவே, போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க வேண்டுமென்ற அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க சாலையை அகலப்படுத்தும் பணியை மேற்கொள்வாரா என்பதை அறிய விரும்புகின்றேன்.

2016 ஆகஸ்ட் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாவரம் பகுதியில் போக்குவரத்து நெரிசல் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அரசு ஒவ்வொரு வருடமும் ஒரு குறிப்பிட்ட அளவு சாலைகளை எடுத்து அகலப்படுத்தி வருகின்றது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தச் சாலையினுடைய போக்குவரத்துச் செறிவைக் கணக்கிட்டு, அங்கு போக்குவரத்துச் செறிவு அதிகமாக இருக்கின்றபட்சத்தில், முன்னுரிமையின் அடிப்படையிலே நிதிநிலைக்கேற்ப, அந்தச் சாலையை விரிவுபடுத்துவது குறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள்.*

திரு. கே.எஸ். தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், ஈரோடு புறவழிச் சாலை அமைக்கும் பணியின் முதல் கட்ட மற்றும் இரண்டாம் கட்டப் பணிகள் முடிவடைந்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் சாலை துவக்கி வைக்கப்பட்டது. மூன்றாம் கட்டப் பணிகள் ரூபாய் 69 கோடியே 30 இலட்சம் செலவில் விரைவாக நடந்து கொண்டிருக்கின்றது. நான்காம் கட்டப் பணி சத்தியமங்கலம் ரோடு வரை நீட்டிக்க வேண்டும். அந்தப் பணியைத் தொடங்குவதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா எனவும், அந்தப் பணி எப்போது தொடங்கப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் நிறைய மேம்பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. ஈரோட்டில் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய சிலை அருகில் மேம்பாலம் கட்டும் பணி எப்போது தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு

பொதுப் பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு வெளிவட்டச் சாலையின் நான்காம் கட்டப் பணி பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கின்றார். ஏற்கெனவே இரண்டாம் கட்டப் பணிகள் நிறைவுற்று, மூன்றாம் கட்டப் பணிகள் இப்போது நடந்து கொண்டிருக்கின்றன. அதோடு, ஈரோடு பெருந்துறையிலிருந்து பிரிந்து ஈரோடு சத்தியமங்கலம் செல்கின்ற சாலைகளை இணைக்கின்ற புறவழிச் சாலையைத்தான் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்றார் என்று நினைக்கிறேன். அது அரசினுடைய ஆய்வில் இருக்கின்றது.

மற்றொன்று, ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அருகிலே உயர்மட்டப் பாலம் எப்பொழுது கட்டப்படும் என்ற வினாவை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியிருக்கின்றார்கள். ஏற்கெனவே அங்கே பாலம் கட்டுவதற்கான நடவடிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுத்து வருகின்றது. அதற்கான estimate தயாரிக்கும் பணி இப்பொழுது நடைபெற்று கொண்டிருக்கின்றது. அந்தப் பணி முடிந்தவுடன் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பாலம் கட்டும் பணி துவங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள்.

திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அரசியல் வரலாற்றில், சட்டமன்றத் தேர்தலில், தான் நின்ற தேர்தலில் எல்லாம் வென்ற தலைவர், தோல்வியே காணாத ஒரே தலைவர் (மேசையைத் தட்டும் ஒலி) முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். சாதாரண ஏழை குடும்பத்தில் பிறந்த என்னை இரண்டு முறை மரமடக்கி ஊராட்சிமன்றத் தலைவராக வெற்றி பெற வைத்து, இரண்டு

2016 ஆகஸ்ட் 5]

முறை அறந்தாங்கி ஒன்றியக் குழுத் தலைவராக வெற்றி பெற வைத்து, 2016-ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் முதல்முறையாக ஆலங்குடி தொகுதியில் போட்டியிட வைத்து என்னை வெற்றி பெற செய்து, இந்த மாமன்றத்தில் பேசும் வாய்ப்பினை பெற்றுத் தந்த முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன்.

அழுத்தப்பட்ட சமுதாயத்தின் செவ்வானம்; வீழ்ச்சி பெற்ற சமுதாயத்தின் வைகறை; எழுச்சி பெற்ற சமுதாயத்தின் இளஞ்சூரியன்; கொடுமையின் கொட்டடியை அனுபவித்த இருட்டறையின் ஒளிச்சுடர்; உழைப்பின் கோபுரம்; ஓய்வறியா போராளி; சமுதாய பொது வாழ்வில் தூய்மையை சாதிக்கப் பிறந்தவர்; பாதிக்கப்பட்டவரின் துயர் துடைத்து பல காலம் உழைக்கும் எங்கள் சொத்து; (மேசையைத் தட்டும் ஒலி) மாசற்ற தங்கம் அன்புத் தளபதி அவர்களை வணங்கி ஆலங்குடி தொகுதிக்குட்பட்ட, ஆலங்குடி பேரூராட்சி பகுதி போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்ற பகுதியாகும். பல்வேறு கனரக வாகனங்கள் பட்டுக்கோட்டை, ஆலங்குடி வழியாக புதுக்கோட்டை செல்கின்ற அந்த வழித் தடத்தில் ஆலங்குடி முக்கியமான நகரமாக விளங்குகின்ற காரணத்தினால் ஆலங்குடி பகுதியில் புறவழிச் சாலை அமைக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குடி பேரூராட்சி பகுதியில் அதிக போக்குவரத்து நெரிசல் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டி இருக்கின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்ற நகராட்சி, பேரூராட்சிப் பகுதிகளில் எல்லாம் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக புறவழிச் சாலை அமைக்கப்படும் என்ற ஓர் அறிவிப்பைத் தந்திருக்கின்றார்கள். அதனடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஆலங்குடி பேரூராட்சியில் எந்த அளவிற்கு போக்குவரத்து நெரிசல் இருக்கிறது என்பதை ஆய்வு செய்து, அதன் அடிப்படையிலே நிதி நிலைமைக்கேற்ப புறவழிச் சாலை அமைக்கப்படும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கும் வெற்றி, எதிலும் வெற்றி என்று சாதனை படைத்து வரும் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். பொதுவாக ஊராட்சி ஒன்றியச் சாலைகள் பழுதடைந்திருந்தால், கடந்த காலங்களில் அதை எழுதிக் கொடுத்தால் நெடுஞ்சாலைத் துறை மூலமாக போடுவதற்கு வசதி இருந்தது. அதை கடந்த கால தி.மு.க அரசு, அந்தந்த ஒன்றியங்கள் மூலமாக ஊராட்சி ஒன்றியச் சாலைகள் போட வேண்டுமென்று ஒரு சட்டம் போட்டது. (குறுக்கீடுகள்) கடந்த கால தி.மு.க ஆட்சி என்றுதானே சொன்னேன். அதிலே என்ன தவறு? (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், குற்றச்சாட்டு இல்லாமல் கேள்வி கேளுங்கள். நீங்கள் கேள்வி கேளுங்கள்.*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *குற்றச்சாட்டு கிடையாது. (குறுக்கீடுகள்) நான் பேசி முடித்த பிறகு பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நான் பேசுவதற்கு முன்னரே நீங்கள் பேசினால், நான் எப்படிப் பேச முடியும்? முதலில், நான் பேசி முடித்த பிறகு பதில் சொல்லுங்கள். நல்ல கருத்துத்தான் பேசுகிறேன். நான் பேசி முடித்த பிறகு பேசுங்கள். பொதுவாக ஊராட்சி ஒன்றியச் சாலைகள் பழுதடைந்திருந்தால், கடந்த காலங்களில் அதை நாங்கள் எழுதிக் கொடுத்தால் நெடுஞ்சாலைத் துறை மூலமாக போடுவதற்கு வசதி இருந்தது. அதை கடந்த தி.மு.க அரசு அந்தந்த ஊராட்சி ஒன்றியங்கள்தான் சாலைகளைப் போடவேண்டுமென்று ஒரு சட்டம் போட்டிருக்கிறது. அதை மாற்றி மீண்டும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை நெடுஞ்சாலைத் துறை போடுவதற்கு ஆவன செய்ய தங்கள் மூலமாக கேட்டு அமருகிறேன். இது நல்லதா, கெட்டதா?*

2016 ஆகஸ்ட் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றிய சாலைகள் நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றப்படுமா என்ற ஒரு வினாவை எழுப்பியிருக்கிறார். ஏற்கெனவே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆட்சியில் போக்குவரத்து உள்ள கிராம சாலைகளை நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைக்கின்ற பணி நடந்து கொண்டிருக்கின்றது. இரண்டு கிலோ மீட்டருக்கு மேலுள்ள, அதிகமாகப் பேருந்து செல்கின்ற கிராம சாலைகள் நெடுஞ்சாலை துறையிடம் ஒப்படைக்கப்பட்டு, நெடுஞ்சாலை துறையின் பராமரிப்பில் கொண்டு வருவதற்காக இன்றைக்கு ஒரு குறிப்பிட்ட அளவு சாலைகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதை என்னுடைய பதிலுரையில் கூட நேற்று நான் குறிப்பிட்டேன். ஆகவே, அந்தப் பணிகள் நடைபெற்று முடிந்த பிறகு கிராமப் பகுதிகளிலுள்ள போக்குவரத்து அதிகமாக இருக்கின்ற சாலைகளை நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றுவதற்குண்டான பணி மேற்கொள்ளப்படும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார் அவர்கள்.*

திரு. ஏ.பி. நந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய ஒரே தலைவர், தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், வருங்கால தமிழகத்தினுடைய நம்பிக்கை நட்சத்திரம் அண்ணன் தளபதி அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) அணைக்கட்டு தொகுதி, பள்ளிகொண்டா பேரூராட்சி வழியாக குடியாத்தம் மற்றும் ஆந்திர மாநிலத்திற்குச் செல்லக்கூடிய வாகனங்கள் அதிகமாக அந்தப் பகுதியிலே செல்கின்ற நேரத்தில், அந்தப் பகுதியிலே நெரிசல் ஏற்படுகின்ற காரணத்தினால், பள்ளிகொண்டா புறவழிச் சாலை அமைத்துத்தர முடியுமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். வணக்கம்.*

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பள்ளிகொண்டா பேரூராட்சியில் அதிகமான கனரக வாகனங்கள் செல்வதால், அங்கு ஒரு புறவழிச்சாலை வேண்டுமென்ற ஒரு வினாவினைத் தொடுத்திருக்கின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் படிப்படியாக, எந்தெந்த நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் அதிக போக்குவரத்துச் செறிவு இருக்கின்றதோ, அவற்றையெல்லாம் முன்னுரிமை அடிப்படையில் எடுத்து, நிதிநிலைமைக்கேற்ப இப்போது புறவழிச் சாலைகள் நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் போடப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பள்ளிகொண்டா பேரூராட்சியில் போக்குவரத்துச் செறிவு அதிகமாக இருக்கின்றது, அங்கு ஒரு புறவழிச்சாலையை அமைக்க வேண்டும் என்று கேட்டிருக்கின்றார். அதனை ஆய்வு செய்து, எவ்வளவு போக்குவரத்துச் செறிவு இருக்கின்றது என்பதைக் கணக்கிட்டு, அந்தப் பகுதியில் நிதிநிலைமைக்கேற்ப புறவழிச் சாலை அமைப்பதற்கு அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருணை உள்ளம் கொண்ட தாய், மக்களின் மாபெரும் தலைவர், மாண்புமிகு தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய முதல் கோரிக்கையான ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், வறட்டுப்பள்ளம் அணைக்கு, மணியாச்சியிலிருந்து வெள்ள நீரைக் கொண்டு வரும் திட்டத்திற்கு விரிவான ஆய்வுப் பணிக்காக ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ததற்கு, அந்தியூர் சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா*

அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு, எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்தியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வறட்டுப்பள்ளம் அணையிலிருந்து, கட்டேகண்டி செல்லும் சாலையானது கர்நாடகா-தமிழ்நாட்டை இணைக்கும் சாலையாகும். இந்தச் சாலை ஒரு வழிச் சாலையாக உள்ளது. மற்றொரு சாலையான சத்தியமங்கலத்திலிருந்து கர்நாடகா திம்பம் வழியாகச் செல்லும் சாலை, 27 கொண்டை ஊசி வளைவுகளைக் கொண்ட சாலையாகும். இந்தச் சாலையில் வரும் வாகனங்கள் பழுது ஏற்படும்போதும், விபத்து ஏற்படும்போதும், போக்குவரத்து முற்றிலும் தடைபட்டு, மாற்றுச் சாலையாக உள்ள ஒரே சாலை வறட்டுப்பள்ளம் அணை முதல் கட்டேகண்டி வரையுள்ள சாலையாகும். எனவே, இரு மாநிலங்களினுடைய சாலைகளை இணைக்கும் முக்கிய சாலையான இதனை, மக்களின் நலன் கருதியும், மாற்றுப் பாதையான இந்தச் சாலையை இருவழிச் சாலையாக்கி, மக்களின் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், குறிப்பிட்ட சாலையை அகலப்படுத்த வேண்டுமென்று இங்கு ஒரு வினாவினை எழுப்பியிருக்கின்றார்கள். ஒரு வழித்தடச் சாலை 3.75 மீட்டரும், இடைவெளிச் சாலை 5.50 மீட்டரும், இருவழித்தட மைய தடுப்புச் சாலை 7 மீட்டரும் இருக்க வேண்டும். சாலையை அகலப்படுத்த சாத்தியக்கூறுகள் கீழ்க்கண்டவாறு ஆராயப்பட்டு, பின்பு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. போக்குவரத்துச் செறிவின் அடிப்படையில், நெரிசல் மிகுந்த சாலை கண்டறியப்பட்டு, சாலையின் இருபுறமும் இடம் இல்லாதபட்சத்தில் நிலம் கையகப்படுத்தப்பட்டு சாலை அகலப்படுத்தப்படுகிறது. இரண்டாவது, சாலையின் கொள்ளளவு. ஒரு வழிச் சாலையாக இருந்தால் 3.75 மீட்டர், அதற்கு* PCU *2,000 இருக்கவேண்டும். 5.5 மீட்டர் கொண்ட இடைவெளிச் சாலையாக இருந்தால் போக்குவரத்தினுடைய செறிவு 6,000* PCU *இருக்கவேண்டும்.*

இருவழிச் சாலையாக இருந்தால் 15,000 றிசிஹி இருக்கவேண்டும். நான்கு வழிச் சாலையாக இருந்தால் 40,000 PCU இருக்கவேண்டும். அந்த அடிப்படையில்தான், போக்குவரத்துச் செறிவு கணக்கிடப்பட்டு, அதற்கேற்ப சாலை அகலப்படுத்தப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தச் சாலை வனப் பகுதிக்குச் செல்லும் சாலையாகும். வனத் துறையிடமிருந்து அனுமதி பெற வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. எனவே, நான் சொல்லுகின்ற சாத்தியக்கூறுகளின் அடிப்படையிலும், போக்குவரத்து செறிவின் அடிப்படையிலும் ஆய்வு செய்து, அங்கே அதிகமாக போக்குவரத்து இருக்கின்றபட்சத்தில் அரசின் நிதிநிலைமைக்கேற்ப சாலைகளை அகலப்படுத்துவதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

27—

மின்மாற்றி

***1572—திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவெறும்பூர் தொகுதி, நவல்பட்டு கிராமத்தில் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறும் நவல்பட்டு கிராமத்தில் தற்போது 250 KVA மின்மாற்றிமூலம் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த மின்மாற்றியில் தற்பொழுது 232 KVA மின் பளு மட்டுமே உள்ளது. இருப்பினும் ஒரு புதிய 100 KVA மின்மாற்றி அமைப்பதற்கான மதிப்பீடு அனுப்பப்பட்டு,

2016 ஆகஸ்ட் 5]

31-8-2016-க்குள் மின்மாற்றி மாற்றி அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள்.*

முற்பகல் 10-20

திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களையும், என்னைப் போன்ற இளைஞர்களுக்கெல்லாம் அரசியல் ஆசானாக விளங்கிக் கொண்டிருக்கும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், எங்களுடைய தளபதியார் அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய திருவெறும்பூர் தொகுதி மக்களையும் வணங்கி, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுடைய பதில் வரவேற்கக்கூடியதாக இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல, 31-8-2016 ஆம் தேதிக்குப் பிறகு அந்தப் பகுதியிலுள்ள மக்களெல்லாம் புதிதாக அமைக்கப்படும் மின்மாற்றிமூலம் பயன்பெறுவர். அதேநேரத்தில், மற்ற பகுதியிலுள்ள, குறிப்பாக பழங்கனாங்குடி ஊராட்சி, குண்டூர் ஊராட்சி மற்றும் பத்தாளப்பேட்டை ஊராட்சியிலுள்ள, பூலாங்குடி கலப்புக் காலனி, அயன்புத்தூர் நெசவாளர் காலனி, கீழமாங்காவனம் போன்ற பகுதிகளிலுள்ள மின்சாரப் பற்றாக்குறையையும் போக்க, போதுமான அளவுள்ள மின்மாற்றிகள் அமைக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய பகுதிகளில், ஏற்கெனவே இருக்கின்ற மின்மாற்றிகளில் 70 சதவிகித மின் பளு இருந்தால் மட்டுமே புதிய மின்மாற்றி அமைக்க முடியும். மாண்புமிகு உறுப்பினர்கள் நான்கு, ஐந்து ஊர்களைக் குறிப்பிட்டு, அங்கு மின்மாற்றி அமைக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள்.*

அவற்றில், ஏதாவது ஒரு மின்மாற்றியில் மின் பளு அதிகமாக இருக்கின்றது என்று குறிப்பிட்டு சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள்.*

திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப் போல—பழங்கனாங்குடி ஊராட்சியிலுள்ள பூலாங்குடி கலப்புக் காலனி ஏறத்தாழ 9 காலனிகளை உள்ளடக்கிய பகுதியாக இருக்கின்றது. அந்த இடத்தில் தற்போதுள்ள 500 கிலோ வாட் மின் திறனுள்ள மின்மாற்றி போதுமானதாக இல்லை; 1,000 கிலோ வாட் மின் திறனுள்ள மின்மாற்றி இருந்தால் போதுமானதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேலும், மாநகராட்சி வார்டு 29-க்கு உட்பட்ட மேல்அம்பிகாபுரம், அண்ணா நகர், திடீர் நகர் போன்ற சில இடங்களில் மின் கம்பிகள் தாழ்வான நிலையில் செல்கின்றன. அதில் risk factor *இருக்கிறது. அதேபோன்று, வேங்கூர் ஊராட்சியைச் சார்ந்திருக்கின்ற பகுதிகளில் பழுதான, விபத்துகளை ஏற்படுத்தக்கூடிய மின் கம்பங்கள் ஆங்காங்கே இருக்கின்றன. அதனை இந்த அரசு மாற்றியமைக்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 500* KVA *திறனுள்ள மின்மாற்றியை 1,000* KVA *திறனுள்ள மின்மாற்றியாக மாற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்கள். எந்த அளவுக்கு மின் அழுத்தம் இருக்கின்றது என்பதை ஆய்வு செய்து, தேவையிருப்பின் மற்றொரு 500* KVA *திறனுள்ள மின்மாற்றியை அமைப்பதற்கு உரிய நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2016 ஆகஸ்ட் 5]

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதியிலுள்ள சில பகுதிகளில் மின் கம்பிகள் தாழ்வாகச் செல்கின்றன, அதை உடனடியாகச் சரி செய்ய வேண்டும் என்றும், மின் கம்பம் ஒன்று பழுதடைந்திருக்கின்றது, அந்தக் கம்பத்தையும் மாற்றித் தர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்கள். அவர் சொன்னதை நான் குறிப்பெடுத்து வைத்துள்ளேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அந்தப் பணியை உடனடியாக மேற்கொள்வதற்கு நடவடிக்கையை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில், குறிப்பாக என்னுடைய கொளத்தூர் தொகுதியிலுள்ள ஜி.கே.எம். காலனி பகுதியில் உயரமூத்த மின் கம்பங்கள் அதிகமான அளவில் இருக்கின்றன. அந்த மின் கம்பங்கள், வீடுகளுக்கு மிக அருகில் இருக்கின்ற காரணத்தால், அவ்வப்போது உயிரிழப்புகளும் ஏற்படக்கூடிய நிலைமை தொடர்ந்து இருந்து கொண்டிருக்கின்றது. எனவே, அதைத் தவிர்க்கக்கூடிய வகையில், உடனடியாக அதை மாற்றி, மின் கம்பிகளை பூமிக்கடியில் கொண்டு செல்வதற்குரிய செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியதுபோலவே, சென்னை மாநகர மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதற்காக, மின் கம்பிகளை பூமிக்கடியில், அதாவது,* underground cable *போட வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே ஆணையிட்டிருக்கிறார்கள். இப்பணியில், உள்ளாட்சித் துறை, நெடுஞ்சாலை போன்று பல துறைகள் வருகின்றன. எனவே, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவுற்றதும், அனைத்துத் துறை அதிகாரிகளையும் அழைத்து, ஆய்வு நடத்தி, மின் கம்பிகளை பூமிக்கடியில் கொண்டுசெல்ல*

உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். வரவிருக்கும் மழைக் காலத்திற்குள், பூமிக்கடியில் மின் கம்பிகளைக் கொண்டுசெல்லும் பணிகளை மேற்கொண்டு, மக்களுக்கு பாதுகாப்பை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கின்றார்கள். எனவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய கோரிக்கையும் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன் அவர்கள்.*

திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பாதம் தொட்டு வணங்குகிறேன். தென்காசி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, 'ஏழைகளின் நயாகரா' என்று அழைக்கக்கூடிய குற்றாலத்திற்கு பல இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். இதனால், அதிகமான வீடுகள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் தங்கக்கூடிய விடுதிகள் போன்றவை பெருகிக் கொண்டிருக்கின்றன. எனவே, குற்றாலத்தின் அருகிலுள்ள இலஞ்சி குமாரர் கோயிலுக்குச் சொந்தமான, இந்து சமய மற்றும் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள, சர்வே எண் 581, 582 என்ற இடத்தில் 110 KVA திறன்கொண்ட துணை மின் நிலையம் அமைத்துத் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் பாதையில் வருகின்றபோது மின் அழுத்தம் எந்த அளவிற்கு இருக்கிறதோ, அந்த அளவிற்கு துணை மின் நிலையங்களை அமைத்திருக்கிறோம். கடந்த 5 ஆண்டுகளில் 294 துணை மின் நிலையங்களை நாம் அமைத்திருக்கிறோம். கடந்த காலங்களில் அவர்கள் 262 துணை மின் நிலையங்களை மட்டும்தான் அமைத்திருக்கிறார்கள். இன்றையதினம்கூட*

2016 ஆகஸ்ட் 5]

மாண்புமிகு அம்மா அவர்கள் தன்னுடைய பொற்கரங்களால் 23 துணை மின் நிலையங்களை தொடங்கி வைக்க இருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதைப்போல, தேவையிருந்தால் அது உடனடியாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டு, அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, தேவிகோடு, மாங்கோடு, புலியூர்சாலை ஊராட்சிகளில் மின் அழுத்தக் குறைபாடு உள்ளதால், பனச்சமூட்டில் 110 KVA புதிய துணை மின் நிலையம் மற்றும் அருமனை பேரூராட்சி, மேலத்தெரு, கடையாலுமூடு பேரூராட்சி, பத்துகாணி, ஆறுகாணி, ஆனைமுகம் போன்ற பகுதிகளில் மின்மாற்றிகள் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்றபோது முதலில் துணை மின் நிலையம் வேண்டுமென்றார்கள். பின்னர் மின்மாற்றி அமைக்க வேண்டுமென்கிறார்கள். மின்மாற்றி வேண்டுமா அல்லது துணை மின் நிலையம் வேண்டுமா என்பதை குறிப்பிட்டுச் சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திருமதி எஸ். விஜயதரணி, நீங்கள் ஒரு துணைக் கேள்விதான் கேட்க முடியும். கேள்வி கேட்கும்போது குறிப்பிட்டுக் கேட்கவேண்டும். குறிப்பிட்டுக் கேட்கவில்லை. உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.*

திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட,*

கிருஷ்ணகிரி-ராயக்கோட்டை சாலையிலே அமைந்திருக்கின்ற, ஆலப்பட்டி என்கின்ற கிராமத்தில் 33 KVA துணை மின் நிலையம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. ஆகவே, அந்த ஆலப்பட்டி பகுதியைச் சுற்றி கிட்டத்தட்ட 20 ஊராட்சிகளுக்கும் மேற்பட்ட, 100-க்கும் மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்ற காரணத்தினாலும், அங்கே மின்சாரத்தினுடைய அளவு குறைவாக இருக்கின்ற காரணத்தினாலும், குடிதண்ணீருக்கான மோட்டார்களை இயக்க முடியவில்லை. அதேபோல குழந்தைகள் படிக்க முடியாத சூழ்நிலை. அதேபோல விவசாயிகள் பம்ப் செட்களை இயக்கமுடியாத சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், அந்த 33 KVA திறனுள்ள துணை மின் நிலையத்தை 110 KVA துணை மின் நிலையமாக தரம் உயர்த்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொண்டு, அப்படி ஏற்கெனவே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்குட்டுவன், கேள்வியை கேட்டுவிட்டார்கள். உட்காருங்கள். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 33 KVA துணை மின் நிலையம் இருக்கின்றது என்று சொல்லியிருக்கின்றார்கள். அதை 110 கிலோ வாட்டாக மாற்றித் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அந்த இடத்தில் இடவசதி எந்த அளவிற்கு இருக்கிறதென்று தெரியவில்லை. அதை ஆராய்ந்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும். ஏனென்று சொன்னால், தேவையிருந்தால்தான் 110 KVA துணை மின் நிலையம் அமைக்க முடியும். 33 KVA என்று சொன்னால் 2 ஏக்கர் நிலம் இருந்தால் போதும். 110 KVA என்று சொன்னால் 4 ஏக்கர் நிலம் வேண்டும். அந்த அளவிற்கு இடம் இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன் அவர்கள்.

2016 ஆகஸ்ட் 5]

திரு. V.T. கலைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய நிரந்தர முதலமைச்சர் அம்மா அவர்கள், விருத்தாசலம் தொகுதியினுடைய வேட்பாளராக என்னை அறிவித்து, விருத்தாசலம் நகருக்கு வருகை தந்து, அன்றே என்னுடைய வெற்றியை உறுதி செய்த, போற்றுதலுக்கும் மரியாதைக்கும் உரிய (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பாதங்களிலே என்னுடைய குடும்பத்தினுடைய நன்றியை உரித்தாக்கிக்கொள்கிறேன். எனக்கு வாக்களித்த விருத்தாசலம் தொகுதி மக்களுக்கும் என்னுடைய நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10-30

விருத்தாசலம் தொகுதிக்குட்பட்ட, NLC *நிறுவனம்,* T.S.-II *என்ற 1470 மெகாவாட் மின்சார உற்பத்தியையும், தற்போது* T.S.-II expansion *என்று 500x2=1000 மெகாவாட் மின்சார உற்பத்தியையும் தொடங்க உள்ளது. மின்சாரம் நெய்வேலியிலிருந்து சேலம் சென்று, சேலத்திலிருந்து மீண்டும் விருத்தாசலம் நகருக்கு வந்துகொண்டிருக்கிறது. ஆக, அதிலே குறைந்தழுத்த மின்சாரம் வருவதற்கு வாய்ப்புள்ள காரணத்தால், விருத்தாசலம் நகரத்தில் 230* KVA *துணை மின் நிலையம் அமைக்கப்பட வேண்டும். எங்களுடைய பகுதி முழுவதும் விவசாயம் சார்ந்த பகுதி என்ற காரணத்தினால், 230* KVA *துணை மின் நிலையத்தை அமைப்பதற்குத் தேவையான இடம் விருத்தாசலம் நகரிலேயே இருக்கின்றது என்ற தகவலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கலைச்செல்வன், சுருக்கமாகக் கேளுங்கள். (குறுக்கீடு) சரி, உட்காருங்கள். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 230* KVA *துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அங்கே மின்சாரம் சேலம் சென்று வருவதாகச் சொல்லியிருக்கின்றார்கள். ஏற்கெனவே, அங்கு பல துணை மின் நிலையங்கள் இருக்கின்றன. இருந்தாலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

28—

அடுக்குமாடிக் குடியிருப்புகள்

***232—திரு. C.V. சேகர்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை தொகுதி, அதிராம்பட்டினம் பேரூராட்சி மற்றும் மதுக்கூர் பேரூராட்சி, மௌலானா குடியிருப்பு பகுதிகளில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தமிழர்களுக்கு குல தெய்வம், கழக உடன் பிறப்புகளுக்கு அன்பு தெய்வம், தரணி போற்றும் மனித தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து வணங்குகிறேன்.

பட்டுக்கோட்டை தொகுதி, அதிராம்பட்டினம் பேரூராட்சி, மதுக்கூர் பேரூராட்சி மற்றும் மௌலானா குடியிருப்புப் பகுதிகளில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட மாவட்ட நிருவாகம் குடிசை மாற்று வாரியத்திற்கு போதிய நிலம் ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில், மாவட்ட நிருவாகம் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், ஏழைக் குடும்பங்களுக்கு மேற்கண்ட பகுதிகளில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர் அவர்கள்.*

2016 ஆகஸ்ட் 5]

திரு. C.V. சேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதிலுக்கு எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

"For the People, by the People, of the People" *என்ற மக்களாட்சி தத்துவத்தைத் தன் உயிர் மூச்சாகக்கொண்டு மக்களுக்காகவே என் தவ வாழ்வு என்ற (மேசையைத் தட்டும் ஒலி) புதிய சிந்தனையை முதலில் சொன்ன முதல்வர்களுக்கெல்லாம் முதல்வர், எங்கள் அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

பார்போற்றும் இப்பேரவையில் எளியவனான எனக்கு இடம் அளித்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நானும் எனது தலைமுறையும் என்றென்றும் நன்றியுடன் இருப்போம் என்பதைத் தெரிவித்து, பட்டுக்கோட்டை தொகுதியிலே அதிக வாக்குகள் அளித்து என்னை வெற்றி பெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்து, அமர்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அங்கே என்ன சத்தம்? இந்த மாதிரியெல்லாம் செய்யாதீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள்.*

திரு. நா. கார்த்திக்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட சிங்காநல்லூர் உழவர் சந்தைக்கு அருகில் இருக்கக்கூடிய தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்புகள் பழுதடைந்து, மிகவும் ஆபத்தான சூழ்நிலையில் பொது மக்கள் வசித்து வருகிறார்கள். அந்த வீடுகளுக்குப் பதிலாக மாற்று வீடுகள் கட்டித் தரப்படுமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை துறை ரீதியாக அதிகாரிகளோடு ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச்சென்று பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.*

திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாநகரப் பகுதியில், தூத்துக்குடி-திருநெல்வேலி சாலை விரிவாக்கத்திற்காக ஆக்கிரமிப்பு என்று கூறி, 40 ஆண்டு காலமாக குடியிருந்த ஜெயிலானி காலனி, பத்திநாதபுரம் உள்ளிட்ட பகுதிகளில் மக்களின் குடியிருப்புகள் அகற்றப்பட்டன. நான்கு ஆண்டு காலமாக சாலை விரிவாக்கமும் நடைபெறவில்லை, அந்தக் குடியிருப்புகளில் இருந்த சுமார் 350 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளும் கட்டித் தரப்படவில்லை. மேற்படி ஜெயிலானி காலனி மக்களுக்கு நிரந்தர வீடுகள் குடிசை மாற்று வாரியத்தின்மூலம் கட்டித் தர இந்த அரசு முன்வருமா என்பதனைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 350 குடிசைப் பகுதி மக்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டித் தர வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வருகின்ற ஐந்து ஆண்டுகளில் பத்து இலட்சம் வீடுகளைக் கட்டித் தர இருக்கின்றது என்ற ஒரு நல்ல திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் சொல்லியிருக்கின்ற அந்த திட்டங்களில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட பகுதியில் இருப்பவர்களுக்கும், அங்கே துறை ரீதியாக ஆய்வு செய்யப்பட்டு, வீடுகள் வழங்குவதற்கு, மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று பரிசீலனை செய்யப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்*

2016 ஆகஸ்ட் 5]

திரு. எஸ். ரகுபதி: *உலகத் தமிழ் சமுதாயத்தினுடைய நம்பிக்கை பேரொளியாகவும், 89-லே ஆட்சிக்கு வந்தோம், மீண்டும் 89-ஐ கொண்டே ஆட்சிக்கு வர முடியும் என்கிற இராஜதந்திரத்தோடு, இன்றைக்கு அரசியல் களத்திலே வலம் வந்துகொண்டிருக்கிற எங்களுடைய 'நமக்கு நாமே நாயகன்' தளபதி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) என்னை தேர்ந்தெடுத்து அனுப்பிய திருமயம் சட்டப் பேரவைத் தொகுதியினுடைய வாக்காளர் பெருமக்களுக்கும் நன்றியினை தெரிவித்து, திருமயம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பொன்னமராவதி மற்றும் அரிமளம் பேரூராட்சிப் பகுதிகளிலே குடிசை வீடுகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக அங்கே அடுக்குமாடி வீடுகள் கட்டித் தரப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அரசிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, அங்கு இருக்கின்ற பயனாளிகளின் எண்ணிக்கையைக் கண்டறிந்து, வருங்காலங்களில் துறை ரீதியாக ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான ஒப்புதலோடு, நிதிநிலைக்கு ஏற்ப அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. எம். இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை இந்தச் சபைக்கு மூன்றாவது முறையாகத் தேர்ந்தெடுப்பதற்கு வழி செய்த என்னுடைய அன்புத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுக்குத் துணையாக இருந்து, இந்த இயக்கத்தை நடத்தி வருகின்ற எங்களுடைய அன்புத் தளபதி அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரத்தநாடு*

தொகுதியினுடைய பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரத்தநாட்டிலே குடிசை மாற்று வாரிய வீடுகள் கட்டப்பட்டு, அங்கே சாதாரண ஏழையெளிய மக்களைக் குடியமர்த்தி இருக்கிறார்கள். அவர்களுக்கு மாதம் இவ்வளவு ரூபாய் வாடகை என்று நிர்ணயித்து, வாடகை செலுத்த சொல்லியிருப்பதனால், அந்த ஏழை பெருமக்கள் எல்லாம் மிகவும் சங்கடத்தில் இருக்கின்றனர். அந்தக் குடிசை மாற்று வாரிய வீடுகளில் இருப்பவர்களுடைய வாடகையை, இந்த அரசு தள்ளுபடி செய்து, அவர்களுக்கு இனாமாக அந்த வீடுகளை வழங்க ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஒரத்தநாட்டில் இருக்கின்ற குடிசை மாற்று வாரிய வீடுகளில் இருப்பவர்களுக்கு வாடகைக் கட்டணத்தை வாங்கக் கூடாது என்று சொன்னார்கள். வாடகையை வாங்குவது எதற்கு என்று சொன்னால், அந்தக் குடிசை மாற்று வாரிய வீடுகளை maintenance செய்வதற்காக, அதாவது அங்கே பராமரிப்புப் பணிகளைச் செய்வதற்காகத்தான் பெறுகிறோம் என்றும், வாடகையாக அல்ல என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்தவரையில், ஏழை, எளியோர் வீடு இல்லாத நிலையை தமிழகத்தில் போக்க வேண்டுமென்பதற்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அந்த வகையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கோரிக்கையை துறை ரீதியாக ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

2016 ஆகஸ்ட் 5]

29—

வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம்

***2473—திரு. துரை. கி. சரவணன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, புவனகிரியிலுள்ள வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(அ) மற்றும் (ஆ) புவனகிரி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு ரூ.251.00 இலட்சம் செலவில் புதிய வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவது தொடர்பான கருத்துரு அரசின் நடவடிக்கையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன் அவர்கள்.*

திரு. துரை. கி. சரவணன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க அவையிலே என்னை இரண்டாவது முறையாக புவனகிரி சட்டமன்றத் தொகுதி மக்களின் நலனுக்காகப் பணியாற்றிட வாய்ப்பளித்த, உலகத் தமிழர்களின் நலனுக்காக தனது 93-வது வயதிலும் பணியாற்றிடும் ஒரே தலைவர் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழினத் தலைவர், முத்தமிழ் அறிஞர், டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், இளைஞர்களின் எழுச்சி நாயகர், 'நமக்கு நாமே பயண நாயகர்', தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், கழகப் பொருளாளர் அண்ணன் தளபதியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மற்றும் புவனகிரி சட்டமன்றத் தொகுதியிலே என்னை வெற்றி பெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கும், அந்த வெற்றிக்காக உழைத்திட்ட கழக முன்னோடிகள், நிருவாகிகள், தொண்டர்கள்*

மற்றும் கூட்டணிக் கட்சி நிருவாகிகள், தொண்டர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் இந்த அவையின் மூலமாக எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புவனகிரி வட்டாட்சியர் அலுவலகம் 2-6-2015 அன்று, சிதம்பரம் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து பிரித்து துவங்கப்பட்டது. புவனகிரி வட்டம் சுமார் 73 வருவாய்க் கிராமங்களைக் கொண்டதாக உள்ளது. தற்போது தனியார் கட்டடத்தில் இயங்கி வரும் வட்டாட்சியர் அலுவலகம், புவனகிரியிலிருந்து விருத்தாசலம் செல்லும் முக்கியச் சாலையிலே உள்ளது. அந்தத் தனியார் கட்டடம் போதிய இடமின்றி, இட நெருக்கடியால் அலுவலகப் பணிகள் விரைவாக நடைபெறுவதற்கு இடையூறாக உள்ளது. மேலும், அந்த முக்கியச் சாலையிலுள்ள அலுவலகத்திற்கு தினம் 500 நபர்கள் வந்து செல்கின்றனர். அவர்கள் வந்து செல்லும்போது, வாகனங்களை சாலையோரமாக நிறுத்துவதால், அங்கே போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 251 இலட்சம் ரூபாய் செலவில் புதிய வட்டாட்சியர் அலுவலகம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்கள். அதற்கு. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. துரை. கி. சரவணன்: அதற்கு விரைவாக நிதி ஒதுக்கீடு செய்து, அந்த அலுவலகம் கட்டும் பணிகள் எப்போது துவங்கும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய தலைவிதியை மாற்றுகின்றவகையிலே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பேரவை விதி 110-ன்கீழ் ஒரு முத்தான அறிவிப்பாக, நம்முடைய வருவாய்த் துறை வரலாற்றிலே இதுவரை இல்லாதவகையிலே 65 புதிய வட்டங்களை உருவாக்கித் தந்தவர்

2016 ஆகஸ்ட் 5]

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் 11-8-2014 அன்று, வெளியிடப்பட்ட அறிவிப்பான கடலூர் மாவட்டத்திலுள்ள சிதம்பரம் வட்டத்தைப் பிரித்து, புவனகிரியிலே ஒரு புதிய வட்டம் உருவாக்கப்படும் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்ததன் அடிப்படையில்தான், 5-1-2015 அன்று சிதம்பரம் வட்டத்தைப் பிரித்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன புவனகிரி புதிய வட்டம் உருவாக்கி ஆணை வெளியிடப்பட்டது. உறுப்பினர் சொன்னதைப்போல அந்த அலுவலகம் வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருவது ஒரு தற்காலிக ஏற்பாடுதான். அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் சொந்தக் கட்டடம் வழங்க வேண்டுமென்ற இலட்சியத்தோடு, கடந்த ஐந்தாண்டுகளிலே 377 புதிய கட்டடங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏறத்தாழ 360 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். ஆகவே, இந்தப் புதிய வட்டம் உருவாக்கப்பட்டு, வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்கான கருத்துரு ஏறத்தாழ 251 இலட்சத்திலே இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் பரிசீலனையிலுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் வழங்கியவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள்தான் என்பது ஏற்கெனவே உங்களுக்குத் தெரியும். ஆகவே, கடலூர் மாவட்டத்திற்கு புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடத்தை வழங்கிய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த வட்டாட்சியர் அலுவலகத்தையும் மிக விரைவில் கட்டித் தருவார்கள் என்ற நம்பிக்கையோடு நீங்கள் இருக்கலாம் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.க. செல்வம் அவர்கள்.*

திரு. கு.க. செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரம் விளக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினராக என்னைத் தேர்ந்தெடுப்பதற்கு வாக்களித்த திராவிட முன்னேற்றக் கழகத்தின்*

இயக்கத் தலைவர் அவர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொருளாளர், என்னை இயக்கும் தலைவர் தளபதி அவர்களுக்கும், ஆயிரம் விளக்கு தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், ஆயிரம் விளக்கு தொகுதி கழகத் தோழர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழும்பூர், நுங்கம்பாக்கம் வட்டாட்சியர் அலுவலகத்தை தனித் தனியாகப் பிரித்து, நுங்கம்பாக்கத்திற்கு புதிய வட்டாட்சியர் அலுவலகம் கட்டித் தர வேண்டுமாய் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் புதிய வருவாய் வட்டம் கேட்கிறீர்களா? அல்லது அலுவலகம் கேட்கிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.க. செல்வம் அவர்கள்.

திரு. கு.க. செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நுங்கம்பாக்கம் மற்றும் எழும்பூரும் சேர்த்து தற்பொழுது ஒரே வட்டாட்சியர் அலுவலகமாக இயங்கி வருகிறது. எழும்பூருக்குத் தனியாகவும், நுங்கம்பாக்கத்திற்குத் தனியாகவும் வட்டாட்சியர் அலுவலகத்தை ஏற்படுத்தித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதைப் போல ஒரு புதிய வட்டம் உருவாக்க வேண்டுமென்று சொன்னால், பரப்பளவு, வருவாய் கிராமங்கள், மக்கள்தொகையினுடைய அடிப்படையிலே, மாவட்ட நிருவாகம் உயர்மட்டக் குழுவிற்கு அதாவது CLA, CLR, CRA என்ற மூன்று உயர் அலுவலர்கள் கொண்ட அந்தக் குழுவிற்கு பரிந்துரை

2016 ஆகஸ்ட் 5]

செய்வார்கள். தகுதி அடிப்படையிலே விதிகளுக்குட்பட்ட மக்கள்தொகை, பரப்பளவு, வருவாய் கிராமங்கள் இருக்கின்றபட்சத்திலே புதிய வருவாய் வட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. அந்தவகையிலே, கடந்த ஐந்தாண்டுகளிலே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வருவாய்த் துறை வரலாற்றிலேயே, நான் மீண்டும் சொல்கிறேன், 65 புதிய வட்டங்களையும், 9 கோட்டங்களையும் உருவாக்கித் தந்த முதலமைச்சர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையையும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, விதிமுறைகளுக்குட்பட்டு, தகுதி இருக்குமானால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அங்கே புதிய வட்டங்களை உருவாக்கித் தருவார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ராஜா அவர்கள்.*

திரு. சி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசியல் வரலாற்றில் 32 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் ஆளுங்கட்சியின் அரசாட்சியே தொடரும் வகையில் சாதனை படைத்து, நூற்றாண்டை நெருங்குகின்ற தமிழக சட்டமன்றத்தில் ஆறாவது முறையாக அரியணை ஏறி அரிய சாதனை நிகழ்த்திய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்குகிறேன்.*

சங்கரி சட்டமன்றத் தொகுதி, சங்கரி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக வருவாய்த் துறை என்பது மிகப் பழமையான துறை. ஆகவே, பழைய கட்டடங்களுக்குப் புதிய கட்டடங்களும், புதிதாக உருவாக்கப்படுகிற வட்டங்கள்,*

கோட்டங்கள், அதைப்போல கிராம நிருவாக அலுவலகங்கள், வருவாய் ஆய்வாளர் அலுவலகக் கட்டடங்களும் உருவாக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில், எனது தொகுதியான கீழ்பெண்ணாத்தூர், புதிய வட்டமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அந்த வட்டாட்சியர் அலுவலகத்திற்கு தினசரி மக்கள் அதிக அளவிலே வந்து சென்று கொண்டிருக்கிறார்கள். அந்த அலுவலகம் துவங்கப்பட்ட இடம் ஒரு சிறிய இடமாக இருப்பதால், அங்கே இருக்கின்ற அலுவலர்களும் பணி செய்ய முடியவில்லை, வருகின்ற பொது மக்களும் தங்கள் குறைகளைச் சொல்லமுடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஊராட்சி ஒன்றிய வளாகத்திலேயே வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்கான இடத்தைத் தேர்ந்தெடுத்து, அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதை அரசு கவனத்திலே கொண்டு இந்த ஆண்டே கீழ்பெண்ணாத்தூர் வட்டாட்சியர் அலுவலகம் கட்டித் தரப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மாவட்ட நிருவாகத்திலே வருவாய்த் துறையினுடைய பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நாம் அனைவரும் அறிவோம். அந்தவகையிலே அலுவலர்களுடைய பணிச் சுமையை குறைக்கவும், பொது மக்கள் எளிதாக அணுகிடவும் வருவாய்த் துறைக்குத் தேவைப்படுகிற அலுவலகக் கட்டடங்கள், குடியிருப்புக் கட்டடங்கள் மற்றும் தொடர்புடைய உள்கட்டமைப்பு வசதிகள் என அனைத்திற்கும் முன் எப்போதும் இல்லாத வகையிலே

2016 ஆகஸ்ட் 5]

முன்னுரிமை அடிப்படையிலே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு வருவாய்த் துறைக்கு இன்றைக்கு நிதியை வாரி, வாரி வழங்கி வருகிறார்கள். அந்தவகையிலே கடந்த ஐந்தாண்டுகளில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வருவாய்த் துறைக்கான 377 அரசு அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.356 கோடியை வாரி வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன, கீழ்பெண்ணாத்தூர் புதிய வட்டத்தையும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான், விதி 110-ன்கீழ் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். தற்போது வாடகைக் கட்டடத்திலே தற்காலிகமாகத்தான் இயங்கி வருகிறது. புதிய வட்டம் உருவாக்கப்பட்ட இடங்களுக்கு நிலம் கண்டறியப்பட்டு, அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டு, மிக விரைவிலேயே அந்தப் புதிய வட்டங்களுக்கு எல்லாம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கட்டடங்களை உருவாக்கித் தருவார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தமிழகத்தில் கிராமநத்தம் பட்டா வழங்குவதற்கென்று தாம்பரத்தில் தனியாக ஒரு தாலுகா அலுவலகத்தை அமைத்தார்கள். அதன்மூலமாக 2006 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரை ஏறக்குறைய 30,000 பட்டாக்கள் தி.மு.க. ஆட்சியில் வழங்கப்பட்டன. கடந்த ஐந்தாண்டு காலத்தில் ஏறக்குறைய 2,000 பட்டாக்கள் வழங்கியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். தாம்பரம் பகுதி மிகப் பெரிய வளர்ந்த தொகுதியாக இருக்கின்ற காரணத்தினால், தாம்பரத்தில் இருக்கின்ற கிராமநத்த அலுவலகத்தை, பட்டா வழங்குவதற்கென்றே தனியாக, நிரந்தரமாக அமைத்து, அதற்குப் புதிய கட்டடம் கட்டித் தர அரசு அனுமதிக்குமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பட்டா கோரிக்கையும் வைத்திருக்கிறாரா?*

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பட்டா கேட்கவில்லை. கிராமநத்தத்திற்கென்று தமிழகத்தில், தாம்பரம் தொகுதியில் மட்டும் ஓர் அலுவலகம் இயங்கிக்கொண்டிருந்தது. தி.மு.க. ஆட்சியில் கிட்டத்தட்ட 30,000 பேருக்குமேல் பட்டா வழங்கியிருக்கிறோம். கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் 2,000 பட்டாக்கள் வழங்கியிருப்பீர்கள் என்று நினைக்கிறேன். இப்பொழுது அந்த அலுவலகத்திற்கு நிரந்தரமாகக் கட்டடம் அமைத்து, ஏழை, எளிய மக்களுக்கு உதவி செய்கின்றவிதமாக, அங்கு புதிய கட்டடம் கட்டிக் கொடுக்கப்படுமா என்பதைக் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பட்டா வழங்கக் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மேலும், தி.மு.க. ஆட்சியில்தான் பட்டா கொடுத்ததாகச் சொல்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில்தான் 10.3 இலட்சம் பட்டாக்கள் வழங்க இலக்காகக் கொண்டு வழங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை வருவாய்த் துறையில் கடைபிடிக்காத, ஒரு புதிய அணுகுமுறையாக ஒவ்வோர் ஆண்டும் ஒரு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. முதலாம் ஆண்டில் 1 இலட்சமாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அந்த இலக்கைக் கடந்து 1,25,000 பட்டாக்கள் வழங்கப்பட்டன. அதேபோல, ஒவ்வோர் ஆண்டும் படிப்படியாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, ஐந்தாண்டுகளில் 10.5 இலட்சம் இலக்காக நிர்ணயிக்கப்பட்டு, 12.5 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) அதற்கான ஆதாரம் இருக்கிறது. நீங்கள் இல்லையென்று சொன்னால், அதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி) அதைப் பெற்றவர்கள் எல்லோரும்*

2016 ஆகஸ்ட் 5]

மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். 12.5 இலட்சம் வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

தாம்பரத்திற்கு புதிய கோட்டாட்சியர் அலுவலகம் தொடங்கப்பட்டது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில்தான். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களது திருக்கரங்களால்தான் அந்த அலுவலகத்தைத் திறந்து வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதை மாண்புமிகு உறுப்பினர் அறியவில்லை என்று சொன்னால், அதற்கு நாங்கள் பொறுப்பாக முடியாது. (குறுக்கீடு)

தற்போது, புதிய வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டுவது குறித்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்கள் கனிவோடு பரிசீலனை செய்வார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. வி. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகாளும் தமிழுக்கு ஏற்றம் தரவே அவதாரம் எடுத்து வந்த அரசியல் பூங்காற்றே, எங்கள் தாயே! கண்களை இமை காப்பதுபோல் கழகத்தையும், தமிழினத்தையும் காத்து நிற்கின்ற தமிழர் குலசாமியே! எங்கள் தாயே! வீரமிகு பூமிக்கு ஈரமிகு இதயம்கொண்ட இனிய தாயே! வாரி வாரித் தருகின்ற வள்ளலே, நாங்கள் நாளெல்லாம் வணங்குகின்ற எங்கள் குடும்ப குலசாமியே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.*

மயிலாடுதுறை தொகுதி, மயிலாடுதுறை வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் 1934 ஆம் ஆண்டு கட்டப்பட்ட மிகப் பழமையான கட்டடம். எனவே, அந்த அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர ஆவன செய்வார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு கனிவோடு பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி அவர்கள். (குறுக்கீடு) ஏன் இப்படி நடந்துகொள்கிறீர்கள்? கையைத்தான் உயர்த்திக் காண்பிக்க வேண்டும். (குறுக்கீடு) திரு. பெ. சுப்ரமணி, பேசுங்கள்.*

திரு. பெ. சுப்ரமணி: *தமிழினத் தலைவர், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களையும், நமக்கு நாமே நாயகன், எதிர்க்கட்சித் தலைவர், அன்பு அண்ணன் தளபதியார் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி சட்டமன்றத் தொகுதி, நல்லம்பள்ளி வட்டாட்சியர் அலுவலகம் மிகப் பழமைவாய்ந்த கட்டடத்தில் இயங்கி வருகிறது. கடந்த வாரம் ஓர் அரசு நிகழ்ச்சியில் கலந்துகொண்டபோது பெய்த பெருமழையின் காரணமாக மேற்கூரை வழியாக மழைநீர் ஒழுகியதை நான் கண்கூடாகப் பார்த்தேன். எனவே, உடனடியாக வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நிலம் தேர்வு செய்து, புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன். பழைய கட்டடங்களை புதிய கட்டடங்களாக மாற்றுவதும், புதியதாக அறிவிக்கப்பட்டிருக்கிற வட்டங்களுக்குத் தேவையான*

2016 ஆகஸ்ட் 5]

கட்டடங்களை உருவாக்குவதிலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கவனம் செலுத்தி தேவைப்படுகின்ற இடங்களிலே, புதிய கட்டடங்களை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கித் தந்து கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கட்டடம் பழமையான கட்டடம் என்று சொன்னால், அதை ஆய்வு செய்து மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, தேவைப்படுகின்றபட்சத்தில் அங்கே உருவாக்கித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி அவர்கள்.*

திரு. பி.வி. பாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதர்குலம் போற்றும் மாதரசி, வாழும் வள்ளலார், இதய தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, என்னுடைய சீர்காழி தொகுதியிலே வட்டாட்சியர் அலுவலகம் மிகப் பழமைவாய்ந்த கட்டடமாக, அதுவும் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக பெய்த வடகிழக்குப் பருவமழையிலே இடி தாக்கி, மேற்கூரை பாதிக்கப்பட்டு, மழை நீர் முழுவதும் உள்ளே ஒழுகுகின்ற அளவிலே உள்ளே இருக்கின்ற மென்பொருள்கள், அங்கே இருக்கின்ற* records *பாதிக்கப்படக்கூடிய நிலையிலே இருக்கிறது. மாண்புமிகு வருவாய்த் துறையின் சார்பாக, முன்னுரிமையின் அடிப்படையிலே எங்களுக்கு வட்டாட்சியர் அலுவலகம் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரைக் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011-2012 முதல் 2013-2014 வரை புதியதாக தோற்றுவிக்கப்பட்ட 34 வட்டங்களுக்கான வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் 25 பழைய கட்டடங்களுக்குப் பதிலாக புதிய கட்டடங்கள் உள்ளிட்ட 59 புதிய வட்டாட்சியர் அலுவலகக்*

கட்டடங்கள் ரூ.125.59 கோடி செலவில் கட்ட மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வழங்கி, இவற்றில் 19 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள கட்டடங்களில் பல்வேறு நிலைகளில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதேபோல, இந்த நிதிநிலை அறிக்கையிலேகூட புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் அனைவருடைய வரவேற்பைப் பெறுகின்ற வகையிலே, வருவாய்த் துறையில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த 15 புதிய வட்டாட்சியர் அலுவலகங்களும், 5 கோட்டாட்சியர் அலுவலகங்களும் மற்றும் காஞ்சிபுரத்தில் நில அளவை துறை உதவி இயக்குநர் அலுவலகமும் கட்டத் தேவையான இடங்களை உருவாக்கித் தந்து கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற இடத்திலே, புதிய கட்டடங்கள் தேவைப்படுகின்றபட்சத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, அங்கே அவர்களுடைய கோரிக்கையை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிறைவேற்றித் தருவார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் வட்டாட்சியர் அலுவலகம் தற்போது அங்கே உள்ள Agricultural Marketing நிலத்திற்குச் சொந்தமான இடத்திலே இருக்கிறது. கடையநல்லூர் வட்டத்திலே 32 வருவாய்க் கிராமங்களும், 2 நகராட்சிகளும் இருக்கின்றன. இதுவரை அதற்கு சொந்தக் கட்டடம் இல்லாமல் இருக்கின்றது. எனவே, அந்த அலுவலகத்தை ஊருக்கு வெளியிலே கொண்டு போகாமல், நகர எல்லையிலேயே அமைத்துக் கொடுக்க வேண்டுமென்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கின்றேன். அதற்கு திட்டம் இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

2016 ஆகஸ்ட் 5]

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கடையநல்லூர் புதிய வட்டம் என்பது புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களால் விதி 110-ன்கீழ் உருவாக்கித் தரப்பட்ட புதிய வட்டம். அது தற்போது வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகிறது. அதை நகரத்தின் வெளிப்பகுதியிலே கொண்டு போகக்கூடாது என்கின்ற கோரிக்கையை உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கின்றார்கள். மாவட்ட நிருவாகத்தின் சார்பிலே அங்கே இருக்கக்கூடிய நிலத்தை ஆய்வு செய்து, அவர்கள் அரசுக்கு பரிந்துரை செய்கின்றார்கள். அந்தவகையிலே, புதிய வட்டாட்சியர் அலுவலகம் மட்டுமல்ல, அங்கே பல அரசு அலுவலகக் கட்டடங்கள் உருவாக்குகின்ற வகையிலே, ஒரு இடத்தைப் பரிந்துரை செய்திருக்கின்றார்கள். ஏற்கெனவே அதற்கு, அங்கே இருப்பவர்கள் எதிர்ப்பு தெரிவிப்பதாக உறுப்பினர் அவர்கள் எங்களிடத்திலே கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதை மறுபரிசீலனை செய்யச் சொல்லி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அங்கே மாவட்ட நிருவாகத்திற்கு உத்தரவு வழங்கியிருக்கிறார்கள். ஆகவே, அதற்குத் தேவையான நடவடிக்கைகளை புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இப்பொழுது வாடகைக் கட்டடத்தில் இயங்குவது எல்லாம், தற்காலிக ஏற்பாடுதான். நான் மீண்டும் சொல்கிறேன். இந்திய அரசியல் வரலாற்றிலே இல்லாத வகையிலே, வாடகைக் கட்டடத்தில் இயங்குகிற அனைத்து கட்டடங்களுக்கும் சொந்தக் கட்டடங்களை உருவாக்கித் தர வேண்டுமென்று கடந்த 5 ஆண்டுகளில், இதுவரை இருந்த எந்த அரசும் செய்யாத வகையிலே, 377 கட்டடங்களுக்கு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) 360 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள். அவர் இருக்கையில் இல்லையா? (குறுக்கீடு) கேள்விக்கு கையைத்

தூக்கிவிட்டு, நீங்கள் இருக்கை மாறிப் போய் உட்கார்ந்திருந்தால் எப்படி? உங்கள் இருக்கையில் அமருங்கள்.

திரு. கே.எஸ். மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்தில் என்னை, இங்கு அங்கம் வகிக்கச் செய்த தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களையும், தளபதி அவர்களையும் வணங்குகிறேன்.

செஞ்சி தொகுதியில் உள்ளடங்கிய, செஞ்சி பேரூராட்சியில் நீதிமன்றத்தின் உத்தரவின்பேரில் ஆக்கிரமிப்பு என்ற அடிப்படையில் 300-க்கும் மேற்பட்ட குடிசைகள் அகற்றப்பட்டு, மக்கள் வீடு இல்லாமல் அவதிப்படுகிறார்கள். அவர்களுக்கு குடிசைமாற்று வாரியம் மூலமாக வீடுகள் கட்டித் தர முடியுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மஸ்தான், வருவாய்த் துறை குறித்த கேள்விக்குப் பதிலாக வேறு ஏதோ கேள்வி கேட்கிறீர்கள். அதற்கு வேறு தனிக் கேள்வி போடுங்கள். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர்களைத் தேடி மக்கள் என்ற நிலையை மாற்றி, மக்களைத் தேடி தலைவர்கள் என்ற நிலைக்கு வித்திட்டிருக்கின்ற எங்கள் பாசமிகு தளபதி அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுகின்ற நேரத்திலே, சென்னை மாநகரம் விஸ்தரிக்கப்பட்ட பிறகு, அனைத்திற்கும் வட்டாட்சியர் அலுவலகங்களை நாடி, சான்றிதழ்களைப் பெற வேண்டிய சூழ்நிலை நிலவுவதால், 155 வட்டங்கள் இருந்த சென்னை மாநகராட்சி 200 வட்டங்களாக விஸ்தரிக்கப்பட்ட பிறகும், இன்னும் வருவாய் சம்பந்தப்பட்ட அனைத்துப் பணிகளும் திருவள்ளூர் மாவட்டம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியாளர்களிடத்திலேதான் இருக்கின்றது. அவை மாநகராட்சி, Greater Chennai என்று ஆன பிறகும்கூட, இந்தப் பணிகள் சென்னை மாநகரத்தோடு இணைக்கப்பட்டு, மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அதிகாரத்தைப் பெற்றுத் தருகின்ற பணியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வருவதற்கு முயற்சியை

2016 ஆகஸ்ட் 5]

மேற்கொள்கின்ற அதேநேரத்தில், சென்னையை பொறுத்தளவில் 22 சட்டமன்றத் தொகுதிகளுக்கும், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ஒவ்வொரு வட்டாட்சியர் அலுவலகம் என்று ஏற்படுத்தித் தர அரசு முன்வர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரம் அடைந்த காலம் தொட்டு 'அரசைத் தேடி மக்கள் என்கின்ற நிலையை மாற்றி, மக்களைத் தேடி அரசு' என்கின்ற ஒரு நிருவாகப் புரட்சியை செய்து காட்டிய தலைவி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

இங்கே கட்டடங்களுக்கான கேள்விதான் மூலக் கேள்வியாக இருக்கின்றது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எல்லைகளைப் பற்றி இங்கே சொல்லியிருக்கின்றார்கள். வருவாயினுடைய எல்லையும், உள்ளாட்சி நிருவாகத்தினுடைய எல்லையும் வேறு வேறாக இருக்கின்ற காரணத்தினால், அதை நிருவாக வசதிக்காக ஒன்றிணைத்துத் தர முடியுமா என்று கேட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, அது செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ஒவ்வொரு ஆட்சியர் அலுவலகம் வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். (குறுக்கீடுகள்) அவர் ஆட்சியர் அலுவலகம் வேண்டுமென்றுதான் சொன்னார். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அனைவரும் அமைதியாக உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கும்போது ஏன் இப்படி செய்கிறீர்கள்?*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வட்டாட்சியர் அலுவலகம் உருவாக்க முடியுமா என்று கேட்டிருக்கின்றார். கடந்த காலங்களிலெல்லாம் எப்படி இருந்தது*

[2016 ஆகஸ்ட் 5

என்று சொன்னால், தேவையில்லாத இடங்களிலே உருவாக்குகின்ற ஒரு நிலை இருந்தது. ஒரு புதிய அணுகுமுறையாக, இதற்கு விதி 110-ன்கீழே வரையறைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள்தான் நிர்ணயித்துக் கொடுத்தார்கள். மக்கள்தொகை, பரப்பளவு, வருவாய் கிராமங்கள் போன்றவை குறிப்பிட்ட அளவு இருக்க வேண்டுமென்றும், அதற்குப் பிறகு அந்த மாவட்ட நிருவாகம் Commissioner of Revenue Administration, Commissioner of Land Administration, Commissioner of Land Reforms என்று மூன்று உயர் அலுவலர்களைக் கொண்டிருக்கின்ற உயர் மட்டக் குழுவிற்கு அது பரிந்துரை செய்யப்பட்டு, தேவையான இடங்களிலே புதிய வட்டங்களை உருவாக்க வேண்டுமென்று விதிமுறைகளை வகுத்திருக்கிறார்கள்.

முற்பகல் 11-05

அதன் அடிப்படையிலே நான் சவால் விடுத்துச் சொல்கிறேன். இதுவரையில் இல்லாத வகையிலே, தமிழகத்தின் அரசியல் வரலாற்றிலே வருவாய்த் துறையை எளிதாக மக்கள் அணுகுவதற்காக, 65 புதிய வட்டங்களையும், 9 புதிய கோட்டங்களையும் மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள்தான் உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள் என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலமாக வருவாய்த் துறையை எளிதாக மக்கள் அணுகுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அதேபோல, சான்றிதழ்கள் பற்றியும் சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் இப்போது Common Service Centre மூலமாக Online-இலே சான்றிதழ்களைப் பெறக்கூடிய வசதியை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் இந்தியத் திருநாட்டிற்கே ஒரு வழிகாட்டுகின்ற வகையிலே பெற்றுத் தந்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, பொது மக்கள் வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் செல்லாமலேயே அந்த Common Service Centre-பொதுச் சேவை மையத்தை அணுகி, சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளலாம். மீண்டும் சொல்கிறேன், இன்றைக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையிலே இருக்கிற இந்தப் புதிய அரசுதான், ‘மக்களைத் தேடி அரசு’ என்கின்ற வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி) குக்கிராமங்களுக்கும், மிகச் சிறிய குக்கிராமங்களுக்கும், நகரப் பகுதிகளிலே மாத்திரமல்ல, வட்டாட்சியரே பார்க்காத கிராமங்களுக்கெல்லாம் வட்டாட்சியர்

2016 ஆகஸ்ட் 5]

அலுவலகத்தைக் கொண்டு சென்ற தலைவி, நம்முடைய புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, 'மக்களைத் தேடி அரசு' என்பது புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ஆறுமுகம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

30—

பேருந்து வசதி

***1417—திரு. பா. ஆறுமுகம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையிலிருந்து கந்தர்வகோட்டைக்கு கூடுதலாக நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய கேள்வியில், புதுக்கோட்டையிலிருந்து கந்தர்வகோட்டைக்கு புதிய பேருந்துகள் இயக்க வேண்டுமென்று கோரியிருக்கிறார். அந்த வழியிலே 4 அரசு நகரப் பேருந்துகள் மூலமாக 14 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்ல, புதுக்கோட்டையிலிருந்து கந்தர்வகோட்டை வழியாக தஞ்சாவூருக்கு 10 நிமிடத்திற்கு ஒரு பேருந்து வீதம் புறநகர் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இருந்தபோதிலும், அந்தப் பகுதியிலே இருக்கின்ற பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு புதிய பேருந்துகள் இயக்குவதற்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்திலே மண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ஆறுமுகம் அவர்கள்.*

திரு. பா. ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் அம்மா, 32 ஆண்டுகளுக்குப் பிறகு தொடர்ந்து ஆட்சியைப் பிடித்து வரலாற்றுச் சாதனை புரிந்து, (மேசையைத் தட்டும் ஒலி) 6 ஆவது முறையாக அரியணையில் அமர்ந்த, ஏழைகளின் இதயத் துடிப்பே, அம்மா, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவி, மாண்பும், மரபும், பெருமையும், சிறப்பும் மிக்க இந்த மாபெரும் சபையில் பேசுகின்ற வாய்ப்பை வழங்கிய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிந்து வேண்டுகிறேன். என்னை கந்தர்வகோட்டை வேட்பாளராக்கி, சட்டமன்ற உறுப்பினராக்கிய டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை மீண்டும் வணங்கி, கந்தர்வகோட்டை சட்டமன்றத் தொகுதியில் வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கு நன்றியைச் சொல்லி, கந்தர்வகோட்டையிலிருந்து ஒரத்தநாடு வரை அரசுப் பேருந்து இயக்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்த வழித்தடங்களிலே பயணிகளுடைய எண்ணிக்கைக்குத் தகுந்தவாறு, பேருந்துகளை இயக்கி சாதனை படைத்து வரக்கூடிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அந்தப் பகுதியிலே பேருந்து தேவைப்படுமாயின், அதை இயக்குவதற்கு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ஆறுமுகம் அவர்கள்.*

திரு. பா. ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன், நன்றி.*

2016 ஆகஸ்ட் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. கவன ஈர்ப்பு

திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி விசைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் உற்பத்தித் திட்டம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின், மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் ஆகியோரில் ஒருவர், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜெயராமகிருஷ்ணன், பேசுங்கள்.*

முற்பகல் 11-10

*__திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:__ *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி விசைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கத்திற்கு 2016-2017 ஆம் ஆண்டிற்கான உற்பத்தித் திட்டம் வழங்குவது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்த விரிவான விவர அறிக்கை ஒன்று பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[திரு. ஓ.எஸ். மணியன்] [2016 ஆகஸ்ட் 5

அறிக்கை

இந்திய ஜவுளித் தொழிலில் விசைத்தறிப் பிரிவு, துணி உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பு வழங்குவதில் முக்கியப் பிரிவுகளில் ஒன்றாக விளங்குகிறது. மேலும், விசைத்தறி தொழில், நாட்டின் தொழில் வளர்ச்சியில் முக்கிய ஒன்றாகக் கருதப்படுகிறது. விசைத்தறியில் துணிகள் வாங்கக்கூடிய விலையில் உற்பத்தி செய்வதன்மூலம் ஏற்றுமதி மற்றும் துணித் தேவை அதிகரித்து, தொழில் துறை வேலைவாய்ப்பை அதிகரித்துள்ளது. விசைத்தறிப் பிரிவு இந்திய ஜவுளித் துறையின் உயிர்நாடியாக விளங்குகின்றது. விசைத்தறி தொழிலானது தனியார் தொழில் முனைவோர்கள் அல்லது நெசவாளர்களால் சராசரியாக நான்கு முதல் ஐந்து தறிகள் நிறுவப்பட்டு நடைபெறும் சிறு நிறுவனமாகும்.

தமிழ்நாட்டில் மக்களின் துணித்தேவையைப் பூர்த்தி செய்வதில் விசைத்தறி பிரிவு ஒரு முக்கியப் பங்கு வகிக்கின்றது. நாட்டிலேயே விசைத்தறி எண்ணிக்கையில் தமிழகம் இரண்டாம் இடத்தில் உள்ளது. இத்தொழில் சுமார் 10.19 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி வருகின்றது. தமிழ்நாட்டில் 56,654 விசைத்தறிகள் 196 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின்கீழ் இயங்கி வருகின்றன. விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம் மற்றும் பள்ளி மாணவர்களுக்கான சீருடை வழங்கும் திட்டம் ஆகிய திட்டங்களுக்குத் தேவையான துணிகளை உற்பத்தி செய்வதில் இந்த விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

திருப்பூர் மாவட்டம், புஞ்சை ஊத்துக்குளியில் ஈ.எச்.197, விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கமானது 18-12-1988 முதல் கதவு எண் 203, குன்னத்தூர் ரோடு, ஊத்துக்குளி என்ற முகவரியில் இயங்கி வந்தது. பின்னர், இச்சங்கம் மேற்படி சங்கத்தின் தலைவர் அவர்களால் சங்க துணை விதிகளுக்கு முரணாக நிருவாக அனுமதி ஏதும் பெறாமல் திருப்பூர் சரக உதவி இயக்குநரின் கட்டுப்பாட்டில் இல்லாத ஈரோடு மாவட்டத்திலுள்ள கதவு எண் 11/7, காமராஜர் காலனி வீதி, வீரப்பன்சத்திரம், ஈரோடு என்ற முகவரிக்கு தன்னிச்சையாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மேலும், விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டம், பொங்கல் 2017-ன்கீழ் 25 உறுப்பினர்களுக்கு சேலை உற்பத்திக்கும், 15 உறுப்பினர்களுக்கு வேட்டி உற்பத்திக்கும் உற்பத்தித் திட்டம்

2016 ஆகஸ்ட் 5] [திரு. ஓ.எஸ். மணியன்]

வேண்டுமெனக் கோரியதன் அடிப்படையில் இச்சங்கத்திற்கு சரக உதவி இயக்குநர் 15,000 விசைத்தறி சேலை மற்றும் 25,000 விசைத்தறி வேட்டி உற்பத்தி செய்வதற்கு உற்பத்தி குறியீடு வழங்கியுள்ளார். மேற்படி உற்பத்திக்குத் தேவையான நூல் மற்றும் மூலப்பொருட்கள் வழங்குவதற்கு முன்னர் உறுப்பினர்களின் தறிகளை ஆய்வு செய்து பின்னர் உற்பத்தித் திட்டத்தினைச் செயல்படுத்த சங்க மேலாண்மை இயக்குநருக்கு அறிவுறுத்தப்பட்டதன்பேரில், மேற்படி சங்க மேலாண்மை இயக்குநர் ஆய்வு செய்து தனது அறிக்கையில் மேற்படி சங்கத் தலைவர் எவ்வித நிருவாக அனுமதியும் பெறாமல் சங்கத்தினை ஈரோடு மாவட்டத்திலுள்ள கதவு எண் 11/7, காமராஜர் காலனி வீதி, வீரப்பன்சத்திரம், ஈரோடு என்ற முகவரிக்கு தன்னிச்சையாக மாற்றம் செய்து கொண்டுள்ளதாகவும், சங்கத்திலுள்ள 44 உறுப்பினர்களில் 26 நபர்களிடம் விசைத்தறிகள் ஏதுமில்லை எனவும், மீதம் உள்ளவர்களும் வெளி மார்க்கெட் இரக உற்பத்தியில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளதுடன், இச்சங்கம் வழங்கப்பட்ட உற்பத்தித் திட்டத்தினை உரிய முறையில் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் உற்பத்தி செய்ய இயலாத நிலை ஏற்படக்கூடும் என்பதாலும், வழங்கப்பட்ட உற்பத்திக் குறியீட்டை வேறு சங்கத்திற்கு மாற்றம் செய்து தரவும் கோரியுள்ளார். எனவே, மேற்படி சங்க மேலாண்மை இயக்குநர் அறிக்கையின் அடிப்படையில் இச்சங்கத்திற்கு வழங்கப்பட்ட 15,000 சேலை மற்றும் 25,000 வேட்டி உற்பத்திக் குறியீடு வேறு சங்கத்திற்கு மாற்றி அளிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி ஒன்றியத்திற்குட்பட்ட ஊத்துக்குளியைத் தலைமையிடமாகக் கொண்டு ஊத்துக்குளி விசைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட், ஈ.எச். 197 ஈரோடு, வீரப்பன்சத்திரத்தில் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிக்கையில் இக்கூட்டுறவுச் சங்கமானது கடந்த 1988 முதல் கதவு எண் 203, குன்னத்தூர் ரோடு, ஊத்துக்குளி என்ற முகவரியில் செயல்பட்டு வந்ததாகவும், அந்தச் சங்கத்தின் தலைவர் சங்கத் துணை விதிகளுக்குப் புறம்பாக ஈரோடு மாவட்டத்திலுள்ள கதவு எண் 11/7, காமராஜர் வீதி, வீரப்பன் சத்திரம் என்ற முகவரிக்கு*

மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்கள். இது தவறான செய்தியாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கொடுக்கப்பட்ட அறிக்கையிலிருந்து சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள். நீங்கள் மானியக் கோரிக்கையில் பேசுவதுபோல பேசுகிறீர்களே? (குறுக்கீடு) கேள்வியைக் கேளுங்கள்.

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: இந்த மாற்றம் தற்போதுள்ள தலைவரால் செய்யப்படவில்லை. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பாகவே தனி அலுவலர் காலத்திலேயே மேற்கண்ட முகவரிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை இந்த அவையில் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். அதுபோல இந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அரசு சென்ற ஆண்டு, 2016 ஆம் ஆண்டு அரசின் வேட்டி, சேலை வழங்கும் திட்டத்திற்கு 60,000 சேலைகள் மற்றும் 50,000 வேட்டி உற்பத்தி அனுமதி வழங்கி, அவற்றை முழுமையாக உற்பத்தி செய்து உரிய நேரத்தில் வழங்கியுள்ளது. கடந்த ஆண்டுகளில் வழங்கிய குறியீடுகளையும் உரிய நேரத்தில் உற்பத்தி செய்துள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உங்களைக் கேள்வியைத்தானே கேட்கச் சொன்னேன்? மீண்டும் அறிக்கையையே திரும்ப படித்துக்கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) கேள்வியைக் கேளுங்கள். புதிய உறுப்பினராக வந்திருக்கிறீர்கள், உங்களுக்கு விவரம் தெரியவில்லையென்றால் பக்கத்தில் இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டு, கேளுங்கள். விவர அறிக்கையிலிருந்து ஒரு கேள்வியைக் கேளுங்கள்.

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், துணி உற்பத்தி தொழில் வேலைவாய்ப்பு வழங்குவதில், முக்கியமாக விளங்குவதாகவும், மேலும் விசைத்தறி தொழில் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு முக்கியமான ஒன்றாகக் கருதப்படுவதாகவும் கூறியுள்ளார்கள். எனவே, இந்த அரசு ஊத்துக்குளி விசைத்தறி நெசவாளர் சங்கத்திற்கு இந்த ஆண்டு உற்பத்திக் குறியீடு வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள். பதிலை சற்று சுருக்கமாகச் சொல்லுங்கள்.

2016 ஆகஸ்ட் 5]

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிலைச் சற்று விளக்கமாகத்தான் சொல்லவேண்டும். நாட்டு மக்களின் மானம் காக்கும், நெசவாளர் மக்களின் இனம் காக்க 10,000 பசுமை வீடுகளைக் கட்டிக் கொடுத்து வீட்டிற்குள்ளேயே குடும்பத்தோடு தறி நெய்ய வாய்ப்பினைத் தந்திருக்கிற என் தாய் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி துவங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், தி.மு.க. மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்களும், அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு கேள்வி கேட்கிற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள் முற்றிலும் தவறான தகவல்களை இந்த அவைக்குத் தந்துகொண்டிருக்கிறார். ஒரு கூட்டுறவுச் சங்கம் என்று சொன்னால் கூட்டுறவு விதிகளுக்கு உட்பட்டு சங்கம் பதிவு செய்யப்படுகிறது. பதிவு செய்யப்படுகிற முகவரியிலிருந்து அந்தக் கூட்டுறவுச் சங்கத்தை மாற்ற வேண்டுமென்று சொன்னால், உரிய முறையில் சங்கத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, உரிய அலுவலர்கள் மூலமாக துறைக்கு அனுப்பப்பட்டு, ஒப்புதல் பெற்று இடமாற்றம் செய்யவேண்டுமென்பது விதி. இது திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். ஆனால் கடந்த பல ஆண்டுகளாக இந்தச் சங்கம் மாற்று முகவரியில் இயங்கி வருகிறது என்று சொல்லப்படுவது ஒரு தவறான தகவல் ஆகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர், பதிலைச் சுருக்கமாக, சீக்கிரமாகச் சொல்லுங்கள்.*

முற்பகல் 11-15

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *சுருக்கமாகச் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருப்பது தவறான தகவலாகும். ஈ.எச்.197, ஊத்துக்குளி விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு இந்த ஆண்டு தலைமையிடத்திலிருந்து இத்துறையின்மூலமாக, 15 ஆயிரம் சேலைகளையும், 25 ஆயிரம்*

வேட்டிகளையும் உற்பத்தி செய்ய உற்பத்தி ஆணை வழங்கப்பட்டது. அந்த உற்பத்தி ஆணை அனுப்பப்பட்டதற்குப் பின்னர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, என்னுடைய தலைமையில் ஆய்வுக் கூட்டம் சென்னையில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திற்கு இந்தச் சங்கத்தினுடைய தலைவர் வரவில்லை. அவர் வராத விவரம் கேட்கப்பட்டபோது, இந்தச் சங்கத்தில் 44 பேர் உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். இந்த உறுப்பினர்களில் 26 உறுப்பினர்களுக்கு விசைத்தறிகள் எதுவும் இல்லையென்பதும், மீதம் உள்ள 18 தறிகளில் விலையில்லா வேட்டி, சேலை உற்பத்தியில் ஈடுபடாமல் வெளி மார்க்கெட் இரக ஜவுளிகளை உற்பத்தி செய்து வருகின்றார்கள் என்கின்ற தகவலையும் எங்களால் அறிய முடிந்தது.

அதுமட்டுமல்லாமல், இந்தச் சங்கத்தினுடைய ஆய்வு அறிக்கையைப் பார்க்கின்றபோது, 2014-2015 ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கையின்படி, சங்கத்திற்கு குவிந்திருக்கின்ற நஷ்டம் ரூ.32 இலட்சத்து 41 ஆயிரத்து 142.95 ஆகும். இந்தச் சங்க உறுப்பினர்களின் நூல் நிலுவை மட்டும் ரூ.23 இலட்சத்து 98 ஆயிரத்து 933.60 ஆகும். இந்தச் சங்கம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், வேறு அலுவல் இருக்கின்ற காரணத்தால், தங்களுடைய பதிலைக் கொஞ்சம் சீக்கிரம் முடியுங்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: திருப்பூர் மாவட்டத்திலிருந்து இந்தச் சங்கம் ஈரோடு மாவட்டத்திற்கு மாற்றப்பட்டிருக்கின்றது. அங்கு இந்தச் சங்கத்தினுடைய தலைவர் ஒரு தறியை அமைத்து, விசைத்தறிக்கு என்று ஒதுக்கப்பட்ட இரகங்களைச் செய்யாமல், கைத்தறி இரகங்களை அவர் நெய்கின்ற காரணத்தினால், அவர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, இந்தச் சங்கம் ஒரு தவறான சங்கம், ஆள் இல்லாத சங்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், போதும். தயவுசெய்து உட்காருங்கள்.

3. மானியக் கோரிக்கைகள், 2016–2017, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

(ஆ) கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

(இ) கோரிக்கை எண் 53–சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை

(அ) கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2016-2017 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணம் பரப்பும் மல்லிகைச் சரமாய், இதழ் மணக்கும் செந்தாழம்பூவாய், அன்னை கலைவாணி அமர்ந்து அருள்தரும் அழகுத் தாமரையின் ஆயிரம் இதழ்களாய், அளப்பரிய திட்டங்களை அள்ளித் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தை முதன்மையாக்கி, இமயத்து உச்சமென ஏற்றம் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களின் இதய சிம்மாசனத்தில் கொலுவிருந்து கோலோச்சும் எங்கள் தாய் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் எனது பணிவான வணக்கங்களை முதற்கண் சமர்ப்பிக்கிறேன்.*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.275,93,62,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 33, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன்.

திரு. பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 110, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 411, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 432, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன்.

திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2169, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்.

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1889, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 55, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "துறைமுகம் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 211, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 272, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி.

திரு. அ. நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி, திருப்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட புதிய பஸ் நிலையத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள வணிக வளாகக் கடைகளை பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 351, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு.

திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலையில் நகராட்சி அலுவலகக் கட்டடப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 367, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன்.*

திரு. இரா. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம், செட்டிச்சாவடி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை நிலையத்தைப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 448, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி.*

திரு. கே.பி.பி. சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவொற்றியூர் தொகுதி, மணலி பகுதியில் பாதாளச் சாக்கடை மற்றும் குடிநீர் வழங்கல் பணிகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 467, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி.*

திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல்லாவரம் தொகுதியிலுள்ள மெட்ரோ வாட்டர் திட்டப் பணிகள் நிறைவடைந்த பகுதிகளிலுள்ள சாலைகளைச் சீர் செய்வதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 505, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி.*

திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை கிழக்குத் தொகுதி, ஆனையூர் வார்டுகள் 2, 3, 4 பகுதிகளில் வைகை கூட்டுக் குடிநீர் திட்டம்-2-ன்கீழ் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் நீர் நிரப்பி பொது மக்களுக்கு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 540, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி.*

திரு. பெ. சுப்ரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி நகராட்சியில் 14 வார்டுகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 577, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டன்சத்திரம் தொகுதிக்குட்பட்ட தொப்பம்பட்டி, பழனி ஊராட்சி ஒன்றியங்களுக்கு திருமூர்த்தி அணையிலிருந்து கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 651, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார்.

திரு. செ. ஸ்டாலின் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "துறையூர் நகராட்சியில் காவேரி குடிநீர் கிடைக்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 697, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார்.

***திரு. ஐ.பி. செந்தில்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் மாவட்டம், பழனி ஒன்றியம்,

பாலசமுத்திரம் பேரூராட்சி மாட்டு மந்தையிலிருந்து குரும்பப்பட்டி பள்ளி வரை இருபுறமும் கழிவுநீர் கால்வாய் ஏற்படுத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 758, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன்.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சைதாப்பேட்டையில் உள்ள திருக்காரணீஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான மீன் மார்க்கெட்டையும், மாநகராட்சிக்குச் சொந்தமான காய்கறி மார்க்கெட்டையும் மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 771, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி.

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் தொகுதி, செங்கம் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 817, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ்.*

திரு. ஆர். கணேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உதகை நகராட்சிக்குட்பட்ட குன்னூர் சாலை, கோத்தகிரி சாலை, கூடலூர் சாலை, எமரால்டு சாலை சந்திப்புகளில் தானியங்கி பல அடுக்கு வாகன நிறுத்தங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 928, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக்.*

திரு. நா. கார்த்திக்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிங்காநல்லூர் தொகுதியில் பீளமேடு, வரதராஜபுரம், சிங்காநல்லூர் S.I.H.S. காலனி, ஒண்டிப்புதூர் உள்ளிட்ட பகுதிகளில் குடிநீர் வசதி செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 946, மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன்.*

திரு. உ. மதிவாணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கீழ்வேளூர் தொகுதியில் உள்ள வேளாங்கண்ணி, கீழ்வேளூர் பேரூராட்சிப் பகுதிகளில் பல கிராமங்கள் பயனடையும் வகையில் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 969, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான்.

திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாநகராட்சியில் அரியநாயகிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் துவங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 987, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்.

திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட சென்னை பெருநகர மாநகராட்சியில் உள்ள அனைத்து வட்டங்களிலும் பாதாளச் சாக்கடை, மழைநீர் வடிகால்வாய், குடிநீர்க் குழாய் அமைக்கும் பணிகளை விரைந்து முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1002, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்.

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆற்காட்டிலிருந்து ராணிப்பேட்டைக்குச் செல்லும் தரைப் பாலத்தைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1031, மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்.

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதி, காயல்பட்டினம் நகராட்சியில் இரண்டாவது பைப்லைன் திட்டம் செயல்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1144, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், ஏழுதேசம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வீட்டுக் குடிநீர் இணைப்பு வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1317, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அரசு.

திரு. பெரியண்ணன் அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை தொகுதியில், புதுக்கோட்டை நகரில் உள்ள புறநகர்ப் பகுதிகளுக்கும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை விரிவுபடுத்தி, மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1325, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன்.

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் தொகுதியில், திருவள்ளூர் நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம் முடிவடைந்த பகுதியில் புதிய சாலைகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1430, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன்.

திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவையாறு தொகுதி, பூதலூர் ஒன்றியம், 42 ஊராட்சிகளுக்கான காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை மேலும் விரிவுபடுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1483, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன்.

திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கராபுரம், கள்ளக்குறிச்சி, சின்னசேலம் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உருவாக்கி தினமும் குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1509, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி.

திரு. கே.எஸ். மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பரமத்திவேலூர் தொகுதிக்குட்பட்ட பரமத்தி பேரூராட்சி குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க பொத்தனூர் பகுதியிலிருந்து காவேரி ஆற்றுக் குடிநீர் கிடைக்க ஒரு புதிய குடிநீர்த் திட்டத்தினை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1524, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன்.

திரு. பி.என்.பி. இன்பசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெண்ணாகரம் தொகுதியில், பெண்ணாகரம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தையும், பெண்ணாகரம் பேரூராட்சியில் உள்ள அனைத்து சாலைகளும் தார்ச் சாலைகளாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1547, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்.

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை நகராட்சிக்கு புதிய தாமிரபரணி திட்டம் கொண்டுவர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1566, மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி.

திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவெறும்பூர் தொகுதியில் கழிப்பறைகள் கட்ட வழங்கப்படும் உதவித் தொகையை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1582, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன்.

திரு. ப. ஆடலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி தொகுதியில், திருத்துறைப்பூண்டி நகராட்சியில் பாதாளச் சாக்கடை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1585, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன்.

திரு. துரை. கி. சரவணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதி, கங்கைகொண்டான் பேரூராட்சி அருகில் உள்ள நெய்வேலி நிலக்கரி நிறுவனத்திற்குச் சொந்தமான சிவாஜி நகர், அண்ணா நகர், ஐ.டி.ஐ. நகர், திருவள்ளுவர் நகர், பட்டு அய்யர் காலனி, பெரியார் நகர்ப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் செய்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1599, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம்.

திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாதவரம் தொகுதியிலுள்ள சாலையோர

பூங்காக்களைப் பராமரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1732, மாண்புமிகு உறுப்பினர் திரு. செள. தங்கப்பாண்டியன்.

திரு. செள. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராசபாளையம் நகருக்கு தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டம் நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1735, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் (எ) தாயகம் கவி.

திரு. ப. சிவகுமார் *என்கிற* தாயகம் கவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திரு.வி.க. நகர் தொகுதியில் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1751, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 1794, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா.

திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மன்னார்குடி சட்டமன்றத் தொகுதி, மன்னார்குடி நகராட்சி குப்பைக் கிடங்கை பராமரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1820, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்.*

திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி தொகுதி, நெல்லை நகரத்தில் புறநகர்ப் பேருந்து நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1831, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார்.*

திரு. ஏ.பி. நந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாநகரம், பாகாயம் பேருந்து நிலையத்தில் நிழற்குடை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2103, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி.

திருமதி பெ. சீத்தாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டிவனத்தில் புதிய பேருந்து நிலையம் அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2128, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்.

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மடத்துக்குளம் தொகுதிக்கு புதியதாக குடிநீர்த் திட்டம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2199, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான்.

திரு. கே.எஸ். மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செஞ்சி நகரத்தில் உள்ள 13 ஏரிகளைத் தூர்வாரி கரையை வலுப்படுத்தி, நிலத்தடி நீரைப் பாதுகாத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2226, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி.

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நெல்லியாளம் கூடலூர், நெல்லியாளம் நகராட்சியில் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2263, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "துரிஞ்சாபுரம் ஒன்றியத்திலுள்ள பூதமங்கலம், வேடந்தவாடி மங்கலம், நூக்காம்பாடி, எரும்பூண்டி, சொக்கந்தவாடி, கடுமலிப்பட்டி, ஆர்ப்பாக்கம், வெள்ளுங்கனந்தல், பாலானந்தல், நாயுடுமங்கலம், பெரிய கிளாம்பாடி, இனாம்காரியந்தல் ஆகிய கிராமங்களில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2613, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், ரீத்தாபுரம் பேரூராட்சிக்கும், சைமன் காலனி ஊராட்சிகளிலும் சுத்தமான குடிநீர் வழங்க ரீத்தாபுரம் கரையான்குளத்தில் குடிநீர்த் திட்டம் புதிதாக அமல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4033, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார்.*

திரு. எஸ். அம்பேத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வந்தவாசி தொகுதியில், பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.275,93,62,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

(ஆ) கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 42- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 41, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன்.

திரு. பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 109, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 412, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 433, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன்.

திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1890, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 66, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு.*

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராமப்புற மக்களுக்கு குறைந்தபட்ச 100 நாட்கள் வேலைத் திட்டத்தால் நிறைவேற்றப்பட்ட பணிகள் குறித்து விவாதிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 212, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன்.*

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கோக்காடு-ஜம்பூத்து சாலையை சீரமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 258, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன்.

திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், இலட்டுர் ஊராட்சி, கடையாத்துப்பட்டி, அழியாநிலை ஊராட்சி-ஆதி திராவிடர் காலனி, தாந்தாணி ஊராட்சி கருமேணி ஒடை மற்றும் சிதம்பர விடுதி ஆகிய பகுதிகளுக்கு புதிய ஆழ்குழாய் கிணறு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 286, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி.

திரு. அ. நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதி, கந்திலி ஒன்றியம், கொரட்டி ஊராட்சி, கொரட்டி காலனி போன்ற இடங்களில் கழிவு நீர் கால்வாய் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 337, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு.*

டாக்டர் ஆர்.டி. அரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செய்யூர் தொகுதி, நெடுமரம் ஊராட்சி, நெடுமரம் மாரியம்மன் கோயில் தெருவில் தெரு விளக்குகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 366, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன்.*

திரு. இரா. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம், நடுப்பட்டி முதல் வேப்பலை வரை பழுதடைந்துள்ள சாலையைச் செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 481, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி.*

திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல்லாவரம் தொகுதி-திருநீர்மலை பேரூராட்சி மற்றும்*

பொழிச்சலூர் ஊராட்சி ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 496, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி.

திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை கிழக்கு தொகுதியில் உள்ள பல்வேறு ஊராட்சிகளில் மகளிர் சுகாதார வளாகங்கள் ஏற்படுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 535, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி.

திரு. பெ. சுப்ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி தொகுதியில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம்மூலம் அனைத்து கிராமங்களுக்கும் முழுமையாக குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 569, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டன்சத்திரம் தொகுதியில் கிராமப்புற சாலைகளின் இருபுறமும் மரக்கன்றுகள் நடப்படுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 653, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர்.

திரு. க. சுந்தர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம், உத்திரமேரூர் தொகுதியில், வாலாஜாபாத் பேரூராட்சியில் புதியதாக சமுதாய கூடம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 692, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார்.

திரு. ஐ.பி. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் ஒன்றியம், பூம்பாறை ஊராட்சியில் உயர்மின் கோபுர விளக்கு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 783, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார்.

திரு. செ. ஸ்டாலின் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "துறையூர் தொகுதி, துறையூர் ஒன்றியம், உப்பிலியாபுரம் ஒன்றியம், முசிறி ஒன்றியம் (புத்தனாம்பட்டி, கோட்டாத்தூர், அபினிமங்கமளம், வெள்ளக்கல்பட்டி) ஆகிய கிராமங்களுக்கு காவேரிக் கூட்டுக் குடிநீர் கிடைக்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 791, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ்.

திரு. ஆர். கணேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், உதகை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட அனைத்து ஊராட்சிகளில் பணியாற்றும் பகுதி நேர துப்புரவுப் பணியாளர்கள், குடிநீர் பணியாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 832, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன்.

திரு. எம். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒரத்தநாடு தொகுதி, தென்னமநாடு ஊராட்சி, தெற்கு தெருவில் இராஜபிரியர் தெருவிற்கு புதிய குடிநீர் மேல்நிலைத் தொட்டி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 903, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன்.

திரு. வெ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், மங்களூர் ஒன்றியம், சிறுமுகை ஊராட்சியில் உள்ள புதுக்குளம் கிராமத்தில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி புதிதாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 917, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன்.

திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நெய்வேலி தொகுதி, விசூர் கிராமத்தில் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு தடுப்புச் சுவர் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 938, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர்.

திரு. எ. ராமர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தாலுகாவில் உள்ள இலாலாப்பேட்டை முதல் மேட்டுப்பட்டி வரை தார்ச் சாலையையும், பாப்பக்காபட்டி ஊராட்சி, குப்பணம்பட்டி முதல் இராமநாதவரம் காட்டுவாரி வரை பாலம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 975, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்.

திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட புனித தோமையார்மலை ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிகளில், சாலை, குடிநீர், பாதாளச் சாக்கடை, மழைநீர் வடிகால்வாய் விரைவில் கொண்டுவர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 993, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்.

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆற்காடு தொகுதியில், ஆற்காடு ஒன்றியத்திற்குட்பட்ட

தாஜ்புரா பஞ்சாயத்தில், கிருஷ்ணாபுரம் கிராமத்தில் குடிநீர் தேக்கத் தொட்டி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1025, மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்.

திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நத்தம் தொகுதி, சேத்தூர் ஊராட்சி, குட்டுப்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட பெரிய மலையூர் வலசு, சின்ன மலையூர் கிராமங்களுக்கு சாலை வசதி செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1154, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், ராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம், ராஜாக்கமங்கலம் ஊராட்சி, தர்மபுரம் சந்திப்பு, நடுத்தர்மபுரம், திரவியலிங்கம் வீடு முதல் முத்தாரம்மன் கோயில் வழி நாராயணசுவாமி நிழல் தாங்கல் வரை செல்லும் சாலையை தார்ச் சாலையாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1292, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி.

திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருமயம் சட்டமன்றத் தொகுதிக்கு புதிய பேருந்து நிலையம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1315, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அரசு.

திரு. பெரியண்ணன் அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை தொகுதியில் உள்ள கிராமங்களில் மண் சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்றி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1352, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ்.

திரு. த. மனோ தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம் உள்ளிட்ட சுனாமி பாதித்த மாவட்டங்களில் IFAD நிதியுதவியுடன் மகளிர் திட்டம்மூலம் நிறைவேற்றப்பட்டுள்ள பணிகள் குறித்து விவாதிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1375, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி.

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் தொகுதி, செங்கம் மேல்புழுதியூர் P.K. ரோடு முதல் மேல்வணக்கம்பாடி வரை உள்ள சாலையைச் செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1383, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன்.

திரு. க. கார்த்திகேயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதியிலுள்ள கிராமங்களின் தெரு விளக்குகளைச் சீர் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1415, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1425, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன்.

திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவையாறு தொகுதி, பூதலூர் ஒன்றியம், ஒன்றிய சாலையான மனையேரிப்பட்டி-கடம்பங்குடி சாலையைப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1481, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன்.

திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கராபுரம் தொகுதி, பூட்டை ஊராட்சிக்குட்பட்ட பாவளம் துணை கிராமத்தை தனி ஊராட்சியாகப் பிரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1525, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன்.

திரு. பி.என்.பி. இன்பசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெண்ணாகரம் தொகுதியில் பெண்ணாகரம் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தி, சுற்றிலும் கடைகள் மற்றும் தங்கும் விடுதி கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1567, மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி.*

திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவெறும்பூர் தொகுதிக்குட்பட்ட ஊராட்சிகளில் உள்ள சாலைகளை செப்பனிட்டு சீர்படுத்துதல் மற்றும் புதிய சாலைகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1576, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன்.*

திரு. ப. ஆடலரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி தொகுதியில் கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1640, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம்.*

திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாதவரம் தொகுதியில் சோழவரம் ஒன்றியத்திற்கு உட்பட்ட நெற்குன்றம் ஊராட்சியில் புதிய சமுதாயக்கூடம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1774, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா.

திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1821, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்.

திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி தொகுதி, மாண்டூர் ஒன்றியத்தை சுற்றியுள்ள கிராமங்களுக்கு தெரு விளக்கு வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1854, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி.

டாக்டர் இரா. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மைலம் சட்டமன்றத் தொகுதி, வல்லம் ஒன்றியம், சேர்விளாகம் பஞ்சாயத்துக்கு உட்பட்ட காந்தி நகர் கிராமத்தில்

திறந்தவெளி கிணறு வெட்டி, மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1920, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை கி. சரவணன்.

திரு. துரை கி. சரவணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதியில் உள்ள கிராமங்களுக்கு குடிநீர் வசதி செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1926, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்சுழி தொகுதியில், தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றி, எல்லா கிராமங்களுக்கும் குடிநீர் வழங்குவதை உறுதி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2137, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்.

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்ட (100 நாள்) ஊதியம் உரிய நேரத்தில் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2196, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான்.

திரு. கே.எஸ். மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேல்மலையனூர் ஊராட்சியில் விரிவாக்கம் செய்து புதிய பேருந்து நிலையம் அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2205, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி.

திருமதி பெ. சீத்தாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஊராட்சி மன்றங்களில் பணியாற்றிவரும் ஊராட்சி எழுத்தர், உதவியாளர், துப்புரவுப் பணியாளர், நீர் விநியோகிப்பாளர்களின் சம்பளத்தை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2225, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி.*

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூடலூர் சட்டப் பேரவை தொகுதிக்குட்பட்ட சேரங்கோடு நெலக்கோட்டை ஆகிய பகுதிகளில் உள்ள குடிநீர் தேக்கங்களிலிருந்து சீரான குடிநீர் விநியோகம் செய்வதைக் குறித்தும், பெரிய ஊராட்சிகளாகிய சேரங்கோடு, நெலக்கோட்டை ஆகியவற்றைப் பிரிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2618, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குளச்சல் சட்டமன்ற தொகுதி, நுள்ளிவிளை ஊராட்சியில் 1,50,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

(இ) கோரிக்கை எண் 53–சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 53-சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,805,08,47,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 52, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாகராஜன்.

திரு. பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,805,08,47,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 108, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,805,08,47,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 413, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 434, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன்.

திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,805,08,47,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 779, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி.

திரு. சு. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,805,08,47,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1842, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,805,08,47,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2177, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்.

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,805,08,47,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2370, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. மோகன்.

திரு. எம்.கே. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,805,08,47,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1891, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,805,08,47,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1164, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “மகளிருக்கு இலவச ஈருருளி (scooty) வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,805,08,47,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2224, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி.

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், கூடலூரில் அனைத்து இலவசப் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,805,08,47,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2575, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் கல்வி பயிலும் அனைத்து பள்ளி மாணவர்களுக்கும் மடிக்கணினி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,805,08,47,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை ஆகிய துறைகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ளவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

4. விதி 110–ன்கீழ் அறிக்கை

நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் மின்னணு கொள்முதல் திட்டம் மற்றும் புதிய கட்டடங்கள், வலங்கைமானில் ஒருங்கிணைந்த நவீன அரிசி ஆலை, கோட்டூர் மற்றும் நீடாமங்கலம் பகுதிகளில் சேமிப்புக் கிடங்குகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பு அளித்திடும்வகையில், விலையில்லா அரிசி வழங்கும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு முன்னோடித் திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது. (மேசையைத்*

@ *259 முதல் 673 வரையிலான பக்கங்களில் இணைப்புகள்* I, II *மற்றும்* III *ஆக அச்சிடப்பட்டுள்ளன.*

தட்டும் ஒலி) உணவுப் பாதுகாப்பின் அங்கங்களாக உள்ள உற்பத்தி, சேமிப்பு, விற்பனை ஆகியவற்றில் ஈடுபட்டுவரும் நுகர்பொருள் வாணிபக் கழகம், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம், கூட்டுறவுத் துறை ஆகியவற்றின் செயலாக்கத்தை மேம்படுத்தும்வகையில் புதிய கிடங்குகள் கட்டுதல், கொள்முதல் நிலையங்கள் ஏற்படுத்துதல், நவீன அரிசி ஆலைகள் அமைத்தல் போன்ற பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-30

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பாக கீழ்க்கண்ட அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1. தமிழ்நாட்டில் 2015-2016 ஆம் ஆண்டில் 20.38 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டு 86.98 இலட்சம் மெட்ரிக் டன் நெல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. பரவலாக்கப்பட்ட கொள்முதல் திட்டத்தின்கீழ் தேவைக்கேற்ப நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 16.83 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் தேவையான கண்காணிப்பு வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டாலும் அமைப்பு முறை குறைபாடு அதாவது systemic deficit காரணமாக விவசாயிகளுக்கு சில இடர்பாடுகள் ஏற்படுகின்றன. நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் பல மணி நேரம் காத்திருக்க வேண்டியுள்ளது என்றும், கொள்முதலின்போது விவசாயிகளின் நெல் எடை குறைவாக கணக்கிடப்படுகிறது என்றும், கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கான தொகை தாமதமாக வழங்கப்படுகிறது என்றும், விவசாயிகளுக்கு முழுப் பணமும் வழங்கப்பெறுவதில்லை என்றும் பல்வேறு குறைபாடுகள் அவ்வப்போது தெரிவிக்கப்படுகின்றன.

நெல் கொள்முதல் பணிகள் கணினிமயமாக்கப்படாததால் அரசால் அனுமதி வழங்கப்பட்டிருந்தாலும், மின்னணு தீர்வு சேவை ECS அதாவது, Electronic Clearing Service வழியாக விவசாயிகளுக்கு பணம் வழங்குவது முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாமல் உள்ளது.

2016 ஆகஸ்ட் 5] [செல்வி ஜெ ஜெயலலிதா]

தற்போதுள்ள நடைமுறையில் கொள்முதல் செய்யப்படும் நெல் பற்றிய விவரங்கள் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்மூலம் பெறப்பட்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் அலுவலகங்களில் தொகுக்கப்படுகின்றன. பிறகு, நிதி வெளியீடு தொடர்பான செயல்முறை ஆணை வெளியிடப்பட்டு, மின்னணு தீர்வு சேவை ECS மூலம் பணம் வழங்குவதற்காக கருவூலங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. எனவே, பணப் பட்டுவாடா செய்வதில் காலதாமதம் ஆவதால், நேரடி பணப் பட்டுவாடா செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இது போன்ற குறைபாடுகளை முழுவதும் களைந்து, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் சிறந்த பயனைப்பெறும் வகையில் தமிழ்நாட்டில் மின்னணு கொள்முதல் e-procurement திட்டம் செயல்படுத்தப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

நெல் கொள்முதல் விவரம் முழுவதுமாக கணினிமயமாக்கப்படும். இதற்கென நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் உரிய கட்டமைப்பு வசதிகளான மின்னணு விற்பனை இயந்திரம் point of sale machine, கணினி Computer, பிரிண்டர் Printer மற்றும் மின்னணு எடை இயந்திரம் Electronic Weighing Scale ஆகியன வழங்கப்படும். இதனால் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களின் செயலாக்கத் திறன் மேம்படுத்தப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11-35

விவசாயிகள் தங்களது பெயர், நில விவரம், பயிர் சாகுபடி பரப்பு, அறுவடையாகும் உத்தேச காலம், கைபேசி எண் ஆகிய விவரங்களை இணைய தளம் மூலமாகவோ, பொதுசேவை மையங்கள் மூலமாகவோ பதிவு செய்துகொள்ளலாம். இந்த நடைமுறையினால் விவசாயிகளுக்கு முன்கூட்டியே குறுஞ்செய்தி SMS மூலமாக நெல் கொண்டு வர வேண்டிய நாள் மற்றும் நேரம் தெரிவிக்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)* எனவே, விவசாயிகள் நெல் கொள்முதல் நிலையங்களில் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய அவசியம் எழாது. *(மேசையைத் தட்டும் ஒலி)* அவ்வாறு விவசாயிகள் நெல் கொண்டு வரும் சமயம் நெல் எடை போடப்பட்டு, எடை விவரம், நெல்லுக்கான தொகை, நெல் நகர்வு மற்றும் நெல் சேமிப்புக் கிடங்கு ஆகிய தகவல்கள் எந்த நேரத்திலும் விவசாயிகளும் பொதுமக்களும் அறிந்து

கொள்ளும் வண்ணம் ஒளிவு மறைவற்ற நிலையில் இணைய தளத்தில் வெளியிடப்படும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

விவசாயிகளின் நிலத்திலிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்கு வரையிலான கொள்முதல் பணி மற்றும் நெல் நகர்வு செய்கின்ற பணி முழுவதும் கணினிமயமாக்கப்பட்டு, மின்னணு கொள்முதல் e-procurement செய்யப்படுவதால் விவசாயிகள் தங்களது வசதிக்கேற்ற நாள் மற்றும் நேரத்தினைத் தெரிந்தெடுத்து நெல்லினை நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்குக் கொண்டு வருவதற்கு உரிய நடைமுறை ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) நெல் கொள்முதல் செய்தவுடன் எடை, தொகை முதலிய விவரங்கள் அடங்கிய இரசீதும் விவசாயிகளுக்கு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நெல்லிற்குண்டான தொகை முழுவதும் அவர்களது வங்கிக் கணக்கில் மின்னணு தீர்வு சேவை ECS வழியாக உடனடியாக வரவு வைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த மின்னணு நெல் கொள்முதல் e-procurement திட்டம் நடப்பாண்டில் 13 கோடியே 43 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 21 நவீன அரிசி ஆலைகளை நடத்தி வருகிறது. இதன்மூலம் வருடத்திற்கு 3.10 இலட்சம் மெட்ரிக் டன் நெல் அரவை செய்யப்படுகிறது. இது தவிர, 422 தனியார் நவீன அரிசி ஆலைகள்மூலம் 14 இலட்சம் மெட்ரிக் டன் நெல் வருடந்தோறும் அரவை செய்யப்படுகிறது. பொது விநியோகத் திட்டத்தின் அரிசி தேவையினைக் கருத்தில் கொண்டு, கூடுதல் நவீன அரிசி ஆலைகள் அமைப்பது அவசியமாகிறது.

திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டத்தில் நெல் அறுவடை செய்யும் காலங்களில் 56 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்படுகின்றன. ஒவ்வோர் ஆண்டும் சராசரியாக 64,000 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. தற்போது 20 கி.மீ. தொலைவில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக சுந்தரக்கோட்டை நவீன அரிசி ஆலை மற்றும் திருவாரூர் மண்டல அரவை முகவர்களின் நவீன அரிசி ஆலைகள்மூலம் நெல் அரவை செய்யப்படுகிறது.

இதனால் அரிசியினை உற்பத்தி செய்து பொது விநியோகத் திட்டத்திற்கு வழங்குவதில் காலதாமதமும், போக்குவரத்துச் செலவினமும் ஏற்படுகின்றன. எனவே, திருவாரூர் பகுதியில் ஒருங்கிணைந்த நவீன அரிசி ஆலையைக் கட்டுவதன்மூலம் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லினை அந்தப் பகுதியிலேயே உடனுக்குடன் அரவை செய்து, அரிசியினை பொது விநியோகத் திட்டத்திற்கு வழங்க இயலும். எனவே, திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டத்தில் தமிழகத்திலேயே முன்னோடியாக வருடத்திற்கு 30,000 மெட்ரிக் டன் நெல் அரவைத் திறனுள்ள ஒருங்கிணைந்த நவீன அரிசி ஆலை 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) ஒருங்கிணைந்த நவீன அரிசி ஆலையில் நெல் அரவை செய்யப்படும்போது கிடைக்கப்பெறும் தவிடு, உமி போன்ற உப பொருட்களை மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களாக மாற்றிட நடவடிக்கை எடுக்கப்படும்.

3. உணவுப் பாதுகாப்பின் அங்கங்களான சேமிப்பு, விற்பனை ஆகியவற்றில் முக்கியப் பங்காற்றிவரும் சேமிப்புக் கிடங்குகளை அதிகரித்து உணவு தானியங்களை முறையாக சேமித்து வைக்கும் வகையில், கடந்த 5 ஆண்டுகளில் 739 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6.88 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 165 சேமிப்புக் கிடங்குகள் அமைக்க ஆணையிடப்பட்டு, 2.49 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 106 கிடங்குகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 4.39 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

முற்பகல் 11-40

சேமிப்புக் கொள்ளளவை அதிகரிக்கும் வகையில் கூடுதல் கிடங்குகள் அமைப்பதற்கு எனது தலைமையிலான அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. எனவே, தலா 10,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட இரண்டு கிடங்குகள் திருவாரூர் மாவட்டத்தில் கோட்டூர் மற்றும் நீடாமங்கலம் பகுதிகளில் கட்டப்படும். சுமை தூக்கும் பணியாளர்களின் வேலைப் பளுவை இலகுவாக்கும் பொருட்டு, தானியங்கி இழுவை இயந்திரங்கள்-Conveyors, சுமையினை ஏற்றி, இறக்கி அட்டியிடும் இயந்திரங்கள்-Stackers மற்றும் மூட்டைகளை லாரிக்குக் கொண்டு செல்லும் இயந்திரங்கள்-Loaders ஆகியவை இந்தக் கிடங்குகளில் நிறுவப்படும்.

இந்தக் கிடங்குகள் 40 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்மணிகளைப் பாதுகாக்க திறந்தவெளி சேமிப்புக் கிடங்குகளே அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன. வெயில், மழை ஆகியவற்றின் காரணமாக திறந்தவெளி சேமிப்பு நிலையங்களில் சேமிக்கப்படும் நெல் பாதிப்படைகிறது. எனவே, நவீன தொழில்நுட்ப வசதி கொண்டதும், நீண்டகால நெல் சேமிப்புக்கு பாதுகாப்பான நெல் கொள்கலன், அதாவது Silo அமைத்திட எனது தலைமையிலான அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. நாகப்பட்டினம் மாவட்டம், எருக்கூர் நவீன அரிசி ஆலை கிடங்கு வளாகத்தில் 58 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 50,000 மெட்ரிக் டன் கொள்ளளவில் நெல் கொள்கலன் நிறுவும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த ஆண்டு தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் நவீன தொழில்நுட்ப வசதி கொண்ட நெல் கொள்கலன்கள் கட்டப்படும். இவை ஒவ்வொன்றும் 15,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்டதாக இருக்கும். இவை 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் மாநிலம் முழுவதும் 55 இடங்களில் 255 சேமிப்புக் கிடங்குகளைக் கொண்டு இயங்கி வருகிறது. இந்நிறுவனத்தின் மொத்தக் கொள்ளளவு 6.74 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். விவசாயிகள் மற்றும் வியாபாரிகளுக்கு விஞ்ஞான ரீதியிலான சேமிப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து, விளைபொருட்களின் சேமிப்பு இழப்பினைத் தடுப்பதே இந்நிறுவனத்தின் முக்கிய குறிக்கோளாகும். கடந்த 5 ஆண்டுகளில் 45,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 2 கிடங்குகள் 41 கோடியே 14 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 65 கோடியே 42 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 62,000 மெட்ரிக் டன் கொள்ளளவில் 14 சேமிப்புக் கிடங்குகள் கட்டப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

விவசாயப் பெருமக்கள், வணிகர்கள் மற்றும் இந்திய உணவுக் கழகம் ஆகியோரின் பயன்பாட்டிற்கென கூடுதலாக மொத்தம் 16,600 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 5 சேமிப்புக் கிடங்குகள் 18 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நபார்டு வங்கிக் கடன் உதவியுடன் (மேசையைத் தட்டும் ஒலி) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம், வேலூர் மாவட்டம்,

2016 ஆகஸ்ட் 5] [செல்வி ஜெ ஜெயலலிதா]

அரக்கோணம், நாமக்கல் மாவட்டம், நாமக்கல், சிவங்கை மாவட்டம், மானாமதுரை மற்றும் கடலூர் மாவட்டம், கடலூர் ஆகிய இடங்களில் நடப்பு நிதியாண்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் இந்தப் பகுதிகளில் உள்ள விவசாயப் பெருமக்கள், தனியார் சரக்கு வைப்பாளர்கள், இந்திய உணவுக் கழகம், தனியார் சர்க்கரை ஆலைகள், சிமெண்ட் மற்றும் உர உற்பத்தி நிறுவனங்கள் ஆகியோர் பயன்பெறுவர்.

6. காவேரிப் பாசனப் பகுதிகளில் விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல் தமிழ்நாடு நுகர்ப்பொருள் வாணிபக் கழகத்தின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் வாயிலாக கொள்முதல் செய்யப்படுகிறது. பிற மாவட்டங்களில் தமிழ்நாடு நுகர்ப்பொருள் வாணிபக் கழகம் தவிர, கூட்டுறவு நிறுவனங்களும் விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்கின்றன. விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்லினைக் கொள்முதல் செய்வதில் நேரடி கொள்முதல் நிலையங்கள் முக்கிய பங்காற்றி வருகின்றன.

வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் நெல் கொள்முதல் நிலையங்களில் போதுமான உள்கட்டமைப்பு வசதிகள் இல்லாததைக் கருத்தில்கொண்டு, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. 260 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்குக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு 50 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் 20 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-45

7. தமிழ்நாட்டில் உள்ள 4,480 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் 3,961 சங்கங்கள் சொந்தக் கட்டடங்களில் செயல்படுகின்றன. 519 சங்கங்கள் வாடகைக் கட்டடங்களில் செயல்படுகின்றன. அனைத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களும் சொந்தக் கட்டடங்களில் செயல்பட வேண்டும் என்ற நோக்கில் 100 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இவ்வாண்டு மேலும் 90 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும்.

(மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் பராமரிக்கப்படும் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து 18 கோடி ரூபாய் வட்டியில்லா கடனாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

கிராமப்புற மக்களுக்குச் சேவை செய்திடும் மற்றொரு கூட்டுறவு அமைப்பான தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் இரண்டிற்கு தொடக்க வங்கி வளர்ச்சி நிதியுதவிடன் 40 இலட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் 9 கிளைகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகளின் 2 கிளைகள் என 11 கூட்டுறவு வங்கிகளுக்கு புதிய கட்டடங்கள் 9 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இவை பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறைகள், குளிர்சாதன வசதி, மின்னியற்றி Power Generator, சூரிய ஒளி வாங்கிகள் Solar Panels போன்ற அதி நவீன உட்கட்டமைப்பு வசதிகளை உள்ளடக்கியதாக இருக்கும்.

8. கூட்டுறவு வங்கிகள் வாடிக்கையாளர்களைக் கவரும் வகையில் இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலும், வாடிக்கையாளர்களுக்கு சிறந்த வங்கிச் சேவைகள் வழங்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலும், வங்கிக் கிளைகள் நவீனமயமாக்கப்படுகின்றன. டிஜிட்டல் விளம்பரப் பலகைகள், நவீன இருக்கை வசதி, வாடிக்கையாளர் காத்திருப்புப் பகுதி, நவீன கவுன்ட்டர்கள், கணினி வசதி மற்றும் குளிர்சாதன வசதி போன்ற சிறப்பான உட்கட்டமைப்பு வசதிகள், கண்காணிப்பு நிழற்பட கருவி, பாதுகாப்பு கதவுடன் கூடிய பாதுகாப்பு அறை, நகைப் பெட்டகங்கள், வாடிக்கையாளர் பாதுகாப்பு பெட்டகம், அபாய எச்சரிக்கை ஒலிப்பான் போன்ற பாதுகாப்பு வசதிகள் ஆகிய வசதிகளுடன் மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் 231 கிளைகள், நகரக் கூட்டுறவு வங்கிகளின் 67 கிளைகள், 129 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் 19 நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் கடந்த 5 ஆண்டுகளில் நவீனமயமாக்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி)

நடப்பு நிதி ஆண்டில் மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் 10 கிளைகள், நகரக் கூட்டுறவு வங்கிகளின் 2 கிளைகள், 65

2016 ஆகஸ்ட் 5] [செல்வி ஜெ ஜெயலலிதா]

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், 1 நகரக் கூட்டுறவுக் கடன் சங்கம் மற்றும் 1 தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி என மொத்தம் 79 கூட்டுறவுச் சங்கங்கள் 12 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பில் நவீனப்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பான சேவையை வாடிக்கையாளர்களுக்கு வழங்க இயலும்.

முற்பகல் 11-50

9. 1927 ஆம் ஆண்டில் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட தஞ்சாவூர் சாமியப்பா கூட்டுறவு மேலாண்மை நிலையம் உட்பட 20 கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் அங்கங்களாக செயல்பட்டு வருகின்றன. இம்மேலாண்மை நிலையங்கள் கூட்டுறவு மேலாண்மை பட்டயப் பயிற்சி, நகை மதிப்பீட்டாளர் பயிற்சி, கணினி தொடர்பான பல்வேறு வகையான பயிற்சிகள், கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்துடன் இணைந்து இளங்கலை மற்றும் முதுகலை பட்டப் படிப்புகள் போன்றவற்றை கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களுக்கு வழங்கி வருகிறது. இப்பயிற்சி நிலையங்களில் கூட்டுறவுச் சங்கங்களின் செயலாளர்கள், எழுத்தர்கள் உள்ளிட்ட பணியாளர்களுக்கும், பொது விநியோகத் திட்ட அங்காடிகளின் விற்பனையாளர்கள் மற்றும் கட்டுநர்களுக்கும் குறுகிய காலப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. ஆண்டுதோறும் சுமார் பத்தாயிரம் பணியாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த 20 கூட்டுறவு மேலாண்மை நிலையங்களில், 10 கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் மேலாண்மை நிலையங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாததால் அவைகளுக்கு படிப்படியாக சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும். முதல் கட்டமாக விருதுநகர் மாவட்டம், சாத்தூர் தியாகி சங்கரலிங்கனார் கூட்டுறவு மேலாண்மை நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டிலும், (மேசையைத் தட்டும் ஒலி) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் கூட்டுறவு மேலாண்மை நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் திட்ட

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2016 ஆகஸ்ட் 5

மதிப்பீட்டிலும் இந்த ஆண்டு கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது நான் வெளியிட்ட இந்த அறிவிப்புகளின் காரணமாக விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த நெல்லை, நேரடி கொள்முதல் நிலையங்களில் எவ்வித சிரமமும் இன்றி விற்பனை செய்திட இயலும். புதிய நவீன அரிசி ஆலைகள், கிடங்குகள் ஆகியவை அமைக்கப்படுவதனால், பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரிசியின் தரத்தை, மேலும் உறுதி செய்ய இயலும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5. வேளாண்மைத் துறை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை குறித்த முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள்.

திரு. எம். தமிமுன் அன்சாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இந்தப் பேரவையிலே மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள், விதி 110-ன்கீழ் சிறப்பான பல அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறார்கள். அதை நான் பாராட்டி, மகிழ்ந்து வரவேற்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு வளம் பெற வேண்டும் என்பதற்காகவும், தமிழ் சமுதாயம் நலம் பெற வேண்டும் என்பதற்காகவும், கடந்த ஐந்து ஆண்டுக்கால ஆட்சியில் விதி 110-ன்கீழ், எண்ணற்ற திட்டங்களை அறிவித்து, அதை நடைமுறைப்படுத்தி, “மக்களால் நான், மக்களுக்காக நான்” என்பதை அவர்கள் நிரூபித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எதையும் சிறப்பாகச் செய்ய வேண்டுமென்பது அவர்களது முழக்கம். அதைத் துணிந்து செயல்படுத்துவது அவர்களது பழக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் நலனுக்கான அறிவிப்புகளை குறுக்கீடின்றி அறிவிப்பதும், அறிவித்த திட்டங்களை விரைந்து செயல்படுத்துவதும், செயல்படுத்திய திட்டங்களை மக்களின் பயன்பாட்டிற்கு விரைந்து கொண்டு வருவதும் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய நோக்கமாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நோக்கம் தெளிவாக இருக்கும்போது, அதன் தாக்கம் உறுதியாக இருக்கும்

என்பதில் ஐயமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) எல்லா மாநில அரசுகளும் 100 கிலோ மீட்டர் வேகத்தில் ஓட திட்டமிடுகிறார்கள். ஆனால், தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் 110 கிலோ மீட்டர் வேகத்தில் ஓட வேண்டும் என்று திட்டமிடுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-55

நாடெங்கிலும் விவசாய நிலப் பரப்பு குறைந்து வருவதாகவும், விவசாயம் செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாகவும், இதனால் எதிர்காலத்தில் உணவு உற்பத்தி குறைந்து விடும் என்றும், உணவு பஞ்சம் ஏற்பட்டுவிடும் என்றும், கவலையான செய்திகள் உலா வரும் காலக்கட்டத்தில், தமிழ்நாட்டில் அதற்கு வாய்ப்பில்லை என்பதை உறுதிப்படச் சொல்லும் வகையில், (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயத்தை பாதுகாக்கும் வகையிலும், விவசாயிகளின் நலன்களை மேம்படுத்தும் வகையிலும், விவசாய உற்பத்திப் பொருட்களை எளிதில் சந்தைப்படுத்தும் வகையிலும், விவசாயத் துறையின் வளர்ச்சியை நவீனப்படுத்தும் வகையிலும், மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் இன்று விதி 110-ன்கீழ் சிறப்பான பல திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள் என்பதை நாட்டு மக்கள் மகிழ்ச்சியோடு வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆசியாவில், உணவு உற்பத்தியிலும், நவீன விவசாய முறையிலும் தாய்லாந்து சிறப்பான வளர்ச்சியைப் பெற்று வருவதாகச் சொல்லப்படுகிறது. அந்தவகையில், இந்தியாவின் தாய்லாந்தாக தமிழ்நாடு வேளாண் துறையில் திகழும் என்ற நம்பிக்கை இன்று உருவாகியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையில், மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் விதி 110-ன்கீழ் அறிவித்திருக்கும் சிறப்பான திட்டங்களை நான் வரவேற்று, மகிழ்கின்றேன், நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

திரு. உ. தனியரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவின் ஊற்றுக்கண்ணாய், ஆற்றலின் வற்றாத ஜீவ நதியாய், அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரமாய் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டு மக்களுக்கு நாளும் திட்டங்கள் தரும்

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த 5 ஆண்டுகளில், விதி 110-ன்கீழ் தமிழ்நாட்டு மக்களின் காதுகளில் தேனாய், நெஞ்சமெல்லாம் நிறைய, அளப்பரிய திட்டங்களைத் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு சொட்டு மழை நீரும் வீணாகிவிடக் கூடாது என்று, மழை நீரைச் சேமிக்க, உலகத்திற்கே மழை நீர் சேகரிப்புத் திட்டம் தந்த தாய் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) இன்று விவசாயிகள் விளைவிக்கின்ற ஒரு நெல் மணிகூட வீணாகப் போகக்கூடாது என்பதற்காக அழகான சேமிப்புக் கூடங்கள், விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற நெல்லை பரிவர்த்தனை செய்ய கணினி மிஷின்கள் என நல்ல பல திட்டங்களை இந்த 15-வது சட்டமன்றக் கூட்டத் தொடரில், விதி 110-ன்கீழ் முதல் அறிவிப்பாக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். தங்க வணிகர்கள், தங்கத்தை பரிவர்த்தனை செய்வதற்கு உயர்ந்த கணினி எடைக் கருவியை உபயோகிப்பார்கள். முதன்முதலில் தங்கத்தைத்தான் கணினியில் எடை போட்டார்கள். ஆனால், தற்போது, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற விளைபொருட்களை தங்கத்திற்கு இணையாக சரியான எடையிலே அரசு கொள்முதல் செய்வதை மாண்புமிகு அம்மா அவர்கள் உறுதி செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தங்கத்தை உற்பத்தி செய்கின்ற அளவுக்கு, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற நெல் மணியைப் பாதுகாக்க இன்று விதி 110-ன்கீழ் பல அறிவிப்புகளை அறிவித்திருக்கிறார்கள். விவசாயிகளை நேசித்து, அவர்களுக்கு உரிய உரிமையை, எடையை, விலையைத் தந்த தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இவ்வளவு நல்ல திட்டங்கள் இல்லை. இன்றைக்குத்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதன்முதலாக அறிவித்திருக்கிறார்கள்.

நவீன அரிசி ஆலை. நாமெல்லாம், 30, 40 ஆண்டு காலத்திற்கு முன்பு, பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வாங்கிய அரிசியில் புழு இருக்கும், பூச்சிக் கூடு இருக்கும், வாசனை வேறு மாதிரி இருக்கும். ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 5 ஆண்டு கால ஆட்சியில், பொது மக்கள் வாங்கிப் பயன்படுத்துகின்ற அளவுக்கு தரமான, மணமுள்ள

2016 ஆகஸ்ட் 5] [திரு. உ. தனியரசு]

இராஜபோக அரிசியைப் போன்ற அரிசியை ஏற்கெனவே வழங்கி வருகின்றார்கள். தற்போது மாண்புமிகு அம்மா அவர்கள் இன்னும் கூடுதலாக நவீன கிடங்குகள், நவீன அரிசி ஆலைகள் அமைக்கும் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். சுமைகளை ஏற்றுவது, இறக்குவது என்று சுமை தூக்குவதைக்கூட நவீன கருவியைக் கொண்டு செய்வதற்கான அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறார்கள். சுமைகளை ஏற்றுவது, இறக்குவது, பொருட்களைப் பாதுகாப்பது, பதப்படுத்துவது என்கின்ற அளவுக்கு பல திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். இந்தியாவில் எந்த மாநிலத்தில் இப்படிப்பட்ட திட்டங்களை அறிவித்திருக்கின்றார்கள்?

முன்பெல்லாம், விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை மாட்டு வண்டியில், லாரிகளில் ஏற்றிக் கொண்டு, சாலையோரங்களில் நெல் மூட்டைகளை வைத்துக்கொண்டு, நேரடி கொள்முதல் நிலையங்களில் காத்திருப்பார்கள். தற்போது, யாரும் ஒரு மணி நேரம்கூட காத்திருக்க வேண்டியதில்லை. விவசாயிகளுக்கு, தேதி, நேரம், போன்றவற்றை முன்கூட்டியே தெரிவித்து, எஸ்.எம்.எஸ். எனப்படும் குறுஞ்செய்தி அனுப்பப்படும், அந்த நேரத்திற்கு வந்தால், விவசாயிகள் தங்கள் பொருட்களை உரிய எடையில், உரிய விலையில் கொடுக்கலாம். அதற்கான பணத்தை, நேரடியாக விவசாயிகளுடைய வங்கிக் கணக்கிற்கே உடனடியாக செலுத்தும் முறையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நடைமுறை அமெரிக்கா, ஐரோப்பா போன்ற நாடுகளில்கூட கிடையாது.

அதேபோன்று, கூட்டுறவு வங்கிகளை நவீனப்படுத்துவது குறித்து, ஒவ்வொரு நவீனத்துவம் பற்றியும் மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னார்கள். காத்திருப்போர் அறை, குளிர்சாதன அறை, ஏதாவது திருட்டு நடந்தால் எச்சரிக்கை செய்வதற்கு அலாரம் என வெளிநாட்டு கார்ப்பரேட் வங்கிகளுக்கு இணையாக கூட்டுறவு வங்கிகளுடைய தரத்தை அழகாக உயர்த்துவதற்கான திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். தனியாருக்கு இணையாக அரசுத் துறை நிறுவனங்களை நவீனப்படுத்துவதில் இந்தியாவிற்கு, உலகத்திற்கு வழிகாட்டியாக இருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்று விவசாயிகளுக்கு நல்ல திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள்.

[திரு. உ. தனியரசு] [2016 ஆகஸ்ட் 5

நண்பகல் 12-00

பொது விநியோகத் திட்டத்தில் கிடைக்கின்ற பொருள்கூட தரமாக, தனியார் உற்பத்தி செய்கின்ற உயர்ந்த இரக அரிசிக்கு இணையாக, அதைப் பாதுகாத்து, ஏழையெளிய கடைசி மனிதனும் மிகப் பெரிய பணக்காரர்கள் சுவைத்து, நுகர்ந்து, உண்டு மகிழ்கின்ற தரமான அரிசியை கடைக்கோடி ஏழையும் பெறவேண்டுமென்பதற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திட்டம் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்று கூட்டுறவு வங்கிகளிலும் விவசாயிகளுக்கு ஏராளமான திட்டங்களைத் தந்திருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த அறிவிப்புகளை வரவேற்று அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள்.

***திரு. சே. கருணாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உண்மையைச் சொல், உறுதியாய் சொல், அதை இறுதிவரை சொல்' என்ற பசும்பொன்னாரின் வாக்கிற்கிணங்க, உண்மையாய், உறுதியாய், இறுதிவரை எடுத்த முடிவுகளிலே துளிகூட தளர்ச்சி இல்லாமல், அதை வெற்றிப் பாதைகளிலே வழிநடத்துகின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு தமிழகத்தில் இரண்டாம் பசுமைப் புரட்சித் திட்டத்தை அறிமுகப்படுத்தி, வெற்றிப்பாதையில் நம் தமிழர்களெல்லாம் பயணித்துக்கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்திலே, 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்கின்ற கருத்தை மெய்ப்பிக்கும் வகையிலே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்றைக்கு கூட்டுறவு மற்றும் உணவுத் துறையின் சார்பாக முத்தான திட்டங்களை தமிழக மக்களுக்கு அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலே தமிழகத்தை முன்னேற்றப் பாதைக்குக் கொண்டுசெல்வது மிகவும் பாராட்டிற்குரியதாகும். தொலைநோக்குத் திட்டம் 2023-ன்படி முதன்மை மாநிலமாக வெற்றிப் பாதையில் தமிழ்நாடு பயணித்துக்கொண்டிருக்கின்றது என்பதற்கு இதுவொன்றே முத்தான கருத்தாக நினைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2016 ஆகஸ்ட் 5] [திரு. சே. கருணாஸ்]

மாண்புமிகு அம்மா அவர்களின் அன்புக்கு ஈடு இந்த அகிலத்தில் இல்லை. மாண்புமிகு அம்மா அவர்களுக்கு ஈடு இந்த உலகத்தில் இல்லை என்பதற்கு இதுவே சாட்சி. (மேசையைத் தட்டும் ஒலி)

எம்மதமும் சம்மதம் என்ற சமதர்மத்தின் மணிமகுடமாய் திகழக்கூடிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு அறிவித்திருக்கக்கூடிய இந்த நலத் திட்டங்களெல்லாம் வரக்கூடிய சந்ததிகள் வரலாற்றிலே சிறப்புமிக்கதாகவும், நாங்கள் அறிந்தவரை இந்தத் தமிழகத்திலே அம்மா அவர்களுடைய ஆட்சிதான் உலகத்திற்கே, இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாக விளங்கக்கூடிய ஓர் ஆட்சி என்பதிலே (மேசையைத் தட்டும் ஒலி) மாறுபட்ட கருத்து இருக்காது என்று வரக்கூடிய சந்ததிகள் பறைசாற்றக்கூடிய கருத்துகளாக இருக்கின்றன. நாட்டுயர்விற்கு முக்கியமானவை இந்த கூட்டுறவுச் சங்கங்கள். 1904 ஆம் ஆண்டு நாட்டிலேயே முதல் கூட்டுறவுச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. அந்த ஆண்டிலேதான் திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கமும், பெரிய காஞ்சிபுரம் நகர கூட்டுறவு வங்கியும் தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. தற்போது அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாட்டிலே 24,082 கூட்டுறவுச் சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நேரடிப் பார்வையிலே அத்தனை சங்கங்களும் திறம்பட செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதிலே மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

விவசாயம் என்பது ஒரு நாட்டினுடைய முதுகெலும்பு என்று சொல்வார்கள். எந்தவொரு நாடாக இருந்தாலும், விவசாயம் சார்ந்த ஒரு நாட்டிலே, அந்த நாட்டினுடைய முதுகெலும்பு எதுவென்று பார்ப்பீர்களேயானால் அது விவசாயம் என்று சொல்வார்கள். அந்த விவசாயிகளுக்கான முதுகெலும்பாக இங்கே திகழ்ந்துகொண்டிருக்கக்கூடியவர் நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் இந்த நேரத்திலே, இந்த சட்டமன்றத்திலே அறிவித்திருக்கக்கூடிய நலத் திட்டங்களைப் பொறுத்தே நாம் கண்கூடாக கண்டுகொள்ளலாம். முஹம்மது நபி அவர்கள் சொல்வார்கள், 'உலமாக்களை யார் ஒருவர் மகிழ்விக்கிறார்களோ, உலமாக்களை யார் ஒருவர் ஆசீர்வதிக்கிறார்களோ அவர்கள் என்னை நேரடியாக ஆசீர்வதிப்பதற்கு சமம்' என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தவகையிலே ஒட்டுமொத்தமாக சிறுபான்மையினருடைய முன்னோடியாக தன்னை

காட்டிக்கொள்பவர்களெல்லாம் செய்ய முடியாத செயலை புரட்சித் தலைவர் அவர்கள் முதன்முறையாக உலமாக்களுக்கு உதவித்தொகையாக 500 ரூபாயை அறிவித்ததை இன்றைக்கு 1,500 ரூபாயாக அறிவித்து, ஒட்டுமொத்த சிறுபான்மையினருக்கான எழுச்சி நாயகியாக திகழ்ந்துகொண்டிருக்கக்கூடியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் அறுதியிட்டு தெரிவித்துக்கொள்கிறேன்.

தத்துவ மேதை அரிஸ்டாட்டில் ஒரு முறை சொன்னார், நான் கிரேக்கனாக பிறந்திருப்பதிலே பெருமையடைகிறேன். அதைவிட சாக்ரட்டீஸ் வாழும் காலத்திலே வாழ்கிறேன் என்பதற்காக பெருமையடைகிறேன். அதைவிட சாக்ரட்டீஸ் கருத்து களத்தில் ஒரு மாணவனாக இருக்கிறேன் என்பதிலே பெருமையடைவதாகச் சொன்னார். அதே அரிஸ்டாட்டில் கருத்தை இந்த இடத்திலே நினைவுபடுத்த விரும்புகிறேன். நான் கல்தோன்றி மண் தோன்றா காலத்தே வாளோடு முன் தோன்றிய தமிழனாக பிறந்ததிலே பெருமையடைகிறேன். அதைவிட அம்மாவின் ஆசிபெற்ற திருவாடனை தொகுதியினுடைய சட்டமன்ற வேட்பாளராக உருவாகி, இந்த இடத்திலே நிற்கக்கூடிய சந்தர்ப்பத்தைத் தந்ததிலே பெருமையடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதையும் சார்ந்து இந்த விதி 110-ன் கீழே இங்கே ஒட்டுமொத்த விவசாய மக்களுக்காக மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியிருக்கக்கூடிய எண்ணற்ற சலுகைகளை நினைத்து, இந்தக் கால கட்டத்திலே அவர்கள் அறிவித்த திட்டங்களை வழங்குகின்ற நேரத்திலே, பாராட்டுகளைச் சொல்லக்கூடிய ஒருவனாக, உங்களுக்கு நன்றியுள்ளவனாக என்றும் இருப்பதிலே பெருமையடைகிறேன் என்று சொல்லி வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் ஓர் அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே நெல் கொள்முதல் நிலையங்களிலே நெல் வீணாகிவிடாமல், அதைச் சரியாக பதப்படுத்துவதற்குரிய ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள். அதேபோல, எடை

போடுவதிலே இருந்த பிரச்சினைகளை தீர்த்து வைப்பதாக, அதற்குரிய எடை மேடைகளை அமைத்துத் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதையெல்லாம் நாங்கள் வரவேற்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய நெல்லினுடைய விலையை, கொள்முதல் விலையையும் நீங்கள் அதிகப்படுத்தித் தரவேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐவகை நிலம் சூழ்ந்து, அழகு தமிழ் மண்ணில் ஆறாம் முறை முடிசூடி, அகிலமே போற்றிப் பாராட்டும், (மேசையைத் தட்டும் ஒலி) அதிசயமே எங்கள் அம்மா! உள்ளாட்சியில் நம் ஆட்சி என சபதம் ஏற்கும் சங்கநாதமே எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) உழைப்பவரைத் தேடி தேடி உயர்வளிக்கும் சிங்கநாதமே எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) இல்லார்க்கும், இயலார்க்கும் ஏற்றங்கள் தரவே, இமை துஞ்சாது உழைக்கும் ஈகையே எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் இன்று விதி 110-ன்கீழ் கூட்டுறவுத் துறைக்கு முத்தாய்ப்பான மூன்று திட்டங்களைத் தந்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே பொற்காலமாகத் திகழ்கின்ற கூட்டுறவுத் துறைக்கு மேலும் சிறப்பு சேர்க்கின்றவகையில், இந்த அறிவிப்பைத் தந்த, எங்களுடைய குல தெய்வம், ஒன்றரைக் கோடி தொண்டர்களுடைய குடும்ப காவல் தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்கி, நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெற்றி தேடி அலைவோர் பலர் இருக்க, 32 ஆண்டுகளில் இல்லாத வரலாறாய் அந்த வெற்றியே தேடித் தேடி வந்து வரலாற்றைத் தந்திட்ட வெற்றித் திருமகளாம் எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) ஈகையாலும், வாகையாலும் இணைந்த இருவிரல் அசைவில் தமிழகத்தையே தாய் தேசமாக்கிய

தாய் உருவ தெய்வமே எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா! பிறக்கின்ற பிறவியெல்லாம் உங்கள் பெருமை பேசும் பிறவியே ஆகவேண்டும், அம்மா! நினைக்கின்ற நினைப்பெல்லாம் உங்கள் புகழ்பாடும் நினைப்பே ஆகவேண்டும் என வேண்டி, நான் வணங்கும் தெய்வம், என்னை வாழ வைக்கும் தெய்வம், நான் கண்ணால் காணும் கடவுள், எங்கள் குல தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.

பிற்பகல் 12-10

சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் இல்லாத அளவில் ஜூன் 6 ஆம் தேதி மேட்டூர் அணையைத் திறந்து, ஒரே ஆண்டில் ஏன்? ஒரே கொள்முதல் பருவத்தில் 24 இலட்சம் மெட்ரிக் டன் நெல்லை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) சாதனை படைத்த ஒரே தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், விவசாயிகளின் நலன் கருதி, 2002 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களால் கொண்டுவரப்பட்ட பரவலாக்கப்பட்ட நேரடி நெல் கொள்முதல் செய்யும் திட்டத்தினை செம்மைப்படுத்துகிற வகையிலேயும், விவசாயிகள் மேலும் பயன்பெறுகின்றவகையிலேயும், நெல் கொள்முதலில் மின்னணு கொள்முதல் முறையைச் செயல்படுத்துவதற்கும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமும், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் மூலமும், Silo உள்ளிட்ட கிடங்குகள், நவீன அரிசி ஆலை மற்றும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் உள்ளிட்ட பணிகளுக்காகவும் உணவுத் துறைக்கு மட்டும் 152 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பினை விதி 110-ன்கீழ், ஆண்டாள் அவதரித்த (மேசையைத் தட்டும் ஒலி) ஆடிப் பூரம் நன்னாளில் தமிழக மக்களுக்கு அள்ளித்தந்த அட்சயப் பாத்திரம்; (மேசையைத் தட்டும் ஒலி) பிறருக்கான வெயிலையும் தான் சுமந்து, தமக்கான நிழலையும் பிறருக்குத் தருகின்ற தமிழகத்தின் தன்னிகரில்லா முதல்வர் எங்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் உணவுத் துறையின் சார்பிலும், விவசாயிகளின் சார்பிலும், என் சார்பிலும் கோடானுகோடி நன்றியைச் சமர்ப்பித்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** நித்தம் நித்தம் நான் வணங்கும் எங்களுடைய காவல் தெய்வம், தமிழக மக்களை வாழ வைத்துக் கொண்டிருக்கின்ற காவல் தெய்வம், எங்களுடைய குல விளக்கு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப்பாதம் வணங்குகிறேன்.

'தங்கத்தாரகையே வருக, வருக, வாழ்க! (மேசையைத் தட்டும் ஒலி), தமிழ் மண்ணின் தேவதையே, வருக, வருக, வாழ்க'! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா! நீங்கள் வாழும் காலத்தில் நாங்களும் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இந்தத் தமிழக மக்கள் மட்டுமல்ல, இந்தியாவிற்கே, உலகிற்கே வழிகாட்டியாக வாழ்ந்துகொண்டிருக்கும் எங்களுடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய (மேசையைத் தட்டும் ஒலி) மலர்ப்பாதங்களை மீண்டும், மீண்டும் வணங்குகின்றேன். அம்மா! எங்களை வாழ வைத்துக்கொண்டிருப்பது மட்டுமல்ல, ஏழை விவசாயிகளை வாழ வைத்துக்கொண்டிருப்பது மட்டுமல்ல, இந்தத் தமிழகத்தையே வாழ வைத்துக்கொண்டிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) வாழ வைத்த தெய்வம் அம்மா, நீங்கள்! வெற்றிக்கே இலக்கணம் வகுத்த, ஒரு தனிப்பெரும் புகழ்பெற்ற தாய் அம்மா நீங்கள்! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா! விவசாயத்தைக் காப்பாற்றியும், விவசாய மக்களைக் காப்பாற்றியும், அவர்கள் உற்பத்தி செய்த பொருள்களை, நெல்லைக் காப்பாற்றி, அவர்களுக்கு வாழ்வளித்து, அவர்களுக்கு வளம் சேர்த்த இதய தெய்வத்தை வணங்கி அமர்கிறேன். நன்றி, வணக்கம் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளெல்லாம் உழைத்து, நெற்றி வியர்வை நிலத்திலே சிந்த, உப்பு நீரில் உழவு செய்து, உயிர்காக்கும் பயிர் வளர்க்கும் உழைப்பாளிகள், வேரோடு வேராக, வளரும் பயிருக்குள் பயிராக ஒன்றிவிடும் உழவர்கள், இந்தத் தேசத்தின் வேர்கள், மனித உயிர்காக்கும் பிரம்மாக்கள். உழவர்களின் நலனுக்கு முக்கியத்துவம் கொடுத்தும், தமிழகத்தில் இரண்டாம் பசுமைப் புரட்சிக்கு வழிசெய்யும் வகையிலும், பூமி கண்ட புண்ணியம், வேளாண்மை காத்திட்ட பேராண்மை, வெள்ளாமை காத்திட்ட வீரமங்கை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு சிறப்பான

திட்டங்களை அறிவித்து, செயல்படுத்தி வருகிறார்கள். விவசாயிகள் பயன்பெற நேரடி கொள்முதல் நிலையங்களில் மின்னணு கொள்முதல் குறித்த அறிவிப்பை மாண்புமிகு அம்மா அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். 'கழனிபோய் கணினியாச்சு' என்பது மாறி, கழனியும் செழிக்குது, கணினியும் வளருது மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியிலே! *(மேசையைத் தட்டும் ஒலி)*

வலங்கைமான் வட்டத்தில் ரூ.20 கோடியில் நவீன அரிசி ஆலை, சேமிப்புக் கிடங்குகள், நவீன கொள்கலன்கள், கொள்முதல் நிலையங்களுக்கு ரூ.20 கோடியில் புதிய கட்டடங்கள், 11 கூட்டுறவு வங்கிகளுக்கு புதிய கட்டடங்கள் என எண்ணற்ற அறிவிப்புகளை மாண்புமிகு அம்மா அவர்கள் தந்துள்ளார்கள்.

'கலப்பை மாறி டிராக்டராச்சு, கவலை மாறி மோட்டாராச்சு, விதைகள் மாறி வீரியமாச்சு, *(மேசையைத் தட்டும் ஒலி)* விவசாயிகளின் வாழ்க்கை மாண்புமிகு அம்மா அவர்களால், என்றென்றும், என்றென்றும் மகிழ்ச்சியாச்சு'. *(மேசையைத் தட்டும் ஒலி)* சிறந்த அறிவிப்புகளை வெளியிட்டுள்ள மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது நன்றியை மாண்புமிகு உறுப்பினர்களுடைய நன்றிகளோடு இணைத்து தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 12-15

3. மானியக் கோரிக்கைகள், 2016–2017, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
(ஆ) கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
(இ) கோரிக்கை எண் 53–சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை
} தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று மூன்று மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் மூன்று மானியக்

கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அவையில் நடுநாயகமாக வீற்றிருக்கிற உங்களை **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலைவர் குறித்து உறுப்பினர் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் மானியக் கோரிக்கைகள்மீது பேசுங்கள். நீங்கள் ஏற்கெனவே என்னைப்பற்றி நிறைய பேசியிருக்கிறீர்கள். வெளியிலும் சென்று நிறைய பேசியிருக்கிறீர்கள். அதனால், நீங்கள் அதையெல்லாம் பேச வேண்டாம். மானியக் கோரிக்கைகள்மீது பேசுங்கள்.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் நடுநாயகமாக இருக்க வேண்டுமென்கின்ற அனைவரது விருப்பத்தையும், தமிழக மக்களின் ஒருமித்த விருப்பத்தையும் தெரிவிப்பதற்குத்தான் இந்தக் கருத்தைத் தெரிவித்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த அவை நடுநிலையோடுதான் நடந்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) இதைப்பற்றிப் பேசாமல், நீங்கள் மானியக் கோரிக்கைகளின்மீது பேசுங்கள்.

திரு. மா. சுப்பிரமணியன்: பொதுவாகவே தமிழகத்தில், நகரப் பகுதிகளில்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பேச்சின் தொடக்கத்திலேயே 'வரலாற்றுச் சிறப்புமிகுந்த இந்த சட்டமன்றப் பேரவை' என்று குறிப்பிட்டார்கள். அவ்வளவு வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பேரவை என்பதால்தான் இதையே தூக்கியெறிந்துவிட்டு, ஓமந்தூரார் எஸ்டேட்டில் கவிழ்ந்த கப்பல்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

போன்ற ஒரு கட்டடத்தை எழுப்பி, இந்த சட்டமன்றத்தை அங்கே கொண்டுபோய் வைத்தார்களா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டமன்றப் பேரவை என்பது, பதினைந்தாவது சட்டமன்றத்தைத்தான் குறிக்குமேதவிர, செயின்ட் ஜார்ஜ் கோட்டையைக் குறிக்காது என்பதை இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* இது பதினைந்தாவது சட்டமன்றப் பேரவை. இதைத்தான் வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டமன்றப் பேரவை என்று சொல்லியிருக்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, மேலும் தாங்கள் இந்த அவையில் நடுநாயகமாக வீற்றிருக்கின்றீர்கள் என்று பேசினார். இதற்கு முன்பு ஒருநாள் பேசிய ஓர் எதிர்க்கட்சி உறுப்பினரும் இந்த நாற்காலிக்குள்ள வரலாற்றுச் சிறப்பைப்பற்றி பேசினார். இவ்வளவு பேசுகின்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கட்சித் தலைமை இந்த அவையை வேறு கட்டடத்திற்கு மாற்றும்போது, இந்த நாற்காலியையே தூக்கி குப்பையில் போட்டிருந்தார்கள் என்பதுதான் உண்மை. *(மேசையைத் தட்டும் ஒலி)* இப்போது பேரவைச் செயலாளராக இருக்கின்ற திரு. ஜமாலுதீன் அவர்கள்தான் அதைக் காப்பாற்றி, பத்திரமாகப் பாதுகாத்து வைத்திருந்தார்கள் என்பதும் உண்மை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தியாவிலேயே ஒரு மாநிலத்தில், மாநகரங்களில் அல்லது நகரங்களில் அதிகமாக வாழ்கின்ற மக்களின் எண்ணிக்கை என்று வருகிறபோது, தமிழகத்திலேதான்

அதிகமாக நகரப் பகுதிகளில் வசித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இன்றைக்கு தொடர்ந்து வந்து கொண்டிருக்கிற புள்ளிவிவரங்களின்வாயிலாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். கடந்த நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்னாலே 44.04 சதவிகிதம் என்றிருந்த நகர மக்கள்தொகை இன்றைக்கு 48.45 சதவிகிதமாக உயர்ந்திருக்கின்றது. எங்களிடம் கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பில் 2030 ஆம் ஆண்டு இது 67 சதவிகிதமாகக்கூட உயரும் என்கின்ற நிலை வந்திருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆக, கிராமங்களிலே வாழ்பவர்கள் எல்லாம் இன்றைக்கு நகரங்களை நோக்கி குடிபெயரத் தொடங்கிவிட்டார்கள். எனவே, இந்த நகரப் பகுதிகளில், மாநகரப் பகுதிகளில் வசிப்பவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை, தேவையான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தித் தருவது ஒவ்வொரு அரசின் கடமையாகும்.

பிற்பகல் 12-20

அந்தவகையிலேதான், கடந்தகால தி.மு.க. ஆட்சியில் இன்றைக்கு சென்னையைப் பொறுத்தவரை, 155 வட்டங்களாக இருந்த சென்னை, 174 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள சென்னை, 8 நகராட்சிகளையும், 9 பேரூராட்சிகளையும், 25 ஊராட்சிகளையும் இணைத்து 426 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு உள்ள பெரிய மாநகராட்சியாக ஆக்கி, ஏற்கெனவே இருந்த 155 வட்டங்களைச் சுருக்கி 103 வட்டங்களாகவும், இன்றைக்கு திருவள்ளூர் பகுதியிலே இருக்கிற 61 வட்டங்களை சென்னையோடு இணைத்தும், காஞ்சிபுரத்திலிருந்து 32 வட்டங்களை சென்னையிலே இணைத்தும், ஆகமொத்தம் 200 வட்டங்களாக ஆக்கப்பட்டது. 200 வட்டங்களாக ஆக்கப்பட்டதற்குப் பிறகு, நடைபெற்ற தேர்தல் இன்றைக்கு நாம் அறிந்த ஒன்று, 5 ஆண்டுகள் ஆகிறது. ஏற்கெனவே சென்னை மாநகராட்சி நிருவாகம் 1996-ல் வணக்கத்திற்குரிய மேயராக இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பு வகித்த காலத்தில்தான், ஹட்கோ என்கின்ற மத்திய அரசு நிறுவனம் சென்னை மாநகராட்சிக்கு Clean City Award ஒன்றினைத் தந்து மகிழ்ந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைய மத்திய அரசின் சுகாதார அமைச்சகம் JRD Tata Memorial award என்கின்ற ஒரு விருதினைத் தந்து மகிழ்ந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) சுகாதாரத் துறையில் சீர்மிகுந்த செயல்பாடுகளின் விளைவால், அந்த விருது வணக்கத்திற்குரிய தளபதி அவர்களுக்குக் கிடைத்தது. ரொக்கப்

பரிசாக ரூ.2 இலட்சத்தையும் தந்தார்கள். அதோடுமட்டுமல்லாமல், அவர் காலத்தில் கட்டப்பட்ட மேம்பாலங்களில் சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்ட மேம்பாலம் என்று சொல்லி, சர்தார் பட்டேல் சாலையில் இருக்கிற ஒரு மேம்பாலத்திற்கு. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 48 சதவிகிதம் இன்றைக்கு நகரமயமாகி இருக்கிறது என்பதை குறிப்பிட்டிருக்கின்றார்கள். வருங்காலத்திலே இன்னும் அந்த சதவீதம் கூடுதலாக வந்துகொண்டிருக்கும். ஆனால், ஊராட்சிக்கும் சரி, ஊராட்சியில் இருக்கக்கூடிய மக்களுக்கும் சரி, நகராட்சியில் இருக்கக்கூடிய மக்களுக்கும் சரி, நகர்ப்புறத்தில் இருக்கக்கூடிய அனைத்து வசதிகளும், தேவையான அனைத்து கட்டமைப்பு வசதிகளையும் இன்றைக்கு ஊரகத் துறையிலும், கிராமங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, கிராமங்கள், மாண்புமிகு அம்மா அவர்கள் தந்த தாய் திட்டம், பசுமைவீடு திட்டம் என்ற அத்தனை திட்டங்களால் ஊராட்சியும், நகராட்சியும், இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே வளர்ச்சியடைந்திருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, விருதுகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசினார்கள். தி.மு.க. ஆட்சியில் ஒரு விருது வாங்கியிருந்தால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்றைக்கு உள்ளாட்சித் துறையில் எடுத்த நடவடிக்கையினால் 10 விருதுகள் வாங்கியிருப்போம். தி.மு.க. ஆட்சியில் 10 விருது வாங்கியிருந்தால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் 100 விருதுகள் வாங்கியிருப்போம். (மேசையைத் தட்டும் ஒலி) எல்லாவற்றையும் என்னுடைய பதிலுரையில் சொல்கிறேன். சென்னை மாநகராட்சியில் மட்டும் கடந்த வருடம் 5 விருதுகள் வாங்கியிருக்கிறார்கள். ஒவ்வொரு துறையிலும் வாங்கியிருக்கிறோம். இந்தியாவிலேயே கடந்த கால காங்கிரஸ் அரசிலும் சரி, இப்போது இருக்கக்கூடிய பாரதீய ஜனதா அரசிலும் சரி, இன்றைக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வளர்ச்சித் திட்டம், வருடா வருடம்,

ஒவ்வொரு வருடமும் விருது வழங்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, மாண்புமிகு அம்மா அவர்கள் மனித சக்தியை உருவாக்கியதைப் பார்த்தீர்களென்றால், இன்றைக்கு இந்தியாவிலேயே முதன்மை மாநிலம் தமிழகம். அதேபோல, குடிநீர் வழங்கல் துறையிலே மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையினால் கிராமங்களில் 98.98 சதவிகிதம் குழாய்கள் மூலமாக குடிதண்ணீர் கொடுக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கும் இன்றைக்கு விருது வழங்கப்பட்டிருக்கிறது. விருதுகளைப் பற்றி நான் விளக்கமாகச் சொல்கிறேன். அதேபோல பாலங்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் பேசினார். பாலங்களைப் பற்றி நான் முன்னாலேயே சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) பாலங்களைப் பற்றி முழுமையாகச் சொல்லுங்கள், அதன்பிறகு நான் பதில் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், நீங்கள் கேட்டதற்குத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்.

திரு. மா. சுப்பிரமணியன்: இல்லை, நான் எதுவுமே கேட்கவேயில்லை. கேட்டதற்கு சொன்னால் பிரச்சினையில்லை, நான் கேட்கவேயில்லை. வாங்கிய விருதுகளைச் சொல்கிறோம். நாங்கள் பெற்ற பிள்ளைகளைத் தட்டிக்கொடுத்து மகிழ்ச்சியடைகிறோம். தளபதி அவர்கள் சென்னை மாநகராட்சிக்குப் பெற்றுத் தந்த விருதுகளை நாங்கள் சபையில் சொல்லி மகிழ்கிறோம். இதிலே தவறு ஒன்றுமில்லை. அவர்கள் ஒன்றும் செய்யவில்லை என்று சொன்னால்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எழுந்து பதில் சொல்ல வேண்டும். நான் ஒன்றும் சொல்லவில்லை.

பிற்பகல் 12-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது பேசிக் கொண்டிருக்கும் மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் ஐந்தாண்டு காலம் சென்னை மாநகராட்சியின் மேயராக இருந்ததாலோ என்னவோ தெரியவில்லை, அவர் இந்தத் துறை பற்றிய மானியக் கோரிக்கை

தமிழ்நாடு முழுவதற்குமானது என்பதை மறந்துவிட்டு, சென்னையைப் பற்றி மட்டுமே பேசிக் கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) நேற்றைய தினம் பேசிய இன்னொரு எதிர்க்கட்சி உறுப்பினர் டாக்டர் பொன்முடி அவர்களும் சென்னையில் கட்டப்பட்ட மேம்பாலங்களைப் பற்றி மட்டுமே பேசிக்கொண்டிருந்தார். ஒட்டுமொத்த தமிழ்நாட்டில் எத்தனை சாதனைகளை இந்தத் துறைகளில் செய்திருக்கிறோம் என்பதைப் பற்றியெல்லாம் தெரிந்துகொள்ளாமல், தெரிந்துகொள்ள விருப்பமில்லாமல் (மேசையைத் தட்டும் ஒலி) அவர் குறுகிய மனப்பான்மையுடன் சென்னையைப் பற்றி மட்டுமே பேசிக்கொண்டிருக்கிறார். ஏனென்றால் அவர் சென்னை மேயராக இருந்தவர். ஆகவே, தான் இப்பொழுது ஒரு எம்.எல்.ஏ., இப்பொழுது தமிழ்நாடு முழுவதைப் பற்றியும் தெரிந்துகொண்டு பேச வேண்டும் என்பதை அவர் முதலில் புரிந்துகொள்ள வேண்டும் என்று தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இந்தியா முழுவதிலும் இன்றைக்கு ஆய்வாளர்கள், Analysts, Demographic Experts, 'Tamilnadu is the most rapidly urbanising State' என்று சொல்கிறார்கள் என்றால் (மேசையைத் தட்டும் ஒலி) கிராமங்களில் உள்ள மக்களெல்லாம் குடிபெயர்ந்து நகரங்களுக்கு வருகிறார்கள் என்று அர்த்தம் அல்ல. கிராமங்கள், ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் இவைகளெல்லாம் மாநகராட்சி அந்தஸ்திற்கு படிப்படியாக உயர்ந்து வருகின்றன, வளர்ந்து வருகின்றன, முன்னேறி வருகின்றன என்பது பொருள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், இந்த சப்ஜெக்ட்டை விட்டு விட்டு, வேறு சப்ஜெக்ட்டில் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இன்னும் சப்ஜெக்ட்டுக்கே போகவில்லை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், நீங்கள் சென்னையை விட்டுவிட்டு வெளியூரைப் பற்றிப் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் பொன்முடி, நான் உங்களைப் பேச அனுமதிக்கவில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) முதலில் நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் பொன்முடி அவர்கள் பேசியது எதுவும் அவைக்குறிப்பில் இடம்பெறாது. (குறுக்கீடு) நேற்று நீங்கள் பேசினீர்கள் என்றுதான் குறிப்பிட்டார்களே தவிர, தவறாக எதுவும் சொல்லவில்லை. (குறுக்கீடு) உட்காருங்கள். உங்களைப் பற்றி வேறு ஒன்றும் சொல்லவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நேற்று நீங்கள் பேசினீர்கள் என்று மட்டும்தான் சொன்னார்களே தவிர, நீங்கள் பேசியதைப் பற்றி தவறாக ஒன்றும் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், நீங்கள் பேசுங்கள்.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரப் பகுதிகளில் வசித்துக் கொண்டிருக்கின்ற 48.45 சதவீத மக்கள் ஏறத்தாழ 3,15,22,000 பேரில் நான்கில் ஒரு பகுதியினர் சென்னையில் இருப்பதால், அந்த ஒரு பகுதியினரில் தொடங்கி மற்ற எல்லாப் பகுதிகளுக்கும் போகலாம் என்கின்ற வகையில்தான் சென்னையிலிருந்து தொடங்கி சென்று கொண்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வணக்கத்திற்குரிய எங்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் துணை முதல்வராக இருந்தபோது, உள்ளாட்சித் துறையை வகித்தபோதுதான், தமிழகத்தில் மிக நீண்ட காலமாக இரண்டு சமூகத்தினரிடையே இருந்த வேற்றுமையை அகற்றி, ஒற்றுமையை ஏற்படுத்தி, பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல் போன்ற ஊராட்சிகளில் தேர்தல் நடத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு சமூக உறவை ஏற்படுத்தியவர் எங்கள் எதிர்க்கட்சித் தலைவர் மரியாதைக்குரிய தளபதி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் மேயராகப் பொறுப்பு வகித்த நேரத்தில்தான், சென்னையில் 10 மேம்பாலங்கள் கட்டத்

திட்டமிடப்பட்டது. மாண்புமிகு முதல்வரின் விருப்பம், ஆதலால், சென்னையைத் தொடர்ந்து எல்லா ஊர்களுக்கும் வருகிறேன். திருச்சியை, நெல்லையை, தூத்துக்குடியை. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள், பொறுமையாக சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள், பொறுமையாக மாண்புமிகு அமைச்சர் சொல்லும் பதிலைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் உறுப்பினர் கேட்ட கேள்விகளுக்குத்தான் மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் பேசுவதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் உறுப்பினர் கேட்டார். மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார். அதைக் கேளுங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

பிற்பகல் 12-30

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி தேர்தலைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதில் உண்மை நிலையை நான் இந்த அவைக்கு எடுத்துக் கூறுகிறேன். பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி ஆகிய கிராம ஊராட்சிகளுக்கு 12-10-1996 அன்று உள்ளாட்சி தேர்தல் அறிவிக்கப்பட்டு, அத்தேர்தலில் யாரும் போட்டியிடவில்லை. பின்னர், அதனைத் தொடர்ந்து 25-12-1996, 26-6-1997, 21-11-1997, 18-6-1998, 17-12-1998, 26-5-1999, 20-1-2000 மற்றும் 28-7-2000 ஆகிய தேதிகளில் தேர்தல் அறிவிக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படவில்லை. அது யாருடைய ஆட்சி? உங்களுடையது. (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, 12-10-1996 முதல் 28-7-2000 வரை 9 முறை தேர்தல் அறிவிக்கப்பட்டு, தி.மு.க. அரசால் நடத்த முடியவில்லை. 2001 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்*

தலைவி அம்மா அவர்களின் தலைமையில் ஆட்சி அமைந்த பின்னர், சீரிய முயற்சிகள் எடுக்கப்பட்டு, பாப்பாப்பட்டி ஊராட்சிக்கு ஏப்ரல் 2002-ல் நடைபெற்ற தேர்தலில் ஊராட்சி மன்றத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அதாவது தேர்தல் நடத்தப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் உடனடியாக பதவி விலகியதைத் தொடர்ந்து, மீண்டும் அக்டோபர் 2003-ல் தேர்தல் நடத்தப்பட்டு மீண்டும் ஒருவர் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) அவரும் உடனடியாக பதவி விலகியதைத் தொடர்ந்து, இக்கிராமத்தில் ஊராட்சி மன்றத் தலைவர் பதவி காலியானது. கீரிப்பட்டி ஊராட்சியை பொறுத்தளவில், ஏப்ரல் 2002-ல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே தேர்தல் நடத்தப்பட்டு, தலைவர் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, அவர் பதவி விலகியதைத் தொடர்ந்து, ஏப்ரல் 2005-ல் மீண்டும் தேர்தல் நடத்தப்பட்டு, ஊராட்சி மன்றத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். திரும்பவும் பதவி விலகல். அங்கே இருக்கும் பிரச்சினை, 20 வருடங்களாக இருக்கும் பிரச்சினை. 1996 முதல் 2001 வரை ஆட்சியில் இருந்த தி.மு.க. அரசு நடத்த இயலாத தேர்தலை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) 2001 முதல் 2006 வரை பல்வேறு முயற்சிகள் எடுத்து, நடத்துவதற்கு வழிவகை செய்த காரணத்தினால் மட்டுமே, 2006-ல் தி.மு.க. தேர்தலை நடத்த வாய்ப்பு ஏற்பட்டது. அதற்கு பிறகு, அதே 2006 ஆம் ஆண்டு வன்முறை மற்றும் இரத்தகளரிகள் நடைபெற்றன. இன்னொன்று கேட்டுக்கொள்ளுங்கள். சென்னை மாநகராட்சி தேர்தலை நாடே விமர்சனம் செய்து, அப்போதைய தி.மு.க. அரசை (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை உயர் நீதிமன்றம் கடும் கண்டனம் செய்தது. சென்னை உள்ளாட்சித் தேர்தலைப் பற்றி உங்களுக்கே தெரியும். அதற்கு பிறகு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2011-ல் ஆட்சி பொறுப்பேற்றவுடன் அக்டோபர் மாதம் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல் மிகவும் நேர்மையாகவும், சுதந்திரமாகவும், அமைதியாகவும் (மேசையைத் தட்டும் ஒலி) நடைபெற்று, உள்ளாட்சிகள் சட்டத்தின்படி அனைவருக்கும் உரிய பிரதிநிதித்துவம் அமையும் வகையில் வெற்றிகரமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடத்தி முடித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் வரும் அக்டோபர் மாதம் நடைபெறவிருக்கும் உள்ளாட்சி தேர்தலில் இன்னும் சிறப்பு, 50 சதவிகிதம் அம்மா பெண்களுக்கு, வாரிக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வருகின்ற தேர்தலும், அம்மா அவர்கள் எடுக்கக்கூடிய நடவடிக்கையின் காரணமாக, மிகவும் நியாயமாகவும், நேர்மையாகவும், சுதந்திரமாகவும் நடைபெறும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை ஆணித்தரமாக மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். நடைபெறவிருக்கும் உள்ளாட்சி தேர்தல் நேர்மையான முறையில் நடைபெறும் என்று அறிவித்ததற்கு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அதேநேரத்தில், அவர் படித்த செய்தி எல்லாம் ஏற்கெனவே நடைபெற்ற அந்த 4 ஊராட்சிகளில் அ.தி.மு.க.-வினால் தேர்தலே நடத்த முடியாமல் போய், வருடத்திற்கு 4 முறை திரும்பத் திரும்ப நடைபெற்றதை அவரே அவருக்கு தெரியாமல், இங்கே மிகப்பெரிய உண்மையை ஒப்புக்கொண்டு 2006-ல்தான் அந்த தேர்தல் நடைபெற்றது என்பதை தெளிவாக எடுத்துச் சொல்லியிருப்பதற்காக அதற்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கூறிய பதிலைச் சரியாக கவனிக்காமல் இங்கே அவைக்கு தவறான தகவலைத் தெரிவிக்கின்றார். அங்கு வென்றிருக்கின்ற அத்தனை முறையும் காவல் துறையினரை வைத்து, சிறப்பான ஜனநாயக முறையில் பாப்பாபட்டி, கீரிப்பட்டி ஆகிய இடங்களில், நான் நாடாளுமன்ற உறுப்பினராக இதய தெய்வம் அம்மா அவர்களால் நிறுத்தப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டு, எங்களால் நடத்தப்பட்ட

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தேர்தல். அதில் தி.மு.க.-விற்கு பங்கு இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி மன்றத் தேர்தலில் ஜனநாயகம் எவ்வாறெல்லாம் சீர்கெட்டுப் போய், அதனை சின்னாப்பின்னப்படுத்தினார்கள் தி.மு.க. கட்சியினர் என்பதை நாடு நன்றாகவே அறியும். (குறுக்கீடுகள்) பொறுமையாகக் கேளுங்கள், பொறுமையாகக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சி மன்றத் தேர்தலில். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அனைவரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *2006 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சி மன்றத் தேர்தலில் சென்னை மாநகராட்சியில் 155 வட்டங்களுக்கு தேர்தல் நடைபெற்றது. அன்றையதினம் காலையில் 8-00 மணிக்கு ஜனநாயகத்தை மீறி, அத்துமீறி நீங்கள் ரௌடிகளை வைத்து ஓட்டு எல்லாம் போட்டு முடித்துவிட்டீர்கள். இந்தப் பிரச்சினையை மாண்புமிகு அம்மா அவர்கள், சென்னை உயர் நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்று, வாதாடி 155 வட்டங்களில் நடைபெற்ற தேர்தலில் 99 இடங்களில் மறு தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்று சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே உள்ளாட்சி மன்றத் தேர்தல் நடைபெற்று, 99 இடங்களில் மறு தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்ற தீர்ப்பை மாண்புமிகு அம்மா அவர்கள்தான் பெற்றுத் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி அவலட்சணமான தேர்தலை நீங்கள் நடத்தி முடித்துவிட்டு, இப்போது உள்ளாட்சி மன்றத் தேர்தலை ஏதோ நியாயமாக நடத்தினோம், தர்மத்தின் அடிப்படையில் நடத்தினோம் என்று பேசுகிறீர்கள். (குறுக்கீடுகள்) உள்ளாட்சி மன்றத் தேர்தலைப் பற்றி நீங்கள் பேசுவதற்கு உங்களுக்கு எந்த யோக்கியதையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உங்கள் கட்சியின் உறுப்பினர்தான் பேசுகின்றார். (குறுக்கீடுகள்) அவர் பேசுவார், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் கேட்ட கேள்விக்குத்தான் மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்கின்றார்கள், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் கேட்ட கேள்விக்குத்தான் மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்கின்றார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றார், கேளுங்கள். (குறுக்கீடுகள்) Point of order இதில் வராது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொன்னேன் என்று புரிந்துகொள்ளாமல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றார். நான் தெளிவாகச் சொன்னேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் உட்காருங்கள். இப்போது பேசிக் கொண்டிருப்பவருக்குத்தான் வாய்ப்புத் தர முடியும். உங்களுக்கு இல்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001 முதல் 2006 ஆம் ஆண்டு வரை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு முயற்சிகளை எடுத்த காரணத்தினால்தான் அந்தத் தேர்தலை அம்மா அவர்கள் நடத்தியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தொடர்ந்து முயற்சிகளை எடுத்துக் கொண்டிருந்தார்கள். அது சமுதாயப் பிரச்சினை. அதனை வேறு மாதிரியாகச் சொல்லலாம். அதனை அம்மா அவர்கள் சுமூகமாக தீர்த்து வைத்து, தேர்தலை நடத்தி, திரும்பவும் அங்கு இருக்கக்கூடிய பிரச்சினைகளைச் சரி செய்து, 2001 முதல் 2006 ஆம் ஆண்டு வரை எடுத்த முயற்சியினால்தான், 2006 ஆம் ஆண்டு நீங்கள் தேர்தலை நடத்தினீர்கள். அதற்குப் பின்னால் அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு 2011-ல் தேர்தல் நடந்திருக்கிறது. இப்பொழுதும் தேர்தல் நடக்கவிருக்கிறது. அதைத்தான் நான் சொன்னேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கட்சியின் உறுப்பினர்தான் பேசிக் கொண்டிருக்கிறார். நீங்கள் என்ன வாய்ப்புக் கேட்டுக் கொண்டேயிருக்கிறீர்கள்? (குறுக்கீடு) அப்படியெல்லாம் வாய்ப்புத் தர முடியாது, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின், நானும் இந்த அவையில் வந்ததிலிருந்து உங்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். தேவையில்லாமல் திடீர் திடீரென்று எழுந்து வாய்ப்புக் கேட்கிறீர்கள். (குறுக்கீடுகள்) இதுவெல்லாம் முறையல்ல. அப்படியெல்லாம் வாய்ப்புத் தர முடியாது. நீங்கள் உட்காருங்கள், உங்கள் கட்சியின் உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.

பிற்பகல் 12-40

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் ஒரு செய்தியினைச் சொன்னார்கள். 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 99 மாநகராட்சி மன்ற உறுப்பினர்களுக்கான மறு தேர்தல் நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டு நடந்தது என்கின்ற செய்தியினை சொல்லியிருக்கின்றார்கள். உண்மையில், தவறான செய்தி பதிவாகிவிடக் கூடாது என்பதற்காக விளக்கத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அன்றைக்கு நடைபெற்ற தேர்தலில் நீதியரசர் திரு. முகோபாத்யாயா அவர்கள் வழக்கு தொடர்ந்ததற்குப் பிறகு, வழக்கு மன்றத்தில் 99 மாநகராட்சி மன்ற உறுப்பினர்களுக்கான தேர்தலில் முறைகேடுகள் நடந்ததாக காவல் துறையில் புகார் இருக்கின்றது. புகார் இருக்கின்ற அந்த 99 பேரும், இந்த மாநகராட்சி நிருவாகம் எந்தவிதமான முக்கிய முடிவுகளையும் தீர்ப்பு வருகின்ற வரை எடுக்காமல் இருப்பது நல்லது என்று Open Court-ல் statement சொன்னார்கள். அந்தச் செய்தி நாளிதழ்களில் வந்தவுடன் அன்றைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் தலைவர் மரியாதைக்குரிய திரு. வரதராஜன் அவர்களும், பாரதீய ஜனதா கட்சியின் தலைவர் திரு. இல. கணேசன் அவர்களும் செய்தித் தாள்களில் ஓர் அறிக்கையினை வெளியிட்டிருந்தார்கள். நீதிமன்றத்தில் நீதியரசர் இப்படித் தீர்ப்புக் கூறியிருக்கிறார். எனவே, மாநகராட்சி நிருவாகம் சரியான, கொள்கை ரீதியான முடிவுகளை எடுக்காமல், தீர்ப்பு வருகிறவரை காத்திருக்கலாம் என்கின்ற செய்தியினை அவர்கள் அறிக்கையாக வெளியிட்டிருந்தார்கள். உடனடியாக தமிழக

முதல்வர், தமிழினக் காவலர், தலைவர் கலைஞர் அவர்கள் என்னை அழைத்து, 'செய்தியினைப் பார்த்தாயா' என்றார். 'பார்த்தேன்' என்றேன். 'என்ன செய்யலாம்' என்றார்? 'நீங்கள் என்ன சொன்னாலும் சரி' என்றேன். உடனடியாக அன்றைக்கு தலைவர் கலைஞர் அவர்கள், '99 பேரும் இராஜினாமா செய்யுங்கள், (மேசையைத் தட்டும் ஒலி) நாம் மறு தேர்தலை நடத்தி, தேர்தலைச் சந்திக்கலாம்' என்றார்கள். இது உண்மையிலேயே ஜனநாயகத்தின்மீது நம்பிக்கை வைத்து தலைவர் கலைஞர் அவர்கள் எடுத்துச் சொல்லி, (குறுக்கீடுகள்) அதற்குப் பிறகு தேர்தல் முறையாக நடத்தப்பட்டு. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் நீதிமன்ற நீதிபதி, '99 இடங்களில் நடைபெற்ற வார்டு செயலாளர், வட்டச் செயலாளர்கள் தேர்தல், தேர்தலே அல்ல, தேர்தல் விதிமுறைக்குப் புறம்பாக நடைபெற்ற தேர்தல்' என்று சொன்னாரா, இல்லையா? அதற்கு நீங்கள் பதில் சொல்லுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

திரு. மா. சுப்பிரமணியன்: *எல்லாம் நாட்டு மக்களுக்குத் தெரியும். (குறுக்கீடுகள்) மரியாதைக்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன். சென்னையைப் பொறுத்தவரை வணக்கத்திற்குரிய தளபதி அவர்கள்தான் முதன்முதலில் இந்தியாவிலேயே உள்ளாட்சி அமைப்புகள் மேம்பாலம் கட்ட முடியும் என்பதை, அன்றைக்கு ஒரு தனி ஆணையைப் பெற்று மேம்பாலங்களைக் கட்டத் தொடங்கியவர். அதற்கு முன்பெல்லாம், நெடுஞ்சாலைத் துறை, பொதுப் பணித் துறைகள்தான் மேம்பாலங்களை சென்னையைப் பொறுத்தவரை கட்டிக்கொண்டிருந்தன. வணக்கத்திற்குரிய மேயராக தளபதி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, 10 மேம்பாலங்கள் கட்டத் திட்டமிட்டு, 9 மேம்பாலங்களைக் குறித்த காலத்திற்குள் கட்டி, அதற்கான திட்ட மதிப்பீடாக 94 கோடியே 50 இலட்சம் ரூபாய் என்று திட்ட மதிப்பீடுகள் போட்டு, 60 கோடியே 78 இலட்சம் ரூபாயில் பணிகளை முடித்து, 33 கோடியே 72 இலட்சம் ரூபாயை திட்ட மதிப்பீட்டில் சேகரித்தவர், சிக்கனமாக அந்தப் பணிகளை முடித்தவர் வணக்கத்திற்குரிய தளபதி அவர்கள். நான் இதனை எதற்காகச் சொல்கிறேனென்று சொன்னால், உடனடியாக*

உள்ளாட்சித் துறை அமைச்சர் எழுந்து, நாங்களும் இத்தனை பாலங்களைக் கட்டிக் கொண்டிருக்கிறோம் என்று சொல்வார்கள். நான்கூட நேற்றைக்குக் கேட்டது, 'சென்னையில் ஏதாவது ஒரு புதிய பாலத்திற்கான அடிக்கல்லை நீங்கள் நாட்டியிருக்கிறீர்களா' என்பதுதான். ஒரு பாலம் கட்டத் தொடங்கினால் பாலம் கட்டுகிற பணி என்பது, திட்டம் தீட்டுவது, திட்ட மதிப்பீடுகளைத் தயார் செய்வது, administrative sanction பெறுவது, tender விடுவது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே எந்தப் பாலமும் துவங்கப்படவில்லை என்ற ஒரு தவறான கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். (குறுக்கீடுகள்) சென்னையில்தான். காளியம்மன் கோவில் மேம்பாலம், வேளச்சேரி மேம்பாலம், (மேசையைத் தட்டும் ஒலி) மேடவாக்கம் மேம்பாலம், பல்லாவரம் மேம்பாலம், கொளத்தூர் ரெட்டேரி மேம்பாலம், கொளத்தூர் ரெட்டேரி இடது மேம்பாலம், கீழ்க்கட்டளை மேம்பாலம் ஆகிய பணிகள் துவங்கப்பட்டுவிட்டன. நீங்கள் பணியை ஆரம்பித்து விட்டுவிட்டுப் போய்விட்டீர்கள். (குறுக்கீடுகள்) போரூர் மேம்பாலம், அப்படியே விட்டுவிட்டுப் போய்விட்டீர்கள். நிலத்தையே கையகப்படுத்தவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அடிக்கல் நாட்டி அப்படியே விட்டுவிட்டுப் போய்விட்டீர்கள். அம்மாவுடைய ஆட்சியில்தான் கட்டப்படுகிறது. அதேபோல, அண்ணா ஆர்ச் பாலம். அதற்கு நிலமே கையகப்படுத்தவில்லை. அதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கவில்லை. இப்போது அம்மா அவர்களுடைய ஆட்சியிலே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒரு பகுதி திறக்கப்பட்டுவிட்டது. செப்டம்பர் மாதம் மறு பகுதி திறக்கப்பட்டு பயன்பாட்டுக்கு வரும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, இங்கே மட்டுமல்ல, நான் நேற்றைக்கே குறிப்பிட்டிருக்கின்றேன். தமிழ்நாடு முழுவதும் நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக 1,239 பாலங்கள்தான் நீங்கள் கட்டியிருக்கிறீர்கள். ஆனால், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய 5 ஆண்டுக்கால

ஆட்சியிலே நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக, 2,095 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, சென்னையிலே எந்தப் பாலமும் அம்மா அவர்களுடைய ஆட்சியிலே கட்டப்படவில்லை என்று தவறான கருத்தைப் பதிய வைக்க வேண்டாமென்று இந்த நேரத்திலே கேட்டு, இந்தப் பாலங்கள் எல்லாம் துவக்கப்பட்டுவிட்டன, பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறைக்கான கொள்கை விளக்கக் குறிப்பில் 122 ஆவது பக்கத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் இருக்கிறது.

"கடந்த ஐந்து ஆண்டுகளில் ரூ.114.95 கோடி மதிப்பீட்டில் 5 மேம்பாலங்கள், 10 சிறு பாலங்கள் மற்றும் 3 சுரங்கப்பாதைகள் புதிதாக பல்வேறு இடங்களில் கட்டப்பட்டும் (மேசையைத் தட்டும் ஒலி) மற்றும் பல்வேறு இடங்களில் ஏற்கெனவே உள்ள மேம்பாலங்களை மேம்படுத்தும் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. இதில் ரூ.16.66 கோடி மதிப்பீட்டில் கத்திவாக்கம் நெடுஞ்சாலை-காக்ரேன் பேசின் சாலையில் மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 28-2-2016 அன்று பொதுமக்களின் பயன்பாட்டுக்காகத் திறந்து வைக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இப்பாலத்தினால் கொருக்குப்பேட்டை பகுதியில் உள்ள சுமார் 5 இலட்சம் பொதுமக்கள் பயனடைந்து வருகின்றனர்." ஆகவே, ஒரு பாலம்கூட கட்டவில்லை என்று சொல்வது வேண்டுமென்றே உண்மைகளைத் திரித்துச் சொல்வதாகும் அல்லது அவர்களுடைய அறியாமையை வெளிப்படுத்தும் சொல்லாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய ஆட்சியில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கட்டிய பாலங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி நானும் குறிப்பிட விரும்புகிறேன். 1996 முதல் 2001 ஆம் ஆண்டு வரையிலான அவர்களுடைய ஆட்சியில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் மேயராகப் பதவி வகித்தபோது, 9 சிறு மேம்பாலங்கள் ரூ.94.50 கோடியில் கட்டிமுடிக்கப்பட்டது. இது குறித்து, நேற்றுகூட நான் அவையில் பேசும்போது சொன்னேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் கட்டப்பட்ட பாலங்கள் மக்களுக்குத் தேவையான பாலங்கள். அவர்கள் கட்டிய பாலங்களில் உதாரணத்திற்காக, ஒன்று, இரண்டு பாலங்களைப் பற்றி மட்டும் சொல்கிறேன். அவர்கள் கட்டிய 9 பாலங்களில் பீட்டர்ஸ் சாலை-கான்ரான் ஸ்மித் சாலை, பீட்டர்ஸ் சாலை-வெஸ்ட் காட் சாலை மற்றும் புரசைவாக்கம் நெடுஞ்சாலை-பெரம்பூர் பேரக்ஸ் சாலை, டவுட்டன் சந்திப்புகளில் கட்டப்பட்ட மேம்பாலங்களினால் பொதுமக்களுக்குப் பயனேதும் இல்லை. (குறுக்கீடு) இந்தச் சந்திப்புகளில் சராசரியாக ஒரு மணி நேரத்திற்கு சுமார் 964 வாகனங்கள் மிகவும் எளிதாக கடந்து சென்றுவிடும். விஞ்ஞானப்பூர்வமாக, யோசித்து திட்டமிடாததன் விளைவாக இந்தச் சந்திப்புகளில் 964 வாகனங்கள் ஒரு மணி நேரத்தில் போகக்கூடிய வகையிலிருந்து அந்த நிலை, அவர்கள் பாலம் கட்டிய பிறகு 603 வாகனங்கள்தான் ஒரு மணி நேரத்தில் போகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படியென்றால், அவர்கள் கட்டிய பாலத்தினால் மக்கள் எவ்வளவு பயனடைந்திருக்கிறார்கள் என்று பார்த்துக்கொள்ளுங்கள். அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மேயராகப் பதவியில் இருந்தபோது, அவரும் பாலங்கள் கட்டினார். கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 5 ஆண்டுகளில் ஐந்து மேம்பாலங்கள் ரூ.134.20 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டது. (குறுக்கீடு) இதில் வடக்கு உஸ்மான் சாலை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள், அமைதியாக இருங்கள். மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்கிறார்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: வடக்கு உஸ்மான் சாலை-மகாலிங்கபுரம் சாலை சந்திப்பு மேம்பாலம் மற்றும் உஸ்மான்

சாலை-துரைசாமி சாலை சந்திப்பு மேம்பாலம் ஆகியவை தொலைநோக்குப் பார்வை இல்லாத, தனித் தனிப் பாலங்களாக எதிர்காலப் போக்குவரத்தினைக் கருத்தில் கொள்ளாமல் அவசரகதியில் கட்டியதால், மிகக் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு, பொதுமக்களின் கால நேரம் மற்றும் எரிபொருள் வீணாகிறது. இந்தச் சந்திப்புகளில் வாகனங்கள் இரண்டு நிமிடங்களில் கடக்கும் நிலையிருந்தது, இப்போது 20 நிமிடங்களில் வாகனங்கள் கடக்கவேண்டிய சூழ்நிலையில் இன்றைக்கு பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகின்றனர். இவ்விரண்டு பாலங்களையும் ஒருங்கிணைத்து அண்ணா சாலை முதல் மகாலிங்கபுரம் வரை ஒரே மேம்பாலமாகத் திட்டமிட்டுக் கட்டியிருந்தால், இன்றைய போக்குவரத்து நெரிசல் இருந்திருக்காது. (குறுக்கீடு) அதேபோல, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011-லிருந்து 2016 வரை, இந்த ஐந்தாண்டு காலத்தில் 71 பாலங்கள் கட்டியது மட்டுமல்ல, பழைய பாலங்கள் புனரமைக்கப்பட்டு மக்களுக்கு, எங்கெங்கு பாலங்கள் தேவையோ, அந்த இடங்களிலெல்லாம், அந்தப் பாலங்கள் சரிசெய்யப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) சில பணிகளுக்கு டெண்டர்கள் கோரப்பட்டுள்ளன. இந்த வகையில் 71 பாலங்கள் சென்னையில் இருக்கின்றன. இதுகுறித்து இன்னும் விரிவாக, விளக்கமாக பேச வேண்டியிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் கட்டிய பாலங்களைப் பற்றி மட்டும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால் கட்டி முடிக்கப்பட்ட அந்தப் பாலங்கள் குறித்து கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதைத் தெரிவித்தார்கள். அதேபோல. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருக்கவும். மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

பிற்பகல் 12-50

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: அந்தப் பாலங்களில் இன்னும் இரண்டு பாலங்களைப் பற்றி மட்டும் சொல்கிறேன். ரங்கராஜபுரம் இரயில்வே சந்திக்கடவு குறுக்கே வாகன மேம்பாலம் கட்டுவதற்காக ரூ.23.76 கோடியும், தங்கசாலை சந்திப்பில் வள்ளலார்

நகர் மேம்பாலம் கட்டுவதற்காக ரூ.23 கோடியும் நிதி ஒதுக்கப்பட்டது. இப்படியே பார்த்தீர்கள் என்றால், இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 71 பாலங்கள் கட்டப்பட்டும், சில பாலங்கள் புனரமைக்கப்பட்டும் இருக்கின்றன. அதேபோல, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்கூட சொன்னார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக, தமிழகம் முழுவதும், இன்றைக்குத் உள்ளாட்சித் துறையிலே, சென்னை உட்பட உங்களுடைய ஆட்சியில் ஐந்து வருடங்களில் எடுக்கப்பட்ட பணிகள் 58, ஒதுக்கப்பட்ட தொகை ரூ.162.60 கோடிதான். இன்றைக்குத் தமிழகத்திலே 124 நகராட்சிகள் இருக்கின்றன. சென்னை உட்பட 12 மாநகராட்சிகளும், 528 பேரூராட்சிகளும், 12,524 ஊராட்சிகளும், 385 யூனியன்களும் இருக்கின்றன. கிராமங்கள் மற்றும் நகராட்சிகளுக்கெல்லாம் முழுமையாக மாண்புமிகு அம்மா அவர்கள் ரூ.912 கோடி நிதி ஒதுக்கியிருக்கிறார்கள்; கிராமங்கள் உட்பட. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் 539 பாலங்களைக் கட்டியிருக்கின்றார்கள். ஆனால், உங்களுடைய ஆட்சிக் காலத்தில், சென்னை உட்பட 58 பாலங்கள் மட்டும்தான் கட்டியிருக்கிறீர்கள். ஆனால், இன்று மாண்புமிகு அம்மா அவர்கள் 539 பாலங்களைக் கட்டியுள்ளார்கள்.

நேற்றுகூட நான் குறிப்பிட்டு சொன்னேன். குறிப்பாக, தேனி மாவட்டத்தில், கிராமங்களில் இருக்கக்கூடிய பாலங்களுக்குக்கூட ரூ.5.3 கோடி நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அது ஒரு சரித்திர சாதனையாகும். இதுவரை யாரும் அவ்வளவு நிதியொதுக்கவில்லை. கிராமங்களில் உள்ள பாலங்களுக்குக்கூட ரூ.5 கோடி நிதி ஒதுக்கி கட்டிக் கொடுத்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் நடந்தது. உள்ளாட்சித் துறை சம்பந்தமாக நீங்கள் எந்தத் திட்டத்தைப்பற்றி வேண்டுமானலும் பேசுங்கள். எல்லாவற்றிலுமே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சரித்திர சாதனை படைத்துள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் இந்த விவாதத்தை எப்படிக் கொண்டு போகிறார், இந்த விவாதம் எந்தத் திசையை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது, நாம் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அமர்ந்திருக்கிறோமா, இல்லை, சென்னை மாநகராட்சி மாமன்றத்தில் அமர்ந்திருக்கிறோமா என்ற சந்தேகம் எனக்கே வந்துவிட்டது. (மேசையைத் தட்டும ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியபோது, தி.மு.க. ஆட்சியில் பெறப்பட்ட ஒன்றிரண்டு விருதுகளைத் தெரிவித்துள்ளார். எனது தலைமையிலான அரசு உள்ளாட்சித் துறையில் பெற்றுள்ள விருதுகள், பாராட்டுகள் ஆகியவற்றில் ஒருசிலவற்றை இங்கே திரு. சுப்பிரமணியன் அவர்களுக்குத் தெரிவிப்பது எனது கடமையெனக் கருதுகிறேன்.

1. 2014 ஆம் ஆண்டிற்கான தொழிற்சாலை மறுசுழற்சி நீர் பயன் விருது தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனத்திற்கு அமெரிக்காவில் உள்ள Water Reuse Association என்கிற அமைப்பினால் வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

2. Corporate Water Stewardship 2015 Award தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனத்திற்கு United Kingdom-ல் உள்ள Global Water Intelligence Group என்கிற அமைப்பினால் வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

3. Water Leaders Award 2015 சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திற்கு United Kingdom-ல் உள்ள Global Water Intelligence Group என்கிற அமைப்பினால் வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

4. SKOCH Order of Merit 2014 விருது திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

5. Earth Hour Capital 2014 of India Award கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு WWF என்கிற அமைப்பினால் வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

6. வாழ்வாதார சுற்றுப்புறத்தினை மேம்படுத்தியதற்காக சென்னை மாநகராட்சிக்கு 2014 ஆம் ஆண்டிற்கான HUDCO Award *வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)*

7. Best Non Motorized Transport Project *2014 விருது மத்திய அரசால் சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)*

8. 2014 ஆம் ஆண்டிற்கான இந்தியா டுடேயின் Best City Award *சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)*

9. 2014 ஆம் ஆண்டிற்கான VOLVO Sustainable Mobility Award *சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 12-55

10. நகர்ப்புறத் திட்டம் மற்றும் வடிவமைப்பில் தரமான முறைகளைக் கையாண்டமைக்காக, "Voice of India Citizens Award" *ஜனக்கிரஹா என்ற அமைப்பினால் சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் பேசுகையில், அவர்கள் ஆட்சிக் காலத்திலே பாலங்கள் கட்டப்பட்டபோது அரசுக்கு சேமிப்பு ஏற்பட்டது, வருவாய் இழப்பு ஏற்படவில்லை என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். அவர்கள் ஒரு தவறான கருத்தைச் சொல்கின்றார்கள். நம்முடைய பொதுப் பணித் துறையிலே சிறப்பு வாய்ந்த பொறியியல் வல்லுநர்கள் இருக்கின்றார்கள். பொதுவாகவே, பாலங்கள் கட்டும்போது, அவர்களுடைய கருத்தை ஏற்று, அவர்கள் கொடுக்கின்ற* estimate-*ஐ வைத்துதான் பாலங்கள் கட்டப்படுவது வழக்கம். ஆனால், இவர்கள் என்ன செய்தார்கள்? இவர்கள் விஞ்ஞானபூர்வமாக சிந்திப்பவர்கள். விஞ்ஞானபூர்வமாக*

அதனுடைய உண்மையை உணர்ந்தவர்கள் ஒரு private consultant-ஐக் கொண்டு, ஒரு பொருள் 100 ரூபாய்க்கு வாங்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு 200 ரூபாய் என்று estimate போட்டுவிட்டு, 110 ரூபாய்க்கு நாங்கள் செய்து முடித்துவிட்டோம், (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே 90 ரூபாய் மிச்சம் செய்திருக்கிறோம் என்று சொன்னால், அந்த 10 ரூபாய் எங்கே போகிறது என்பதை நீங்களே யூகித்துக்கொள்ளுங்கள். இதை நான் சொல்லவில்லை. இவர்களுடைய கூட்டணியில் இருக்கின்ற திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களே, இவர்கள் பாலம் கட்டியதில் எந்த அளவுக்கு ஊழல் நடைபெற்றது என்பது குறித்து, அப்போது ஒரு புத்தகமே போட்டிருக்கின்றார். அதைப் படித்துப் பார்க்கவும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு மேயர் அவர்களே, (குறுக்கீடுகள்) (மேசையைத் தட்டும் ஒலி) பழக்கதோஷம்தான், வேறொன்றும் இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போதுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னார்கள். சென்னை மாநகராட்சியா அல்லது சட்டமன்றமா என்பது தெரிகிறமாதிரி பேசுங்கள்.

திரு. மா. சுப்பிரமணியன்: பழக்கதோஷம்தான். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல private ஆக rate quote செய்து எந்த அரசு நிருவாகமும் செய்யவே முடியாது. பொதுப் பணித் துறை quote பண்ணுகிற rate தவிர, எந்த நிருவாகமும் அந்த மாதிரி rate quote செய்து estimate போடமுடியாது.

இப்போது பேசிய மாண்புமிகு அமைச்சர்களெல்லாம் சொன்னார்கள், ஒரு திட்டத்தை அறிவிக்கிறபோது, திட்டம் தீட்டுபவர் யார்; எந்தமாதிரியான திட்டம் தீட்டப்பட்டது; அந்தத் திட்டத்திற்கான மதிப்பீடு எவ்வளவு; அந்த மதிப்பீட்டுக்கு அரசிடம் நிருவாக ஒப்புதல் பெற்றவர் யார்; அதன் பிறகு, டெண்டர் விட்டது யார்; Work order கொடுக்க வைத்தது யார்; வேலை செய்ய வைத்தது யார்; அந்த வேலையை ஆய்வு செய்தது

யார்; எத்தனை சதவீதம் வேலை முடிந்தது; 40 சதவீதம் 50 சதவீதம் முடிந்த பிறகு திரும்ப இன்னொரு அரசு மாறும்போது அவர்கள் போய் பார்த்து அந்த வேலையை முடிப்பது என்பது சாதாரணமான ஒன்று. நான் சொன்னது எல்லாமே தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட சொன்னார்கள், தண்டையார்பேட்டை காக்ரேன் பேசின் சாலையில் 16 கோடியே 66 இலட்சம் ரூபாயில் மேம்பாலம் கட்டப்பட்டது என்றால், அதைத் தொடங்கி வைத்தவர் வணக்கத்திற்குரிய தளபதி அவர்கள். நான் 10 முறை சென்று அந்த வேலையை ஆய்வு செய்தேன். அதைத் திறந்து வைத்தவர் மாண்புமிகு முதல்வர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று வேறு துறை மீதான மானியக் கோரிக்கைக்கு விவாதம் நடைபெற்றபோது எதிர் தரப்பில் எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் பேசியபோது Highways Department என்ற Department-ஐ விட்டுவிட்டு, சென்னையில் 10 மேம்பாலங்கள் கட்டப்பட்டன. அதில் நிதியை மிச்சப்படுத்திக் கொடுத்தார்கள் என்று அவர்கள் தலைவரைப் புகழ்ந்து பேசினார்கள். இன்று, எடுத்துக்கொள்ளப்படுவதோ Municipal Administration and Water Supply, Rural Development போன்ற துறைகள். கிட்டத்தட்ட ஒரு மணி நேரமாகப் பேசிக் கொண்டிருக்கிற எதிர்க்கட்சி உறுப்பினர் மற்ற எல்லாவற்றையும் விட்டுவிட்டு, அதே சென்னையைப் பற்றி, அதே 10 மேம்பாலங்களைக் கட்டினோம், அதற்கு ரூ.90 கோடி என்று சொன்னோம், அதை ரூ.60 கோடியில் முடித்துக் காட்டினோம் என்று (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு மேல் போகமாட்டேன் என்கிறார். நேற்று பேசிய உறுப்பினரும் சரி, இன்று பேசிக்கொண்டிருக்கிற உறுப்பினரும் சரி, அவர்களுக்குத் தெரிந்த ஒரே subject சென்னை. அதைப்பற்றியும் முழுமையாகத் தெரியவில்லை. எனவே, அவையின் நேரத்தை வீணாக்காமல் ஒன்று, அவர்கள் அடுத்த பொருளுக்குப் போகட்டும் அல்லது தாங்கள் அடுத்தவரைப் பேச அழைக்கலாம் என்று தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரமணியன், உங்களுக்குக் கொடுத்த வாய்ப்பை நீங்கள் தவறாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் சுருக்கமாக வேறு பொருள் குறித்துப் பேசுவதாக இருந்தால், பேசுங்கள். உங்களுக்கு நான் மேலும் இரண்டு நிமிடங்கள் தருகிறேன். அந்த இரண்டு நிமிடங்களில் நீங்கள் உரையை முடித்து, மற்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்பு அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) '20 நிமிடங்கள்தான் பேச வாய்ப்பு அளிக்கப்படும்' என்று நான் காலையிலேயே உங்களுக்குச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) அவர் ஒரு மணி நேரத்திற்குமேல் பேசிவிட்டார். (குறுக்கீடுகள்) அவர் பேசியதற்குத்தான் மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்கிறார்கள். அதற்கு நான் என்ன செய்வது? (குறுக்கீடுகள்) நான் அதற்கு ஒன்றும் செய்யமுடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் இரண்டு நிமிடங்களில் பேசி உரையை முடியுங்கள். இல்லையென்றால் நான் வேறு உறுப்பினரைப் பேச அழைக்க வேண்டியிருக்கும். மாண்புமிகு உறுப்பினர், திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள். (குறுக்கீடு)

பிற்பகல் 1-00

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் க. பொன்முடி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நேற்று பேசியதற்கு விளக்கம் அளிக்க இன்று வாய்ப்புத் தரமுடியாது. (குறுக்கீடுகள்) நேற்று பேசியது குறித்து இன்று பேச வாய்ப்பில்லை. (குறுக்கீடுகள்) திரு. சுப்பிரமணியன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) டாக்டர் க. பொன்முடி, நீங்கள் பேசுவது எதுவும் அவைக்குறிப்பில் வராது. மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், நான் உங்களுக்கு இரண்டு நிமிடங்கள் பேச அனுமதி கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுவதாக இருந்தால் பேசலாம். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசவில்லை என்றால், நான் வேறு உறுப்பினரைப் பேச அழைக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், இரண்டு நிமிடங்கள் மட்டும் பேசுங்கள்.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** பொதுவாக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், நான் கொடுத்துள்ள நேரத்தை வீணடிக்கிறீர்கள். ** என்று சொன்னது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. ஒரு மானியக் கோரிக்கை என்றால், மாநிலம் முழுவது பற்றியும் பேசவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் சுட்டிக்காட்டியதை நீங்கள் நன்றாக உணர்ந்து, உள்வாங்கிக் கொண்டு, நீங்கள் இந்த மானியக் கோரிக்கையின்மீது உள்ள மற்ற விஷயங்களைப் பற்றி பேசவேண்டும். இரண்டே நிமிடங்களில் உங்களது உரையை முடிக்கவேண்டும். இல்லையென்றால், நான் வேறு உறுப்பினரைப் பேச அழைக்க வேண்டியிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்தி 87-ல் மெட்ரோ இரயில் திட்டத்தைச் செயல்படுத்தப் போவதாக அறிவித்திருக்கிறீர்கள். "எனது ஆட்சியில் மோனோ இரயில் திட்டத்தைச் செயல்படுத்த திட்டமிட்டது, வேண்டுமென்றே வீம்புக்காக, நல்ல திட்டமான மோனோ இரயில் திட்டத்தை நிராகரித்து, சென்னை மாநகருக்கு எந்தவகையிலும் ஒத்துவராத, பொருந்தாத மெட்ரோ இரயில் திட்டத்தைக் கொண்டுவரப் போவதாக அறிவித்திருக்கிறீர்கள். மக்கள் பணத்தை ஏன் இப்படி வீணடிக்கிறீர்கள். மெட்ரோ இரயில் திட்டத்தை. . ."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், நீங்கள் நான் கொடுத்த வாய்ப்பைப் பயன்படுத்தாமல், மேலும் விவாதத்தை தவறான வழியில் எங்கோ கொண்டு செல்கிறீர்கள். ஆகவே. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பின்பு, நான் வேறு ஓர் உறுப்பினரைப் பேச அழைக்கிறேன், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான கருத்தை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் தெளிவாகச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) அவருக்கு நான் நிறைய வாய்ப்புக் கொடுத்துவிட்டேன். (குறுக்கீடுகள்) அவர் பேசவே இல்லை என்றால் எப்படி? அவர் கேள்வியைக் கேட்கிறார். (குறுக்கீடுகள்) அவர் கேள்வியைக் கேட்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. (குறுக்கீடுகள்) அதற்கு நான் என்ன செய்யமுடியும்? (குறுக்கீடுகள்) நான் காலையிலேயே உங்களுக்குச் சொன்னேன். அதாவது, பேசுகிற உறுப்பினர்கள், குற்றச்சாட்டு சொல்லாமல் இங்கு அவையில் பேசவேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டேன். (குறுக்கீடுகள்) அவர் கேள்வி கேட்டால் மாண்புமிகு அமைச்சர்கள் விளக்கம் சொல்வார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர்கள் விளக்கம் சொல்வதை நான் எப்படித் தவறு என்று சொல்லமுடியும்? (குறுக்கீடுகள்) இல்லை, மாண்புமிகு அமைச்சர்களின் விளக்கம் உங்கள் நேரத்தில்தான் வரும். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுகிற நேரத்தில்தான் வரும். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்தவுடன், மேலும் இரண்டு நிமிடங்கள் பேச உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். அந்த நேரத்திற்குள் நீங்கள் உரையை முடிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். நான் நேரத்தைப் பார்த்துவிட்டேன். அவர் ஏறக்குறைய ஒரு மணி நேரம் பேசிவிட்டார். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன், உட்காருங்கள். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

பிற்பகல் 1-05

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, மோனோ இரயில் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள்.*

மாண்புமிகு அம்மா அவர்கள் அதைத் தெளிவாக சொல்லியிருக்கின்றார்கள். சென்னை நகரம் என்பது பழமை வாய்ந்த நகரம். அந்தத் திட்டம் நிலத்தடியில் வருகின்ற காரணத்தினால் அங்கு கட்டடங்கள் எல்லாம் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது, அதேபோல பழைய கட்டடங்கள், பழைய வீடுகள், மக்கள் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான் மோனோ இரயிலும் இருக்க வேண்டும், மெட்ரோ இரயிலும் இருக்க வேண்டும் என்று சொன்னார்களே தவிர, அதனை மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் மாற்றி திசை திருப்பப் பார்க்கின்றார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, எல்லாம் நாங்கள் ஆரம்பித்த திட்டங்கள், 40 சதவிகிதம் வேலைகள் முடிந்த பின்னால், தமிழகத்தில் ஆட்சி மாற்றம் வந்ததற்குப் பின்னால் நீங்கள் செய்தீர்கள் என்று சொன்னார்கள். திட்டங்களை நீங்கள் அறிவிப்பதோடு சரி, அதற்கு பிறகு மாண்புமிகு அம்மா அவர்கள்தான் நிதி ஒதுக்குகின்றார்கள், எல்லாவற்றிற்கும் டெண்டர் விடுகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உதாரணத்திற்கு உள்ளாட்சித் துறையைப் பற்றி சொல்கின்றேன். குடிநீர் வழங்கல் துறையில் உங்களுடைய எதிர்க் கட்சித் தலைவர், உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது, 8 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை அறிவித்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்து, அதற்கு நிதியை ஒதுக்கினார்கள், அதேபோன்று tender விட்டார்கள். நீங்கள் திட்டங்களை அறிவித்ததோடு சரி. 2011-ல் தேர்தல் வந்த காரணத்தினால், வேலூர் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு எதிர்க்கட்சி துணைத் தலைவர் மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்களும், பழைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் அடிக்கல் நாட்டினார்கள். ஏதாவது ஒரு திட்டத்தை அறிவித்துவிட்டு, tender விடவில்லை, ஒப்பந்தம் இறுதி செய்யப்படவில்லை, work order கொடுக்காமல் இவர்கள் நேராகப் போய் அடிக்கல் நாட்டினார்கள்.

அந்தத் திட்டத்தினுடைய மொத்த மதிப்பு 1,295 கோடி ரூபாய். அந்த 8 திட்டங்களுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ.3,276.62 கோடி ரூபாயை இன்றைக்கு முழுமையாக நிதியை ஒதுக்கி, அதற்கு work order கொடுத்து, 6 திட்டங்களை முடித்துவிட்டார்கள், இன்னும் இரண்டு திட்டங்கள் இருக்கின்றன. மேலூர், வேலூர், விருதுநகரில் தலா இரண்டு திட்டங்கள், கோவை, திருப்பூரில் ஒரு திட்டம் என்று, 8 திட்டங்களில் ஆறு திட்டங்களை முழுமையாக முடித்திருக்கின்றார்கள். அதற்குப்பின், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 9 பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை அறிவித்திருக்கின்றார்கள். அவற்றில் சில திட்டங்களில் வேலைகள் முடிந்திருக்கின்றன, சில திட்டங்களில் வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. 167 திட்டங்களை, பெரிய, சிறிய கூட்டுக் குடிநீர் திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். எல்லா திட்டங்களும் இன்று process-ல் இருக்கின்றன, வேலை நடந்துகொண்டிருக்கின்றன. நீங்கள் 40-50 சதவிகிதம் வேலையை முடித்துள்ளதாக கூறுகின்றீர்கள், நீங்கள் திட்டங்களை அறிவிப்பதோடு சரி. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் எல்லாத் திட்டங்களுக்கும் நிதியை ஒதுக்குகின்றார்கள், tender விடுகின்றார்கள், எல்லா வேலையையும் செய்கின்றார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், இரண்டு நிமிடத்தில் உங்கள் உரையை முடியுங்கள்.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் படிப்பது ஏதோ ரோட்டில் இருக்கின்ற பேப்பர் அல்ல. இது சட்டமன்றக் குறிப்பு. 2006 ஜூலை 31, சட்டமன்றத்தின் பதிவேடு. இந்தப் பதிவேட்டைதான் படித்துக்கொண்டிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் சொன்ன மாதிரி மெட்ரோவும் வேண்டும், மோனோவும் வேண்டும் என்றெல்லாம் சொல்லவில்லை. தெளிவாகச் சொல்லப்பட்ட செய்தி-மோனோ இரயில் திட்டத்தை நிராகரித்து, சென்னை மாநகருக்கு எந்த வகையிலும் ஒத்துவராத, பொருந்தாத மெட்ரோ இரயில் திட்டத்தைக் கொண்டுவரப்

போவதாக தெரிவித்திருக்கின்றீர்கள். மக்கள் பணத்தை ஏன் இப்படி வீணடிக்கின்றீர்கள்? மெட்ரோ இரயில் திட்டத்தைச் செயல்படுத்த ஒரு கிலோ மீட்டருக்கு 250 கோடி ரூபாய் செலவாகும். ஆனால், மோனோ இரயில் திட்டத்தைச் செயல்படுத்த ஒரு கிலோ மீட்டருக்கு 50 கோடி ரூபாய்தான் செலவாகும். நில நடுக்கம் ஏற்படக்கூடிய பகுதியில் seismic belt எனப்படும் பகுதியில் சென்னை உள்ளதாக விஞ்ஞானிகளால் கண்டறியப்பட்டுள்ளது. எனவே பூமியைத் தோண்டி, பூமிக்கு அடியில் மெட்ரோ இரயிலுக்குத் தேவையான சுரங்கப் பாதையை அமைப்பது அபாயம். மெட்ரோ இரயில் திட்டம் சுற்றுப்புறச் சூழலைக் கடுமையாக பாதிக்கும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மா. சுப்பிரமணியன் பேசியது போதும், நீங்கள் உரையை முடியுங்கள்.

திரு. மா. சுப்பிரமணியன்: கடுமையாக மாசுபடுத்தும். இதனால் மாநகர மக்களின் உடல்நலம் பாதிக்கப்பட்டு, பல நோய்கள் ஏற்படும். இதைச் சொன்னது நான் அல்ல, இன்றைய தமிழக முதல்வர், அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் மரியாதைக்குரிய அம்மையார் அவர்கள். இதை இப்படி சொல்லிவிட்டு, இப்போது என்ன சொல்கின்றார்கள் என்றால், நான்தான் மெட்ரோ இரயில் திட்டத்தை 2003-ல் கொண்டு வந்தேன் என்று சொல்கின்றார்கள். இதில் எது உண்மை என்பதை இந்த மன்றத்திற்கு. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மெட்ரோ இரயில் திட்டத்தைப் பற்றி சொன்ன கருத்துகளை நான் மறுக்கவில்லை. இதெல்லாம் நான் பேசிய கருத்துகள்தான், இது உண்மைதான். இருந்தாலும் மெட்ரோ இரயில் திட்டம் தொடங்கப்பட்டுவிட்டது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர், இதெல்லாம் முறையல்ல. இந்த மாதிரி பேசினால் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: பணிகளை முடித்தாக வேண்டும் என்ற ஒரு நிலைமை, ஒரு கட்டாயம், அதனால் பணிகள் முடிக்கப்பட்டன. இப்போது நடைபெற்றுக்

கொண்டிருக்கிற இந்தத் திட்டத்தை பாதியில் நிறுத்த முடியாது. இதற்கு மத்திய அரசு செய்த உதவியை நான் அங்கீகரித்து அதற்கு நன்றி தெரிவித்தேன். நான் பேசிய பேச்சை நான் மறுக்கவில்லையே!

பிற்பகல் 1-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. மா. சுப்பிரமணியன், நீங்கள் பேச்சை முடியுங்கள், இதற்கு மேல் பேசாதீர்கள்.*

திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உள்ளாட்சி, நகராட்சி, மாநகராட்சிப் பகுதிகளில் ஒன்றுமே நடைபெறாததைப்போல் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, (குறுக்கீடுகள்) நீங்கள் வேறு புதிய பொருள் குறித்தெல்லாம் பேச முடியாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜேந்திரன், (குறுக்கீடுகள்) நேரம் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரியாக அவருக்கு ஒரு மணி நேரம் வாய்ப்பு கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்)*

***திரு. சு. ராஜேந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) வானுக்கு நிலவழகு; உயிர்த் தமிழுக்கு சொல்லழகு. (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் பேசியதற்குதான் மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கேட்ட விளக்கத்திற்கு மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்கிறார்கள். நீங்கள் விளக்கம் கேட்டால் மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்வார்கள். அதற்கு நான் என்ன செய்ய முடியும்? நீங்கள் கேட்ட விளக்கத்திற்கு அமைச்சர்கள் பதில் சொல்வார்கள். அதற்கு மேல் எல்லாம் பேச வாய்ப்பு இல்லை. நீங்கள் 20 நிமிடம் கேட்டீர்கள். நான் ஒரு மணி நேரம் வாய்ப்புக் கொடுத்துவிட்டேன். இதற்கு மேல் எல்லாம் வாய்ப்பு இல்லை. மற்ற உறுப்பினர்கள் பேச வேண்டும். அமருங்கள். இதற்கு மேல் நான் வாய்ப்புத் தர மாட்டேன். (குறுக்கீடு) திரு. சக்கரபாணி, நான் தெளிவாக உங்களிடம் இன்று காலையில் சொன்னேன், 20 நிமிடங்கள்தான் வாய்ப்பு தருவேன் என்று. நீங்கள் சரி என்று*

ஒப்புக்கொண்டீர்கள். அவ்வாறு சரி என்று ஒப்புக்கொண்ட பின்பும், மேலும் நீங்கள் ஒரு மணி நேரம் பேசிய பின்பும், இவ்வாறு மற்றவர்களின் நேரத்தை எடுத்துக்கொள்ள அதிக நேரம் வாய்ப்புக் கேட்பது மிக வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. (குறுக்கீடுகள்) இது சரியல்ல. நீங்கள் தொடர்ந்து அவையை நடத்துவதற்கு ஒத்துழைப்பைத் தருகிறேன் என்று சொல்லிவிட்டு, (குறுக்கீடுகள்) அவையில் நீங்கள் மட்டும் பேசி முடித்துவிட்டால் போதுமா? மற்ற உறுப்பினர்கள் பேச வேண்டாமா? நீங்கள், உங்கள் கட்சி உறுப்பினர் பேசுவதைத்தான் கேட்கிறீர்களேயொழிய, (குறுக்கீடுகள்) மற்ற உறுப்பினர்கள் பேசுவதற்கு நீங்கள் அனுமதிப்பதில்லை. (குறுக்கீடுகள்) வாய்ப்பு தர முடியாது. நீங்கள் உட்காருங்கள். நான் இதற்கு மேல் மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியத்திற்கு வாய்ப்பு தர முடியாது. (குறுக்கீடுகள்) அமருங்கள். மாண்புமிகு உறுப்பினர், அரசு கொறடா திரு. ராஜேந்திரன் அவர்கள் பேசுவார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர், திரு. சு. ராஜேந்திரன் அவர்கள். (குறுக்கீடுகள்)

திரு. சு. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) கடலுக்கு அலை அழகு; (குறுக்கீடுகள்) வானுக்கு நிலவழகு; உயிர்த் தமிழுக்கு சொல்லழகு (மேசையைத் தட்டும் ஒலி) பொதிகைக்குத் தென்றல் அழகு; (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் திரும்பத் திரும்ப சொல்கிறேன், (குறுக்கீடுகள்) இருங்கள். (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம் இருங்கள் திரு. ராஜேந்திரன். (குறுக்கீடுகள்) நானும் ஆரம்பத்திலிருந்து உங்களைப் பார்க்கின்றேன். நீங்கள் ஒவ்வொன்றிற்கும் குறுக்கீடு செய்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நேரத்தை வீணடிக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நான் ஒதுக்கிய நேரத்திற்கு மேல், அதாவது ஒரு மணி நேரம் பேசியிருக்கிறீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தி.மு.க. எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, திட்டங்களை ஆரம்பிப்பதைப் பற்றியும், முடிப்பதைப் பற்றியும் பேசினார்கள். இதில் யார் வல்லவர்கள் என்பதைப் பற்றியும் பேசினார்கள். 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைப்போல் தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது அவர்களுடைய திட்டத்தைத் தொடங்கி முடித்து வைக்கும் திறனுக்கு, வீராணம் திட்டம் ஒன்றே தகுந்த

சான்றாகும். (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட வீராணம் குடிநீர்த் திட்டத்தை ஏன் முடித்துவைக்கவில்லை? அத்திட்டம் ஏன் முடிக்கப்படாமல் நின்றது? உங்களுக்கே நம்பிக்கையில்லாமல் போய்விட்டதா? (மேசையைத் தட்டும் ஒலி) அதன்பின் சர்க்காரியா கமிஷனும் முடிந்தது, அதன்பின் ஆட்சிக் கலைப்பில் முடிந்தது, (மேசையைத் தட்டும் ஒலி) அதன்பின் நீங்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தாலும், (மேசையைத் தட்டும் ஒலி) அதே வீராணம் திட்டத்தைக் கையில் எடுக்கும் துணிவு உங்களுக்கு இருக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஏன்? அதன் பிறகு நான் ஆட்சிக்கு வந்த பிறகுதான், (மேசையைத் தட்டும் ஒலி) 'புதிய வீராணம் திட்டம்' (மேசையைத் தட்டும் ஒலி) என்று கொண்டு வந்து, அதை வெற்றிகரமாக (மேசையைத் தட்டும் ஒலி) செயல்படுத்தியுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தினால் சென்னை மாநகரத்திற்கு இன்றுவரை தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசியதெல்லாம் அவ்வளவுதான். நீங்கள் சொன்னதைக் குறித்து மாண்புமிகு அம்மா அவர்கள் தெளிவாக சில உண்மைகளை இந்த அவைக்குத் தெரிவித்துவிட்டார்கள். உட்காருங்கள் போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜேந்திரன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எவ்வளவு நேரம் எழுந்து நின்று வாதாடினாலும் சரி, நான் ஒதுக்கிய நேரத்திற்கு மேல் அதிக நேரம் கொடுத்து, ஒரு மணி நேரம் முடிந்து விட்டது. இதற்குமேல் மற்றவர்களின் நேரத்தை உங்களுக்கு ஒதுக்க முடியாது. அடுத்ததாகப் பேச வேண்டியது, அரசு கொறடா அவர்கள்தான். (குறுக்கீடுகள்) நான் வாய்ப்புத் தர மாட்டேன். நீங்கள் அமருங்கள். அமைதியாக இந்த அவையை நடத்துவதற்கு ஒத்துழைப்பு கொடுங்கள். (குறுக்கீடுகள்) ஓர் உறுப்பினருக்கு ஒரு மணி நேரத்திற்கு மேல் பேசுவதற்கு எப்படி வாய்ப்புத் தர முடியும்? அதுவெல்லாம் கிடையாது. (குறுக்கீடு) நீங்கள் தினமும் இதையே வாடிக்கையாகக் கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) தினமும் இதைத்தான் செய்கிறீர்கள் (குறுக்கீடுகள்) மொத்தத்திலே, நீங்கள் ஒரு மணி நேரம் பேசுகிறீர்கள். ஆளும் கட்சி சார்பாக 3 உறுப்பினர்கள் பேச வேண்டும். அவர்கள் மூன்று பேரும் சேர்ந்து

30, 40 நிமிடங்கள்கூட பேச முடியவில்லை. அந்த அளவிற்கு நேரத்தின் அளவை அவர்களுக்கு சுருக்க வேண்டியிருக்கிறது. இந்த அவையினுடைய நேரத்தை நீங்களே முழுமையாகப் பயன்படுத்த வேண்டுமென்று என்னை வற்புறுத்துவதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. நான் மற்ற உறுப்பினர்கள் பேசுவதற்கும் வாய்ப்பு அளிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், நீங்கள் பேசுவதற்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்து விட்டது, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ராஜேந்திரன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

திரு. சு. ராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்கள் சார்பாக நானே நன்றி சொல்கிறேன், உட்காருங்கள். திரு. சு. ராஜேந்திரன், நீங்கள் பேசுங்கள்.*

திரு. சு. ராஜேந்திரன்: *கடலுக்கு அலை அழகு; வானுக்கு நிலவு அழகு; உயிர்த் தமிழுக்கு சொல்லழகு; பூஞ்சோலைக்கு மலர் அழகு; பொதிகைக்கு தென்றல் அழகு; அருவிக்கு நீரோட்டம் அழகு; அரியணைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அழகு. (மேசையைத் தட்டும் ஒலி)*

புனித செயின்ட் ஜார்ஜ் கோட்டை என்னும் இத்திருக்கோயிலில் அரியணையில் அமர்ந்திருக்கும் இதய தெய்வம் தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களின் பொன்னடிகளில் பூ தூவி வணங்கி, என் உரையை தொடங்குகிறேன், அம்மா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். பொன்னான தமிழகத்தை கண்ணாகக் காத்து நின்று, மீண்டும் தமிழகத்தில் அமைதிப் பூங்காற்று அப்படியே தவழ்ந்து வர, "மக்களால் நான், மக்களுக்காகவே நான்" (மேசையைத் தட்டும் ஒலி) என்ற மகத்துவத் தத்துவத்தோடு ஒவ்வொரு மணித்துளியும் ஒப்பற்ற திட்டங்களைத் தந்து, வறுமையைத் தகர்த்து, வசந்தத்தை வழங்கியிருக்கின்ற வாழ வைக்கும் தெய்வமே, ஏழைகளின் இதயமே, மகிழ்ச்சியின் பூபாளமே, எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

திசை எட்டும் மகிழ்ச்சி வெள்ளம்; ஆறாவது முறையாக அம்மா அவர்களை அரியணையில் அமர வைத்த மக்களெல்லாம் 'இரட்டை இலை' சின்னத்திற்கே எப்போதும் வெற்றி தந்து, உங்களுக்கின்றி வேறு யாருக்கம்மா நாங்கள் வாக்களிப்போம் என்ற நெகிழ்ந்த நெஞ்சங்களை அள்ளி வைத்து அரவணைக்கும் அன்புப் பெட்டகமே, மாண்புமிகு அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

புவியெல்லாம் புகழ் மணக்கும் புரட்சித் தலைவியே எங்கள் அம்மா, பொன்மனப் புன்னகையே; காஞ்சியின் வாஞ்சையே; ஈரோட்டு கருத்துரையே, அனைத்தும் ஒருங்கிணைந்த உயிரே, எங்கள் மாண்புமிகு அம்மா.

'நேருக்கு நேராய் வரட்டும், நெஞ்சில் துணிவிருந்தால்,
என் கேள்விக்குப் பதிலை தரட்டும், நேர்மை திறனிருந்தால்'

என்ற புரட்சித் தலைவர் பாடல் வரிபோல, (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தல் எனும் போர்க்களத்தில் மகுடம் சூட்டிக்கொள்ள நினைத்திட்ட மாற்றாரின் பொய்யுரைகளை புரட்டிப் போட்ட புறநானூற்று வீரமே அம்மா, 'கையில் ஒற்றை சிலம்பும் இன்றி, ஊரெல்லாம் ஓரங்க நாடகம்' நடத்திய ஒரு கூட்டத்தின் ஆட்டத்தை ஒழித்துவிட்ட சாதனை சரித்திரமே! (மேசையைத் தட்டும் ஒலி) திருவரங்க தெய்வமே, மாண்புமிகு அம்மா! கங்கை வரை சென்று போரிட்டு வென்று தங்கக் குடங்களில் கங்கை நீர் கொண்டு வந்து பொன்னேரியில் பாய்ச்சிய புரட்சி வீரன் இராஜேந்திர சோழன் வெற்றித் திருநகர் ஜெயங்கொண்டம் தொகுதியும், ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்குமுன் ஆழ்கடல் சூழ்ந்திருந்த வரலாற்றுச் சிறப்புமிக்க அரியலூர் தொகுதியும் இணைந்து சிந்தாமல், சிதறாமல் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு முழுமையான வெற்றியைத் தந்த அரியலூர் மாவட்ட மக்களுக்கும் தொகுதி மக்களுக்கும் எனது நன்றியை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்.

பிற்பகல் 1-20

சிமெண்ட் ஆலை புகைமேகம் சூழ்ந்திருக்கும், வானத்து நிலா ஒளியும் வரமறுக்கும், பறவைகளின் சிறகடிக்கும் இசை ஒலியும் எதிரொலிக்கும் தாமரைக்குளம் எனும் ஒரு சிறிய கிராமம். அதில், ஏழை விவசாயக் குடும்பம், 10 ஆண்டு காலம் கிளைக் கழகச் செயலாளர் எனது தொடக்கப் பணி, தொடர்ந்து அம்மா பேரவை

ஒன்றியத் துணைத் தலைவர்; 5 ஆண்டு காலம் மாவட்ட பிரதிநிதி; பொதுக் குழு உறுப்பினர், மாவட்ட எம்.ஜி.ஆர். மன்ற இணைச் செயலாளர், மாவட்ட எம்.ஜி.ஆர். மன்ற செயலாளர் என்று அடிமட்டத் தொண்டனுக்கு வாழ்வு தந்து வரம் தரும் கருணை தெய்வமே மாண்புமிகு அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) கருணை நிறைந்த பார்வையால் தொடரும் எனது பணி அரியலூர் மாவட்டக் கழகச் செயலாளர், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர், அரசு தலைமைக் கொறடா எனும் மகத்துவமான அற்புதப் பணி. எனக்கு முகவரியைத் தந்து மாதா, பிதா, குரு, தெய்வமாக இருந்து உருவாக்கி உயர்த்திட்ட எங்கள் குலசாமியே! மாண்புமிகு அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) என் உயிர் இருக்கும் வரை தங்களுக்கு நன்றி விசுவாசமுள்ள எளிய தொண்டனாக நானும், எனது குடும்பமும் என்றும் வாழ்வோம் அம்மா. தங்கள் தூய தொண்டனாக என்றும் பணிவோடு மக்கள் பணியாற்றுவேன் அம்மா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாமன்றத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை எனும் உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கை விவாதத்தில் உரையாற்ற வழங்கிய வாய்ப்பிற்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் தமிழகத்தின் நிரந்தர முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் ஊரக வளர்ச்சித் துறைக்காக 21,186.58 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது, அண்ணல் காந்தியடிகளின் கனவுகளை நினைவாக்க வந்த புதுமை சிற்பி, புரட்சி விடியல், இதய தெய்வம் அம்மா அவர்களின் வாரி வழங்கிடும் வள்ளல் மனதிற்கும், அளவற்ற ஈகை குணத்திற்கும் ஓர் எடுத்துக்காட்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டமான தாய் திட்டத்தினை மேலும் 2016-2017 முதல் 2020-2021 வரை ஐந்தாண்டுகளுக்கு நீட்டித்து கிராமப்புற வளர்ச்சிக்கு வாழ்வளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு கிராம மக்கள் நன்றியுடையவர்கள் ஆவார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு அம்மா அவர்களால், விதி 110-ன்கீழ் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற இயக்கம் ஆகியவற்றின் செயல்பாடுகள் 2016-2017 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு, நகர்ப்புற வறுமைக் குறைப்பிற்கு ஒரு உத்வேகத்தை அளித்தது மட்டுமல்லாமல், வேலையற்ற இளைஞர்களே இல்லாத, முற்றிலும் வறுமையை அகற்றிடவும், அனைத்து அடிப்படை வசதிகளும் ஒவ்வொரு குடிமகனுக்கும் கிடைத்திடவும், மக்கள் அனைவரும் அமைதி, வளம், பாதுகாப்புப் பெற்றிடவும் மாண்புமிகு அம்மா அவர்கள் தொலைநோக்கு எண்ணத்தில் அயராது பாடுபட்டு வரும் ஒப்பற்ற அரசு.

பிற்பகல் 1-25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மாவின் பொற்கால ஆட்சியில்தான் தூய்மையான கிராம இயக்கம் துவங்கப்பட்டு, அதற்காக மாநில அரசு, விருதும் வழங்கி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தினைச் சிறப்பாக செயல்படுத்தியதற்காக, மத்திய அரசு வழங்கிடும் மாநிலங்களுக்கான விருதில், சமூகப் பங்களிப்பு என்ற வகைப்பாட்டில் சிறந்த மாநிலமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு விருது பெற்றுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

சமூகப் பங்களிப்பு என்ற பிரிவில் இந்நாட்டில் விருது பெற்ற ஒரே மாநிலம் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆளுகின்ற தமிழ்நாடு மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் அரசின் சிறந்த ஊரகச் செயல்பாட்டினை எடுத்துக்காட்டக் கூடியதாக உள்ளது என்பதைப் பெருமையோடு இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன், அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைத்தல்மூலம் நிலைத்த வாழ்வாதாரத்தை

ஏற்படுத்துதல் என்கின்ற முயற்சிக்காக 2014-2015 ஆம் ஆண்டுக்கு தமிழ்நாடு தேசிய விருது பெற்றுள்ளது. மாண்புமிகு அம்மா அரசின் ஊரகச் செயல்பாட்டினை பெருமையுடன் எண்ணி மகிழக்கூடிய ஒன்றாகும், அம்மா! மேலும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், தேசிய அளவில் சிறப்பாகச் செயல்படுத்தியதற்காக மத்திய அரசு வழங்கிடும் மாவட்டங்களுக்கான விருதினை 2011-2012 முதல் 2014-2015 ஆண்டு வரை தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, நீலகிரி, தேனி, திருவள்ளூர், புதுக்கோட்டை மாவட்டங்களும், கோயம்புத்தூர் மாவட்டம், காடம்பாடி ஊராட்சி, நாகப்பட்டினம் மாவட்டம், தரணி கோட்டகம் ஊராட்சி, திருச்சிராப்பள்ளி மாவட்டம், எப்.பேழையூர் ஆகிய ஊராட்சிகளும் இந்த தேசிய விருதினைப் பெற்றுள்ளன. இவை யாவும் மாண்புமிகு அம்மா ஆட்சியின் செயல் திறனை, மக்கள் பணியினை எடுத்துக்காட்டுவதற்காகவும், முதன்மை மாநிலமாக தமிழகத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் மாற்றிக் காட்டுவார்கள் என்பதற்கான முன்னோட்டம் என்பதனை பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன், அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, கிராமப்புற மக்களின் நலன் காக்கும் அரசு என்பது அனைவரின் பாராட்டுக்கும், மகிழ்ச்சிக்கும் உரியது. உள்ளாட்சி அமைப்புகளின் சிறந்த செயல்பாட்டினால், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு மக்களாட்சி தத்துவத்திற்கு மணிமகுடமாகத் திகழ்கின்றது.

புரட்சிப் பெண்களின் எழுச்சி முழக்கத்திற்கு, இலட்சிய செயல்பாட்டிற்கு, 50 சதவீதம் இட ஒதுக்கீடு, (மேசையைத் தட்டும் ஒலி) பெண் இனத்திற்குப் பெருமை தரும் அன்னையாய் திகழும் மாண்புமிகு அம்மா அவர்களால் மட்டுமே பெண்மைக்கு இப்பெருமையைத் தர முடியும்.

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாடும், நல்லோரும், போற்றிடும் உலக அரங்கமே உற்று நோக்கிடும் அம்மா உணவகத் திட்டம். ஆலயத்தில் அன்னதானத் திட்டம், பள்ளிக் குழந்தைகளுக்கு காலை உணவு வழங்கும் திட்டம், தடையில்லா

கல்வி வழங்கிட ஆரோக்கியமாய் குழந்தைகள் உருவாகிட, புன்னகையோடு கல்வி பயின்றிட, ஏழ்மையைத் தகர்த்திடும் ஏற்றமிகு திட்டங்கள், இவற்றால் மக்கள் மனம் மகிழ்ந்து மாண்புமிகு அம்மா அவர்களை வாழ்த்துகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாற்றுக் கட்சி தேர்தல் அறிக்கையில்கூட, "அம்மா உணவகத் திட்டத்தை அண்ணா உணவகத் திட்டமாக மாற்றிடுவோம்" என எதிரிகளாலும் ஆசைப்பட்டு, அறிவிக்கப்பட்ட பார் போற்றும் உன்னதத் திட்டம், அண்டை மாநிலத்திலும், மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் அறிவிக்கப்பட்டிருக்கும் திட்டம்.

பேரறிஞர் அண்ணாவைப் பார்த்து கேட்டார்கள், 'ஏன் அண்ணா கடல் நீர் உப்புக் கரிக்கின்றது?' என்று 'ஏழைகள் அழும் கண்ணீர் கடலில் கலப்பதால்' என்று அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் நகைச்சுவையாகச் சொன்னார்கள். ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற அண்ணாவின் வழியில், ஏழைகளின் கண்ணீரைத் துடைத்திட்ட காவல் தெய்வமே மாண்புமிகு அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணாவின் இதயத்தை இரவலாய் கேட்டவர் உண்டு; ஆனால், அண்ணாவின் இதய இலட்சியங்களை நிறைவேற்றிட செயலாற்றி வருபவர்தான் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பூஞ்சோலையில் பூத்திருக்கும் புது மலர்களையும், வானத்தில் பூத்திருக்கும் விண்மீன்களையும் எண்ண முடியாது. அதேபோன்று, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் செயல்படுத்தியிருக்கின்ற எண்ணற்ற நலத் திட்டங்களைப் பற்றி சொல்ல முடியாது; (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு நேரமும், நாட்களும் போதாது; நிலைத்து நிற்கும் வரலாறு அது. கானல் நீரிலே வலை வீச கனவு கண்டவர்கள், காலம் காலமாய் காகிதப் பூ நினைவு கொண்டவர்கள், வரவு-செலவுத் திட்டம் குறித்து கருத்துரைக்கையில், காகிதப் பூ, கானல் நீர் என்றார்கள். சிலர் மக்களின் எண்ணங்களை இயற்கையாக எண்ணாமல், கனவு நிலையில் இருந்தவர்கள் ஆட்சிக் கனவு கண்டார்கள்; அவர்களின் கனவும், எண்ணமும் ஒரு நாளும் பலிக்காது; கனவுடனே என்றும் நின்று விடும். மாண்புமிகு அம்மா அவர்களை எதிர்த்து எக்காளமிட்ட எதிரிகள் இப்போது தமிழ்நாட்டில் எங்கே

உள்ளார்கள் என்பதே தெரியவில்லை. நல்ல இதயம் உள்ளவர்கள் புரட்சிக் கவிஞன் பாடல் வரியால் வரவு-செலவுத் திட்டத்தை வாழ்த்துகின்றார்கள். கருத்துப் பேழை இது; கற்பூரப் பெட்டகம் இது; நாடே மணக்கின்ற நல்ல பல திட்டங்கள் என்று மக்கள் போற்றுகின்றார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நோயுற்ற மக்களின் உடல் நலப் பிரச்சினையா? முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டத்தின்படி, நலம் காக்கும் கடவுளாக மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்றார்கள். இருக்க இடம் இன்றி தவிக்கும் மக்கள் பிரச்சினையா? இருப்பிடப் பட்டா வழங்கி, பசுமை வீடு அளித்திட மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்றார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* திருமணப் பெண்களுக்குப் பொருளாதாரப் பிரச்சினையா? திருமாங்கல்யத்திற்கு 8 கிராம் தங்கம் வழங்கி, படித்த பெண்களுக்கு ரூ.25,000, பட்டப் படிப்பு படித்த பெண்களுக்கு ரூ.50,000 என தொகை வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்றார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* பசிப் பிணியா, அதன் பிரச்சினையா? "தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்" எனும் புரட்சிக் கவிஞனின் பாட்டினைச் செயல்படுத்திட, மாதந்தோறும் 20 கிலோ விலையில்லா அரிசியை ஏழை, எளியோருக்கு வழங்கிட மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்றார்கள். ஏழ்மையில் கல்வி பயில பிரச்சினையா? காலணி முதல் கலர் பென்சில் வரை, சீருடை முதல் கணினி வரை, உதவித் தொகையோடு உயர் கல்வி தொடர, கலைமகள் கடவுளாய் மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்றார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* குறு, சிறு விவசாயிகள் வங்கியில் பெற்ற கடன் பிரச்சினையா? குறு, சிறு விவசாயிகள் வங்கியில் பெற்ற கடன் அனைத்தையும் தள்ளுபடி செய்து, வாழ்வு தரும் வள்ளலாக மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்றார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 1-35

நினைத்ததை முடித்திடும் நீதி தேவதையாய், வெற்றித் திருமகளாய், எதையும் வென்று காட்டுபவராய், எவராலும் வெல்ல முடியாதவராய், தமிழக முதல்வராய், மாண்புமிகு அம்மா அவர்கள் இங்கு வீற்றிருக்கிறார்கள். எத்தனையோ அரசியல் கட்சிகளுக்கு அங்கீகாரம் பெற்றுத் தந்த சரித்திரமாய், தமிழக மக்களின் நலன் காத்திடும் நம்பிக்கை நட்சத்திரமாய், அளவான நிதிப்

பற்றாக்குறையிலும் வரியில்லா வரவு செலவு திட்டத்தை சிந்தித்து வாரி வழங்கியிருக்கின்ற எங்கள் இதய தெய்வமே, தமிழக மக்களுக்கு ஒன்றே குலம், மாண்புமிகு அம்மாவே தெய்வம். (மேசையைத் தட்டும் ஒலி)

உள்ளாட்சித் துறை மற்றும் நகராட்சித் துறையிலும் மற்றும் அனைத்துத் துறைகளிலும் மக்களின் நலன் காத்து ஆளும் மாண்புமிகு அம்மா, எதிர்வரும் உள்ளாட்சித் தேர்தலிலும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு முழு வெற்றி உறுதி. (மேசையைத் தட்டும் ஒலி) மக்களின் பேரன்பால் தொடர் ஆட்சி செய்யும் மக்களைப் பெற்ற மகராசியாம் மாண்புமிகு அம்மா.

அரியலூர் மாவட்டத்திற்கு எத்தனையோ திட்டங்களை வாரி வழங்கியிருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களே, அரியலூர் தொகுதியில் தனி மகளிர் கலைக் கல்லூரி அமைத்திடவும், அரியலூர் மாவட்டத்திலுள்ள கரைவெட்டி பரதூர் பறவைகள் சரணாலயத்தை மேம்படுத்திடவும், இந்தச் சுற்றுலா தலத்தில் சுற்றுலா பயணிகளுக்கு முழுமையான வசதிகளை ஏற்படுத்தித் தரவும் வேண்டுமென தங்கள் பொற்பாதம் பணிந்து வேண்டி எனது உரையை நிறைவு செய்து, அமருகிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விருகை V.N. ரவி அவர்கள்.

***திரு. விருகை V.N. ரவி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொண்டர்களை வாழ்விக்கும் உயர் சக்தி. மாறாத ஒரு சக்தி, மகத்தான ஒரு சக்தி, தீராத பெரும் சக்தி, திராவிடத்து சக்தி, தமிழ்நாட்டு மக்களுக்கு நாளும் அருள்பாலிக்கும் சக்தி, மின்சக்தி, எரிசக்தி, மிகுந்த சக்தியாவினும் தன் சக்தியால் வெல்லும் உயர் சக்தி. விசுவாசிகளைக் காக்கும் வித்தக சக்தி. ஒன்றரைக் கோடி தொண்டர்களின் உயிர் சக்தி. 8 கோடி தமிழர்களின் இதய சக்தி. (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் அம்மா என்னும் அற்புத சக்தியின் திருவடி பணிந்து வணங்குகிறேன்.

வற்றாத ஜீவ நதியாய், வருங்கால வைப்பு நிதியாய், பொற்கால ஆட்சி தரும் புனிதவதி எங்கள் அம்மா. தமிழின் உயிர் எங்கள் அம்மா. தமிழரின் உணர்வு எங்கள் அம்மா. காவேரியில், முல்லைப்

பெரியாறில் தமிழரின் உரிமையை மீட்டு தன்மானம் காத்த தனி அரசி எங்கள் அம்மா.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மனிதராய்ப் பிறப்பது பெரிதல்ல, பிறப்பிலே ஒரு சிறப்பு வேண்டும். வளர்வது பெரிதல்ல, நல்ல ஞானத்தோடு வளர வேண்டும். வாழ்வது பெரிதல்ல, நல்லவற்றிற்கு வழிகாட்டியாக வாழ வேண்டும். சாதித்தல் பெரிதல்ல, சாதனைகள் சரித்திரத்தில் இடம்பெற வேண்டும். அந்த வகையில், சரித்திர சாதனைக்கு சொந்தக்காரார் ஒருவர் உண்டு என்றால், அதுதான் அகிலம் போற்றும் அரிமா, எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

தன் தோளில் தமிழகத்தை காத்து நிற்கும் இமயம், தன் திறத்தால் தமிழகத்தை தலை நிமிர்த்தும் சிகரம், கடவுள் அனுப்பிய மனித தெய்வம், தமிழினமே வணங்கும் புனித தெய்வம் நம் அம்மா. அம்மா என்றால் அழகிய தமிழ்ச் சொல். அம்மா என்றால் அதுதான் அன்பின் பெயர்ச் சொல். அம்மா என்றால் அதுதான் தலைச் சொல். அம்மாவே அனைத்து உயிர்களுக்கும் தாய்ச் சொல்.

இந்துக்களுக்கு புனித நூலாக பகவத் கீதையும், கிருஸ்தவர்களுக்கு புனித நூலாக பைபிளும், முஸ்லிம்களுக்கு புனித நூலாக குர்ரானும் போற்றப்படுவதுபோல் தமிழக மக்களுக்கு அம்மா அவர்கள் அறிவித்த விதி 110 அறிவிப்புகளே புனித நூலாகும். (மேசையைத் தட்டும் ஒலி) உண்ணும்போதும், உறங்கும்போதும் தமிழகம் உச்சரிக்கும் ஒரே பெயர் இன்று அம்மா, அம்மா.

பிற்பகல் 1-40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடைக்கோடி தொண்டனாக இருந்த என்னை, மன்ற செயலாளராகவும், பின்னர் வட்டக் கழகச் செயலாளராகவும், பின்பு பகுதி கழகச் செயலாளராகவும், அதற்குப் பிறகு மாவட்டக் கழகச் செயலாளராகவும், பின்பு தமிழ்நாடு ஜவுளி வாரியத் தலைவராகவும், இவை எல்லாவற்றுக்கும் மேலாக எளிய தொண்டனான என்னை இந்த சட்டமன்றப் பேரவைக்கு சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்ற வாய்ப்பளித்தமைக்கு நானும், எனது தலைமுறையும் எங்கள் உடலில் இறுதி மூச்சு உள்ளவரை நன்றியுடன் தங்கள் புகழ் பரப்பி வாழ்வதே எங்கள்

பாக்கியமாகக் கருதி வாழ்வோம் தாயே. மேலும் இந்த நல்லவேளையில், மாண்புமிகு அம்மா அவர்களின்மீது நம்பிக்கை வைத்து என்னை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த விருகம்பாக்கம் தொகுதி மக்களுக்கு என் ஆயுள் முழுவதும் நன்றி உள்ளவனாய் இருப்பேன். 32 ஆண்டுகளுக்குப் பிறகு, தொடர்ந்து இரண்டாவது முறையாக ஆட்சியிலும், ஆறாவது முறையாக முதலமைச்சராகப் பதவியேற்று, சாதனை படைத்தவர் நம் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இனி வரும் காலங்களில் தமிழகத்திற்கு நிரந்தர முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாளைய தமிழ்ச் சமுதாயம் நல்வாழ்க்கை வாழ்தல் வேண்டும் என்னும் ஒப்பில்லா உயரிய நோக்கத்தோடு, தொலைநோக்குப் பார்வையோடு, தமிழகத்தை வழிநடத்தும் ஒப்பில்லா மனித தெய்வம் நம் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்றால், அது மிகையாகாது.

இன்றைய தினம், 2016-2017 ஆம் ஆண்டிற்கான நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை மீதான மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மக்களின் துயர் துடைக்கக்கூடிய நிதிநிலை அறிக்கையைத் தந்தமைக்கு முதலில் ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தின் சார்பாக பல்லாயிரம் கோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய மாநிலங்களில் தமிழகத்தில் மட்டும்தான் மக்களுக்கு ஆடுகள், மாடுகள், தாலிக்கு தங்கமும், பிள்ளைகளுக்கு மடிக்கணினியும், இருப்பதற்கு பசுமை வீடுகளும், விலையில்லா அரிசியும், மிக்சியும், கிரைண்டரும்-மின் விசிறியும், முதியோருக்கு உதவித் தொகையும், உழவர்களுக்குப் பாதுகாப்புத் திட்டமும், (மேசையைத் தட்டும் ஒலி) உழைப்பவர்களுக்கு காப்பீட்டுத் திட்டமும், ஏழைகளுக்கு வீட்டுமனைப் பட்டாவும், விசைத்தறி நெசவாளர்களுக்குச் சலுகையும் தந்து, இந்தியாவில் இணையற்ற மாநிலம் தமிழகம் என்பதை நிலைநிறுத்திய அற்புதத் தலைவி எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள்தான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்தில் மடிக்கணினி சம்பந்தப்பட்ட ஒரு தகவலைக் கூற விரும்புகிறேன். Facebook நிறுவனர், Mark Zuckerberg சமீபத்தில் ஒரு பேட்டியில் கூறியதாவது: "நான் சிறுவனாக இருக்கும்போது எனது தந்தையின் மடிக்கணினியை எடுத்து பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்த அனுபவம்தான் இன்று Facebook ஆக உலகெங்கும் பரவியுள்ளது. ஆதலால், அமெரிக்காவில் உள்ள பள்ளிக் கல்வி மாணவ மாணவியருக்கு கம்ப்யூட்டர் அறிவை நாம் உடனடியாகத் தர வேண்டும்" என்று கூறியிருந்தார். அதை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவும் வரவேற்றார். ஆனால், நம் மாண்புமிகு அம்மா அவர்கள், 2011-ல் ஆட்சிக்கு வந்தவுடன் பள்ளி மாணவ மாணவியருக்கு மடிக்கணினியைக் கொடுத்து, அடுத்த தலைமுறைக்கு, இளைய தலைமுறையினரைத் தயார் செய்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் தொலைநோக்குப் பார்வையுடன் சிந்தித்து, தற்போதைய பொருளாதாரம், டிஜிட்டல் பொருளாதாரத்தை நோக்கிச் செல்கின்ற காரணத்தால், அதை எதிர்கொள்வதற்கும் மற்றும் அறிவாற்றலால்தான் நாம் வல்லரசு ஆக முடியும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் திடமாக நம்புவதால்தான் இத்தகைய அற்புதமான திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளார்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொலைநோக்குத் திட்டம் தந்து, உள்ளாட்சியை நல்லாட்சியாக மாற்றி, மக்களாட்சியைச் மலரச் செய்த, மகத்தான முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மக்களுக்குச் சொன்னதையும் சொல்லாததையும் செய்து, அமைதி, வளம், வளர்ச்சி என்ற தாரகமந்திரம் கொண்டு, உள்ளாட்சி நிருவாகத்தைத் திறம்பட நடத்தி, இந்திய மாநிலங்களிலேயே பிறர் பார்த்து, வியக்கக்கூடிய திட்டங்களையும், செயல்களையும் செய்து, உள்ளாட்சித் துறையை ஏற்றமும், மாற்றமும் பெறச் செய்தார், நம் மாண்புமிகு அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு உள்ளாட்சி, நகராட்சி நிருவாகத்தில் 24 மணி நேரமும் மக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட சுகாதாரமான குடிநீர் தங்குதடையின்றி கிடைக்கிறது. பாதாளச் சாக்கடைத் திட்டத்தை அண்டை மாநிலங்கள் பார்த்து வியக்கின்றன. சுகாதாரம் மிக்க சமுதாயக்கூடங்கள் கண்டு, பத்திரிகைகள் பாராட்டுகின்றன. இரவைப் பகலாக்கும் மின் விளக்குகள் தரமாகவும், தகுதியான முறையிலும் பொருத்தப்பட்டு மக்களின் ஒட்டுமொத்த

பாராட்டைப் பெற்றதை அனைவரும் நன்கு அறிவார்கள். மழைநீர் சேகரிப்புத் திட்டமும், கழிவுநீர்த் திட்டங்களும் இன்றைக்கு ஆரோக்கியமான முறையில் செயல்பட்டு வருவது தமிழகத்தில்தான் என்பதை இந்தத் தரணியில் மக்கள் சொல்கிறார்கள்.

பிற்பகல் 1-45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பள்ளியில் பந்தியிட்டு, ஆலயத்தில் அன்னமிட்டு, வீடெங்கும் விலையில்லா அரிசி தந்து, தேவாலயம், மசூதிகளிலும் தமிழரின் பசிப் பிணியினைப் போக்கியவர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான். ஆனால், இவை எல்லாவற்றிற்கும் மேலாக சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்கள், தொழிலாளர்கள், ஏழை பங்காளர்கள் வயிறார சாப்பிட தரமான, சுகாதாரமான, சுத்தமான அறுசுவை உணவைத் தந்தார்கள். இல்லை, இல்லை. அம்மா உணவகத்தில் வழங்கப்படும் உணவு ஏழு சுவைகள் கொண்டது. ஏனென்றால், இதுவரை சொல்லப்பட்ட சுவைகள் ஆறு. இந்த ஆறு சுவைகளோடு, மாண்புமிகு அம்மா அவர்களின் அன்பு சுவையும் கலந்து, 7 சுவைகளுடன் வழங்கப்படுவதுதான் அம்மா உணவகம். (மேசையைத் தட்டும் ஒலி) உள்ளாட்சி, நகராட்சி நிருவாகத்தில் செயல்படும் அம்மா உணவகம், தமிழரின் பசி போக்கிய அட்சயபாத்திரம் என்று அனைவரும் பாராட்டுகிறார்கள்.

உலகில் சொல்லப்பட்ட அதிசயங்கள் 7. தாஜ்மகால், பைசா நகர சாய்ந்த கோபுரம், ஈஃபிள் டவர், பிரமிடுகள், சுதந்திர தேவி சிலை, சீனப் பெருஞ்சுவர், தொங்கும் தோட்டம் இவற்றோடு இன்றைக்கு அகிலமே உச்சரிக்கும் எட்டாவது அதிசயம்தான் அம்மா உணவகம்.

நீதிக்கு தலை வணங்கும் மன்னாதி மன்னனுக்கு மகுடம் சூட்டி செங்கோல் பரிசளித்தார்கள் நம் மாண்புமிகு அம்மா அவர்கள். இன்று மக்கள், அந்தச் செங்கோலை மாண்புமிகு அம்மா அவர்களின் கைகளில் நிரந்தரமாக வழங்கியுள்ளார்கள். இன்றைக்கு நகராட்சி நிருவாகம், உள்ளாட்சித் துறையை மழை விழுந்த செம்மண் நிலமாக மணம் வீசச் செய்து மக்கள் மனம் மகிழக்கூடிய துறையாக மாற்றிய பெருமை தாயையே சாரும்.

போயஸ் தோட்டத்து புனிதத் தாயாய், கொடுத்துச் சிவந்த கரங்களுக்குச் சொந்தக்காரராகத் திகழும் அன்னையின்

பெருமையை வடித்துச் சொல்ல வார்த்தைகள் இல்லை, அம்மா! எங்கே நான் இருந்தாலும், எப்படி நான் வாழ்ந்தாலும், மறவாது சொல்லும் ஒரே மந்திரம் அம்மா என்னும் அகிலம் உச்சரிக்கும் திருமந்திரம். (மேசையைத் தட்டும் ஒலி)

உள்ளாட்சியில் வெளிப்படையான நிருவாகம், குடிநீர், அடிப்படைத் தேவைகள், மருத்துவ வசதி, சுகாதாரம், நியாயமான வரி வசூல், நவீன யுக்திகளில் கழிவறை தூய்மை, மேம்படுத்தப்பட்ட சாலைகள், தரமான அம்மா உணவகம். நாடு முன்னேற, நலங்கள் பெருக வேண்டுமென்றால், விதி ஒன்று செய்வோம், ஜனநாயகத்தை சற்று தூக்கி நிறுத்தி, சட்டத்தின் சவுக்கை எத்திக்கும் எடுப்போம் என்கின்ற வார்த்தைகளுக்கு உயிர் கொடுத்து, இன்று உள்ளாட்சித் துறையை துலாக்கோல்போல் தூக்கிப் பிடித்திருக்கும் உலகின் ஒப்பற்ற தாயாக மாண்புமிகு அம்மா அவர்கள் விளங்குகின்றார்கள்.

'செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது'

என்கின்ற குறளை ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தின் சார்பாக மாண்புமிகு அம்மா அவர்களின் மேன்மையான பார்வைக்கு நன்றிப் பெருக்கோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பெண்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் 50 சதவிகிதம் இட ஒதுக்கீடு வழங்கிய வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டத்தை இயற்றியவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள். பெண்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சியில் ஒரு பெரும் திருப்புமுனையை மகளிர் சுய உதவிக் குழுக்கள்மூலம் ஏற்படுத்தித் தந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். தமிழகத்தில் 6 இலட்சத்து 8 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்களின் 92 இலட்சத்து 9 ஆயிரம் மகளிர் உறுப்பினர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஐந்து வருடங்களில் 25 ஆயிரத்து 933 கோடி ரூபாய் கடன் உதவி வழங்கி, இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் செய்யாத ஒரு மகத்தான சாதனையைப் படைத்துள்ளார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் 2003 ஆம் ஆண்டில் "தூய்மை கிராமம்" என்ற திட்டத்தினை தொடங்கினார்கள். இந்த திட்டம்தான் இன்றைக்கு மத்திய அரசின் "தூய்மை இந்தியா திட்டத்தின்" முன்னோடி திட்டம் என்று சொன்னால், அது

மிகையாகாது. மேலும், தூய்மையான கிராமங்கள் மற்றும் நகரங்களை உருவாக்கும் நோக்கத்துடன் ‘தூய்மைத் தமிழகத்திற்கான இயக்கத்தினை’ மாண்புமிகு அம்மா அவர்கள் தொடங்கியுள்ளார்கள். இதன்மூலம் தமிழகத்தின் சுகாதாரம் மேம்படும் மற்றும் திறந்தவெளியில் மலம் கழிக்கும் பழக்கம் அறவே ஒழிக்கப்படும்.

கனிம வளம் மீட்டது, கலை உலகம் காத்தது, ஆக்கிரமிப்பு மற்றும் அபகரிப்பு இல்லாத அமைதிப் பூங்காவாக தமிழகத்தை கம்பீரமாய் கட்டி எழுப்பியது, அடிப்படைக் கட்டமைப்பை மேம்படுத்தி, தொழிற்துறையை வியக்கத்தக்க அளவிலான வளர்ச்சிக்கு அழைத்துச் சென்றது, அரசைத் தேடி மக்கள் வரும் நிலை மாறி, இன்றைக்கு ‘மக்களைத் தேடி அரசு’ என்னும் நிலையை மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கித் தந்துள்ளார்கள்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தினை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மிகச் சிறப்பாகச் செயல்படுத்தியதை அங்கீகரிக்கும் வகையில் மத்திய அரசு 2015-2016 ஆம் ஆண்டில் சிறந்த செயல்பாடுகளை வெளிப்படுத்தியதற்கான விருதினை அளித்துள்ளது.

சென்னை மாநகர மக்களின் எதிர்காலத் தேவையினை முன்னதாகவே அறிந்து, தொலைநோக்குப் பார்வையோடு புதிய வீராணம் திட்டத்தினை 720 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒப்பந்த காலத்திற்கு முன்பாகவே வெற்றிகரமாக நிறைவேற்றி, நாள் ஒன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் குடிநீர் நிரந்தரமாகக் கிடைத்திட வழிவகை செய்தவர் நம் மாண்புமிகு அம்மா அவர்கள்.

பிற்பகல் 1-50

கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே 206 கிலோ மீட்டர் தூர சாலைகள் 204 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டன. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் 666 கிலோ மீட்டருக்கு 1,654 கோடி ரூபாய் செலவில் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் (குறுக்கீடுகள்) 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினருடையது கன்னிப் பேச்சு. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் என்ன புதியதாகவா சொல்கிறார்? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினரது கன்னிப் பேச்சு. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) குற்றச்சாட்டு இல்லாமல் பேசுங்கள்.

திரு. விருகை V.N. ரவி: இருப்பதைத்தானே சொல்கிறேன். 117-க்குக் கீழே இருந்தால் 'மைனாரிட்டி' என்பது எல்லோருக்கும் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் (குறுக்கீடுகள்) 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் (குறுக்கீடுகள்) நடைபெற்ற முறைகேடுகள் குறித்து, உயர் நீதிமன்றத்தால் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டு. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எதிர்க்கட்சி உறுப்பினர்கள், பண்போடு பேசுங்கள். எச்சரிக்கை செய்கிறேன். பண்போடு பேசுங்கள். (குறுக்கீடுகள்)

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மைனாரிட்டி ஆட்சி என்று பேசுவதை எங்கள் கட்சி உறுப்பினர்கள் ஆட்சேபிக்கின்ற ஒரு சூழ்நிலை தொடர்ந்து இருந்துகொண்டிருக்கின்றது. எனவே, இந்த அவையின் மூலமாக, தலைவர் அவர்கள் மூலமாக எங்கள் கட்சி உறுப்பினர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புவது, இனிமேல் 'மைனாரிட்டி ஆட்சி' என்று சொல்கின்றபோது, அதைப்பற்றி யாரும் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. அது குறித்து நாம் சர்ச்சை ஆக்க வேண்டிய அவசியமில்லை. நேரத்தை வீணடிக்க வேண்டிய அவசியமில்லை. காரணம், மைனாரிட்டி ஆட்சி நடத்தினாலும், முழுமையாக ஐந்தாண்டுகள் ஆட்சி நடத்தியிருக்கிறோம். அதுதான் நமக்குப் பெருமை. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விருகை V.N. ரவி அவர்கள்.

திரு. விருகை V.N. ரவி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் நடைபெற்ற முறைகேடுகள் குறித்து உயர் நீதிமன்றத்தால் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டு, 99 வார்டுகளுக்கான தேர்தலை உயர் நீதிமன்றம் இரத்து செய்தது. அந்த நிகழ்வு இந்திய வரலாற்றிலேயே ஜனநாயகத்திற்கு ஏற்பட்ட ஒரு கருப்புச் சுவடு.

ஆனால், 2011-ல் இந்த தமிழ் மண்ணே வியக்கின்றவகையில் தேர்தல் நடத்தி, மக்களாட்சி, உள்ளாட்சி, நல்லாட்சி என்று மலரச் செய்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டு மக்களுக்கும், தமிழ் மக்களின் வாழ்வுக்கும் தன் வாழ்வையே தாரை வார்த்துத் தந்த தங்கத் தலைவியே! உம் புகழை பொதி சுமந்து புதுக்காலம் நிற்கிறது; வரலாற்றை வடித்தெடுத்து சங்கத் தமிழ் துடிக்கிறது; காலம் மாறிப் போகலாம், காற்றும் மாறி வீசலாம். ஆனால், நியாயத் தராசுகளில் மட்டும் அநீதியை நிறுத்த முடியாது. அது அக்கிரமங்களை வேடிக்கை பார்க்காது. முடியும் என்பதில் முற்றுப்புள்ளி வைத்து, அயராத உழைப்பை அர்ப்பணித்து, வீராணத்தை சென்னைக்கு நீராக்கி, வீரப்பனை மண்ணுக்கு இரையாக்கி, விலையில்லா அரிசியை மக்களுக்கு உணவாக்கிய கற்பகத் தருவே! தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) உம் அரசாட்சியில் யாம் வாழ்கின்றோம் என்பது எங்களின் பிறவிப் பயன் அல்லவா? உங்களைப்பற்றி எழுதிச் சொல்ல எழுத்துகள் இல்லை, பேசி விளக்க பாஷைகள் இல்லை. நாளைய பாரதம் உங்கள்வசம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது விருகம்பாக்கம் தொகுதிக் கோரிக்கைகளைத் தங்கள் முன்னே சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எழுதி வைத்துள்ள கோரிக்கைகளைக் கொடுங்கள். நீங்கள் பேசியதாக அவைக் குறிப்பில் பதிவு செய்து கொள்ளலாம். முக்கியமான கோரிக்கைகள் ஒன்றிரண்டை மட்டும் சொல்லுங்கள்.

திரு. விருகை V.N. ரவி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கெல்லாம் 20 நிமிடங்கள் பேச அனுமதி கொடுக்கிறீர்கள். எனக்கும் அனுமதி கொடுக்க வேண்டுமென்று பணிவாக வேண்டுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *சரி. இரண்டு கோரிக்கைகளை சொல்லிவிட்டு, மற்றவற்றைக் கொடுங்கள். அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளலாம்.*

திரு. விருகை V.N. ரவி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள், அம்மா உணவகம், அம்மா குடிநீர், அம்மா மருந்தகம், அம்மா சிமெண்ட், அம்மா திட்டம் என பல்வேறு மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்தி, மக்களைப் பாதுகாத்து வருகிறார்கள். அதுபோன்று ஏழையெளிய மக்களும் சிறந்த மருத்துவ சிகிச்சை பெறும்வகையில் என்னுடைய விருகம்பாக்கம் தொகுதியில் ஒவ்வொரு வார்டிலும் 'அம்மா கிளினிக்' தொடங்கிட வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வேண்டுகிறேன்.*

1) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விருகம்பாக்கம் தொகுதியை ஒட்டி அமைந்துள்ள அடையாறு ஆற்றின் கரையோரங்களில் ஏராளமான ஏழை மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். மழை வெள்ளக் காலங்களில், அடையாறு ஆற்றில் பெருக்கெடுத்து ஓடும் வெள்ள நீர், குடியிருப்புகளில் புகுவதைத் தடுக்கும் வகையில் அடையாறு ஆற்றின் இரு கரைகளிலும் தடுப்புச் சுவர் அமைத்துக் கொடுக்குமாறு மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு சமர்ப்பிக்கின்றேன்.

2) விருகம்பாக்கம், ஆற்காடு சாலையில் தொடங்கி, கோயம்பேடு மார்க்கெட் பேருந்து நிலையம் வரை சென்றடையும் காளியம்மன் கோயில் சாலையில் தினமும் பல்லாயிரக் கணக்கானோர் கோயம்பேடு மார்க்கெட் செல்லும் அரசுப் பேருந்து நிலையத்திற்குச் செல்கின்ற காரணத்தினால், ஆய்வில் உள்ள இந்தச் சாலை விரிவாக்கம் செய்யும் பணியை விரைந்து செய்து முடிக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1-55

3) விருகம்பாக்கம் தொகுதியில் உள்ள கே.கே. நகர் அரசு மருத்துவமனையைச் சுற்றி 3 சட்டமன்றத் தொகுதிகள் அமைந்துள்ளன. அதுமட்டுமல்லாமல், இந்தப் பகுதியில் ஏழையெளிய நடுத்தர மக்கள் அதிகம் வசிக்கின்ற காரணத்தினால், இந்த மருத்துவமனையை அதிநவீன வசதிகள் கொண்ட மருத்துவமனையாக மாற்றித் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களிடம் சமர்ப்பிக்கிறேன்.

4) விருகம்பாக்கம் தொகுதியில் உள்ள ஆற்காடு சாலையில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ள காரணத்தினால் இந்தச் சாலையை விரிவாக்கம் செய்து மற்றும் வடபழனி பேருந்து நிலையத்திலிருந்து ஆழ்வார்திருநகர் வரை உயர்மட்ட மேம்பாலம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவுடன் வேண்டுகிறேன்.

5) விருகம்பாக்கம் தொகுதியில் ஏழை மற்றும் நடுத்தர மக்கள் அதிக அளவு வசிக்கின்ற காரணத்தினால், புதிய கலைக் கல்லூரி அமைத்துத் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான பார்வைக்கு சமர்ப்பிக்கிறேன்.

6) விருகம்பாக்கம் தொகுதிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் உள்ள ஏழையெளியவர்களுக்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின்மூலம் மனை ஒதுக்கீடு ஆணை வழங்கி, கிரய ஆவணம் வழங்கப்பட்டு, பட்டா வழங்கப்படாமல் உள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லெண்ணத்தின் வாயிலாக மனை ஒதுக்கீடு பெற்ற ஏழையெளியவர்கள் சிலர் அந்த மனையை குடும்ப சூழ்நிலை காரணமாக வேறு ஏழையெளியவர்களுக்கு விற்பனை செய்துவிட்டார்கள். புதியதாக வாங்கியவர்களுக்கு நீண்ட நாட்களாக பெயர் மாற்றம் செய்யப்படாமல் இருந்து வருகின்றது. மாண்புமிகு அம்மா அவர்கள் கருணை உள்ளத்தோடு அவர்களுக்குப் பெயர் மாற்றம் செய்து தந்தால் அனைவரும் வாழ்நாள் முழுவதும் நன்றிக் கடன் பட்டவர்களாக இருப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அற்புதங்கள் பல புரிந்து, அனுதினமும் எங்களைப் போன்ற தொண்டர்களைக் காத்து, இந்தப் பூலோகத்தை ஆளும் புவனேஸ்வரி தாயாகத் திகழும் தாயின் திருப்பாதம் வணங்கி இந்த நல்ல வாய்ப்பிற்கு நெஞ்சம் நிறைந்த நன்றி சொல்லி,

அமர்கின்றேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து அவர்கள்.

***திரு. வி.எஸ். காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் தினந்தோறும் வணங்கும் என் காளியம்மன் தாயை வணங்கி, வள்ளலார் அவர்களையும் வணங்கி, அகஸ்தீஸ்வரர் அவர்களையும் வணங்குகிறேன். எனக்கு முதன் முதலாக பேச வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் மீண்டும் ஒரு முறை என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அகில இந்திய காங்கிரஸ் தலைவர் அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், இளம் தலைவர் ராகுல் காந்தி அவர்களுக்கும், மாண்புமிகு டாக்டர் கலைஞர் அய்யா அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் தளபதி அவர்களுக்கும், எனது அரசியல் குருவும், தன்மானத் தலைவருமான ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தாராபுரம் தொகுதி, வீராச்சிமங்கலம் கிராமத்தில், விவசாயக் குடும்பத்தில், சென்னியப்பன்-வள்ளியம்மாள் அவர்களுக்கு மகனாகப் பிறந்த நான் 30 ஆண்டுகளுக்கும் மேலாக இந்திய தேசிய காங்கிரஸின் பல பொறுப்புகளை வகித்து, மேலும் தொடர்ந்து 15 வருடங்களாக நகரத் தலைவராகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றேன். 1986 ஆம் ஆண்டு முதல் வீராச்சிமங்கலம் கிராம ஊராட்சி மன்றத் தலைவராகவும் தொடர்ந்து 3 முறையாக மக்கள் நல்லாதரவோடு அப்பகுதியில் பணியாற்றிக்கொண்டிருக்கின்றேன்.

கடந்த 55 ஆண்டுகளுக்குப் பின்பு முதல் முறையாக தாராபுரம் தொகுதியை காங்கிரஸ் பேரியக்கத்திற்கு ஒதுக்கித் தந்த டாக்டர் கலைஞர் அய்யா அவர்களுக்கும், அதற்கு வழிவகை செய்த தளபதி அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத்

தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு இந்தத் தொகுதியை பெரிதும் போராடி பெற்றுத் தந்த தன்மானத் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்களுக்கும் மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்திய விடுதலைப் போரிலும், பூமிதான இயக்கத்திலும் பங்கெடுத்து, காந்தியவாதியான எனது தாத்தா காங்கிரஸ் பழனியாண்டி அவர்களையும், இம்மாமன்றத்தில் 1967 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களுடைய ஆட்சியிலும், தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலும், தாராபுரம் சட்டமன்றத் தொகுதி பெண் உறுப்பினராக 2 முறை பணியாற்றிய எனது அத்தை V.P. பழனியம்மாள் அவர்களையும் இந்த வேளையில் நினைத்துப் பார்க்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கர்மவீரர் காமராஜர் அய்யா அவர்களும், மாண்புமிகு கக்கன் அய்யா அவர்களும் எங்கள் இல்லத்திற்கு வருகை தந்து எங்களைப் பெருமைப்படுத்தியதையும் இந்தப் பேரவையின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்வதில் பெருமைப்படுகின்றேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும் எங்கள் இல்லத்திற்கு வருகை தந்து எனது அக்கா மகளுக்கு தேன்மொழி என்று பெயர் வைத்துள்ளார்கள். அந்தப் பெண் அடுத்த வீட்டுக்குச் செல்லாமல் எங்கள் வீட்டு மருமகளாக ஏற்றிருக்கிறேன் என்பதை பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. வி.எஸ். காளிமுத்து.

திரு. வி.எஸ். காளிமுத்து: மாண்புமிகு முன்னாள் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களின் கைகளால் தொடங்கிவைக்கப்பட்ட அரசியல் வாழ்க்கையில் 15 ஆண்டுகள் பஞ்சாயத்துத் தலைவராக இருந்தபோது 16 விருதுகளைப் பெற்றிருக்கின்றேன். முதன்முதலாக பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் விருதும், டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் விருதும், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் விருதும், டாக்டர் கலைஞர் அவர்கள் விருதும் ஆக மொத்தம் 16 விருதுகளைப் பெற்றிருக்கின்றேன். என்னை தாராபுரம் சட்டமன்ற உறுப்பினராகத்

தேர்வு செய்து, 10,017 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்த தாராபுரம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், கூட்டணிக் கட்சிப் பொறுப்பாளர்களுக்கும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் மாவட்ட பொறுப்பாளராக இருந்த திரு. கே. தென்னரசு அவர்களுக்கும், திரு. வி.எஸ்.என். ஆறுச்சாமி அவர்களுக்கும், கற்பகவள்ளி அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது நெஞ்சில் நீங்கா தலைவர் அமரர் திரு. ராஜீவ் காந்தி அவர்களின் கனவால் உருவான பஞ்சாயத்து ராஜ் சட்டம், இன்றிலிருந்து 23 ஆண்டுகளுக்கு முன்பு அன்றைய பாரதப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களால் நிறைவேற்றப்பட்டது. இந்திய அரசியலமைப்புச் சட்டம், 243 ஆவது பிரிவின்படி, கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக உள்ளாட்சி அமைப்புகள் மூன்றாவது நிலையை அடைந்துள்ளதை எண்ணிப் பெருமைப்படுகின்றோம். ஆகவே, இன்று மகாத்மா காந்தி முன்மொழிந்த கிராம சுயராஜ்யத்தை அடைந்துவிட்டோம் என்ற பெருமையை இந்நாடு அடைந்துள்ளது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி 27 முக்கிய அதிகாரங்களை உள்ளாட்சி அமைப்புகளுக்கும் மாநில அரசு வழங்க வேண்டுமாய் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இதற்கான நிதி ஆதாரத்தை முக்கிய அம்சமாகக் கருதிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். 2016-2017 ஆம் ஆண்டில் ஊரக வளர்ச்சித் துறைக்கு ரூ.21,156.58 கோடியும், நகராட்சி நிருவாகத்திற்கு ரூ.11,820 கோடியும் ஒதுக்கியதற்காக மிக்க பெருமிதமும், மகிழ்ச்சியும் அடைகின்றேன். இதில் தாராபுரம் நகர வளர்ச்சித் திட்டப் பணிகளுக்குத் தேவையான நிதி ஆதாரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்க வேண்டுமாய் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு முன்னுரிமை அளித்துவருவது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். தாராபுரம் நகராட்சியில், பாதாள சாக்கடைகள் 2 வார்டுகளில் அமைக்கப்பட்டுள்ளதால், அந்த வார்டுகள் மிகவும் தூய்மையாக உள்ளன. எனவே, இதேபோன்று தாராபுரம் நகராட்சி முழுவதிலும் பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்திட நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், கிராம ஊராட்சிகளிலும் அதிகமான கழிவுநீர் வெளியாகும் பகுதிகளில் பாதாள சாக்கடை

அமைக்கும் திட்டத்தைச் செயல்படுத்தித் தந்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்றும், அதனை அமைத்துத் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், சிவகங்கை மாவட்டம், காரைக்குடி நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றித் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

தாராபுரம் நகராட்சியில் குடிநீர் பிரச்சினை உள்ளது. அமராவதி ஆற்றில் தண்ணீர் இல்லாதபோது வாரத்திற்கு ஒரு முறைதான் தண்ணீர் கிடைக்கிறது. எதிர்காலத்தில் தண்ணீர் பிரச்சினை கடுமையாக இருக்கும். ஆகவே, 2016-2017 ஆம் ஆண்டில் தங்கள் அரசு நகர்ப்புற குடிநீர் விஸ்தரிப்புப் பணிகள் திட்டத்தின்கீழ் திருமூர்த்தி அணையிலிருந்து கூட்டுக் குடிநீர் திட்டத்தைச் சேர்த்து, தாராபுரம் தொகுதியில் குடிநீர் பிரச்சினையைப் பூர்த்தி செய்து தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

காவேரி கூட்டுக் குடிநீர் திட்டம், phase II நடைபெற்று வருகிறது. இத்திட்டம் விரைவில் முடிவிற்கு வந்தால், தாராபுரம் பகுதியிலுள்ள கிராமப்புறங்களில் உள்ள குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க ஏதுவாக இருக்கும் என்பதை எனது கோரிக்கையாகத் தங்களிடம் சமர்ப்பிக்கின்றேன்.

ஊராட்சிகளில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களுக்கான சம்பளம் ரூ.3,500/-ம், water man-களுக்கு சம்பளம் ரூ.2,500/-ம் வழங்கப்பட்டு வருகிறது. இது அவர்களுக்குப் போதுமானதாக இல்லை என்பதால், அவர்களை முழு நேரப் பணியாளர்களாக்கி, அவர்களுக்கு சம்பள உயர்வு தருமாறும் தங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மேலும், பஞ்சாயத்து செயலாளர்கள் முழு நேரப் பணியாளர்களாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் தகுந்த ஊதியம் வழங்குமாறு தங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் 100 நாட்கள் வேலை பஞ்சாயத்துகளில் மட்டும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. பேரூராட்சிப் பகுதிகளில் உள்ள கிராமப்புற மக்களும் இத்திட்டம் வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆகவே, தாங்கள் ஆவன செய்து, பேரூராட்சிகளில் உள்ள கிராமப்புற ஏழை மக்களும் இத்திட்டத்தினால் பயன்பெறும் வகையில் இதனைச் செயல்படுத்த வேண்டும் எனவும் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப் பஞ்சாயத்துக்களில் மின் விளக்குகளைப் பழுதுபார்ப்பதற்கு மின்சாரத் துறையில் ஆட்கள் போதாமல் உள்ளதால், அதற்கு உண்டான மாற்று வழியை ஏற்பாடு செய்து தருமாறும் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-05

தூய்மை பாரதம் திட்டத்தின்கீழ் தாராபுரம் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் தனிநபர் இல்லக் கழிப்பறை அமைப்பதற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து தருமாறும் கேட்டுக்கொள்கிறேன். பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் கட்டப்படும் வீடுகளுக்கு நிதியுதவியாக ரூபாய் 1.20 இலட்சத்திலிருந்து 1.70 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்திருப்பதற்கு மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தின்கீழ் வரும் நிதி ஆண்டில் எங்கள் தொகுதியில், ஆதி திராவிடர் மற்றும் இருளர்களுக்கு அதிக வீடுகள் ஒதுக்கி தருமாறும் கேட்டுக்கொள்கிறேன். தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் சுகாதார வளாகம் கட்டப்படுவதற்கும் முன்னுரிமை அளித்திருக்கிறீர்கள். தாராபுரம் தொகுதியில் முதல் கட்டமாக அப்பணிக்காக 5 சுகாதார வளாகங்களை ஒதுக்கித் தருமாறும் தங்களிடம் கேட்டுக்கொள்கிறேன். அமராவதி ஆற்றில் தடுப்பணை அமைத்து குடிநீர் ஆதாரத்தை அதிகப்படுத்தித் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன். பெரடியம், சங்கண்டம்பாளையம், அக்கரப்பாளையம் ஆகிய பகுதிகளில் முதல் தவணையாக 3 தடுப்பணைகள் அமைத்துத் தருமாறும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர்கள் அதிகமாக குடியிருக்கும் பகுதிகளிலும் சமுதாயக் கூடங்கள் அமைப்பதற்கு முன்னுரிமை தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கிராமப் பகுதிகளில் குடிநீர் மேல்நிலைத் தொட்டிகள் அமைப்பதற்கும், பழுதடைந்துள்ள மேல்நிலைத் தொட்டிகளை மாற்றுவதற்கும் ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். மூலனூர் ஊராட்சி ஒன்றியத்தில் கிராம மக்கள் அதிகமாக வாழும் பகுதியில் கலை அரங்கம் வேண்டும் என்று கேட்கிறார்கள். அதை அமைப்பதற்கும் அனுமதி அளிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

தாராபுரம் தொகுதியிலேயே தாராபுரத்தில் உள்ள அரசு மருத்துவமனைதான் மிகப் பெரியதாக உள்ளது. அங்கு நவீன

வசதிகளை தந்து, தரம் உயர்த்தி தருமாறும் கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில், இப்பகுதியைச் சார்ந்த மக்கள் விபத்துக்குள்ளாகியும், பிற சிகிக்சைக்காகவும் கோவைக்கோ அல்லது திருப்பூருக்கோ செல்ல வேண்டியுள்ளது. தூரம் அதிகமாக உள்ளதால், சில சமயங்கள் போகும் வழியிலேயே உயிர் இழப்பும் ஏற்படுகிறது. மேற்கூறிய இவற்றை கருத்தில் கொண்டு தாங்கள் நவீன சிகிக்சை கருவிகளைக் கொண்டு, மருத்துவமனையை நவீனப்படுத்தித் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன். அங்கே கட்டட வசதிகள் அனைத்தும் இருக்கின்றது. கருவிகள் மட்டும் தந்து உதவினால், நன்றாக இருக்கும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மிக முக்கியமான கோரிக்கையாக தாராபுரம் தொகுதியில் அரசு கலைக் கல்லூரியும், அரசு தொழிற் கல்லூரி ஒன்றும் ஏற்படுத்தித் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன். குளத்துபாளையம் கூட்டுறவு நூற்பாலை 50 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. நீண்ட நெடும் நாட்களாக செயல்படாமல் உள்ளது. ஆகவே, அந்த மில்லினை தொழிற்கூடமாகவோ அல்லது மில்லினை மீண்டும் இயக்கி வைத்தால் அங்கு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைத்து நல்ல தொழிலும் அமையும் என்பதையும் தங்கள் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் பள்ளிகளுக்குச் செல்லும் குழந்தைகளுக்கு, பள்ளி நேரங்களுக்குப் போதுமான பஸ் வசதிகள் இல்லை. அதையும் ஏற்படுத்தித் தருமாறும் தங்கள் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன். வீட்டுமனை இல்லாத ஆதி திராவிடர்களுக்கும் வீட்டுமனை பட்டா வழங்கி, அவர்களுக்கும் குடியிருப்பு மனை அமைத்துத் தருவதற்கும் தங்கள் அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். தாராபுரம் தொகுதி, வடதாரை பகுதியிலும் காமராஜபுரம் மற்றும் இரண்டு, மூன்று வார்டுகளில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் 2000 குடும்பத்திற்கு மேல் 100 ஆண்டுகளாக வாழ்ந்து வருகிறார்கள். இவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்குவதற்கும் அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

உள்ளாட்சி நிர்வாகம் நாட்டிலே மிக முக்கியமான பங்கு வகிப்பதால், அவற்றை நிருவகிக்கும் அலுவலர்களை மாநகராட்சி ஆணையாளர்கள், நகராட்சி ஆணையாளர்கள், பேரூராட்சி செயல்

அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்களை தாங்கள் மாதத்திற்கு ஒரு முறை சீராய்வுக் கூட்டம் நடத்துமாறும், சிறந்த நிகழ்ச்சி நடத்தி அவர்களுக்கு செய்ய வேண்டிய பணிகள் குறித்து நேரடியாக ஆய்வு செய்யுமாறும் தங்கள் மூலமாக பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

குண்டலம் ஒன்றியப் பகுதி, ஒரு வறட்சி பகுதியாக இருப்பதால் பரம்பிக்குளம் ஆழியாறு திட்ட தண்ணீர் கடைமடைப் பகுதி வரை சீரான அளவுக்குக் கிடைப்பதில்லை. கடைமடைப் பகுதி வரை கிடைப்பதற்கு ஆவன செய்தால், குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன். உப்பாறு அணையில் பாசனத்திற்காக பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் செயல்பட்டு, பாதியிலேயே இருக்கின்றது. அதையும் கூடிய விரைவில் முடித்துக் கொடுத்தால் அங்கு 10,000 குடும்பங்கள் பயன்பெறும் என்பதையும் தங்கள் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன். தாராபுரம் தொகுதிக்குட்பட்ட மூலனூர் ஒன்றியத்தில் முருங்கைக்காய் அதிக விளைச்சல் தருவதால் அதைப் பதப்படுத்தும் நிலையம் அமைத்து தருமாறும், அதிக விளைச்சல் தரும் கன்னிவேலிக்காய் விதைகளை அரசு விலை நிர்ணயம் செய்து ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் மூலமாக கொள்முதல் செய்யுமாறும் தங்கள் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன்.

தாராபுரம் தொகுதியில் விளையும் கொப்பரைத் தேங்காயை விவசாயிகளிடமிருந்து அரசே நல்ல உயர் விலை கொடுத்து வாங்கிக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறேன். தாராபுரம் தொகுதியில் உள்ள நல்லதங்காள் ஓடை நீர்த்தேக்க அணைக்கு மழைக்காலங்களில் வீணாகும் சண்முக நதி, அமராவதி நீரை இணைக்கும் திட்டத்தை நிறைவேற்றித் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன். அமராவதி அணையில் வண்டல் மண் அதிகமாகப் படிந்திருப்பதால், அணையை ஆழப்படுத்தும் திட்டத்தையும் விரைவில் நிறைவேற்றி தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் குளித்துறை ஆற்று கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ், 1992 ஆம் ஆண்டு முதல் தினக்கூலி பணியாளராகப் பணிபுரியும் 19 பேரை நிரந்தரப் பணியாளராக உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி பணியமர்த்த வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நகர்ப் பகுதிகள் மட்டுமல்லாமல், கிராமப் பகுதிகளிலும் அனுமதி பெறாமல் மனையிடங்கள் பெருமளவு ஏற்பட்டுள்ளது. பொதுமக்கள், தங்கள் அறியாமையின் காரணமாக அங்கீகாரம் பெறாத மனையிடங்களில், வீடுகளைக் கட்டிவிட்டு, எவ்வித அடிப்படை வசதிகளையும் பெற இயலாத நிலையில் தவித்து வருகிறார்கள். அப்படி பாதிக்கப்பட்டவர்களில் அதிகமானவர்கள் நடுத்தர மற்றும் ஏழை மக்களேயாவார்கள். எனவே, அங்கீகாரமற்ற மனையிடங்களில் வீடு கட்டி வசித்து வருபவர்களுக்கு அடிப்படை வசதிகள் கிடைக்கச் செய்வதற்கும், அவர்களுடைய மனையிடத்தையும் வரன்முறைப்படுத்த வேண்டுமாய் எனது கோரிக்கையை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக இந்த அவையில் முன்வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு இங்கு பேச வாய்ப்பளித்த அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது பல கோரிக்கைகளை வைத்தார்கள். அதிலே பாதாளச் சாக்கடைத் திட்டத்தைப் பற்றி பேசினார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் அனைத்து நகரங்களிலும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அறிவுறுத்தியுள்ளார்கள். எனவே, தாராபுரம் நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த 46 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. நிதியாதாரம் நிறைவு செய்யப்பட்டபின், முன்னுரிமை அடிப்படையில் இந்நகரில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்துவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், குடிநீர்ப் பிரச்சினையைப் பற்றி சொன்னார்கள். குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தளவில் தாராபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, தாராபுரம் நகராட்சிப் பகுதியில் 3 நாட்களுக்கு ஒரு முறை 96 லிட்டர் குடிநீர் ஒரு நபருக்கு—96 LPCD *வழங்கப்படுகிறது. அதேபோல பேரூராட்சிகளிலே 70 லிட்டரும், 3 நாளைக்கு ஒரு முறை நகராட்சியிலும் வழங்கப்படுகிறது. அதேபோல, நாள் ஒன்றுக்கு 70 லிட்டர் பேரூராட்சிகளில் வழங்கப்படுகிறது.*

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். கூட்டுக் குடிநீர் திட்டம், அங்கிருக்கக்கூடிய பிரச்சினையை நீங்கள் குறிப்பிட்டு எழுதிக் கொடுத்தால், அந்தப் பகுதியினுடைய குடிநீர்ப் பிரச்சினை தீர்த்துவைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தைப் பற்றி பேசினார்கள். அந்தத் திட்டம், மத்திய அரசாங்கத்தில் காங்கிரஸ் ஆட்சி இருக்கும்போது போட்டதுதான். பேரூராட்சிக்கு அதை விரிவுபடுத்த வேண்டுமென்று சொன்னீர்கள். ஊராட்சிகளுக்கு, கிராமப் பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்பட வேண்டுமென்றால், அதை மத்திய அரசாங்கம்தான் செய்ய வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, காரைக்குடி நகராட்சியைப் பற்றி உங்கள் தலைவர் அவர்கள் சொல்லி, நீங்கள் கேட்டீர்கள் என்று நினைக்கின்றேன். காரைக்குடி நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ரூ.112.53 கோடி நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, 26-11-2015 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. பணிகளைத் துவங்க மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவை வழங்கியுள்ளார்கள். இருந்தாலும், பசுமை தீர்ப்பாயத்தால் தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அந்த வழக்கைக்கூட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வேகமாக முடிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். கூடிய விரைவில் அந்த வழக்கு முடிந்து, திட்டம் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி. கே. மோகன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தென்னை விவசாயிகளால் கொப்பரைத் தேங்காய், தாராபுரம் பகுதியில் அதிகமாக உற்பத்தி செய்யப்படுவதாகச் சொன்னார். மாண்புமிகு அம்மா அவர்களால் தென்னை விவசாயிகளுக்கு வளம் சேர்க்கின்றவகையில் 20 மாவட்டங்களில், 45 இடங்களில் கொப்பரைக் கொள்முதல் மையங்கள் அமைக்கப்பட்டு, விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றது. அதன்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற கோரிக்கை, தாராபுரம் பகுதி விவசாயிகள் வேண்டுகோள் வைக்கும்பட்சத்தில், அங்கேயும் ஒரு மையம் திறக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, தாராபுரம் மருத்துவமனைக்கு இன்னும் நவீன கருவிகளெல்லாம் வழங்கி மேம்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். அதோடு, அவர்கள் பேசுகின்றபோது, பொதுவாக மேல் சிகிச்சைக்கு நோயாளிகள் செல்கின்றபோது இறந்துவிடுகிறார்கள் என்றார். Inter facility transfer-ஐ பொறுத்தவரையில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆட்சியிலே தற்போது ஆம்புலன்ஸ்களினுடைய எண்ணிக்கை 750 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திற்குமே ventilator and multi-parameter பொருத்தப்பட்ட well-equipped ஆம்புலன்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. ஒரு மருத்துவமனையிலிருந்து இன்னொரு மருத்துவமனைக்குச் செல்வதற்கு-Inter facility transfer, கர்ப்பிணிப் பெண்களைக் கொண்டுவருவதற்கும், அதுமட்டுமல்லாமல் ஒரு மருத்துவமனையிலிருந்து இன்னொரு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்குச் செல்வதற்கு, மருத்துவமனையிலே ICU-விலே இருப்பதுபோன்ற அத்தனை வசதிகளுடன் கூடிய ஆம்புலன்ஸ் இருக்கிறது. அந்த வாகனத்தில்தான் நோயாளிகள் Inter facility transfer செய்யப்படுகிறார்கள். அதுபோன்ற நிகழ்வு ஏற்படுவதற்கு

வாய்ப்பு இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக இம்மன்றத்தில் பதிவு செய்கிறேன்.

பிற்பகல் 2-15

தாராபுரம் மருத்துவமனைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான் 24x7 முழுநேர மகப்பேறு மருத்துவமனைக் கட்டடம் ரூ.1.36 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திறந்து வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, ஒரு நவீன operation theatre-நவீன அறுவை சிகிச்சை அரங்கமும், latest equipments கொண்ட இரத்த வங்கியும், அதுவும் ரூ.1.10 கோடி செலவில் 2015-ல்தான் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் திறந்து வைத்தார்கள். இன்னும் மேற்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் என்ன தேவையென்று சொன்னாலும், அதை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வழங்குவதற்கு, தரமான சிகிச்சை தருவதற்குத் தயாராக இருக்கிறது என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன் அவர்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது, அவருடைய தொகுதியில் ஒரு தொழிற்பயிற்சி நிலையம் வேண்டுமென்று கேட்டார். ஏற்கெனவே அங்கு ஒரு தொழிற்பயிற்சி நிலையம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த நிலையத்தில் 518 இருக்கைகள் இருக்கின்றன. அதில் 424 இருக்கைகள் மட்டும்தான் நிரப்பப்பட்டுள்ளன. காலியிடங்கள் 94 இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன் அவர்கள்.

***திரு. தூசி கே. மோகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடு போற்றும் நல்லாட்சியின் இலக்கணமே! நற்றமிழ் நாட்டின் இலக்கியமே! சாதனை புரிந்து கொண்டிருக்கும் சரித்திரமே! மாணவச் செல்வங்களின் முக்காலக் கணிதமே!

(மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளின் விஞ்ஞானமே! தொழிலாளர்களின் விடிவிளக்கே! அறிஞர்களின் அற்புதமே! விஞ்ஞானிகளின் வியப்பே! கவிஞர்களின் பாடுபொருள் பெட்டகமே! கழகத்தின் கலங்கரை விளக்கமே! (மேசையைத் தட்டும் ஒலி) ஏழைகளின் ஏணிப்படியே! அரசு ஊழியர்களின் அதிசயமே! மருத்துவர்களின் மகத்துவமே! ஆசிரியர்களின் அறிவுச் சுடரே! தமிழ்நாட்டின் புதிய சகாப்தமே! இந்தியத் திருநாட்டின் எதிர்காலமே! (மேசையைத் தட்டும் ஒலி) ஆசியாவின் அற்புதமே! உலகத்தின் உன்னதமே! பொன்மனச் செம்மலின் மறுவடிவமே! அனைவர்க்கும் அன்னமிட்ட தாயே! அங்கிங்கெனாதபடி எங்கும் ஒளிமயமாய் நிறைந்திருக்கும் எங்கள் அம்மா! அனைவரையும் வாழ்த்தி வாழவைத்து அழகு பார்க்கும் தங்களை, வாழ்நாள் முழுவதும் நானும் எங்கள் சந்ததியினரும் நன்றியோடு வணங்குவோம்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொன்னடிகளை முதற்கண் பணிந்து வணங்குகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணு முதற்கொண்டு அண்ட சராசரம் வரை எப்பொழுதும் 'அம்மா' என்று ஒலித்துக் கொண்டிருக்கும் பிரணவ மந்திரமே! (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுக்கு மகிழ்ச்சியை மட்டுமே கொடுப்பதற்காக துன்பத்தை முழுவதையும் தனி ஒருவராகத் தாங்கி, இன்பத்தை நாளும் நாட்டிற்கு வழங்கும் அரசியல் நிறைகுடமே! கதிரவனின் துரோகம் செய்யும் புற ஊதாக் கதிர்களைத் தடுத்து உயிர்களைக் காப்பதுபோல, தீய சக்திகளிடமிருந்து தமிழ்நாட்டைக் காப்பாற்றி வைத்திருக்கும் ஒப்பற்ற ஓசோன் படலமாய் விளங்கும் தாயும் தந்தையும் ஆனவரே! (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி, எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்களே! தங்களின் புண்ணிய பொற்பாதங்களை இதயத்தால் தொட்டு பணிந்து வணங்கி மகிழ்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழைப்பை விதைத்து உண்மையைப் பாய்ச்சி, வெற்றியை விளைவிக்கும் வீரத்திருமகளே! தேர்தல் களத்திலே உம்மை நோக்கி வந்த வாள் வீச்சுகளும், (மேசையைத் தட்டும் ஒலி) சொல் வீச்சுகளும் முனை முறிந்து அங்கேயே வீழ்ந்து கிடக்க, தமிழகத்தில் ஒப்புயர்வற்று 6-வது முறையாக அரியணை ஏறி நிரந்தர முதல்வராகக்

கொலுவீற்றிருக்கும் வெற்றியின் கம்பீரமே! வீரத் திருமகளே! (மேசையைத் தட்டும் ஒலி)

'செயற்கரிய செய்வார் பெரியர், சிறியர்
செயற்கரிய செய்கலா தார்'

என்கின்ற வள்ளுவரின் பொதுமறைக்கிணங்க, செயற்கரிய செயல்கள் ஆற்றி, தமிழ்த்தாயின் தலைமகளாய் இடம் பெற்றுவிட்டு வாழும் அன்னையே! தாங்கள் சொற்களுக்குள் அடங்காதவர். காரணம், செயல் மட்டுமே தங்களின் தாரக மந்திரம். 'சொல்வதைச் செய்வோம், இன்னும் சொல்லாததையும் செய்வோம்' என்று சிங்கமென முழங்கி (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்துத் துறைகளிலும் செயலாற்றி முன்னேறிக் கொண்டிருக்கும் சரித்திரச் சிற்பியே!

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை ஆகிய துறைகளின் மீதான மானியக் கோரிக்கையில் கலந்துகொண்டு உரையாற்றுகின்ற நல்லதொரு வாய்ப்பினை நல்கிய உலகத் தமிழர்களின் விடிவெள்ளி, கழகத்தினுடைய காவல் தெய்வம், எங்கள் குடும்ப தெய்வம், இதய தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மலர்ப் பாதங்களில் என்னுடைய கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன்.

பிற்பகல் 2-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பலனை எதிர்பாராதே, கடமையைச் செய்' என்கிறது பகவத் கீதை. தாங்கள் கடமைகளை மட்டுமே செய்கின்றவர் அம்மா! தமக்கென்று சிறு பலனையும் எதிர்பார்க்கவில்லை. அதனால்தான் பலன்கள் வெற்றியின் வடிவத்தில் தங்கள் வாசலில் வாகைப் பூக்களாய் போயஸ் தோட்டத்தில் அணிவகுத்து நிற்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

கழனி என்றோ, களர் நிலம் என்றோ, பேதம் பாராமல் அனைத்து இடங்களிலும் பொழியும் மழைபோல, வேண்டியவர், வேண்டாதவர் என்ற வேறுபாடு காட்டாமல் அனைவருக்கும் அருள்புரியும் கருணை மழையே, மாண்புமிகு அம்மா அவர்கள். 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்ற தங்களின்

அருள்வாக்கு, எங்கள் அனைவருக்கும் வேதவாக்கு. (மேசையைத் தட்டும் ஒலி)

திருவண்ணாமலை மாவட்டத்தில் சிற்றூர் தூசி என்ற கிராமத்தில் பிறந்த சாதாரண நெசவுத் தொழிலாளியான என்னை மாபெரும் மக்கள் இயக்கமான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமென்ற நமது கழகத்தில் கிளைக் கழகச் செயலாளராகவும், ஊராட்சி மன்றத் தலைவராகவும், கழகத்தினுடைய பொதுக் குழு உறுப்பினராகவும், தொகுதிக் கழகச் செயலாளராகவும், ஒன்றியக் கழகச் செயலாளராகவும், ஒன்றியக் குழு உறுப்பினராகவும், ஒன்றிய குழுத் துணைத் தலைவராகவும், இன்று சட்டமன்ற உறுப்பினராகவும், மாவட்டக் கழகச் செயலாளராகவும் பல பொறுப்புகளைத் தந்து அழகு பார்க்கும் அன்னையே, நீங்கள் வாழ்கின்ற காலத்தில் நாங்களும் வாழ்வதே பெருமை. (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் அரசாட்சி செய்யும் சட்டமன்றப் பேரவையில் நாங்களும் பேசுவது எங்கள் பிறவிப் பெருமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி சார்பாக 3 கோரிக்கைகளை மட்டும் முன் வைக்கின்றேன்.

1. அதிக நிலப் பரப்பு மற்றும் அதிக மக்கள்தொகை உடைய திருவண்ணாமலை மாவட்டம் 6,312 சதுர கிலோ மீட்டர் பரப்புடையது. 11 வட்டங்கள், 18 ஊராட்சி ஒன்றியங்கள், 19 பேரூராட்சிகள், 860 ஊராட்சிகள், 8 சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கிய திருவண்ணாமலை மாவட்டத்தில் 25 இலட்சத்திற்குமேல் மக்கள் வசிக்கின்றனர். மற்ற மாவட்டங்களோடு ஒப்பிடுகையில் கல்வி மற்றும் தொழில் வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய மாவட்டமாகவே இருந்து வருகிறது. மிகப் பரந்த திருவண்ணாமலை மாவட்டத்தினைப் பிரித்து, செய்யாறை தலைநகரமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டம் உருவாக்கி, அந்த மாவட்டத்தில் வெம்பாக்கம், செய்யாறு, வந்தவாசி, ஆரணி ஆகிய நான்கு வட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றிட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து வேண்டுகின்றேன்.

2. செய்யாறு அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் 27 பாடப் பிரிவுகள் உள்ளன. இக்கல்லூரியில் 5,000-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர்.

தொகுதியில் உள்ள ஏழையெளிய மாணவிகள் தனி நலன் கருதி பெண்களுக்கு எனத் தனியாக ஓர் அரசு கலைக் கல்லூரியை செய்யாற்றில் உருவாக்கித் தந்திட கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களில் பணிந்து வேண்டுகின்றேன்.

3. திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு தொகுதி, தூசி மாமண்டூர் ஏரி 4,118 ஏக்கர் நீர்ப் பாசன நிலப் பரப்பளவும், 30 அடி நீர் கொள்ளளவும் கொண்டதாக உள்ளது. பல்லவர் காலத்து குகைக் கோயில் மற்றும் கல்வெட்டுகள் ஏரிக் கரையில் அமைந்துள்ளன. இவ்வரலாற்றுச் சிறப்புமிக்க ஏரியினைச் சுற்றுலா மையமாக அறிவித்து, படகு குழாம் அமைத்துத் தந்திட மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொன்னடிகளில் சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய தேசத்திற்காக வழிகாட்டும் வகையில் குக்கிராமங்களை வளர்ச்சியடையச் செய்திட 2011-2012 ஆம் ஆண்டில் 'தாய்த் திட்டம்' உள்ளாட்சியின் வெற்றித் திட்டம், அதாவது, தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டம் அமைத்து குக்கிராமங்களை வளர்ச்சியடையச் செய்தவர் மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் என்பதைப் பணிவோடு எடுத்துக்கூற விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடு என்பது ஏழைகளின் கனவு. ஏழைகளின் கனவை நிறைவேற்றும் வகையில் முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள் சூரிய மின் சக்தியுடன்கூடிய பசுமை வீடு திட்டம் தந்து 2011-2012 ஆம் ஆண்டு 300 சதுர அடிக்கு ரூபாய் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் வழங்கி, பின்பு 2013-2014 ஆம் ஆண்டில் ரூபாய் 2 இலட்சத்து 10 ஆயிரமாக உயர்த்தி வழங்கியவர் ஏழைகளின் ஏந்தல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் 2016-2017 ஆம் நிதியாண்டில் ரூ.420 கோடி செலவில் 20,000 பசுமை வீடுகள் கட்டித் தருவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது வரலாற்றில் மைல் கல்லாக காட்சியளிக்கின்றது என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர்களின் வாழ்வில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தும் வகையில் “நெசவாளர்களுக்கான முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் திட்டம்” தந்து, 365 சதுர அடி பரப்பளவில் ரூபாய் 2 இலட்சத்து 60 ஆயிரம் மதிப்பீட்டில் நாட்டிற்கே வழிகாட்டும் உன்னதத் திட்டம் தந்த ஒப்பற்ற முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் என்பதனைப் பணிவோடு கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தார்ச் சாலை, சிமெண்ட் சாலை, ஈரடுக்கு கப்பி சாலை, ஓரடுக்கு கப்பி சாலை, சரளைக் கல் சாலை, மண் சாலை எனப் புனரமைத்து கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை உருவாக்கியவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதனை அவைக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

பிற்பகல் 2-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிருக்கான சுகாதார வசதிகளைக் கட்டமைக்கும் வகையில், நாட்டிற்கே முன்னுதாரணமாக மகளிர் சுகாதார வளாகம் அமைத்தவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் என்பதைப் பணிவோடு கோடிட்டுக் காட்டுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிரைப்போல் ஆடவருக்கும் சுகாதார வளாகம் வேண்டுமென்ற வேண்டுகோளை நிறைவேற்றிட, 2012-2013 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகம் ரூ.35 கோடி மதிப்பீட்டில், 770 ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்களைக் கட்டிய வரலாற்றுச் சிறப்புக்குரியவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதனைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிருக்கு அதிகாரம் அளிப்பதில் தேசியத்திற்கே வழிகாட்டியாக விளங்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மகளிருக்குப் பெருமை சேர்க்கும் நிலையில், (மேசையைத் தட்டும் ஒலி) உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள பதவிகளில்

50 சதவிகிதத்தினை மகளிருக்கு ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்பதனைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் உள்ளாட்சித் தேர்தலில் முழுமையான 100 சதவிகித வெற்றி என்பதும், தங்களின் அன்புக்கும், அறிவுக்கும், ஆற்றலுக்கும், உழைப்புக்கும், நேர்மைக்கும், மக்கள் நலத் திட்டங்களுக்கும் கிடைக்கப்போகும் மகத்தான வெற்றி என்பதனை அன்போடு கோடிட்டுக் காட்ட விழைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நாக்கால் மட்டுமே அரசாட்சி செய்தோரை, தொடர்ந்து இரண்டாவது முறையாக மக்கள் வாக்கால் துரத்தி அடித்து, சூரியனைச் சுட்டெரித்த சுடர்முகம் காட்டும் பேரொளியே! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அஞ்சா நெஞ்சம் படைத்த அற்புதத் தலைவி எங்கள் அம்மா; ஆறு மொழி பேசும் பன்மொழிப் புலவர் எங்கள் அம்மா; இந்தியத் தேசத்தின் இணையில்லா தலைவி எங்கள் அம்மா; (மேசையைத் தட்டும் ஒலி) ஈகைக் குணம் நிறைந்த ஏழைகளின் தலைவி எங்கள் அம்மா; உலகமே போற்றுகின்ற உத்தமத் தலைவி எங்கள் அம்மா; (மேசையைத் தட்டும் ஒலி) ஊக்கமுடன் கழகத்தை வழி நடத்தும் தெய்வம் எங்கள் அம்மா; எம்.ஜி.ஆர். கண்டெடுத்த வாரிசே எங்கள் அம்மா; ஏற்றத்தோடு தமிழகத்தை ஆளுகின்ற முதல்வர் எங்கள் அம்மா; ஐக்கிய நாடுகளும் போற்றும் தங்கத்தாரகை எங்கள் அம்மா; (மேசையைத் தட்டும் ஒலி) ஒப்பாரும் மிக்காரும் இல்லா ஒப்பற்ற தலைவி எங்கள் அம்மா; ஓலமிட்ட வீரப்பனையும், தீவிரவாதத்தையும் விரட்டிய வீரத் தலைவி எங்கள் அம்மா; ஔவை வழிநின்று அரசாளும் அன்னை சக்தியே எங்கள் அம்மா; அஃதிலார்க்கும் அன்னைத் தமிழுக்கும் மாநாடு கண்ட மாபெரும் தலைவி எங்கள் அம்மா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் பணியாற்றிட வாய்ப்பளித்த கழகத்தினுடைய காவல் தெய்வம், தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், வாக்களித்து என்னை வெற்றி பெறச் செய்த செய்யாறு தொகுதி மக்களுக்கும் நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன்.

அம்மாவை தினம் நினைத்தால் ஆயுள் வளரும்; அம்மாவின் புகழ் சொன்னால் ஆற்றல் பெருகும்; (மேசையைத் தட்டும் ஒலி) அம்மாவின் வழி நடந்தால் அன்பு பெருகும்; அம்மாவே அன்பென்றால் அவர்தான் தெய்வம் என பணிவோடு கூறி, மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம், எங்கள் குல தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், இந்த நல்லதொரு வாய்ப்பை நல்கிய அத்துணைபேருக்கும் நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.

பிற்பகல் 2-30

திரு. ஐ.பி. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15-வது சட்டமன்றப் பேரவையின் கூட்டத் தொடரில், இன்றையதினம் நடைபெறக்கூடிய நகராட்சி நிருவாகம், குடிநீர் வழங்கல், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கைகளின்மீது எனது கருத்துகளை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பதிவு செய்கின்ற மிகப் பெரிய வாய்ப்பை எனக்கு உருவாக்கித் தந்திருக்கின்ற, நின்ற தேர்தல்களிலெல்லாம் வென்ற ஒரே தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் குடும்பத் தலைவர், தலைவர் கலைஞர் அவர்களுக்கும், பதின்மூன்று ஆண்டுக் காலம் மாவட்ட இளைஞர் அணியினுடைய துணை அமைப்பாளராகவும், மூன்றாண்டுக் காலம் மாநில இளைஞர் அணியினுடைய துணைச் செயலாளராகவும், ஆக, மொத்தம் பதினைந்து ஆண்டுக் காலம் இளைஞரணி நிருவாகி என்கின்ற முறையில், எனக்கு அரசியல் முகவரி தந்த கழகத்தினுடைய பொருளாளர், சட்டப் பேரவையினுடைய எதிர்க்கட்சித் தலைவர் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நாட்டில் பல இலட்சம் கிலோ மீட்டர்கள், குக்கிராமங்கள், கிராமங்கள் பேரூர் பகுதிகள், நகரப் பகுதிகள் என்று பிரித்துப் பார்க்காமல், அத்தனை தரப்பு மக்களோடு பின்னிப் பிணைந்து, தன் பொது வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்கி, இன்றும் மக்கள் தலைவராக இங்கே அமர்ந்திருக்கின்ற எங்கள் போற்றுதலுக்குரிய அண்ணன் தளபதியார் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர், எங்களை தலைவர் கலைஞர், அண்ணன் தளபதி வழியில் வழிநடத்துகிற ஆத்தூர் சட்டப்

பேரவை உறுப்பினர் ஐயா ஐ.பி.யார் அவர்களுக்கும், எனக்கு மூத்த அண்ணனாக இருக்கின்ற எதிர்க்கட்சி கொறடா அண்ணன் திரு. சக்கரபாணி அவர்களுக்கும், எனை ஈன்ற தாய்க்கும், என் வாழ்க்கைத் துணைக்கும், என்னுடைய வெற்றிக்கு உழைத்திட்ட திராவிட முன்னேற்றக் கழக உடன்பிறப்புகள் மற்றும் தோழமைக் கட்சியினுடைய தோழர்களுக்கும், என் அன்பிற்குரிய நண்பர்களுக்கும், எனது உயிர் தமிழுக்கும், சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் முதற்கண் நன்றிகளைத் தெரிவிக்கிற வேளையில், குறிப்பாக இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க அவையில், நானும் ஒரு மன்ற உறுப்பினர் என்கிற அந்த நிலையை எனக்கு உருவாக்கித் தந்த பழனி சட்டப் பேரவைத் தொகுதி வாக்காளப் பெருங்குடி மக்களுக்கு இந்த நேரத்தில் கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்து, சட்டப் பேரவையில் முதல் முறையாக உரையாற்றுகிற அந்த நிலையை, என்னுடைய முதல் உரையை, என் தொகுதி மக்களின் சாதாரண ஊழியனின் குரலாக இம்மாமன்றத்தில் எனது உரையைப் பதிவு செய்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் அதிக அளவு இலக்கியங்களால், கிட்டத்தட்ட 250 இலக்கியங்கள் பழனியைப் பற்றிப் பேசுகின்றன. "அதிசயம் அனேகம் உற்ற பழனி" என அருணகிரிநாதர் புகழும் பழனியில் தமிழ் கடவுளாம் முருகப் பெருமானின் மூன்றாம் படை வீடாகத் திகழும் பழனி முருகன் கோயில், தனது உண்டியல் வசூல்மூலம் தமிழ்நாட்டில் வருமானம் மிக்க கோயில்களில் முதன்மையாகத் திகழ்கின்றது. தினமும் பல்லாயிரக்கணக்கான பக்தர்களும், விசேஷ காலங்களில் பல இலட்சம் பக்தர்களும், சுற்றுலாப் பயணிகளும் பழனி நகருக்கு வருகை தருகின்றனர்.

பழனி மக்கள் மற்றும் பக்தர்களின் 20 ஆண்டுக்கால கோரிக்கையாக இருந்த பழனி பேருந்து நிலைய விரிவாக்கத்தை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர், போற்றுதலுக்குரிய அண்ணன் தளபதியார் அவர்கள் பழனி திருக்கோயிலின் நிதிப் பங்களிப்போடு 15-2-2011-ல் தொடங்கி வைத்தார்கள்.

தற்போது, பழனி நகரம் ** நான் குற்றச்சாட்டு சொல்ல வருவதாக யாரும் தயவு செய்து எண்ணிக்கொள்ள வேண்டாம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

காரணம், பழனி, நம்முடைய மாநிலத்தினுடைய முக்கிய அடையாளங்களில் ஒன்றாக இருக்கிற பகுதி. அந்தப் பகுதியின்மீது அரசினுடைய கவனம் அதிகமாக இருக்க வேண்டுமென்று ஒரு சாதாரண மக்கள் பிரதிநிதியாகத்தான் என்னுடைய கருத்தை இங்கே பதிவு செய்கின்றேன்.

பழனி நகராட்சி நிருவாகத்தோடு தேவஸ்தானமும் இணைந்து செயல்படுகிற ஒரு நிருவாகத்தை இந்த அரசு உருவாக்கித் தர முயற்சி செய்ய வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர் என்கிற முறையில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 2-35

அதேபோல, கழிவு நீர் வெளியேற்றத்திலும், சாலை விரிவாக்கத்திலும் தனிக் கவனம் செலுத்தி, நகரின் மையப் பகுதியில் தென் மேற்காகப் பரந்து விரிந்துள்ள வையாபுரி கண்மாயில் கழிவுநீர் கலப்பதைத் தடுத்திட வேண்டும். அப்படி தடுப்பதன்மூலம் நீர் மாசுபடுவதைத் தடுக்க இயலும். மேலும், வையாபுரி கண்மாயைத் தூர் வாரி, ஆழப்படுத்த வேண்டும். அங்கே சுற்றுச்சுவர் அல்லது வேலிகள் அமைத்தும், மின் விளக்குகள், நடைபாதை அமைத்து நடைப்பயிற்சி மேற்கொள்ளும் பகுதியாகவும், சுற்றுலாப் பயணிகள், பக்தர்கள் சுற்றிப் பார்க்கக்கூடிய சுற்றுலாத் தலமாகவும் பயன்படுத்த வேண்டும். குறிப்பாக, படகுத் துறை அமைத்து, படகு விடுவதன்மூலம் சுற்றுலாவை மேம்படுத்த இயலும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விழைகின்றேன்.

அதேபோல, பழனி ஒன்றியம், காவலப்பட்டி ஊராட்சியை ஒட்டி நான்கு ஊராட்சிகள் இருக்கின்றன. அதேபோல ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள பல ஊராட்சிப் பகுதிகளில் கிட்டத்தட்ட 20,000-க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்களில் பாசனம் செய்கிறார்கள். அந்த விவசாயிகளின் நீண்ட நாள் கனவாக இருப்பது பச்சையாறு அணைத் திட்டம். அது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த அண்ணன் துரைமுருகன் அவர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அந்தத் திட்டம் அப்படியே கிடப்பில் இருக்கிறது. அது மிக முக்கியமானது. பழனியைப்

பொறுத்தவரையில் அது ஓர் இதயமான பகுதி. எனவே, தயவுகூர்ந்து அந்தத் திட்டம் உருவாவதற்கு ஆவன செய்யுமாறு அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

பழனியில் நாளுக்குநாள் அதிகரித்துவரும் மக்கள்தொகை மற்றும் பக்தர்களின் உயிர் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில், பழனி மருத்துவமனையை, மாவட்ட மருத்துவமனைக்கு நிகராக நவீன வசதிகளோடு கூடிய அவசர சிகிச்சைப் பிரிவு, அனைத்து வசதிகளுடன்கூடிய பல்நோக்கு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தி வழங்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருமூர்த்தி அணையிலிருந்து 25 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கொழுமம் வழியாக, பழனி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஆண்டிப்பட்டி ஊராட்சியிலிருந்து அய்யம்பாளையம் ஊராட்சி, காவலப்பட்டி ஊராட்சி, கரடிக்கூட்டம் ஊராட்சி, தாதநாயக்கன்பட்டி ஊராட்சி, சித்திரைக்குளம் ஊராட்சி, சின்னகலையம்புத்தூர் ஊராட்சி, அ.கலையம்புத்தூர் ஊராட்சி வரையும், அதேபோல, மீண்டும் கரடிக்கூட்டம் ஊராட்சியிலிருந்து பாப்பம்பட்டி ஊராட்சி, நெய்க்காரப்பட்டி பேரூராட்சி, பெரியம்மாபட்டி ஊராட்சி, தாமரைக்குளம் ஊராட்சி வழியாக அ.கலையம்புத்தூர் ஊராட்சி வரையிலும், மீண்டும் அ.கலையம்புத்தூர் ஊராட்சியிலிருந்து கோதைமங்கலம் ஊராட்சி, கலிக்கநாயக்கன்பட்டி ஊராட்சி ஆகிய ஊராட்சிகள் வழியாக தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம் முழுவதும், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கீரனூர் பேரூராட்சிக்கும் திருமூர்த்தி அணையிலிருந்து சுகாதாரமான குடிநீர் வழங்க ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உருவாக்கித் தருவதற்கு நம்முடைய இந்த அரசு ஆவன செய்திட வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

உலக சுற்றுலாத் தலங்களில் ஒன்றான, மலைகளின் இளவரசியாக இருக்கின்ற கொடைக்கானலில் ஒரு பல்நோக்கு சிறப்பு மருத்துவமனை அமைத்திட வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

கொடைக்கானலிலிருந்து பூம்பாறை, மன்னவனூர், கிளாவரை, கேரள மாநிலம் மூணாறு வரை செல்லும் இணைப்புச் சாலையை வனத் துறையின் அனுமதியோடு நெடுஞ்சாலைக்கு இணையான,

தரமான ஒரு சாலையை உருவாக்கி, இரு மாநிலங்களுக்கு இடையேயான பொருளாதார, சுற்றுலா, நல்லுறவுகளை உருவாக்குகின்ற நல்ல திட்டத்தை உருவாக்கித் தர இந்த அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

பழனியிலிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கொடைக்கானலுக்கு ரோப் கார் திட்டத்தை அனுமதித்து பழனி, கொடைக்கானல் மக்களின் நீண்டநாள் கனவை நிறைவேற்ற வேண்டும். கொடைக்கானல், பழனி சுற்றுலா தலங்களைத் தரம் உயர்த்தித் தந்திட இந்த நேரத்திலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, நீண்ட நாள் கனவாக இருக்கின்ற வத்தலகுண்டிலிருந்து கொடைக்கானலுக்கு ஒரு சாலையும், அதேபோல கொடைக்கானல் முதல் பழனி வரை ஒரு சாலையும், ஆக இரண்டு சாலைகள்தான் பிரதான சாலைகளாக இருக்கின்றன. ஏனெனில், நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் அந்தத் தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, மாண்புமிகு அமைச்சராகவும், மாண்புமிகு முதலமைச்சராகவும் இருந்திருக்கிறார், அதனால் அவர் அறிவார். இது ஒரு முக்கியமான இடம். எனவே, அங்கு ஒரு மாற்று வழிப்பாதையை உருவாக்க வேண்டும் என்பதே அங்கிருக்கும் மக்களின் நீண்ட நாள் கோரிக்கை. எனவே, பழனி-கொடைக்கானல் மாற்று வழிப்பாதை பள்ளங்கி, கோம்பை வழியாக பாலசமுத்திரம் சென்று பழனி சென்றடைவதற்கு மிகக் குறைந்த கிலோ மீட்டர் தூரம்தான். எனவே, இதற்கு ஒரு திட்டம் போட்டால் கிட்டத்தட்ட 45 நிமிடத்திலேயே கொடைக்கானலிலிருந்து பழனிக்குச் செல்லக்கூடிய ஒரு மிகப்பெரிய வாய்ப்பு இந்த வழித்தடத்தில் நமக்கு இருக்கிறது. எனவே, அந்தத் திட்டம் குறித்த ஆய்வை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-40

மிக முக்கியமான ஒரு கோரிக்கை. கொடைக்கானலில், மேல்மலை கிராமங்கள் மற்றும் கீழ்மலை கிராமங்களில் வாழ்கிறவர்கள் மலைவாழ் மக்கள். அங்கே அன்னை தெரேசா பெண்கள் பல்கலைக்கழகம் இருக்கின்றது. ஆனால் அங்கே

இருக்கிற நம்முடைய ஆண் பிள்ளைகள், மாணவர்களுக்கு எந்தக் கல்லூரியும் கிடையாது. அவர்கள் மதுரைக்கோ, திண்டுக்கல்லுக்கோ கிட்டத்தட்ட 100 கிலோ மீட்டர் சென்றுதான் படிக்கக்கூடிய நிலை இருக்கிறது. அங்கே வாழ்கிற மக்கள் மிகவும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் இருக்கிற மக்கள். எனவே அதைக் கருத்தில்கொண்டு கொடைக்கானலில் ஆண்களும் பெண்களும், இருபாலரும் பயிலக்கூடிய அரசு கலை, பண்பாடு மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றை அமைத்திட இந்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட விவசாயத்தில், 35 சதவிகித விவசாயப் பகுதிகளைக் கொண்டது பழனி பகுதி. எனவே அங்கே ஒரு வேளாண்மைக் கல்லூரியும், சித்த மருத்துவக் கல்லூரியும் எதிர்காலத்தில் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, ஆயக்குடி பேரூராட்சி, கிட்டத்தட்ட 50 ஆயிரம் மக்கள் வசிக்கக்கூடிய ஒரு பேரூராட்சி. இந்தப் பகுதியில் மாநிலத்திலேயே அதிகமாக கொய்யா பழங்களும், மாம்பழங்களும் விளைகின்றன. அங்கே இருக்கக்கூடிய பெரும்பான்மையான விவசாயிகள் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள். அங்கே விளைகிற கொய்யா மற்றும் மாம்பழங்களை சேமித்து வைத்திட ஒரு குளிர்பதனக் கிட்டங்கியை அமைத்துத் தர அரசு முன்வர வேண்டும் என்று இந்த நேரத்தில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று நெய்க்காரப்பட்டி பேரூராட்சி, எங்களுடைய திண்டுக்கல் மாவட்டத்திலேயே அதிகமாக கரும்பு விளைவிக்கப்பட்டு வெல்லம் உற்பத்தி செய்யப்படுகிற பகுதி. திருப்பூர், ஈரோடு மாவட்டம் மற்றும் சுற்றியிருக்கக்கூடிய கொங்கு மண்டலத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் அந்த வெல்லச் சந்தைக்கு வந்து செல்கின்ற நிலை இன்றைக்கு அங்கே இருக்கின்றது. ஒரு முக்கியமான வெல்லச் சந்தை இருக்கின்ற இடம். எனவே அங்கே உற்பத்தி செய்யப்படுகின்ற விவசாயிகளின் வெல்லத்தைச் சேமித்து வைப்பதற்கு ஒரு கிட்டங்கியும், அந்த வெல்லத்தினை அரசே கொள்முதல் செய்ய வேண்டும் என்றும் இந்த நேரத்தில் நான் உங்களை அன்போடு வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடந்த 25 ஆண்டு காலத்திற்கு மேலாக கொடைக்கானல் நகர்ப் பகுதியில் நிலவி வருகின்ற, மிகப் பெரிய, மக்களின்

வாழ்வாதாரப் பிரச்சினையாக இருக்கக்கூடியது Master Plan இல்லாததுதான். எனவே, இப்போது new modified Master Plan என்கிற ஒரு திட்டத்தை இந்த அரசு உருவாக்கி, அரை நூற்றாண்டு காலமாக பரிதவித்துக்கொண்டிருக்கின்ற அந்த மக்களுடைய குடியிருப்புகளை, வணிக நிறுவனங்களை வரன்முறைப்படுத்தி வழிவகை காண முயற்சி செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

கொடைக்கானல் பேருந்து நிலையம். போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான 1.20 ஏக்கர் நிலத்தை பேருந்து நிலைய விரிவாக்கப் பணிக்குப் பெற்றுக் கொடுத்து, கிட்டத்தட்ட 5 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சர்வதேச தரத்திலான பேருந்து நிலையத்தை அமைத்துக் கொடுத்தவர் போற்றுதலுக்குரிய நம் தளபதியார் அவர்கள். அந்தப் பேருந்து நிலையம் ** இன்றைக்கு மேம்படுத்தப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றது. எனவே தரம் வாய்ந்த, உலகச் சுற்றுலாத் தலங்களில் ஒன்றாக இருக்கின்ற நம்முடைய கொடைக்கானல் பேருந்து நிலையத்தினுடைய சுகாதாரத்தை மேம்படுத்த நம்முடைய அரசு முயற்சிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

கொடைக்கானல் மற்றும் பழனி பகுதிகளில் பேருந்து வசதி இல்லாத மலைக் கிராமங்களுக்கு பேருந்து வசதி ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், புதிய வழித் தடங்களில் பேருந்துகளை இயக்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் 2 ஆயிரம் புதிய பேருந்துகளை வாங்க இருப்பதாக அறிவித்திருக்கின்றீர்கள். நிச்சயமாக மலைக் கிராமங்களின்மீது அதிக கவனத்தைச் செலுத்தி, அங்கே இருக்கக்கூடிய பழைய பேருந்துகளை அறவே நீக்கி, புதிய பேருந்துகளை இயக்கத்திற்குக் கொண்டு வர வேண்டும் என்று இந்த அரசை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோன்று மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் அரசால் நிர்ணயிக்கப்பட்ட கூலியை, குறிப்பாக நம்முடைய 2016-2017 கொள்கை விளக்கக் குறிப்பில் 203 ரூபாயை வழங்க வேண்டும் என்று இந்த அரசு அறிவுறுத்தியிருக்கின்றது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

எனவே அந்த 203 ரூபாய் அத்தனை பயனாளிகளுக்கும் சென்றடையக்கூடிய வழிவகைகளைச் செய்து, அங்கே இருக்கக் கூடிய இடர்பாடுகளை ஆய்வு செய்து, அறவே நீக்கி அங்கே இருக்கக்கூடிய ஏழைகளுக்கு, அவர்களின் உழைப்புக்கு ஏற்ற ஊதியத்தினை வழங்கிட வேண்டும் என்று இந்த நேரத்தில் இந்த அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். அடுத்து பாலசமுத்திரம் பேரூராட்சி முதல் பெரியமாவட்டி ஊராட்சிக்குச் செல்கின்ற வழியில் பாலாறு-பொருந்தலாறு பகுதியில் ஒரு பாலம் கட்டும் பணி கடந்த ஆண்டு தொடங்கப்பட்டிருக்கின்றது. அந்தப் பணி கொஞ்சம் தாமதமாக நடைபெறுகின்றது. அதனை விரைவுபடுத்த வேண்டும் என்று இந்த அரசினைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-45

ஏற்கெனவே மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் வனத் துறை மானியக் கோரிக்கையின் பதிலில் சொல்லியிருப்பதுபோல், கொடைக்கானல் மற்றும் பழனி மலைப் பிரதேசத்தில் வாழ்கிற மக்கள் வன விலங்குகளால் பாதிக்கப்பட்டு, குடியிருப்புப் பகுதிகளிலிருந்து வெளியேறுகிற நிலையில் அச்சத்தில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதிலிருந்து அவர்களைக் காப்பாற்ற, யானைகள் புகா வண்ணம் அகழிகள் அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் இது மிக முக்கியமான பிரச்சினை. மலைவாழ் பகுதி மக்களான பழங்குடியின மக்கள், Scheduled Tribes, பளியர் இன சமூக மக்கள் பல்வேறு பகுதிகளில் அங்கே பரந்து விரிந்து வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். நான் சார்ந்திருக்கக் கூடிய பகுதியில் கிட்டத்தட்ட 8,000-க்கும் மேற்பட்ட பழங்குடியின மக்கள் அங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அங்கே ஒரு பகுதிக்கும் மற்றொரு பகுதிக்கும் அந்த சான்றிதழ் பெறுவதில் இடர்பாடுகள் இருக்கின்றன. அப்பகுதி மக்கள் குறிப்பாக அலுவலகங்களுக்கு வந்து அந்த சான்றிதழ்கள் பெறுவதற்கு உண்டான அடிப்படை நடைமுறைகள் தெரியாமல் இருக்கிறார்கள். எனவே, தயவு செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசு அதிகாரிகளைக் கொண்டு ஆய்வு செய்து, அந்தந்தப் பகுதிகளில் முகாம்கள் அமைத்து அந்த சான்றிதழ்களை விரைவில் வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் பணிவோடு நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

பழனியிலுள்ள புகைவண்டி குறுக்குச் சாலையில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க, ஆயக்குடி, பழனி புதுத் தாராபுரம் சாலை, சித்திரைக்குளம் ஆகிய இடங்களில் இரயில்வே மேம்பாலங்கள் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். பழனி மலை அடிவாரப் பகுதியில், சாலையோர வியாபாரிகள் தட்டுக்களில் பூக்களையும் பழங்களையும் வைத்து தெருக்களில் நின்று விற்கின்ற அந்த வியாபாரிகளினுடைய வாழ்வியல் சூழ்நிலையை மேம்படுத்த அவர்களுக்கு உரிய இடப் பாதுகாப்பை இந்த அரசு, பழனி தேவஸ்தான அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

கொடைக்கானல் கீழ்மலைப் பகுதிகளில் காப்பி, மிளகு போன்ற நறுமணப் பயிர்களை அதிகம் விளைவிக்கின்றனர். அங்கு இருக்கக்கூடிய விவசாயிகள் உரிய விலையை, அதிகமான வருமானத்தைப் பெற்றால்தான் அவற்றை விளைவித்திட முடியும். ஏற்கெனவே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் Spices Board-க்காக 20 ஏக்கருக்கு மேற்பட்ட இடத்தினை நம்முடைய வருவாய்த் துறைமூலம் வழங்கப்பட்டிருக்கிறது. அங்கு ஒரு Spices Board, என்கிற நறுமணப் பயிர்கள் ஆராய்ச்சி மையத்தினை உருவாக்க இந்த அரசு முயற்சி செய்திட வேண்டுமென்று இந்த நேரத்தில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். பழனி தண்டாயுதபாணி திருக்கோயில் தேவஸ்தானத்தில் வியாபாரப் பெருமக்களுக்கு வழங்கப்பட்ட கடைகளுக்கு நியாயமான முறையில் உரிய வாடகையை நிர்ணயம் செய்து, அவர்கள் வாழ்வு மேம்பாடு அடையவும், வியாபாரம் செழித்திடவும் வழிவகைகளை உருவாக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு கொள்கை விளக்கக் குறிப்பில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தைக் குறித்து ஒரு செய்தியைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்றார்கள். மொத்த ஒதுக்கீடுகளில், 60 சதவீதத்தை பழங்குடியின மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கும் வழங்கப்படும் என்று அதில் கூறப்பட்டிருக்கிறது. எங்களுடைய பழனி தொகுதியைப் பொறுத்த அளவில், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்கள் அதிகமாக இருக்கின்ற பகுதியாக இருக்கிறது.

ஆகவே 1983 ஆம் ஆண்டிற்குப் பிறகு 25 ஆண்டுகாலம் 30 ஆண்டுகாலத்திற்கு முன்னர் கட்டப்பட்ட வீடுகள் இன்றைக்கு பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. கச்சா வீடுகளைப் பழுதுபார்ப்பதற்கு ரூ.50,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். எனவே, அந்தப் பழங்குடியின தாழ்த்தப்பட்ட மக்களின் வீடுகளைப் பழுதுபார்ப்பதற்கு அரசு தனிக் கவனம் செலுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில் அவர்களுக்கு எந்தத் தொழிலையும் செய்வதற்கான வாய்ப்பு கிடையாது. அரசுதான் அவர்களை வாழ வைக்க வேண்டும். எனவே அந்த மக்களுடைய வீடுகளைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன். கொடைக்கானலில் மலைவாழ் மக்கள் மின் மயானம் இல்லாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, அங்குள்ள சுற்றுச்சூழலை மேம்படுத்த ஒரு மின் மயானம் உருவாக்க அரசு ஆவன செய்ய வேண்டும். குறிப்பாகப் பண்ணைக்காடு பேரூராட்சியில் கடந்த 2 மாதங்களுக்கு முன் தொற்று நோய் ஊர் முழுவதும் பரவி மக்கள் அதிக அளவில் பாதிக்கப்பட்டார்கள். நான்கூட நம்முடைய அரசு சுகாதாரத் துறையின் இணைச் செயலாளரைத் தொடர்பு கொண்டு பேசினேன். அவர்களும் அதற்குரிய நடவடிக்கைளை மேற்கொண்டார்கள். அங்கே தொடர்ந்து 20 நாட்களுக்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளால் அந்தத் தொற்று நோய் ஓரளவிற்கு தடுக்கப்பட்டன. அரசு மருத்துவமனையில் மருத்துவர்கள் பற்றாக்குறையும், மருத்துவப் பணியாளர்கள் பற்றாக்குறையும் உள்ளது. உள் நோயாளிகள் பிரிவு மிகவும் மோசமான நிலையிலும், கட்டடங்கள் பழுதடைந்தும் போயிருக்கின்றன. அங்கே மகப்பேறு சிகிச்சை நடைபெறாத சூழ்நிலை இருக்கிறது. வெளி நோயாளிகள் மட்டும்தான் இடைக்கால நிவாரண மருத்துவ சிகிச்சை பெற்றுச் செல்கிற நிலையிருக்கிறது. தயவு செய்து அதையும் இந்த அரசு கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-50

அதேபோல, தாண்டிக்குடி ஊராட்சியிலுள்ள அரசு மருத்துவமனையை, ஆரம்ப சுகாதார நிலையமாக மேம்படுத்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். பழனி தொகுதியில் உள்ள அனைத்துக் கிராமங்களிலும் குறிப்பாக, தேவையான பகுதிகளில் மகளிர் சுகாதார வளாகங்களை

ஏற்படுத்தி, அதனை மகளிர் சுய உதவிக் குழுக்களே பராமரிக்கும் வகையில் இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இது மிக முக்கியப் பிரச்சினை. கொடைக்கானல் மலைப் பகுதியில் உள்ள கிராமங்களுக்குச் செல்லும் மின் கம்பிகள், காற்று மற்றும் மழைக் காலங்களில் அறுந்து விடுகின்றன. அந்த மின் கம்பிகள் வனப் பகுதிக்குள் அறுந்து விழுகிறபோது, எங்கே அறுந்து விழுந்தது என்பது யாருக்கும் தெரியாது. அதை கண்டுபிடிப்பதற்கே கிட்டத்தட்ட 3 தினங்களிலிருந்து ஒரு வார காலமாகி விடுகிறது. இதில் அதிகாரிகளையோ, மற்ற யாரையும் நாம் குறை சொல்ல முடியாது. ஏனென்றால், சூழ்நிலை அப்படியிருக்கிறது. ஆகவே, அந்த நிலையை மாற்ற வேண்டுமென்றால், சாலைகளின் ஓரங்களில் மின் கம்பங்கள் அமைத்து கிராமங்களுக்கு மின் விநியோகம் செய்ய வேண்டும். இல்லையென்று சொன்னால், பூமிக்கடியில் மின் வடங்களை எடுத்துச் சென்று, ஒவ்வொரு கிராமத்திலும் junction box அமைத்து மின்சாரம் வழங்க நாம் முயற்சி செய்ய வேண்டும். நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் தமிழகம் மின் மிகை மாநிலமாக உருவாகி இருக்கிறதென்று சொல்லியிருக்கிற வேளையில், அங்கே இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்ய வேண்டுமென்று தொகுதி மக்களின் சார்பாக வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கொடைக்கானல் மேல்மலைப் பகுதியிலுள்ள கிராமங்களில் விளைகிற பூண்டு, உருளைக் கிழங்கு, கேரட், பட்டாணி மற்றும் பட்டர் பீன்ஸ் போன்ற ஆங்கில காய்கறிகளைப் பதப்படுத்தி வைத்திட, மலையடிவாரப் பகுதியில் ஒரு குளிர்பதனக் கிடங்கு அமைத்து மலைப் பகுதி விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்ற இந்த அரசு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, பழனி தொகுதியில் உள்ள ஊராட்சிகளை மறுசீரமைப்பு செய்வதற்கு அரசு முயற்சி செய்ய வேண்டும். காரணம், பழனி ஊராட்சி ஒன்றியத்தில் தாதநாயக்கன்பட்டி என்ற ஊராட்சி இருக்கிறது. அங்கேயிருக்கிற மக்கள் அந்த ஊராட்சியில் உள்ள தெற்கு தாதநாயக்கன்பட்டி என்ற கிராமத்திலிருந்து தாதநாயக்கன்பட்டி கிராம நிருவாக அலுவலகத்திற்கு வர வேண்டுமென்று சொன்னால், கிட்டத்தட்ட 8 கிலோ மீட்டர்

தூரம் அதாவது, இரண்டு ஊராட்சிகளை கடந்து வந்துதான் அந்த கிராம நிருவாக அலுவலகத்தில் அவர்களுக்குத் தேவையான காரியங்களை கேட்டுப் பெற முடிகிறது. அதேபோல ஊராட்சி அலுவலகத்திற்கு வந்து அவர்களுடைய தேவைகளைக் கேட்டுப் பெறுகிற நிலையில் இருக்கிறார்கள். எனவே, ஊராட்சிகளை மறுசீரமைப்பு செய்ய இந்த அரசு முயற்சி செய்ய வேண்டும். தெற்கு தாதநாயக்கன்பட்டியை அருகில் இருக்கிற காவலப்பட்டி என்கிற ஊராட்சியோடு இணைக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதுதான் அந்தப் பகுதி மக்களுடைய விருப்பமாகவும் இருக்கிறது.

அதேபோல, பழனி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஆயக்குடி பேரூராட்சிக்கு வரதமா நதி அணையிலிருந்து தற்போது குடிநீர் வந்துகொண்டிருக்கிறது. வரதமா நதி அணையிலிருந்து வண்ணாந்துறை வரை 8 கிலோ மீட்டர் தூரம் வரையுள்ள நீர்வழி, குடிநீர்க் குழாய்கள் 15-12-1986-ல் பதிக்கப்பட்டவை. பல இடங்களில் அந்தக் குழாய்கள் சிதிலமடைந்துள்ளன. அப்பகுதி குடிநீர்க் குழாய்களை மாற்றியும், ஆய்க்குடி பேரூராட்சி அலுவலகப் பகுதியில் சுமார் 5 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் அமைக்க வேண்டும். ஆயக்குடி பேரூராட்சி, 26,000 வாக்காளர்களைக் கொண்ட பகுதி. கிட்டத்தட்ட 50,000 மக்கள்தொகை கொண்ட பகுதி. எனவே சுத்திகரிக்கப்பட்ட சுகாதாரமான குடிநீரை அந்தப் பகுதி மக்கள் பெறுவதற்கு, அரசு ஒரு திட்டத்தை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வரதமா நதி அணையிலிருந்து ஆய்க்குடி வழியாக பச்சளநாயக்கன்பட்டி ஊராட்சி, கணக்கன்பட்டி, எரமநாயக்கன்பட்டி, அமரபூண்டி, மேலக்கோட்டை ஆகிய ஊராட்சிகளுக்கு சுகாதாரமான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உருவாக்கி தந்திட இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

ஒட்டன்சத்திரம் மற்றும் தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிப்பதற்கு இரண்டு ஊராட்சி ஒன்றியங்களால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஊரக வளர்ச்சித் துறை இயக்குநருக்கு பரிந்துரை செய்திருக்கிறார்கள்.

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேன். ஒட்டன்சத்திரம் நகராட்சியில் 30 ஏக்கர் பரப்பளவு கொண்ட சின்னக்குளம் உள்ளது. அந்தக் குளத்தைத் தூர் வாரி, குளத்தைச் சுற்றி முள்வேலி அமைக்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். ஒட்டன்சத்திரம் நகராட்சியில் தினந்தோறும் சேமிக்கின்ற காய்கறி கழிவுகளை, குப்பைகளைக் கொட்டுவதற்கு நகராட்சிமூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிற்பகல் 2-55

அதைப்போல, கொடைக்கானல் ஒன்றியம், பூண்டி ஊராட்சியிலுள்ள தொலிக்கம்பட்டி, தேவனம்பட்டி குளங்களின் அணைகள் பழுதடைந்து கசிவு ஏற்பட்டு நீர் வீணாக வெளியேறுகின்றது. இதனைச் சரி செய்து புதுப்பித்தால் கிளாவரை மற்றும் கீழ்கிளாவரையில் வாழும் 700 குடும்பங்களுக்கு குடிநீர் வசதி மற்றும் 5,000 ஏக்கர் நிலங்களின் விவசாயத்திற்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதனை இந்த நேரத்தில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். கொடைக்கானல் ஒன்றியம், மன்னவனூர் ஊராட்சியில் உள்ள மன்னவனூர் பரப்பலாறு அணை பழுதுடைந்துள்ளது. இதனைச் சரி செய்து நீர்மட்டத்தினை உயர்த்துவதால் வீணாகும் அதிகப்படியான நீரைத் தடுப்பதோடு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நிமிடம் இருங்கள்.

6. அறிவிப்பு

பேரவை அலுவலில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1-9-2016 (வியாழக்கிழமை) அன்று அவையில் விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பெறுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண்கள் 22-காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மற்றும் 23-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) ஆகியன 22-8-2016 (திங்கட்கிழமை) அன்று விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பெறும்.

2016 ஆகஸ்ட் 5] [பேரவைத் தலைவர்]

22-8-2016 அன்று அவையில் எடுத்துக்கொள்ளப் பெறுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண்கள் 41-வருவாய்த் துறை மற்றும் 51-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ஆகியன 1-9-2016 அன்று விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பெறும் என்பதை பேரவையின் ஒப்புதலுடன் அறிவிக்கிறேன்.

3. மானியக் கோரிக்கைகள், 2016–2017, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
(ஆ) கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
(இ) கோரிக்கை எண் 53–சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை
} *தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல் ஒன்றியம், மன்னவனூர் ஊராட்சி, மன்னவனூர் பரப்பலாறு அணை பழுதுடைந்துள்ளது. இதனைச் சரி செய்து அணையின் நீர்மட்டத்தினை உயர்த்துவதால் வீணாகும் அதிகப்படியான நீரை தடுப்பதோடு கைகாட்டி, மன்னவனூர் பகுதி மக்களின் குடிநீர்த் தேவையையும், விவசாயத் தேவையையும் பூர்த்தி செய்ய முடியும் என்பதனை இந்த நேரத்தில் வலியுறுத்துகிறேன். கொடைக்கானல் மேல்மலைப் பகுதி, பூண்டி ஊராட்சியில் புலவச்சி ஆற்றுப் பகுதி வெள்ளையன்தூவல் என்ற இடத்தில் சமதள நீர்த்தேக்கம் உள்ளது. அந்த இடத்தில் தடுப்பணை கட்டும்பட்சத்தில் போளூர், கிளாவரை பகுதிகளில் வசிக்கும் 1,850 குடும்பங்களுக்கு குடிநீர் ஆதாரமாக இருக்கும். ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் நீர்ப் பாசனத்திற்கு பெரிதும் உதவியாக இருக்கும். எனவே, இங்கே ஒரு தடுப்பணை கட்ட வேண்டும் என்று இந்த நேரத்தில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் உரையை முடியுங்கள்.*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல் மலைப் பகுதியை பொறுத்தவரையில் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று சொன்னால், அங்கே கிணறுகள் வெட்ட இயலாது. அதைப்போல ஆழ்துளைக் கிணறுகளும் அமைக்க முடியாது. ஏனென்றால் சில பகுதிகளில் சூழ்நிலை அப்படி இருக்கின்றது. வனப் பகுதிகளில் இருக்கக்கூடிய ஆறுகளில் தடுப்பணைகள் கட்டி, மதகுகள் அமைத்தால் விவசாயத்திற்கும் பயன்படுத்திக் கொள்ளலாம். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்கள் உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார். அனைவரும் உரையை கேளுங்கள். அதை விட்டுவிட்டு எதைப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்?*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *வனப் பகுதிகளில் இருக்கக்கூடிய ஆறுகளில் தடுப்பணைகள் கட்டி மதகுகள் அமைத்தால் அதிலிருந்து குடிநீர்த் தேவைக்கும் எடுத்துக்கொள்ளலாம். அது இருவிதமான பயன்பாட்டிற்கும் பயன்படும். ஏனெனில் சூழ்நிலை அப்படி இருக்கிறது. எனவே, அதை இந்த அவைக்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக ஆகஸ்ட் 27 ஆம் தேதி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். நம்முடைய கும்பகோணம் மகாமகம் குளத்திற்கு திருவிழா காலங்களில் மேற்கொள்ள வேண்டிய பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு, அதோடு கொடைக்கானல் ஏரியை அழகுபடுத்துவதற்கான ஒரு திட்டத்தினையும், கரூர் மாவட்டத்துக்கு ஒரு திட்டத்தையும் மூன்று திட்டங்களையும் ஒரே நேரத்தில் இங்கு இருக்கக்கூடிய தலைமைச்செயலகத்தில் அறிவித்திருக்கின்றார்கள்.

‘‘Chief Minister Jayalalithaa on Wednesday announced a major beautification project for the polluted Kodaikanal lake at an estimated cost of Rs. 87.9 crore. A press release from the Secretariat said that the State had executed several projects in Kodaikanal and now 132 civic workers had been requisitioned to improve its tourist spots” *என்றும் அறிவித்திருக்கிறார்கள்.*

கொடைக்கானல் ஏரி நிறைந்து உபரி நீர் பழனிக்கு குடிநீர் ஆதாரமாக விளங்குகிற பகுதி. அதனை தூய்மைப்படுத்தி, அழகுபடுத்துவதற்கு 87 கோடியே, 96 இலட்சம் ரூபாய் ஒதுக்கி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு இந்த அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார். அந்த நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறதா? ஒதுக்கப்பட்டு பணிகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதா? ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருப்பின் அது என்ன நிலையில் இருக்கிறது என்பதனை தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 3-00

எனது பழனி தொகுதிக்குட்பட்ட, பழனி நகராட்சிக்கு IUDM நிதியாதாரத்துடன் 98.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ், நிதியாதாரம் பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என, நடவடிக்கைக் குறிப்பு நாள் 18 செப்டம்பர், 2015, (தொகுதி 86/2), பக்கம் 615-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. அதே பக்கத்தில், கொடைக்கானல் நகராட்சிக்கு, அதே IUDM நிதியாதாரத்தோடு 140 கோடி ரூபாய்க்கு மதிப்பீடு செய்யப்பட்டு, வடிவமைப்பு திருத்தி அமைக்கப்படுவதாக குறிப்பில் உள்ளது. இரண்டு பாதாள சாக்கடைத் திட்டங்கள் குறித்து அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகள் எப்போது கொடைக்கானலிலும், பழனியிலும் நிறைவேற்றப்பட இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செந்தில்குமார், உங்கள் உரையை சீக்கிரம் முடியுங்கள்.

திரு. ஐ.பி. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்து விடுகிறேன். அதேபோல், பக்கம் 681-ல் 4.9.1 பாதாள சாக்கடை என்கிற தலைப்பில் 11 பேரூராட்சிகளுக்கு மரபு சார்ந்த பாதாள சாக்கடைத் திட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் செயல்படுத்தப்படும் என கொள்கை விளக்க குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டதற்கு பிறகு, ஆயக்குடி பேரூராட்சியில் இந்த ஓராண்டு காலத்திலே எந்தவித அடிப்படை பணிகளும்

மேற்கொள்ளப்படவில்லை. சுகாதாரத்தை பாதிக்கும் நிலைக்கு அது தள்ளப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செந்தில்குமார், உங்கள் உரையை சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடு) அதிக நேரம் பேச உங்களுக்கு வாய்ப்பு கொடுத்தாகி விட்டது. (குறுக்கீடு) சீக்கிரம், உங்கள் உரையை முடியுங்கள்.

திரு. ஐ.பி. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் என் உரையை முடித்து விடுகிறேன். (குறுக்கீடு) இது என்னுடைய கன்னிப் பேச்சு sir, என் உரையை சீக்கிரம் முடித்து விடுகிறேன். எனது பழனி தொகுதிக்குட்பட்ட பாலசமுத்திரம் பேரூராட்சியில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செந்தில்குமார், உங்கள் கோரிக்கைகளை எழுதிக் கொடுத்து விடுங்கள், நான் அதனை பதிவு செய்து கொள்கிறேன். (குறுக்கீடு) நேரமாகி விட்டது, சீக்கிரம் உங்கள் உரையை முடித்து விடுங்கள்.

திரு. ஐ.பி. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, please sir ஒன்றை மட்டும் நான் சொல்லிவிடுகிறேன். பழனி நகராட்சியில் ஆணையர் பணியிடம் காலியாகவுள்ளது. கொடைக்கானல் நகராட்சி ஆணையர் in-charge ஆணையராக இருந்தார். இப்போது, தாராபுரம் நகராட்சி ஆணையர் in-charge ஆக இருக்கிறார். அதேபோல் ஒரு மேலாளர், 11 இளநிலை உதவியாளர்கள், இரண்டு தட்டச்சர்கள் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. ஒரு J.E. பணியிடமும் காலியாக இருக்கின்றது. ஒரு Work Inspector, Water Fitter பணியிடங்கள் காலியாக உள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செந்தில்குமார், உங்கள் உரையை சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடு) உரையாற்றியது போதும். (குறுக்கீடு) சீக்கிரம், உங்கள் உரையை முடியுங்கள்.

திரு. ஐ.பி. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு பெரிய நகராட்சியில், இவ்வளவு பணியிடங்கள் காலியாக இருந்தால், எப்படி மக்களுடைய அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும். குடிக்க தண்ணீர் இல்லை. மூன்று நாட்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செந்தில்குமார், நீங்கள் நன்றாகப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். நன்றி சொல்லி, உங்கள் உரையை முடித்து விடுங்கள். (குறுக்கீடு) 30 நிமிடங்கள், நீங்கள் பேச, நான் வாய்ப்பு கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) சீக்கிரம் உரையை முடித்து விடுங்கள்.*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* please sir, *ஒரு நிமிடத்தில் என் உரையை முடித்து விடுகிறேன். (குறுக்கீடு) மூன்று தினங்களுக்கு மேல் ஒரு பகுதியில் குடிநீர் வரவில்லையென்றால், அதைக் கண்டறிவதற்கு ஒரு தேசிய தகவல் மையத்தின் மூலமாக, ஒரு மென்பொருள் திட்டத்தை கொண்டு வந்துள்ளதாக நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், பழனி தொகுதியில் உள்ள 13-வது வார்டில், கிட்டத்தட்ட நான்கு, ஐந்து மாதங்களுக்கு மேலாக குடிநீர் வரவில்லை, அங்கு குடிநீரேயில்லை. அங்குள்ள* borewell *எதுவும் வேலை செய்யவில்லை. மோட்டார். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செந்தில்குமார், நீங்கள் உரையாற்றியது போதும், சீக்கிரம், உங்கள் உரையை முடியுங்கள். இதற்குமேல், என்னால் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) போதும், உட்காருங்கள்.*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் பேச விடுங்கள்.* Please sir, *பேசுவதற்கு தானே வந்திருக்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இவ்வளவு நேரம் பேச உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தும், உரையை முடிப்பதற்கு உங்களுக்கு மனசு வரவில்லை. (குறுக்கீடு)*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைசியாக ஒன்றை மட்டும் சொல்லிவிடுகிறேன். உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி மக்கள் நலப் பணியாளர்களுக்கு வேலை வழங்குவதற்கு இந்த அரசு முயற்சி செய்யுமா எனக் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நல்லபடியாக நன்றி சொல்லி, உங்கள் உரையை முடிப்பீர்கள் என்று நினைத்தால், முடிக்கமாட்டேன் என்கிறீர்கள். (குறுக்கீடு) சீக்கிரம், உங்கள் உரையை முடித்து விடுங்கள். (குறுக்கீடு) இவ்வளவு நேரம் நீங்கள்*

பேச வாய்ப்பு கொடுத்தும், நன்றி சொல்லி உங்கள் உரையை முடிக்காமல் உள்ளீர்கள்.

திரு. ஐ.பி. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கோரிக்கையை மட்டும் வைத்து விடுகிறேன். (குறுக்கீடு) Please sir ஒரே ஒரு கோரிக்கையை மட்டும் வைத்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செந்தில்குமார், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் உள்ள கடைகளைப் பற்றி பேசினார். அந்தக் கடைகளைப் பற்றிய விவரத்தை இந்த சபைக்கு அளிக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 3-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி நகரில், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் பல்வேறு கடைகள் கட்டப்பட்டு, வாடகைக்கு விடப்பட்டுள்ளன. மேற்படி கடைகளின் ஏலம் மூன்று ஆண்டு காலத்திற்கு விடப்பட்டுள்ளது. உரிமைக் காலம் முடிவடைந்தும், கடையின் உரிமையாளர்கள் கடையின் ஸ்வாதீனத்தை திருக்கோயில் வசம் ஒப்படைக்காமல், தொடர்ந்து இருந்து வருகின்றனர்.

இந்த நிலையில் அரசாணையின்படி, திருக்கோயிலுக்குச் சொந்தமான அனைத்துக் கடைகளுக்கும் நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்டது. இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதன் காரணமாக, வாடகை மிக உயர்வு எனக் கருதி, வாடகைதாரர்கள், சென்னை உயர் நீதிமன்றம், மதுரை கிளையில் வழக்குத் தொடர்ந்து, திருக்கோயிலுக்கு எதிராக தீர்ப்பினைப் பெற்றார்கள். இதனை எதிர்த்து, திருக்கோயில் சார்பாக, சென்னை உயர் நீதிமன்றம், மதுரை கிளையில் மேல்முறையீடு செய்யப்பட்டு, திருக்கோயிலுக்குச் சாதகமாக தீர்ப்பு பெறப்பட்டது. இதனையடுத்து, அனைத்து வாடகைதாரர்களும் இந்து சமய

அறநிலையத் துறை ஆணையரிடம் சீராய்வு மனுவை சமர்ப்பித்தனர். விசாரணைக்குப் பிறகு, ஆணையரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில், உயர்வு செய்யப்பட்ட வாடகையை 1-7-2015 முதல் செலுத்திவிட்டு, தற்போதைய வாடகைதாரர்கள் 30-6-2017 வரை தொடர்ந்து இருந்து கொள்ளலாம் என்றும், வாடகை நிலுவையை வாடகைதாரர்கள் 30-4-2016-க்குள் செலுத்த வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டது. ஆணையரது உத்தரவை செயல்படுத்தாத கடைகள் பூட்டி சீல் வைக்கப்படும் என திருக்கோயில் நிருவாகத்தால் அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து, வாடகைதாரர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையில், 3 மாதங்களுக்கான வாடகை நிலுவைத் தொகையை செலுத்துவோம், மீதித் தொகையை 30-6-2016 ஆம் தேதிக்குள் செலுத்துவோம் என சம்மதம் தெரிவித்து, அதனை எழுத்து மூலமாக அனைத்து வாடகைதாரர்களும் எழுதிக் கொடுத்துள்ளார்கள். இதற்கு எதிராக, வாடகைதாரர்கள் தங்களை வெளியேற்றக் கூடாது என சென்னை உயர் நீதிமன்றம், மதுரைக் கிளையில் மேலும் பல வழக்குகளைத் தாக்கல் செய்தனர். அப்போது, தற்போதுள்ள நிலையே நீடிக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மேலும், திருத்திய வாடகையை அவர்கள் செலுத்த மறுத்து வருகின்றனர். திருத்திய வாடகையை வசூலிக்க திருக்கோயில் நிருவாகத்தால் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள் பேசியபோதே நான் விளக்கமளித்திருப்பேன். அவர், கன்னிப் பேச்சு பேசியதால், நான் குறுக்கிடவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு மிகப் பெரிய வாய்ப்பு கிடைத்துள்ளது. ஏனெனில், அ.தி.மு.க.-வும் 2006-2011 வரை எதிர்க்கட்சியாக இருந்தது. அப்போது, எங்களுடைய தொகுதியினுடைய கோரிக்கைகளையும் நாங்களும் சொல்வதற்கு முயற்சி செய்தோம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால்,

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தன்னுடைய தொகுதி குறித்த அனைத்துக் கோரிக்கைகளையும் சொல்லிவிட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மிகப் பெரிய ஒரு வாய்ப்பினைக் கொடுத்துவிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்களுக்கு இவ்வளவு வாய்ப்பினை அளித்தும், அவர் திருப்தியடையவில்லை. அவர் நன்றி சொல்லி உரையை முடிக்கமாட்டேன் என்கின்றார்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள் பேசியபோது, பல கோரிக்கைகளை வைத்தார்கள். அதிலே, பழனி நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் பற்றி பேசினார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தைச் செம்மைப்படுத்தி நிறைவேற்றிட, வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் ரூ.100 கோடி நகராட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பழனி நகராட்சிக்கு, திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ், 2014-2015 ஆம் ஆண்டில் 4 கோடியே 85 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளார்கள். மேலும், பழனி நகராட்சிக்கு ஏற்கெனவே ஒதுக்கீடு செய்த தொகை மட்டுமல்லாமல், கூடுதலாக 2015-2016 ஆம் ஆண்டில் 1 கோடியே 75 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு, பழனி நகராட்சிக்கு 6 கோடியே 57 இலட்சம் ரூபாயினை அள்ளி வழங்கியுள்ளார்கள். இத்திட்டத்தின்கீழ், உர மேடை, குப்பைகள் பிரித்தெடுக்கும் இயந்திரம், அரைக்கும் இயந்திரம், உரக் கிடங்கு, தண்ணீர் வசதி மற்றும் சுற்றுச் சுவர் அமைக்க திட்டமிடப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்ட நிலையில், தென் மண்டல தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தால் தடை உத்தரவு வழங்கப்பட்டது. அதனால், பணிகளைத் துவக்க இயலாத நிலை ஏற்பட்டது. வெகு விரைவில் பசுமைத் தீர்ப்பாயத்தின் தடை நீக்கப்பட்டு, பணிகள் துவங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கொடைக்கானல் நகராட்சி குறித்த கோரிக்கையினையும் வைத்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள், 2015-2016 ஆம் ஆண்டில், கொடைக்கானல் நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ், 3 கோடியே 5 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள்; அந்தத் திட்டமும் கூடிய விரைவில் துவங்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர் தொகுதியிலுள்ள குடிநீர்த் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். திருமூர்த்தி அணையிலிருந்து நீர் கேட்டார்கள். தி.மு.க கட்சியைச் சேர்ந்த கொறடா அவர்களும்கூட அந்தக் கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கிட்டத்தட்ட 636 கோடி ரூபாய் மதிப்பீட்டில், நத்தம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்ற அற்புதமான திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அந்தத் திட்டம் முடியும் தருவாயில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதிக்குட்பட்ட ஊராட்சி ஒன்றியங்களுக்கும் அந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3-10

அதேபோல, மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித் திட்டத்தில் 203 ரூபாய் கூலி வழங்குவது பற்றி பேசினார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு அந்தப் பணியாளர்களுக்கு அதிகமான கூலியை வழங்க வேண்டுமென்பதற்காக குழு அளவு என்ற அளவை கொண்டுவந்திருக்கிறார்கள். அதாவது தனித் தனியாக வேலை செய்தால் கூலி குறைவாக கிடைக்கும். அதனால், 20 பேர் சேர்ந்து ஒரு குழு அளவு என்று சொல்லி, அதிலே ஒன்றுக்கும் மேற்பட்ட பணிகள் செய்யலாம் என்று கொண்டுவந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, 57 கன அடி எடுத்தால்தான் முழு கூலி தருவார்கள். அதையும் 37 கன அடியாக குறைத்து, 8 மணி நேரமாக இருந்த வேலை நேரத்தை 7 மணி நேரமாக குறைத்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணை வழங்கியுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, சுகாதாரத்தைப் பற்றி சொன்னார்கள். அந்த பேருந்து நிலையத்திலே ** இருப்பதாக சொன்னார்கள். அதை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மட்டும் அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த மாதிரி ஒரு சூழ்நிலை எந்த இடத்திலும் இல்லை. அப்படி இருந்தால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும். ஏனென்றால் பழனியைப் பொறுத்தவரையில் எப்போதும் அளவுக்கு அதிமான கூட்டம் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் வருகிறது. அந்த மாதிரி ஒரு சூழ்நிலை அங்கே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு திட்டத்தை அறிவித்தார்கள். கும்பகோணம், கொடைக்கானல், கோவை மாநகராட்சி போன்ற பல பகுதிகளுக்கு அறிவித்தார்கள். அப்போதுதான் அந்த ஏரியைப் பற்றி சொன்னார்கள். கண்டிப்பாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எந்தத் திட்டத்தை அறிவித்தாலும் செயல்படுத்துவார்கள். நிதியொதுக்குவார்கள் என்று சொல்லி அந்தத் திட்டம் ஆய்விலே இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். கண்டிப்பாக அது செயல்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல, இன்னும் சில கோரிக்கைகளை வைத்தார்கள். கண்டிப்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு அதுவும் கொண்டு செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் கேட்டுக்கொண்டபடி அது நீக்கப்படுகிறது. மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பச்சையாறு திட்டத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். பச்சையாறு என்பது பாலாறு, பொருந்தலாறு நதியின் ஒரு கிளைதான். இந்தப் பச்சையாற்றிலே பழனிக்கு அருகில் ஒரு நீர்த்தேக்கம் அமைக்க உத்தேசிக்கப்பட்டது. அந்தத் திட்டத்தில் ஏற்கெனவே உள்ள ஆயக்கட்டு மற்றும் புதிய ஆயக்கட்டு பயனடையும் வகையில் நீர்த்தேக்கம் உருவாக்க வேண்டுமானால் சுமார் 7 ஏக்கர் நிலம் வனத் துறைக்குச் சொந்தமானது,

151 ஏக்கர் பட்டா நிலம், 13 ஏக்கர் புறம்போக்கு நிலம் ஆகியன கையகப்படுத்த வேண்டும். இதில் வனத் துறை நிலம் தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் தடையிருக்கிறது. அதனால்தான் அந்தப் பணி தொடராமல் இருக்கிறது. அந்தத் திட்டம் ஆய்வில் இருக்கிறது. உச்ச நீதிமன்றத்தில் வழக்கு இருக்கின்ற காரணத்தினால்தான் அந்தத் திட்டம் நிலுவையில் இருக்கிறது. வழக்கு முடிந்தவுடன் பணிகளைத் தொடங்க அரசு நடவடிக்கைகளை எடுக்கும். அதேபோல, துலக்கன்குளம் ஏரியிலே கசிவு ஏற்பட்டிருப்பதாக சொன்னார்கள். அதற்கு ஏற்கெனவே டெண்டர் விடப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகளும் துவங்கும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பழனி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. செந்தில்குமார் அவர்கள் தனியாக ஒரு பட்ஜெட்டே போடுகின்ற அளவிற்கு ஒரு சட்டமன்ற தொகுதிக்கு சேர்த்து, எதிர்க்கட்சி கொறடா அவர்களுடைய ஒட்டன்சத்திரம் தொகுதிக்கும் சேர்த்து, இரண்டு தொகுதிகளை இணைத்து பேசியிருக்கிறார். எனது திண்டுக்கல் தொகுதிக்கும் சேர்த்து பேசியிருக்கலாம். மாவட்டம் முழுவதும் 7 தொகுதிகள் இருக்கின்றன. அவர் அந்த கட்சியினுடைய மாவட்ட செயலாளர் என்ற வகையில் பேசியிருக்கலாம். மாற்றாந்தாய் மனப்பான்மையிலே இருந்துவிட்டார். இருந்தாலும் அவர் கன்னிப் பேச்சு என்பதால் நாங்கள் எல்லோருமே முடிவு செய்து, உறுப்பினரைப் பேச விட்டுவிடுங்கள், அப்புறம் பதில் சொல்லலாம் என்று இப்போது பேசுகிறோம். (குறுக்கீடுகள்) உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த 2 மாதங்களில் அங்கிருக்கின்ற ஊர்களையெல்லாம் எழுதி, பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, வேளாண்மைத் துறை, அறநிலையத் துறை, உள்ளாட்சித் துறை என்று அத்தனை துறைகளுடைய பிரச்சினைகளையும் பேசியிருக்கிறார்கள்.

அதிலே குறிப்பாக அவர் சொன்னது மலைப் பகுதிக்கு winch அமைக்க வேண்டுமென்பது. பழனி மலைப் பாதையிலே போட்டிருப்பதைப் போல போடவேண்டுமென்று சொன்னார்கள். Rope car எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா

அவர்கள் காலத்தில் ஒரு புரட்சியான திட்டமாக கொண்டுவந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்போதே கொடைக்கானலுக்கு rope car போடவேண்டுமென்று ஆய்வு செய்தார்கள். அதற்கு feasibility இல்லையென்று அந்த ஆய்விலே சொல்லப்பட்டதனால், அது நிறுத்தப்பட்டிருக்கிறது என்ற செய்தியை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இல்லையென்றால் அதுவும் நிச்சயமாக போடப்பட்டிருக்கும். அதைப் போடக்கூடிய வசதி அங்கு இல்லையென்பதால், அந்த rope car திட்டம் போட முடியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3-15

தேவஸ்தானம் சார்பிலே இருக்கிற கடைகளைப் பற்றி இங்கே சொன்னார்கள். மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். கடை வைத்திருப்பவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று வழக்கு தொடுத்திருக்கிறார்கள். அந்த நீதிமன்றத்தில் தேவஸ்தானத்திற்கு ஆதரவாக தீர்ப்பு வந்திருக்கிறது. அதை எதிர்த்து ஆணையரிடமும், அங்கிருக்கிற செயலாளர் அவர்களிடமும் இப்போது மனு செய்திருக்கிறார்கள். எங்களை பொறுத்தவரை, ஏழைகளும் மற்றவர்களும் பாதிக்கப்படாத அரசாகத்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இருக்கிறது. வாடகைதாரர்களும், கடையை நடத்துகிறவர்களும் எந்த அளவிலும் பாதிக்கப்படாதவாறு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செயல்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோலவே, மறுபடியும் யானையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் கொறடா திரு. சக்கரபாணி அவர்களும், பழனி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. செந்தில்குமார் அவர்களும் சொன்னார்கள். அவர்களுக்கு நான் சொல்வதெல்லாம் பழனி ஒன்றியம், கோம்பைப்பட்டி, பச்சளநாயக்கன்பட்டி, ஆயக்குடி ஆகிய கிராமங்கள் திண்டுக்கல் வனக் கோட்டம், ஒட்டன்சத்திரம் வனச் சரகத்திற்குட்பட்ட பகுதிகள் ஆகும். எஞ்சியுள்ள பாலசமுத்திரம் பெரியம்மாபட்டி, ஆண்டிப்பட்டி, கொடைக்கானல் வட்டம், பழனி வனச் சரகத்திற்குட்பட்ட பகுதிகளில் யானை உணவு தேடி வருகிறது. அந்தப் பகுதிகளிலே எல்லாம் பலா, ஆரஞ்சு மற்றும் வாழைப் பழம் அதிகமாக விளைச்சல் செய்வதால், அதைச் சாப்பிடுவதற்கு கொடைக்கானல் மற்றும் கேரளா

பகுதியில் இருந்து யானைகள் வருகின்றன. அதைத் தடுப்பதற்காக அங்கே ஆட்களை நியமித்து, பட்டாசு வெடித்து, மறுபடியும் யானைகளை காட்டுக்குள் அனுப்புகின்ற வேலைகளை அந்த வன அலுவலர்கள் செய்து வருகிறார்கள். அதுபோக, அந்தப் பகுதியிலே 2015-2016 ஆம் ஆண்டு வரை ரூ.150.343 இலட்சம் செலவில் 40 கி.மீ. நீளத்திற்கு யானை புகா அகழிகள் அமைக்கப்பட்டு, யானைகள் நடமாட்டம் இல்லாத சூழ்நிலைகளை உருவாக்கியிருக்கிறோம். வேட்டைத் தடுப்புக் காவலர்களைக் கொண்ட தனி குழுவினர், யானைகள் நடமாட்டத்தைக் கண்காணித்து, அப்பகுதியில் வன உயிரினங்களால் மக்களுக்கும், விவசாய நிலங்களுக்கும் பாதிப்பு இல்லாத வகையில், நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நானும் அதே மாவட்டத்தில் இருப்பதனால், இதில் சிறப்புக் கவனம் செலுத்தி, எங்களுடைய வன இலாகாவினுடைய அத்தனை திறமையான அலுவலர்களையும் அனுப்பி, யானைகளைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து, அங்கு விலங்குகளால் மனிதர்களுக்கு ஆபத்து இல்லாமலும், மனிதர்களால் விலங்குகளுக்கு ஆபத்தும் ஏற்படாத சூழ்நிலையையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக பார்த்துக்கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பழனி சட்டமன்ற உறுப்பினர் திரு. செந்தில்குமார் அவர்கள் குறிப்பிட்ட அத்தனை கோரிக்கைகளுக்கும், உரிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மேற்கொள்ளும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களைக் காத்திருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்குக் காலையில்கூட விதி 110-ன்கீழ் ஒன்பது அறிவிப்புகளை அறிவித்திருக்கிறார்கள். வேளாண் பொருட்களைக் காப்பதற்கும், விவசாயிகளைக் காப்பதற்கும் அத்தனை திட்டங்களையும் அறிவித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நலத் திட்டங்களை அறிவித்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பழனி சட்டமன்ற தொகுதியில் வேளாண் விளைபொருட்களைச் சேமிப்பதற்கும், விளைந்த பழங்கள் மற்றும் காய்கறிகளைக் காப்பதற்கும், சேமிப்புக் கிட்டங்கி சுமார் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டிலும், குளிர்பதனக் கிடங்கு சுமார் ரூ.43.3 இலட்சம் மதிப்பீட்டிலும் அமைத்துத் தந்துள்ளார்கள் என்பதையும், அதேபோல திண்டுக்கல் மாவட்டத்தில் வேளாண் விளைபொருட்களைச் சேமிப்பதற்காக குளிர்பதனக் கிடங்கு சுமார் ரூ.31.8 இலட்சம் மதிப்பீட்டிலும் அமைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, கொடைக்கானல் மருத்துவமனை, ஆயக்குடி, பண்ணைக்காடு, தாண்டிக்குடி போன்ற பல்வேறு மருத்துவமனைகளில் மருத்துவர் பணியிடங்கள், மருத்துவம் சார்ந்த பணியாளர்களுடைய நியமனங்கள், மருத்துவமனையினுடைய வசதிகள் மேம்பாடு என பல்வேறு கருத்துகளைக் குறிப்பிட்டார். பழனி அரசு மருத்துவமனை பற்றியும் குறிப்பிட்டார்கள். 11-1-2016 ஆம் நாளன்று பழனி அரசு மருத்துவமனைக்கு விபத்து காய சிகிச்சை மையத்தை ரூ.2 கோடியே 40 இலட்சம் செலவில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திறந்து வைத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3-20

உறுப்பினர் குறிப்பிட்ட தாண்டிக்குடி, பண்ணைக்காடு, ஆயக்குடி போன்ற மருத்துவமனைகளிலெல்லாம் போதிய அளவு மருத்துவர் பணியிடங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன. தாண்டிக்குடியில் ஒரு மருத்துவர் பணியிடம் காலியாக இருக்கிறது; பண்ணைக்காட்டிலும் ஒரு மருத்துவர் பணியிடம் காலியாக இருக்கிறது. மற்றபடி அங்கே மருத்துவர்கள் பணியிலே இருக்கின்றனர். பொதுவாக, உறுப்பினர் சார்ந்திருக்கின்ற சட்டமன்றத் தொகுதியைப் போன்ற, மலைப்பிரதேசங்கள், அதைப்போல interior ஆக இருக்கக்கூடிய இராமநாதபுரம் போன்ற

பகுதிகள், அதைப்போல நீலகிரி மாவட்டம் போன்ற மலைப்பிரதேசங்களில் மருத்துவர்களின் பணியிடத்தை நிரப்புவதற்காக, மருத்துவ சேவையை உறுதிப்படுத்துவதற்காக, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு சிறப்புக் கவனம் செலுத்தி, அங்கே இருக்கக்கூடிய அரசு மருத்துவர்கள், தங்களுடைய மேற்படிப்பின்போது, வருடத்திற்கு மற்ற மருத்துவர்களைக்காட்டிலும், அந்த மேற்படிப்புப் படிப்பதற்கு ஒரு வருடத்திற்கு இரண்டு மதிப்பெண்கள் என்ற அளவிற்கு அதிகபட்சமாக பத்து மதிப்பெண்களை சிறப்பு ஒதுக்கீடாகக் கொடுப்பதன்மூலமாக (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு மலைப்பிரதேசங்களில் மருத்துவர்கள் தங்கி பணிபுரியக்கூடிய நிலையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உறுதிப்படுத்தியிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், இந்தியாவிலேயே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதன்முறையாக மலைப் பகுதிகளுக்கும், கடற்கரையோரத்திலும் எளிதாக செல்வதற்கு, Four Wheel Drive Ambulance-ஐ வழங்கியிருக்கிறார்கள். வேறு எந்த மாநிலத்திலுமே இது கிடையாது. அதன்மூலமாகவும் மருத்துவ வசதி உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. அதுபோக, M&R என்ற சிறப்பு நிதியின் அடிப்படையில், உறுப்பினர் குறிப்பிட்ட அந்த உள் நோயாளிகள் பிரிவுகளெல்லாம் வருங்காலத்தில் உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசுகின்றபோது, அத்தனை கோரிக்கைகளும் ஏற்று, அதிகாரிகள்மூலம் செய்யப்படும் என்று சொல்லியிருந்தேன். கோரிக்கைகளை அரசின் நிதிநிலைக்கேற்ப ஆய்வு செய்து பரிசீலிக்கப்படும் என்று திருத்திக்கொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பழங்குடியின மக்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்க வேண்டும்; ஒரு பகுதியிலே சான்றிதழ் கிடைத்திருக்கிறது; இன்னொரு பகுதியிலே இருப்பவர்களுக்கு வழங்க வேண்டும்; மேலும் அவர்கள் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு எல்லாம் சென்று வாங்கக்கூடிய நிலையிலே இல்லை; ஆகவே, அவர்களுடைய கஷ்டங்களைப் போக்குகின்ற வகையில் அவர்களுடைய இருப்பிடத்திற்கே சென்று சாதிச் சான்றிதழ் வழங்குகிற முகாம்களை அமைத்துத் தரவேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள். இதுபோன்ற சங்கடங்களைப் போக்குவதற்காகத்தான், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ் போன்ற சான்றிதழ்களையெல்லாம் பள்ளியிலே, அந்தக் கல்வியாண்டிலேயே வழங்குகிற ஒரு திட்டத்தை 8-5-2012-ல் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விதி எண் 110-ன்கீழ் அறிவித்தார்கள். அதனடிப்படையில், கடந்த மூன்று ஆண்டுகளில் 6 ஆம் வகுப்பு பயில்கின்ற மாணவர்களுக்கு 19,71,461 சான்றிதழ்களும், 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு படிக்கின்ற மாணவர்களுக்கு முறையே 12,65,061 மற்றும் 3,50,610 சான்றிதழ்களும் வழங்கப்பட்டிருக்கின்றன.

பழங்குடியின சான்றிதழை பொறுத்தளவில், கோட்டாட்சியர் அளவிலே ஆய்வு செய்யப்படுகிறது. அதற்கு உரிய ஆய்வுகள் செய்யப்பட்டு, அதற்குத் தேவையான ஆவணங்களைச் சமர்ப்பிக்கும்போது வழங்கப்படுகிறது. கடந்த காலங்களிலெல்லாம் கோட்டாட்சியர் வழங்க மறுப்பார்களேயானால், நாம் நீதிமன்றத்திற்குத்தான் செல்லவேண்டும். அவ்வாறு கோட்டாட்சியர் மறுக்கிறபட்சத்தில், தாமதம் செய்கிறபட்சத்தில், மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் அவர்கள் முறையிட்டு இதைப் பெற்றுக்கொள்ள ஏதுவாக மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள்தான், Appeal provision என்கிற மேல்முறையீடு வாய்ப்பை வழங்கியுள்ளார்கள். மேலும், முகாம் அமைப்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு நாடு முழுவதும் தெரியும். குக்கிராமங்களுக்குக்கூட வட்டாட்சியர் அலுவலகத்தைக் கொண்டு வந்து ஒரு நிருவாகப் புரட்சியின் அடிப்படையில், 'அம்மா திட்டம்' என்ற முகாம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு ஆடிப் பூரம். ஆடி மாதம் எல்லோரும்

அம்மன் கோயிலுக்குச் சென்று, அம்மனை பிரார்த்தனை செய்து, வரத்தை வாங்குவார்கள். இந்த ஆடி மாதத்திலேகூட, வெள்ளிக்கிழமை அம்மன் கோயிலுக்குச் செல்கிறார்களோ, இல்லையோ, ஆனால் 'அம்மா திட்டம்' முகாமுக்குச் செல்கிற (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு நிலையை மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அதே போல பழங்குடியின மக்களுக்கும், அந்தப் பகுதியிலே சான்றிதழ் வழங்குகிற நிலையினை மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து வழங்கிக்கொண்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மலைப் பகுதியிலே பேருந்து இயக்குவதைப் பற்றி கூறினார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2016-2017 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே 2,000 புதிய பேருந்துகள் வாங்குவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், கொடைக்கானல் பகுதிகளுக்கு புதிய வழித்தடங்களை இயக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் கொடைக்கானலில் 65 வழித்தடங்களில் பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 59 வழித்தடங்களில்தான் பேருந்துகள் இயங்கிக் கொண்டிருந்தன. எனவே, உறுப்பினர் அவர்கள் கூறிய அந்த வழித்தடங்களை ஆய்வு செய்து, தேவை இருக்குமாயின் அதுகுறித்து ஆய்வு செய்யப்பட்டு, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள், பழனி சட்டமன்றத் தொகுதியினைச் சார்ந்த சில பிரச்சினைகளை எடுத்துக் கூறுகின்றவகையிலே தன்னுடைய விவாதத்தை தொடர்ந்தார்கள். அவர் விவாதத்திற்கு பதில் அளிக்கின்றவகையிலே அனைத்து துறைகளைச் சார்ந்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அனைவரும் நல்லதொரு விளக்கத்தினைத் தந்திருக்கின்றார்கள். அதை ஏற்றுக்கொண்ட மன நிறைவோடுதான் மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் அமர்ந்திருக்கிறார்கள். அந்தவகையிலே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் எடுத்துவைத்த கோரிக்கைகள் பழனி, கொடைக்கானல் போன்ற சுற்றுலாத் தலங்களுக்கு உட்பட்ட பகுதிகள் குறித்ததாகும். சுற்றுலாத் துறை மேம்பாடு அடைவதற்கு அனைத்து அமைச்சர் பெருமக்களுடைய முழு ஒத்துழைப்பின் பேரிலும், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்ல பல திட்டங்கள் சுற்றுலாத் துறையின் மூலமாக செயல்படுத்தப்படுகின்றன. மாண்புமிகு அம்மா அவர்கள் 2001-2006 ஆம் ஆண்டு காலத்திலும் சரி, அதேபோல தொடர்ந்து தற்போது வரை பல்வேறு திட்டங்களின்கீழ் சுமார் 479.10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கி கொடைக்கானலில் சுற்றுலா இடங்களுக்குச் செல்லும் சாலைகளை மேம்படுத்துதல், அலங்கார மின் விளக்குகள் அமைத்தல், சிறுவர் பூங்கா அமைத்தல், வி.ஜி.பி. பகுதி அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல், பிரையன்ட் பூங்கா மற்றும் செட்டியார் பூங்கா மேம்பாடு மற்றும் சுற்றுலா இடங்களில் தடுப்பு வேலிகள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்வதற்காகவும், கொடைக்கானல் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தும் திட்டத்தின்கீழ், coakers walk, பசுமைப் பள்ளத்தாக்கு, வெள்ளி நீர் வீழ்ச்சி முதலிய சுற்றுலா இடங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 120 இலட்சம் ரூபாயும், அதேபோன்று மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், கொடைக்கானல் சுற்றுலா வரவேற்பு மையம் கட்டுவதற்கு 25 இலட்சம் ரூபாயும், அதைத் தொடர்ந்து அதே பணிக்கு 50 இலட்சம் ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆக, நல்ல பல திட்டங்களை சுற்றுலா வளர்ச்சிக்காக மாண்புமிகு அம்மா அவர்கள் சுற்றுலாத் துறை மூலமாக வழங்கியிருக்கிறார்கள் என்ற செய்தியினை இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத்

தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதற்கிணங்க பழனி சட்டமன்றத் தொகுதியிலும், கொடைக்கானல் மற்றும் அதைச் சார்ந்துள்ள பகுதிகளிலும் சுற்றுலாத் துறையினரை கவரக்கூடியவகையிலே ஓர் அற்புதமான நிலைப்பாட்டினை நிச்சயம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நிறைவேற்றும் என இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிலுரை. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) போதும் நிறைய அமைச்சர்கள் உங்களுக்காகப் பதில் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) பரவாயில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினருக்காக நானே நன்றி சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) சரி, உட்காருங்கள். (குறுக்கீடு) வாக்குறுதிகள் எல்லாம் ஒன்றுமில்லை. அனைத்தையுமே பார்த்து செய்கிறோம் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) பரவாயில்லை, ஒன்றும் பிரச்சினையில்லை. (குறுக்கீடு) முடிந்தது, உட்காருங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்கின்ற செயல்கள் யாவும் வெற்றி, (மேசையைத் தட்டும் ஒலி) செல்லுகின்ற திசைகள் யாவும் வெற்றி, (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றி, வெற்றி, வெற்றி என்று, வெற்றி முழக்கமிடும், வீரத் திருமகள் எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) முடியும் என்பதை முன்னுரையாக்கி, முடியாது என்பதை முடிவுரையாக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) முத்திரை பதிக்கின்ற முத்தமிழ் தாய் எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டின் உரிமைகளைக் கட்டிக் காக்கின்ற காவல் அரண்,

தமிழர் தம் உரிமைகளை விட்டுக்கொடுக்காத வீரக் கனவே எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) தினம், தினம் சாதனைகள், திசையெங்கும் வாழ்த்தொலிகள், மனம் நிறைந்த மனிதர்களெல்லாம் மகிழ்ந்து கொண்டாடும் மகர ஜோதியே, எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டின் வளம் காத்து, (மேசையைத் தட்டும் ஒலி) நலம் காத்து, தமிழர்களின் குணம் காத்து, ஈடில்லா புகழ் சேர்க்கும் எழுச்சித் தாயே, எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழே தன் உயிராய், தமிழகமே தன் உணர்வாய், தமிழ்நாட்டின் முன்னேற்றமே தன் இலட்சியமாய், (மேசையைத் தட்டும் ஒலி) தன் வாழ்வையே அர்ப்பணித்து, தவ வாழ்வு வாழும் தங்கத் தலைவியே, எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் 100-வது முறையும் எங்கள் அம்மாதான் முதலமைச்சர் என்பதற்கு அச்சாரமாய், (மேசையைத் தட்டும் ஒலி) 6-வது முறையாக தமிழகத்தின் முதலமைச்சராக அரியணை ஏறிய வெற்றி வீராங்கனை, எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) சூழ்ச்சி வலை பின்னிய சூது மதியாளர்களை முடிவு கட்டி, வீழ்த்திடலாம் என நினைத்த விஷமங்களை இறுதி செய்து, எட்டு வேலை, சித்து வேலை என எந்த வேலை செய்தாவது சாய்த்துவிட வேண்டும் என நினைத்த எதிரிகளை, தனித்து நின்று, தகர்த்தெறிந்து வெற்றிக் கொடி நாட்டிய வித்தகத் தலைவி எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தமிழக வரலாற்றில் திருப்புமுனை சாதனையாய், 32 ஆண்டுகளுக்குப் பின்னர் தொடர் வெற்றிபெற்று மீண்டும் முதலமைச்சராகப் பதவியேற்ற தமிழக மக்களின் ஒரே ஒப்பற்ற தலைவர், எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) 1½ கோடி தொண்டர் படையில் களப் பணி சிப்பாயும் அம்மா என்னும் திருநாமத்தை வேத மந்திரமாய் உச்சரிக்கும் கடைக்கோடி தொண்டனுமாகிய என்மீது பரிவு கொண்டு, சாமானிய விவசாயக் குடும்பத்தில் பிறந்த எளியோனுக்கும் எளியோனாகிய எனக்கு வார்டு மேலவை பிரதிநிதி, நகர இளைஞரணித் தலைவர், மாவட்ட இளைஞரணிச் செயலாளர், ஒன்றிய கழகச் செயலாளர், மாவட்டச் செயலாளர் மற்றும் அமைப்புச் செயலாளர் என கழகப் பொறுப்புகளையும், பேரூராட்சித் தலைவர், நகராட்சித் தலைவர், 2006 ஆம் ஆண்டில் பேரூர் சட்டமன்ற உறுப்பினர், 2011 ஆம் ஆண்டில் தொண்டாமுத்தூர் சட்டமன்ற உறுப்பினர், அமைச்சர்

என பல்வேறு அரசுப் பதவிகளை வழங்கி, தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதியில் 2016-ல் மீண்டும் போட்டியிட வாய்ப்பளித்து, மாண்புமிகு அம்மா அவர்கள் தனது ஓயாத நல்லுழைப்பால் என்னை வெற்றிபெறச் செய்து, அமைச்சராகப் பணியாற்ற மீண்டும் நல்வாய்ப்பளித்து, என்னையும், என் குடும்பத்தையும், என் சந்ததிகளையும் தினம் தினம் நலம் சூழ காத்தருளும் தெய்வத் தாய், எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் குல தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நானும், எனது சந்ததியினரும் உயிருள்ளவரை நன்றியுடன் இருப்போம் என உறுதியிட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை வெற்றிபெறச் செய்யுங்கள், இரட்டை இலைக்கு வாக்களியுங்கள் என்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விடுத்த கோரிக்கையை இதயப்பூர்வமாக ஏற்று, தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதியில் என்னை 64,041 வாக்குகள் வித்தியாசத்தில் பெரு வெற்றிபெறச் செய்த (மேசையைத் தட்டும் ஒலி) தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3-35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாரம்பரியம் மிக்க இப்பேரவையில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை ஆகிய துறைகளில் கொள்கை விளக்கக் குறிப்பினைச் சமர்ப்பித்து, அதன் தொடர்ச்சியாக நடைபெற்ற விவாதங்களுக்குப் பதிலளிக்கும் வாய்ப்பினை எனக்கு அளித்த எங்கள் அம்மா மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் மீண்டும் எனது நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியோடு எனது பதிலுரையைத் தொடங்குகின்றேன்.

நகராட்சி நிருவாகம், குடிநீர் வழங்கல் துறை. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அட்சரத்தில் அகரம்,

அள்ளித் தருவதில் அட்சயம், மலைகளில் மேரு, கலைகளில் பரதம், நதிகளில் கங்கை, நகரங்களில் காசி, வேதங்களில் சாமம், மாதங்களில் மார்கழி இவையெல்லாம் புனிதமானது என மக்கள் போற்றி வணங்குகிறார்கள், புகழ்ந்து பேசுகிறார்கள். ஆனால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புனிதமாகக் கருதுவது, மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளைத்தான். (மேசையைத் தட்டும் ஒலி) "மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளைப் புனிதமாகக் கருதுகிறேன்; அவற்றை நிறைவேற்றுவதையே முதல் கடமையாகக் கொண்டுள்ளேன்'' என்பது மாண்புமிகு அம்மா அவர்களின் அமுத முழக்கமாகும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த 5 ஆண்டுகளில், தமிழக மக்களுக்கு தான் அளித்த வாக்குறுதிகளையெல்லாம் நிறைவேற்றி, ஒரு முன்னேற்றத் தமிழகத்தை, முதன்மைத் தமிழகத்தை உருவாக்கியுள்ளார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய சிந்தனையால், சிறப்பான செயல்திறனால், செயலாக்கப்பட்ட, அற்புதமான புதுமைத் திட்டங்களால், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை தனது பங்களிப்பை சிறப்புடன் அளித்து, ஒரு முன்னோடித் துறையாகத் திகழ்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியா முதன்முதலாக விண்ணிலே செயற்கைக்கோளை ஏவியபோது ஏற்பட்டது வியப்பு; எவரெஸ்ட் சிகரத்தின் உச்சத்தை மனிதன் தொட்டபோது ஏற்பட்டது மலைப்பு; நிலவில் மனிதன் காலடி எடுத்து வைத்தபோது ஏற்பட்டது பிரமிப்பு; ஆனால் மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த 5 ஆண்டுகளில் மேற்கொண்ட குடிநீர்த் திட்டப் பணிகளையும், அதற்காக, அவர்கள் அளித்த நிதி ஒதுக்கீட்டையும் அறியும்போது, இதற்கும் மேலான வியப்பும், மலைப்பும், பிரமிப்பும், நமக்கு ஏற்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், 5 ஆண்டுக் காலத்தில், குடிநீர் திட்டப் பணிகளுக்காக, 21,478 கோடியே 18 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, மகத்தான சாதனை படைக்கப்பட்டது என்பதை பெருமையுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த திமுக ஆட்சியில், 5 ஆண்டுக் காலத்தில் செலவழிக்கப்பட்ட தொகையைவிட, 14,197 கோடியே 76 இலட்சம்

ரூபாய் அதிகமாக வழங்கி, மாண்புமிகு அம்மா அவர்கள் குடிநீர்த் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தியுள்ளார்கள் என்பதை இப்பேரவைக்குப் பெருமிதத்துடன் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உயிர் நீராம் குடிநீர் தேடி இரவு பகல் என்று பாராமல் கண் விழித்து, காலிக் குடங்களை இடுப்பிலும், கைகளிலும் ஏந்தி பெண்கள் தெருத் தெருவாக அலைந்த கொடுமையெல்லாம் நம் கண் முன்னே கண்ட காலம் முன்பு இருந்தது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று, ஊரகக் குடிநீர்த் திட்டங்கள், நகர்ப்புற குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள், சிறிய மற்றும் பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், ஒகேனக்கல் போன்ற சிறப்புக் குடிநீர்த் திட்டங்கள், கடல்நீரை குடிநீராக்கும் திட்டங்கள், சென்னை மாநகர குடிநீர்த் திட்டங்கள் என, வகை வகையான குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றி, தமிழக மக்களின் தாகம் தீர்த்துள்ளார்கள் என்பதுதான் எங்கள் அம்மா அவர்களின் தனிப் பெருமை.

மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில், 98.98 விழுக்காடு குடியிருப்புகளுக்கு குழாய்மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுவதுடன், 24,603 ஊரகக் குடியிருப்புகள், 20,691 அரசுப் பள்ளிகள், விடுதிகள், அங்கன்வாடி மையங்கள், ஆரம்ப சுகாதார மையங்கள் ஆகியவற்றிற்கு குடிநீர்த் திட்டப் பணிகளும், 2,23,007 குடிநீர் விநியோகப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. இதற்கான செலவினம் 9,898 கோடியே 1 இலட்சம் ரூபாய் ஆகும்.

நகர்ப்புறங்களில், 566 நகர்ப்புற குடிநீர்த் திட்டப் பணிகள் மற்றும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 185 நகர்ப்புற குடிநீர்த் திட்டப் பணிகள் மற்றும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கான மொத்த செலவினம் 4,833 கோடியே 23 இலட்சம் ரூபாய் ஆகும்.

சேலம், விருதுநகர், வேலூர், மதுரை, சிவகங்கை போன்ற 8 கூட்டுக் குடிநீர் திட்டங்களைப் பற்றி கடந்த ஆட்சியில் அறிவிக்கப்பட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிறைவேற்றினார்கள் என்று நான் ஏற்கெனவே கூறியிருந்தேன். அதேபோல, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி

அம்மா அவர்களின் ஆணைப்படி கடலூர், தஞ்சாவூர், கோயம்புத்தூர், கன்னியாகுமரி, திண்டுக்கல், திருச்சி, சேலம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் 9 பெரிய கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. இதற்கான மதிப்பீடு 2,548 கோடியே 56 இலட்சம் ரூபாய் ஆகும்.

பிற்பகல் 3-40

கடந்த தி.மு.க. ஆட்சியின் முடிவில், நாளொன்றுக்கு 1,150 மில்லியன் லிட்டர் குடிநீர் மட்டுமே வழங்கப்பட்டது. ஆனால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், இந்த அளவானது 692 மில்லியன் லிட்டர் அதிகரிக்கப்பட்டு தற்போது சராசரியாக நாளொன்றுக்கு 1842 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் 1986 ஆம் ஆண்டு 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டதும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 1994 ஆம் ஆண்டு 350 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதும், 2001 ஆம் ஆண்டு பன்னாட்டு நிதி ஆதாரம் பெறுவதற்கான ஆயத்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டதுமான ஒகேனக்கல் குடிநீர் மற்றும் Fluoride பாதிப்பு குறைப்புத் திட்டம் 2011 ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீண்டும் முதலமைச்சராக பொறுப்பேற்று முந்தைய தி.மு.க. ஆட்சியில் விட்டுச்சென்ற மீதமிருந்த 82 விழுக்காடு பணிகளை விரைந்து முடித்து, 2013 ஆம் ஆண்டில் தமது பொற்கரங்களால் தமிழகத்திற்கு அர்ப்பணித்தார்கள். இதற்கான செலவினம் 1928 கோடியே 80 இலட்சம் ரூபாய் ஆகும். ஒகேனக்கல் குடிநீர் மற்றும் Fluoride பாதிப்பு குறைப்புத் திட்டமானது 6,755 ஊரகக் குடியிருப்புகளைச் சேர்ந்த 29.80 இலட்சம் மக்கள் மட்டுமே பயன் அடையும் வகையில் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் இதனை 7,639 ஊரகக் குடியிருப்புகளைச் சேர்ந்த 33 இலட்சம் மக்களுக்கு நாளொன்றுக்கு சராசரியாக 120 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, குடிநீர் திட்டம் குறித்து இதற்கு முன்பு பேசியபோது, மாண்புமிகு அம்மா அவர்கள் நிறைவேற்றப்பட்ட நான்கு நிறுவனங்கள்,

வாராவாரம் மாவட்ட ஆட்சித் தலைவரால் இன்றைக்கு எந்த எந்த குடியிருப்புகளுக்கு தண்ணீர் சரியாக போகிறது என்று அவர்களே நிருவகித்து, அந்தக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவரால் நடத்தப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் நலனை மனதில் கொள்ளாத முந்தைய தி.மு.க. அரசை அகற்ற மாண்புமிகு அம்மா அவர்கள் 2011 சட்டமன்ற தேர்தலுக்கு முன் எழுச்சி பயணம் சென்றபோது, கோவையிலே ஒரு மக்கள் கடல், திருச்சியிலே ஒரு மக்கள் கடல், மதுரையிலே ஒரு மக்கள் கடல் என செல்லும் இடமெல்லாம் (மேசையைத் தட்டும் ஒலி) திரண்ட மக்கள் கடலை மகாசக்தியாக மாற்றிக் காட்டியவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

உப்புக் கடல் நீரையும் இனிக்கும் குடிநீராக மாற்றிக் காட்டி குடிநீர் பிரச்சினைக்கு மாற்றுத் தீர்வு கண்டார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மீஞ்சூரில் நாள் ஒன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் கடல் நீரை குடிநீராக மாற்றும் திட்டத்திற்கு 2004 ஆம் ஆண்டிலேயே அடித்தளம் அமைத்துத் தந்தார்கள்.

அதேபோல, நெம்மேலி கடல் நீரை குடிநீராக மாற்றும் திட்டத்திலே எஞ்சியிருந்த 75 சதவிகிதப் பணிகளை முடித்து, இரண்டே ஆண்டுகளில் துரிதமாக செயல்படுத்தி, 2013 ஆம் ஆண்டில் தமது பொற்கரங்களால் தொடங்கி வைத்து, சென்னை மாநகர மக்களுக்கு நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் குடிநீர் நிரந்தரமாக கிடைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழிவகை செய்தார்கள். நெம்மேலியில் தற்போது கடல் நீரை குடிநீராக்கும் நிலையத்திற்கு அருகில் 1371 கோடியே 86 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதலாக நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையத்தை அமைத்திட ஜெர்மானிய நிதி உதவிக்கான ஒப்பந்த ஆவணம் 28-6-2016 அன்று கையொப்பமிடப்பட்டு, விரைவில் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன், பேரூரில் 3,227 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள

நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பல முயற்சிகள் எடுக்கப்பட்டு, இன்றைக்கு மத்திய அரசின் முன்னுரிமை பட்டியலில் முதல் இடத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்தத் திட்ட அறிக்கை ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் ஒப்புதல் பெறப்பட்டு விரைவில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் 3,20,000 மக்கள் பயன்பெறும் வகையில் குதிரைமொழியிலும், தூத்துக்குடி மாவட்டத்தில் 8,05,000 மக்கள் பயன்பெறும் வகையிலும், ஆலந்தலையிலும் தலா 60 மில்லியன் லிட்டர் கடல் நீரை குடிநீராக்கும் நிலையங்கள் அமைத்திட 28-7-2015 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் நிருவாக ஒப்புதல் பெறப்பட்டு, இத்திட்டங்களுக்கான இடங்கள் தெரிவு செய்யப்பட்டு, இரு மாவட்ட ஆட்சியர்கள் உள் நுழைவு அனுமதி பெறப்பட்டுள்ளது. இதற்கான நிதி ஒதுக்கீடு மதிப்பீடு 1355 கோடி ரூபாய் ஆகும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேற்கொண்ட தீவிர முயற்சியின் பயனாக கிடைத்திடும் இந்தக் கடல் நீரை குடிநீராக்கும் திட்டங்கள் யாவும் தமிழகத்தின் தாகம் தீர்க்கும் வரப்பிரசாதங்களாக அமையும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகருக்கு தொடர்ந்து 4 ஆண்டுகளுக்கு பருவ மழையினால் குடிநீர் வழங்கும் ஏரிகளுக்கு போதுமான நீர் வரத்து இல்லாத நிலைமை ஏற்பட்டது. எனினும், சென்னை மாநகர மக்கள் குடிநீர் பற்றாக்குறையால் எவ்வகையிலும் பாதிக்கப்படாமல் இருக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சென்னை மாநகராட்சி பகுதிகளிலே 5 ஆண்டுகளில் 3,212 கோடியே 17 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் திட்டப் பணிகளை மேற்கொண்டு செயல்படுத்தினார்கள்.

பிற்பகல் 3-45

முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 1,025 கோடி ரூபாய் அளவிலான குடிநீர்த் திட்டப் பணிகள் மட்டுமே

மேற்கொள்ளப்பட்டன என்பதை இப்பேரவைக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகர மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்ய, இன்று காலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே அதை இங்கே குறிப்பிட்டார்கள். புதிய வீராணம் திட்டத்தினை 720 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வெற்றிகரமாக நிறைவேற்றி, நாள் ஒன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் குடிநீர் நிரந்தரமாகக் கிடைத்திட வழிவகை செய்தவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்கிடும்பொருட்டு, கும்மிடிப்பூண்டி அருகே தேர்வாய்க்கண்டிகையில் 1,000 மில்லியன் கன அடி கொள்ளளவுடைய ஒரு புதிய நீர்த்தேக்கம் உருவாக்கப்பட்டு வருகிறது.

மழைப் பொழிவு குறைவாக இருந்த காலத்தில், திருவள்ளூர் மாவட்டத்தில் விவசாயக் கிணறுகளை வாடகைக்கு அமர்த்தி, சென்னை மாநகர மக்களுக்கு நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டருக்கு மேல் குடிநீர் கிடைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழிவகை செய்தார்கள்.

கடந்த தி.மு.க. ஆட்சியில், 5 வருட காலத்தில், சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நாளொன்றுக்கு 597 மில்லியன் லிட்டர் குடிநீர் மட்டுமே வழங்கப்பட்டது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நாள்தோறும் 830 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, தாம்பரம், பல்லாவரம், பம்மல், மற்றுமுள்ள நகர்ப்புற உள்ளாட்சிப் பகுதிகளுக்கும், திருப்பெரும்புதூர் பேரூராட்சிக்கும் 278 கோடியே 73 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பிரதான குழாய் பதித்தல் முதலான குடிநீர்த் திட்டப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன என்பதையும், இப்பணிகள் ஆகஸ்ட் 2016-ல் முடிவுற்று,

இப்பகுதி மக்களின் நீண்ட நாள் குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, சென்னை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட 42 உள்ளாட்சி அமைப்புகளுக்கு குடிநீர் வழங்கிட சிறப்புக் கவனம் செலுத்தி, 593 கோடியே 66 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு அம்மா அவர்கள் மேற்கொண்ட ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளின் காரணமாக இப்பகுதிகளுக்கு நாளொன்றுக்கு 56 மில்லியன் லிட்டராக வழங்கப்பட்டு வந்த குடிநீர், added area-ஆக 45 உள்ளாட்சி அமைப்புகளுக்கு அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக தற்போது 110 மில்லியன் லிட்டராக உயர்த்தி சென்னை மாநகராட்சிப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது என்பதைப் பெருமையுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, “அம்மா என்றால் அன்பு” என்று நம் அம்மா அவர்களே பாடியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அன்பினால் சாதிக்க முடியாதது எதுவுமே இல்லை. அம்மா அவர்களால் சாதிக்க முடியாததும் எதுவுமே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) கொள்கைக்கு உயிர் கொடுத்தார் அம்மா; தமிழ்நாடு தலைநிமிர உணர்வு கொடுத்தார் அம்மா; ஏழை எளியவர் பசியாற ‘அம்மா உணவகம்’ கொடுத்தார் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்கள் செயல்படுத்தும் மகத்தான திட்டமான ‘அம்மா உணவகம்’ திட்டத்தின்கீழ், சென்னை மாநகரில் 300 இடங்களிலும், தமிழகத்தின் இதர மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் 247 இடங்களிலும் என மொத்தம் 547 இடங்களில், சிறப்பான முறையில் செயல்பட்டுவரும் அம்மா உணவகங்களின்மூலம் 31-7-2016 ஆம் தேதி வரை 32 கோடியே 14 இலட்சம் இட்லிகளும், 12 கோடியே 60 இலட்சம் கலவை சாதங்களும், 15 கோடியே 44 இலட்சம் சப்பாத்திகளும் மலிவான விலையில் பெற்று, ஏழை எளிய மக்கள் பசியாறியுள்ளனர் என்பதை மனநிறைவுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி, சென்னை மாநகராட்சியில் 107 இடங்களிலும், 4 அரசு மருத்துவமனைகளிலும் ஆக 111 இடங்களில் புதிதாக 'அம்மா உணவகங்கள்' அமைக்கும் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.

சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கு உந்து சக்தியாகத் திகழும் மிகச் சிறந்த திட்டம் எனப் பாராட்டைப் பெற்றுள்ள மாண்புமிகு அம்மா அவர்களின் "அம்மா உணவகம்" திட்டம், குஜராத், கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம், உத்தரகாண்ட், ராஜஸ்தான், புதுடெல்லி ஆகிய மாநிலங்கள், (மேசையைத் தட்டும் ஒலி) மற்றும் எகிப்து நாட்டின் பாராட்டைப் பெற்றதுடன், ஆந்திரா, கர்நாடகா போன்ற பல மாநிலங்களில் அம்மா உணவகங்கள் அமைத்து, இத்திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றார்கள் என்பதை இப்பேரவையில் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில், மாநகராட்சிகளிலும், நகராட்சிகளிலும், 55 பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், 20 திட்டங்கள் மட்டுமே செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. அவர்கள் அறிவித்த மீதமுள்ள 35 திட்டங்களைக் கைவிட்டு, அவர்களே கிடப்பில் போட்டார்கள்.

பிற்பகல் 3-50

செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட 20 திட்டங்களில் ஒரு திட்டத்தை மட்டுமே முடித்தார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 5 ஆண்டுக் கால ஆட்சியில், போர்க்கால அடிப்படையில் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனாக மேற்கொள்ளப்பட்ட 19 திட்டப் பணிகளில் 13 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன என்பதையும், மீதமுள்ள 6 பணிகள் 2018 மார்ச் மாதத்திற்குள் முடிக்கப்படும் என்பதையும் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், 5 ஆண்டுக் காலத்தில், சென்னை மாநகரப் பகுதிகளில், 1,214 கோடியே 29 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான, கழிவுநீர்த் திட்டப் பணிகளைச்

செயல்படுத்தி, சாதனை படைத்துள்ளார்கள் என்பதை மிகவும் பெருமையுடன், இப்பேரவையில் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில், கழிவுநீர் திட்டப் பணிகள், வெறும் 198 கோடியே 71 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மட்டுமே மேற்கொள்ளப்பட்டன.

பெருநகர சென்னை மாநகராட்சியின் 42 விரிவாக்கப் பகுதிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, வளசரவாக்கம், ஆலந்தூர், மாதவரம் மற்றும் மீனம்பாக்கம் ஆகிய 4 பகுதிகளில், 93 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பணிகள் முடிவுற்று பயன்பாட்டில் உள்ளன. மதுரவாயல் உள்ளிட்ட 16 பகுதிகளில், 933 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

நெற்குன்றம், முதலான 11 பகுதிகளில், 789 கோடியே 7 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மீதமுள்ள 11 பகுதிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை, கலந்தாய்வினர்மூலம் தயாரிக்கப்பட்டு வருகிறது என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்கத்தில் செம்பு கலக்கலாம்; அதனால் ஆபரணங்கள் உறுதி பெறும். சந்தனத்தில் பன்னீர் கலக்கலாம்; அதனால் மணம் அதிகமாகும். பாலிலே தேன் கலக்கலாம்; அதனால் சுவை கூடுதலாகும். ஆனால், நீரிலே மாசு கலந்தால் மனிதனின் ஆரோக்கியம் பாதித்து, வாழ்வையே கேள்விக்குறியாகிவிடும். அதனால்தான், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சென்னை மாநகர நீர்வழிப் பாதைகளில், கழிவுநீர் கலந்து, நீர்வழிகள் மாசு அடைவதைத் தடுக்க, முனைப்புடன் நடவடிக்கை எடுத்து வருகிறார். இதன்படி, 337 இடங்களில் கழிவுநீர் கலப்பதைத் தடுப்பதற்கான பணிகளை மேற்கொள்ள, மாண்புமிகு அம்மா அவர்கள் 300 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து ஆணையிட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) முதற்கட்டமாக, 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 179 இடங்களில், கழிவுநீர் கலப்பதைத் தடுப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 73.83 விழுக்காடு பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இப்பணிகள் அனைத்தும், ஜனவரி, 2017-க்குள் முழுமையாக

முடிக்கப்படவுள்ளன. மீதமுள்ள 158 இடங்களில், பணிகளை மேற்கொள்ள, 163 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 100 ஆண்டு பெய்யாத மழை மூன்றே நாட்களில் பேய் மழையாய் பெய்த போதும், 'தானே' புயல் சுழன்றடித்து மக்கள் வாழ்வைக் கலங்கடித்த போதும், சுனாமிப் பேரலை சுருண்டெழுந்து சூறாவளித் தாக்குதல் நடத்திய போதும், துயர்கொண்ட மக்களின் விழிநீரை விரைந்து துடைத்து வேதனையைத் தீர்த்த அரசு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், 5 ஆண்டுக் காலத்தில், மொத்தம் 345 கி.மீ. நீளத்திற்கு, 569 கோடியே 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மழைநீர் வடிகால் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆனால், கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில், வெறும் 204 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மட்டுமே, மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்பட்டன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி, சென்னை மாநகராட்சியின் விரிவாக்கப்பட்ட பகுதிகளிலும், ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்கள் அமைக்கும் திட்டம், அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு, 4,034 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முதற்கட்டமாக, 1,101 கோடியே 43 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், அடையாறு மற்றும் கூவம் ஆறுகளின் வடிநிலத்தில், ஒருங்கிணைக்கப்பட்ட மழைநீர் வடிகால்கள் அமைக்கும் பணிகள், 39 சிப்பங்களாக எடுக்கப்பட்டு, 35 சிப்பங்களில் 270 கி.மீ. நீளத்திற்கு பணிகள் நடைபெற்று வருகின்றன. கால்வாய்களில் நடைபெற வேண்டிய எஞ்சிய 4 சிப்பப் பணிகளுக்கு உலக வங்கியின் அனுமதி கிடைத்தவுடன், ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், 5 ஆண்டுக் காலத்தில், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில், திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை

மேம்படுத்த, 1,515 கோடியே 19 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, சாதனை படைக்கப்பட்டுள்ளது. ஆனால், கடந்த தி.மு.க. ஆட்சியின் 5 ஆண்டு காலத்தில், வெறும் 303 கோடியே 51 இலட்சம் ரூபாய் மட்டுமே, திடக்கழிவு மேலாண்மைப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மாண்புமிகு அம்மா அவர்கள், நிதி நிலைமை நலிவுற்ற உள்ளாட்சி அமைப்புகளில், திடக்கழிவு மேலாண்மைத் திட்டப் பணிகளைச் செயல்படுத்த, 2013-14 ஆம் ஆண்டு முதல், ஆண்டுதோறும் 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, வழங்கி வருகிறார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சியில், 18,975 துப்புரவுப் பணியாளர்கள்மூலம், 5,422 மூன்று சக்கர மிதிவண்டிகள், 369 பெரிய மற்றும் சிறிய காம்பேக்டர்கள் மற்றும் 11,089 காம்பேக்டர் வாகன குப்பைத் தொட்டிகளைக் கொண்டு, திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் மிகவும் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பிற்பகல் 3-55

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சென்னை மாநகரின் உட்கட்டமைப்பை, உலகத் தரத்திற்கு இணையாகச் செயல்படுத்த, சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் என்னும், சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள், இத்திட்டத்தைச் செயல்படுத்த, கடந்த 5 ஆண்டுக் காலத்தில், 1,488 கோடி ரூபாயை, முழு மானியமாக வழங்கியுள்ளார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி, இதுவரை, சுமார் 1,146 கிலோ மீட்டர் நீளமுடைய சாலைகளும், 171 கிலோ மீட்டர் நீளமுடைய மழைநீர் வடிகால்களும், 239 கிலோ மீட்டர் நீளமுடைய நடைபாதைப் பணிகளும், 12,952 எண்ணிக்கையிலான தெரு விளக்குகள் அமைக்கும் பணிகளும், சுமார் 1,313 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும், 387 கிலோ மீட்டர்

நீளமுடைய 471 பேருந்து தட சாலைகள், மற்றும் 5,525 கிலோ மீட்டர் நீளமுடைய 33,374 உட்புறச் சாலைகளில், 2,889 கோடியே 1 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பழுதடைந்த 3,032.76 கிலோ மீட்டர் நீளமுடைய 17,056 உட்புறச் சாலைகள் மற்றும் 199.16 கிலோ மீட்டர் நீளமுள்ள 252 பேருந்து சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி, நடப்பாண்டில், 142.82 கிலோ மீட்டர் நீளமுடைய பேருந்து தட சாலைகள், மற்றும் 1,096.93 கிலோ மீட்டர் நீளமுடைய உட்புறச் சாலைகளைப் புதுப்பிக்கும் பணிகள், மொத்தம் 1,015 கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில், சென்னை நீங்கலான பிற மாநகராட்சிகள், மற்றும் நகராட்சிகளில், கடந்த 5 ஆண்டுகளில், 8,478 கிலோ மீட்டர் நீள சாலைகள், 3,873 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, 7,380 கிலோ மீட்டர் நீளச் சாலைகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய சாலைப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், கடந்த 5 ஆண்டுக் காலத்தில், பேரூராட்சிகளில் 1,376 கோடியே 47 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 5,105 சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 4,881 சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 224 சாலைப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சிக் காலத்தில்—இன்றைக்கு பாலங்களைப் பற்றி இதற்கு முன்பாகவே பேசிவிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் நகர்ப்புற உள்ளாட்சி கட்டமைப்புகளை மேம்படுத்த, 100 சதவிகித மாநில நிதியுதவியுடன், சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் ஆகிய மாபெரும் திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் சிறப்புமிக்க ஆட்சியில், கடந்த 5 ஆண்டுக் காலத்தில், சென்னை மற்றும் அதனைச் சார்ந்த புறநகர் பகுதிகளுக்காக "சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் (CMCDM)" கீழ் வருடத்திற்கு 500 கோடி ரூபாயும், 2016-2017 ஆம் ஆண்டில், நடைபெற்று வரும் பணிகள் உட்பட சென்னை பெருநகர மேம்பாட்டு இயக்கத்திற்காக, 800 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

இதைத் தவிர, மாண்புமிகு அம்மா அவர்கள், இதர 11 மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் கட்டமைப்புகளை மேம்படுத்த, ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்திற்கு (IUDM) வருடத்திற்கு 750 கோடி ரூபாயும், 2016-2017 ஆம் ஆண்டில், நடைபெற்று வரும் பணிகள் உட்பட, இத்திட்டத்திற்கு 886 கோடி ரூபாயும் வழங்கி சாதனை படைத்துள்ளார்கள் என்பதை இப்பேரவையில் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சொன்ன திட்டங்கள் மட்டுமல்ல, சொல்லாத திட்டங்களையும் நிறைவேற்றும் ஒரே ஆட்சி மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி! (மேசையைத் தட்டும் ஒலி) வாக்களித்த மக்களுக்கு, வாக்கு மாறாமல் நிறைவேற்றிய திட்டம்தான் அம்மா குடிநீர்த் திட்டம்! சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை ஏழை எளிய மக்களால் பார்க்கத்தான் முடிந்தது. பணம் கொடுத்து வாங்க வசதியில்லை, அவர்களுக்கு அது கானல் நீராகவே இருந்தது. ஏழைகளின் இல்லங்களுக்கும் சுத்திகரிக்கப்பட்ட, தரமான குடிநீர் கொடுப்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் அம்மா குடிநீர் திட்டத்தை கடந்த 13-2-2016 அன்று தொடங்கி வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முதற்கட்டமாக, சென்னை மாநகராட்சியில், ஏழை, எளிய மக்கள் அதிகம் வசிக்கும் 20 இடங்களில், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையங்கள், 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி, ஒவ்வோர் ஏழைக் குடும்பத்திற்கும், ஸ்மார்ட் கார்டு (Smart Card) மூலம், நாளொன்றுக்கு 20 லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், தானியங்கி நிலையத்தில் விலையில்லாமல் வழங்கப்படுகிறது. 31-7-2016 வரை சராசரியாக 11,000 குடும்பங்களுக்கு, நாளொன்றுக்கு 20 லிட்டர்

வீதம், மொத்தம் 1 கோடியே 96 இலட்சம் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு, பயனடைந்துள்ளனர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-00

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி, ஏழை, எளிய மக்கள் வசிக்கும் பகுதிகளில் மேலும் 30 குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழக வரலாற்றில், இதுவரை, எந்த ஆட்சிக் காலத்திலும் செய்யாத சாதனையாக, நிதி ஒதுக்கீடு செய்தும், இணை சொல்ல முடியாத திட்டங்களின்மூலம் எண்ணற்ற பணிகளை மேற்கொண்டும், சரித்திர சாதனை படைத்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலம், நகர்ப்புற உள்ளாட்சி வரலாற்றில் ஒரு பொற்காலம் என்று தமிழக மக்கள் போற்றிப் புகழ்கின்றனர் என்பதை இப்பேரவையில் மகிழ்ச்சியோடும், பெருமையோடும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தன்னல வளர்ச்சிக்காக திட்டமிடுபவர்கள் வெற்றியடைய முடியாது. தமிழக மக்களுடைய வளர்ச்சிக்காக திட்டமிட்டுப் பாடுபடும் எங்கள் தாயை யாராலும் வெல்ல முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உண்மையை உலகிற்கு உணர்த்திய தேர்தல்தான் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல்.

ஒரு நாட்டின் முதுகெலும்பே கிராமங்கள்தான். கிராமங்களில் முன்பெல்லாம் வயல் இருந்தது, வரப்பு இருந்தது, குளம் இருந்தது, குட்டை இருந்தது, நிலம், நீச்செல்லாம் நிறையவே இருந்தது. ஆனால், மக்கள் மனதில் மகிழ்ச்சிதான் இல்லாமல் இருந்தது. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி தமிழகத்தில் எப்போது வந்ததோ, அப்போதுதான் கிராமங்களைத் தேடி மகிழ்ச்சி வந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) கிராம மக்களின் முகங்களில் மலர்ச்சி வந்தது. கிராமப்புற மக்களின்மீது மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டுள்ள அளப்பரிய அன்பின் காரணமாக, அடுக்கடுக்கான திட்டங்களைத் தந்தார். கிராமங்களில் இனி எப்போதும் வசந்தம் வீசும் என்ற நம்பிக்கையைத் தந்தார்.

ஊரகப் பகுதிகளுக்கென்று, சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி, கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்தி, நகர்ப்புற மக்களுக்கு நிகரான வசதிகளுடன், கிராமப்புற மக்களும் வாழ வழிவகை செய்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள குக்கிராமங்கள் அனைத்தையும் முனைந்து முன்னேற்றி, நகரங்களுக்கு இணையான வசதியை ஏற்படுத்தித் தந்திட வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன், ஊரகப் பகுதிகளை வளமாக்க மாண்புமிகு அம்மா அவர்கள் தந்த வரப்பிரசாதம்தான் 'தாய்' திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஊராட்சிகளைச் சார்ந்த குக்கிராமங்களை அடிப்படையாகக் கொண்டு, அவற்றுக்குத் தேவையான குடிநீர், தெரு விளக்குகள், சிமெண்ட் மற்றும் தார்ச் சாலைகள், பேவர் பிளாக் சாலைகள் அமைத்தல் முதலான அடிப்படை வசதிகளை நகர்ப்புறங்களுக்கு இணையாக வழங்கிடும் வகையில், தாய் திட்டத்தை கடந்த 2011 ஆம் ஆண்டில் தொடங்கி வைத்தார்கள். இத்திட்டம், இந்தியாவிலேயே வேறெந்த மாநிலத்திலும் மேற்கொள்ளாத முன்னோடித் திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ், ஆண்டுக்கு 750 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, கடந்த ஐந்தாண்டுக் காலத்தில், 3,680 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2,31,769 பணிகள் சிறப்பாக நிறைவேற்றப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தை மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு நீட்டித்து, 3,750 கோடி ரூபாய் மதிப்பில் கூடுதலாக அடிப்படை வசதிகளை மேற்கொள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) அனைத்துத் தொகுதிகளுக்கும் சேர்த்துதான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஊரகப் பகுதிகளில் ஏழ்மை நிலையில் வாழும் மக்களுக்கு, 300 சதுர அடி பரப்பளவில், சூரிய மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் வழங்கும் திட்டத்தை 2011 ஆம் ஆண்டில் தொடங்கி வைத்தார்கள். கடந்த ஐந்தாண்டுக் காலத்தில், 5,940 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3 இலட்சம் வீடுகள்

கட்டி முடிக்கப்பட்டு, சாதனை படைக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) நடப்பாண்டில், 20,000 பசுமை வீடுகள் 420 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டித் தர மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய மற்றும் மாநில அரசுகள் இணைந்து செயல்படுத்தும், ஊரக வீட்டு வசதித் திட்டமான இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ், கடந்த ஐந்தாண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கிய 3,010 கோடியே 66 இலட்சம் ரூபாய் மாநில அரசின் பங்குத் தொகையுடன், 4 இலட்சத்து 41 ஆயிரத்து 637 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இந்த நிதியாண்டில், பிரதம மந்திரி ஊரகக் குடியிருப்புத் திட்டம் என செயல்படுத்தப்படவுள்ள இத்திட்டத்தின்கீழ், 1 இலட்சத்து 77 ஆயிரத்து 619 வீடுகள் கட்டப்பட உள்ளன என்பதையும், இதற்காக மாநில அரசின் பங்குத் தொகையாக 1,908 கோடியே 47 இலட்சம் ரூபாய் மாண்புமிகு அம்மா அவர்களால் வழங்கப்பட உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டமாக இருந்தாலும், பிரதம மந்திரி திட்டமாக இருந்தாலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோதும்கூட கூடுதலாக நிதி வழங்கினார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 4-05

அதேபோல, பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டம் என மத்திய அரசாங்கம் அறிவித்த திட்டத்திற்கும்கூட மத்திய அரசாங்கம் 72,000 ரூபாய்தான் கொடுக்கிறது, ஆனால் மாண்புமிகு அம்மா அவர்கள் 98,000 ரூபாயாகக் கொடுக்கிறார்கள். எந்தத் திட்டமாக இருந்தாலும், கிராமப்புற ஏழைகள் நல்ல முறையில் வீடு கட்ட வேண்டும் என்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கூடுதலாக நிதியை ஒதுக்கியுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்திட்டத்தில், 1 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாயாக இருந்த ஒரு வீட்டிற்கான அலகுத் தொகையை 1 இலட்சத்து 70 ஆயிரம்

ரூபாயாக மாண்புமிகு அம்மா அவர்கள் தாயுள்ளத்துடன் உயர்த்தி வழங்கியுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இல்லாமையை இல்லாது அழிக்க எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்தி புரட்சி ஏற்படுத்தியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) துறைகள் அனைத்திலும் புரட்சி ஏற்படுத்திய மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தில் ஒரு சுகாதாரப் புரட்சியை ஏற்படுத்தி, மக்கள் நலம்பெற வழிவகை செய்தார்கள்.

கடந்த 2001 ஆம் ஆண்டிலேயே 12,796 மகளிர் சுகாதார வளாகங்களைக் கட்டித் தந்தவர் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள். முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் செயல்படாமல் பழுதுபட்டுக் கிடந்த இந்த மகளிர் சுகாதார வளாகங்கள், அம்மா அவர்கள் கட்டிய 12,796 மகளிர் சுகாதார வளாகங்கள், மீண்டும் அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் 170 கோடி ரூபாய் (மேசையைத் தட்டும் ஒலி) நிதி ஒதுக்கி, மாண்புமிகு அம்மா அவர்களால் புனரமைக்கப்பட்டு, மீண்டும் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டன. இந்தத் திட்டம்தான் இன்றைக்குக் குளியலறை, துவைக்கும் அறை என மற்ற மாநிலங்களெல்லாம் பார்த்து பின்பற்றக்கூடிய திட்டம் என்பதையும் பெருமையோடு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இதனை முன்மாதிரியாகக் கொண்டு, பிற மாநிலங்களும் சுகாதார வளாகங்களை அமைக்க வேண்டுமென மத்திய அரசு கடந்த 2014 ஆம் ஆண்டில் அனைத்து மாநிலங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பியுள்ளது என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அனைத்து கிராம ஊராட்சிகளும் சுகாதாரமாகத் திகழ்ந்திட இந்தியாவிலேயே முன்னோடித் திட்டமாக மாபெரும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தை 410 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 9,000 கிராம ஊராட்சிகளில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். இத்திட்டத்தின்கீழ் 52,998 தூய்மை காவலர்கள் மற்றும் 22,704 மூன்று சக்கர மிதிவண்டிகள்/ தள்ளுவண்டிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் தமிழ்நாட்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் செயல்படுத்தப்படும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை முன்மாதிரியாகக் கொண்டு, முக்கியமாக அவர்கள் அறிவித்த கங்கை ஆறு தூய்மைப்படுத்தும் திட்டத்தின்கீழ் பயன்பெறும் 11 மாநிலங்களில் உள்ள 50 ஆயிரம் கிராம ஊராட்சிகள் மற்றும் பிற மாநிலங்களிலும் மாண்புமிகு அம்மா அவர்களின் திட்டத்தினைச் செயல்படுத்த வேண்டுமென்று இங்கே வந்து, நம்முடைய அதிகாரிகளிடம் பயிற்சி எடுத்துக்கொண்டு சென்றிருக்கிறார்கள். ஆகவே, அவ்வளவு அற்புதமான சுகாதாரத் திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்படுத்தித் தந்தார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மத்திய அரசின் ஊரக வளர்ச்சி, பஞ்சாயத்துராஜ், குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரம் ஆகிய அமைச்சகங்களின் செயலர்கள், மற்றும் கூடுதல் செயலர்கள், ராஜஸ்தான், தெலுங்கானா, கேரளா போன்ற மாநிலங்களிலிருந்து உயர் அலுவலர்கள் தமிழகம் வந்து, மாண்புமிகு அம்மா அவர்களின் திட்டச் செயல்பாட்டை நேரில் பார்வையிட்டு பாராட்டியதுடன், தங்கள் மாநிலங்களிலும் செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர் என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திறந்தவெளியில் மலம் கழிக்கும் பழக்கம் இல்லாத மாநிலமாக தமிழகத்தை மாற்றிட வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டு, 2013-2014 முதல் 2015-2016 ஆம் ஆண்டு வரை, 16 இலட்சத்து 39 ஆயிரம் தனி நபர் இல்லக் கழிப்பறைகள் 1,843 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன.

அதேபோல, நடப்பாண்டிலும் சுமார் 1,820 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 15 இலட்சத்து 17 ஆயிரம் தனி நபர் இல்லக் கழிப்பறைகள் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா

அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் 2 கோடி ரூபாய் என ஒதுக்கீட்டினை உயர்த்தியவாறு கடந்த 5 ஆண்டு காலத்தில் 2,350 கோடி ரூபாய் மதிப்பில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

அதேபோல, நடப்பாண்டிலும் இத்திட்டத்தின்கீழ் பணிகளை மேற்கொள்ள வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டு, முதற்கட்டமாக மாவட்டங்களுக்கு நிதியும் விடுவிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்களால் பெருமை பெற்றது பாட சாலைகள்; முனிவர்களால் பெருமை பெற்றது யாக சாலைகள்; யோகிகளால் பெருமை பெற்றது தியான சாலைகள்; (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களால் பெருமை பெற்றது கிராமச் சாலைகள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள், கிராமத்துப் பாதைகளும், சாலைகளும் மேம்பட வேண்டும் என்பதற்காக, சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருப்பவர். அனைத்துப் பிரிவினரையும் இணைக்கும் அன்புப் பாலமாக விளங்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பாலங்கள் அமைத்து கிராமங்களை இணைப்பதில் அக்கறை செலுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

“ஐநூறுக்கும் அதிகமாக மக்கள் தொகை உள்ள, ஒவ்வொரு கிராமத்திற்கும், தார்ச் சாலைகள் அமைக்கப்படும் எனவும், பிற குக்கிராமங்களுக்கு, அனைத்துப் பருவ காலங்களிலும் பயன்படுத்தத்தக்க, சாலைகள் அமைக்கப்படும்” எனவும், அறிவித்தபடி, கடந்த ஐந்தாண்டுக் கால பொற்கால ஆட்சியில், சாலை வசதி இல்லாத கிராமங்களே இல்லை என்ற சாதனையை உருவாக்கினார். மக்களை இணைக்கின்ற அன்புப் பாலமாக விளங்கும் அம்மா அவர்கள் கிராமங்களை இணைப்பதற்குப் பாலங்கள் பல தந்தார்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த ஐந்து ஆண்டுக் காலத்திலே, ஊராட்சிப் பகுதிகளில் போடப்பட்ட சாலைகளைப் பார்த்தீர்களென்றால், கிட்டத்தட்ட 15 வருடங்களில்

செய்யப்படக்கூடிய வேலைகளை, இந்த ஐந்து ஆண்டுகளில் கிராமப்புறச் சாலைகளுக்காக இன்றைக்கு நிதியொதுக்கி, அதிகமான சாலைகள் போடப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு எங்கு பார்த்தாலும், கிராமச் சாலைகள் எவ்வளவு அழகாக இருக்கின்றன என்பது அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தெரியும் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள், ஊரகச் சாலைகள் பராமரிப்பிற்கென, முதன் முறையாக, தனியாக நிதி ஒதுக்கீடு செய்து, கடந்த 5 ஆண்டுகளில், 1,481 கோடி ரூபாய் மதிப்பில், பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பொதுவாக, ஓர் ஆண்டில் சுமார் 1,500 கி.மீ. நீளமுள்ள மண் சாலைகள்தான், தார்ச் சாலைகளாக மேம்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படும். அவ்வாறு கணக்கிட்டால், கடந்த 5 ஆண்டுகளில் சுமார் 7,500 கி.மீ. நீளமுள்ள மண் சாலைகள்தான், தார்ச் சாலைகளாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், கிராமப்புற மக்களின் மேம்பாட்டில் என்றும் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு அம்மா அவர்கள், இதுவரை இல்லாத வகையில், 4,584 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ததன்மூலம், (மேசையைத் தட்டும் ஒலி) 22,758 கி.மீ. நீளமுள்ள மண்/சரளைச் சாலைகள், தார்ச் சாலைகளாக மேம்படுத்தப்பட்டுள்ளன. இது, முன் எப்போதும் செய்யப்படாத மாபெரும் சாதனையாகும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்களின்கீழ், பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி, 9,650 கிலோ மீட்டர் நீளமுள்ள தார்ச்சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. முன் எப்போதும் இல்லாத வகையில், கடந்த 5 ஆண்டுகளில், 46,535 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை மேம்பாட்டிற்கு, 8,786 கோடி ரூபாய் நிதியினை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்து, பணிகள் மேற்கொள்ள ஆணையிட்டுள்ளார்கள். ஆனால், முந்தைய தி.மு.க. ஆட்சியின் 5 ஆண்டுக் காலத்தில், சாலைப் பணிகளுக்கு 3,863 கோடி ரூபாய் மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்,

4,923 கோடி ரூபாயைக் கூடுதலாக வழங்கி, ஊரகச் சாலைகள் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு, சாதனை படைத்துள்ளார்கள் என்பதை இப்பேரவைக்குப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊரகப் பகுதிகளில் பாலங்கள் அமைக்கும் பணிகளைப் பொறுத்தமட்டில், (குறுக்கீடுகள்) பாலங்களைப் பற்றி முன்பே நான் பேசிவிட்டேன்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் மற்ற மாநிலங்களுக்கெல்லாம் முன்னோடியாக விளங்குபவர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தைச் செயல்படுத்துவதில், அகில இந்திய அளவில் முதலிடம் பெற்று, மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருவது மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியிலேதான். (மேசையைத் தட்டும் ஒலி) 2012-2013 ஆம் ஆண்டில் "சமூகப் பங்களிப்பு" என்ற வகைப்பாட்டின்கீழ், மத்திய அரசு வழங்கும் சிறந்த மாநிலத்துக்கான விருதைப் பெற்றது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு. 2014-2015 ஆம் ஆண்டில் பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து திட்டத்தினைச் சிறப்பாகச் செயல்படுத்தியதற்காக தேசிய விருதைப் பெற்றது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு என்பதை மிகப் பெருமையுடன் இப்பேரவையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஓர் ஊராட்சியில் ஒரு பணி மட்டுமே செய்வது என்றிருந்த நிலையை மாற்றி, ஓர் ஊராட்சியில் ஒன்றுக்கு மேற்பட்ட பணிகளை எடுத்துச் செய்திட வழி வகுத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

அதேபோல, மாற்றுத் திறனாளிகளையும் இத்திட்டத்தில் பங்கேற்றிடச் செய்து, அவர்களுக்கென சிறப்புப் பணிகள் ஒதுக்கித் தந்தும், ஏனைய தொழிலாளர்கள் செய்யும் பணிகளில், 50 விழுக்காடு பணிகள் மட்டுமே செய்தால் போதுமானது எனவும் சலுகை அளித்து, 1.38 கோடி மனிதசக்தி நாட்கள் உருவாக்கப்பட்டு, 217 கோடியே 77 இலட்சம் ரூபாய் ஊதியமாக மாற்றுத் திறனாளிகளுக்கு மட்டும் மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியுள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த

நடவடிக்கையை மற்ற மாநிலங்களும் பின்பற்ற மத்திய அரசு அறிவுறுத்தி, அவர்களும் பின்பற்றியிருக்கிறார்கள்.

பிற்பகல் 4-15

முந்தைய திமுக ஆட்சியில் 5 ஆண்டுகளில், 71.06 கோடி மனிதசக்தி நாட்கள் மட்டுமே உருவாக்கப்பட்டன. தொழிலாளர்களுக்கு ஊதியமாக, 5,760 கோடி ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், கடந்த 5 ஆண்டுகளில், 173.81 கோடி மனிதசக்தி நாட்கள் உருவாக்கப்பட்டு, தொழிலாளர்களுக்கு ஊதியமாக, 21,770 கோடி ரூபாய் வழங்கி, தமிழகம் இந்தியாவிலேயே முதலிடத்தை வகிக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 2015-2016 ஆம் ஆண்டில், 31 கோடியே 41 இலட்சம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து, மகளிருக்கு வேலைவாய்ப்பு வழங்குவதிலும் தேசிய அளவில் தமிழ்நாடு, முதலிடம் வகிக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, தேசிய அளவில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 38,500 கோடி நிதியில், தமிழ்நாட்டிற்கான பங்கு, 6,404 கோடி ரூபாய் ஆகும். இது தேசிய அளவில் 17 விழுக்காடு ஆகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருளாட்சியாக இருந்த தமிழகத்தை ஒளியாட்சியாக மாற்றியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மனசாட்சி உள்ள யாருமே இதை மறுக்கமாட்டார்கள். எரியாத தெரு விளக்குகள், தண்ணீர் வராத குடிநீர் குழாய்கள் என்று முன்னர் இருந்த நிலைமைகளை மாற்றி, ஐந்தாண்டுகளில் முழுமையாக மாற்றி அமைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். ஊரகப் பகுதிகளில் தற்போது 23 இலட்சத்து 76 ஆயிரத்து 557 தெரு விளக்குகள், கிராம ஊராட்சிகளால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவ்விளக்குகளுக்கான மின்சாரத் தேவையும், பராமரிப்புச் செலவினமும், அதிகமாக உள்ளதைக் கருத்தில் கொண்டு, இச்செலவினைக் குறைத்து, நீடித்த செயல்திறன் ஆகியவற்றை உறுதிப்படுத்திடும் நோக்கிலும், பசுமைத் தொழில்நுட்பப் பயன்பாட்டினை ஊக்குவித்திடவும், 2015-2016 ஆம் ஆண்டில் ஊரகப் பகுதிகளில், 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுமார் 8 இலட்சம் LED விளக்குகள் பொருத்தப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தப் பேரவையில் விதி 110-ன்கீழ் அறிவித்த முத்தான அறிவிப்பைச் செயல்படுத்தும் வகையில், தக்க

நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில், ஊரகப் பகுதிகளில், குடிநீர் தேவையினைப் பூர்த்தி செய்திட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு, கடந்த 5 ஆண்டுகளில் 3,461 கோடியே 51 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், ஆழ்குழாய் கிணறு, திறந்தவெளிக் கிணறு, கைப்பம்பு, சிறுமின் விசைப்பம்பு, குடிநீர் குழாய் நீட்டிப்பு போன்ற பணிகள் என மொத்தம் 2,22,827 குடிநீர்ப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இது மிகப் பெரிய அளவிலான சாதனை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில், ஊரகப் பகுதிகளில், குடிநீர் விநியோகத்திற்காக, 732 கோடியே 68 இலட்சம் ரூபாய் மட்டுமே செலவிடப்பட்டது என்பதை இத்தருணத்தில் பேரவைக்குச் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் செயல்திறனை மேம்படுத்த மாநில நிதி ஆணைய மானியமாக, கடந்த 5 ஆண்டுகளில் 22,277 கோடி ரூபாய் விடுவித்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் 2016-2017 ஆம் ஆண்டிற்கு, 4,995 கோடியே 66 இலட்சம் ரூபாய் நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியின் சாதனைகள் பற்றி நாள் முழுவதும் பேசிக் கொண்டே இருக்கலாம். “சாதனைக் காற்று எப்பொழுதும் அம்மா அவர்களின் திசை நோக்கியே வீசும்! (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நாடு எங்கள் அம்மா அவர்களின் பெருமை பற்றியே பேசும்! வெற்றிகள் கோடி வரும்; விருதுகள் தேடி வரும்” (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்திலுள்ள கிராம ஊராட்சிகளில், மின்னாளுமைத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தியமைக்காக மத்திய அரசின் 2014-2015 ஆம் ஆண்டிற்கான ஊராட்சி மின்னாளுமை விருதினை தமிழ்நாடு அரசு பெற்றது. ஊரகப் பகுதிகளில் உள்ள

அனைத்து குக்கிராமங்களுக்கும், அன்றாடம் குடிநீர் விநியோகம் செய்யப்படுவதை கணினி வாயிலாக கண்காணிப்பதைப் பாராட்டி, 2014-2015 ஆம் ஆண்டிற்கான சிறந்த நடைமுறைகள் மற்றும் புதுமையான திட்டங்களுக்கான தமிழ்நாடு அரசு விருது, மாண்புமிகு அம்மா அவர்களால் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு வழங்கப்பட்டது. மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகம்மூலம் 2012-2013 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படும் சிறந்த கிராம ஊராட்சி, சிறந்த ஊராட்சி ஒன்றியம் மற்றும் சிறந்த மாவட்ட ஊராட்சிக்கான ரொக்கப் பரிசுடன்கூடிய விருதுகளை தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டும் 2012-2013, 2013-2014, 2014-2015, 2015-2016 வரை பெற்றுள்ளது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சித் திட்டங்களின் விரைவான செயல்பாட்டினை உறுதி செய்திட ஏதுவாக மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் கடந்த 5 ஆண்டுகளில், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் முதல் கீழ்நிலை வரை, 5,231 காலியிடங்கள் நேரடி நியமனம் மூலமும், 5,072 பணியிடங்கள் பதவி உயர்வு மூலமும் நிரப்பப்பட்டுள்ளன. மாண்புமிகு தாராபுரம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் இதைக் கேட்டார்கள். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் உள்ள பல்வேறு அலுவலகங்களில், 114 துணை வட்டார வளர்ச்சி அலுவலர்/கண்காணிப்பாளர் பணியிடங்கள் புதிதாக தோற்றுவித்தும், தரம் உயர்த்தப்பட்டும் உள்ளன.

பிற்பகல் 4-20

மேலும், கிராம ஊராட்சிகளில் 16,726 துப்புரவுப் பணியாளர்கள் கூடுதலாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், கிராம ஊராட்சிகளில் பணிபுரியும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குநர்களுக்கு, மாதம் 200 ரூபாய் சிறப்புப் படியாக, 10,101 துப்புரவுப் பணியாளர்களுக்கு, சிறப்புக் காலமுறை ஊதியமாக ரூ.1300-3000 மற்றும் தர ஊதியமாக 300 ரூபாயும் தாயுள்ளத்துடன் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியுள்ளார்கள் என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பல்வேறு ஊராட்சி செயலர்களின் நலனை முன்னிட்டு, பல்வேறு சலுகைகளைத் தொடர்ந்து வழங்கி வருகிறார்கள். ஊராட்சி உதவியாளர்களின் நீண்ட கால

கோரிக்கையை ஏற்று, அவர்களின் பதவியை "ஊராட்சி செயலர்" எனப் பெயர் மாற்றம் செய்ததே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். அவர்களுக்கு சிறப்புப்படியாக, மாதம் 500 ரூபாய், மற்றும் நிரந்தர பயணப்படியாக, 300 ரூபாய் வழங்கியுள்ளார்கள். பெண் ஊராட்சி செயலர்களுக்கு வழங்கப்படும் மகப்பேறு விடுப்பு, 90 நாட்களிலிருந்து 180 நாட்களாக உயர்த்தி வழங்கினார்கள். ஊராட்சி செயலர் நிலையில் ஓய்வு பெற்றவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகை 700 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக உயர்த்தி வழங்கினார்கள். மின்னணு பரிமாற்ற முறையின்மூலம் கிராம ஊராட்சி பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட ஆவணங்களை பராமரித்திட, ஊராட்சி செயலர்களுக்கு சிறப்புப் படியாக மாதம் 1,000 ரூபாய் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியுள்ளார்கள். ஊராட்சி செயலர்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, பணியிடை காலமாகிய ஊராட்சி செயலர்களின் வாரிசுகளுக்கு, கருணை அடிப்படையில், தகுதிக்கேற்ப அரசுப் பணி நியமனம் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்" என்று பெண்களின் உரிமைகளையும், பெண்களின் வலிமைகளையும் பற்றி பாடினார் மகாகவி பாரதி. அவற்றை தனது திட்டங்களிலும், செயல்பாடுகளிலும் நிரூபித்துக் காட்டியவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பெண் இனத்திற்கே பெருமை சேர்த்தவர் அம்மா அவர்கள். தாயின் ஆட்சியிலே தாய்க்குலமே தலைநிமிர்ந்து நிற்கிறது.

மகளிர் சுய உதவிக் குழு இயக்கம். தமிழ்நாட்டில், தற்போது, 6 இலட்சத்து 14 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்கள், 92 இலட்சத்து 84 ஆயிரம் உறுப்பினர்களைக் கொண்டு, மிகவும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், 5 ஆண்டுக் காலத்தில், மகளிரின் வாழ்வாதாரம்

மேம்பாடு அடையும் வகையில், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, பல்வேறு தொழில்கள் துவங்குவதற்கும், நிலையான வருமானம் பெறுவதற்கும், 26,460 கோடியே 73 இலட்ச ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு வழங்கி, மகத்தான சாதனை படைத்துள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த தி.மு.க. ஆட்சியில், 5 ஆண்டுக் காலத்தில், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, வங்கிக் கடனாக, 9,838 கோடி ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டது என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். தமிழ்நாட்டில் மாநில ஊரக வாழ்வாதாரத் திட்டம், 2012-2013 ஆம் ஆண்டில், முதற்கட்டமாக, 60 வட்டாரங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பெரும் முயற்சியால், இத்திட்டம் 265 வட்டாரங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மகளிருக்கு வாழ்வாதாரம் ஏற்படுத்தித் தரும் ஒரு புதுமை முயற்சியாக, தெருக்களில் கிடக்கும் பிளாஸ்டிக் கழிவுகளை, மறுசுழற்சி செய்து, துகள்களாக்கி அதனைப் பயன்படுத்தி, தார்ச்சாலை அமைத்திட, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, 35 அரவை இயந்திரங்கள், 1 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் இதுவரை, 2 கோடியே 16 இலட்சம் ரூபாய் அளவிற்கு, பிளாஸ்டிக் துகள்களை விற்பனை செய்து, மகளிர் சுய உதவிக் குழுக்கள் வருமானம் ஈட்டி, பொருளாதார முன்னேற்றம் அடைந்துள்ளனர் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், 5 ஆண்டுக் காலத்தில், 65,266 இளைஞர்களுக்கு, தொழிற்திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு, இதில் 48,113 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், கடந்த இரண்டு ஆண்டுகளில், 462 வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, 1,31,370 நபர்கள் பணியமர்த்தப்பட்டு, சாதனை படைக்கப்பட்டுள்ளது. மேலும், 20,811 பெண்களுக்கு, அவர்கள் சிறு தொழில் முனைவோர்களாக உயர வேண்டும் என்ற அடிப்படையில், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த மாமன்றத்தில் ஏற்கெனவே அறிவித்தவாறு, 2015-2016 ஆம் ஆண்டில், 11,496 சுய உதவிக் குழுக்கள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 6,191 கோடியே 49 இலட்சம் ரூபாய் வங்கிக் கடன்

இணைப்பு வழங்கி, சாதனை படைக்கப்பட்டுள்ளது என்பதையும் இந்த நேரத்தில் மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 4-25

மாண்புமிகு அம்மா அவர்களால் விதி 110-ன்கீழ் அறிவிக்கப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் நடப்பு ஆண்டு முதல் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்மூலம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் ஏழைப் பெண்கள், ஆதரவற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் நலன்களை உள்ளடக்கி 2016-2017 ஆம் ஆண்டு முதல் அனைத்து நகர்ப்புறங்களிலும் செயல்படுத்தப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அள்ளிக் கொடுத்து வாழ்பவர் நெஞ்சம் ஆனந்தப் பூந்தோப்பு" என்று பாடினார் புரட்சித் தலைவர். ஆனந்த பூந்தோப்பு, காய் என்றும், கனி என்றும், மலர் என்றும், மணம் என்றும் அள்ளி அள்ளித் தருவதுபோல், மாண்புமிகு அம்மா அவர்கள் மடிக்கணினி என்றும், மிக்ஸி, கிரைண்டர், மின் விசிறி என்றும், கறவை மாடு மற்றும் ஆடு என்றும் விலையின்றி வழங்கி வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், ஊராட்சிகளில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களை ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்டுள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின்கீழ், இயங்கிவரும் சுய உதவிக் குழுக்களை மேற்பார்வையிட, 20,000 சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் தங்கள் பணிகளை மேற்கொள்ள, தமிழில் சிறப்பு மென்பொருள் ஒன்றை உருவாக்கி, கணினிமயமாக்கப்பட்ட கைபேசிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியுள்ளார்கள். சுய உதவிக் குழு பயிற்றுநர்களுக்கு 'அம்மா கைபேசி திட்டம்' என்னும் இந்தத் திட்டத்தின்கீழ், மாநிலம் முழுவதும் உள்ள மகளிர் சுய உதவிக் குழு பயிற்றுநர்களுக்கு 20,000 விலையில்லா அம்மா கைபேசிகள் வழங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு புதுவாழ்வுத் திட்டம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் நிறைவான ஆட்சிக்கு கறை பூச நினைப்பவர்களின் திட்டங்கள் எல்லாம் உடைந்து தூள் தூளாகும். ஏழைகளின் வறுமை அழிந்து, வாழ்வாதாரம் உயர மாண்புமிகு அம்மா அவர்கள் தரும்

புதுவாழ்வுத் திட்டம், புகழ் மாலையாக மாறும். ஏழையெளிய மக்களை, மக்களின் பங்கேற்புடன் கண்டறிந்து அவர்களின் வறுமையை அகற்றுவதையும், வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதையும் முக்கிய நோக்கமாகக் கொண்ட புது வாழ்வுத் திட்டம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 2005 ஆம் ஆண்டு, நவம்பர் 15 ஆம் நாள் தொடங்கப்பட்டது. இத்திட்டம் 26 மாவட்டங்களில் 120 மிகவும் பின்தங்கிய வட்டாரங்களில் உள்ள 4,174 கிராம ஊராட்சிகளில் 4,465 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் செயல்பாடுகளுக்காகவும், இலக்கு மக்களின் அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்ற ஏதுவாகவும் 623 கோடியே 23 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

புதுவாழ்வுத் திட்டத்தின்கீழ், 1,07,436 சுய உதவிக் குழுக்கள் 14,42,015 மகளிரை உறுப்பினர்களாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில், மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோரின் வாழ்வாதாரத்தைப் பெருக்கிட இதுவரை 13,286 மாற்றுத் திறனாளிகளுக்கான சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. புதுவாழ்வுத் திட்ட செயல்பாடுகளுக்காக இதுவரை 1,718 கோடியே 53 இலட்சம் ரூபாய் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் 70 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்குத் திட்டங்களைச் செயல்படுத்தும் வகையில், உலக வங்கியின் நிதியுதவியுடன் பொருளாதார வளர்ச்சி மற்றும் வறுமைக் குறைப்பினை உறுதி செய்யும்பொருட்டு, 900 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 120 வட்டாரங்களில் தமிழ்நாடு கிராமப்புற புதுவாழ்வுத் திட்டம் 6 ஆண்டுகளில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இலக்கியங்களை மட்டுமல்ல, ஏழைகளின் இதயங்களையும் படித்தவர்; (மேசையைத் தட்டும் ஒலி) நாவன்மை கொண்டவர் மட்டுமல்ல, நடுத்தர மக்களின் நாடி நரம்புகளில் கலந்திருப்பவர்; (மேசையைத் தட்டும் ஒலி) எழுத்தாற்றல் மிக்கவர் மட்டுல்ல, எல்லோரையும் வாழவைக்கும் எண்ணத்தை தன் மூச்சுக்காற்றிலே கலந்திருப்பவர்;

(மேசையைத் தட்டும் ஒலி) இந்த உண்மைகளை ஓங்கி ஒலிக்கின்ற துறைதான், சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை.

பிற்பகல் 4-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூமிப் பந்தின் சுழற்சியை, விஞ்ஞானத்தின் வளர்ச்சியை மாணவச் செல்வங்களின் விரல் நுனிக்குக் கொண்டு வந்து, மாணவர் தம் மதிப்பு உயர, அவர்கள் கற்கின்ற கல்வியின் மாண்பு உயர, விலையில்லா மடிக்கணினிகள்; இல்லத்தரசிகள் அடுப்படியில் படுகின்ற அடிப்படைத் துன்பத்தை நீக்கி, அவர்களின் வேலைப்பளுவை குறைத்து, குடும்பம் சுகம் பெற ஆற்றுகின்ற கடும்பணியை சுலபமாக்கிடும் விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின்விசிறிகள் ஆகிய திட்டங்களைச் சிறப்புடன் செயல்படுத்துவதுடன் கிராமப்புற ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரம் உயர, விலையில்லா கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள்; ஏழைப் பெண்களின் திருமண வாழ்வில் ஒளியேற்றிட, 8 கிராமில் தாலிக்குத் தங்கம்; (மேசையைத் தட்டும் ஒலி) திருமண உதவித்தொகை 25,000 ரூபாய். அவர்கள் பட்டமோ, பட்டயப் படிப்போ படித்திருந்தால் 50,000 ரூபாய்; (மேசையைத் தட்டும் ஒலி) கருவுற்ற பெண்களின் நலன் காக்க 18,000 ரூபாய்; நலிவுற்றோரின் நல்வாழ்வை பாதுகாக்க முழுமையான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம். வீடு இல்லாத கிராமப்புற ஏழை மக்களுக்காக சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் ஆகிய திட்டங்களின் பயன்கள், தகுதி வாய்ந்தவர்களுக்கு தாமதமில்லாமல் சென்றடைகின்றனவா என்பதைக் கண்காணிக்கும் பணியைச் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், கடந்த 5 ஆண்டுகளில், இல்லத்தரசிகளுக்கு விலையில்லாமல் மின்விசிறி, மிக்ஸி, கிரைண்டர் வழங்கும் திட்டத்தின்கீழ், 7,295 கோடியே 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 1 கோடியே 75 இலட்சம் உபகரணத் தொகுப்புகளும், மாணவ, மாணவிகளின் கல்வித்தரம் மேம்பட 4,831 கோடியே17 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 31 இலட்சத்து 78 ஆயிரத்து19 விலையில்லா மடிக்கணினிகளும் வழங்கப்பட்டுள்ளன.

நீலகிரி மாவட்டத்திலும் மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் கொடைக்கானல் மலைப் பகுதிகளிலும் வாழும் மக்களுக்கு, மின்விசிறிகளுக்கு மாற்றாக, மின்காந்த அடுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிதியாண்டில் 890 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5 இலட்சத்து 35 ஆயிரம் விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்படவுள்ளன. இப்படி பெண்கள் நலனையும், மாணவச் செல்வங்களின் நலனையும் கருத்தில் கொண்டு, பார்த்துப் பார்த்து திட்டங்களைச் செயல்படுத்துகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களை தமிழர்தம் இல்லங்களிலும், தமிழக மக்களின் உள்ளங்களும் கொண்டாடி மகிழ்கின்றனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் அன்னை தாலாட்ட, தமிழ் இனமே பாராட்ட, தவமாய் தவமிருந்து தமிழகம் பெற்ற வரமே, எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றி முழக்கம் நாடெங்கும் ஒலித்திட, மகிழ்ச்சி வெள்ளம் வீடெங்கும் நிறைந்திட, பொற்கால ஆட்சியைத் தொடர்ந்து தந்திட, வரலாற்று வெற்றி படைத்த வாகைத் தாயே, எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) சத்தியமும், இலட்சியமும் ஓர் உருவாய், சாதனைகள் அனைத்தும் தன் வடிவாய், தமிழகத்தை தலைநிமிர்த்தும் தாய் வடிவே, எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) திசைமாறி, தடுமாறி முன்னர் ஆண்ட கட்சி நடத்தியது எல்லாம் வெத்துவேட்டு கண்காட்சி. அம்மாவின் ஆட்சி ஒன்றே நல்லாட்சி; நமது ஆட்சி என மக்கள் போற்றும் மாதவமே, எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) உள்ளாட்சியில் தொடர்ந்திடும் எங்கள் அம்மாவின் அரசாட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) இதுவே எங்கள் அம்மா படைக்கப் போகும் நல்லாட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) வரவிருக்கும் உள்ளாட்சி மன்றத் தேர்தலில் 100-க்கு 100 வெற்றிக் கனி பறித்து மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கரங்களில் சமர்ப்பிப்போம் என்று சூளுரைத்து எனது பதிலுரையை நிறைவு செய்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியோடு நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் புதிய அறிவிப்புகளை தற்போது வெளியிடுகிறேன்.

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

1. 2016–2017 ஆண்டுக்கான நீடித்த குடிநீர் ஆதார பாதுகாப்பு இயக்க செயல் திட்டம்

சென்னை மாநகரின் வருங்கால குடிநீர் தேவை நிறைவு செய்யப்படுவதை உறுதி செய்வதற்காகவும், நீராதாரங்களைப் பாதுகாத்து, சீரமைப்பதற்காகவும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நீடித்த குடிநீர் ஆதார பாதுகாப்பு இயக்கம் என்ற திட்டத்தினை கடந்த 28-9-2015 அன்று தமிழக சட்டமன்றப் பேரவையில் விதி 110-ன்கீழ் அறிவித்தார்கள்.

பிற்பகல் 4-35

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, முதற்கட்டமாக மழைநீர் சேகரிப்பு மற்றும் கழிவுநீர் மறுசுழற்சி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக நகரிலுள்ள 15 பெரு வளாகங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளும், 10 பெரு வளாகங்களில் கழிவுநீர் மறுசுழற்சி அமைப்புகளும் மாதிரி திட்டமாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், சென்னை மாநகரை ஒட்டியுள்ள 15 ஏரிகள்/குளங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவை தூர்வாரி புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் அடுத்த கட்டமாக, சென்னை நகரிலுள்ள 17 திருக்கோயில் குளங்கள் தேர்வு செய்யப்பட்டு, அவற்றில் மழைநீரைச் சேகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இவை தவிர, பெருநகர சென்னை மாநகராட்சியின் பராமரிப்பில் 32 ஏரி மற்றும் குளங்களும் தூர்வாரி புனரமைக்கப்படவுள்ளன.

மேற்கண்ட பணிகள் அனைத்தும் 2016-2017 ஆம் நிதியாண்டில் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

2. நகராட்சிகளில் குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகள் மேற்கொள்ளுதல்

நகர்ப்புற உள்ளாட்சிகளில் உள்ள குடியிருப்புகள் அனைத்திற்கும் உரிய அழுத்தத்துடன் குழாய்கள்மூலம் பாதுகாக்கப்பட்ட தரமான குடிநீர் வழங்குதல் அரசின் முதன்மையான நோக்கமாகும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா

அவர்களின் ஆணைப்படி, இந்த நிதியாண்டில், போடிநாயக்கனூர், உசிலம்பட்டி மற்றும் திருத்தணி நகராட்சிகளில் குடிநீர் அபிவிருத்தி திட்டத்திற்கான முதற்கட்ட ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. நகராட்சி நிருவாக ஆணையரகம் மற்றும் மண்டல நகராட்சி நிருவாக இயக்குநரகங்களுக்கு புதிய வாகனங்கள் வாங்குதல்

நகராட்சி நிருவாக ஆணையரின்கீழ் 7 மண்டல நகராட்சி நிருவாக இயக்குநர் அலுவலகங்கள் உள்ளன. ஒவ்வொரு மண்டலமும் குறைந்தபட்சமாக 19 நகராட்சிகளையும் மூன்று முதல் ஐந்து மாவட்டங்களையும் கொண்டுள்ளது. நகராட்சி நிருவாக ஆணையரக அலுவலகத்தில் 12 உயர் நிலை அலுவலர்கள் நிருவாகப் பணிகள் மற்றும் திட்ட பணிகளைக் கண்காணித்து வருகிறார்கள்.

நகராட்சி நிருவாக ஆணையரக அலுவலகத்திற்கு அனுமதிக்கப்பட்ட 4 வாகனங்கள் மற்றும் மண்டல நகராட்சி நிருவாக இயக்குநரகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட 14 வாகனங்கள் வாங்கப்பட்டு, பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலையில் மேற்படி வாகனங்களை அரசுத் துறைக்கு ஒப்படைப்பு செய்து புதியதாக வாகனங்கள் வாங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, ரூ.2.7 கோடி செலவில் மொத்தம் 18 வாகனங்கள் வழங்கப்படும்.

4. மாநகராட்சி/நகராட்சிகளுக்கு புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல்

தமிழ்நாட்டிலுள்ள சில மாநகராட்சிகள் மற்றும் நகராட்சி அலுவலகங்கள் தற்போது பழமையான கட்டடங்களில் போதுமான வசதிகள் இன்றி இயங்கி வருகின்றன. எனவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, பொள்ளாட்சி, திருவண்ணாமலை, அரியலூர், கூடலூர் (நீலகிரி) ஆகிய 4 நகராட்சிகளுக்கும் மற்றும் தஞ்சாவூர் மாநகராட்சிக்கும் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் அலுவலகக் கட்டடங்கள் புதியதாக கட்டுதல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளப்படும்.

5. துப்பரவுப் பணியாளர்களுக்காக 176 குடியிருப்புகள் கட்டுதல்

நகராட்சிப் பணியாளர்களில் 70 சதவிகிதத்தினர் துப்புரவுப் பணியாளர்களாக உள்ளனர். இவர்களின் வாழ்க்கைத் தரத்தை

மேம்படுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, நடப்பாண்டில் நாமக்கல் நகராட்சி மற்றும் சேலம், வேலூர், ஈரோடு ஆகிய 3 மாநகராட்சிகளில் துப்புரவுப் பணியாளர்களுக்காக ரூ.10.50 கோடி மதிப்பீட்டில், மொத்தம் 176 குடியிருப்புகள் கட்டப்படும்.

6. மாநகராட்சி/நகராட்சிகளில் நவீன இறைச்சிக் கூடங்கள் அமைத்தல்

சுற்றுச்சூழல் மாசுபடாமல் பாதுகாக்க நவீன இயந்திரங்களைக் கொண்டு, சுகாதாரமான முறையில் இறைச்சிக் கூடங்களை நடத்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, நடப்பாண்டில் நாகப்பட்டினம் நகராட்சி மற்றும் சேலம், ஈரோடு ஆகிய 2 மாநகராட்சிகளில் ரூ.1.80 கோடி மதிப்பீட்டில் நவீன இறைச்சிக் கூடங்கள் அமைக்கப்படும்.

7. மாநகராட்சி / நகராட்சிகளில் நவீன எரிவாயு தகன மேடை அமைத்தல்

இயற்கை எய்தியவர்களை திறந்தவெளியில் எரியூட்டுவதால் கரியமில வாயு, கார்பன் மோனாக்சைடு, டையாக்சின் போன்ற வாயுக்கள் வெளியேறி சுற்றுச்சூழல் மாசு அடைகிறது. இதனைத் தவிர்க்கும் நோக்கத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, திருத்துறைப்பூண்டி, உசிலம்பட்டி, பம்மல் ஆகிய 3 நகராட்சிகள் மற்றும் தஞ்சாவூர் மாநகராட்சியில் ரூ.3.25 கோடி மதிப்பீட்டில் நவீன எரிவாயு தகன மேடைகள் அமைக்கப்படும்.

8. மாநகராட்சி / நகராட்சிகளில் பேருந்து நிலையங்களை மேம்படுத்துதல்

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள பேருந்து நிலையங்களில் பொது மக்களுக்குத் தேவையான கூடுதல் வசதிகளை ஏற்படுத்தும் நோக்கத்தோடு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, நடப்பாண்டில் ஜெயங்கொண்டம், அருப்புக்கோட்டை ஆகிய 2 நகராட்சிகள் (மேசையைத் தட்டும்

ஒலி) மற்றும் திண்டுக்கல், சேலம், வேலூர் ஆகிய 3 மாநகராட்சிகளில் ரூ.20.00 கோடி மதிப்பீட்டில் பேருந்து நிலைய மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

9. பேரூராட்சிகளுக்கு புதிய அலுவலகக் கட்டடங்களைக் கட்டுதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, வெங்கரை, ஆர்.புதுப்பட்டி, நங்கவரம், தேவதானப்பட்டி, நாட்டரசன்கோட்டை, திருப்பத்தூர், ஆர்.எஸ்.மங்கலம், ஏர்வாடி மற்றும் விளாத்திகுளம் ஆகிய 9 பேரூராட்சிகளுக்கு ரூ.5.20 கோடி மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும்.

10. பேரூராட்சிகளில் உள்ள பேருந்து நிலையங்களில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, முக்கூடல், எட்டையபுரம், விளாத்திகுளம், திருச்செந்தூர், சூலூர் மற்றும் பாபநாசம் ஆகிய 6 பேரூராட்சிகளில் உள்ள பேருந்து நிலையங்களில் பேருந்து நிறுத்துமிடம், நடைமேடைகள், குடிநீர் வசதி, கழிவறை வசதி மற்றும் தாய்மார்கள் பாலூட்டும் அறை ஆகிய அனைத்து வசதிகளுடன் பேருந்து நிலைய மேம்பாட்டுப் பணிகள் ரூ.5.50 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

11. பேரூராட்சிகளில் சந்தை அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, உப்பிடாமங்கலம், அரவக்குறிச்சி, பள்ளப்பட்டி மற்றும் கருமத்தம்பட்டி ஆகிய 4 பேரூராட்சிகளில் சந்தை மேம்பாட்டுப் பணிகள் ரூ.2.5 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

12. பேரூராட்சிகளின் ஊரணிகளில் ஒருங்கிணைந்த அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, மெலட்டூர், அதிராமபட்டினம் மற்றும் பெருமகளூர் ஆகிய 3 பேரூராட்சிகளிலுள்ள நீர்நிலைகள் ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.

13. பேரூராட்சிகளில் புதிய சமுதாயக் கூடம் அமைத்தல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, நங்கவரம் மற்றும் ஆண்டிப்பட்டி ஆகிய 2 பேரூராட்சிகளில் புதிய சமுதாயக் கூடம் ரூ.1.25 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

பிற்பகல் 4-40

14. பேரூராட்சிகளில் இறைச்சிக் கூடம் அமைத்தல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, அந்தியூர், கருமாண்டிசெல்லிபாளையம், கோத்தகிரி, பரங்கிப்பேட்டை, சின்னசேலம், உளுந்தூர்பேட்டை, மரக்காணம், மேலசொக்கநாதபுரம் மற்றும் சிங்கம்புணரி ஆகிய 9 பேரூராட்சிகளில் நவீன இறைச்சிக் கூடங்கள் ரூ.3.24 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

1. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின்கீழ் முதல் கட்ட வட்டாரங்களில் அமைக்கப்பட்டுள்ள கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கான நிதியுதவி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிலுள்ள சுய உதவிக் குழுக்கள் பொருளாதார முன்னேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளும்பொருட்டு, 15 மாவட்டங்களைச் சார்ந்த 60 வட்டாரங்களில் அமைக்கப்பட்டுள்ள 2,323 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் சமுதாய முதலீட்டு நிதியாக வழங்கப்படும். இதற்காக, 23 கோடியே 23 இலட்சம் ரூபாய் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார திட்டத்தின் நிதியிலிருந்து வழங்கப்படும்.

2. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின்கீழ் இரண்டாம் கட்ட வட்டாரங்களில் உருவாக்கப்பட்டுள்ள கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கான நிதியுதவி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, கிராம ஊராட்சிகளில்

விடுபட்ட இலக்கு மக்களைக் கொண்டு கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தால் உருவாக்கப்படும் புதிய சுய உதவிக் குழுக்களில், குறைந்தபட்சம் இரண்டு சுய உதவிக் குழுக்களுக்கு, தலா 15,000 ரூபாய் வீதம் சுழல் நிதி வழங்கவும், நலிவுற்ற மற்றும் மாற்றுத் திறனாளி உறுப்பினர்களில் குறைந்தது 5 நபர்களுக்கு 7,000 ரூபாய் முதல் 15,000 ரூபாய் வரை தனிநபர் கடன் வழங்கவும், பயிற்சி மற்றும் சமுதாய வல்லுநர்களுக்கு மதிப்பூதியம் வழங்குவதற்காகவும், நாமக்கல், சேலம், மதுரை, திண்டுக்கல், தேனி உள்ளிட்ட 27 மாவட்டங்களைச் சார்ந்த 110 வட்டாரங்களில் அமைக்கப்பட்டுள்ள 3,518 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம், மொத்தம் 35 கோடியே 18 இலட்சம் ரூபாய் மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்மூலம் வழங்கப்படும்.

3. தமிழ்நாடு ஊரக வாழ்வாதாரத் திட்டத்தின்கீழ் பண்ணைசாரா தொழில் தொடங்குவதற்கும், மேம்படுத்துவதற்கும் தனிநபர் கடனுதவி அளித்தல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு ஊரக வாழ்வாதாரத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் இலக்கு மக்கள் பண்ணைசாரா தொழில் தொடங்குவதற்கும், ஏற்கெனவே தொடங்கப்பட்ட தொழிலை மேம்படுத்துவதற்கும், நபர் ஒருவருக்கு 10,000 ரூபாய் வீதம் 8,000 நபர்களுக்கு 8 கோடி ரூபாய் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரத் திட்ட நிதியிலிருந்து கடனுதவி வழங்கப்படும்.

4. சாம்பல் கற்கள் (Fly ash bricks) மற்றும் நிலைப்படுத்தப்பட்ட மண் கற்கள் (Compressed Stabilised Earthen Block) உற்பத்தி அலகுகள் உருவாக்குதல்

ஊரகப் பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு நிலையான வாழ்வாதாரத்தை அளிக்கவும், கிராமங்களில் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் மற்றும் அரசின் வீடு கட்டும் திட்டங்களுக்கு உபயோகப்படுத்தப்படும் செங்கற்களுக்கான செலவினங்களைக் குறைக்கவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, 5 சாம்பல் கற்கள் உற்பத்தி செய்யும் அலகுகளும், 4 நிலைப்படுத்தப்பட்ட மண் கற்கள் உற்பத்தி செய்யும் அலகுகளும், 1 கோடியே 78 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படும்.

5. ஊரகப் பகுதிகளில் 385 மண்புழு உர அலகுகள் அமைத்தல்

தமிழகத்தை பசுமைமயமாக்கும் முயற்சியாக, பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து, ஊரகப் பகுதிகளில் மாபெரும் மரம் நடவுத் திட்டத்தின்கீழ் நடப்பட்ட மரக்கன்றுகள், நாற்றங்கால்கள் மற்றும் சாலையோரங்களில் நடப்பட்டுள்ள மரக்கன்றுகளுக்கு உயிர் உரங்கள் வழங்கிடவும், உபரியாக உற்பத்தி செய்யப்படும் உயிர் உரத்தினை விற்பனை செய்வதன்மூலம் கிராம ஊராட்சிகள் வருவாயை உயர்த்திடவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, 385 ஊராட்சி ஒன்றியங்களிலும், அலகு ஒன்றிற்கு 90 ஆயிரம் ரூபாய் வீதம், 3 கோடியே 46 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், 385 மண்புழு உர அலகுகள் அமைக்கப்படும்.

6. மாவட்ட அளவில் 9 மக்கள் கற்றல் மையங்கள் (மகமை) மற்றும் 120 வட்டார அளவிலான அமைப்புகளை உருவாக்குதல்

புதுவாழ்வுத் திட்டத்தின்மூலம் உருவாக்கப்பட்ட சமூக அமைப்புகளான சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் ஒத்த தொழில் குழுக்கள் ஆகியவை நிலைத்து வேரூன்றி செயல்படுவதற்கு உதவியாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, மாவட்ட அளவில், 9 மக்கள் கற்றல் மையங்களும், 120 வட்டார அளவிலான அமைப்புகளும், 5 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.

7. ஒத்த தொழில் குழுக்களுக்கு பொது உட்கட்டமைப்பு வசதி, நிதியுதவி மற்றும் புதிய ஒத்த தொழில் கூட்டமைப்புகள் உருவாக்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு புதுவாழ்வுத் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள 280 ஒத்த தொழில் குழுக்களுக்கு பொது உட்கட்டமைப்பு வசதி மற்றும் பிற சேவைகளைப் பெறுவதற்காக, புதுவாழ்வுத் திட்ட நிதியிலிருந்து தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 2 கோடியே 80 இலட்சம் ரூபாய் வழங்கப்படும். மேலும், மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, 10 முதல் 15 ஒத்த தொழில் குழுக்களைக் கொண்டு கூட்டமைப்புகள் உருவாக்கப்படும். நடப்பாண்டில் இவ்வகையில் புதிதாக 10 ஒத்த தொழில் கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு, அவற்றிற்கு 2 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்படும்.

8. இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு / சுய தொழில்சார்ந்த திறன் வளர்ப்புப் பயிற்சி அளித்தல்

சந்தைத் தேவையின் அடிப்படையில், 18 முதல் 35 வயதுடைய, வேலையில்லாத அல்லது தமது தகுதிக்கு குறைவான வேலையிலுள்ள இளைஞர்களை ஊராட்சிவாரியாகக் கண்டறிந்து, அவர்களின் ஆர்வம் மற்றும் தகுதிக்கு ஏற்ப வேலைவாய்ப்பு பெற்றிடும் வகையில், பல்வேறு வகையான தொழில் பயிற்சிகள் வழங்கிட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு புதுவாழ்வுத் திட்டத்தின்கீழ், 4,500 இளைஞர்களுக்கு 4 கோடியே 50 இலட்ச ரூபாய் செலவில் பணிசார்ந்த / சுய தொழில்சார்ந்த திறன் வளர்ப்புப் பயிற்சிகள் வழங்கப்படும்.

9. சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின்கீழ் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின்கீழ், 12 கடற்கரையோர மாவட்டங்களில் மீனவ மக்களின் பயன்பாட்டிற்காக, 24 மீன் உலர்த்தும் கூடங்களும், 61 மீன் வலை பின்னும் கூடங்களும், 8 கோடியே 89 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் கட்டித் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 4-45

10. கடலோரப் பகுதி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு சார்ந்த தொழில் திறன் பயிற்சி அளித்தல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின்மூலம், கடலோரப் பகுதிகளில்,

படித்த மற்றும் வேலையில்லாத 1,750 இளைஞர்கள் மற்றும் மகளிருக்கு, சுய தொழில் மற்றும் வேலைவாய்ப்பு பெற்றிடும் வகையில், 3 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் தொழிற்திறன் பயிற்சி வழங்கப்படும்.

11. கூட்டுப்பொறுப்பு குழுக்கள்மூலம் குறுந்தொழில்களுக்கு கடனுதவி வழங்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின்கீழ், கடலோர கிராமப்புறங்களில் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள், வருவாய் தரக்கூடிய நுண்தொழில்களில் ஈடுபடுவதற்காக, திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள 120 கூட்டுப் பொறுப்புக் குழுக்களைச் சார்ந்த 600 பயனாளிகள் பயனடையும் வகையில், 3 கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்படும்.

12. மீனவர்களுக்கு சூரிய மின்சக்தி விளக்குகள் வழங்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில், இரவு நேரங்களில் கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் பயனடையும் வகையில், சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின்கீழ், 1 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சூரிய மின்சக்தி விளக்குகள் வழங்கப்படும். இதனால், 3,500 மீனவர்கள் பயனடைவர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகளின் மீது உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த வெட்டுத் தீர்மானங்களில் உள்ள பொருள் குறித்து விளக்கங்களை அளித்துள்ளேன். இது அவர்களுக்கு திருப்திகரமாக இருக்கும் என நம்புகிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களில் தெரிவித்துள்ள கோரிக்கைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்

கவனத்திற்குக் கொண்டு சென்று கனிவுடன் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். எனது இந்தப் பதிலுரையை ஏற்று, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையிலே தேர்தல் நேரத்தில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியிருக்கிறோம், சொல்லாததையும் நிறைவேற்றியிருக்கிறோம் என்று பெருமையோடு எடுத்துச் சொன்னார்கள். நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, 2011 ஆம் ஆண்டு நீங்கள் உங்களுடைய தேர்தல் அறிக்கையிலே, வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழ்ந்துகொண்டிருக்கக்கூடிய ஒவ்வொரு குடும்பத்திற்கும், 20 லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும் என்ற ஓர் அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. அதேபோல, மகளிர் சுய உதவிக் குழுக்களைப் பொறுத்தவரையிலே, 10 இலட்சம் ரூபாய் கடனும், 25 சதவீத மானியமும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அது என்ன நிலை என்பது அவருடைய பதிலுரையிலே இல்லை என்கின்ற காரணத்தினால் நான் அதை நினைவுபடுத்தி தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா குடிநீர் திட்டத்தை முதல் கட்டமாக சென்னையிலே ஆரம்பித்திருக்கிறோம் என்று பதிலுரையிலே தெரிவித்திருக்கிறேன். தேர்தல் அறிக்கைப்படி முதல்கட்டமாக சென்னையிலே கொடுக்கப்பட்டுள்ளது. அதேபோல, குடிநீர் திட்ட பணிகளுக்காக இன்றைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 21,000 கோடி ரூபாய் நிதியை கொடுத்திருக்கிறார்கள். இன்றைக்கு எல்லா மாவட்டங்களிலும்

சிறப்பாக போய்க்கொண்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) நான் பேசி முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: அதிலே உங்கள் ஆட்சியில் எவ்வளவு ஒதுக்கினீர்கள் என்று சொன்னேன். அதேபோல, இன்றைக்கு சென்னையிலே விலையில்லாமல் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க ஆரம்பித்துவிட்டோம்.

பிற்பகல் 4-50

அதேபோல, சுய உதவிக் குழுக்களுக்கு 25 சதவீதத்தில் வங்கிக் கடன் குறித்து இதற்கு முன்பே தெரிவித்திருக்கிறேன். அப்போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே இருந்தார்கள் என்று நினைக்கிறேன். இப்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் சரித்திர சாதனையாக, இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் கொடுக்காத வகையில், சுய உதவிக் குழுக்களுக்கு 26,460.73 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு கொடுத்திருக்கிறார்கள். அது உங்கள் ஆட்சிக் காலத்தில் 9,838 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) அடுத்து சொல்ல வருகிறேன். அவர்கள் கேட்டதற்குப் பதில் சொல்ல வருகிறேன். சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் அம்மா அவர்கள் 26,460 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். இதில் எல்லாத் தொழிலும் செய்யலாம். இதிலே 25 சதவீத மானியத்துடன் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்கப்படும் என்று சொன்னீர்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 10 இலட்சம் ரூபாயை இப்போது நிதியொதுக்கீடு செய்து, 4 இலட்சம், 4 இலட்சம், 2 இலட்சம் ரூபாய் என்று 100 சதவீத மானியமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. எந்தெந்த குழு வறுமைக்கோட்டிற்குக்கீழ் இருக்கிறது என்பதைக் கண்டறிந்து, அப்படிப்பட்ட பல ஊராட்சிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி 7 ஆயிரத்து 436 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு ரூ.262.26 கோடி கொடுத்திருக்கிறோம். அதேபோல, ஊராட்சி கூட்டமைப்புப் பெருங்கடன் ரூ.114.12 கோடி கொடுத்திருக்கிறோம். அதேபோல ஊராட்சி நல கூட்டமைப்புக்கு ஊக்க நிதி ரூ.78 கோடியே

17 இலட்சம். அதிலே பார்த்தீர்கள் என்றால், 100 சதவீதம் மானியம், 8 இலட்சம், 10 இலட்சம், 12 இலட்சம் கூட கொடுத்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, இன்றைக்கு நன்றாகச் செயல்படக்கூடிய குழுக்கள் திரும்பவும் பணத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காகத்தான் ரூ.26 ஆயிரத்து 468 கோடி இன்றைக்குக் வங்கிக் கடன் கொடுத்திருக்கிறார்கள். எந்தெந்தக் குழுவிற்கு எவ்வளவு தேவையோ, அதை தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறப்பான முறையிலே கொடுத்திருக்கிறார்கள். அதேபோல இந்த சுய உதவிக் குழுக்களும் சிறப்பாக, சந்தோஷமாக தொழில்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்த மலிவு விலை உணவகங்களைப் பொறுத்தவரை, 564 உணவகங்கள் தமிழ்நாடு முழுவதும் செயல்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) இல்லை, அதை மலிவு விலையில்தானே போடுகிறீர்கள். (குறுக்கீடு) உங்களுக்கு அந்தப் பேரை வைத்துக் கொள்ளுங்கள். எங்களுக்கு மலிவு விலை உணவகம்தான். அந்த உணவகங்களில் . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் பேசவில்லை இல்லையா? உட்காருங்கள். நீங்கள் பேசவில்லை என்றால் விட்டு விடுங்கள். (குறுக்கீடு) அதெல்லாம் முடியாது. உட்காருங்கள். நான் வேறோர் உறுப்பினரைக் கூப்பிட்டுவிட்டேன். என்ன திரு. சக்கரபாணி?*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 12 ஆயிரத்து 524 ஊராட்சிகளில் குடிநீர் வழங்கும் பணியில் தற்காலிகப் பணியாளர்களாக* Tank Operators *பணிபுரிகிறார்கள். அவர்களை நிரந்தரம் ஆக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா, அவர்களுக்கு ஊதிய உயர்வு வழங்குகின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே எதிர்பார்க்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணியாற்றும் குடிநீர் உடனாளிகள் பலரும் பல ஆண்டுக் காலமாக, 10, 20 ஆண்டுக் காலமாக தினக் கூலிகளாகப் பணியாற்றி வருகிறார்கள். அவர்களுக்குப் பணி நிரந்தரம் செய்து, காலமுறை ஊதியம் வழங்க அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் எந்தெந்தத் துறையிலே யார் யாருக்கெல்லாம் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டுமோ, அவர்களுக்கெல்லாம் பதவி உயர்வு மற்றும் ஊதிய உயர்வு வழங்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கோரிக்கை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 34-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.6,953,95,79,000/-, மூலதனக் கணக்கில் ரூ.4,590,12,58,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.275,93,62,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பிற்பகல் 4-55

(ஆ) கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 42- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.20,276,57,65,000/-, மூலதனக் கணக்கில் ரூ.910,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(இ) கோரிக்கை எண் 53–சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 53-சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,805,08,47,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 8-8-2016 (திங்கட்கிழமை) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

2016 ஆகஸ்ட் 5]

பின்னர், பேரவை பிற்பகல் 4-56 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

ஏதுமில்லை.

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

36. மானியக் கோரிக்கை எண் 34-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2016-2017. (தமிழ், ஆங்கிலம்)

37. மானியக் கோரிக்கை எண் 42-ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2016-2017. (தமிழ், ஆங்கிலம்)

38. மானியக் கோரிக்கை எண் 53-சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2016-2017. (தமிழ், ஆங்கிலம்)

39. பொதுப் பணித் துறையின் (கட்டடங்கள்) மக்கள் சாசனம், 2016. (தமிழ், ஆங்கிலம்)

40. பொதுப் பணித் துறையின் (நீர்வள ஆதாரத் துறை) திட்டச் சாதனை, 2015-2016. (தமிழ், ஆங்கிலம்)

41. பொதுப் பணித் துறையின் (நீர்வள ஆதாரத் துறை) மக்கள் சாசனம், 2016. (தமிழ், ஆங்கிலம்)

42. எரிசக்தித் துறை மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2016-2017. (தமிழ்)

43. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2016-2017. (தமிழ்)

[*2016 ஆகஸ்ட் 5*

44. நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2016-2017. (தமிழ்)

45. கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) மற்றும் பாசனம் (பொதுப் பணித் துறை) ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2016-2017. (தமிழ்)

இணைப்பு I

(91 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2016—2017

1. முன்னுரை:

தமிழ்நாடு, அதிவேகமான தொழில் வளர்ச்சி மற்றும் நகர மயமாதலில் வளர்ந்துவரும் மாநிலங்களில் ஒன்றாகும். மாநிலத்தின் தற்போதைய மக்கள் தொகையில் 48.45 விழுக்காடு மக்கள் நகர்ப்புறங்களில் வசித்து வருகின்றனர். அடுத்துவரும் 10 ஆண்டுகளிலும், தமிழ்நாடு இந்தியாவிலேயே நகர்ப்புற வளர்ச்சியில் ஒரு முன்னோடி மாநிலமாகத் தொடர்ந்து விளங்கும். இந்தியாவிலேயே அதிக அளவாக தமிழ்நாட்டின் நகர்ப்புற மக்கள் தொகை 2030 ஆம் ஆண்டில் 67 விழுக்காடாக உயரும் என கணக்கிடப்பட்டுள்ளது. பெருகிவரும் நகர்ப்புற மக்கள்தொகைக்கேற்ப அதிகரித்து வரும் உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை அளிப்பதற்குத் தேவையான கொள்கை முடிவுகள் மேற்கொள்வது மற்றும் மேலாண்மை உத்திகளை கையாளுவது பெரும் சவாலாக உள்ளது. இச்சவால்களை எதிர்கொள்ள, சேவைகள் திறன் மேம்பாடு, உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்குத் தேவையான நிதி ஆதாரங்களை திரட்டுதல், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு உகந்த தொழில்நுட்ப உத்திகளை கடைப்பிடித்தல் ஆகியவை தீர்வாக அமைந்துள்ளன.

மாநிலத்தில் உள்ள நகர்ப்புற பகுதிகளை மேம்படுத்துவதும், மாநிலம் முழுவதும் உள்ள பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கலை உறுதி செய்வதும் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் பொறுப்பாகும். இத்துறையின்கீழ், பெருநகர

[*2016 ஆகஸ்ட் 5*

சென்னை மாநகராட்சி, நகராட்சி நிருவாக ஆணையரகம் மற்றும் பேரூராட்சிகளின் இயக்ககம் ஆகியவை இத்துறையின் அங்கங்களாக செயல்படுவதுடன் திட்டமிடுதல், நிதி வழங்குதல், தரமான சேவை வழங்குவதை குறிக்கோளாகக் கொண்ட திட்டங்களைச் செயல்படுத்தி கண்காணித்தல் இந்த அலுவலகங்களின் பொறுப்பாகும்.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆகியவை குடிநீர்த் திட்டம் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளை நிறைவேற்றும் பொறுப்பிலுள்ளன. திருப்பூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள பொது மக்களின் குடிநீர் மற்றும் தொழிற்சாலைகளின் தண்ணீர் தேவையினை நிறைவு செய்யும் பொறுப்பில் புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் ஈடுபட்டுள்ளது.

தமிழ்நாட்டினை இந்திய மாநிலங்களிலேயே சிறந்த ஆளுகை கொண்ட "முதன்மை மாநிலமாக" திகழச் செய்வதே மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொலை நோக்காகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட "தொலைநோக்குத் திட்டம்-2023 ஆவணம்", தமிழகத்தின் 10 நகரங்களை உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளுடன் மேம்படுத்த வலியுறுத்துகிறது. மாநிலத்திலுள்ள அனைத்து பிற பகுதிகளும், சமச்சீர் உட்கட்டமைப்பு மேம்பாட்டின்மூலம் பொருளாதார வளர்ச்சியினைப் பெற இந்நகரங்கள் ஒரு முன்மாதிரியாக அமையும். மேலும், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும், உரிய அழுத்தத்துடன் குழாய்கள்மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் 24x7 வழங்குதலை உறுதி செய்வதும், அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பான சுகாதார வசதி கிடைக்கச் செய்வதோடு திறந்தவெளியில் மனிதக் கழிவு கழிக்கும் நிலை இல்லாத மற்றும் குப்பை கூளங்கள் இல்லாத சூழலில், வாழ்வதை உறுதி செய்வதே மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்கு பார்வையாகும்.

2016 ஆகஸ்ட் 5]

I. மக்கள் தொகை

நகர மக்கள் தொகையின் நிலையை கீழ்க்கண்ட அட்டவணையில் காணலாம்.

வ. எண்	இனம்	எண்ணிக்கை	பரப்பளவு (சதுர கி. மீட்டரில்)	பரப்பளவு %	மக்கள் தொகை (இலட்சத்தில்)	மக்கள் தொகை %
1.	பெருநகர சென்னை மாநகராட்சி	1	426	4.01	67.27	21.34
2.	இதர மாநகராட்சிகள்	11	1278.31	12.05	80.66	25.59
3.	நகராட்சிகள்	124	2516.05	23.72	86.39	27.41
4.	பேரூராட்சிகள்	528	6388.20	60.21	80.90	25.66
	மொத்தம்	**664**	**10608.56**	**100**	**315.22**	**100**

II. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் விவரங்களை கீழ்க்கண்ட அட்டவணையில் காணலாம்.

வ. எண்	இனம்	மேயர்/ தலைவர்	மன்ற உறுப்பினர்கள்
1.	பெருநகர சென்னை மாநகராட்சி	1	200
2.	இதர மாநகராட்சிகள்	11	719
3.	நகராட்சிகள்	124	3613
4.	பேரூராட்சிகள்	528	8288
	மொத்தம்	**664**	**12820**

[2016 ஆகஸ்ட் 5

III. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலை

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் 2015-16 ஆண்டில் நிதிநிலையினை கீழ்க்கண்ட பட்டியல் எடுத்துக்காட்டுகிறது.

(கோடியில்)

வ.எண்	ஆதாரம்	பெருநகர சென்னை மாநகராட்சி	இதர மாநகராட்சிகள்	நகராட்சிகள்	பேரூராட்சிகள்	மொத்தம்
1.	சொந்த வருவாய்	1031.15	954.60	1186.00	490.97	3662.72
2.	மாநில நிதிக் குழு மானியம்	408.53	654.15	865.16	827.62	2755.46
3.	14–வது மத்திய நிதிக் குழு மானியம்	117.48	185.32	245.11	229.11	777.02
4.	மத்திய / மாநில திட்டங்களுக்கான மானியம்	709.02	341.96	402.09	591.95	2045.02
5.	கடன்கள்	159.78	174.28	181.08	---	515.14
	மொத்தம்	**2425.96**	**2310.31**	**2879.44**	**2139.65**	**9755.36**

நகர்ப்புற மேம்பாட்டிற்கான தமிழ்நாடு மூன்றாவது வளர்ச்சித் திட்டம் முடிவுற்றதையடுத்து, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை தொடர்ந்து

மேம்படுத்துதல் மற்றும் சிறந்த நகர்ப்புற மேலாண்மை நடைமுறைகளைச் செயலாக்குதல் ஆகியவற்றை நோக்கங்களாக கொண்ட ₹3,831 கோடி மதிப்பீட்டிலான தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்பட தொடங்கியுள்ளது.

ஜெர்மானிய நாட்டு நிதி நிறுவனமான Kfw நிதியுதவியுடன் நீடித்த நகர்ப்புற உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி தமிழ்நாடு நிலை-II, பகுதி-1 மற்றும் பகுதி-2 திட்டங்கள் முறையே ₹578.16 கோடி மற்றும் ₹877.39 கோடி மதிப்பீட்டில் குடிநீர் வழங்கல், பாதாள சாக்கடைத் திட்டம், தெரு விளக்குகள், சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. உள்ளாட்சி அமைப்புகளின் நிதிநிலையை மேம்படுத்துவதற்காகவும், அவை சுய சார்புடைய அமைப்புகளாகச் செயல்படுவதற்காகவும், மாநிலத்தின் சொந்த வரி வருவாயிலிருந்து அவற்றிற்கு மானியமாக நிதி பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது.

2015-16 ஆம் நிதியாண்டில் ₹3316.22 கோடி மதிப்பீட்டிலான 13 திட்டங்களுக்கு அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான திட்டத்தின்கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டது. மேலும் 2015-16 ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகள் சீர்மிகு நகரங்களாக மத்திய அரசினால் தேர்வுசெய்யப்பட்டது. இந்த சீர்மிகு நகரங்களின் வளர்ச்சிக்காக ₹2936.25 கோடி மதிப்பீட்டிலான திட்டங்களுக்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

IV. அம்மா உணவகம்

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஏழை எளிய மக்கள், தினக் கூலிகள், ஆட்டோ ஓட்டுநர்கள் போன்றவர்கள் மலிவு விலையில் சுகாதாரமான மற்றும் தரமான உணவுகளை வயிறார உண்ணும் வகையில் வழங்குவதற்காக அம்மா உணவகங்கள் துவங்க உத்தரவிட்டார்கள். இதன் அடிப்படையில், சென்னை மாநகராட்சி பகுதிகளில் 293 அம்மா உணவகங்களும், சென்னை மாநகரிலுள்ள அரசு மருத்துவமனைகளில் 7 அம்மா உணவகங்களும் மொத்தம் 300 அம்மா உணவகங்கள் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. மேலும், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில்

[2016 ஆகஸ்ட் 5

ஒரு அம்மா உணவகத்தை 11-02-2014 அன்று துவக்கி வைத்தார். மற்ற மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் 247 அம்மா உணவகங்கள் இயங்கி வருகின்றன. ஆக மாநிலத்தில் மொத்தம் 547 அம்மா உணவகங்களில் ஒரு இட்லி ஒரு ரூபாய்க்கும், பொங்கல் ஐந்து ரூபாய்க்கும், பலவகை சாதங்கள் ஐந்து ரூபாய்க்கும், தயிர் சாதம் மூன்று ரூபாய்க்கும் மலிவு விலையில் ஏழை எளிய மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

V. நகர்ப்புற சுகாதாரம்

நகர்ப்புறங்களில் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காகவும், திடக்கழிவு மேலாண்மையைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்காகவும் தூய்மை இந்தியா திட்டம் மத்திய, மாநில அரசின் நிதியுதவியுடன் 2014 ஆம் ஆண்டு அக்டோபர் 2 ஆம் தேதி முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 82,356 தனி நபர் குடியிருப்பு கழிப்பறைகள் மற்றும் 8010 பொதுக் கழிப்பறை இருக்கைகள் கட்டப்பட்டுள்ளன. மேலும், 475 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 78 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

VI. நீடித்த குடிநீர் ஆதார பாதுகாப்பு இயக்கம்

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலங்களில் மேற்கொள்ளப்பட்ட உறுதியான முடிவுகளாலும், புதுமையான பல நடவடிக்கைகளாலும் நகரமயமாதலில் ஏற்படும் பிரச்சினைகளை உரிய முறையில் தீர்ப்பதற்குத் தேவையான வழி வகைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மழைநீர் சேகரிப்பு எனும் வரலாற்றுச் சிறப்பு மிக்க சீரிய திட்டத்தினை 2001 ஆம் ஆண்டிலேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அனைத்து கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை நிறுவுவதைக் கட்டாயமாக்கும் வகையில் சட்டதிருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. மழைநீர் சேகரிப்பின் பயன்கள் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்திட பெரிய அளவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மழைநீர் சேகரிப்பு இயக்கத்தின் பொருத்தமான தொடர்ச்சியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2015-16 ஆம் ஆண்டில் நீடித்த குடிநீர் ஆதார பாதுகாப்பு இயக்கத்தினை (Sustainable Water Security

2016 ஆகஸ்ட் 5]

Mission) *அறிவித்தார்கள். பெரிய குடியிருப்பு / அரசு வளாகங்களில் மழைநீர் சேகரித்தல், வெள்ள நீரினைச் சேகரித்தல், பொது மக்கள் உதவியுடன் நீர்நிலையினைப் புனரமைத்தல் மற்றும் பயன்படுத்தப்பட்ட நீரை* (Grey water) *மறுசுழற்சி செய்து மீண்டும் உபயோகப்படுத்துதல் ஆகியவை இந்த இயக்கத்தின் குறிக்கோளாகும். இந்த இயக்கத்தின்கீழ் சென்னை பெருநகர் பகுதியில் மாதிரிப் பணிகள்* (Pilot Project) *வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளன.*

இதன்மூலம் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டுக்கான முற்போக்கான திட்டங்களைச் செயல்படுத்துதல், மேம்படுத்தப்பட்ட நகர ஆளுமை, நகர்ப்புற சேவைகள் வழங்குதல், தமிழகத்தின் அனைத்து மாநகரங்கள் மற்றும் நகரங்களைச் சுத்தமாக, சுகாதாரமாக வாழ்வதற்கு ஏற்ற நகரங்களாக மாற்றுதல் போன்றவற்றை முழு முயற்சியுடன் செயல்படுத்தி வருகின்றது. இவற்றை செய்வதன்மூலம் "இந்தியாவிலேயே, தமிழ்நாட்டினை வறுமையற்ற, மிகவும் செழுமையான மாநிலமாக வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதற்கும், மக்கள் அனைத்து அடிப்படை வசதிகளையும் அனுபவிக்கும் நவீன சமுதாயத்தினை உருவாக்கவும், இணக்கமான சுற்றுச்சூழலுடன் உலகின் பிற பகுதிகளுடன் இணைந்து, மனமகிழ்வுடன் மக்கள் வாழக்கூடிய மாநிலமாக தமிழகத்தை மாற்ற வேண்டும்" என்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குத் திட்டத்தினை தெளிவான உண்மையாக்க இத்துறை அயராது பாடுபடும்.

TRUTH ALONE TRIUMPHS

[2016 ஆகஸ்ட் 5

2. நகராட்சி நிருவாக ஆணையரகம்

நகராட்சி நிருவாக ஆணையரகம், மாநிலத்தில் உள்ள அனைத்து நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின் (சென்னை மாநகராட்சி நீங்கலாக) செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும் மற்றும் மேற்பார்வையிடும் துறைத் தலைமையாக செயல்படுகிறது. நகராட்சி நிருவாக ஆணையரகம், நகராட்சி நிருவாக ஆணையர் அவர்களை தலைவராகவும் மற்றும் இணை ஆணையர்கள், கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர் மற்றும் ஏழு நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர்களை (மண்டலத்திற்கு தலா ஒருவர் என செங்கல்பட்டு, வேலூர், சேலம், திருப்பூர், தஞ்சாவூர், மதுரை மற்றும் திருநெல்வேலி மண்டலங்கள்) கொண்டுள்ளது.

தமிழ்நாட்டில் 11 மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம், திருப்பூர், ஈரோடு, வேலூர், தூத்துக்குடி, திண்டுக்கல், தஞ்சாவூர் மற்றும் 124 நகராட்சிகள், நகராட்சி நிருவாக ஆணையரின் நிருவாக கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகின்றன. மாநிலத்தில் உள்ள நகராட்சிகள் ஆண்டு வருமானத்தின் அடிப்படையில் கீழ்க்காணுமாறு தரம் பிரிக்கப்பட்டுள்ளன:

வ. எண்	தரம்	ஆண்டு வருமானம் (₹ கோடியில்)	நகராட்சிகளின் எண்ணிக்கை
(1)	(2)	(3)	(4)
1.	சிறப்பு நிலை	10.00 க்கு மேல்	18
2.	தேர்வு நிலை	6.00 – 10.00	28
3.	முதல் நிலை	4.00 – 6.00	34
4.	இரண்டாம் நிலை	4.00–க்குகீழ்	44
		மொத்தம்	124

2016 ஆகஸ்ட் 5]

மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள்

இந்திய அரசியலமைப்பு சட்டம் 74-வது திருத்தத்தின்படி, மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு 17 மற்றும் 19 அக்டோபர் 2011-ல் தேர்தல் நடத்தப்பட்டது. இத்தேர்தலில் மாநகராட்சி மேயர்கள் மற்றும் நகர்மன்ற தலைவர்கள் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகராட்சி மேயர்கள், நகர்மன்ற தலைவர்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் 2011 ஆம் ஆண்டு அக்டோபர் 25 ஆம் நாளன்று பொறுப்பேற்றனர்.

மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் காலியாக இருந்த பதவியிடங்களுக்கு 18-9-2014 அன்று இடைத்தேர்தல் நடத்தப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகராட்சி மேயர்கள், நகர்மன்ற தலைவர்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் 2014 ஆம் ஆண்டு செப்டம்பர் 24 ஆம் நாளன்று பொறுப்பேற்றனர்.

பிரிவுவாரியாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகராட்சி மேயர்கள், நகர்மன்ற தலைவர்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் விவரம் பின்வருமாறு:

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்	தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (பொது)	தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (பெண்கள்)	பழங்குடி இனத்தினர் (பெண்கள்)	பெண்கள் (பொது)	பொது	மொத்தம்
மாநகராட்சிகள் (சென்னை மாநகராட்சி உள்பட)						
மேயர்கள்	--	1	--	4	7	12
வார்டு உறுப்பினர்கள்	58	34	--	275	552	919
நகராட்சிகள்						
நகர்மன்றத் தலைவர்கள்	10	6	1	34	73	124
வார்டு உறுப்பினர்கள்	271	194	4	1007	2137	3613

[2016 ஆகஸ்ட் 5

மொத்தமுள்ள 12 மாநகராட்சி மேயர்களில், 7 பெண் மேயர்களும், 124 நகர் மன்றத் தலைவர்களில் 53 பெண் நகர் மன்றத் தலைவர்களும் உள்ளனர்.

2.1 உட்கட்டமைப்பு மேம்பாடு

நகர்ப்புற உட்கட்டமைப்புகளை உருவாக்குதல் மற்றும் பராமரித்தல் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் முக்கிய பணியாகும். தரமான, பயனுள்ள உட்கட்டமைப்புகளை உருவாக்க அரசு அதிகபட்ச முன்னுரிமை வழங்குகிறது. மத்திய மற்றும் மாநில அரசுகள் மற்றும் உலக வங்கி, ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி (KfW), ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) முதலான பன்னாட்டு நிறுவனங்கள் ஆகியவற்றின்மூலம் பெறப்படும் நிதி ஆதாரத்தைக் கொண்டு நகர்ப்புற உள்ளாட்சிகளின் உட்கட்டமைப்பு பணிகள் செயலாக்கப்படுகின்றன.

2.2 ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (IUDM)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக), நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கான ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் என்ற முன்னோடித் திட்டத்தினை துவக்கியுள்ளார்கள். மேற்படி திட்டத்தின்மூலம் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும் உட்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், குடிநீர் வழங்கல், தெரு விளக்குகள், பாதாள சாக்கடை, மழைநீர் வடிகால்கள், சுகாதாரம், திடக்கழிவு மேலாண்மை, பேருந்து நிலைய மேம்பாடு மற்றும் பூங்காக்கள் முதலானவற்றை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நகர்ப்புற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த கடந்த ஐந்தாண்டுகளில் ₹2428.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட 6492 பணிகளில் 5615 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன.

2015-16 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட இன வாரியான திட்டங்கள் பின்வருமாறு:

2016 ஆகஸ்ட் 5]

வ. எண்	இனம்	நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் எண்ணிக்கை	அனுமதிக்கப் பட்ட தொகை (₹ கோடியில்)	எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகளின் எண்ணிக்கை	செயலாக்கத்தில் உள்ள பணிகளின் எண்ணிக்கை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1.	பாதாள சாக்கடை திட்டம்	16	123.00	16	16
2.	குடிநீர் வழங்கல்	10	70.19	10	10
	மொத்தம்		193.19	26	26

இத்திட்டத்தினைச் செயல்படுத்த 2016-17 ஆம் ஆண்டுக்கு ₹886.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.3 குடிநீர் வழங்கல்

பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் வீதமும், பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படாத மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் வீதமும் குடிநீர் வழங்க, மத்திய பொது சுகாதாரப் பொறியியல் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பு (CPHEEO) குறியீடுகளை நிர்ணயம் செய்துள்ளது. இந்த குறியீடுகளை எய்தும் வகையில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் குடிநீர் திட்டங்களைச் செயல்படுத்த உறுதி பூண்டுள்ளன.

தமிழகத்தில் உள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் குடிநீர் விநியோக அளவீடுகள் கீழ்வருமாறு:

அளவீடு	தற்போதைய நிலை	நகராட்சி கள்	மாநகராட்சிகள்
90 லிட்டர் மற்றும் அதற்குமேல்	நன்று	58	6 (110 லிட்டர் மற்றும் அதற்குமேல்)
40 முதல் 89 லிட்டர் வரை	திருப்திகரமான நிலை	66	5 (70–109 லிட்டர் வரை)
20 முதல் 39 லிட்டர் வரை	பற்றாக்குறை	0	0 (70 லிட்டருக்கு குறைவானநிலை)
20 லிட்டருக்கும் குறைவானநிலை	மிகவும் பற்றாக்குறை	–	–
	மொத்தம்	124	11

[2016 ஆகஸ்ட் 5

நகர்ப்புற உள்ளாட்சிகளில் மக்களுக்குத் தேவையான பாதுகாப்பான குடிநீர் விநியோகம் செய்வது அரசின் முக்கிய கொள்கையாகும். அதன் அடிப்படையில் குடிநீர் விநியோகத்தினை மேம்பாடு செய்வதற்கு ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை, ஜெர்மன் மேம்பாட்டு வங்கி மற்றும் உலக வங்கி போன்ற வெளி நிறுவனங்களின் நிதி உதவியுடனும், மேலும் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் மற்றும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களின்மூலமும் குடிநீர் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் உள்ளாட்சி அமைப்புகள் மூலமாகவும் மற்றும் சில திட்டங்கள் அரசு சார்பு நிறுவனங்களாகிய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (TWAD) மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம் (CMWSSB) மூலமாகவும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2011 ஆம் ஆண்டில் தினமும் மொத்தம் 1567.10 மில்லியன் லிட்டர் குடிநீர், நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு சராசரியாக 93 லிட்டர் வீதம் அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-III, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம், ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை, ஜெர்மன் மேம்பாட்டு வங்கி, ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் மற்றும் உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி போன்ற நிதிகளின்கீழ் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தியதன்மூலம் குடிநீர் விநியோகம் மேம்படுத்தப்பட்டு, தினமும் மொத்தம் 1862.05 மில்லியன் லிட்டர் குடிநீர், நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு சராசரியாக 111.47 லிட்டர் வீதம் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-3-ன்கீழ் 17 குடிநீர் பணிகள் ₹661.65 கோடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அதில் 13 பணிகள் முடிவுற்றுள்ளன. மீதமுள்ள 4 குடிநீர் திட்டங்கள் முன்னேற்றத்தில் உள்ளன.

2016 ஆகஸ்ட் 5]

பணிகள் முடிவுற்ற 13 உள்ளாட்சிகளின் குடிநீர் விநியோக அளவீடு பின்வருமாறு:

வ. எண்	உள்ளாட்சியின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹கோடியில்)	தினசரி குடிநீர் விநியோகம்			
			திட்டம் செயல்படுத்துவதற்கு முன்		திட்டம் முடிவுற்ற பின்	
			எம்.எல்டி	எல்பிசிடி	எம்.எல்டி	எல்பிசிடி
1.	திருநெல்வேலி (குச்சநல்லூா்)	5.94	36.72	77	55.00	116
2.	கோபிச்செட்டிபாளையம்	4.05	4.96	90	7.44	135
3.	பொள்ளாச்சி	8.64	10.2	105	12.7	135
4.	போடிநாயக்கனூர்	2.32	5.75	76	6.95	90
5.	சேலம்	24.84	71.00	85	105.72	127
6.	குறிச்சி	49.93	4.00	40	7.5	70
7.	குனியமுத்தூர்		3.5	40	8.00	75
8.	கவுண்டம்பாளையம்	30.38	4.56	48	8.00	80
	வடவள்ளி		2.3	55	3.00	70
9.	திருவண்ணாமலை-I	0.32	பகிர்மானம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது			
10.	சிவகங்கை –II	0.16				
11.	துறையூர்	0.14				
12.	கிருஷ்ணகிரி	1.52				
13.	குழித்துறை–II	0.99				

[2016 ஆகஸ்ட் 5

பணிகள் நடைபெற்றுவரும் 4 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தற்போதைய நிலை பின்வருமாறு:

வ. எண்	உள்ளாட்சியின் பெயர்	திட்ட மதிப்பீடு ₹கோடியில்	திட்டத்தின் தற்போதைய நிலை
1.	சேலம் பகுதி – II	147.12	பணி முடிவுறும் நிலையில் உள்ளது
2.	பல்லவபுரம்	99.95	பணி முன்னேற்றத்தில் உள்ளது.
3.	பம்மல்	43.10	பணி முன்னேற்றத்தில் உள்ளது.
4.	தேனிஅல்லிநகரம்	68.83	பணி முடிவுறும் நிலையில் உள்ளது.

நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் ஆளுமை (JnNURM-UIG) திட்டத்தின்கீழ் 13 பணிகள் ₹1193.74 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அதில் 9 பணிகள் முடிவுற்றுள்ளன.

பணிகள் முடிவுற்ற 8 உள்ளாட்சிகளில் குடிநீர் விநியோக அளவீடு பின்வருமாறு:

வ. எண்	உள்ளாட்சியின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹கோடியில்)	தினசரி குடிநீர் விநியோகம்			
			திட்டம் செயல்படுத்துவதற்கு முன்		திட்டம் முடிவுற்ற பின்	
			எம்.எல்டி	எல்பிசிடி	எம்.எல்டி	எல்பிசிடி
1.	மதுரை	71.23	71.6	67	118.6	110
2.		9.14	வைகை ஆற்றின் 3 இடங்களில் தடுப்பணை கட்டப்பட்டு நீர் ஆதாரம் மேம்படுத்தப்பட்டது.			
3.	கோயம்புத்துாா்	159.85	176.00	109	216.00	135
4.	தாம்பரம்	32.62	8.77	55	16.12	90
5.	ஆனையூர் (மதுரையுடன் இணைக்கப் பட்டுள்ளது)	7.88	3.48	46	4.12	90

2016 ஆகஸ்ட் 5]

வ. எண்	உள்ளாட்சியின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹கோடியில்)	தினசரி குடிநீர் விநியோகம்			
			திட்டம் செயல்படுத்துவதற்கு முன்		திட்டம் முடிவுற்ற பின்	
			எம்.எல்டி	எல்பிசிடி	எம்.எல்டி	எல்பிசிடி
6.	திருப்பரங்குன்றம் மற்றும் ஹார்விபட்டி (மதுரையுடன் இணைக்கப் பட்டுள்ளது)	9.70	2.69	69	3.71	90
7.	திருமங்கலம்	68.13	8.08	90	11.18	135
8.	மதுரை விரிவாக்கப் பகுதி	106.99	17.14	90	27.55	135
9.	கோயம்புத்தூர் விரிவாக்கப் பகுதி	29.03	10.64	70	36.08	135

மீதமுள்ள 4 பணிகளின் தற்போதைய நிலை கீழ்வருமாறு:

வ. எண்.	உள்ளாட்சியின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹கோடியில்)	திட்டத்தின் தற்போதைய நிலை
1.	ஆவடி	103.84	பகுதி முடிவுற்று பணி முன்னேற்றத்தில் உள்ளது.
2.	அனகாபுத்தூர்	14.88	பணி நடைபெற்று வருகிறது
3.	பூவிருந்தவல்லி	23.87	ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கையில் உள்ளது
4.	கோயம்புத்தூர் (24x7)	556.57	ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளது

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் (JnNURM-UIDSSMT) திட்டத்தின்கீழ் 40 பணிகள் ₹740.47 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டதில், 30 குடிநீர் திட்டப் பணிகள் நிறைவுற்றுள்ளன.

[2016 ஆகஸ்ட் 5

பணிகள் முடிவுற்ற 30 உள்ளாட்சிகளின் குடிநீர் விநியோக அளவீடு

வ. எண்	உள்ளாட்சி யின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹ கோடியில்	தினசரி குடிநீர் விநியோகம்			
			திட்டம் செயல்படுத்து வதற்கு முன்		திட்டம் முடிவுற்ற பின்	
			எம்.எல்டி	எல்பிசிடி	எம்.எல்டி	எல்பிசிடி
1.	தேவகோட்டை	0.30	உள்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகள் மட்டும்			
2.	கரூர்	1.35	6.9	84	8.4	110
3.	வால்பாறை	2.21	0.75	42	2.51	122
4.	திருப்பத்தூர்	7.58	4.9	52	5.75	72
5.	ராமநாதபுரம்	47.70	1.25	20	6.61	70
6.	பரமக்குடி	58.24	6.00	62	8.47	70
7.	கீழக்கரை	20.16	0.6	19	2.88	70
8.	சிவகங்கை	32.80	2.8	70	4.40	70
9.	ராமேஸ்வரம்	33.76	0.75	20	2.66	70
10.	அரக்கோணம்	8.45	6.00	77	9.6	90
11.	திருத்தணி	5.12	2.9	69	7.2	90
12.	அறந்தாங்கி	3.46	3.16	85	4.16	112
13.	மறைமலை நகர்	2.54	2.68	55	5.32	135
14.	விக்ரமசிங் கபுரம்	2.46	4.61	83	7.23	90
15.	நாமக்கல்	14.32	4.24	70	10.16	135
16.	ஸ்ரீவில்லி புத்தூர்	29.49	0.35	47	0.6	90
17.	கூடலூர் (நீலகிரி)	5.25	2.95	60	5.94	135
18.	ஈரோடு	8.00	குடிநீர் பிரதான மற்றும் பகிர்மான குழாய்கள் மாற்றி அமைக்கும் மேம்பாட்டு பணிகள்			
19.	ராசிபுரம்	8.25				
20.	தஞ்சாவூர்	9.04				
21.	விழுப்புரம்	9.55	5.4	57	11.25	135

2016 ஆகஸ்ட் 5]

22.	ஒட்டன் சத்திரம்	6.69	1.94	54	3.24	90
23.	மேட்டூர்	12.47	5.00	104	7.2	135
24.	ஆத்தூர்	7.13	குடிநீர் பிரதான மற்றும் பகிர்மான குழாய்கள் மாற்றி அமைக்கும் மேம்பாட்டு பணி			
25.	வந்தவாசி	10.90	2.20	70	3.44	110
26.	திருச்செங் கோடு	7.58	7.00	73	10.00	103
27.	காரைக்குடி	18.58	7.98	78	19.94	135
28.	பல்லடம்	17.47	3.18	75	5.56	121
29.	சிதம்பரம்	7.18	4.48	72	5.60	90
30.	தாராபுரம்	14.74	3.50	90	5.50	120

மீதமுள்ள 10 திட்டப் பணிகளின் தற்போதைய நிலை கீழ்வருமாறு:

வ. எண்	உள்ளாட்சியின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹ கோடியில்)	திட்டத்தின் தற்போதைய நிலை
1.	வெள்ளக்கோவில்	17.41	பணி முன்னேற்றத்தில் உள்ளது
2.	காங்கேயம்	16.07	
3.	கம்பம்	18.8	
4.	கோவில்பட்டி	81.82	
5.	காயல்பட்டினம்	29.67	
6.	பெரியகுளம்	15.54	
7.	திருவந்திபுரம்	13.44	
8.	திண்டிவனம்	52.45	
9.	ஆரணி	36.26	
10.	கொடைக்கானல்	46.31	

[2016 ஆகஸ்ட் 5

ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) திட்டத்தின்கீழ் 9 பணிகள் ₹663.68 கோடி மதிப்பீட்டில் திருச்சி, திண்டுக்கல் மற்றும் தூத்துக்குடி மாநகராட்சிகள், பழனி, குன்னூர், எடப்பாடி, தேவகோட்டை, மேட்டுப்பாளையம் மற்றும் உடுமலைப்பேட்டை நகராட்சிகளில் எடுத்துக்கொள்ளப்பட்டது. அதில் திருச்சி மாநகராட்சி, தேவகோட்டை, எடப்பாடி மற்றும் குன்னூர் நகராட்சிகளில் பணிகள் முடிவுற்றுள்ளன.

பணிகள் முடிவுற்ற 4 உள்ளாட்சிகளின் குடிநீர் விநியோக அளவீடு கீழ்வருமாறு:

வ. எண்	உள்ளாட்சியின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹ கோடியில்)	தினசரி குடிநீர் விநியோகம்			
			திட்டம் செயல்படுத்துவதற்கு முன்		திட்டம் முடிவுற்ற பின்	
			எம்எல்டி	எல்பிசிடி	எம்எல்டி	எல்பி சிடி
1.	திருச்சிராப்பள்ளி	221.42	90	98	154	135
2.	தேவகோட்டை	8.32	4.06	78	4.67	81
3.	எடப்பாடி	18.52	3.14	61	6.3	113
4.	குன்னூர்	13.85	2.82	62	3.46	76

மீதமுள்ள 5 திட்டப் பணிகளின் தற்போதைய நிலை கீழ்வருமாறு:

வ. எண்	உள்ளாட்சியின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹கோடி யில்)	திட்டத்தின் தற்போதைய நிலை
1.	பழனி	21.60	பகுதி பணி முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணி முன்னேற்றத்தில் உள்ளது
2.	தூத்துக்குடி	282.44	பணி முடிவுறும் நிலையில் உள்ளது
3.	திண்டுக்கல்	70.5	பணி முன்னேற்றத்தில் உள்ளது

2016 ஆகஸ்ட் 5]

வ. எண்	உள்ளாட்சியின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹கோடி யில்)	திட்டத்தின் தற்போதைய நிலை
4.	மேட்டுப் பாளையம்	9.16	பணி முன்னேற்றத்தில் உள்ளது
5.	உடுமலைப் பேட்டை	17.87	பணி முடிவுறும் நிலையில் உள்ளது

ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW) நிதியின்கீழ் 13 பணிகள் ₹777.69 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டதில் 4 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. பணிகள் முடிவுற்ற 4 உள்ளாட்சிகளின் குடிநீர் விநியோக அளவீடு கீழ்வருமாறு:

வ. எண்	உள்ளாட்சி களின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹ கோடியில்)	தினசரி குடிநீர் விநியோகம்			
			திட்டம் செயல்படுத்து வதற்கு முன்		திட்டம் முடிவுற்ற பின்	
			எம்எல்டி	எல்பிசிடி	எம்எல்டி	எல்பிசிடி
1.	திருநெல்வேலி	22.22	40.32	84	47.90	101
2.	கடையநல்லூார்	21.41	4.06	78	4.67	81
3.	திருவண்ணா மலை	36.66	18.30	100	20.50	126
4.	பள்ளிப்பாளையம்	11.66	2.59	63	3.22	91

மீதமுள்ள 9 பணிகளின் தற்போதைய நிலை கீழ்வருமாறு:

வ. எண்	உள்ளாட்சியின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹ கோடியில்)	திட்டத்தின் தற்போதைய நிலை
1.	கரூர்	24.67	பணி முடிவுறும் நிலையில் உள்ளது
2.	தாந்தோனி	25.16	பணி முடிவுறும் நிலையில் உள்ளது
3.	இனாம் கரூர்	18.57	பணி முடிவுறும் நிலையில் உள்ளது

[*2016 ஆகஸ்ட் 5*

வ. எண்	உள்ளாட்சியின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹ கோடியில்)	திட்டத்தின் தற்போதைய நிலை
4.	உதகமண்டலம்	27.20	பகுதி பணி முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன
5.	திருநெல்வேலி	230.00	ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளது
6.	கடலூர்	148.09	பணி முன்னேற்றத்தில் உள்ளது
7.	திருச்சிராப்பள்ளி	63.70	பணி முன்னேற்றத்தில் உள்ளது
8.	குன்னூர்	40.19	ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளது
9.	கோயம்புத்தூர் விரிவாக்கப் பகுதி	108.16	

ஒகேனக்கல் காவேரி கூட்டுக் குடிநீர் மற்றும் புளூரைடு பாதிப்பு குறைப்பு ₹1928.80 கோடி மதிப்பீட்டில் முடிவுற்றுள்ளது. இத்திட்டத்தில் கிருஷ்ணகிரி, தருமபுரி மற்றும் ஒசூர் நகராட்சிகள் பயனடைந்துள்ளன. திட்ட மதிப்பீட்டு தொகையில் நகராட்சிகளின் விகிதாசார தொகை ₹399.69 கோடியாகும்.

பணிகள் முடிவுற்ற 3 நகராட்சிகளின் குடிநீர் விநியோக அளவீடு பின்வருமாறு:

வ. எண்	உள்ளாட்சி களின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹ கோடியில்)	தினசரி குடிநீர் விநியோகம்			
			திட்டம் செயல்படுத்து வதற்கு முன்		முடிவுற்ற பின்	
			எம்எல்டி	எல்பிசிடி	எம்எல்டி	எல்பிசிடி
1.	தருமபுரி	132.55	5.50	80	14.26	135
2.	கிருஷ்ணகிரி	93.59	4	56	8	112
3.	ஒசூர்	149.32	6.50	27	15.50	63

2016 ஆகஸ்ட் 5]

ஆத்தூர் நரசிங்கபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ₹270.00 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, முடிவடைந்துள்ளது. இத்திட்டம் முடிவடைந்ததன்மூலம் தினசரி குடிநீர் விநியோகம் கீழ்க்கண்டவாறு மேம்பட்டு உள்ளது.

உள்ளாட்சி களின் பெயர்	தினசரி குடிநீர் விநியோக திட்டம்			
	திட்டம் செயல்படுத்துவதற்கு முன்		திட்டம் முடிவுற்றதற்கு பின்	
	எம்எல்டி	எல்பிசிடி	எம்எல்டி	எல்பிசிடி
ஆத்தூர்	3.30	52	6.20	100
நரசிங்கபுரம்	1.30	56	1.90	82

வேலூர் கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் ₹1044.90 கோடி மதிப்பீட்டில், வேலூர் மாநகராட்சி மற்றும் 11 நகராட்சிகளில் கூட்டுக் குடிநீர் திட்டம் மேற்கொள்ளப்பட்டு, தற்போது பணிகள் முடிக்கப்பட்டு, குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு ஹட்கோ நிதி, ஜெர்மன் வங்கி திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் பங்களிப்பு தொகை ₹104.5 கோடி மானியமாக ஒதுக்கீடு செய்யப்பட்டது.

பணிகள் முடிவுற்ற 1 மாநகராட்சி மற்றும் 11 நகராட்சிகளின் குடிநீர் விநியோக அளவீடு பின்வருமாறு:

வ. எண்	உள்ளாட்சிகளின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹கோடியில்)	தினசரி குடிநீர் விநியோகம்			
			திட்டம் செயல்படுத்து வதற்கு முன்		திட்டம் முடிவுற்ற பின்	
			எம்எல்டி	எல்பிசிடி	எம்எல்டி	எல்பிசிடி
1.	வேலூர் மாநகராட்சி	529.56	18.5	37	57.73	111
2.	ஆம்பூர்	95.25	4.4	39	11.16	97
3.	ஆற்காடு	47.71	4.2	77	5.42	97
4.	இராணிப்பேட்டை	30.22	3.5	69	4.78	94
5.	குடியாத்தம்	86.40	7.3	80	9.62	105
6.	ஜோலார் பேட்டை	16.44	2.58	68	2.75	93
7.	வாலாஜா பேட்டை	6.84	2.22	69	2.80	87

8	அரக்கோணம்	87.42	6.00	76	7.30	92
9	திருப்பத்தூர்	36.94	7.03	90	7.14	91
10	பேரணாம்பட்டு	34.01	1.95	38	4.52	88
11	மேல்விஷாரம்	26.83	3.02	67	4.00	90
12	வாணியம்பாடி	47.26	6.7	70	8.3	87

•மேலூர் கூட்டு குடிநீர் திட்டத்தின்கீழ் ₹23.80 கோடி மதிப்பீட்டில் மேலூர் நகராட்சியில் குடிநீர் பணிகள் செயல்படுத்தப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

இவை தவிர 6 மாநகராட்சிகள் மற்றும் 10 நகராட்சிகளில் குடிநீர் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ள ₹3236.59 கோடி மதிப்பீட்டில் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, உலக வங்கி, ஜெர்மன் வங்கி திட்டத்திலும் மற்றும் அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான (AMRUT) திட்டத்திலும், நிதி ஆதாரம் முடிவு செய்ய நடவடிக்கையில் உள்ளது. நிதி ஆதாரம் முடிவு செய்யப்பட்டவுடன் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

2.3.1 திறனான குடிநீர் மேலாண்மை அமைப்பு

அரசு, மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் குடிநீர் விநியோக கட்டமைப்புகளை மேம்பாடு செய்ய முன்னுரிமை வழங்கியுள்ளது. இதற்கென கீழ்க்காணும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:

- நீருந்து கட்டமைப்பின் திறனை மேம்படுத்த தற்போதுள்ள திறனற்ற மோட்டார்கள் மற்றும் நீருந்து குழாய்களுக்குப் பதிலாக புதிய மோட்டார்கள் மற்றும் குழாய்கள் அமைத்தல்.
- சீரான குடிநீர் விநியோகத்தை உறுதி செய்ய தற்போதுள்ள பகிர்மான கட்டமைப்பினை புனரமைத்தல்.
- மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் குடிநீர் திட்டங்களில் குடிநீர் பெறும் அளவு, மோட்டார் மற்றும் பம்புகளின் செயல்திறன், குடிநீர் தரத்திற்கான பௌதீக மற்றும் வேதியியல் தன்மைகள் போன்றவை குறித்த விவரங்கள் சேகரிப்பதைத் தொடர்ந்து கண்காணிக்க, கண்காணிப்பு கட்டுப்பாடு மற்றும் தகவல் கையக அமைப்புகளை (SCADA) நிறுவுதல்.

2016 ஆகஸ்ட் 5]

- *கோயம்புத்தூர் மாநகராட்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்படும் திட்டத்தில் கண்காணிப்பு கட்டுப்பாடு மற்றும் தகவல் கையக அமைப்பு (SCADA) நிறுவப்பட்டுள்ளது. பில்லூர் இரண்டாவது குடிநீர் திட்டத்தில் இந்த அமைப்பை (SCADA) நிறுவுவதற்கு ஒப்பந்தப் புள்ளி பெறப்பட்டுள்ளது.*

- *திருநெல்வேலி, திருப்பூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை மாநகராட்சிகளில் கண்காணிப்புக் கட்டுப்பாடு மற்றும் தகவல் கையக அமைப்பு (SCADA) ஒரு சில பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

- *இராசிபுரம், குமாரபாளையம், திருச்செங்கோடு மற்றும் நாமக்கல் நகராட்சிகளில் கண்காணிப்புக் கட்டுப்பாடு மற்றும் தகவல் கையக அமைப்பை (SCADA) நிறுவுவதற்கான பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன.*

- *திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் திண்டுக்கல் மாநகராட்சிகளில் கண்காணிப்புக் கட்டுப்பாடு மற்றும் தகவல் கையக அமைப்பை (SCADA) நிறுவுவதற்கான பணி 2016-17-ல் செயல்படுத்தப்படும்.*

- *இந்த ஆண்டு செயல்படுத்தப்பட உள்ள குடிநீர் திட்டப் பணிகளின் மதிப்பீட்டின் ஒரு பகுதியாக கண்காணிப்புக் கட்டுப்பாடு மற்றும் தகவல் கையக அமைப்பு (SCADA) சேர்க்கப்பட்டு உள்ளது.*

2.3.2 குடிநீர் பகிர்மான கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம்

அனைத்து உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர் வழங்கும் நிலையை மேம்படுத்தும் பொருட்டு உட்கட்டமைப்பு மற்றும் நீராதாரத்தின் நிலையினை அறிந்திட நகராட்சி நிருவாக இயக்குநரகத்தால் தயாரிக்கப்பட்ட படிவத்தினைக் கொண்டு அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சேகரிக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில் உட்கட்டமைப்பு மற்றும் குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணியினை மேம்படுத்தும்பொருட்டு 53 உள்ளாட்சிகள் (11 உள்ளாட்சிகள் அருகாமையில் உள்ள உள்ளாட்சிகளுடன் இணைக்கப்பட்டுவிட்டது) தேர்வு செய்யப்பட்டது. முதற்கட்டமாக 42 உள்ளாட்சி அமைப்புகளிலும் பகிர்மானக் குழாய்

மேம்படுத்துதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளான மேல்நிலைத்தொட்டி மற்றும் தரை மட்டத்தொட்டிகள் கட்டும் பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கை மொத்தம் ₹1220.15 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டது. அதில் 15 உள்ளாட்சிகளில் ₹226.12 கோடி மதிப்பீட்டில் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (UIDSSMT), நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் ஆளுகை திட்டம் (UIG) மற்றும் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் (IUDM), ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) போன்ற திட்டங்களின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் 16 திட்டங்கள் ஜெர்மன் வங்கி (Kfw) மற்றும் பிற நிதி ஆதாரங்கள் பெற நடவடிக்கையிலுள்ளது. மீதமுள்ள 11 திட்டங்கள் நிதி ஆதாரம் பெறப்பட்ட பின்னர் எடுத்துக் கொள்ளப்படும். இது தவிர, தற்போது செயல்படுத்தப்படவுள்ள குடிநீர் திட்டங்கள் அனைத்திலும் பகிர்மான கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

2.3.3 மழை நீர் சேகரிப்பு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின்கீழ் மழை நீர் சேகரிப்பு திட்டம் 2001 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 2001-2006 ஆம் ஆண்டுகளில் தீவிரமாக செயல்படுத்தப்பட்ட இத்திட்டம் நிலத்தடி நீர் மட்டம் உயர பெரும் பங்கினை ஆற்றியுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி கட்டட அனுமதி வழங்குவதற்கு அனைத்து கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பினை கட்டாயமாக அமைக்க வழி வகை செய்யும் வகையில், 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் கட்டட விதிகள், 1973 ஆம் ஆண்டு அடுக்குமாடி மற்றும் பொது கட்டட விதிகள், 2002 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி கட்டடங்கள் (நீர் பாதுகாப்பு) விதிகள் ஆகியவற்றில் தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. மாநிலம் முழுவதும் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டதன் காரணமாக நிலத்தடி நீர் மட்டம் குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்துள்ளது. அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் மழை நீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு முகாம்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகின்றன.

2016 ஆகஸ்ட் 5]

2016 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மற்றும் நகராட்சிகளில் மொத்தமுள்ள 42.55 இலட்சம் கட்டடங்களில், 35.09 இலட்சம் கட்டடங்களில் (25,650 அரசு கட்டடங்கள் மற்றும் 34.84 இலட்சம் தனியார் கட்டடங்கள்) மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள நீர் நிலைகளில் மழைநீர் சேகரிப்பு பணிகளை மேற்கொள்ள மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. மொத்தமுள்ள 1482 குளங்கள் மற்றும் கோவில் குளங்களில், ஏற்கெனவே 716 குளங்களுக்கு மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன.

2016 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை கட்டடங்களில் 82 சதவீதமும், குளங்கள் மற்றும் நீர்நிலைகளில் 48.31 சதவீதமும் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றின்மூலம் மழைநீரின் சேகரிப்பு 4.82 டிஎம்சி என கணக்கிடப்பட்டுள்ளது (ஆதாரம்: தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்). இதன்மூலம் நிலத்தடி நீர்மட்டம் உயரும்.

2016-17 ஆம் ஆண்டில் மீதமுள்ள கட்டடங்களிலும், குளங்கள் மற்றும் நீர்நிலைகளிலும் மழைநீர் சேகரிப்பு பணிகள் எடுத்துக் கொள்ளப்படும்.

2.3.4 வடகிழக்கு பருவ மழை—2015 (மாநில பேரிடர் நிவாரண நிதி)

2015 ஆம் ஆண்டில் பெய்த வடகிழக்கு பருவ மழையினால் சேதமடைந்த சாலைகளை தற்காலிமாக சீரமைக்கும் பணிகளுக்கு 2015-16-ல் அரசு ₹75.00 கோடி மாநில பேரிடர் நிவாரண நிதியின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 8 மாநகராட்சிகள் மற்றும் 58 நகராட்சிகளில் மழையினால் சேதமடைந்த சாலைகள் மற்றும் சிறுபாலங்கள் சீரமைக்க 861 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 744 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

2.4 பாதாள சாக்கடைத் திட்டம் (UGSS)

அரசின் கொள்கை முடிவின்படி படிப்படியாக அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 117 உள்ளாட்சி அமைப்புகளில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு விரிவான திட்ட அறிக்கைகள் ₹11,271 கோடி மதிப்பீட்டில்

[2016 ஆகஸ்ட் 5

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் தயாரிக்கப்பட்டுள்ளன. உரிய நிதியாதாரம் முடிவு செய்யப்பட்டபின் பல்வேறு கட்டங்களாக செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

2.4.1 செயலாக்கத்திலுள்ள பாதாள சாக்கடைத் திட்டங்கள்

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் பகுதி III-ன்கீழ் ₹1025.51 கோடி மதிப்பீட்டில் 22 நகரங்களில் எடுத்துக் கொள்ளப்பட்ட பாதாள சாக்கடைத் திட்டங்களில், உதகமண்டலம், சின்னமனூர், நாமக்கல், தருமபுரி, பெரம்பலூர், திண்டுக்கல் (பகுதி), திருவண்ணாமலை, காஞ்சிபுரம், இராமநாதபுரம், திருவாரூர், கடலூர், தேனி, அல்லி நகரம், வேலூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, திருவள்ளூர் மற்றும் பல்லவபுரம் ஆகிய நகராட்சிகளில் ₹691.87 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் துணைத் திட்டமான நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் ஆளுகை திட்டத்தின்கீழ் 4 உள்ளாட்சி அமைப்புகளில் (மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகள், ஆவடி மற்றும் தாம்பரம் நகராட்சிகள்) ₹925.49 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதாள சாக்கடைத் திட்டங்களின் செயலாக்கம் பல்வேறு நிலைகளில் உள்ளன.

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான ஒருங்கிணைந்த நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மறைமலைநகர், அரியலூர், அரக்கோணம், சாத்தூர், சிதம்பரம், திருப்பத்தூர், பெரியகுளம், மேட்டூர், நாகர்கோவில் மற்றும் உடுமலைப்பேட்டை ஆகிய 10 நகரங்களில் ₹954.86 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு, மறைமலைநகர் மற்றும் உடுமலைப்பேட்டை நகராட்சியில் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

ஜெர்மானிய வங்கி நிதியின் (Kfw) கீழ் ஈரோடு மாநகராட்சியில் ₹209.09 கோடிக்கும், விழுப்புரம் நகராட்சியில் ₹49.36 கோடிக்கும், காரைக்குடி நகராட்சியில் ₹112.53 கோடிக்கும் மற்றும் பொள்ளாச்சி

2016 ஆகஸ்ட் 5]

நகராட்சியில் ₹109.62 கோடிக்கும் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அதில் விழுப்புரம் நகராட்சியில் பணி முடிவடைந்து வீட்டு இணைப்புகள் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. ஈரோடு மாநகராட்சி, காரைக்குடி மற்றும் பொள்ளாச்சி நகராட்சியில் பணி பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளது.

ஓசூர் நகராட்சிக்கு தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் (TNSUDP) கீழ், அரசாணை (பல்வகை) எண் 1, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 02-01-2015 மூலம் ₹283.94 கோடி நிதி ஆதாரம் வழங்கப்பட்டு பணிகள் துவங்க தேவையான அனுமதிகள் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை பாதாள சாக்கடைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ள கோயம்புத்தூர் (பகுதி), தருமபுரி, திருவண்ணாமலை, திண்டுக்கல், பல்லவபுரம், மறைமலைநகர், சின்னமனூர், காஞ்சிபுரம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, மதுரை, உதகமண்டலம், நாமக்கல், கரூர், மயிலாடுதுறை, கும்பகோணம், தஞ்சாவூர், திருப்பூர், பெரம்பலூர், இராமநாதபுரம், திருவாரூர், கடலூர், புதுக்கோட்டை, வேலூர், உடுமலைப்பேட்டை, திருவள்ளூர், தேனி-அல்லிநகரம், விருதுநகர், நாகப்பட்டினம் மற்றும் விழுப்புரம் ஆகிய 30 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் 4,31,895 (கடந்த ஆண்டு 3,31,769 இணைப்புகள்) வீட்டு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

நவீன தொழில்நுட்ப முறைகளான குடைவு தொழில் நுட்பம்மூலம் குழாய் பதித்தல், அச்சு வார்த்த மனித நுழைவு அமைப்புகள், HDPE குழாய்கள் அமைப்பது மற்றும் இதர நவீன முறைகளைப் பயன்படுத்திட திட்டமிடப்பட்டு வருகிறது.

2.5 சுகாதாரம்

நகரங்களில் மக்கள் சுகாதாரமாக வாழ்வதற்கு சுற்றுச்சூழலை ஏதுவான விதத்தில் அமைத்திட வேண்டும் என்னும் தொலைநோக்குக் கொள்கையை உறுதி செய்ய, திறந்தவெளியில் மலம் கழிக்காமை மற்றும் குப்பைகள் இல்லாத சுற்றுச் சூழல் ஆகியவற்றிற்கு முன்னுரிமை வழங்கி, பாதுகாப்பான சுகாதார வசதிகளை ஏற்படுத்திட அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

[2016 ஆகஸ்ட் 5

2.5.1 திறந்தவெளியில் மலம் கழித்தலை அறவே ஒழித்தல்

பாதாள சாக்கடைத் திட்டத்தில் இணைக்கப்பட்ட போதுமான கழிவறைகள் இல்லாமை, போதுமான மற்றும் நன்கு பராமரிக்கப்பட்ட பொதுக் கழிப்பறைகள், சமுதாய கழிப்பறைகள் இல்லாமை மற்றும் காலங்காலமாக மக்கள் திறந்தவெளியில் மனிதக் கழிவு கழிக்கும் பழக்கம் போன்றவற்றால் ஏற்படும் சுகாதார சீர்கேடுகளை தவிர்க்க, அரசு 2015 ஆம் ஆண்டுக்குள் திறந்த வெளியில் மனிதக் கழிவு கழிப்பதை முழுமையாக ஒழிக்க வேண்டும் என்று அறிவித்துள்ளது. அதற்குரிய நெறிமுறைகள் மற்றும் அறிவுரைகள் நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு வழங்கப்பட்டு, சமுதாய கழிவறைகள் கட்டுவதற்கு தகுந்த இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

திறந்தவெளியில் மனித கழிவு கழித்தலினால் ஏற்படும் சுகாதார சீர்கேடுகளை பொது மக்கள் அறிந்து கொள்ளவும் மற்றும் அவர்களது செயல்பாடுகளில் மாற்றத்தினை ஏற்படுத்திடவும் பெரிய அளவிலான விழிப்புணர்வு திட்டம் துவக்கப்பட்டுள்ளது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் திறந்த வெளியில் மனித கழிவு கழிக்கும் இடங்களை கண்டறிய ஒரு விரிவான ஆய்வினை மேற்கொண்டுள்ளன. இந்த ஆய்வின் அடிப்படையில், திறந்த வெளியில் மனித கழிவு கழிப்பதை ஒழிக்க 3,024 அலகுகளில் 18144 எண்ணிக்கையிலான இருக்கைகள் கொண்ட சமுதாய கழிவறைகள் மேம்பாடு மற்றும் புதிய கழிவறைகள் கட்டுமானப் பணி மேற்கொள்வதற்கு கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

அக்டோபர் 2014-லிருந்து இத்திட்டத்துடன் இணைந்து தூய்மை இந்தியா திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 2015-2016 ஆம் ஆண்டில் 83,048 தனிநபர் கழிப்பிடங்கள் கட்டுமானத்திற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் 52,183 பணிகள் முடிக்கப்பட்டு, 29,239 எண்ணிக்கையிலான பணிகள் நடைபெற்று வருகின்றன. சமுதாய கழிவறைகள் 6422 எண்ணிக்கையிலான இருக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு அதில் 2490 எண்ணிக்கையிலான இருக்கைகள் முடிக்கப்பட்டு, 3932 இருக்கைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த ஐந்து ஆண்டுகளில் ₹210.60 கோடி மதிப்பீட்டில் 1,205 புதிய சமுதாய கழிவறை கட்டும் பணிகளும், பயன்பாட்டில்

2016 ஆகஸ்ட் 5]

உள்ள 2,059 பழைய சமுதாய கழிவறைகளில் புனரமைப்புப் பணிகளும் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவற்றில் 883 புதிய சமுதாய கழிவறைகளை கட்டும் பணிகளும், 1,809 பழைய சமுதாய கழிவறைகளைப் புதுப்பிக்கும் பணிகளும் நிறைவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

ஆண்கள், பெண்கள், குழந்தைகள், முதியோர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் போன்ற பல்வேறு பயனாளிகளின் கழிவறை பயன்பாட்டினை மேம்படுத்தும் நோக்கில் நகராட்சி நிருவாக ஆணையரகம்மூலம் "ஒரே மாதிரி கழிவறை - நம்ம டாய்லெட்" என்கிற சிறப்பான கழிவறை வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்தகைய நவீன கழிவறைகள் பல்வேறு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் அமைக்கப்பட்டு அனைத்து பயனாளிகளிடமும் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. தற்போது பயன்பாட்டில் உள்ள கழிவறைகளை மேம்படுத்துவதற்கு பொறியாளர்களுக்கான தொழில்நுட்ப கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் 265 நம்ம டாய்லெட் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 204 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

2.5.2 கழிவு நீர் கசடு மேலாண்மை (Septage Management)

நச்சுத் தொட்டியில் பகுதி சுத்திகரிக்கப்பட்டு சேகரிக்கப்பட்ட கழிவுநீரே பொதுவாக கசடு கழிவு என்றழைக்கப்படுகிறது. இதில் திரவ, திட (Sludge), மேலும் கொழுப்பு, எண்ணெய் மற்றும் கிரீஸ் (Scum) ஆகியன மிகையாக காணப்படும். கசடு கழிவு உற்பத்தியின் அடிப்படையில், முழு செயல்முறை வடிவமைப்பு, சேகரிப்பு, பாதுகாப்பான சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றுதல் ஆகியன கசடு கழிவு மேலாண்மையில் அடங்கும். நமது துரித கதியில் நகரமயமாகும் பொருளாதார சூழலில், குறிப்பிட்ட காலங்களில் நச்சுத் தொட்டியினை சுத்தம் செய்தல், மேலும் கசடு கழிவு இடம் பெயர்த்தல், சுத்திகரிப்பு, மறு பயன்பாடு மற்றும் வெளியேற்றம் செய்வதற்கு ஒரு விரிவான திட்டம் மிகவும் இன்றியமையாததாகும்.

கழிவுநீர் கசடினை கையாள்வதை ஒழுங்குபடுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும் ஒரு விரிவான வழிகாட்டுதலை, அரசாணை (நிலை) எண் 106, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 01-09-2014 வாயிலாக அரசு வெளியிட்டுள்ளது. இவ்வழிமுறை கீழ்க்காணும் முக்கிய கூறுகளை உள்ளடக்கியதாகும்

[2016 ஆகஸ்ட் 5

i. நச்சுத் தொட்டிகளின் வடிவமைப்பு மற்றும் கட்டுமானம்
ii. உந்துதல் மற்றும் கசடு நீக்குதல்
iii. கழிவுநீர் கசடுகளை எடுத்துச் செல்லுதல்
iv. சுத்திகரித்தல் மற்றும் அகற்றுதல்
v. தகவல், கல்வி மற்றும் பரிமாற்றம்
vi. கழிவுநீர் கசடு சேகரித்தல், இடம் பெயர்த்தல், சுத்திகரிப்புக்கான கட்டணங்கள்
vii. மேலாண்மை தகவல் அமைப்பு (MIS) மூலமாக ஆவணம் காத்தல் மற்றும் அறிக்கை சமர்ப்பித்தல்.

கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைந்துள்ள இடங்களை அடிப்படையாகக் கொண்டு, 23 உள்ளாட்சி அமைப்பு தொகுப்புகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. தேர்ந்தெடுக்கப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து 18-20 கி.மீ. சுற்றில் அமைந்துள்ள அனைத்து சேகரிப்பு இடங்களை கொண்டுள்ள உள்ளாட்சி அமைப்புகள் தனித்தனி தொகுதியாக தொகுக்கப்பட்டுள்ளன.

நச்சுத் தொட்டிகளை கணக்கெடுத்தல், சுகாதாரமற்ற கழிவறைகளை கண்டறிதல் மற்றும் பயன்பாட்டில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் வடிகட்டி படுகை அமைத்தல் முதலான பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இதுவரை மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் கழிவுநீர் நச்சுத்தொட்டிகளிலிருந்து கழிவுகளை 211 எண்ணிக்கையிலான பதிவு செய்யப்பட்ட லாரிகளால் 1,02,299 நடைகளில் 818.39 MLD கழிவு நீரை அருகிலுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் கொண்டு விடப்பட்டு சுத்திகரிப்பு செய்யப்பட்டது.

2.6 விலங்குகள் இனப்பெருக்க கட்டுப்பாட்டுத் திட்டம்

விலங்குகளுக்கான இனப்பெருக்க கட்டுப்பாட்டுத் திட்டம், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் பொது சுகாதார பணிகளின் ஒரு பகுதியாகும். விலங்குகள் இனப்பெருக்க கட்டுப்பாட்டுத் திட்டத்தை மனிதாபிமான முறையில் செயல்படுத்திட துப்புரவு பணியாளர்கள் மற்றும் நகராட்சி ஊழியர்களுக்கு சிறந்த தன்னார்வு தொண்டு நிறுவனங்களின் மூலம் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. நாய்களை வலியின்றியும்,

2016 ஆகஸ்ட் 5]
மனிதாபிமான முறையிலும் பிடித்திட அரசாணை எண் 181 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 05-04-2013 வாயிலாக நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு மேம்படுத்தப்பட்ட 60 வாகனங்கள் ₹3.00 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன. அறுவை சிகிச்சைக்கு முன்னரும், பின்னரும் தேவைப்படும் கவனிப்பை அளிக்கவும், இறப்பு நிகழும் அளவிற்கு காயமுற்ற மற்றும் தீர்க்க முடியாத நிலையில் நோயுடன் உள்ள நாய்களை பராமரித்திடவும், 80 உறைவிடங்கள் அமைத்திட ₹2.40 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மற்றும் நகராட்சிகளில் தெருநாய் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டதில் 2,42,655 தெருநாய்கள் உள்ளது கண்டறியப்பட்டது. இவற்றில், மே 2016 வரை 1,47,245 தெருநாய்களுக்கு ₹6.60 கோடி செலவில் கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. கால்நடை பராமரிப்பு மருத்துவர்மூலம் கருத்தடை முறைகள் செய்யப்படுகின்றது. அறுவை சிகிச்சைக்கு முன்னரும் பின்னரும் நன்கு நிறுவப்பட்ட நாய்கள் உறைவிடத்தில் நாய்கள் நன்கு பராமரிக்கப்படுகின்றன. நோய் தடுப்பூசியும் தரப்படுகின்றன. எஞ்சிய தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை படிப்படியாக மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2.7 திடக்கழிவு மேலாண்மை

தமிழகத்தில் 11 மாநகராட்சிகள் மற்றும் 124 நகராட்சிகளில் தினந்தோறும் சுமார் 7,597 மெட்ரிக் டன் திடக்கழிவு உற்பத்தியாகிறது. திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கான முதற்கட்ட குப்பை சேகரிப்பு, இரண்டாம் நிலை சேகரிப்பான் மற்றும் பதப்படுத்தும் இயந்திரங்கள் தூய்மை இந்தியா மற்றும் சிறப்பு திடக்கழிவு மேலாண்மை நிதியின்கீழ் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. திடக்கழிவு மேலாண்மையில் பதப்படுத்தும் பணிகளாக உரம் தயாரித்தல், மண்புழு உரம் தயாரித்தல், மறுசுழற்சி பொருள் சேகரிப்பு மையம் அமைத்தல், தேங்கிய குப்பைகளில் உயிரி அகழ்வு நிகழ்வுமூலம் நிலத்தை மீட்டெடுத்தல் போன்ற பணிகள் செயல்பாட்டில் உள்ளது.

தாம்பரம், பல்லாவரம், பம்மல், அனகாபுத்தூர், செம்பாக்கம் நகராட்சிகளுக்காக 300 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டம் தொகுப்பு

[2016 ஆகஸ்ட் 5

முறையாக (Cluster Basis) வேங்கடமங்கலம் என்ற இடத்தில் ₹99.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டு, திடக்கழிவுகளிலிருந்து உரம் மற்றும் எரிபொருள் (RDF) தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இரண்டாவது தொகுப்பில் கழிவிலிருந்து மின்சாரம் செயல்படுத்துதல்மூலம் 2.9 MWh மின்சாரம் தயாரிக்கும் பணி நடைமுறை படுத்தப்படவுள்ளது.

2.7.1 ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டங்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, நிதி நிலைமை நலிவுற்றுள்ள உள்ளாட்சி அமைப்புகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டப் பணிகளை செயல்படுத்த, ஆண்டுக்கு ₹100 கோடி திடக்கழிவு மேலாண்மை சிறப்புநிதி திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதுவரை 80 உள்ளாட்சிகளில் ₹746.36 கோடி திட்ட மதிப்பீட்டில் 878 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இதில் 153 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது.

2.7.2 உயிரி எரிவாயு கூடங்கள்

நகராட்சிகளில் உற்பத்தியாகும் திடக்கழிவுகளில் மக்கும் தன்மையுள்ள கழிவுகள் 50 முதல் 60 சதவீதமாகும். மற்றவை மறுசுழற்சி செய்ய இயலாத மற்றும் மக்காத கழிவுகளாகும். மக்கும் தன்மையுள்ள மொத்த கழிவுகளில், 20 முதல் 25 சதவீதம் குறிப்பாக உணவகங்கள், தங்கும் விடுதிகள், திருமண மண்டபங்கள், காய்கறி அங்காடிகள், இறைச்சிக் கூடங்கள் ஆகியனமூலம் பெறப்படுகிறது. மக்கும் தன்மையுள்ள கழிவுகளை குறைத்திடவும், முறையாக பயன்பாட்டிற்கு கொண்டுவரும் நோக்கத்துடனும், 33 உயிரி எரிவாயு கூடங்கள் 3, 5, மற்றும் 10 மெட்ரிக் டன் கொள்ளளவுகளில் மொத்தம் 164 மெட்ரிக் டன் கொள்ளளவில் 8 மாநகராட்சிகள், 23 நகராட்சிகளில் ₹30.39 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம், பகுதி-2 திட்டம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை நிதி ஆகிய நிதி ஆதாரங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது.

இதுவரை அனுமதி அளிக்கப்பட்ட 31 உள்ளாட்சி அமைப்புகளில் 20 உள்ளாட்சிகளில் 96 மெட்ரிக் டன் கொள்ளளவில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள மற்ற உள்ளாட்சிகளில் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில்

2016 ஆகஸ்ட் 5]

உள்ளது. முடிக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் நாள் ஒன்றுக்கு சுமார் 5000 Kwh *மின்சாரம் தயாரிக்கப்பட்டு வருகிறது.*

இதிலிருந்து பெறப்படும் மின் ஆற்றல் உரங்கிடங்கிலுள்ள விளக்குகள் எரியூட்டவும், உரம் தயாரிக்க தேவையான இயந்திரங்களை இயக்குவதற்கும் திரவக் கழிவுகளை சுத்தப்படுத்தும் ஆலைகளை இயக்குவதற்கும், அம்மா உணவகத்திற்கு எரிவாயு பயன்பாட்டிற்கும், எரிவாயு தகனமேடை எரியூட்டவும் பயன்படுத்தப்படுகிறது. மீதமுள்ள மின் ஆற்றல் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோகம் நிறுவனத்தின்மூலம் ஏற்றம் செய்யவும் நடவடிக்கையிலுள்ளது.

2.7.3 உரம் தயாரித்தல்

உள்ளாட்சி அமைப்புகளில் தரம்பிரிக்கப்பட்ட திடக்கழிவுகளை கொண்டு மக்கும் தன்மை கொண்ட கழிவுகளை உரக்குவியல்கள் அமைத்து உரம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 5 மாநகராட்சிகளில் மற்றும் 49 நகராட்சிகளில் ஆண்டொன்றுக்கு 60,225 மெட்ரிக் டன் மக்கிய உரம் மற்றும் மண் புழு உரம் தயார் செய்யப்பட்டு, விவசாய பண்ணைகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

2.8 சாலைகள்

சாலைகள், நகர்ப்புற உட்கட்டமைப்பு வளர்ச்சிக்கு முதுகெலும்பாக திகழ்கின்றன. இந்த அரசு, வாகனங்கள் மற்றும் பாதசாரிகளின் பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் சாலைகளை அமைத்துத் தருவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. சாலைகள், நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு நீடிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு, சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தின் (MORTH) *விவரக் குறிப்புகளின் அடிப்படையில் குறைந்த செலவில் அமைக்கப்படுகின்றன.*

மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மற்றும் நகராட்சிகள் 23,349.93 கி.மீ. நீளமுள்ள சாலைகளை பராமரித்து வருகின்றன. இதில் 5,334.437 கி.மீ. சிமென்ட் சாலைகளும், 15,316.999 கி.மீ. தார்ச் சாலைகளும், 772.38 கி.மீ. கப்பி சாலைகளும், 1,638.17 கி.மீ. மண் சாலைகளும், மீதமுள்ள சாலைகள் 287.94 கி.மீ. பேவர்பிளாக் மற்றும் செதுக்கப்பட்ட கற்களால் ஆன சாலைகளாகவும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

குடிநீர் வழங்கல் திட்டங்கள், பாதாள சாக்கடைத் திட்டங்கள் மற்றும் இயற்கை இடர்பாடுகளால் சேதமடைந்த சாலைகளைப் பராமரித்தல், சீரமைத்தல் போன்ற பணிகள் பல்வேறு திட்டங்களின் நிதியுதவியுடன் கீழ்க்காணுமாறு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2.8.1 நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டம்

பாதாள சாக்கடைத் திட்டம், குடிநீர் திட்ட செயலாக்கம் மற்றும் இயற்கை இடர்பாடுகளால் சேதமடைந்த சாலைகளை வாகன போக்குவரத்திற்கு ஏற்றதாக குறிப்பிட்ட காலத்திற்குள் முழுவதுமாக சீரமைக்கும் பணிகளுக்கு அரசு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது. அரசு, இதற்காக "நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டத்தை" அறிவித்துள்ளது.

பாதாள சாக்கடைத் திட்டங்கள், குடிநீர் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் இயற்கை இடர்பாடுகளால் சேதமடைந்த 3141.84 கிலோ மீட்டர் நீளச் சாலைகளை சீரமைப்பதற்காக கடந்த ஐந்தாண்டுகளில் இத்திட்டத்தின்கீழ் ₹1624.38 கோடி மதிப்பீட்டில் 4,514 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. இதில் ₹1200.03 கோடி செலவில் 4,298 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. விவரங்கள் கீழ்க்காணுமாறு:

வருடம்	ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (₹ கோடியில்)	நீளம் (கி.மீ.)	மொத்த பணிகள்		மீதம்
			எடுக்கப் பட்டவை	முடிக்கப் பட்டவை	
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
2011–12	200.00	584.394	1035	1035	0
2012–13	186.50	516.115	1084	1084	0
2013–14	265.61	523.313	1063	1061	2
2014–15	263.12	501.610	1084	1068	16
2015–16	258.29	1016.410	248	50	198
மொத்தம்	**1173.52**	**3141.842**	**4514**	**4298**	**216**

2016 ஆகஸ்ட் 5]

2016-17 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ₹332.43 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.8.2 ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (Integrated Urban Development Mission-IUDM))

ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் தொடங்கப்பட்ட பின்னர், 2011-12 ஆம் ஆண்டு முதல் 2014-15 ஆம் ஆண்டு வரையில் 1416.03 கி.மீ. சாலைகளில், 2,115 பணிகள் ₹501.58 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு ₹530.40 கோடி செலவில் 2114 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:

வருடம்	ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (₹ கோடியில்)	நீளம் (கி.மீ)	மொத்த பணிகள்		
			எடுக்கப் பட்டவை	முடிக்கப் பட்டவை	மீதம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
2011–12	152.11	483.62	829	829	0
2012–13	172.49	496.45	976	976	0
2013–14	172.97	432.86	303	303	0
2014–15	4.01	3.100	7	6	1
மொத்தம்	501.58	1416.03	2115	2114	1

2.8.3 ஒரே சீரான ஒளிரும் சாலைக் குறியீடு அமைத்தல்

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பெருவாரியான சாலைகளை சீரமைத்தல் மற்றும் மறுசீரமைப்பு பணிகளை அரசு மேற்கொண்டு வருகிறது. அரசு, பொதுமக்களுக்கும், சுற்றுலா பயணிகளுக்கும் இந்த சாலைகள் மேலும் பயனுள்ளதாக இருக்கக்கூடிய வகையில் பெயர்கள், சாலைக் குறியீடுகள், சுற்றுலா இடங்கள் போன்றவற்றை குறிக்கும் வகையில், ஒரே சீரான குறியீடுகளைக் கொண்ட ஒளிரும் பெயர் பலகைகளை சாலைகளில் அமைக்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகின்றது. மாநகராட்சிகளில் 21,337 தெருக்களும் மற்றும் நகராட்சிகளில் 41,720 தெருக்களும் உள்ளன. இதுவரையில் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள முக்கியமான சாலைகள் மற்றும் சாலை

சந்திப்புகளில் 15,021 சாலை விவரங்கள் குறித்த பலகைகள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பணிகள் நடப்பாண்டிலும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும்.

2.8.4 பிளாஸ்டிக் சாலைகள்

பிளாஸ்டிக் கழிவுகள் சுற்றுச்சூழலுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. இந்த அரசு, பிளாஸ்டிக் இல்லாத சுற்றுச் சூழலை உருவாக்க பிளாஸ்டிக் கழிவுகளை முறையாக பயன்படுத்துவதை வலியுறுத்தி வருகிறது. பிளாஸ்டிக் இல்லாத சுற்றுச் சூழலை உருவாக்க மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் பிளாஸ்டிக் கழிவு உபயோகிக்கும் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி சாலைகள் அமைக்கப்பட்டு வருகிறது. பிளாஸ்டிக் கழிவுகளை முடிந்த வரையில் பயன்படுத்த வேண்டும் என்ற அரசின் கொள்கைக்கேற்ப பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி, சாலைகள் அமைக்கும் திட்டம் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த ஐந்தாண்டுகளில் 1476.408 மெட்ரிக் டன் பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி, பொது நிதி மற்றும் அரசின் சிறப்பு நிதிகளின்மூலம் 935.23 கி.மீ. நீளத்திற்கு சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. பிளாஸ்டிக் கழிவுகளை சேகரித்து, தரம் பிரித்து, எந்திரம்மூலம் துகள்களாக்கும் பணியை ஊக்குவிக்கும் வகையில், சுய உதவிக் குழுக்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, இப்பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.

2.9 தெரு விளக்குகள்

அடிப்படை வசதிகளுள் தெரு விளக்குகள் அமைப்பது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் முக்கிய பொறுப்பாகும். மாநிலத்தில் 11 மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மற்றும் 124 நகராட்சிகளில் மொத்தம் 7.39 இலட்சம் தெருவிளக்குகள் பராமரிக்கப்படுகின்றன. தெருவிளக்குகளுக்கான மின்கட்டண செலவு மொத்த மின்கட்டண செலவில் 25-30% ஆகும். இது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மிகுந்த நிதிச் சுமையை ஏற்படுத்துகிறது. ஆகவே, மின் சிக்கனம் கொண்ட தெருவிளக்குகளை அமைப்பது அவசியமாகிறது.

இதற்கு முன்னோடியாக, 9 மாநகராட்சிகளிலும், தஞ்சாவூர் மற்றும் திருப்பூர் மண்டலத்திற்குட்பட்ட 35 நகராட்சிகளிலும்

2016 ஆகஸ்ட் 5]

இத்திட்டம் செயலாக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் எஸ்கோ நிறுவனம்மூலம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலமாக 25-35% மின்கட்டணம் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த திட்டத்திற்காக ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 2011-12, 2012-13, 2013-14 மற்றும் 2014-15 ஆம் ஆண்டுகளில் ₹183.63 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முதலீட்டு தர தணிக்கை நடைபெற்று முடிந்துள்ளது. மொத்த தெருவிளக்குகள் 3,13,507. இதில் 2,11,925 தெரு விளக்குகளை மின் சிக்கனம் வாய்ந்த எல்இடி தெருவிளக்குகளாக மாற்றி அமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. இதுவரை 1,34,689 தெருவிளக்குகள் மின் சிக்கனம் வாய்ந்த எல்இடி தெருவிளக்குகளாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாநகராட்சி மற்றும் தஞ்சாவூர் மண்டல நகராட்சிகளில் 50,922 தெருவிளக்குகளை மின் சிக்கனம் வாய்ந்த எல்இடி தெருவிளக்குகளாக மாற்றி அமைக்கும் பணிக்கு ஒப்பந்தபுள்ளி பெறப்பட்டுள்ளது.

2.10 சிறப்பு உட்கட்டமைப்பு திட்டம்

2.10.1 நவீன எரிவாயு தகன மேடை

சுற்றுப்புறச் சூழலை பாதுகாக்கும் நடவடிக்கையாக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நவீன எரிவாயு தகன மேடைகள் அமைக்கப்படுகின்றன. இத்திட்டம் 50 சதவீதத்திற்கும் மேலாக விறகுகளின் பயன்பாட்டினை குறைக்கிறது.

இதன் அடிப்படையில் 135 நகர்ப்புற உள்ளாட்சிகளில் 108 நவீன எரிவாயு தகன மேடைகள் அமைக்க ₹34.63 கோடி செலவில் 92 நகர்ப்புற உள்ளாட்சிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. மாநிலத்திலுள்ள நவீன எரிவாயு தகன மேடைகளில், 84 தகன மேடைகள் பொதுநல சங்கங்களின் பராமரிப்பில் செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

2.10.2 நவீன இறைச்சிக் கூடங்கள்

இறைச்சிக் கூடங்களை நவீனமயமாக்கவும், அவற்றை சுற்றுச்சூழலுக்கு ஏற்றவாறும், சுகாதார குறைபாடுகளிலிருந்து காக்கவும், கடந்த ஐந்தாண்டுகளில் பகுதி-2 திட்டம், உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி ஆகியவற்றின்கீழ், 6 மாநகராட்சிகள் மற்றும் 25 நகராட்சிகளில் ₹9.01 கோடி

மதிப்பீட்டில் 35 நவீன இறைச்சிக் கூடங்கள் அமைக்கும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவற்றில் 28 நவீன இறைச்சிக் கூடங்கள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் நவீன இறைச்சிக் கூடம் ₹9.85 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசின் உணவு பதப்படுத்துதல் தொழிற்சாலைகள் அமைச்சகத்தின் 50 விழுக்காடு நிதியுதவியுடன் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது. திருப்பூர், கோயம்புத்தூர் மாநகராட்சிகளில் 5 எண்ணிக்கையில் ₹63.92 கோடி திட்ட மதிப்பீட்டில் நவீன இறைச்சிக் கூடங்கள் அமைக்க மத்திய அரசின் நிதி உதவி பெற நடவடிக்கையிலுள்ளது.

2.10.3 கட்டடங்களின் மேற்கூரையில் சூரிய எரிசக்தி பலகைகள் நிறுவுதல்

மாண்புமிகு முதலமைச்சரின் தொலைநோக்கு திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு சூரிய ஒளிமூலம் 3000 மெகாவாட் மின் உற்பத்தி செய்தல் ஒன்றாகும். இதற்கான பல்வேறு நடவடிக்கைகள் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதற்கட்டமாக நகராட்சிக்குச் சொந்தமான கட்டடங்களின் மேற்கூரையில் சூரிய ஒளி மின் உற்பத்தி செய்ய பலகைகள் பொருத்தி அதன்மூலம் அன்றாட அலுவலக பயன்பாட்டிற்கு மின் உற்பத்தியை பயன்படுத்திக் கொள்ளவும், அடுத்த கட்டமாக சூரிய மின்சக்தியை நகராட்சி தெருவிளக்குகளுக்கும், குடிநீர் விநியோக வேலைக்காகவும் பயன்படுத்தி கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்கண்டுள்ள நோக்கத்திற்காக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றும் 172 பொறியாளர்களுக்கு ஆரோவில்லின் உதவியுடன் சூரிய எரிசக்தி தொடர்பாக தொழில்நுட்ப மேலாண்மை, திட்ட வரைபடம் தயாரித்தல் போன்ற பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது. இதற்கு முதற்கட்டமாக 50 கிலோ வாட் மின் உற்பத்தி செய்யக்கூடிய சூரியசக்தி (போட்டோவோல்டிக்) பலகைகள் சென்னை நகராட்சி நிருவாக ஆணையர் அலுவலகத்தில் நிறுவப்பட்டு, இதன்மூலம் தினசரி 250 கிலோ வாட் மணிகள் (KWh) மின்சக்தி அலுவலக நேரத்தில் உபயோகிக்கப்பட்டு, மின் கட்டணம் கணிசமான அளவில் குறைந்துள்ளது. இதுவரை 445 உள்ளாட்சி அமைப்புகளில்

2016 ஆகஸ்ட் 5]

நிறுவப்பட்ட சூரிய சக்தி பலகைகள்மூலம் 2198 கிலோ வாட் மணிகள் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதன் தொடர் முயற்சியாக கட்டட மேற்கூரையில் சூரிய ஒளிமூலம் மின்னாற்றல் தயாரிக்கும் பலகைகளை (போட்டோவோல்டிக்) அனைத்து உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள கட்டடங்கள், குடிநீர் தலைமை நீரேற்று நிலையம், சுத்திகரிப்பு நிலையம், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் உரக் கிடங்களில் சேர்த்து அமைக்க வருங்காலத்தில் திட்டம் மேற்கொள்ளப்படும்.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கட்டடங்களில் சூரிய சக்தி மின்சாரத்தினை பயன்படுத்திட உள்ள சாத்தியக்கூறுகளை ஆராய தொழில்நுட்ப கலந்தாலோசகர் நியமிக்கப்பட்டுள்ளார். கட்டடத்திற்கு தேவையான மின்சக்தியானது சூரிய ஒளி தகடுகள் நிறுவுவதன் மூலமும், அதன்மூலம் அறுவடை செய்யப்படும் சூரிய சக்தியின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. முதலீட்டை திரும்ப செலுத்தும் கால அவகாசத்தின் அடிப்படையில் தனிநபர் சேவை ஒப்பந்ததாரர்களை அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2.10.4 இயந்திரம் சாரா போக்குவரத்து

நமது நகரங்களில் அனைத்து சாலைகள் மற்றும் தெருக்களில் நடைபாதை பாதசாரிக்கும் மிதிவண்டிக்கும் பொது போக்குவரத்துக்கும் போதுமான வசதிகள் தனித் தனியாக இல்லை. நகராட்சி நிருவாக ஆணையரகம், மேற்கண்ட போக்குவரத்து வசதிகள் தொடர்ந்து கிடைக்கும் வகையில் கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருப்பூர் மற்றும் சேலம் மாநகராட்சிகளுக்கு போக்குவரத்து மேலாண்மை மற்றும் கொள்கை நிறுவனம் (ITDP) மற்றும் உள்ளூர் சுற்றுப்புற சூழல் முயற்சிகளுக்கான பன்னாட்டு குழுமம் - தெற்கு ஆசியா (ICLEI-South Asia) உறுதுணை பங்களிப்புடன் திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் செயல்படுத்துவதன்மூலம் மிகவும் பாதுகாப்பான, எளிமையான, நெரிசல் அற்ற போக்குவரத்து வசதி கிடைக்கும். ஐந்து மாநகராட்சிகளில் ஆய்வு மேற்கொண்டு போக்குவரத்து விவரங்கள் சேகரிக்கப்பட்டு, பொது போக்குவரத்து மேம்பாடு, மிதிவண்டி மற்றும் பாதசாரிகளுக்கான பாதைகள், பாதுகாப்பான சாலைகள், போக்குவரத்து வசதிகள் மற்றும் சுற்றுச்சுழல் மாசுப்படாத வகையில், திட்ட அறிக்கைகள் தயார் செய்ய நடவடிக்கையில் உள்ளது. இந்த ஆண்டு முதல் இத்திட்டம்

படிப்படியாக செயல்படுத்தப்படும். 2015-2016 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 110 விதியின்கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்பின்படி கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 3 மாநகராட்சிகளில் மேற்குறிப்பிட்ட வாகன போக்குவரத்திற்கான தனித் தனி திட்டங்கள் உருவாக்க உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி மற்றும் மாநகராட்சி பங்களிப்புடன் பணிமேற்கொள்ள ₹62.42 கோடிக்கு நிருவாக அனுமதி அளிக்கப்பட்டது.

2.11 உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி மற்றும் இயக்குதல் (ம) பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி

நான்காவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி, உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியினை 3 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாகவும், இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியினை 2 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாகவும் அரசு உயர்த்தியுள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியின்கீழ் ₹965.18 கோடி மதிப்பீட்டில் 4,666 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவற்றில் 3,897 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன. இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியின்கீழ் ₹375.11 கோடி மதிப்பீட்டில் 468 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அதில் 188 பணிகள் முடிவுற்றுள்ளன. மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

2016-17 ஆம் ஆண்டில் உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி மற்றும் இயக்குதல் (ம) பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியின்கீழ் முறையே ₹192.64 கோடி மற்றும் ₹82.56 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.12 அலுவலகக் கட்டடம் கட்டுதல்

பெரும்பாலான நகராட்சிகளில், போதுமான அலுவலக இட வசதி இல்லை. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், போதிய நிதி இல்லாத காரணத்தால், புதிய கட்டடம் கட்டுதல் அல்லது ஏற்கெனவே உள்ள வசதிகளை உயர்த்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ள இயலாத நிலையில் உள்ளன. பொதுமக்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பணியாளர்களுக்கு சிறந்த சூழலை உருவாக்கி தருவது அரசின் நோக்கமாகும்.

2016 ஆகஸ்ட் 5]

கடந்த ஐந்தாண்டுகளில் உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி, இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி மற்றும் பகுதி-2 திட்டம் ஆகியவற்றின்கீழ் 73 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ₹100.46 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 34 அலுவலகக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

2.13 துப்புரவு பணியாளர்கள் நலன்

நகர்ப்புற உள்ளாட்சிகளின் பணியாளர்களில் 70 விழுக்காடு துப்புரவுப் பணியாளர்கள் ஆவர். (மொத்தம் 43,089 பணியாளர்களில் 30,109 துப்புரவுப் பணியாளர்கள்). நகர்ப்புற உள்ளாட்சிகளின் முக்கிய பணியான அடிப்படை சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் இவர்களின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது. இவர்களின் பணியை கண்ணியமிக்கதாக மேம்படுத்துவதுடன் பாதுகாப்பான, ஆரோக்கியமான பணிச்சூழலை அளிப்பதும் மிக முக்கியமானதாகும்.

அரசு, கடந்த ஐந்தாண்டுகளில் துப்புரவு பணியாளர்களுக்கு குடியிருப்புகளை கட்டித் தருவதற்காக 33 நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு 902 குடியிருப்புகள் கட்ட உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி, இயக்குதல் மற்றும் பராமரிப்பு நிதி மற்றும் பகுதி–2 திட்ட நிதியிலிருந்து ₹39.11 கோடி வழங்கியுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

வருடம்	உள்ளாட்சி களின் எண்ணிக்கை	குடியிருப்பு களின் எண்ணிக்கை	தற்போதைய நிலை	
			முடிக்கப் பட்டவை	முன்னேற்றத் தில் உள்ளவை
2011–12	3	72	72	0
2012–13	6	80	68	12
2013–14	11	336	126	210
2014–15	8	214	0	214
2015–16	5	200	0	200
மொத்தம்	**33**	**902**	**266**	**636**

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2016 ஆகஸ்ட் 5

2.14 மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டங்கள்

2.14.1 சீர்மிகு நகரங்கள் (Smart Cities)

சீர்மிகு நகரங்கள் என்னும் திட்டத்தை மத்திய அரசு 25-06-2015 அன்று துவக்கியது. உலகத்தரம் வாய்ந்த நகரங்களை மக்களுடைய எண்ணங்களுக்கு ஏற்றவாறு அனைத்து வசதிகளுடன் நிர்மாணிப்பது இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

இத்திட்டத்தின்படி, மக்களுக்குத் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதோடு மட்டுமல்லாமல் அதில் நவீன தொழில்நுட்ப வசதிகளையும் ஏற்படுத்துவதாகும்.

இந்தியாவில் மொத்தம் 100 சீர்மிகு நகரங்களை ஐந்து ஆண்டுகளுக்குள் உருவாக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, தமிழகத்தில் 12 சீர்மிகு நகரங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

முதலாவது ஆண்டிற்கு நகரங்களுக்கிடையே சவாலான போட்டி (City Challenge Competition) என்னும் முறையில் நகரங்கள் தேர்வு செய்யப்படும். தமிழகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 12 மாநகராட்சிகளும் நாட்டில் உள்ள 100 நகரங்களுடன் போட்டியிட "சீர்மிகு நகரத்திற்கான திட்டம்" தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது. 2015-16 ஆம் ஆண்டிற்கான போட்டியில் தமிழகத்திற்கு சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இதற்காக சிறப்பு தேவைக்கான அமைப்பு (SPV) நிறுவப்பட்டுள்ளது.

2.14.2 அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான திட்டம் (AMRUT)

புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான அட்டல் திட்டத்தை மத்திய அரசு 25-06-2015 அன்று துவக்கியது. தமிழ்நாட்டில் ஒரு இலட்சத்திற்கு மேல் மக்கள் தொகையுள்ள 12 மாநகராட்சிகள், 20 நகராட்சிகள் மற்றும் 1 பேருராட்சியில் இத்திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ள தேர்வு செய்யப்பட்டுள்ளன.

2.14.3 ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டம்

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டம், திட்ட செயலாக்க நகரங்கள் மற்றும் அதன் புறநகர் பகுதிகளின்

2016 ஆகஸ்ட் 5]

உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான ஒருங்கிணைந்த அணுகுமுறையை குறிக்கோளாகக் கொண்டதாகும். தமிழ்நாட்டில் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகியவை திட்ட செயலாக்க மாநகரங்களாகும். பின்வரும் துணைத் திட்டங்கள் வாயிலாக வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

I) *அ) நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் ஆளுகைக்கான துணைத் திட்டம்* (Urban Infrastructure and Governance-UIG)

ஆ) நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதித் துணைத் திட்டம் (Basic Services to the Urban Poor-BSUP)

II) *சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்* (Urban Infrastructure Development Scheme for Small and Medium Towns-UIDSSMT)

III) *ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்* (Integrated Housing and Slum Development Programme - IHSDP)

2.14.4 நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் ஆளுகை (Urban Infrastructure and Governance - UIG)

இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகள் கீழ்க்காணுமாறு:

வ. எண்	திட்டத்தின் பெயர்	நகராட்சிகள்	ஒதுக்கீடு தொகை (₹கோடியில்)	மேற் கொள்ளப் பட்ட பணிகள் எண்ணிக்கை	முடிக்கப்பட்ட பணிகள் எண்ணிக்கை
1.	குடிநீர் விநியோகம்	7	1193.74	13	9
2.	மழைநீர் வடிகால்கள்	2	528.31	2	2
3.	திடக்கழிவு மேலாண்மை	4	215.01	3	2
5.	பாதாள சாக்கடை திட்டம்	4	925.49	4	0
	மொத்தம்	17	2862.55	22	13

[2016 ஆகஸ்ட் 5

மேலே குறிப்பிட்ட 22 பணிகளும் மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளிலும், அவற்றை சுற்றி வளர்ச்சியடைந்துள்ள நகர்ப்புற உள்ளாட்சிகளிலும் மற்றும் சென்னையைச் சுற்றியுள்ள நகராட்சிகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் 13 பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சியுள்ள பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன.

2.14.5 சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் (Urban Infrastructure Development Scheme for Small and Medium Towns-UIDSSMT)

நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் ஆளுகை திட்ட செயலாக்க வரம்பிற்குள் வராத நகர்ப்புற உள்ளாட்சிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்கல், கழிவுநீர் அகற்றல் வசதி, திடக்கழிவு மேலாண்மை, வடிகால்கள், மழைநீர் வடிகால்கள், சாலைகள் அமைத்தல் மற்றும் மேம்பாடு, வாகன நிறுத்தகங்கள் (பொது மக்கள்/ தனியார் பங்களிப்புடன்) புராதன பகுதிகளில் மேம்பாடு மற்றும் நீர்நிலைகளைப் பாதுகாத்தல் போன்ற உட்கட்டமைப்பு அபிவிருத்தி பணிகள் எடுத்துக்கொள்ளப்படும். எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகளின் விவரம் கீழ்க்காணுமாறு:

வ. எண்	திட்டம்	நகர்ப்புற உள்ளாட்சிகளின் எண்ணிக்கை	வழுங்கப் பட்ட தொகை	எடுத்துக் கொள்ளப் பட்ட பணிகள் எண்ணிக்கை	முடிக்கப்பட்ட பணிகள் எண்ணிக்கை
1.	சாலைகள் (ம) வடிகால்கள்	16	69.41	16	16
2	குடிநீர் வழங்கல்	40	740.47	40	30
3.	பாதாள சாக்கடைத் திட்டம்	11	607.54	11	2
4.	திடக்கழிவு மேலாண்மை	1	3.58	1	1
	மொத்தம்	**68**	**1421.00**	**68**	**49**

2016 ஆகஸ்ட் 5]

2.14.6 நகர்ப்புற ஏழைகளுக்கான வீட்டு வசதி திட்டம்

நகர்ப்புற ஏழைகளுக்கு பாதுகாப்பான, சுகாதாரமான வாங்கத்தக்க விலையிலான மற்றும் நீடித்த நிலைத்தன்மை கொண்ட வீட்டுவசதியினை ஏற்படுத்தித் தருவது அரசின் தலையாய நோக்கமாகும். மத்திய அரசு, 2006 ஆம் ஆண்டு ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் இரண்டு துணைத் திட்டங்களை துவக்கியுள்ளது:

- *நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதிகள் திட்டம்* (BSUP)-*திட்ட செயலாக்க நகரங்களான சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் அதனைச் சுற்றி வளர்ச்சியடைந்துள்ள நகர்ப்புறப் பகுதிகள்.*

- *பிற நகரங்கள் அனைத்திலும் ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்* (IHSDP).

நகர்ப்புற ஏழைகளுக்கானஅடிப்படை வசதித் திட்டம் (Basic Services to the Urban Poor - BSUP)

அரசு, நகர்ப்புற ஏழைகளுக்கு அளிக்கப்பட்டு வரும் சுகாதாரம், கல்வி, சமூகப் பாதுகாப்பு முதலியவற்றுடன் நிலப் பாதுகாப்பு, வாங்கக்கூடிய விலையில் மேம்படுத்தப்பட்ட வீட்டு வசதி மற்றும் குடிநீர் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை வழங்குவது நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதித் திட்டத்தின் குறிக்கோளாகும்.

இத்திட்டத்தின்கீழ் ₹2,316.02 கோடி மதிப்பீட்டில் 89,720 குடியிருப்புகளை கட்டுவதற்கான 51 திட்டங்களுக்கு இதுவரை மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. 78,971 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 10,749 குடியிருப்புகளின் கட்டுமானம் பல்வேறு நிலைகளில் உள்ளன. 3,852 உட்கட்டமைப்பு பணிகளில், 3,765 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 87 பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

[2016 ஆகஸ்ட் 5

பல்வேறு முகமைகள்மூலம் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டப் பணிகளின் விவரங்கள் பின்வருமாறு:

செயலாக்க முகமையின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹ கோடியில்)	குடியிருப்பு அலகுகள்			அடிப்படை வசதிகள்		
		அனுமதிக்கப் பட்டவை	முடிக்கப்பட்டவை	முன்னேற்றத்தில் உள்ளவை	அனுமதிக்கப் பட்டவை	முடிக்கப் பட்டவை	முன்னேற்றத்தில் உள்ளவை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்	1370.28	42318	36543	5775	65	35	30
நகராட்சி நிருவாக ஆணையரகம்	679.51	42010	37130	4880	934	932	2
பேரூராட்சி இயக்குநரகம்	43.16	2348	2348	--	186	186	--
சென்னை மாநகராட்சி	223.07	3044	2950	94	2667	2612	55
மொத்தம்	**2316.02**	**89720**	**78971**	**10749**	**3852**	**3765**	**87**

ஒருங்கிணைந்த குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (Integrated Housing and Slum Development Programme - IHSDP)

இத்திட்டத்தின் நோக்கம், குடிசைப் பகுதி மக்களுக்கு போதுமான குடியிருப்பு வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகளை அளிப்பதன்மூலம் குடிசைப் பகுதிகள் முழுமையான மேம்பாட்டை அடையும். இத்திட்டத்தின்கீழ் மத்திய அரசால் ₹566.11 கோடி மதிப்பீட்டில் 94 திட்டங்கள் ஒப்புதல் அளிக்கப்பட்டு, ₹400.45 கோடி மத்திய அரசின் நிதியுதவியுடன் 93 நகரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அனுமதிக்கப்பட்ட, 37,715 குடியிருப்புகளில், 36,733 குடியிருப்பு அலகுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 982 அலகுகளில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. அங்கீகரிக்கப்பட்ட 2,233 அடிப்படை வசதிப் பணிகளில் 2,148 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் பல்வேறு செயலாக்க நிலைகளில் உள்ளன.

2016 ஆகஸ்ட் 5]

பல்வேறு முகமைகள்மூலம் மேற்கொள்ளப்படும் திட்டப் பணிகளின் விவரம் கீழ்க்காணுமாறு:

செயலாக்க முகமையின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹ கோடியில்)	குடியிருப்பு அலகுகள்			அடிப்படை வசதிகள்		
		ஒனுமதிக்கப் பட்டவை	முடிக்கப் பட்டவை	முன்னேற்றத்தில் உள்ளவை	ஒனுமதிக்கப் பட்டவை	முடிக்கப் பட்டவை	முன்னேற்றத்தில் உள்ளவை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்	20.09	1443	1443	-	-	-	-
நகராட்சி நிருவாக ஆணையரகம்	486.57	31730	30748	982	1957	1872	85
பேரூராட்சி இயக்குநரகம்	59.45	4542	4542	-	276	276	-
மொத்தம்	**566.11**	**37715**	**36733**	**982**	**2233**	**2148**	**85**

2.15 வெளிநாட்டு நிறுவன உதவித் திட்டங்கள்

தமிழக அரசு வெளிநாட்டு நிதியுதவியுடன் கீழ்க்காணும் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது:

1. ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) நிதியுதவியுடன் தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு திட்டம் (TNUIP)

இத்திட்டத்தின் நிதியுதவியுடன் 9 உள்ளாட்சி அமைப்புகளில் 9 குடிநீர் மேம்பாட்டு பணிகள் ₹663.68 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அதில் 4 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள 5 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

2. ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி (KfW) நிதியுதவியுடன் நீடித்த நகர்ப்புற உள்கட்டமைப்பிற்கான நிதியுதவி திட்டம் (SMIF)

இத்திட்டத்தின் நிதியுதவியுடன் 17 உள்ளாட்சி அமைப்புகளில் சாலைப் பணிகள், மழைநீர் வடிகால் பணிகள், குடிநீர் மேம்பாட்டு பணிகள் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டம் போன்ற 22 பணிகள் ₹1376.44 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு,

[2016 ஆகஸ்ட் 5

அதில் 9 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 13 பணிகள் பல்வேறு நிலையில் செயலாக்கத்தில் உள்ளன.

3. தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (TNSUDP)

உலக வங்கி நிதியுதவியுடன் ₹13831 கோடி செலவில் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தினை (TNSUDP) செயல்படுத்திட அரசு ஆணை (நிலை) எண் 5, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 13-01-2016-ல் நிருவாக அனுமதி வழங்கப்பட்டு தற்போது செயலாக்கத்தில் உள்ளது.

இத்திட்டத்தில் நகர்ப்புற ஆளுமை (மாதிரி நகரம்) கூறு மற்றும் நகர்ப் பகுதிக்கான தொழில்நுட்ப உதவிக்கூறு (Urban sector technical Assistance component) ஆகிய இரண்டு திட்டங்கள் நகராட்சி நிருவாக ஆணையரால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2.16.1 நகர்ப்புற ஆளுமை (மாதிரி நகரம்) கூறு

ஈரோடு மாநகராட்சி, வேலூர் மாநகராட்சி மற்றும் ஓசூர் நகராட்சி ஆகியவை நகர்ப்புற ஆளுமை (மாதிரி நகரம்) கூற்றின் கீழ் மாதிரி நகரங்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளன. நிர்ணயிக்கப்பட்ட குறியீடுகளை எய்துவதன் அடிப்படையில் ஈரோடு மற்றும் வேலூர் மாநகராட்சிகளுக்கு தலா ₹153.24 கோடியும் ஓசூர் நகராட்சிக்கு ₹76.62 கோடியும் அடுத்த ஐந்தாண்டுகளுக்கு மானியமாக வழங்கப்படும்.

2.16.2 நகர்ப்புறங்களில் மின் ஆளுமை

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டம் III-ன்கீழ் மாநிலத்தில் அனைத்து பகுதிகளையும் இணைக்கும் வகையில் தமிழ்நாடு மாநில பெரும் பரப்பு வலையமைப்பு (TNSWAN) 48 நகராட்சிகள், 7 நகராட்சி நிருவாக மண்டல அலுவலகங்கள் மற்றும் நகராட்சி நிருவாக ஆணையரகத்தில் நிறுவப்பட்டுள்ளது. தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின்கீழ் நகர்ப் பகுதி தொழில்நுட்ப உதவி கூற்றின்கீழ் “மின்னணு ஆளுமை, பொது நிதி மேலாண்மை, புவியியல் தகவல் அமைப்பு” எனும் துணைக்கூற்றில் ஒரு பெரிய மின்னணு ஆளுகைத் திட்டம் (அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் மையப்படுத்தப்பட்ட மின்னணு ஆளுமை முறை) ₹18.31 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 12 சேவைகள் (Modules) 51 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ்

2016 ஆகஸ்ட் 5]

செயல்படுத்தப்பட உள்ள 29 சேவைகளும் 2016-17 ஆம் ஆண்டு இறுதிக்குள் அனைத்து நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் செயலாக்கத்திற்கு கொண்டு வரப்படும். இதன் விளைவாக தற்போது 51 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மையப்படுத்தப்பட்ட இணையதள மின் ஆளுமை நடைமுறைப்படுத்தப்பட்டு, மக்களின் பயன்பாட்டிற்காக சோதனை ஓட்டமாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் எஞ்சியுள்ள 77 நகராட்சிகள் மற்றும் 7 மாநகராட்சிகளில் தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு 2016-17 ஆம் ஆண்டில் நிறுவப்படவுள்ளது.

2.17 புவியியல் தகவல் அமைப்பு (GIS)

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டம் III-ன்கீழ் புவியியல் தகவல் அமைப்பின் அடிப்படையில் ஒவ்வொரு வீடாக சென்று சொத்து விவரம் கணக்கெடுத்தல், அடிப்படை வரைபடம் மற்றும் பயன்பாடு வரைபடம் தயாரித்தல் போன்ற பணிகள் 7 மாநகராட்சிகள் மற்றும் 10 நகராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டன. கலந்தாய்வர்கள் சமர்ப்பித்த விவரங்களை சரிபார்க்கும் பணி அந்தந்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நடைபெற்று வருகிறது. இத்திட்டம் இதர மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் படிப்படியாக செயல்படுத்தப்படும்.

2.18 தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் (Tamil Nadu Institute of Urban Studies - TNIUS)

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் திறம்பட செயல்படுவதற்கான ஆற்றலை மேம்படுத்தும் நோக்கத்திற்காக 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூரில் நிறுவப்பட்டது. இந்நிறுவனத்தில் உறைவிட பயிற்சித் திட்டங்களை மேம்படுத்தும் நோக்கில், ஒரு புதிய விடுதி கட்டப்பட்டுள்ளது. உருவாக்குதல் போன்ற ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகளை இந்நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

இந்த நிறுவனம் நகர்ப்புற ஆளுகை தொடர்பான கூட்டு முயற்சிகளுக்கென, மாநில மற்றும் தேசிய அளவிலான கீழ்க்காணும் புகழ்பெற்ற பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களான இந்திய பொறியியல் பணியாளர் கல்லூரி (ESCI), *ஹைதராபாத், இந்தியன் இன்ஸ்ட்டிடியூட் ஆப் ஹியுமன் செட்டில்மென்ட்* (IIHS), *பெங்களூரு, தமிழ்நாடு ஐசிடி அகாடமி* (ICT Academy), *சென்னை*

ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

ஜப்பான் நாட்டின் பப்ளிக் எண்டர்பிரைசஸ் ஏஜென்சி (Public Enterprises Agency) (PEA) Kanagawa Prefectural Government மற்றும் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் இடையே நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் திறன் மற்றும் அறிவினை உலகளாவிய தரத்திற்கு மேம்படுத்தும் வகையில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு உள்ளது. இந்த ஒப்பந்தத்தின் நோக்கம் குடிநீர் வழங்கல் தொடர்பான பணிகளில் பயிற்சிகள் நடத்துதல், வெளிநாடுகளில் பின்பற்றப்படும் சிறப்பு முயற்சிகளைக் கண்டறிதல், குடிநீர் சுத்திகரிப்பு, பகிர்மானம், குழாய் உடைப்பு கண்டறிதல், குடிநீர் வீணாகுவதைத் தடுத்தல், உள்ளிட்ட பிரிவுகளின்கீழ் வளங்கள் பரிமாற்றம் போன்ற சாத்தியக்கூறுகளை இவ்விரண்டு நிறுவனங்களும் கலந்தாலோசிக்கும்.

2.19 மாநகராட்சிகள்

2.19.1 மதுரை மாநகராட்சி

மதுரை மாநகராட்சி, 1-05-1971 அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள்தொகை 15,61,129 ஆகவும், பரப்பளவு 147.99 சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் ₹334.25 கோடியாகவும் உள்ளது.

2015-16 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன:

- சிறப்பு சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சேதமடைந்த 56.87 கி.மீ. நீளமுள்ள சாலைகளை சீரமைக்க ₹26.04 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- சுற்றுச் சாலை சுங்கக் கட்டணம் உபரி நிதியின்கீழ் 68.17 கி.மீ. நீளமுள்ள புதிய சாலைகள் ₹22.44 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியின்கீழ் ₹0.90 கோடி செலவில் புதிய கழிப்பிடங்கள் கட்டும் பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2016 ஆகஸ்ட் 5]

- நகர் மற்றும் ஊரமைப்புத் திட்ட நிதியின்கீழ் ₹1.00 கோடி செலவில் திருப்பரங்குன்றம் திருக்கோவிலைச் சுற்றி பேவர்பிளாக் சாலைகள், மழைநீர் வடிகால், சுத்திகரிக்கப்பட்ட குடிநீருடன்கூடிய கட்டடம் மற்றும் நடைபாதை போன்ற பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- நகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் நகரின் மையப் பகுதியில் செயல்பட்டு வரும் 25 மொத்த மற்றும் 240 சில்லறை வியாபார பழக்கடைகளை மாட்டுத்தாவணி பகுதிக்கு மாற்றியமைக்க ₹12.30 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2.19.2 கோயம்புத்தூர் மாநகராட்சி

கோயம்புத்தூர் மாநகராட்சி, 1-05-1981 அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 16,01,438 ஆகவும், பரப்பளவு 265.36 சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் ₹642.72 கோடியாகவும் உள்ளது.

2015-2016 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன:

- கவுண்டம்பாளையம், வடவள்ளி, வீரகேரளம் பகுதிகளில் தங்குதடையின்றி சீரான குடிநீர் வழங்கும் பொருட்டு, ₹108.16 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி நிதி பெற்று செயல்படுத்தப்படும்.

- கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் ₹556.57 கோடி செலவில் 24 மணிநேரம் குடிநீர் வழங்கும் திட்டத்தை (24X7) செயல்படுத்தும் பணி ஒப்பந்த நிலையில் உள்ளது.

- தமிழ்நாடு அரசின் நிதி மற்றும் அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான (AMRUT) திட்டத்தின்கீழ் 2015-16 ஆம் ஆண்டில் 6 பூங்காக்கள் ₹4.28 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். அதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு உள்ளது.

- கோயம்புத்தூர் மாநகராட்சியில், சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில், கட்டட இடிபாடுகளை திரும்ப பயன்படுத்துதல்

[2016 ஆகஸ்ட் 5

மற்றும் மறுசுழற்சி செய்ய ₹9.00 கோடிக்கு அரசாணை எண் 79, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 31-05-2016-ல் அனுமதி வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு உள்ளது.

2.19.3 திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, 1-04-1994 அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 9,16,857 ஆகவும், பரப்பளவு 167.23 சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் ₹303.88 கோடியாகவும் உள்ளது.

2015-16 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

- சிறப்பு சாலைத் திட்டத்தின்கீழ் 53.51 கி.மீ. நீளத்திற்கு சாலைகளை மேம்படுத்த ₹26.22 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

- ஸ்வச் பாரத் மிஷன் திட்டத்தின்கீழ் ₹0.63 கோடி மதிப்பீட்டில் 11 புதிய கழிப்பிடங்கள் கட்டும் பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- மத்திய அரசு உணவு பதப்படுத்தும் அமைச்சகத்தின் (Ministry of Food Processing Industries MoFPI) வழிமுறைகளின்படி ₹10.49 கோடி மதிப்பீட்டில் 2 இடங்களில் நவீனஆட்டிறைச்சிக் கூடம் கட்டுவதற்கும் நவீன மீன் சந்தை அமைக்கவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 2 நவீன ஆட்டிறைச்சிக் கூடப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- தமிழ்நாடு அரசு மற்றும் தேசிய மீன் வளர்ச்சி வாரியம் நிதியின்கீழ், ₹332.00 இலட்சம் மதிப்பீட்டில் நவீன மீன் சந்தை அமைப்பதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

- மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் (வார்டு எண் 61 முதல் 65 வரை) ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி நிதி கடன், மானியம் மற்றும் பொதுமக்கள்/ மாநகராட்சி பங்களிப்பு நிதிகளின்கீழ் குடிநீர் அபிவிருத்தி திட்டம் செயல்படுத்த ₹63.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்றுவருகிறது.

2016 ஆகஸ்ட் 5]

- *மாநில பேரிடர் நிவாரண நிதியின்கீழ், 6 பணிகளுக்கு ₹1.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிவுற்றுள்ளன.*

- *உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி மற்றும் இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்பு நிதியின்கீழ் நவீன எரிவாயு தகன மையம், சமையலறை கழிவு/காய்கறி கழிவுகள் கொண்டு எரிவாயுதகன மேடை மாற்றுதல் மற்றும் மீத்தேன் வாயு முறையில் சமுதாய சமையலறை அமைக்கும் பணிகளுக்கு ₹1.70 கோடிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 3 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் துவங்கப்பட உள்ளன.*

- *ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியின்கீழ் 5 பணிகள் சுகாதார வளாகம், மின்விளக்குகள், மின் சேமிப்புதிறன் கொண்ட மின் விளக்குகள், வழிகாட்டு பலகைகள் மற்றும் அமரும் இருக்கைகள் அமைக்கும் பணிகள் ₹5.96 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.*

2.19.4 சேலம் மாநகராட்சி

சேலம் மாநகராட்சி, 1-06-1994 அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, மக்கள் தொகை 8,31,038 ஆகவும், பரப்பளவு 91.34 சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் ₹164.59 கோடியாகவும் உள்ளது.

2015-16 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன:

- *சிறப்பு சாலை திட்டத்தின்கீழ் 29.767 கி.மீ. நீளத்திற்கு அரசு மானியம் மற்றும் கடனாக ₹18.00 கோடி மதிப்பீட்டில் 50 எண்ணிக்கையிலான சாலைப் பணி எடுத்துக்கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.*

- *ஸ்வச் பாரத் மிஷன் திட்டம் மற்றும் தமிழ்நாடு அரசு மானியத்துடன் ₹4.54 கோடி மதிப்பீட்டில் 30 எண்ணிக்கையில் சமுதாய கழிப்பிடம் கட்டும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

- உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியின்கீழ் மாநகராட்சி புதிய மைய அலுவலகத்திற்கு இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளம், நவீன எரிவாயு தகனமேடை, சமுதாய சமையலறை, உணவு கழிவுகளிலிருந்து எரிவாயு தயாரித்தல் மற்றும் போடிநாயக்கன்பட்டி ரயில்வே தரை கீழ்பாலம் ஆகிய 5 பணிகளுக்கு அரசு மானியமாக தொகை ₹8.91 கோடி மதிப்பீட்டில் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

- தமிழ்நாடு அரசின் நிதி மற்றும் அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான (AMRUT) திட்டத்தின்கீழ் சேலம் மாநகராட்சி பகுதியில் 4 இடங்களில் பூங்கா அமைக்கும் பணிக்கு ₹1.35 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு நகர்ப்புற நிதி ஆணையத்தின்மூலம் கடனாக ₹67.00 கோடி பெறப்பட்டு சேலம் மாநகராட்சி பகுதியில் 122 கி.மீ. நீளத்திற்கு 293 சாலைப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

2.19.5 திருநெல்வேலி மாநகராட்சி

திருநெல்வேலி மாநகராட்சி, 1-06-1994 அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 4,74,838 ஆகவும், பரப்பளவு 108.65 சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் ₹113.46 கோடியாகவும் உள்ளது.

2015-16 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

- ஜெர்மன் வங்கி நிதியுதவியுடன் ₹230.00 கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டு திட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது. இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் கோரப்பட்டு பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளன.

2.19.6 ஈரோடு மாநகராட்சி

ஈரோடு மாநகராட்சி 1-01-2008 அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள்

2016 ஆகஸ்ட் 5]

தொகை 4,98,129 ஆகவும், பரப்பளவு 109.52 சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் ₹155.65 கோடியாகவும் உள்ளது.

2015-16 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன:

- *சிறப்பு சாலைத் திட்டத்தின்கீழ் 27.13 கி.மீ. நீள சாலைகளுக்கு ₹25.86 கோடி மதிப்பீட்டில் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.*
- *தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகத்திடம் கடனாக ₹86.53 கோடி மதிப்பீட்டில் 100.02 கி.மீ. நீளத்தில் 341 சாலைகள் சீரமைப்புப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.*
- *உட்கட்டமைப்பு மற்றும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்புதல் மற்றும் ஸ்வச் பாரத் மிஷன் திட்ட நிதியின்கீழ் 11 நவீன கழிப்பிடங்கள் கட்டும் பணி ₹1.42 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.*
- *ஸ்வச் பாரத் மிஷன் திட்டத்தில் 3554 தனி நபர் கழிவறை கட்டுதல் பணி ₹4.26 கோடி மதிப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.*
- *தேசிய சுகாதார இயக்கத் திட்டத்தின்கீழ் ஐந்து புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டும் பணிகள் ₹2.47 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.*
- *உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்புதல் நிதியின்கீழ் சமுதாயக் கழிப்பிடங்களின்மூலம் எரிவாயு தயாரிக்கும் கலன் அமைத்தல் மற்றும் எரிவாயு தகன மேடைக்கு தேவைப்படும் எரிவாயுவை காய்கறிக் கழிவுகளிலிருந்து தயாரிக்கும் கலன் அமைக்கும் 2 பணிகள் ₹1.08 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.*
- *மாநில அரசு சமச்சீர் வளர்ச்சி நிதியின்கீழ் 6 எண்ணிக்கையிலான நடமாடும் கழிப்பிடங்கள் அமைக்கும் பணி ₹0.78 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.*
- *திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தில் ₹12.77 கோடி மதிப்பீட்டில் திடக்கழிவுகளிலிருந்து உரம் தயாரிக்கும்*

பொருட்டு முன் செயலாக்க அலகு அமைத்தல் இயந்திரங்கள் மற்றும் வாகனங்கள் வாங்கும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

- தமிழ்நாடு அரசின் நிதி மற்றும் அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான (AMRUT) திட்டத்தின்கீழ் ₹2.26 கோடி மதிப்பீட்டில் 4 பூங்காக்கள் மேம்பாடு செய்யும் பணி எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

2.19.7 திருப்பூர் மாநகராட்சி

திருப்பூர் மாநகராட்சி, 1-01-2008 அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, மக்கள் தொகை 8,77,778 ஆகவும், பரப்பளவு 159.35 சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் ₹170.69 கோடியாகவும் உள்ளது.

2015-16 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன:

- சிறப்பு சாலைகள் திட்டத்தின்கீழ், சாலைப் பணிகளுக்கு ₹25.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.
- TUFIDCO கடனுதவி திட்டத்தின்கீழ், சாலை பணிகளுக்கு ₹52.17 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.
- ஸ்வச் பாரத் மிஷன் திட்டத்தின்கீழ், புதிய கழிப்பிடங்கள் கட்டுதல் பணிகளுக்கு ₹7.35 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.
- உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்புதல் திட்டத்தின்கீழ் உயிரி எரிபொருள் ஆலை நிறுவுதல் Methane Plant அமைத்தல் மற்றும் சமையல் கூடம் கட்டுதல் ஆகிய பணிகளுக்கு ₹0.71 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

2.19.8. வேலூர் மாநகராட்சி

வேலூர் மாநகராட்சி, 1-08-2008 அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, மக்கள்

2016 ஆகஸ்ட் 5]

தொகை 5,04,079 ஆகவும், பரப்பளவு 87.91 சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் ₹75.24 கோடியாகவும் உள்ளது.

2015-16 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன:

- சிறப்பு சாலை திட்டத்தின்கீழ் 23.450 கி.மீ. சாலைகளை சீரமைக்கும் பணிகளுக்காக ₹12.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- மாநில பேரிடர் நிவாரண திட்டத்தின்கீழ் 5 கி.மீ. மழையால் சேதமடைந்த சாலைகளை சீரமைக்கும் பணிகளுக்காக ₹2.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- திடக்கழிவு மேலாண்மை நிதி திட்டத்தின்கீழ் திடக்கழிவுகளை பிரித்தெடுத்து உரமாக்கும் மையம், குப்பை சேகரிக்கும் வாகனங்கள் வாங்குவதற்கு ₹10.72 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ஸ்வச் பாரத் மிஷன் திட்டத்தின்கீழ் சதுப்பேரி மற்றும் சாத்துபாளையம் உரக்கிடங்கில் சுற்றுச்சுவர் மற்றும் கான்கிரீட் தளம் அமைத்தல் பணிக்கு ₹2.48 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு அரசின் நிதி மற்றும் அடல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான (AMRUT) திட்டத்தின்கீழ் பசுமை இடங்கள் மற்றும் பூங்காக்கள் மேம்படுத்துதல் பணிக்கு ₹2.014 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.19.9 தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி, 5-08-2008 அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 3,70,896 ஆகவும், பரப்பளவு 90.63 சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் ₹88.07 கோடியாகவும் உள்ளது.

[2016 ஆகஸ்ட் 5

2015-16 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன:

- குடிநீர் அபிவிருத்தி திட்டம் மற்றும் பாதாள சாக்கடை திட்டம் செயலாக்கத்தினால் சேதமடைந்த 50.640 கி.மீ. சாலைகளை சீரமைக்கவும், மழைநீர் வடிகால் கட்டவும் சிறப்புச் சாலை திட்டத்தின்கீழ் ₹27.85 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 70 சாலை பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுறும் தருவாயில் உள்ளன.

- மாநில பேரிடர் மேலாண்மை நிதியின்கீழ் சாலைகளை மேம்படுத்தும் பணிக்கு ₹8.74 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 47 சாலை பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதியின்கீழ் ₹1.27 கோடி செலவில் ஊரணிகளை மேம்படுத்துதல், உயிரி செறிவூட்ட சமுதாயக்கூட சமையலறை நிறுவுதல் மற்றும் உயிரி எரிவாயுமூலம் எரிவாயு தகன மேடை அமைத்தல் போன்ற பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

2.19.10 தஞ்சாவூர் மாநகராட்சி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 19-2-2014 அன்று தரம் உயர்த்தி, தஞ்சாவூர் மாநகராட்சியாக அறிவிக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, மக்கள் தொகை 2,22,943 ஆகவும், பரப்பளவு 36.31 சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு வருமானம் ₹80.57 கோடி ஆகவும் உள்ளது.

2015-16 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன:

- சிறப்பு சாலை திட்டத்தின்கீழ் ₹16.99 கோடி செலவில் பழுதடைந்த 34.37 கி.மீ. சாலைகள் புதுப்பிக்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- இடைவெளி நிரப்பும் திட்ட நிதியின்கீழ் ₹0.70 கோடி செலவில் திடக்கழிவுகளிலிருந்து எரிவாயுமூலம் சமூக சமையலறை மற்றும் எரிவாயு தகன மேடை கட்டும் பணிகள்

எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

- தேசிய வாழ்வாதார இயக்க திட்ட நிதியின்கீழ் ₹0.35 கோடி மதிப்பீட்டில், வீடற்றவர்களுக்கு தங்குமிடம் அமைத்துத் தரும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.
- ஸ்வச் பாரத் மிஷன் திட்ட நிதியின்கீழ் ₹0.21 கோடி மதிப்பீட்டில் 3 இடங்களில் புதிய சமுதாய கழிவறை கட்டும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

2.19.11 திண்டுக்கல் மாநகராட்சி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 19-2-2014 அன்று தரம் உயர்த்தி, திண்டுக்கல் மாநகராட்சியாக அறிவிக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 2,07,327 ஆகவும், பரப்பளவு 14.01 சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் ₹40.50 கோடியாகவும் உள்ளது.

2015-16 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன:

- சிறப்பு சாலைகள் திட்டத்தின்கீழ் பாதாள சாக்கடை திட்டம் மற்றும் குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகளால் சேதமடைந்த 14.825 கி.மீ. நீளமுள்ள சாலைகளை சீரமைக்க ₹10.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- மாநில பேரிடர் மேலாண்மை நிதியின்கீழ் மழையின் காரணமாக சேதமடைந்த சாலைகளை சீரமைக்க ₹0.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் உள்ள அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு அரசின் நிதி மற்றும் அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான (AMRUT) திட்டத்தின்கீழ் பூங்காக்கள் அபிவிருத்தி பணிகளுக்கு ₹2.14 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

- தேசிய வாழ்வாதார இயக்கத்தின்கீழ் நகர்ப்புற வீடற்ற ஏழைகள் தங்கும் விடுதி கட்டுவதற்கு ₹0.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

- தேசிய சுகாதார இயக்கத்தின்கீழ் கமலாநேரு மகப்பேறு மருத்துவமனை அபிவிருத்தி செய்யும் பணிக்கு ₹0.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் முடிவுற்று பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது.

2.20 மாண்புமிகு முதலமைச்சரின் சிறந்த நகர்ப்புற உள்ளாட்சி விருது

சீரிய முறையில் செயலாற்றும் மாநகராட்சி, நகராட்சிகளுக்கு விருது வழங்க, 2012-13 ஆம் ஆண்டில் "மாண்புமிகு முதலமைச்சர் விருது" உருவாக்கப்பட்டது.

2014-15 ஆம் ஆண்டிற்கு மதுரை மாநகராட்சி சிறந்த மாநகராட்சியாகவும் (பரிசு தொகை ரூ. 25 இலட்சம்) மற்றும் நகராட்சிகளில், புதுக்கோட்டை, மன்னார்குடி மற்றும் கோபிசெட்டிப்பாளையம் நகராட்சிகள் முறையே முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது சிறந்த நகராட்சிகளாகவும் (பரிசு தொகை முறையே ₹15 இலட்சம், ₹10 இலட்சம் மற்றும் ₹5 இலட்சம்) தேர்வு செய்யப்பட்டன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 2015 ஆம் ஆண்டு சுதந்திர தின விழாவின்போது, மேற்படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பரிசுத் தொகை மற்றும் பாராட்டு பத்திரங்களை வழங்கினார்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2016 ஆகஸ்ட் 5]

3. பெருநகர சென்னை மாநகராட்சி

சென்னை மாநகராட்சி 1688 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29 ஆம் நாள் அமைக்கப்பட்டது. சென்னை மாநகராட்சி, நாட்டின் மிகப் பழமையான உள்ளாட்சி அமைப்பாகவும், உலகின் இரண்டாவது பழமையான உள்ளாட்சி அமைப்பாகவும் உள்ளது.

2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியின் மக்கள் தொகை 67.27 இலட்சம் ஆகும். சென்னை மாநகராட்சியுடன், 2011 ஆம் ஆண்டு 42 உள்ளாட்சி அமைப்புகள் இணைக்கப்பட்டதன்மூலம் மாநகராட்சியின் பரப்பளவு 174 சதுர கிலோ மீட்டரில் இருந்து 426 சதுர கிலோ மீட்டராக அதிகரித்து, நாட்டின் நான்காவது மிகப் பெரிய மாநகராட்சியாகத் திகழ்கிறது. 329 வருட வரலாறு கொண்ட சென்னை மாநகராட்சி, தொன்மை வாய்ந்த மற்றும் நவீன உள்கட்டமைப்பு வசதிகளைக் கொண்டுள்ளது. 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டத்தின்மூலம் சென்னை மாநகராட்சி அதன் சட்டப் பூர்வமான அதிகாரங்களைப் பெறுகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 29-01-2016 அன்று முதல் சென்னை மாநகராட்சி “பெருநகர சென்னை மாநகராட்சி” என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு மேயர் தலைமையிலான மன்றம் பெருநகர சென்னை மாநகராட்சியை நிருவகித்து வருகிறது.

சென்னை மாநகராட்சியின் விரிவாக்கத்திற்கு முன்னர் இருந்த 155 வார்டுகள், 107 வார்டுகளாகவும், புதியதாக இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புப் பகுதிகள் 93 வார்டுகளாகவும் வரையறுக்கப்பட்டு, தற்போது மொத்தம் 200 வார்டுகளாக உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், ஏற்கெனவே இருந்த 10 மண்டலங்கள் 7 மண்டலங்களாக மறு சீரமைக்கப்பட்டு, தற்போது இணைக்கப்பட்ட 42 உள்ளாட்சி அமைப்புகள் 8 புதிய மண்டலங்களாக வரையறுக்கப்பட்டு, மண்டலங்களின் மொத்த எண்ணிக்கை 10-ல் இருந்து தற்போது 15 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. இம்மண்டலங்கள், நிருவாக வசதிக்காக 3 வட்டாரங்களாக அதாவது, வடக்கு வட்டாரம், மத்திய வட்டாரம், தெற்கு வட்டாரம் எனப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வட்டாரமும் 5 மண்டலங்களை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டுள்ளது. இவ்வட்டாரங்கள் துணை / இணை /

கூடுதல் ஆணையர் நிலையில், இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளால் நிருவகிக்கப்படுகின்றன.

அரசு, மாநகராட்சி விரிவாக்கத்திற்குப் பின்னர் கூடுதல் பொறுப்புகளைச் செவ்வனே நிறைவேற்றுவதற்காக, மனிதவள ஆதாரங்களை மேம்படுத்தும் நோக்கில் கூடுதலாக 784 பணியிடங்களை உருவாக்கி, அனுமதியளித்துள்ளது. இந்த நடவடிக்கை, முடிவுகளை துரிதமாக மேற்கொள்ளவும், பொதுமக்களின் குறைகளைக் களையவும் ஏதுவாக அமைந்துள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் சொத்து வரி செலுத்துபவர்களின் எண்ணிக்கை தற்போது, 11,87,564 ஆகவும், தொழில் வரி செலுத்துபவர்களின் எண்ணிக்கை 1,21,805 ஆகவும் உள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியில் 2015-16 ஆம் ஆண்டிற்கான மொத்த வருவாயான ₹2,920.77 கோடியில், சொத்து வரிமூலம் ₹600 கோடி வசூலிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, ₹586.46 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. 2014-15 ஆம் ஆண்டில் சொத்து வரிமூலம் ₹581.63 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. 2014-15 ஆம் ஆண்டில் மூலதன செலவினங்கள் ₹1672.92 கோடி ஆகும். மேலும், 2015-16 ஆம் ஆண்டில் மூலதன செலவினங்கள் ₹1,765.28 கோடி ஆகும்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் வருவாய் கடந்த 5 ஆண்டுகளில் எவ்வாறு இருந்தது என்று கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது:

ஆண்டு	வருமானம் (₹ கோடியில்)	வருவாய் உயர்வு (%)
2011 – 12	1239.13	17.37
2012 – 13	1591.41	28.43
2013 – 14	2066.13	29.83
2014–15	2195.90	6.28
2015 – 16	2920.77	33.00
சராசரி	2002.67	22.98

2016 ஆகஸ்ட் 5]

3.1 அம்மா உணவகம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஏழை எளிய மக்கள், தினக் கூலிகள், ஆட்டோ ஓட்டுநர்கள் போன்றவர்கள் சுகாதாரமான மற்றும் தரமான உணவுகளை மலிவு விலையில் வயிறார உண்ணும் வகையில் வழங்குவதற்காக, அம்மா உணவகங்கள் துவங்க உத்தரவிட்டார்கள். இதன் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் 293 அம்மா உணவகங்களும், சென்னை மாநகரிலுள்ள அரசு மருத்துவமனைகளில் 7 அம்மா உணவகங்களும், மொத்தம் 300 அம்மா உணவகங்கள் துவங்கப்பட்டு, நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் ஒரு இட்லி ஒரு ரூபாய்க்கும், பொங்கல் ஐந்து ரூபாய்க்கும், பலவகை சாதங்கள் ஐந்து ரூபாய்க்கும், தயிர் சாதம் மூன்று ரூபாய்க்கும் மற்றும் மாலை நேரத்தில், இரண்டு சப்பாத்தி, பருப்பு கடைசல் மூன்று ரூபாய்க்கும் மலிவு விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

18-07-2016 வரை அம்மா உணவகங்கள் மூலமாக 31.81 கோடி இட்லிகளும், 12.49 கோடி பலவகை சாதங்களும், 15.27 கோடி சப்பாத்திகளும், விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதனால் ஒவ்வொரு நாளும் சுமார் மூன்று இலட்சம் ஏழை எளிய மக்கள் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டமானது சமூகப் பொருளாதார நிபுணர்களால் உலகில் மிகச் சிறந்த திட்டமாகவும், சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கு உந்து சக்தியாக விளங்குவதாகவும் பாராட்டப்படுகிறது. மேலும் மீதமுள்ள 107 அம்மா உணவகங்கள் அக்டோபர் 2016-க்குள் திறக்கப்பட உள்ளன.

3.2 அம்மா குடிநீர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 13-02-2016 அன்று சென்னை பெருநகரில், எதிர்மறை சவ்வூடு பரவுதல் (Reverse Osmosis) மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை தாங்களும் பருக வேண்டும் என்று ஏழை எளிய மக்களின் விருப்பத்திற்கிணங்க, “அம்மா குடிநீர் திட்டம்”, என்ற புதிய திட்டத்தினை செயல்படுத்த ஆணையிட்டார்கள்.

இதன்படி முதற்கட்டமாக, பெருநகர சென்னை மாநகராட்சியில் ஏழை எளிய மக்கள் அதிகம் வசிக்கும் 20 இடங்களில், எதிர்மறை சவ்வூடு பரவுதல்மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையங்கள் ₹3.00 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும்

[2016 ஆகஸ்ட் 5

மணிக்கு 2000 லிட்டர் சுத்திகரிக்கும் திறன் கொண்டதாக இருக்கும். மக்களின் தேவைக்கேற்ப இதன் உற்பத்தி திறன் மேலும் அதிகரிக்கப்படும்.

மேலும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் ஆய்வகங்கள்மூலம் பரிசோதிக்கப்பட்டு, அதன் தரம் உறுதி செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்மூலம் பொது மக்களுக்கு விலை ஏதுமின்றி சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் ஒவ்வொரு குடும்பத்திற்கும், நாளொன்றுக்கு 20 லிட்டர் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்மூலம் பயன்பெறும் ஏழை எளிய மக்கள் எளிதில் குடிநீர் பெறும் வகையில், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் தானியங்கி நிலையத்தில், ஸ்மார்ட் கார்டு (Smart Card) மூலம் குடிநீர் பெற்று வருகின்றனர். இத்திட்டத்தின்மூலம் 18-07-2016 வரை சராசரியாக 11,000 குடும்பங்கள் நாளொன்றுக்கு 20 லிட்டர் வீதம் மொத்தம் 1.73 கோடி லிட்டர், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு பயன்பெற்றுள்ளனர். இத்திட்டத்தில் மேலும், 30 இடங்களில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க கூடுதல் இடங்கள் கண்டறியப்பட்டுள்ளது. மக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில், 30 குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க ஒப்பம் கோரப்பட்டுள்ளது.

3.3 தேசிய நகர்ப்புற சுகாதாரத் திட்டம்

தேசிய நகர்ப்புற சுகாதாரத் திட்ட வழிகாட்டுதல்களின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் மருத்துவ வசதிகள் ஒருங்கிணைக்கப்பட்டு, 50,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்று நிர்ணயம் செய்யப்பட்டு, 140 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 136 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள நான்கில் கட்டடப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதுநாள் வரை நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில், தொற்று நோய்கள், தொற்றா நோய்களுக்கு மட்டும் மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. தற்போது மேற்கூறிய மருத்துவ சேவைகளுடன் கர்ப்ப கால முந்தைய மற்றும் பிந்தைய கவனிப்புகள், குழந்தைகள் மருத்துவம் போன்ற மருத்துவச் சேவைகளும் ஒரே குடையின்கீழ் அளிக்கப்படுகின்றன. மேலும்

2016 ஆகஸ்ட் 5]

2.5 இலட்சம் மக்கள் தொகைக்கு ஒரு நகர்ப்புற சமுதாய சுகாதார நிலையம் என, மண்டலத்திற்கு ஒன்று வீதம் (100 படுக்கைகள், பகுப்பாய்வுகூட வசதியுடன்) 15 நகர்ப்புற சமுதாய நல நிலையங்கள் அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, தற்போது 9 நகர்ப்புற சமுதாய நல நிலையங்கள் வெற்றிகரமாக செயல்பட்டு வருகின்றன.

இத்திட்டமானது சென்னை நகர்ப்புற சுகாதார சங்கத்தின் மூலம் நிருவகிக்கப்படுகிறது. தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்திலிருந்து ₹172.70 கோடி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், 1025 மகளிர் குழுக்கள் (மகிள ஆரோக்கிய சமிதி), குடிசை வாழ் பகுதியில் வசிக்கும் பின்தங்கியுள்ள மக்களுக்கும், பெண்களுக்கும் சுகாதாரத்தைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக அமைக்கப்பட்டுள்ளது.

3.4 ஆயுஷ் மருத்துவமனைகள்

பெருநகர சென்னை மாநகராட்சியில் 3 ஆயுஷ் மருத்துவமனைகள் (ஆயுர்வேதா, யோகா இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா, மற்றும் ஹோமியோபதி) மண்டலம் 4,10 மற்றும் 13-ல் ஆரம்பிக்கப்பட்டு சிறப்புடன் செயல்பட்டு வருகின்றன. இங்கு ஐந்து வகையான இந்திய மருத்துவச் சேவைகள் ஒரே குடையின்கீழ் வழங்கப்படுகின்றன. இதற்கென ஐந்து இந்திய மருத்துவர்களைக் கொண்டு ஐந்து வகையான இந்திய மருத்துவச் சேவைகள் வழங்கப்படுகின்றன. இந்த மருத்துவமனைகளில் மார்ச் 2016 முதல் நாள் ஒன்றுக்கு 200 புறநோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுகின்றன. இதுவரையில் 54,000 புறநோயாளிகள் இங்கு சிகிச்சை பெற்று பலன் அடைந்துள்ளனர்.

3.5 வீடற்றோருக்கான காப்பகங்கள்

பெருநகர சென்னை மாநகராட்சி கடந்த ஜூன் 2013 முதல் 37 எண்ணிக்கையில் வீடற்றோருக்கான காப்பகங்களைத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின்மூலம் நடத்தி வருகிறது.

காப்பகங்களின் விவரம்

எண்	காப்பகத்தின் வகை	மொத்தம்
1.	ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள்	1
2.	சிறுவர்கள் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்ட சிறுவர்கள்	5
3.	சிறுவர்கள் மற்றும் சிறுமிகள்	4
4.	ஆண்கள் மற்றும் பெண்கள்	3
5.	குடும்பம்	1
6.	ஆண்கள் மட்டும்	10
7.	பெண்கள் மட்டும்	9
8.	மனநலம் பாதிக்கப்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள்	4
	மொத்தம்	37

இந்த காப்பகங்களின்மூலம், பயனடைந்த பயனாளிகளின் எண்ணிக்கை 5138 ஆகும். தற்போது 974 பயனாளிகள் தங்கி பயனடைந்து வருகிறார்கள். மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி 33 எண்ணிக்கையில் புதிய வீடற்றோருக்கான காப்பகங்களை அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

3.6 பொது சுகாதார தடுப்பு நடவடிக்கைகள்

3.6.1 தெரு நாய்கள் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்துதல்

பெருநகர சென்னை மாநகராட்சி தெருநாய்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த 3 இனக்கட்டுப்பாட்டு மையங்களில், இனக்கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சைகளைச் செய்து வருகிறது.

சென்னை மாநகராட்சி கால்நடைப்பிரிவின்மூலம் பொதுமக்களின் புகார்களின் அடிப்படையில் தெரு நாய்கள் பிடித்து வரப்பட்டு, விலங்குகள் இனக் கட்டுப்பாட்டு விதிகளின்படி, நாய் இனக்கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, வெறி நோய் தடுப்பூசி போடப்பட்டு, அடையாளக்

2016 ஆகஸ்ட் 5]

குறியிடப்பட்டு அவைகள் பிடிக்கப்பட்ட இடங்களிலேயே மீண்டும் சிகிச்சைக்கு பிறகு விடப்படுகின்றன.

கடந்த 2015-16 ஆம் ஆண்டில் 21,534 தெருநாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. மொத்தம் 12 நாய் பிடிக்கும் வாகனங்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மேலும், தனியார் நாய் பிடிப்போர் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சிறப்பு திட்டமாக இதுவரையில், 60,826 தெரு நாய்களுக்கு வெறி நோய் தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளது.

3.6.2 கொசு தடுப்பு நடவடிக்கைகள்

கொசுத் தொல்லை மற்றும் கொசுவினால் பரவும் நோய்களை தடுப்பதற்கும் நீர்வழித் தடங்களின் அருகில் வசிக்கும் பொது மக்களுக்கு 5.90 இலட்சம் விலையில்லா கொசு வலைகள் ₹9.97 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 5 இலட்சம் நொச்சி செடிகள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

41 வாகனத்தில் எடுத்துச்செல்லும் புகைப்பரப்பும் இயந்திரங்கள் மற்றும் 260 கையினால் எடுத்துச்செல்லும் புகைப்பரப்பும் இயந்திரங்கள்மூலம் கொசு மருந்து அடிக்கப்பட்டு, கொசுக்கள் கட்டுப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனுடன் 568 கைத் தெளிப்பான்கள் கொண்டு மழைநீர் வடிகால்வாய்களில் கொசுப் புழு மருந்துகள் தெளிக்கப்பட்டு, கொசுக்கள் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றன. இதனுடன் கொசுப் புழுக்களை உண்ணும் கம்புஃசியா என்னும் மீன்கள் நீர்நிலைகளில் விடப்பட்டு கொசுப் புழுக்கள் அழிக்கப்படுகின்றன.

இத்துடன் 2015-16 நிதியாண்டில் சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட நீர்வழித் தடங்களில் உள்ள ஆகாயத் தாமரைகள் மற்றும் மிதக்கும் பொருட்களை அகற்றி கொசு உற்பத்தியை தடுத்து தடையில்லா நீர் ஓட்டத்தினை ஏற்படுத்தும் வகையில், நீரிலும் நிலத்திலும் செல்லக்கூடிய ஆம்பிபியன் (Amphibian) *உபகரணம் ஒன்று ₹9.97 கோடி (உபகரணத்தினை ஐந்து வருடகாலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல்) செலவுடன் ஃபின்லாந்து நாட்டிலிருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.*

[2016 ஆகஸ்ட் 5

3.7 இறைச்சிக் கூடங்கள்

பொது மக்களுக்கு சுகாதாரமான இறைச்சியை அளிப்பதற்காக, பெருநகர சென்னை மாநகராட்சியில் 3 இறைச்சிக் கூடங்கள் நேரடி கண்காணிப்பில் செயல்பட்டு வருகின்றன. இங்கு ஆடு/மாடுகள் கால்நடை உதவி மருத்துவர்கள்மூலம் பரிசோதனை செய்த பின்னரே வெட்டப்படுகிறது. இதில் கூடுதலாக மண்டலம் 7-ல் கள்ளிக்குப்பத்தில் ஆட்டிறைச்சிக் கூடம் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. மண்டலம் 1 மற்றும் 15-ல் புதியதாக ஆட்டிறைச்சிக் கூடங்கள் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த இறைச்சிக் கூடங்களில், கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலைகள் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் வழிகாட்டுதல்களின்படி செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், ஒரு நாளைக்கு 5 மெட்ரிக் டன் திறனுடைய இரண்டு சாண எரிவாயு ஆலைகளை, பெரம்பூர் இறைச்சிக் கூடத்தில் நிறுவி, அனைத்து இறைச்சிக் கூடங்களில் ஏற்படும் மொத்த திடக்கழிவுகளை, விஞ்ஞான முறையில் அழிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

3.8 கல்வித் துறை

பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித் துறையின் வாயிலாக 119 தொடக்கப் பள்ளிகள், 92 நடுநிலைப் பள்ளிகள், 38 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 32 மேல்நிலைப் பள்ளிகள் என மொத்தம் 281 பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இதில் 200 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் மழலையர் வகுப்புகள் தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது. பெருநகர சென்னை பள்ளிகளில், 88,327 மாணவ/மாணவியர்கள் பயின்று வருகின்றனர்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் முழுமையான மற்றும் தரமான கல்வி, ஒவ்வொரு குழந்தையையும் சென்று அடைய வேண்டும் என்ற உயரிய கொள்கையோடு செயல்பட்டு வரும் சென்னை பள்ளிகள், தனியார் பள்ளிகளுக்கு இணையாக போட்டிபோடும் அளவிற்கு உயர்ந்துள்ளன. பெருநகர சென்னை மாநகராட்சி, பள்ளி மாணவர்களுக்கு, மருத்துவம், பொறியியல், கலை, சட்டம் போன்ற மேல்படிப்புகளை படிப்பதற்கு அவர்கள்

2016 ஆகஸ்ட் 5]

படித்து முடிக்கும் காலம் வரை ஊக்கத் தொகை வழங்குகின்றது. 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு, விலையில்லா சீருடை தையல் கூலியுடன் வழங்கப்படுகிறது.

10 மற்றும் 12 ஆம் வகுப்பு, மாணவ மாணவியர்கள் மாலை சிறப்பு வகுப்பில் சோர்வின்றி படிக்க, புரதச்சத்துமிக்க, சுவையான 100 கிராம் "சுண்டல்" தினமும் வழங்கப்படுகிறது. மாணவர்களுக்கு ஓவியம், இசை மற்றும் நடனம் ஆகியவற்றிற்கு சிறப்புப் பயிற்சிகள் அளிக்க கலை ஆய்வகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வள வகுப்பறை (Smart Class) மூலம் மாணவ, மாணவியர்களுக்கு, தனியார் பள்ளிகளுக்கு இணையாக கணிப்பொறியை தாமே இயக்கி தகவல் தெரிந்து கொள்ளும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

மேல்நிலைப் பள்ளிகளில், கண்காணிப்பு கேமராக்கள் மாணவிகளின் பாதுகாப்பிற்காக பொருத்தப்பட்டுள்ளன. மாணவ மாணவிகளின் பொது அறிவை வளர்க்கும் வகையில் அனைத்து வகுப்புகளுக்கும் தமிழ் மற்றும் ஆங்கில நாளேடுகள் வழங்கப்பட்டு படிக்கச் செய்யப்படுகிறது. சென்னை மழலையர் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் மற்ற பள்ளிகளைப்போல் விலையில்லா சீருடை மற்றும் காலணிகள் வழங்கப்படுகிறது.

70 உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், கற்றல் கற்பித்தல் தொய்வின்றி சிறந்து மேலோங்க மின்னாக்கி பொருத்தப்பட்டுள்ளது. தகுந்த குடும்ப சூழ்நிலை மற்றும் சமுதாய சூழ்நிலை இல்லாத மாணவ/மாணவியர்களின் நலனுக்காக சென்னை மேல்நிலைப் பள்ளி, சுப்பராயன் தெரு, சேத்துபட்டு மற்றும் சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளி, சைதாப்பேட்டை ஆகிய இரண்டு பள்ளிகளில் அம்மா உண்டு உறைவிடப் பள்ளி துவங்கப்பட்டு, அங்கு பயின்ற மாணவர்கள் 100 சதவிகிதம் தேர்ச்சி விழுக்காட்டை பெற்றுள்ளனர்.

3.9 சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம் (CMCDM)

வளர்ந்து வரும் சென்னை மாநகரின் உள்கட்டமைப்பை, உலகத் தரத்திற்கு இணையாக மேம்படுத்த, மாண்புமிகு தமிழக முதல்வரால் அறிவிக்கப்பட்ட சிறப்பான திட்டம் சென்னை

[2016 ஆகஸ்ட் 5

பெருநகர வளர்ச்சித் திட்டமாகும். இந்த சிறப்பு திட்டத்தின்கீழ் கடந்த 5 ஆண்டுகளில் தமிழக அரசினால் ₹1,488 கோடி நிதி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அனுமதிக்கப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் சுமார் 1,146.67 கி.மீ. நீளமுடைய சாலைகளும், 170.69 கி.மீ. நீளமுடைய மழைநீர் வடிகால்வாய்களும், 238.83 கி.மீ. நீளமுடைய நடைபாதை பணிகளும், 12,952 எண்ணிக்கையிலான ஆற்றல்மிகு தெரு மின்விளக்குகள் அமைக்கும் பணிகளும், ₹1,313.15 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளது. இத்திட்டத்தின் ஒருங்கிணைந்த செயல்பாட்டினால் விரிவாக்கப்பட்ட சென்னை பகுதி மக்களின் நீண்ட நாள் கனவான, சென்னை மையப் பகுதியில் உள்ள கட்டமைப்பு வசதிகளுக்கு இணையான வசதிகள் ஏற்படுத்தப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன.

3.10 சாலை பராமரிப்பு திட்டங்கள்

பெருநகர சென்னை மாநகராட்சியால் 387 கி.மீ. நீளமுடைய 471 பேருந்து தடசாலைகளும், 5525 கி.மீ. நீளமுடைய 33,374 உட்புற சாலைகளும், பராமரிக்கப்பட்டு வருகிறது. பேருந்து சாலைப் பணிகள் யாவும் புதிய நடைமுறைகள் புகுத்தப்பட்டும், நவீன இயந்திரங்களை பயன்படுத்தியும் மேற்கொள்ளப்படுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பெருநகர சென்னை மாநகராட்சி வரலாற்றிலேயே முதன்முதலாக, சாலைப் பணியினை ஆரம்பிக்கும் முதல் முடியும் வரை, பணிகளை கண்காணிக்க, தரத்தினை உறுதி செய்ய திட்ட மேலாண்மை கலந்தாளுநர் (Project Management Consultant) நியமித்து அதன் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அமைக்கப்படும் சாலையின் உயரம் அதிகமாகாமல் இருக்க அனைத்து சாலைகளிலும் நவீன மில்லிங் இயந்திரம் கொண்டு சாலையினை அகழ்ந்தெடுத்து சாலைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. சாலைகள் சாய்தளம் (CAMBER), டி.பி.எம். மற்றும் பி.சி. ஆகிய மூன்று அடுக்குகளாக அமைக்கப்படுகிறது.

முதன்முறையாக 9 மீட்டர் (30 அடி) அகலம் கொண்ட எலக்ட்ரானிக் சென்சார் பேவர் இயந்திரம்மூலம் அமைக்கப்படுவதால் சாலைகளின் மேற்பரப்பு சீராகவும், வாகன

2016 ஆகஸ்ட் 5]

போக்குவரத்திற்கு இலகுவாகவும் அமைகிறது. அனைத்து சாலைகளும் 5 கட்ட தர பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகிறது.

அனைத்து சாலைகளிலும் சாலை பயன்படுத்துவோரின் பாதுகாப்பிற்காக தெர்மோ பிளாஸ்டிக் வண்ணக் கோடுகளும், இரவில் மிளிரும் மிளிர்வான்களும் (studs) அமைக்கப்படுகின்றன. மேலும், மரங்களைச் சுற்றிலும் மழைநீர் செல்லும் வகையில், கான்கிரீட் ஜாலிகள், மழைநீர் செல்லும் வகையில், சாலைகளின் இரு ஓரங்களிலும் நீர் தடம் (water table) அமைத்தல், வேகத்தடைகள் மற்றும் எச்சரிக்கை பலகைகள் அமைத்தல் போன்ற போக்குவரத்து மேம்பாட்டுப் பணிகளும் ஒட்டுமொத்தமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறான சிறந்த தொழில்நுட்பத்தில் 2015-16 ஆம் நிதியாண்டில் 168 கி.மீ. நீளமுள்ள 194 எண்ணிக்கையிலான பேருந்து தட சாலைகள் ₹414.59 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டது. இச்சாலைப் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2014-15-ல் ₹74.88 கோடியும், சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 2015-16-ல் 242.24 கோடி ரூபாயும், தமிழக அரசினால் நிதி வழங்கப்பட்டது. மேலும் 72.65 கி.மீ. நீளமுடைய 92 சாலைகள் ₹161.70 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை உள்கட்டமைப்பு திட்டம் 2015-16-ன்கீழ் மேம்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணிகள் 2016 ஆகஸ்டு மாத இறுதிக்குள் முடிக்கப்படும்.

மேலும், தமிழ்நாடு பேரிடர் மீட்பு நிதியின்கீழ் 40.82 கி.மீ. நீளமுடைய கடந்த பெருமழையில் பழுதடைந்த 103 பேருந்து தட சாலைகளில் ₹75.45 கோடி மதிப்பீட்டில் தற்காலிக சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இச்சாலைப் பணிகள் 2016 ஆகஸ்டு மாத இறுதிக்குள் முடிக்கப்படும்.

இவ்வாறு அமைக்கப்பட்ட சாலைகள் கடந்த 100 ஆண்டுகளில் சென்னை மாநகர் கண்டிராத 2015-ன் கனமழையிலும் சேதமடையவில்லை. மேலும், எதிர்பாராத இரு கோடைகால கனமழையிலும் எவ்வித சேதமும் ஏற்படவில்லை. நவீனங்களை புகுத்தி சிறந்த முறையில் சாலைப் பணிகள் செய்ததற்கு இதுவே சான்றாகும்.

பெருநகர சென்னை மாநகராட்சி வரலாற்றிலேயே முதல் முறையாக கடந்த ஐந்தாண்டுகளில் மொத்தம் 33,374 உட்புற

சாலைகளில் பழுதடைந்த 17,056 சாலைப் பணிகள் புனரமைப்பிற்காக எடுத்துக்கொள்ளப்பட்டு, ₹2,474.41 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

மேலும், 2015-16 ஆம் நிதியாண்டில் உட்புறச் சாலைகள், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், திட்டம்-1, திட்டம்-2, மூலதன நிதி மற்றும் தமிழ்நாடு பேரிடர்மீட்பு நிதி (தற்காலிக சீரமைப்பு) வாயிலாக மொத்தம் 8,137 சாலைப் பணிகள் ₹704.19 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, 5,377 சாலைப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள சாலைப் பணிகள் 2016 ஆகஸ்டு மாத இறுதிக்குள் முடிக்கப்படும்.

3.11 இயந்திர வாகனம் சாரா போக்குவரத்தை ஊக்குவித்தல்

இந்தியாவிலேயே முதல்முறையாக, இயந்திர வாகனம் சாரா போக்குவரத்து திட்டத்தை (Non-Motorised Transport) ஏற்று செயல்படுத்தும் முதல் மாநகராட்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சி விளங்குகிறது.

பாதசாரிகளின் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மாசுபடுதல் மற்றும் வாகன நெருக்கடி போன்றவற்றை கருத்தில்கொண்டு இயந்திர வாகனம் சாரா போக்குவரத்தினை, (Non-Motorised Transport) ஊக்குவிப்பதற்காக நடைபாதைகளை 5 அடியிலிருந்து 10 அடியாக அகலப்படுத்தும் திட்டம் பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்படுகின்றது. பாதசாரிகளின் உரிமைகளை உறுதி செய்யும்பொருட்டு, குறிப்பாக, சமூகத்தில் பாதிக்கப்படக்கூடிய பிரிவினரான முதியோர்கள், பெண்கள், குழந்தைகள், மாணவ மாணவியர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் போன்றோர்களின் வசதிக்காக 34 பேருந்து தட சாலைகளில், முதற்கட்டமாக நடைபாதை மேம்பாட்டுப் பணிகள் ₹21.88 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 12 நடைபாதை பணிகள் ₹34.75 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

முதன்முறையாக நடைபாதைகள் அமைக்கும் பணிகள் எந்த ஏற்றத்தாழ்வுமின்றி பாதசாரிகளும், மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்தும் வீல் சேர்களும் செல்வதற்கு, ஏதுவாக சாலையின் முழு நீளத்திற்கும் ஒரே உயரத்தில் அமைந்திருக்கும் வகையில்

2016 ஆகஸ்ட் 5]

15 செ.மீ. மட்டத்தில் அமைக்கப்படுகிறது. சாலைகளின் சந்திப்புகளில் இதே அளவில் இருக்கும் வகையில் டேபிள் டாப் (Table Top) முறையில் நடைபாதைகள் அமைக்கப்பட்டு, அவை வேகத்தடைகளாகவும் பயன்படுகின்றன.

அனைத்து கட்டடங்களின் முகப்பிலும் வாகனங்கள் செல்வதற்கு ஏதுவாக பெருநகர சென்னை மாநகராட்சி செலவிலேயே சாய்தளங்கள் (Ramp) அமைக்கப்படுகிறது. நடைபாதைகளில் இடையூறாக அமைந்துள்ள சேவை நிறுவனங்களின் பெட்டகங்கள், மின்மாற்றிகள் ஆகியவை நடைபாதை ஓரத்திற்கு மாற்றி அமைக்கப்பட்டும், வாகனங்கள் நிறுத்துவதை தவிர்க்கும் பொருட்டு, கிராளைட் தடுப்பான்கள், நடைபாதையின் குறுக்கே அமைக்கப்பட்டும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு அமைக்கப்படும் நடைபாதைகள் பாதசாரிகள் மிகவும் பாதுகாப்பாகச் செல்லும் வகையில் உள்ளதால் இப்பணிகளுக்கு பொதுமக்களிடம் இருந்து நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. மேலும், இப்பணிகளுக்காக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு 5 தேசிய அளவிலான விருதுகள் கிடைத்துள்ளன.

3.12 சிறப்பு திட்டங்கள்:

மெரினா கடற்கரையைச் சீரமைக்கும் திட்டம்

மெரினா கடற்கரையை அழகுபடுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக, காமராஜர் சாலை மேற்கு பகுதியில் உள்ள வெவ்வேறு கட்டடங்களின் மதில் சுவர்கள் மற்றும் நடைபாதையை ஒரே மாதிரியாக சீரமைக்கத் திட்டமிடப்பட்டது. இதில் புதைந்த நிலையில் மற்றும் சேதமடைந்த கல்தூண்களை மாற்றி, புதிய கல்தூண்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இக்கல்தூண்களுக்கிடையே கலைநயம் மிக்க துருபிடிக்காத, வார்த்தெடுக்கப்பட்ட இரும்பாலான கிரில்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதற்காக மொத்தம் ₹33.10 கோடி மதிப்பில் திட்டம் தீட்டப்பட்டு பணி நடைபெற்றுவருகிறது. இப்பணி இது நாள் வரை 90 சதவிகிதம் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் அக்டோபர் 2016 இறுதிக்குள் செய்து முடிக்கப்படும்.

3.13 2016–17 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவேண்டிய பணிகள்

[2016 ஆகஸ்ட் 5

3.13.1 தியாகராய சாலையில் பாதசாரிகள் வளாகம்

சென்னையின் மிகப் பிரபலமான வியாபார பகுதியான, பாண்டி பஜார் (தியாகராய நகர்) பகுதி பாதசாரிகள் வளாகமாக புதிய வடிவமைப்புடன் மேம்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின் மூலம் தற்போதுள்ள வாகன போக்குவரத்தினைக் கட்டுப்படுத்தி சாலை முழுவதும் தொடர்ச்சியான நடைபாதை, தனிப்பட்ட பேருந்து தடம் மற்றும் சைக்கிள் பாதை அமைக்கப்படும். இப்பகுதியில் சிற்றுந்துகளின் பயன்பாடு முறைப்படுத்தப்படும். இந்தச் சாலையைக் குறிப்பாக, மாற்றுத் திறனாளிகள் எளிதில் பயன்படுத்த இயலும் வகையில் உருவாக்கப்படும். இத்திட்டத்தின் ஒரு பகுதியாக சாலை தளவாடங்கள், போக்குவரத்து குறியீட்டு பலகைகள் மற்றும் பலஅடுக்கு வாகன நிறுத்தம் ஆகியவை அமைக்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சி (TNSUDP) திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட உள்ளது.

3.13.2 சீர்மிகு நகரம் (Smart City)

மத்திய நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகத்தால், சீர்மிகு நகரமாக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 20 நகரங்களில் ஒன்றாக சென்னை தேர்வாகியுள்ளது. சீர்மிகு நகரத்தை உருவாக்க "சென்னை ஸ்மார்ட் சிட்டி லிமிடெட்" என்ற பெயரில் தமிழக அரசு மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் பங்குகள் 50 : 50 என்ற விகிதத்தில் இந்நிறுவனம் நிறுவப்பட்டுள்ளது.

சீர்மிகு நகர திட்டத்தின் தொலைநோக்குப் பார்வையின்படி, பெருநகர சென்னை மாநகரத்தை தன்னிறைவுடன், நிலையான சுற்றுச்சூழல் மற்றும் சீரிய பொருளாதாரத்தை கொண்ட உலக தரத்துடன் ஆன வணிக நகரமாக மாற்றப்படும். பல்வேறு போக்குவரத்து வழிகளான, இரயில் போக்குவரத்து, மாநகர பேருந்துகள் போன்றவற்றை இணைத்து பாதுகாப்பான நடைபாதை மற்றும் சைக்கிள் தடத்தை மேம்படுத்த உள்கட்டமைப்புகள், தனிநபர் பயன்பாட்டிற்கு உகந்த, நகர்ப்புற போக்குவரத்து இயக்க மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. சிறந்த தெரு விளக்கு, மேம்படுத்தப்பட்ட திடக்கழிவு மற்றும் மழைநீர் மேலாண்மை அத்துடன் தொடர்ச்சியான நீர் வழங்கல் ஆகியவை முன்மொழியப்பட்ட மற்ற திட்டங்கள் ஆகும்.

மக்களின் கருத்துகள் அடிப்படையில் தியாகராய நகர் "பகுதி சார்ந்த வளர்ச்சி" திட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. பகுதி

சார்ந்த வளர்ச்சி திட்டத்தின்கீழ் ₹877.92 கோடி மதிப்பீட்டில் 40 கூறுகள் அடங்கிய பணிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. மேலும், நகரம் முழுவதும் செயல்படுத்துவதற்கான திட்டத்தின்கீழ் ₹488.31 கோடி மதிப்பீட்டில் 8 கூறுகள் அடங்கிய பணிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

3.13.3 அட்டல் புனரமைப்பு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான திட்டம் (AMRUT)

அட்டல் புனரமைப்பு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான திட்டம் (AMRUT) 2015-2016 திட்டத்தின்கீழ், பெருநகர சென்னை மாநகராட்சியில் எட்டு பூங்காக்கள் ₹11.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

3.14 பாலங்கள்

தங்குதடையற்ற போக்குவரத்தினை உறுதி செய்யும் வகையில் சென்னை மாநகராட்சியால், ஆறுகள் மற்றும் கால்வாயின் குறுக்கே உள்ள பாலங்கள், தரைமட்டப் பாலங்கள் மற்றும் நடை பாலங்கள், பேருந்து சாலை சந்திப்புகளில் உள்ள மேம்பாலங்கள் மற்றும் இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே உள்ள மேம்பாலங்கள் என மொத்தம் 272 பாலங்களும், இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே 16 சுரங்கப் பாதைகள் மற்றும் முக்கிய பேருந்து சாலைகளில் 6 பாதசாரிகள் சுரங்கப் பாதைகளும் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. கடந்த 5 ஆண்டுகளில் ₹114.95 கோடி மதிப்பீட்டில் 5 மேம்பாலங்கள், 10 சிறு பாலங்கள் மற்றும் 3 சுரங்கப் பாதைகள் புதிதாக பல்வேறு இடங்களில் கட்டப்பட்டும் மற்றும் பல்வேறு இடங்களில் ஏற்கெனவே உள்ள மேம்பாலங்களை மேம்படுத்தும் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. இதில் ₹16.66 கோடி மதிப்பீட்டில், கத்திவாக்கம் நெடுஞ்சாலை-காக்ரேன் பேசின் சாலையில் மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 28-2-2016 அன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டது. இப்பாலத்தினால் கொருக்குப்பேட்டை பகுதியில் உள்ள சுமார் 5 இலட்சம் பொதுமக்கள் பயனடைந்து வருகின்றனர். மேலும், தற்போது 21 பாலப் பணிகள் ₹21.20 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் டிசம்பர் 2016-க்குள் முடிக்கப்படும். டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதியில், எண்ணூர் நெடுஞ்சாலை இரயில்வே சந்திக்கடவு 2எ

[2016 ஆகஸ்ட் 5

மற்றும் மணலி சாலை இரயில்வே சந்திக்கடவு 2பி-யை ஒருங்கிணைத்து வடிவமைப்பு, பொறியியல் கொள்முதல் மற்றும் கட்டுமானம் ஒப்பந்தம் முறையில் மேம்பாலம் அமைக்கும் பணிக்கான ஒப்பம் கோரப்பட்டுள்ளது.

3.15 தெரு விளக்கு

பெருநகர சென்னை மாநகராட்சி 2,57,689 தெரு விளக்குகளைப் பராமரித்து வருகிறது. குறைந்த மின்சாரம் உபயோகிக்கும் தெரு விளக்குகளைப் பயன்படுத்தி, மகளிர், வயதானவர்கள் மற்றும் சாலை பயன்படுத்துவோர்களின் பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டு, தெருக்களில் சீரான வெளிச்சம் அமைப்பது சென்னை மாநகராட்சியின் நோக்கமாகும். புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில், விரிவாக்கத்திற்கு முன் இருந்த சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ளது போன்று தெரு விளக்குகள் அமைக்கப்படுகின்றன. புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளின் சோடியம் ஆவி விளக்குகளை விட 45% குறைவாக மின்சாரம் உபயோகிக்கும் எல்.இ.டி. தெரு விளக்குகள், 1,10,000 எண்ணிக்கையில் அமைக்கும் பணி ₹322 கோடி செலவில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இதுவரையில் 79,998 புதிய எல்.இ.டி. தெரு மின்விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தியாவின் எந்த ஒரு மாநகராட்சியிலும் இந்த எண்ணிக்கையில் எல்.இ.டி. தெரு விளக்கு அமைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் மீதமுள்ள, 30,012 எல்.இ.டி. தெரு விளக்குகள் ₹145.64 கோடி செலவில் ஆகஸ்டு மாதம் 2016-க்குள் அமைக்கப்பட உள்ளன. பெருநகர சென்னை மாநகராட்சி ஒவ்வொரு மாதமும் தெருவிளக்கு மின்கட்டணமாக ₹6.00 கோடி தமிழ்நாடு மின்வாரியத்திற்கு செலுத்தி வந்தது. புதியதாக எல்.இ.டி. விளக்குகளாக மாற்றி அமைத்ததால் மின்கட்டணம் மாதத்திற்கு ₹4.50 கோடியாக குறைந்துள்ளது. இதனால் மாதந்தோறும் மின்கட்டணம் செலுத்துவதில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ₹1.50 கோடி சேமிப்பாகிறது.

3.16 மழை நீர் வடிகால்

பெருநகர சென்னை மாநகரில் மழைக் காலங்களில் ஏற்படும் வெள்ளப் பெருக்கை தடுக்க, பெருநகர சென்னை மாநகராட்சி 7,351 எண்ணிக்கையிலான 1,894 கி.மீ. நீளத்திற்கு ஒருங்கிணைந்த மழை நீர் வடிகால் கட்டமைப்பைப் பராமரித்து வருகிறது. மேலும்,

2016 ஆகஸ்ட் 5]

48.80 கி.மீ. நீளத்திற்கு 30 நீர்வழிக் கால்வாய்களைப் பராமரித்து வருகிறது. இதில் கொடுங்கையூர் கால்வாய் (5.28 கி.மீ.), கேப்டன் காட்டன் கால்வாய் (3.04 கி.மீ.), பாடி குப்பம் கால்வாய் (2.78 கி.மீ.) போன்ற கால்வாய்களும் அடங்கும்.

கடந்த 5 ஆண்டுகளில், ₹569.12 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 345 கி.மீ. நீளமுடைய கூடுதல் மழைநீர் வடிகால் கட்டமைப்பின் விளைவாக, மழைக் காலங்களில் மழைநீர் தேங்கும் இடங்கள் 300 என்ற எண்ணிக்கையில் இருந்தது தற்போது நூறுக்கும் குறைவு என்ற நிலையை எட்டியுள்ளது.

விரிவாக்கத்திற்கு முன்பு இருந்த சென்னை மாநகரின் கட்டமைப்பு வசதிகளுக்கு இணையான வசதிகளை விரிவாக்கப்பட்ட பகுதிகளிலும் ஏற்படுத்த வேண்டும் என்ற பெருநகர சென்னை மாநகராட்சியின் கொள்கைப்படி, மழைக் காலங்களில் மழை நீர் தேங்காத வண்ணம் மழைநீரை பாதுகாப்பாகச் சேகரித்து, ஏற்கெனவே உள்ள குளம், ஏரிகளில் மழைநீர் சென்றடைய இணைப்புகள் ஏற்படுத்துதல், நிலத்தடி நீரைப் பாதுகாக்க மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்துதல் மற்றும் ஆரோக்கிய வாழ்விற்கான சுத்தமான சூழ்நிலைகள் ஏற்படுத்துதல் போன்றவற்றிற்காக, பெருநகர சென்னை மாநகராட்சி விரிவாக்கப் பகுதிகளில் கொசஸ்தலையாறு, கூவம், அடையாறு மற்றும் கோவளம் வடிநிலப் பகுதிகளில் 1,069.40 கி.மீ. நீளத்திற்கு ஒருங்கிணைந்த மழை நீர் வடிகால் கட்டமைப்பை ஏற்படுத்த ₹4,034.30 கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இதில் முதல் கட்டமாக பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-7, 11 மற்றும் 12-க்குட்பட்ட கூவம் மற்றும் அடையாறு வடிநிலப் பகுதிகளில் 280 கி.மீ. நீளத்திற்கு ₹1,101.43 கோடி திட்ட செலவினத்தில், தமிழ்நாடு நீடித்த நிலையான நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின்கீழ் உலக வங்கியின் நிதியுதவியுடன் செயலாக்கத்தில் உள்ளது.

3.17 திடக்கழிவு மேலாண்மை

சென்னை மாநகரத்தில் நாள் ஒன்றுக்கு 5,400 மெட்ரிக் டன் குப்பை உற்பத்தியாகிறது. இத்திடக்கழிவுகளை முதற்கட்டமாக வீடுதோறும் சென்று 5,422 மாநகராட்சியின் மூன்று சக்கர மிதிவண்டிகள்மூலம் சேகரிக்கிறது. இரண்டாம் கட்டமாக 369

[2016 ஆகஸ்ட் 5

நவீன குப்பை நெருக்கும் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட கனரக / இலகுரக வாகனங்கள், 36 அதிக சுமை ஏற்றும் கனரக வாகனங்கள், 157 டிப்பர் வாகனங்கள் மற்றும் 12 இயந்திரப் பெருக்கிகள், 57 சக்கரத்தடை வாகனங்கள் மற்றும் 24 முன்பின்பளு தூக்கிகள் ஆகியவற்றை கொண்டு அகற்றி வருகிறது.

இப்பணிக்காக 2011-12 முதல் 2015-16 ஆண்டு வரை சென்னை பெருநகர வளர்ச்சி திட்டத்தின் கீழும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் மூலமும், நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதில் ₹62.25 கோடி செலவினத்தில் நவீன குப்பை நெருக்கும் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட கனரக / இலகுரக வாகனங்கள், டிப்பர் வாகனங்கள், இயந்திரப் பெருக்கிகள், சக்கரத்தடை வாகனங்கள், முன்பின் பளுதூக்கிகள், ஹைட்ராலிக் எக்ஸ்வேட்டர்கள் மற்றும் புல்டோசர்கள் என மொத்தம் 295 வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. மேலும் ₹13.26 கோடி செலவினத்தில் 7,600 எண்ணிக்கையில் காம்பேக்டர் குப்பைதொட்டிகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, நேரடியாகவும் தனியார் நிறுவனங்கள் மூலமாகவும் 18,975 துப்புரவுப் பணியாளர்களைப் பணியில் ஈடுபடுத்தி வருகிறது. துப்புரவுப் பணியாளர்களின் வருகையினை கை விரல் ரேகை பதிக்கும் இயந்திரம்மூலம் (Bio metric attendance) வருகைப் பதிவு அனைத்து மண்டலங்களிலும் அமல்படுத்தப்பட்டு, கண்காணிக்கப்படுகிறது. திடக்கழிவு மேலாண்மைப் பணிகளைத் திறம்பட செயல்படுத்த ஏதுவாக, குப்பை நெருக்கும் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட கனரக / இலகுரக வாகனங்கள் மற்றும் மூன்று சக்கர வாகனங்கள் செல்லும் விரிவான வழித்தட வரைபடம் தயாரிக்கப்பட்டு களப் பணி கண்காணிக்கப்படுகிறது.

மேலும், துப்புரவுப் பணியாளர்களுக்குப் பாதுகாப்பான பணிச் சூழலை உறுதி செய்யும் பொருட்டு, அவர்களுக்கு, வாய்க்கவசம், கையுறை, மற்றும் இரவில் ஒளிரும் ஆடை ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சியில், விரிவாக்கம் செய்யப்பட்டபோது உருவாக்கப்பட்ட 8 மண்டலங்களில் துப்புரவுப் பணிகளை தனியார் மயமாக்குதலுக்கும் மற்றும்

2016 ஆகஸ்ட் 5]

ஒருங்கிணைந்த குப்பை பதனிடுதல், கட்டட கழிவுகளை பதனிடுதல் மற்றும் விஞ்ஞான ரீதியில் குப்பை வளாகம் சீரமைத்தல் போன்ற பணிகளை ஏற்கெனவே உள்ள குப்பை கொட்டும் வளாகங்களான கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி ஆகிய இடங்களில் நிறுவுவதற்கும் விரிவான சாத்தியக்கூறு அறிக்கை (Detailed Feasibility Report) *தயாரிக்க ஆலோசகர் நியமிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக தொடக்க அறிக்கை பெறப்பட்டுள்ளது. முழுமையான சாத்தியக்கூறு அறிக்கை பெறப்பட்டவுடன் ஒப்பந்தப்புள்ளி கோர உத்தேசிக்கப்பட்டுள்ளது.*

பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 மண்டலங்களில் தற்போது 9 மண்டலங்களில் லாரி வாகன இயக்கூர்தி நிலையங்கள் இயங்கி வருகின்றன. மேலும், வாகன இயக்கூர்தி நிலையங்கள் மணலி மற்றும் சோழிங்கநல்லூரில் ₹7.59 கோடி மதிப்பீட்டில் பணி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் மதனாங்குப்பத்தில் 2 வாகன இயக்கூர்தி நிலையங்கள் மண்டலம் 3 மற்றும் 7-க்காக கட்டும் பணியும் மற்றும் திருவொற்றியூரில் மண்டலம்-1-க்கான வாகன இயக்கூர்தி நிலையம் கட்டும் பணியும் ₹15.89 கோடி செலவில் நடைபெற்று வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 200 வார்டுகளையும், திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற பகுதியாக மாற்ற சென்னை மாநகராட்சி உறுதிபூண்டுள்ளது. அதன் பொருட்டு, 2016-17 ஆம் ஆண்டில் 30 வார்டுகளை திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற பகுதியாக மாற்றவும், 2017-18 ஆம் ஆண்டில் 70 வார்டுகளை திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற பகுதியாக மாற்றவும், மேலும், மீதமுள்ள 100 வார்டுகளை 2018-19 ஆம் ஆண்டில் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற பகுதியாக மாற்றவும், பெருநகர சென்னை மாநகராட்சியால் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கண்ட இலக்கை அடைய, 2011 ஆம் ஆண்டின் குடிசைப் பகுதி மக்கள்தொகை மற்றும் நகரும் மக்கள் தொகையை கருத்திற்கொண்டு 18,900 கழிவறைகள் அமைக்க முடிவு செய்து, அதில் 2,900 கழிவறைகளை 2016-17 ஆம் நிதி ஆண்டில் அமைக்கவும், 6,600 கழிவறைகளை 2017-18 ஆம் நிதி ஆண்டில் அமைக்கவும், மற்றும் 9,400 கழிவறைகளை 2018-19 ஆம் நிதி ஆண்டில் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

[2016 ஆகஸ்ட் 5

4. பேரூராட்சிகள் இயக்ககம்

நகர்ப்புற உள்ளாட்சிகள் அமைப்பில் மூன்றாம் அடுக்காக, பேரூராட்சிகள் நிருவாகம் அமையப் பெற்றுள்ளது. பேரூராட்சிகள் நிருவாகம், வேகமாக அதிகரித்து வரும் நகர்ப்புற மக்கள் தொகை பெருக்கத்தினை கருத்திற்கொண்டு, மேம்பட்ட சேவை வழங்குதல், கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல் மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மூலமாக, மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திட முனைப்புடன் செயல்படுகிறது.

4.1 நிருவாக அமைப்பு

தமிழ்நாட்டில் 528 பேரூராட்சிகள் உள்ளன. அவை, 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்கீழ் நிருவகிக்கப்படுகின்றன.

அரசாணை (நிலை) எண் 142, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.2) துறை, நாள் 21-11-2014-ன்படி ஆண்டு வருமான உச்சவரம்பின்படி, பேரூராட்சிகள் நான்கு வகைப்பாடுகளாக கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:

வ. எண்	பேரூராட்சிகளின் நிலை	ஆண்டு வருவாய் (₹ இலட்சத்தில்)	பேரூராட்சிகளின் எண்ணிக்கை
1.	சிறப்பு நிலை	200.00 இலட்சத்திற்கு மேல்	64
2.	தேர்வு நிலை	100.00 இலட்சத்திற்கு மேல் 200.00 இலட்சம் வரை	202
3.	முதல் நிலை	50.00 இலட்சத்திற்கு மேல் 100.00 இலட்சம் வரை	200
4.	இரண்டாம் நிலை	50.00 இலட்சத்திற்குள்	62
		மொத்தம்	528

பேரூராட்சிகளின் இயக்குநர் துறையின் தலைவராவார். மண்டல அளவில் 17 மண்டல உதவி இயக்குநர்களால்

2016 ஆகஸ்ட் 5]

நிருவகிக்கப்பட்டு, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கண்காணிப்பின்கீழ் பேரூராட்சிகள் செயல்படுகின்றன. பல பேரூராட்சிகள் சுற்றுலா, வழிபாடு மற்றும் புராதன முக்கியத்துவம் வாய்ந்தவையாகவுள்ளன.

4.2 செயல்பாடுகளும், முக்கிய சேவைகளும்

பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகள் வழங்குவதில் பேரூராட்சிகள் முக்கிய பங்கு ஆற்றுகின்றன. பேரூராட்சிகள், குடிநீர் வழங்குதல், தெரு விளக்குகள் பராமரித்தல், பொது சுகாதாரம் பேணுதல், திடக்கழிவு மேலாண்மை, சாலைகள் சீரமைத்தல், மழைநீர் வடிகால் மற்றும் நடைபாதைகள் அமைத்தல், இடுகாடுகள் மற்றும் இறைச்சிக் கூடங்கள் பராமரித்தல் போன்ற பல்வேறு சேவைகளை பொதுமக்களுக்கு வழங்குகின்றன. இவை தவிர, பேருந்து நிலையங்கள், சமுதாயக் கூடங்கள் மற்றும் சந்தைகள் போன்ற கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிப் பராமரிக்கும் பணிகளையும் பேரூராட்சிகள் மேற்கொள்கின்றன. பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ் வழங்குதல், வணிக உரிமம் வழங்குதல், வரி மற்றும் கட்டணங்கள் விதித்தல் மற்றும் வசூலித்தல், கட்டட அனுமதி அளித்தல் போன்றவை பேரூராட்சிகளின் பிற முக்கிய சட்டப்பூர்வமான செயல்பாடுகளாகும்.

4.3 உட்கட்டமைப்பு மேம்பாடு

பெருகிவரும் நகரமயமாதல் மற்றும் வேலைவாய்ப்பு, கல்வி, மருத்துவம் மற்றும் தரமான வாழ்க்கை ஆகியவற்றுக்காக அருகிலுள்ள கிராமப்புறங்களிலிருந்து மக்கள் நகர்ப்புறங்களுக்கு இடம் பெயர்வதால் அதிகரித்து வரும் நகர்ப்புற மக்கள் தொகை பெருக்கத்தின் காரணமாக பேரூராட்சிகளில், குடிநீர் வழங்கல், திடக்கழிவு மேலாண்மை, பாதாள சாக்கடைத் திட்டங்கள், சாலைகள், தெருவிளக்குகள், எரிவாயு தகன மேடைகள், இறைச்சிக் கூடங்கள், பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்கள் போன்ற முக்கிய உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி அவற்றினை மேம்படுத்திட வேண்டிய மிகப் பெரிய தேவை பேரூராட்சிகளுக்கு ஏற்பட்டுள்ளது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த நிதி ஆதாரத்தினை உயர்த்துவதோடு, இவை தவிர மாநில அரசினால் வழங்கப்படும் மாநில நிதி ஆணையத்தின் நிதிப் பகிர்வின்கீழ் வரும் நிதி ஆதாரத்தினை கொண்டு, ஒருங்கிணைந்த

நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், நபார்டு கடன் உதவி மற்றும் குறைந்தபட்ச தேவைத் திட்டம் போன்ற முன்னோடித் திட்டங்களின்மூலமும் அடிப்படை கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4.4 ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (IUDM)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் உட்கட்டமைப்புத் தேவைகளை நிறைவு செய்வதற்காக, முன்னோடித் திட்டமான ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தை 2011 ஆம் ஆண்டு துவக்கியுள்ளார்கள்.

பேரூராட்சிகளுக்குத் தேவையான அனைத்து வகையான உட்கட்டமைப்பு பணிகளும் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2011-12 ஆம் ஆண்டு முதல் 2015-16 ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தின்கீழ், பாதாள சாக்கடைத் திட்டங்கள், குடிநீர் மேம்பாடு, சாலை மேம்பாடு மற்றும் மழைநீர் வடிகால்கள் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கு ₹1099.54 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

ஆண்டு	பணிகளின் எண்ணிக்கை		ஒதுக்கீடு (₹ கோடியில்)
	எடுக்கப்பட்டவை	முடிக்கப்பட்டவை	
2011–12	5275	5275	250.00
2012–13	569	552	248.04
2013–14	1043	900	284.96
2014–15	235	209	116.66
2015–16	27	0	199.88
மொத்தம்	7149	6936	1099.54

4.5 குடிநீர் வழங்கல்

அரசு அனைத்து பேரூராட்சிகளிலும் உள்ள மக்களுக்கு குறைந்தபட்ச அளவான நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க உறுதி பூண்டுள்ளது. பேரூராட்சிகள் தனி குடிநீர் திட்டங்களை பராமரித்து வருகின்றன. கூட்டுக் குடிநீர் திட்டங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால்

2016 ஆகஸ்ட் 5]

வாரியத்தால் பராமரிக்கப்படுகின்றன. மொத்தமுள்ள 528 பேரூராட்சிகளிலும், நாளொன்றிற்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டருக்கு குறையாமல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. பேரூராட்சிகளில் கடந்தாண்டுகளில் கூடுதலாக வழங்கப்பட்ட குடிநீரின் அளவு:

வ. எண்	வருடம்	பேரூராட்சி களின் எண்ணிக்கை	குடிநீர் தேவை (மில்லியன் லிட்டரில்)	குடிநீர் விநியோ கம் (மில்லியன் லிட்டரில்)	கூடுதலாக வழங்கப்பட்ட குடிநீரின் அளவு (மில்லியன் லிட்டரில்)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1.	2011-12	529	564	568.97	4.97
2.	2012-13	529	572	589.20	17.20
3.	2013-14	528	577	610.70	33.70
4.	2014-15	528	585	689.25	104.25
5.	2015-16	528	593	776.23	183.23

2011-12 முதல் நாளது வரை நிறைவேற்றப்பட்ட ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி, இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பு நிதி, பகுதி-2 திட்டம், வறட்சி நிவாரணம் மற்றும் பொது நிதி உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின்கீழ், பேரூராட்சிகள்மூலம் 5296 பணிகளும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் 22 பணிகளும் ஆகமொத்தம் 5318 பணிகள் செய்து முடிக்கப்பட்டன. இப்பணிகள் செய்து முடிக்கப்பட்டதன் பயனாக நாளொன்றுக்கு 92.23 மில்லியன் லிட்டர் குடிநீர் கூடுதலாக சுத்திகரிக்கப்பட்டு, மொத்தம் 776.23 மில்லியன் லிட்டர் குடிநீர் 528 பேரூராட்சிகளில் தினசரி தடையின்றி விநியோகம் செய்யப்படுகிறது.

4.6 சுகாதாரம்

528 பேரூராட்சிகளில் இரண்டு வழிமுறைகளில் சுகாதாரப் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒன்று பாதாளச் சாக்கடைத் திட்ட முறை, மற்றொன்று கசடு கழிவு மேலாண்மை திட்டம்.

4.6.1 பாதாள சாக்கடைத் திட்டம்

மக்களுக்குப் பாதுகாப்பான சுகாதார வசதிகளை வழங்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் பேரூராட்சிகளில், சுகாதாரத்தையும், சுற்றுச்சூழலையும் பாதுகாக்க பாதாள சாக்கடைத் திட்டம் இன்றியமையாததாக உள்ளது. எனவே, பேரூராட்சிகளில் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் போன்ற திட்டங்களின்மூலம் பெறப்படும் நிதி ஆதாரங்களைக் கொண்டு பாதாள சாக்கடைத் திட்டம் படிப்படியாக நிறைவேற்றப்படவுள்ளது. மாமல்லபுரம், திருச்செந்தூர், திருமழிசை, ஒரத்தநாடு, பழனிச்செட்டிபட்டி, உளுந்தூர்பேட்டை மற்றும் திருப்பெரும்புதூர் ஆகிய 7 பேரூராட்சிகளில் ₹219.86 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதில், மாமல்லபுரம், ஒரத்தநாடு மற்றும் திருச்செந்தூர் ஆகிய 3 பேரூராட்சிகளில் பணிமுடிக்கப்பட்டுள்ளது. திருமழிசை, திருப்பெரும்புதூர், உளுந்தூர்பேட்டை மற்றும் பழனிச்செட்டிபட்டி ஆகிய 4 பேரூராட்சிகளில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

வேளாங்கண்ணி பேரூராட்சியில், தமிழ்நாடு அரசு மற்றும் அம்ரூட் திட்டத்தின் (AMRUT) கீழ் ₹33.51 கோடி பாதாள சாக்கடைப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திருப்போரூர், பொன்னேரி, பெரியநாயக்கன்பாளையம், பெருந்துறை, மண்ணச்சநல்லூர், ஆயக்குடி, வல்லம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய 8 பேரூராட்சிகளில், ₹375.48 கோடி மதிப்பீட்டில் மரபு சார்ந்த பாதாள சாக்கடைத் திட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் செயல்படுத்தப்படவுள்ளது.

4.6.2 கசடு கழிவு மேலாண்மை

நச்சுத் தொட்டியில் பகுதி சுத்திகரிக்கப்பட்டு மீதம் தேங்கும் கழிவுகளே பொதுவாக கசடு கழிவு என்றழைக்கப்படுகிறது. இதில், திரவ, திட, மேலும் கொழுப்பு, எண்ணெய் மற்றும் கிரீஸ் ஆகியன மிகையாக காணப்படும்.

கசடு கழிவு உற்பத்தியின் அடிப்படையில், முழு செயல்முறை வடிவமைப்பு, சேகரிப்பு, பாதுகாப்பான சுத்திகரிப்பு மற்றும்

2016 ஆகஸ்ட் 5]

வெளியேற்றுதல் ஆகியன கசடு கழிவு மேலாண்மையில் அடங்கும். வேகமாக நகரமயமாகும் பொருளாதார சூழலில், குறிப்பிட்ட காலங்களில் நச்சுத் தொட்டியினை சுத்தம் செய்தல், மேலும் கசடுகளை வாகனத்தின்மூலம் இடமாற்றுதல், சுத்திகரிப்பு, மறு பயன்பாடு மற்றும் வெளியேற்றம் செய்வதற்கு கசடு கழிவு மேலாண்மை இன்றியமையாததாகும்.

மக்கள்தொகை குறைவாகவுள்ள 18 பேரூராட்சிகளில், கசடு கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அப்பேரூராட்சிகளாவன: ஆழ்வார்திருநகரி, செங்கம், ஆலங்காயம், பென்னாகரம், காவேரிப்பட்டணம், ஜலகண்டாபுரம், ஆலம்பாளையம், குன்னத்தூர், நீடாமங்கலம், குரும்பலூர், பரவை, முதுகுளத்தூர், சேத்தூர், சாம்பவார்வடகரை, பெண்ணாடம், தமிழ்நாடு காகித ஆலை புகளூர், கருங்குழி மற்றும் மாமல்லபுரம் (விரிவாக்கம்).

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் சோதனை அடிப்படையில் கருங்குழி பேரூராட்சியில் ₹4.93 கோடி மதிப்பீட்டில் கசடு கழிவு மேலாண்மைத் திட்டம் எடுத்துக் கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணி ஆணை வழங்கப்பட்டு, நவீன தொழில்நுட்பத்தில் பணி முன்னேற்றத்தில் உள்ளது. இந்த முன்னோடி திட்டத்தின் முடிவுகளின் அடிப்படையில், ஏனைய பேரூராட்சிகளுக்கு படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

4.6.3 திறந்தவெளியில் மனிதக் கழிவு கழிப்பதை ஒழித்தல்

திறந்த வெளியில் மனிதக் கழிவு கழித்தல், சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்துவதுடன் மக்களின் கண்ணியத்தையும் பாதிக்கிறது. தமிழ்நாட்டை திறந்த வெளியில் மனிதக் கழிவு கழித்தல் இல்லாத மாநிலமாக மாற்றுவதற்கு அரசு உறுதி பூண்டுள்ளது. இந்நோக்கத்தை நிறைவேற்ற பேரூராட்சிகளில், புதிய பொது சுகாதார வளாகங்கள் கட்டுதல், பழுதடைந்த பழைய சுகாதார வளாகங்களை சீரமைத்தல் மற்றும் தகவல், கல்வி, தொடர்பு மூலமாக, மிகப் பெரிய அளவில் விழிப்புணர்வு செய்யப்பட்டு வருகிறது. திறந்தவெளியில் மனிதக் கழிவு கழிக்கும் இடங்களை கண்டறிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், அவ்வாறான இடங்கள் 1095 உள்ளதென கண்டறியப்பட்டது.

[2016 ஆகஸ்ட் 5

இவ்விடங்களில் பல்வேறு திட்டங்களின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் விவரம் பின்வருமாறு:

வ. எண்	ஆண்டு	திட்டம்	புதிய கழிப்பிடங்கள் கட்டுதல்	கழிப்பிடங்களை புனரமைப்பு செய்தல்	திட்ட மதிப்பீடு (₹ கோடியில்)
1.	2011–12	திறந்த வெளியில் மனிதக் கழிவு கழிப்பதை ஒழிக்கும் திட்டம்	52	75	5.53
2.	2011–12	ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்	80		6.04
3.	2012–13	திறந்த வெளியில் மனிதக் கழிவு கழிப்பதை ஒழிக்கும் திட்டம்	160	221	22.60
4.	2012–13	நபார்டு திட்டம்	376		45.20
5.	2013–14	திறந்த வெளியில் மனிதக் கழிவு கழிப்பதை ஒழிக்கும் திட்டம்	174		22.60
6.	2013–14	அரசு நிதி	77		10.00
7.	2013–14	பொது நிதி	---	401	8.01
8.	2014–15	திறந்த வெளியில் மனிதக் கழிவு கழிப்பதை ஒழிக்கும் திட்டம்	183	–	22.60
9.	2015–16	சுவச் பாரத் திட்டத்தில் சமுதாயக் கழிப்பிடம் கட்டுதல்	432	–	17.02
		மொத்தம்	1534	697	159.60

1202 புதிய சுகாதார வளாகம் கட்டும் பணிகளும், 697 சுகாதார வளாகங்கள் புனரமைப்பு செய்யும் பணிகளும் முடிக்கப்பட்டு

2016 ஆகஸ்ட் 5]

பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. மீதம் 332 சமுதாயக் கழிப்பிடம் கட்டுதல் பணி முன்னேற்றத்தில் உள்ளது. இதன் பலனாக திறந்த வெளியில் மனிதக் கழிவு கழித்தல் பழக்கத்திலுள்ள 1095 இடங்களில், 910 இடங்களில் முற்றிலும் ஒழிக்கப்பட்டுள்ளது.

பேரூராட்சிகளில், தமிழ்நாடு அரசு மானியம் மற்றும் சுவச் பாரத் திட்டத்துடன் சேர்த்து 3,60,577 வீடுகள் தோறும் புதிய தனிநபர் கழிப்பிடம் கட்டுதல், 7,794 சுகாதாரமற்ற கழிப்பிடத்தினை மாற்றி சுகாதாரமான கழிப்பிடம் கட்டுதல் மற்றும் 28,868 இருக்கைகள் கொண்ட சமுதாய கழிப்பிடங்கள் கட்டுதல் ஆகியவை பேரூராட்சிகளுக்கான திட்ட இலக்குகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன. 2015-16 ஆம் ஆண்டு 54,100 வீடுகளில் புதிய தனிநபர் கழிப்பிடம் கட்டுதல், 7,794 சுகாதாரமற்ற கழிப்பிடத்தினை மாற்றி சுகாதாரமான கழிப்பிடம் கட்டுதல் மற்றும் 2,619 இருக்கைகள் கொண்ட சமுதாய கழிப்பிடங்கள் கட்டுதல் ஆகியவை இலக்குகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இப்பணிகளில், 30,173 தனிநபர் கழிப்பிடங்கள் 4,857 துப்புரவற்ற கழிப்பிடங்கள் சுகாதாரமான கழிப்பிடங்களாக மாற்றுதல் மற்றும் 552 இருக்கைகள் கொண்ட சமுதாயக் கழிப்பிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

4.7 சாலைகள்

பேரூராட்சிகளில், கீழ்காணும் வகையில் 20,314 கி.மீ சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன:

வ. எண்	வகைப்பாடு	நீளம் (கி.மீ)
1.	தார்ச் சாலைகள்	10,523
2.	சிமெண்ட் சாலைகள்	4966
3.	சிமெண்ட் கற்சாலைகள் (Paver block)	559
4.	கருங்கல் ஜல்லி சாலை	1175
5.	செம்மண் சாலை	495
6.	மண்சாலை	2596
	மொத்தம்	20,314

TRUTH ALONE TRIUMPHS

[2016 ஆகஸ்ட் 5

பேரூராட்சிகளில் 2011-12 முதல் 2015-16 ஆம் ஆண்டு வரை பல்வேறு திட்டங்களின்கீழ் மேற்கொள்ளப்பட்ட சாலை மேம்பாட்டுப் பணிகள் பின்வருமாறு:

வ. எண்	ஆண்டு	மொத்த பணிகளின் எண்ணிக்கை	நீளம் (கி.மீ)	மதிப்பீடு (₹ கோடியில்)
1.	2011–12	1908	1561	284.56
2.	2012–13	1022	1166	334.40
3.	2013–14	768	808	248.29
4.	2014–15	694	743	231.02
5.	2015–16	713	699	278.18
மொத்தம்		5105	4977	1376.45

மொத்தம் எடுக்கப்பட்ட 5105 சாலைப் பணிகளில், 4881 பணிகள் முடிக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. எஞ்சிய 224 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. மொத்தம் 4977 கி.மீ. சாலைகள், தார் சாலை, சிமெண்ட் சாலை மற்றும் சிமெண்ட் கற்சாலைகளாக மேம்படுத்தப்பட்டுள்ளன.

4.7.1 நபார்டு – தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி– ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (NABARD)

2011-2012 ஆம் ஆண்டு முதல் 2015-16 ஆம் ஆண்டு வரை, இத்திட்டத்தின்கீழ் சாலை மேம்பாடு, பாலம் அமைத்தல், மழைநீர் வடிகால் அமைத்தல், சுகாதார வளாகம் கட்டுதல், நீர் நிலைகள் மேம்பாடு செய்தல் மற்றும் இறைச்சிக் கூடம் அமைத்தல் போன்ற 2308 பணிகளுக்கு ₹631.51 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பின்வருமாறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

2016 ஆகஸ்ட் 5]

வ. எண்	ஆண்டு	பணிகளின் எண்ணிக்கை	ஒதுக்கீடு (₹ கோடியில்)	குறிப்பு
1.	2011–12	419	97.90	அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.
2.	2012–13	975	200.14	அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.
3.	2013–14	381	118.40	அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.
4.	2014–15	301	115.07	அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.
5.	2015–16	232	100.00	58 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 174 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
மொத்தம்		2308	631.51	

4.7.2 தமிழ்நாடு நகர்ப்புற சாலை கட்டமைப்புத் திட்டம் (TURIP)

நகர்ப்புற சாலைகளை உலகத் தரத்திற்கு உயர்த்தும் நோக்கில் 2011-12 ஆம் ஆண்டிலிருந்து, தமிழ்நாடு நகர்ப்புற சாலை கட்டமைப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், பேரூராட்சிகளில் சாலைகள் மேம்படுத்தப்படுவதுடன் கூடுதலாக மழைநீர் வடிகால் வசதி மற்றும் நடைபாதை வசதிகள் ஏற்படுத்தப்படுகின்றன.

2011-12 ஆம் ஆண்டு முதல் 2014-15 ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தின்கீழ் 905 எண்ணிக்கையிலான 826 கி.மீ. நீளச் சாலைகள் ₹232.90 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டன. அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

[2016 ஆகஸ்ட் 5

வ.எண்	ஆண்டு	பணிகளின் எண்ணிக்கை	நீளம் (கி.மீ)	மதிப்பீடு (₹ கோடியில்)
1.	2011–12	339	247	50.57
2.	2012–13	191	222	50.00
3.	2013–14	147	159	50.57
4.	2014–15	228	198	81.76
	மொத்தம்	905	826	232.90

2015-16 ஆம் ஆண்டில் சிறப்புச் சாலைகள் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு நிதி மற்றும் பேரூராட்சிகளின் பொதுநிதி பங்களிப்புடன் 145 பேரூராட்சிகளில் 384 எண்ணிக்கையிலான 328.11 கி.மீ. நீளச் சாலைகள் ₹163.52 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டது. நாளது வரை 334 பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சிய 50 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணிகள் ஆகஸ்ட் 2016-க்குள் செய்து முடிக்கப்படும்.

4.7.3 பிளாஸ்டிக் சாலைகள்

திடக்கழிவுகளில் கிடைக்கப்பெறும் பிளாஸ்டிக் கழிவுகள் 5 சதவீதம் ஆகும். இவை பல்வேறு வகையாகவும், நச்சுத்தன்மை கொண்டதாகவும் உள்ளன. பொதுவாக, நகர்ப்புறங்கள் மற்றும் ஊரகப் பகுதிகளில், சாலைகள் மற்றும் கழிவுநீர் கால்வாய்களில் பிளாஸ்டிக் பைகள் மற்றும் இதர பிளாஸ்டிக் கழிவுகள் இருப்பதை காணலாம். பிளாஸ்டிக் கழிவுகள் மக்காத தன்மை கொண்டவையாக இருப்பதால் நீரை தேங்கச் செய்கிறது. இதன் மூலம் சுகாதார சீர்கேடுகளை விளைவிக்கிறது. இதனை தடுக்கும் பொருட்டு, பிளாஸ்டிக் கழிவுகள் சாலைகள் அமைப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது.

2011-12 ஆம் ஆண்டு முதல், இத்திட்டம் பொது நிதி மற்றும் இதர சாலைப் பணிகள் திட்டங்களுக்காக சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிதி, ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், தமிழ்நாடு நகர்ப்புற சாலை கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் 1220 பிளாஸ்டிக் சாலைகள், 1120.40 மெட்ரிக் டன் பிளாஸ்டிக் கழிவுகளை

2016 ஆகஸ்ட் 5]

பயன்படுத்தி 1134.60 கி.மீ. நீளத்திற்கு ₹321.40 கோடி செலவினத்தில் பிளாஸ்டிக் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. 2011 ஆம் ஆண்டு முதல் சேகரமான பிளாஸ்டிக் கழிவுகளை விற்பனை செய்ததன் மூலமாக பேரூராட்சிகளுக்கு ₹2.77 கோடி வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

4.8 திடக்கழிவு மேலாண்மை

பேரூராட்சிகளில், தற்போது நாளொன்றுக்கு 1967 மெட்ரிக் டன் குப்பைகள் உருவாகிறது. இவற்றில், மக்கும் குப்பைகள் 925 மெட்ரிக் டன், மக்காத குப்பைகள் 747 மெட்ரிக் டன், வடிகால் மற்றும் இதர மண் கழிவுகள் 295 மெட்ரிக் டன் ஆகும். சராசரியாக நாள் ஒன்றுக்கு நபர் ஒருவர்மூலம் 250 கிராம் முதல் 300 கிராம் வரை குப்பைகள் உருவாகின்றன. பல்வேறு பேரூராட்சிகளில், குப்பைகளின் தன்மை பகுப்பாய்வு செய்யப்பட்டது. விவரங்கள் பின்வருமாறு அட்டவணைபடுத்தப்பட்டுள்ளன:-

வ. எண்	குப்பைகளின் வகை	சதவிகிதத்தில்
1.	மக்கும் குப்பை	47 – 60
2.	பிளாஸ்டிக்	4 – 8
3.	காகிதம்	2 – 5
4.	ரப்பர்	1 – 2
5.	கண்ணாடி	1 – 3
6.	மண் துகள்கள்	15 – 20
7.	உலோகம்	2 – 3
8.	துணி	3 – 5

பேரூராட்சிகளில், திடக்கழிவு மேலாண்மையை சீரிய முறையில் செயல்படுத்திட, 9171 சுய உதவிக் குழு உறுப்பினர்கள் குப்பைகளை சேகரிப்பதற்கும், தரம் பிரிப்பதற்கும் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். 6846 துப்புரவுப் பணியாளர்கள், தெருக்கள் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

[2016 ஆகஸ்ட் 5

4.8.1 இயற்கை / மண்புழு உரமாக்குதல்

தற்பொழுது 461 பேரூராட்சிகளில் இயற்கை உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. நாள்தோறும் 99.09 மெட்ரிக் டன் அளவிற்கு இயற்கை உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இயற்கை உரத்தினை விற்பதன்மூலம் மாதம் ஒன்றுக்கு ₹35.00 இலட்சம் பேரூராட்சிகளில் வருமானம் ஈட்டப்படுகிறது. தற்போதைய நிலையில் 908 மெட்ரிக் டன் அளவில் இயற்கை உரம் இருப்பில் உள்ளது.

இத்துடன் மண்புழு உரம் தயாரிக்கும் பணி 136 பேரூராட்சிகளில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாள்தோறும் 11.79 மெட்ரிக் டன் அளவிற்கு மண்புழு உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. மண்புழு உரத்தினை விற்பதன்மூலம் மாதம் ஒன்றுக்கு ₹8.50 இலட்சம் பேரூராட்சிகளில் வருமானம் ஈட்டப்படுகிறது. தற்போதைய நிலையில் 233 மெட்ரிக் டன் அளவில் மண்புழு உரம் இருப்பில் உள்ளது.

4.8.2 ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டம்

2013-14 ஆம் ஆண்டு முதல் 2015-16 ஆம் ஆண்டு வரை, ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் 395 பேரூராட்சிகளில் வீடு வீடாக குப்பைகளை சேகரித்தல், தரம் பிரித்தல், வளம் மீட்பு பூங்காவிற்கு எடுத்துச் செல்லுதல், உரமாக்குதல், அறிவியல் முறைப்படி நிலப்புதைகளம் உருவாக்குதல், தகவல், கல்வி மற்றும் விழிப்புணர்வு ஆகியவற்றை உள்ளடக்கிய பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. நாளது வரை, 76 பேரூராட்சிகளில் பணி முடிக்கப்பட்டு, எஞ்சிய பேரூராட்சிகளில் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

மேலும், சோளிங்கர், செங்கம், பெரியநாயக்கன்பாளையம், வத்தலகுண்டு மற்றும் உத்தமபாளையம் ஆகிய 5 பேரூராட்சிகளில் ₹1.00 கோடி மதிப்பீட்டில் காய்கறி கழிவு மற்றும் உணவுக் கழிவிலிருந்து, உயிரி எரிவாயு கலன்மூலம் எரிவாயு தயாரிக்க பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன.

4.9 உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி

பேரூராட்சிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவதிலுள்ள நிதி இடைவெளியை நிரப்புவதற்கு, இத்திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2016 ஆகஸ்ட் 5]

2011-12 ஆம் ஆண்டு முதல் 2015-16 ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தின்கீழ் 722 பணிகளுக்கு ₹266.88 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதன்மூலம் புதிய அலுவலகக் கட்டடம் கட்டுதல், குடிநீர் பணிகள், திடக்கழிவு மேலாண்மை பணிகள், மழைநீர் வடிகால், இறைச்சிக் கூடம், நவீன எரிவாயு தகன மேடை, சமுதாயக் கூடம் அமைத்தல், பேருந்து நிலையம் மேம்பாடு, மயான மேம்பாடு மற்றும் குடிநீர்த் திட்டங்களுக்கான பேரூராட்சி பங்குத் தொகை செலுத்துதல் போன்ற பணிகள் பின்வருமாறு மேற்கொள்ளப்பட்டுள்ளன:

வ. எண்	ஆண்டு	பணிகளின் எண்ணிக்கை	மதிப்பீடு (₹ கோடியில்)	குறிப்பு
1.	2011–12	155	20.99	அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.
2.	2012–13	94	25.62	
3.	2013–14	185	69.45	184 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 1 பணி முன்னேற்றத்தில் உள்ளது.
4.	2014–15	230	85.38	223 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 7 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.
5.	2015–16	58	65.44	3 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 55 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.
	மொத்தம்	**722**	**266.88**	

[2016 ஆகஸ்ட் 5

2016-2017 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், இத்திட்டத்திற்காக ₹71.40 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.10 இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி

பேரூராட்சிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவதில் உள்ள நிதி இடைவெளியை நிரப்புவதற்கு, மாநில நிதி பகிர்வு மானியத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2011-12 ஆம் ஆண்டு முதல் 2015-16 ஆம் ஆண்டு வரை, இத்திட்டத்தின்கீழ் 603 பணிகளுக்கு ₹125.74 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதன்மூலம் அலுவலகக் கட்டடம் கட்டுதல், குடிநீர் பணிகள், திடக்கழிவு மேலாண்மை பணிகள், மழைநீர் வடிகால், சாலை, சமுதாயக் கூடம் அமைத்தல், பேருந்து நிலையம் மேம்பாடு, மயான மேம்பாடு மற்றும் குடிநீர்த் திட்டங்களுக்கான பேரூராட்சி பங்குத் தொகை செலுத்துதல் போன்ற பணிகள் பின்வருமாறு மேற்கொள்ளப்பட்டுள்ளன:

வ. எண்	ஆண்டு	பணிகளின் எண்ணிக்கை	மதிப்பீடு (₹ கோடியில்)	குறிப்பு
1.	2011–12	84	13.99	அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.
2.	2012–13	169	17.09	
3.	2013–14	112	27.42	
4.	2014–15	111	34.25	அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.
5.	2015–16	127	32.99	26 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 101 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.
	மொத்தம்	**603**	**125.74**	

2016-2017 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில், இத்திட்டத்திற்காக ₹30.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2016 ஆகஸ்ட் 5]

4.11 பதினான்காவது நிதி ஆணைய மானியம்

பேரூராட்சிகளுக்கு 2015-2016 ஆம் ஆண்டு முதல் 2019-2020 ஆம் ஆண்டு வரை பதினான்காவது நிதி ஆணைய மானியம் ஆண்டு தோறும் மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்படும். இந்த ஒதுக்கீடு, அடிப்படை மானியம் மற்றும் செயல்திறன் மானியம் என இரண்டு கூறுகளாக வழங்கப்படும். 2015-2016 ஆம் ஆண்டு, அடிப்படை மானியமாக ₹229.11 கோடி ஒதுக்கப்பட்டு, அத்தொகை இரு தவணைகளில் அடிப்படை மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது. மேற்படி மானியத் தொகை, குடிநீர் திட்ட பங்குத் தொகை, பாதாள சாக்கடை திட்டத்திற்கான பங்குத் தொகை, மின்வாரியத்திற்கு மின்கட்டணம் செலுத்துதல், குடிநீர்க் கட்டணம் செலுத்துதல், திடக்கழிவு மேலாண்மை திட்டம், சாலைகள் மற்றும் நடைபாதை அமைத்தல் மற்றும் பூங்கா விளையாட்டுத் திடல் பராமரித்தல் ஆகியவற்றிற்கு பயன்படுத்தப்படுகிறது.

2016-17 ஆம் ஆண்டு, பதினான்காவது நிதி ஆணைய அடிப்படை மானியம் முதல் தவணை ₹158.62 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மானியம் முழுமையாக 528 பேரூராட்சிகளுக்கும் விடுவிக்கப்பட்டுள்ளது.

4.12 மழைநீர் சேகரிப்பு

2001 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட மழைநீர் சேகரிப்புத் திட்டமானது, நிலத்தடி நீரை செறிவூட்டுவதில், குறிப்பிடத்தக்க விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது. 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டப் பிரிவு 215 (a) *மற்றும் 1973 ஆம் ஆண்டு கட்டட விதிகளில் ஏற்படுத்தப்பட்ட திருத்தங்களின்மூலம், அனைத்து புதிய கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை ஏற்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தின் பயனை ஒருங்கிணைக்க, புதிதாக ஏற்படுத்தப்படும் கட்டமைப்புகள் தவிர, தனியார் மற்றும் பொதுக் கட்டடங்களில் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை புனரமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பேரூராட்சிகளில், இத்திட்டத்தினைத் தொய்வின்றி உத்வேகப்படுத்திட அனைவருக்கும் இது தொடர்பான செய்தி, கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரச்சாரம் போன்ற நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.*

[2016 ஆகஸ்ட் 5

பேரூராட்சிகளால், 6,286.84 ஏக்கர் பரப்பளவிலான 1,916 நீர்நிலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. பேரூராட்சிகளில், மொத்தமுள்ள 24,30,512 கட்டடங்களில், 23,62,144 கட்டடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் குறித்த விவரங்கள் கீழ்க்காணும் அட்டவணையில் அளிக்கப்பட்டுள்ளது.

வ. எண்	கட்டடத்தின் வகைப்பாடு	கட்டடங்களின் எண்ணிக்கை	மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்ட கட்டடங்கள்
1.	அரசுக் கட்டடங்கள்	24,226	23,926
2.	குடியிருப்புக் கட்டடங்கள்	22,45,375	21,78,886
3.	வணிகக் கட்டடங்கள்	1,48,979	1,47,400
4.	தொழிற்சாலைக் கட்டடங்கள்	11,932	11,932
	மொத்தம்	**24,30,512**	**23,62,144**

பேரூராட்சிகளில் மொத்தமுள்ள 1,916 நீர்நிலைகளில் 807 நீர்நிலைகள் பல்வேறு திட்டங்களின்கீழ் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன. எஞ்சிய 1,109 நீர்நிலைகள் வரும் ஆண்டுகளில் படிப்படியாக புனரமைப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேற்படி நடவடிக்கைகளின் காரணமாக, நிலத்தடி நீர் செறிவூட்டும் திறன் 4.13 TMC ஆக உள்ளது.

4.13 விலங்குகள் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்துதல்

மத்திய அரசு, 1960 ஆம் ஆண்டு பிராணிகள் வதைத் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 38, உட்பிரிவு 1 (9)-ன்கீழ் 2001 ஆம் ஆண்டு பிராணிகள் (நாய்கள்) கருத்தடை அறுவை சிகிச்சை விதிகளை அறிவிக்கை செய்துள்ளது.

2016 ஆகஸ்ட் 5]

இவ்விதிகளை தீவிரமாக செயல்படுத்தும் விதமாக, அனைத்து பேரூராட்சிகளிலும் தெரு நாய் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டதில், 1,06,129 தெரு நாய்கள் உள்ளது கண்டறியப்பட்டது. இவற்றில், 2015-16 ஆம் ஆண்டு வரை, 90,494 தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய 15,635 தெரு நாய்களுக்கு 2016-17 ஆம் ஆண்டில் கருத்தடை அறுவை சிகிச்சை செய்யவும் மற்றும் தடுப்பூசி போடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு 1422 நாய்களுக்கு கருத்தடை செய்யப்பட்டுள்ளது.

4.14 துணை நகரம்

மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் பேரூராட்சி துணை நகரமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. துணை நகரங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் மூலம், பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட பெருநகர இணைப்புகளில் ஏற்படும் நெரிசலைக் குறைப்பது மற்றும் துணை நகரங்களில் அவர்களை நிலை நிறுத்துவது ஆகியன இத்திட்டத்தின் நோக்கங்களாகும். இதற்கென மின்னாற்றல் தணிக்கை, குடிநீர் தணிக்கை, செலவு குறைந்த தொழிற் நுட்பங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் இயக்கம் மற்றும் பராமரிப்பதில் மேம்பட்ட திறன் வளர்ப்பு போன்ற சீர்திருத்தங்களை துணை நகரங்களில் மேற்கொள்ள இத்திட்டம் வழிவகை செய்கிறது. வீட்டு மனைகளில் 10 முதல் 15 விழுக்காடு வரை நகர்ப்புற ஏழைகளுக்காக ஒதுக்கீடு செய்வதும் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிலையில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதும் இத்திட்டத்தின் பிற நோக்கங்களாகும். இத்திட்டத்தின்கீழ் குடிநீர், பாதாள சாக்கடை மற்றும் திடக்கழிவு மேலாண்மை ஆகிய மூன்று திட்டப்பணிகள் ₹123.75 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அனைத்து பணிகளும் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன.

[2016 ஆகஸ்ட் 5

வ. எண்	பணியின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹ கோடியில்)	பணிகளின் முன்னேற்ற நிலை
1.	திடக்கழிவு மேலாண்மை உட்கட்டமைப்புகள்	4.44	பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
2.	ஒருங்கிணைந்த குடிநீர் திட்டம்	42.20	பணிகள், அக்டோபர் 2016 க்குள் முடிக்கப்படும்
3.	ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டம்	77.11	பணிகள், அக்டோபர் 2016 க்குள் முடிக்கப்படும்
	மொத்தம்	123.75	

4.15 பசுமை வீடுகள் திட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு திட்டம் 2023-ன் குடிசை இல்லா நகரங்கள் திட்டத்தின் ஒரு பகுதியாக, தமிழ்நாட்டில் உள்ள 528 பேரூராட்சிப் பகுதிகளில் பொருளாதார ரீதியாக நலிவுற்ற (Economically Weaker Sections) *நிலையில் உள்ள குடிசை / மண் வீடுகளில் வாழும் ஏழை எளிய மக்களுக்கு சூரிய ஒளி மின் சக்தியுடன் கூடிய கான்கிரீட் வீடுகள் கட்ட, முதல் கட்டமாக 2015-16 ஆம் ஆண்டு 20,000 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதற்கான நிதி ஒதுக்கீடு, வீடு ஒன்றுக்கு ₹2.10 இலட்சம் நிதி உதவியுடன் ₹.420.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

சூரிய ஒளி மின் சக்தியுடன் கூடிய 20,000 கான்கிரீட் வீடுகள் கட்டும் பணி தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இத்திட்டம், மத்திய அரசின் அனைவருக்கும் வீடுகள் வழங்கும் திட்டத்துடன் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 149 எண்ணிக்கை பசுமை வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

2016 ஆகஸ்ட் 5]

4.16 பேரூராட்சிகளில் புவி சார் தகவல் முறை அடிப்படையிலான சொத்துவரி விதித்தல்

பேரூராட்சிகளில், மின்னணு ஆளுகை திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதன் முன்னோடியாக, வரி விதிக்கப்படாத மற்றும் மதிப்பு குறைத்து வரி விதிக்கப்பட்ட சொத்துக்களை கண்டறிந்து அவற்றிற்கு வரி விதிப்பு செய்து அதன் மூலம் வருவாய் பெருக்கிட புவி தகவல் அடிப்படையிலான சொத்துவரி விதித்தல் திட்டத்தினை அரசு கொள்கை அளவில் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தை பொன்னேரி பேரூராட்சியில் சோதனை முறையில் நடைமுறைப்படுத்த 2013 ஆம் ஆண்டில் ₹32.84 இலட்சத்தினை அனுமதித்து வழங்கியுள்ளது. இத்திட்டம் முடிக்கப்பட்டு ஆண்டு ஒன்றுக்கு கூடுதலாக ₹6.00 இலட்சம் வருமானம் பேரூராட்சிக்கு கிடைக்கப்பெற்று வருகிறது. இந்த புவி சார் தகவல் முறை அடிப்படையிலான சொத்துவரி விதித்தல், இதர பேரூராட்சிகளுக்கு விரிவுபடுத்தப்படும்.

4.17 தெரு விளக்குகள்

பேரூராட்சிகளில், 969 உயர்கோபுர விளக்குகள், 2662 மெர்க்குரி விளக்குகள், 40,063 சோடியம் விளக்குகள், 2,65,588 குழல் விளக்குகள், 76,236 சி.எப்.எல். விளக்குகள் 3,234 சோலார் விளக்குகள் மற்றும் 20,006 ஆற்றல் மிகு தெரு மின்விளக்குகள் (எல்.இ.டி.) உள்ளிட்ட 4,08,758 தெரு விளக்குகள் பராமரிக்கப்படுகின்றன. அனைத்து தெரு விளக்குகளையும் ஆற்றல் மிகு தெரு மின்விளக்குகளாக (எல்.இ.டி) மாற்றுவதற்கு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

4.18 விருது

பேரூராட்சிகளில், சுகாதார நிலை, குடிநீர் வழங்கல், திடக்கழிவு மேலாண்மை மற்றும் இதர அடிப்படை வசதிப் பணிகளின் இலக்கீட்டினை எய்தும் வகையில் திறம்பட செயல்படும் பேரூராட்சிகளை ஊக்குவிக்கும் நோக்கத்தில், மூன்று சிறந்த பேரூராட்சிகளுக்கான விருதுகளை அரசு ஏற்படுத்தியுள்ளது. இதற்கான விருது தொகை முறையே ₹10.00 இலட்சம், ₹5.00 இலட்சம் மற்றும் ₹3.00 இலட்சம் ஆகும்.

2014-2015 ஆம் ஆண்டிற்கான முதல் மூன்று பரிசுகள், முறையே நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி பேரூராட்சி, தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு பேரூராட்சி மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம், சிறுகமணி பேரூராட்சிகளுக்கு வழங்கப்பட்டன.

[2016 ஆகஸ்ட் 5

5. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் 1978 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் நிறுவப்பட்டது. சென்னைக் குடிநீர் வாரியம், சென்னைப் பெருநகர் பகுதியின் தேவைக்கேற்ப குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சேவைகளை தற்போதைக்கும், எதிர்காலத்திற்கும் திட்டமிட்டு மேம்படுத்தி செயல்படுத்துதல், தேவையான உட்கட்டமைப்புகளை உருவாக்குதல் மற்றும் தொலைநோக்குப் பார்வையோடு திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் போன்ற முக்கிய பொறுப்புகளைக் கொண்டு இயங்கி வருகின்றது.

தற்சமயம், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், தனது சேவைகளை, 15 பகுதி அலுவலகங்கள் மற்றும் 200 பணிமனைகள் வாயிலாக 426 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் உள்ள 67.27 இலட்சம் மக்களுக்கு (2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி) வழங்கி வருகிறது. மேலும் சில உள்ளாட்சி அமைப்புகளுக்கும், மொத்த நுகர்வோருக்கும் மற்றும் தொழிற்சாலைகளுக்கும் தனது சேவையை வழங்கி வருகிறது.

சென்னைக் குடிநீர் வாரியத்தின் சேவையை பெறும் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் மொத்த நுகர்வோர்

வ. எண்	உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் மொத்த நுகர்வோர்	குடிநீர் வழங்கும் அளவு நாளொன்றுக்கு (மில்லியன் லிட்டரில்)
1.	பல்லாவரம் நகராட்சி	1.90
2.	பம்மல் நகராட்சி	2.10
3.	அனகாபுத்தூர் நகராட்சி	1.00
4.	ஆவடி நகராட்சி	0.80
5.	பொழிச்சலூர் கிராம பஞ்சாயத்து	0.95
6.	கௌல் பஜார் கிராம பஞ்சாயத்து	0.30
7.	இரயில்வே மற்றும் அரசு மருத்துவமனை	12.00

2016 ஆகஸ்ட் 5]

8.	ஆவின்	0.41
9.	கன்டோன்மெண்ட் – (இராணுவ அலுவலகங்கள் மற்றும் குடியிருப்புகள்)	1.60
10.	உணவகங்கள் மற்றும் மொத்த நுகர்வோர்	4.28
11.	தொழிற்சாலை நுகர்வோர்	25.68
	மொத்தம்	51.02

5.1 சென்னை நகரின் குடிநீர் ஆதாரங்கள்

சென்னை நகரின் குடிநீர் தேவையை நிறைவு செய்ய நில மேற்பரப்பு நீர், கடல் நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் நிலத்தடி நீர் மூலம் நீர் பெறப்படுகிறது.

5.1.1 நில மேற்பரப்பு நீர்

சென்னை நகருக்கு குடிநீர் வழங்குவதில் நில மேற்பரப்பு நீர் ஆதாரம் முதன்மையானதாகும். சென்னைக்கு அருகாமையிலுள்ள நீர்த்தேக்கங்களான பூண்டி, சோழவரம், புழல், செம்பரம்பாக்கம், கடலூர் மாவட்டத்தில் உள்ள வீராணம் ஏரி மற்றும் தெலுங்கு கங்கை திட்டம் ஆகியவை குடிநீர் வழங்கும் முதன்மை மேற்பரப்பு நீர் ஆதாரங்களாகும்.

சென்னைக்குக் குடிநீர் வழங்கும் நீர்த்தேக்கங்களின் கொள்ளளவுகள்

வ. எண்	நீர்த்தேக்கங்கள்	மொத்தக் கொள்ளளவு (மில்லியன் கன அடியில்)
1.	பூண்டி	3,231
2.	புழல்	3,300
3.	செம்பரம்பாக்கம்	3,645
4.	சோழவரம்	881
5.	வீராணம்	1,465
	மொத்தம்	12,522

[2016 ஆகஸ்ட் 5

புதிய வீராணம் குடிநீர் வழங்கல் திட்டம் சென்னை நகருக்கு கூடுதல் நீர் ஆதாரமாக 2004-ல் துவங்கப்பட்டது. இதன் மூலம் வீராணம் ஏரியிலிருந்து ஆண்டுதோறும் நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் குடிநீர் நகருக்கு கிடைக்கப் பெறுகிறது.

ஆந்திரபிரதேசத்தில் அமைந்துள்ள கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து தெலுங்கு கங்கை திட்டத்தின் மூலம் கிருஷ்ணா நதி நீர் சென்னை நகருக்கு பெறப்பட்டு வருகிறது. ஆந்திரபிரதேசம் மற்றும் தமிழக அரசுகளிடையே கையெழுத்தான ஒப்பந்தப்படி சென்னையின் குடிநீர் தேவைக்கு ஒவ்வொரு ஆண்டும் 12 ஆயிரம் மில்லியன் கனஅடி நீர் வழங்கப்பட வேண்டும். முந்தைய பல வருடங்களில் 4.5 ஆயிரம் மில்லியன் கன அடி முதல் 8.2 ஆயிரம் மில்லியன் கன அடிவரை மட்டுமே நீர் கிடைக்கப் பெற்றது. 2015-16 ஆம் ஆண்டில், 31.08.2015 வரை பெறப்பட்ட நீரின் அளவு 5.569 ஆயிரம் மில்லியன் கன அடி ஆகும். 1-9-2015 லிருந்து இன்று வரை கண்டலேறுவிலிருந்து நீர் வரத்து ஏதும் இல்லை.

சென்னை நகர ஏரிகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழையின்அளவு

வருடம்	மழையின் அளவு (மி.மீ)		வித்தியாசம் %
	இயல்பான அளவு (30 வருட சராசரி)	பெய்த அளவு	
2012	1293.42	981.80	−24.09
2013	1297.50	1064.87	−17.93
2014	1286.21	1025.80	−20.25
2015	1273.17	2155.23	+69.28

5.1.2 கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையங்கள்

கிடைக்கக் கூடிய நில மேற்பரப்பு நீர், பருவமழையையே பெரிதும் சார்ந்திருக்கிறது. பருவமழை தேவையான அளவு பொழியாதபோது நீர்த்தேக்கங்களில் கிடைக்கக்கூடிய நீரின் அளவில் அதிக பற்றாக்குறை ஏற்பட்டு அதனால் சென்னை

2016 ஆகஸ்ட் 5]

நகரின் குடிநீர் விநியோகம் பாதிக்கப்படுகிறது. சென்னைக்கு அருகே வற்றாத ஆறுகள் இல்லாததும் குடிநீர் விநியோகம் செய்வதற்கு கூடுதல் சவாலாகிறது. வளர்ந்து வரும் சென்னை மாநகருக்கு குடிநீர் பற்றாக்குறையை நீக்கும் வண்ணம் 2003-2004 ஆம் ஆண்டிலேயே தொலைநோக்கு பார்வை கொண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவிட அறிவித்தார்கள். அரசு தற்சமயம் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் இரண்டு நிலையங்களை மீஞ்சூர் மற்றும் நெம்மேலியில் நிறுவி இயக்கி வருகிறது. இந்நிலையங்கள் சென்னை மாநகரின் குடிநீர் விநியோகத்தில் முக்கிய பங்கு வகித்து வருகிறது.

5.1.2.1 கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் (காட்டுப்பள்ளி) –மீஞ்சூர்

நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் (காட்டுப்பள்ளி) -மீஞ்சூரில் வடிவமைத்து, நிறுவி, சொந்தமாக்கி, இயக்கி மற்றும் திருப்பித் தரும் அடிப்படையில் இயங்கி வருகிறது. இந்த நிலையம் செயல்பாட்டில் உள்ளதுடன் இதன் மூலம் வட சென்னை பகுதிகளாகிய மணலி, மாதவரம், எண்ணூர், கத்திவாக்கம், திருவொற்றியூர், தண்டையார்பேட்டை மற்றும் வியாசர்பாடி பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

5.1.2.2 கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் – நெம்மேலி

நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் ஒன்று நெம்மேலியில் ₹805.08 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையம் மாண்புமிகு முதல்வர் அவர்களால் 22-02-2013 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இந்நிலையம் செயல்பாட்டில் உள்ளதுடன் இதன் மூலம் தென் சென்னை பகுதிகளாகிய சோழிங்கநல்லூர், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், காரப்பாக்கம், செம்மஞ்சேரி, துரைப்பாக்கம், பெருங்குடி, கொட்டிவாக்கம், பாலவாக்கம், திருவான்மியூர், வேளச்சேரி, தரமணி, பள்ளிப்பட்டு, அடையாறு, பெசன்ட் நகர், நந்தனம், எம்.ஆர்.சி. நகர், இராஜா அண்ணாமலைபுரம் மற்றும் மயிலாப்பூர் பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பருவமழை தேவையான அளவு பொழியாத 2012-2015 ஆண்டுகளில் கடல் நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையங்களை நாம் சார்ந்து இருக்க வேண்டிய சூழ்நிலை அதிகமாகியதுடன் நகரின் குடிநீர் தேவையை சமாளிக்க இந்த நிலையங்கள் உதவிகரமாக இருந்தது.

5.1.3 நிலத்தடி நீர்

மீஞ்சூர், தாமரைப்பாக்கம், பூண்டி மற்றும் நெய்வேலி ஆகிய நிலத்தடி நீராதாரங்களில் இருந்து சுமார் நாளொன்றுக்கு 25 மில்லியன் லிட்டர் குடிநீர் நகருக்கு விநியோகிக்கப்படுகிறது.

5.1.4 குடிநீர் விநியோக இயக்கம் மற்றும் பராமரிப்பு

2012 முதல் 2014 ஆம் ஆண்டுவரை பருவமழை தொடர்ந்து தேவையான அளவு பொழியாததனால் நகருக்கு விநியோகிக்கப்படும் குடிநீரின் அளவு மறு சீரமைக்கப்பட்டு நாளொன்றுக்கு 540 மில்லியன் லிட்டர் குடிநீர் சென்னை நகருக்கு விநியோகம் செய்யப்பட்டது. 2015 ஆம் ஆண்டு பெய்த கனமழையால் ஏரிகள் நிரம்பியதால் தற்போது நாளொன்றுக்கு 830 மில்லியன் லிட்டர் குடிநீர் சென்னை நகருக்கு விநியோகம் செய்யப்படுகின்றது. மேலும் சென்னை மாநகருடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு ஒருங்கிணைந்த குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று சேவைகளை வழங்க சென்னைக் குடிநீர் வாரியம் பல்வேறு திட்டங்களை எடுத்துக்கொண்டுள்ளது.

பாதுகாப்பான குடிநீரினை நகருக்கு விநியோகம் செய்திட சென்னை குடிநீர் வாரியம், கீழ்ப்பாக்கம், புழல், செம்பரம்பாக்கம், சூரப்பட்டு, வடக்குத்து ஆகிய இடங்களில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களையும் மேலும் (காட்டுப்பள்ளி) - மீஞ்சூர் மற்றும் நெம்மேலியில் கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையங்களையும் இயக்கி வருகிறது.

2016 ஆகஸ்ட் 5]

குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் சுத்திகரிப்புத் திறன்

குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்	சுத்திகரிப்புத் திறன் (நாளொன்றுக்கு மில்லியன் லிட்டர்)
கீழ்ப்பாக்கம்	270
புழல்	300
செம்பரம்பாக்கம்	530
வடகுத்து	180
சூரப்பட்டு	14
கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்கள்– (காட்டுப்பள்ளி)- மீஞ்சூர் மற்றும் நெம்மேலி	200
மொத்தம்	**1494**

1978-ல் வாரியம் துவங்கப்பட்ட நாளிலிருந்து, குடிநீர் விநியோக இயக்கத்தில் வாரியம் பல படிகளில் முன்னேற்றம் கண்டுள்ளது.

குடிநீர் விநியோக சேவையில் முன்னேற்றங்கள்

விவரங்கள்	1978 ஆம் ஆண்டில்	2016 ஆம் ஆண்டில்
செயலாக்கப் பகுதி (ச.கி. மீ.)	174	426
மக்கள் தொகை (இலட்சத்தில்)	28.60	73.11
குடிநீர் விநியோகம் (நா.மி.லி.)	240	830
குடிநீர் குழாய்களின் நீளம் (கி.மீ.)	1250	6,610
குடிநீர் பகிர்மான நிலையங்கள்	3	74
குடிநீர் சுத்திகரிப்பு திறன் (நா.மி.லி.)	182	1,494
நுகர்வோர் எண்ணிக்கை	1,16,000	6,73,339

[2016 ஆகஸ்ட் 5

2015-16 ஆம் ஆண்டிற்கான மொத்த வருவாய் செலவினம் ₹1076.93 கோடி. வாரியத்தின் மொத்த வருமானம் ₹830.67 கோடி ஆகும். இதில் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்றல் வரிகளின் மூலம் ₹147.46 கோடியும், குடிநீர் மற்றும் கழிவுநீரகற்றல் கட்டணங்களின் மூலம் ₹263.58 கோடியும், இதர வருவாய் ₹64.63 கோடியும் ஆகும். கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்களிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை வாங்குவதற்கும் மற்ற நோக்கத்திற்காகவும் குடிநீர் வாரியத்திற்கு தமிழக அரசு மானியம் வழங்குகிறது. 2015-16 ஆம் ஆண்டு ₹354.79 கோடி நிதியினை வாரியம் மானியமாக பெற்றுள்ளது.

5.2 குடிநீர் வழங்கல் – புதிய திட்டங்கள்

சென்னை குடிநீர் வாரியம், குடிநீர் வசதி இல்லாத இடங்களுக்கு, குறிப்பாக சென்னை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட 42 பகுதிகளுக்கு சிறப்புக் கவனம் செலுத்தி குடிநீர் வழங்கிட பல்வேறு திட்டங்களை எடுத்துக்கொண்டுள்ளது.

இணைக்கப்பட்ட 42 பகுதிகளின் குடிநீர் வழங்கல் திட்டங்களின் நிலவரம்.

இணைக்கப் பட்ட பகுதிகளின் எண்ணிக்கை	குடிநீர் விநியோகப் பணிகள் முடிக்கப்பட்டவை	பணிகள் நடை பெற்று வருபவை	பணிகள் மேற் கொள்ளப்பட வேண்டியவை
42	8	28 **	6

** உள்ளகரம் புழுதிவாக்கத்தின் ஒரு பகுதியில் குடிநீர் வழங்கும் திட்டப்பணிகள் முடிவடைந்துள்ளன. மற்ற பகுதிகளில் மீதமுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

திருவொற்றியூர், கத்திவாக்கம், அம்பத்தூர், மதுரவாயல், வளசரவாக்கம், போரூர், ஆலந்தூர் மற்றும் மீனம்பாக்கம் ஆகிய இணைந்த 8 பகுதிகளில் குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள் முடிவடைந்துள்ளன.

இடையான்சாவடி, சடையன்குப்பம், கடப்பாக்கம், தீயம்பாக்கம், வடபெரும்பாக்கம், மணலி, சூரப்பட்டு, கதிர்வேடு, புத்தகரம், புழல், சின்னசேக்காடு, மாதவரம், நெற்குன்றம், ராமாபுரம்,

2016 ஆகஸ்ட் 5]

நொளம்பூர், காரம்பாக்கம், மணப்பாக்கம், நந்தம்பாக்கம், முகலிவாக்கம், பள்ளிக்கரணை, கொட்டிவாக்கம், பெருங்குடி, பாலவாக்கம், சோழிங்கநல்லூர், காரப்பாக்கம், ஈஞ்சம்பாக்கம் மற்றும் ஒக்கியம்-துரைப்பாக்கம் ஆகிய இணைந்த 27 பகுதிகளில் குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாத்தூர், ஜல்லடம்பேட்டை, மடிப்பாக்கம், நீலாங்கரை, செம்மஞ்சேரி மற்றும் உத்தண்டி ஆகிய இணைந்த 6 பகுதிகளுக்கு மத்திய அரசின் அம்ருட் மற்றும் பிற நிதியுதவியின்கீழ் குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள் விரைவில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

5.2.1 சென்னை, கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள நெம்மேலியில் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 16.4.2013 அன்று சட்டப்பேரவையில் விதி எண் 110ன்கீழ் மற்றுமொரு நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையத்தினை, நெம்மேலியில் அமைந்துள்ள சுத்திகரிப்பு நிலைய வளாகத்தில் உள்ள 10.50 ஏக்கர் காலி இடத்தில் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

நெம்மேலியில் தற்போது இயங்கி வரும் கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்திற்கு அருகில் காலியாக உள்ள நிலத்தில் 150 எம்.எல்.டி. கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையம் அமைக்க ₹1371.86 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. (சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை நகருக்கு கொண்டு செல்லும் குழாய்கள் உட்பட) இந்த விரிவான திட்ட அறிக்கைக்கான நிர்வாக ஒப்புதலை தமிழக அரசு அளித்துள்ளது. இதில் 60 சதவீதம் ஜெர்மன் அரசின் நிதி நிறுவனத்திலிருந்து கடனாகவும் மீதமுள்ள 40 சதவீத தொகையை தமிழக அரசு தனது சொந்த ஆதாரங்களிலிருந்தும் எதிர்வரும் மத்திய அரசின் திட்டங்களிலிருந்தும் இணைந்து செயல்படுத்த உள்ளது.

ஜெர்மானிய நிதி நிறுவனம் இந்தத் திட்டத்திற்காக மத்திய அரசுடன் கடன் ஒப்பந்த ஆவணத்தில் 28.6.2016 அன்று கையொப்பமிட்டுள்ளது. விரைவில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படும்.

இத்திட்டத்தின்கீழ் பெறப்படும் குடிநீரால் தென் சென்னை பகுதிகளான வேளச்சேரி, ஆலந்தூர், சின்னமலை, மேடவாக்கம், கோவிலம்பாக்கம், நன்மங்கலம், கீழ்கட்டளை, மூவரசன்பேட்டை, சோழிங்கநல்லூர், உள்ளகரம்-புழுதிவாக்கம், மடிப்பாக்கம் மற்றும் தகவல் தொழில் நுட்பப் பகுதிகளில் குடிநீர் விநியோகம் மேம்படும்.

5.2.2 சென்னை கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள பேரூரில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் தென் சென்னை பகுதியில் கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள பட்டிபுலத்தில் அமைக்கப்படும் என்று சட்டமன்றப் பேரவையில் 2013 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. இதற்காக உத்தேசிக்கப்பட்ட நிலம், சட்டப் பிரச்சனைக்குட்பட்டுள்ளது எனக் கண்டறியப்பட்டதால் இந்த இடத்திற்கு அருகாமையில் கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள பேரூர் என்ற இடம் மாற்றாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

பேரூரில் 400 எம்.எல்.டி. கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையம் அமைக்க ₹4070.68 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது. திட்ட அறிக்கை பரிசீலனையின்போது ₹2891.70 கோடி மதிப்பீட்டிற்கு திருத்தி அமைக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை மூலம் நிதி உதவி பெறும் வகையில் மத்திய அரசின் மூலம் ஜப்பான் பன்னாட்டு முகமைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டம் மற்றும் மதிப்பீடு பற்றி கலந்தாய்வு செய்யும் பொருட்டு ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் ஆய்வு குழுவினர் 12-01-2016 அன்று முதல் சென்னையில் கலந்தாய்வு செய்து வருகின்றனர். ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் உயர்மட்ட குழு 13-06-2016 அன்று சென்னைக்கு வருகை தந்து குடிநீர் வாரிய அதிகாரிகள் மற்றும் அவர்களது ஆய்வு குழுவினருடனும் கலந்து ஆலோசனை மேற்கொண்டனர். அதனடிப்படையில் திட்ட மதிப்பீட்டினை திருத்தி அமைத்து அதற்கு மத்திய நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகம் மற்றும் மத்திய நிதி அமைச்சகத்தின் பொருளாதார விவகாரங்கள் துறை மூலம் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமைக்கு கடன் வழங்குவதை இறுதி செய்ய பரிந்துரை செய்யப்பட உள்ளது.

2016 ஆகஸ்ட் 5]

5.2.3 செம்பரம்பாக்கத்திலிருந்து பூந்தமல்லி புறவழிச் சாலை சந்திப்பு வரை குடிநீர் கொணரும் இரண்டாவது பிரதான குழாய் பதித்தல்

செம்பரம்பாக்கம் சுத்திகரிப்பு நிலையத்தின் முழு சுத்திகரிப்பு நீரின் அளவான நாளொன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை சென்னைக்கு வழங்க ஏதுவாக செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து 2000 மில்லி மீட்டர் விட்டமுள்ள இரண்டாவது குடிநீர் குழாயை 6.5 கி.மீ. நீளத்திற்கு, ₹41.35 கோடி மதிப்பீட்டில் பூந்தமல்லி புறவழிச் சாலை சந்திப்பு வரையில் பதிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் மார்ச் 2017 ஆம் ஆண்டிற்குள் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

5.2.4 புதியதாக அமைக்கப்பட்டுவரும் கண்ணன் கோட்டை மற்றும் தேர்வாய்கண்டிகை நீர்த்தேக்கத்திலிருந்து, பூண்டி நீர்த்தேக்கத்திற்கு நீர் கொண்டு செல்ல குழாய் பதிக்கும் பணி

புதிதாக அமைக்கப்பட்டுவரும் தேர்வாய்கண்டிகை நீர்த்தேக்கத்திலிருந்து கிருஷ்ணா கால்வாய் வரை 17 கி.மீ. நீளத்திற்கு 900 மி.மீ. விட்டமுள்ள பிரதான விசை குடிநீர் குழாய் பதிக்க ₹93.77 கோடி திட்ட மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் ஜனவரி 2017ல் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

5.2.5 சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் குடிநீர் திட்டப் பணிகள் (CMCDM)

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், சென்னை நகருக்கும் அத்துடன் சிறப்பு கண்ணோட்டத்துடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கும், உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்த சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தை தொடங்கினார்கள். இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரங்கள் கீழ்க்கண்டவாறு:

சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்கல் திட்டங்கள்

வ. எண்	திட்டத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹ கோடியில்)	பணியின் தற்போதைய நிலை
	2011–12 குடிநீர் மேம்பாட்டு திட்டங்கள்		
1.	குடிநீர் விநியோகக் குழாய்கள் இல்லாத குடிசைப் பகுதிகளில் குடிநீர் குழாய்கள் பதித்தல்	23.56	பணிகள் முடிவுற்றுள்ளன
2.	புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு கீழ்நிலைத் தொட்டிகள் மற்றும் குடிநீர் நிரப்பும் நிலையங்கள் அமைத்தல்	12.23	
3.	அடைப்பு ஏற்பட்ட பிரதான குடிநீர் குழாய்கள் மற்றும் பிவிசி குழாய்களை மாற்றி அமைத்தல்	20.71	
	2012–13 குடிநீர் வழங்கல் திட்டம்		
4.	நொளம்பூர்	18.00	மார்ச் 2017–க்குள் முடிக்கப்படும்.
5.	காரம்பாக்கம்	20.56	மார்ச் 2017–க்குள் முடிக்கப்படும்.
6.	இராமாபுரம்	32.54	பிப்ரவரி 2017–க்குள் முடிக்கப்படும்.

2016 ஆகஸ்ட் 5]

7.	மணப்பாக்கம்	10.92	பிப்ரவரி 2017–க்குள் முடிக்கப்படும்.
8.	நந்தம்பாக்கம்	6.00	அக்டோபர் 2016–க்குள் முடிக்கப்படும்.
9.	ஒக்கியம்– துரைப்பாக்கம்	46.00	பிப்ரவரி 2017–க்குள் முடிக்கப்படும்.
10.	ஈஞ்சம்பாக்கம்	22.30	செப்டம்பர் 2016–க்குள் முடிக்கப்படும்.
11.	சோழிங்கநல்லூர்– காரப்பாக்கம்	35.70	மார்ச் 2017–க்குள் முடிக்கப்படும்.
	2013–14 குடிநீர் வழங்கல் திட்டம்		
12.	சடையன்குப்பம்		
13.	இடையான்சாவடி	28.21	
14.	கடப்பாக்கம்		பிப்ரவரி 2017–க்குள் முடிக்கப்படும்.
15.	மணலி	21.33	
16.	சின்னசேக்காடு	11.00	
17.	வடபெரும்பாக்கம் மற்றும் தீயம்பாக்கம்	20.00	
18.	கொட்டிவாக்கம்	23.00	ஆகஸ்ட் 2017–க்குள் முடிக்கப்படும்.
19.	பெருங்குடி	45.00	மார்ச் 2017–க்குள் முடிக்கப்படும்.
20.	பாலவாக்கம்	30.00	ஆகஸ்ட் 2017–க்குள் முடிக்கப்படும்.

21.	சூரப்பட்டு	82.61	ஏப்ரல் 2017–க்குள் முடிக்கப்படும்
22.	கதிர்வேடு		
23.	புத்தகரம்		
24.	புழல்		
25.	பள்ளிக்கரணை	42.82	மறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு மதிப்பாய்வில் உள்ளது.
26.	முகலிவாக்கம்	31.37	
மொத்தம்		583.86	

5.2.6 ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டம் (JnNURM)

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் மத்திய அரசு 35 சதவிகிதம் மானியம் வழங்குகிறது, மாநில அரசு 15 சதவிகிதத்தை வட்டியில்லா கடனாக வழங்குகிறது. இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரங்கள் பின்வருமாறு:-

வ. எண்	திட்டத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹ கோடியில்)	பணியின் தற்போதைய நிலை
1.	சென்னை மாநகரின் குடிநீர் விநியோக அமைப்பில் மேம்பாட்டுப் பணிகள்	322.00	பணிகள் முடிவுற்றுள்ளன.
	குடிநீர் வழங்கல் திட்டம்		
2.	மதுரவாயல்	23.30	பணிகள் முடிவுற்றுள்ளன.
3.	திருவொற்றியூர்	85.11	
4.	அம்பத்தூர்	267.08	
5.	ஆலந்தூர் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுப் பணிகள்	64.39	

2016 ஆகஸ்ட் 5]

6.	உள்ளகரம்–புழுதிவாக்கம்	24.24	ஒரு பகுதி பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் அக்டோபர் 2016–க்குள் முடிக்கப்படும்.
7.	நெற்குன்றம்	19.17	செப்டம்பர் 2016–க்குள் முடிக்கப்படும்
மொத்தம்		**805.29**	
இதர உள்ளாட்சி அமைப்புகளுக்கான வைப்பு நிதிப் பணிகள்			
1.	ஆவடி	103.84	ஒரு பகுதி பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மீதமுள்ள பணிகள் செப்டம்பர் 2016–க்குள் முடிக்கப்படும்.
2.	அனகாபுத்தூர்	14.87	பணிகள் ஜூன் 2018–க்குள் முடிக்கப்படும்
3.	ஸ்ரீ பெரும்புதூர்	42.20	பணிகள் மார்ச் 2017–க்குள் முடிக்கப்படும்
மொத்தம்		**160.91**	

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டம் மத்திய அரசால் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

5.2.7 ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) திட்டம்

மாதவரம் பகுதிக்கான குடிநீர் வழங்கல் திட்டம் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் நிதி உதவியுடன் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. பணியின் விவரம் பின்வருமாறு:

திட்டம்	திட்ட மதிப்பீடு (₹ கோடியில்)	பணியின் தற்போதைய நிலை
மாதவரம்	55.00	பணிகள் நவம்பர் 2016–க்குள் முடிக்கப்படும்

[2016 ஆகஸ்ட் 5

5.2.8 தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-III (TNUDP-III)

வ எண்	திட்டம்	திட்ட மதிப்பீடு (₹ கோடியில்)	பணியின் தற்போதைய நிலை
1.	பம்மல்	43.10	பணிகள் செப்டம்பர் 2016–க்குள் முடிக்கப்படும்.
2.	பல்லாவரம்	99.95	பணிகள் ஏப்ரல் 2017–க்குள் முடிக்கப்படும்.
	மொத்தம்	**143.05**	

5.2.9 சென்னை மாநகரில் பழுதடைந்த குடிநீர் விநியோக குழாய்களை மாற்றி அமைக்கும் திட்டம் (I&A Fund)

சென்னை நகரில் மொத்தமுள்ள 6610 கிலோ மீட்டர் நீள குடிநீர் விநியோக குழாய்களில் 30 ஆண்டுகளுக்கும் மேல் பழமையான 914 கிலோ மீட்டர் நீளத்திற்கான குடிநீர் குழாய்களை கண்டறிந்து அவற்றில் சுமார் 258 கிலோ மீட்டர் நீளத்திற்கான குழாய்களை உலக வங்கி நிதி உதவியுடன் குடிநீர் கசிவு மற்றும் அதனை நிவர்த்தி செய்யும் திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்ட நிதி மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி திட்ட நிதி உதவியுடன் குடிநீர் விநியோகிக்கும் குழாய்களை மேம்படுத்தும் திட்டத்தின் மூலமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. அடுத்த கட்டமாக 310 கிலோ மீட்டர் நீளத்திற்கு பழமையான குழாய்களை மாற்றி புதிய குழாய்கள் பதிக்கும் பணிகளும், குடிநீர் கொண்டு செல்லும் புதிய பிரதான குழாய்கள் மற்றும் விடுபட்ட தெருக்களுக்கு புதிய குழாய்கள் பதிக்கும் பணிகளும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் சென்னை மாநகரின் குடிநீர் விநியோகத்தை மேலும் மேம்படுத்துவதற்காக மொத்தம் ₹116.04 கோடி மதிப்பீட்டில் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு விரைவில் பணி ஆணை வழங்கப்பட்டு பணி துவங்கப்பட உள்ளது.

5.2.10 தாம்பரம், பல்லாவரம் மற்றும் பம்மல் பகுதிகளுக்கு குடிநீர் கொண்டு செல்லும் பிரதான குழாய் பதித்தல்

பூந்தமல்லி புறவழிச் சாலை சந்திப்பில் இருந்து தாம்பரம் வரை 22 கி.மீ. நீளத்திற்கு 1,200 மில்லி மீட்டர் விட்டமுள்ள குடிநீர் கொண்டு செல்லும் பிரதான குழாய் பதித்து, தாம்பரம்,

2016 ஆகஸ்ட் 5]

பல்லாவரம், பம்மல் மற்றுமுள்ள உள்ளாட்சி பகுதிகளுக்கு குடிநீர் விநியோகத்தினை விரிவாக்கம் செய்யும் திட்டத்திற்கு உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதியில் இருந்து ₹93.48 கோடியில் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. தற்போது நடைபெற்று வரும் இப்பணிகள் ஆகஸ்ட் 2016-க்குள் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

5.3 கழிவுநீரகற்று சேவைகள்

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் கழிவுநீர் சுத்திகரித்தல், சுத்திகரிக்கப்பட்ட நீரினை மீண்டும் பயன்படுத்துதல் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் மின் உற்பத்தி செய்தல் உள்ளிட்ட கழிவுநீரகற்றல் வசதிகளை செய்து வருகிறது. சென்னையில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் சுத்திகரிப்பு திறன் நாளொன்றுக்கு 769 மில்லியன் லிட்டர் ஆகும்.

குடியிருப்புகளிலிருந்தும் மற்றும் பிற கட்டடங்களிலிருந்தும் வெளியேற்றப்படும் கழிவுநீர் 4000 கி. மீட்டர் நீளம் உள்ள கழிவுநீர் அமைப்பின்மூலம் சேகரிக்கப்படுகிறது. இவ்வாறு சேகரிக்கப்படும் கழிவுநீர் 232 கழிவுநீரேற்றும் நிலையங்களின்மூலம் அனுப்பப்படுகிறது. சென்னை மாநகரின் கழிவுநீர் அமைப்பு 5 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலமும் தனித்தனியான சேகரித்தல், அனுப்புதல், சுத்திகரித்தல் மற்றும் வெளியேற்றும் வசதிகளைக் கொண்டுள்ளது. கழிவுநீரேற்று நிலையங்களிலிருந்து அனுப்பப்படும் கழிவுநீர் 13 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் சுத்திகரிக்கப்படுகிறது.

கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் திறன்

வ. எண்	சுத்திகரிப்பு நிலையம்	திறன் (நாளொன்றுக்கு மில்லியன் லிட்டர்)
1.	நெசப்பாக்கம் (3 பிரிவுகள் 23+40+54)	117
2.	கொடுங்கையூர் (3 பிரிவுகள் 110+80+80)	270
3.	கோயம்பேடு (3 பிரிவுகள் 34+60+120)	214
4.	பெருங்குடி (2 பிரிவுகள் 79+72)	151
5.	வில்லிவாக்கம் (1 பிரிவு 5)	5
6.	ஆலந்தூர் (1 பிரிவு 12)	12
	மொத்தம் (13 பிரிவுகள்)	**769**

கட்டுமானப் பணியில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

வ. எண்	அமைவிடம்	சுத்திகரிப்பு திறன் (நாளொன்றுக்கு மில்லியன் லிட்டர்)	திட்ட மதிப்பீடு (₹ கோடியில்)	பணியின் தற்போதைய நிலை
1.	திருவொற்றியூர்	31	26.33	பணிகள் மார்ச் 2017–க்குள் முடிக்கப் படும்
2.	சோழிங்கநல்லூர்	18	33.71	பணிகள் டிசம்பர் 2016–க்குள் முடிக்கப் படும்
	மொத்தம்	49	60.04	

வாரியம் துவங்கிய 1978 ஆம் ஆண்டிலிருந்து வாரியத்தின் கழிவுநீரகற்றும் சேவைகள் கீழ்க்கண்டவாறு பன்மடங்காக வளர்ச்சி அடைந்துள்ளது.

கழிவுநீரகற்றும் சேவையில் முன்னேற்றங்கள்

வ. எண்	விவரங்கள்	1978 ஆம் ஆண்டில்	2016 ஆம் ஆண்டில்
1.	கழிவுநீரகற்று குழாய்களின் நீளம் (கி.மீ)	1,223	4000
2.	கழிவுநீரேற்று நிலையங்களின் எண்ணிக்கை	58	232
3.	கழிவுநீர் சுத்திகரிப்பு திறன் (நாளொறுக்கு மில்லியன் லிட்டரில்)	57	769
4.	நுகர்வோர்களின் எண்ணிக்கை	1,14,000	8,10,014

2016 ஆகஸ்ட் 5]

5.3.1 சென்னை பெருநகர வளர்ச்சித் திட்ட நிதியின்கீழ் கழிவுநீர் அகற்றும் திட்டங்கள் (CMCDM)

சென்னை மாநகருடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் பழைய சென்னை மாநகருக்கு இணையாக பாதாள சாக்கடை திட்டங்களை சென்னைப் பெருநகர வளர்ச்சி திட்டத்தின்கீழ் மேற்கொள்ள சென்னை குடிநீர் வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இத்திட்டத்தின்மூலம் சென்னைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரம், சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரம் பெருமளவில் மேம்படும். இந்நிதியின்கீழ் சென்னை மாநகருடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்காக கீழ்க்காணும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

42 இணைக்கப்பட்ட பகுதிகளின் பாதாள சாக்கடை திட்டங்களின் நிலவரம்

இணைக்கப்பட்ட பகுதிகளின் எண்ணிக்கை	பாதாள சாக்கடை பணிகள் முடிக்கப் பட்டவை	பணிகள் நடை பெறுபவை	நடைபெற உள்ளவை	
			விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப் பட்டவை	விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப் பட்டு வருபவை
42	4	16	11	11

கூடுதலாக இணைக்கப்பட்ட 42 பகுதிகளில் 4 பகுதிகளான மாதவரம், வளசரவாக்கம், ஆலந்தூர் மற்றும் மீனம்பாக்கம் ஆகியவற்றில் பணிகள் முடிவுற்றுள்ளன.

இணைந்த 16 பகுதிகளான திருவொற்றியூர், கத்திவாக்கம், சூரப்பட்டு, புத்தகரம், கதிர்வேடு, அம்பத்தூர், நொளம்பூர், மதுரவாயல், போரூர், உள்ளகரம்-புழுதிவாக்கம், பள்ளிக்கரணை, ராமாபுரம், பெருங்குடி, சோழிங்கநல்லூர் மற்றும் காரப்பாக்கம், ஆகியவற்றில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. முகலிவாக்கத்திற்கான பாதாள சாக்கடை திட்ட ஒப்பந்தம் நீக்கப்பட்டு, திட்ட மதிப்பீடு திருத்தி அமைக்கப்பட்டு மறு ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது.

[2016 ஆகஸ்ட் 5

இணைந்த 11 பகுதிகளான மணலி, சின்னசேக்காடு, இடையான்சாவடி, சடையன்குப்பம், கடப்பாக்கம், நெற்குன்றம், காரம்பாக்கம், மணப்பாக்கம், ஈஞ்சம்பாக்கம், ஒக்கியம்-துரைப்பாக்கம் மற்றும் ஜல்லடம்பேட்டை ஆகியவற்றிற்கு மத்திய அரசின் அம்ருட் மற்றும் பிற நிதிகளின்கீழ் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் விரைவில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

மீதமுள்ள இணைந்த 11 பகுதிகளான புழல், மாத்தூர், தீயம்பாக்கம், வடபெரும்பாக்கம், நந்தம்பாக்கம், கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை, மடிப்பாக்கம், செம்மஞ்சேரி மற்றும் உத்தண்டி ஆகிய பகுதிகளுக்கான பாதாள சாக்கடை திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை கலந்தாய்வினர்மூலம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கழிவு நீரகற்று பணிகள்

வ. எண்	திட்டத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹ கோடியில்)	பணியின் தற்போதைய நிலை
	2011–12 கழிவுநீர் மேம்பாட்டு திட்டங்கள்		
1.	கழிவு நீரேற்று நிலையங்களுக்கு இடையில் உந்து குழாய் பதித்தல்	9.26	பணிகள் நிறைவடைந்து பயன்பாட்டில் உள்ளன.
2.	பிரதான கழிவுநீரேற்று உந்து குழாய்களை பெரிதாக்குதல்	20.39	
3.	முகப்பேரில் பாதாள சாக்கடை அமைப்பின் திறப்பு வாயில்கள் அமைத்தல் மற்றும் நீர்மூழ்கி மின் இயந்திரத்துடன்கூடிய சாலை ஓர கழிவு நீரேற்று நிலையங்கள் கட்டுதல்	14.08	
4.	தற்பொழுது இயங்கிக் கொண்டிருக்கும் கழிவுநீரேற்று நிலையங்களின் மேம்பாட்டு பணிகள்	11.24	
5.	கழிவுநீர் பிரதான குழாய்களை பெரிதாக்குதல்	31.18	

6.	35 ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் 50 தூர் வாரும் இயந்திரங்கள் கொள்முதல் செய்தல்	9.90	இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன
7.	பிரதான கழிவுநீரேற்று உந்து குழாய்களை புதிய வழி தடத்தில் அமைத்தல், பெரிதாக்குதல் மற்றும் தொடர்புப் பணிகள்	36.55	பணிகள் டிசம்பர் 2016–க்குள் முடிக்கப்படும்
2012–13 பாதாளச் சாக்கடைத் திட்டம்			
8.	கத்திவாக்கம்	86.15	பணிகள் செப்டம்பர் 2016–க்குள் முடிக்கப்படும்
9.	சோழிங்கநல்லூர்–காரப்பாக்கம்	110.90	பணிகள் மார்ச் 2017–க்குள் முடிக்கப்படும்
10.	இராமாபுரம்	48.50	பணிகள் மார்ச் 2017–க்குள் முடிக்கப்படும்
11.	கழிவுநீர் அமைப்பின் பராமரிப்புக்காக இயந்திரங்கள் கொள்முதல்	15.20	இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன
2013–14 பாதாளச் சாக்கடைத் திட்டம்			
12.	திருவொற்றியூர் (அன்னை சிவகாமி நகர்)	8.51	பணிகள்நிறைவடைந்து பயன்பாட்டில் உள்ளன.
13.	நொளம்பூர்	26.01	பணிகள் ஆகஸ்ட் 2017–க்குள் முடிக்கப்படும்

[2016 ஆகஸ்ட் 5

14.	சூரப்பட்டு	35.00	பணிகள் செப்டம்பர் 2017–க்குள் முடிக்கப்படும்
15.	புத்தகரம் மற்றும் கதிர்வேடு	60.00	பணிகள் செப்டம்பர் 2017–க்குள் முடிக்கப்படும்
16.	முகலிவாக்கம்	54.79	மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது
	மொத்தம்	**577.66**	

5.3.2 ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டம் (JnNURM)

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் மத்திய அரசு 35 சதவீதம் மானியம் வழங்குகிறது. மாநில அரசு 15 சதவீதத்தை வட்டியில்லா கடனாக வழங்குகிறது. இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகள் பின்வருமாறு:

வ. எண்	திட்டத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹ கோடியில்)	பணியின் தற்போதைய நிலை
1.	தகவல் தொழில்நுட்ப சாலையில் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வசதிகள் அமைக்கும் பணிகள்	41.77	பணிகள் முடிவுற்றுள்ளன
	பாதாள சாக்கடைத் திட்டம்		
2.	உள்ளகரம்–புழுதிவாக்கம்	28.08	பணிகள் டிசம்பர் 2016–க்குள் முடிக்கப்படும்
3.	அம்பத்தூர் (சிப்பம்–II, III, IV & V)	130.91	சிப்பம் III, IV & V ஆகியவற்றின் பணிகள் முடிவுற்றுள்ளன. சிப்பம் II-ற்கான பணிகள் மார்ச் 2017–க்குள் முடிக்கப்படும்

2016 ஆகஸ்ட் 5]

4.	மதுரவாயல்	**57.45**	பணிகள் டிசம்பர் **2016–க்குள்** முடிக்கப்படும்
5.	போரூர்	**38.29**	பணிகள் செப்டம்பர் **2016–க்குள்** முடிக்கப்படும்
6.	பெருங்குடி	**20.19**	பணிகள் மார்ச் 2017–க்குள் முடிக்கப்படும்
7.	பள்ளிக்கரணை	**58.61**	பணிகள் டிசம்பர் 2016–க்குள் முடிக்கப்படும்
	மொத்தம்	**375.30**	
இதர உள்ளாட்சி அமைப்புகளுக்கான வைப்புத் தொகை பணிகள்			
8.	ஆவடி நகராட்சி	**158.05**	பணிகள் டிசம்பர் **2016–க்குள்** முடிக்கப்படும்.
9.	தாம்பரம் நகராட்சி	**160.97**	பணிகள் மார்ச் **2017–க்குள்** முடிக்கப்படும்.
10.	திருமழிசை பேரூராட்சி	**20.47**	பணிகள் டிசம்பர் 2016–க்குள் முடிக்கப்படும்
11.	ஸ்ரீபெரும்புதூர் பேரூராட்சி	**47.40**	பணிகள் மார்ச் 2017–க்குள் முடிக்கப்படும்.
	மொத்தம்	**386.89**	

[2016 ஆகஸ்ட் 5

5.3.3 தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்– III (TNUDP-III)

இத்திட்டத்தின்கீழ், கீழ்க்கண்ட 3 பகுதிகளுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

வ. எண்	திட்டத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு (₹ கோடியில்)	பணியின் தற்போதைய நிலை
1.	மாதவரம்	50.22	பணிகள் முடிவுற்றுள்ளன
2.	திருவொற்றியூர்	87.63	பணிகள் அக்டோபர் 2016–க்குள் முடிக்கப்படும்
3.	அம்பத்தூர் (பகுதி –I)	65.75	பணிகள் நிறைவடைந்தன
	மொத்தம்	203.60	

5.3.4 தமிழ்நாடு முதலீட்டு மேம்பாட்டு திட்டம் (TNIPP)

சோழிங்கநல்லூரில் நாளொன்றுக்கு 54 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கும் திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிக்கும் நிலையம் விரிவாக்கம் செய்யப்பட்ட சென்னை மாநகரத்தின் தெற்கு பகுதிகளிலிருந்து உற்பத்தியாகும் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்வதற்கு சோழிங்கநல்லூரில் கூடுதலாக நாளொன்றுக்கு 54 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ₹65.97 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ளது. இந்த சுத்திகரிப்பு நிலையம் நவீன தொழில்நுட்பத்துடனும் அதில் 36 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதற்கான பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளன.

5.3.5 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து மின்சாரம் தயாரித்தல்

சென்னைக் குடிநீர் வாரியம் கடந்த 9 ஆண்டுகளில் நாளொன்றுக்கு 498 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட 7 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை துவக்கியுள்ளது.

2016 ஆகஸ்ட் 5]

இந்த சுத்திகரிப்பு நிலையங்களில் உயிரி வாயு (Bio-Gas) மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த மின்சாரம் சுத்திகரிப்பு நிலையங்களின் இயக்கத்திற்கு தேவையான மின்சாரத் தேவையை பூர்த்தி செய்ய பயன்படுத்தப்படுகிறது.

கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து மின்சாரம் தயாரித்தல் 2015–16

வ. எண்	கழிவுநீர் சுத்திகரிக்கும் நிலையம்	கழிவுநீர் சுத்திகரிக்கும் திறன் (நா.மி.லி)	சராசரி தயாரிக்கும் மின்சார அளவு KwH/day	தேவை யான மின்சாரத்தின் அளவு KwH/day	தேவையின் மீது தயாரிக்கப் படும் அளவின் சதவிகிதம்
1.	கொடுங்கையூர்	110	14,000	13,500	103.70
2.	கோயம்பேடு	60	5,000	9,000	55.55
3.	கோயம்பேடு	120	8,400	14,000	60.00
4.	நெசப்பாக்கம்– I	40	5,800	5,800	100.00
5.	நெசப்பாக்கம்–II	54	3,000	9,000	33.33
6.	பெருங்குடி –I	60	7,200	8,500	84.71
7.	பெருங்குடி –II	54	7,000	8,500	82.35
மொத்தம்		498	50,400	68,300	73.79

இதன்மூலம், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், மின் தேவைக்காகத் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தை சார்ந்திருக்கும் நிலையில் இருந்து 74% குறைந்துள்ளது. கடந்த 9 வருடங்களில், ₹47.70 கோடி மதிப்பிலான மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 2015-16-ல் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தின் மதிப்பு ₹8.10 கோடியாகும். இனிவரும் காலங்களில் நிறுவப்பட உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் சாத்தியக் கூறுகள் உள்ள இடங்களில் இம்முயற்சியினைத் தொடர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் மின் உற்பத்திக்கு உயிரி வாயு (Bio-gas) பயன்படுத்தப்படுவதால் புவி வெப்பத்தை அதிகரிக்கும் திறன் கொண்ட மீத்தேன் மற்றும் கரியமில வாயுக்கள்

சுற்றுச்சூழலில் வெளியேற்றப்படுவது தவிர்க்கப்படுவதுடன், மாநில மின் கட்டமைப்பில் இருந்து பயன்படுத்தப்படும் மின்சாரத்தின் அளவும் குறைந்துள்ளது.

5.3.6 கழிவுநீர் அகற்றும் பணிகளை இயந்திரமயமாக்குதல்

கழிவுநீர் அகற்றும் அமைப்பை சுத்தம் செய்யும் பணிகளில் இயந்திரமயமாக்கலை வாரியம் நடைமுறைபடுத்தியுள்ளது. இதற்கு தேவையான இயந்திரங்களை சென்னைக் குடிநீர் வாரியம் வாங்கியுள்ளது. தற்போது 119 ஜெட்ராடிங் இயந்திரங்கள், 241 தூர் வாரும் இயந்திரங்கள், 28 ஜெட்டிங் மற்றும் உறிஞ்சும் இயந்திரங்கள் மற்றும் 43 அதிவேக உறிஞ்சும் இயந்திரங்கள் கழிவுநீர் அமைப்பினை பராமரித்திட பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

5.3.7 கழிவுநீரகற்ற முன்னெச்சரிக்கை பராமரிப்பு பணிகள்

சென்னைக் குடிநீர் வாரியம், 8,10,014 கழிவுநீரகற்று இணைப்புள்ள நுகர்வோரின் பயன்பாட்டிற்காக 4000 கி.மீ. நீளமுள்ள கழிவுநீர் குழாய்களை பராமரித்து வருகிறது. சென்னை மாநகரின் புவி தளம் சமமாக உள்ளதால் கழிவுநீர் கட்டமைப்பை பராமரிப்பு செய்தல் சவாலான பணியாக உள்ளது.

சென்னைக் குடிநீர் வாரியம், கழிவுநீர் அமைப்புகளில் முன்னெச்சரிக்கை பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதை நடைமுறைபடுத்தியுள்ளது. கள நிலையை பொறுத்து கழிவுநீர் அமைப்புகளின் பராமரிப்பு காலம் வகைப்படுத்தப்படுகிறது. இதன் அடிப்படையில் உரிய இயந்திரங்களைக் கொண்டு கழிவுநீர் அமைப்பினை வாரியம் பராமரித்து வருகிறது.

மேற்கண்ட முன்னெச்சரிக்கை பராமரிப்புப் பணியினால் மாநகரில் கழிவுநீர் அடைப்புகள் குறிப்பிடத்தக்க வகையில் குறைந்துள்ளன.

5.3.8 நீர்வழிப் பாதையில் கழிவுநீர் கலப்பதைத் தடுத்தல்

சென்னை நகர நீர்வழிப் பாதைகளில் 337 இடங்களில் கழிவு நீர் கலப்பதை நிறுத்த 2012-13 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ₹300 கோடி ஒதுக்கப்பட்டது. இதன்மூலம் சென்னை நகர நீர்வழிப் பாதைகளில் சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் கலப்பதை தடுக்க இயலும். இக்கழிவுநீர் உரிய வகையில் சுத்திகரிக்கப்பட்டு வெளியேற்றப்படும்.

2016 ஆகஸ்ட் 5]

முதல் கட்டமாக உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதியிலிருந்து ₹150 கோடி ஒப்பளிக்கப்பட்டு, மொத்தமுள்ள 337 இடங்களில், 179 இடங்களில் கழிவுநீர் கலப்பதை தடுப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் ஜனவரி 2017-ல் முடிக்கப்படும்.

இரண்டாவது கட்டமாக சென்னை நகரின் நீர்வழித் தடத்தில் கழிவுநீர் கலக்கும் மீதமுள்ள 158 இடங்களில் 7 சிப்பங்களாக பணிகள் மேற்கொள்ள ₹163 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

சிப்பம் 1 அடையாறு நீர்வழி பாதையில் 60 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. பக்கிங்காம் கால்வாய் மற்றும் கூவம் நதி வடிகால் பகுதிகளைச் சார்ந்த 3 சிப்பங்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 3 சிப்பங்களுக்காக ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு, மதிப்பாய்வு செய்யப்பட்டு 1 சிப்பம் பரிசீலனையில் உள்ளது. மீதமுள்ள 2 சிப்பங்களின் ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்பட்டு, ஒரு சிப்பத்திற்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு மதிப்பாய்வில் உள்ளது. மீதமுள்ள 1 சிப்பத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

5.3.9 சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை தொழிற்சாலைகளுக்கு மறு பயன்பாட்டுக்கு அளித்தல்

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் நாளொன்றுக்கு 28.67 மில்லியன் லிட்டர் இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை சென்னை பெட்ரோலியம் கார்ப்பொரேஷன் லிமிடெட், சென்னை உரத்தொழிற்சாலை லிமிடெட் மற்றும் மணலி பெட்ரோ இராசயன பொருட்கள் தொழிற்சாலைக்கும் வழங்கி வருகிறது. இதன்மூலம் வாரியத்திற்கு 2015-16 ஆம் ஆண்டில் ₹14.27 கோடி வருமானம் கிடைத்தது.

5.3.10 கழிவுநீர் மறு சுழற்சி திட்டங்கள்

சென்னை மாநகரில் குடிநீர் தட்டுப்பாட்டை குறைக்கும் நடவடிக்கையாக பயன்படுத்தப்பட்ட நீரை சுத்திகரித்து குடிநீர் அல்லாத பிற உபயோகங்களுக்கு பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை, குடிநீரல்லாத பிற உபயோகங்களுக்கு உபயோகிப்பது குறைக்கப்படும்.

5.3.10.1 கழிவுநீரை மறுசுழற்சி முறையில் சுத்தம் செய்து மீண்டும் உபயோகப்படுத்துதல்

கோயம்பேட்டில் 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன்கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம்

இருங்காட்டுக் கோட்டை, ஸ்ரீபெரும்புதூர் மற்றும் ஒரகடம் ஆகிய பகுதிகளிலுள்ள தொழிற்சாலைகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை வழங்க ₹394 கோடி மதிப்பீட்டில் கோயம்பேட்டில் நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் (Teritiary Treatment Reverse Osmosis) *அமைக்க தமிழக அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்திற்கான பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. பணி விரைவில் தொடங்கப்படும்.*

5.3.10.2 கொடுங்கையூரில் 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சட்டப் பேரவையில், சுத்திகரிக்கப்பட்ட நீரை தொழிற்சாலைகளுக்கு பயன்படுத்துவதற்குப் பதிலாக இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில், மூன்றாம் நிலை சுத்திகரிப்பு செய்து வடசென்னை பகுதியில் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் மின்சார வாரிய மின் உற்பத்தி நிலையங்களுக்கு வழங்குவதற்காக அறிவித்தார்கள். இதற்காக கொடுங்கையூரில் நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையிலான மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் ₹255 கோடி மதிப்பீட்டில் TNSUDP *நிதியின்கீழ் அமைக்கப்படும். தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு மதிப்பாய்வில் உள்ளது.*

5.4 நீடித்த குடிநீர் ஆதார பாதுகாப்பு இயக்கம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சென்னை மாநகருக்கு தேவைப்படும் தண்ணீரை தொடர்ந்து பாதுகாப்புடன் கிடைப்பதை உறுதி செய்யும்பொருட்டு நீடித்த குடிநீர் ஆதார பாதுகாப்பு இயக்கத்தை அறிவித்தார்கள். இத்திட்டத்தின்கீழ்

2016 ஆகஸ்ட் 5]

பெருவளாகங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை நிறுவி அதன்மூலம் மழைநீரைச் சேமித்தல், நகரை சுற்றியுள்ள ஏரிகளை சீரமைத்தல், மழைநீர் வடிகால்களில் இருந்து பெறப்படும் மழைநீரை சேகரித்து நீரூற்றுக் கிணறுகள்மூலம் நிலத்தடி நீராதாரத்தை மேம்படுத்துதல், நீர்நிலைகளின் எல்லைகளை வரையறை செய்தல், மறுசுழற்சிமூலம் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரைக் கொண்டு குடிநீரல்லாத பிற உபயோகங்களுக்குப் பயன்படுத்தவும், நீர்நிலைகளின் நீராதாரங்களை மேம்படுத்தவும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பெருவளாகங்களில் மழைநீர் சேகரிப்பு

பெருவளாகங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை நிறுவும் பணிகளின்கீழ் மாநிலக் கல்லூரி வளாகம், சேப்பாக்கம், அரசினர் உயர்நிலைப் பள்ளி வளாகம், மாத்தூர், பொப்பிலி ராஜா மேல்நிலைப் பள்ளி. புழல், அம்பத்தூர் மற்றும் வளசரவாக்கம், சென்னை மாநகராட்சி மண்டல அலுவலகம் ஆகிய ஐந்து பகுதிகளில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

கோவில் குளங்களில் மழைநீர் சேகரிப்பு

கோவில் குளங்களில் மழைநீர் சேகரிப்புத் திட்டத்தின்கீழ் திருவொற்றியூர் வடிவுடையம்மன் கோவில் குளம் மற்றும் மைலாப்பூர் மாதவப் பெருமாள் கோவில் குளங்களில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

மழைநீர் வடிகால்மூலம் மழைநீர் சேகரித்தல்

மழைநீர் வடிகால்களிலிருந்து பெறப்படும் மழைநீரைக் கொண்டு நிலத்தடி நீராதாரத்தை மேம்படுத்தும் திட்டத்தின்கீழ், கொளத்தூரில் உள்ள டீச்சர்ஸ் காலனி 6-வது பிரதான சாலை, மற்றும் 4-வது குறுக்குத் தெருவில் அமைந்துள்ள பூங்காக்களில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

நீர்நிலைகளை புனரமைத்தல்

நீர்நிலைகளை மறு சீரமைத்தல் மற்றும் புனரமைப்பு செய்யும் திட்டத்தின்கீழ், சோளிங்கநல்லூர் மற்றும் பெருங்களத்தூர் பகுதிகளில் அமைந்துள்ள ஏரிகளில் அரசு சாரா பொது நல சங்கங்களின் உதவியுடன் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

[2016 ஆகஸ்ட் 5

மழைநீர் சேகரிப்பில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தொலைநோக்கு சிந்தனையுடன் மேற்கொண்ட முயற்சிகளின் காரணமாக, மழைநீர் சேகரிப்பினை சென்னைக் குடிநீர் வாரியம் 2002 முதல் நடைமுறைப்படுத்தி வருகிறது. இதன்மூலம் சென்னை நகரம் மழைநீர் சேகரிப்பில் முன்னோடியாக திகழ்கிறது. சென்னைக் குடிநீர் வாரியம் மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை மக்களிடையே பிரபலமடையச் செய்ய கையேடுகள், குறிப்பேடுகள், கருத்தரங்குகள் மற்றும் பொருட்காட்சிகள் ஆகியவைமூலம் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது.

குடிநீர் மற்றும் கழிவுநீர் புது இணைப்பை பெறுவதற்கும், பழைய இணைப்பைப் புதுப்பிப்பதற்கும், மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்துவது அனைத்து கட்டடங்களுக்கும் கட்டடங்களின் அளவு மற்றும் பரப்பு வித்தியாசம் இல்லாமல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சென்னையில் தற்போது சுமார் 7,82,670 கட்டடங்களில், மொத்தம் 8,47,500 மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் உள்ளன. 2015-16 ஆம் ஆண்டு 10,500 மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைக்கப்பட்டன. மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள்மூலம் நிலநீர் செறிவூட்டு திறன் 2.60 ஆயிரம் மில்லியன் கன அடி (TMC) ஆக உள்ளது. முறையாகவும், தொடர்ச்சியாகவும் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை பராமரிக்க நுகர்வோர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் சிறப்பு முகாம்கள் வருடந்தோறும் நடத்தப்படுகிறது. சென்னை நகரில் உள்ள மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை பகுதிப் பொறியாளர்களும், பணிமனை பொறியாளர்களும் தொடர்ந்து கண்காணித்து வருகிறார்கள்.

மழைநீர் சேகரிக்கும் திட்டத்தைச் செயல்படுத்தியதால், ஒவ்வொரு வருடமும் குறிப்பாக மழைக்காலத்தில் நிலத்தடி நீரின் மட்டமும் தரமும் ஆண்டுதோறும் மேம்பட்டு வருகிறது.

5.5 குறைகளைக் களைதல்

வாரியத்தின் சேவைகளை மேம்படுத்தவும், வெளிப்படைத் தன்மையை அதிகரிக்கவும் மற்றும் நுகர்வோர்களின் குறைகளை விரைந்து களையவும், வாரியம் கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

2016 ஆகஸ்ட் 5]

5.5.1 24X7 புகார்களைப் பதிவு செய்தல் மற்றும் கண்காணிக்கும் அமைப்பு

சென்னை குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் குறைகள் களையும் பிரிவு 24 மணி நேரமும் வாரத்தின் எல்லா நாட்களும் புகார்களை பெறவும், பதிவு செய்யவும், கண்காணிக்கவும் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி எண் 45674567 மூலமாகவோ, நுகர்வோர் தங்களது புகார்களையும்/குறைகளையும் பதிவு செய்யலாம். பதிவு செய்யப்பட்ட புகார்கள்/குறைகள் அந்தந்த பணிமனைப் பொறியாளர்களுக்கு தாமதமின்றி இணையதளம் மூலமும், குறுந்தகவல் சேவை மூலமும் அனுப்பப்பட்டு உடனுக்குடன் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. புகார் பிரிவில் சராசரியாக ஒரு நாளைக்கு 85 புகார்கள் பதிவு செய்யப்படுகின்றன. குறை நிவர்த்தி அமைப்பு பொது மக்களால் எளிதாக பயன்படுத்தும் விதத்தில் சீரமைப்பு செய்யப்பட்டுள்ளது. ஒரு தனியான நுகர்வோர் குறை தீர்க்கும் பிரிவு தலைமை அலுவலகத்தில் நுகர்வோர்களுக்கு சேவை செய்ய அமைக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் தங்களது புகார்களை அலைபேசி தொடர்பு மூலமாக பதிவு செய்தவுடன், புகார் பெறப்பட்டதற்கான ஒப்புகையை வாரியத்திடமிருந்து குறுந்தகவல் சேவை மூலமாக பெற சென்னைக் குடிநீர் வாரியம் குறுந்தகவல் சேவை முறையை (SMS) செயல்படுத்தியுள்ளது. புகார்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்ட பிறகு, மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரங்கள் குறித்து நுகர்வோருக்கு மீண்டும் குறுந்தகவல் சேவை மூலமாக தகவல் தரப்படுகிறது.

5.5.2 இணையதளம்மூலம் புகார்களை நிவர்த்தித்தல்

சென்னைக் குடிநீர் வாரியம் www.chennaimetrowater.tn.nic.in இணையதளத்தை கொண்டுள்ளது. நுகர்வோர் தங்களின் புகார்களை வாரியத்தின் இணையதளத்தின்மூலம் பதிவு செய்ய முடியும். அவ்வாறு பதிவு செய்யப்பட்ட புகார்கள் நிவர்த்திக்க சம்பந்தப்பட்ட பகுதி அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு மக்கள் சாசனத்தில் குறிப்பிட்டபடி நிவர்த்திக்கப்படுகிறது.

[2016 ஆகஸ்ட் 5

5.5.3 திறந்தவெளி குறை தீர்க்கும் கூட்டம்

வாரியம், சேவை வழங்குதலை மேம்படுத்துவதற்காக, திறந்தவெளி குறை தீர்ப்பு கூட்டங்கள் (Open House Meeting) வாரியத்தின் அனைத்து பகுதி அலுவலகங்களிலும், ஒவ்வொரு மாதமும், இரண்டாம் சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை நடத்தப்பட்டு வாரியத்தின் மூத்த அதிகாரிகள் இந்த கூட்டங்களில் தலைமை தாங்குகின்றனர். இக்கூட்டங்களில் பெறப்படும் புகார்கள் / குறைகள் / ஆலோசனைகள்மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

2016 ஆகஸ்ட் 5]

6. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சென்னை மாநகர் நீங்கலாக மாநிலம் முழுவதும் உள்ள ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கு குடிநீர்த் திட்டங்கள் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களைச் செயல்படுத்தும் நோக்குடன் சட்டபூர்வமான ஒரு நிறுவனமாக 14.04.1971 அன்று தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலகம், மேலாண்மை இயக்குநரை தலைவராகக் கொண்டு தொழில்நுட்ப பிரிவு, நிதி பிரிவு மற்றும் நிருவாகப் பிரிவுகளுடன் சென்னையில் இயங்கி வருகிறது. தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வேலூர், தஞ்சாவூர், கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய நகரங்களை தலைமையிடமாகக் கொண்டு, நான்கு தலைமைப் பொறியாளர்களுடனும் மற்றும் தருமபுரியில் திட்ட தலைமைப் பொறியாளருடனும் இயங்கி வருகின்றது.

6.1 தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் செயல்பாடுகள்

அ. ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கான குடிநீர் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களுக்கான திட்டமிடுதல், ஆய்வு, வடிவமைப்பு, செயலாக்கம் மற்றும் மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வருதல்.

ஆ. கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல்

இ. குடிநீர் தரக் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு

ஈ. குடிநீர் ஆதாரங்களின் நீடித்த நிலைத் தன்மைக்கான செயல்பாடுகள்

உ. பயிற்சி நடவடிக்கைகள்

6.2 ஊரகக் குடிநீர்த் திட்டம்

கடந்த 40 ஆண்டுகளாக, மத்திய அரசு ஊரகப் பகுதி மக்களுக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் என வரையறுக்கப்பட்டதை தற்போது 12-வது ஐந்தாண்டு திட்டக்காலத்தில் 55 லிட்டர் என தற்காலிகமாக உயர்த்தியுள்ளது. 2017 ஆம் ஆண்டின் முடிவில் நாட்டிலுள்ள 50 விழுக்காடு கிராம மக்களுக்கு வீட்டிற்கு அருகாமையிலேயே வீட்டிணைப்புடன் அல்லது வீட்டிலிருந்து 100

மீட்டர் தொலைவில் (மற்றும் மலைப்பகுதியில் 10 மீட்டர் உயரத்திலும்) நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கும் வண்ணம் திட்டங்கள் செயல்படுத்த இலக்கிடப்பட்டுள்ளது.

ஊரகக் குடியிருப்புகளில் தற்போது வழங்கப்பட்டு வரும் குடிநீரின் அளவிற்கும் வரையறுக்கப்பட்ட அளவிற்குமான இடைவெளியை ஆய்வு செய்து குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஊரக குடிநீர்த் திட்டங்கள் மாநில அரசின் குறைந்தபட்சத் தேவைத் திட்டம், மத்திய அரசின் தேசிய ஊரக குடிநீர்த் திட்டம் மற்றும் தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி ஆகியவற்றின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும்பொருட்டு கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயலாக்கப்பட்டு வருகின்றன. பயனாளி ஒரே ஒரு உள்ளாட்சி அமைப்பாக இருந்தால் திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட பின்னர் பராமரிப்பிற்காக அந்த உள்ளாட்சி அமைப்பிடம் ஒப்படைக்கப்படுகின்றன. பயனாளிகள் ஒரு உள்ளாட்சி அமைப்பிற்கு மேல் இருந்தால், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமே திட்டங்களின் பராமரிப்பை மேற்கொள்கிறது.

01-04-2016 அன்றைய நிலவரப்படி தமிழ்நாட்டில் மொத்தம் 1,00,018 ஊரக குடியிருப்புகள் உள்ளன. இவற்றில் 90,694 ஊரக குடியிருப்புகள், நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு, முழுமையான குடிநீர் வசதி பெற்றுள்ளன. குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட 351 குடியிருப்புகளோடு சேர்த்து 9,324 குடியிருப்புகள் பகுதியளவு குடிநீர் வசதி பெற்றுள்ளன.

2016-17 ஆம் ஆண்டில், ஏற்கெனவே செயலாக்கத்தில் உள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின்மூலம் 351 குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளோடு சேர்த்து பகுதியளவு குடிநீர் வசதி பெற்ற 3,269 குடியிருப்புகள் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இது தவிர, பகுதியளவு குடிநீர் வசதி பெற்ற 5,588 ஊரகக் குடியிருப்புகளுக்கு ஏற்கெனவே செயலாக்கத்தில் உள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மூலமாக குடிநீர் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மீதமுள்ள

2016 ஆகஸ்ட் 5]

467 பகுதியளவு குடிநீர் வழங்கப்பட்ட குடியிருப்புகளுக்கு முழுமையான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க 2017-18 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும்.

6.3 குடிநீர் ஆதாரங்களின் நீடித்த நிலைத் தன்மை

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் குடிநீர்த் திட்டங்களைச் செயலாக்குவதோடு அல்லாமல் குடிநீர் ஆதாரங்களின் நீடித்த நிலைத் தன்மையை மேம்படுத்த குடிநீர் ஆதாரங்களின் அருகே தடுப்பணைகள், செறிவூட்டுக் குழாய்கள், கசிவுநீர் குட்டைகள் போன்ற நீர் செறிவூட்டுக் கட்டமைப்புகள் நிர்மாணிக்கும் பணிகளையும் மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியுடன் செயல்படுத்தி வருகிறது.

2011-12, 2012-13, 2013-14 மற்றும் 2014-15 ஆம் ஆண்டுகளில் 3,348 நீர் செறிவூட்டுக் கட்டமைப்புகள் ₹228.24 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ளன.

6.4 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

மக்களுக்கு போதிய அளவு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் நோக்குடன் மாநிலத்தின் கடலோரப் பகுதிகள், குடிநீரின் தரம் பாதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் குடிநீர் தேவை உள்ள பகுதிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து, ஆறுகள், அணைக்கட்டுகள் மற்றும் நீர்த்தேக்கங்களை பொதுவான நீராதாரமாகக் கொண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகரங்கள் மற்றும் ஊரக குடியிருப்புகள் பயன்பெறும் வண்ணம் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைச் செயலாக்கி வருகின்றது.

2015-2016 ஆம் ஆண்டில், 27.79 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் குறைந்தபட்ச தேவைத் திட்டம், தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி, தேசிய ஊரகக் குடிநீர்த் திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டம், சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் நிதி உதவியுடன் 27 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் ₹924.92 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டன. விவரங்கள் பின்வருமாறு:

[2016 ஆகஸ்ட் 5

கீழ்க்காணும் 6 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் 3.15 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ₹94.55 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன:

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (₹ கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)
1.	திருச்சி மாவட்டம், அந்தநல்லூர், மணிகண்டம் மற்றும் மணப்பாறை ஒன்றியங்களைச் சார்ந்த 212 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	48.67	1.14
2.	திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஒன்றியத்தைச் சார்ந்த 93 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் (வேடசந்தூர் பிரதான கூட்டுக் குடிநீர் திட்ட மொத்த ஒதுக்கீட்டின் கீழ்)	9.37	0.37
3.	திருநெல்வேலி மாவட்டம் மானூர் மற்றும் பாளையங்கோட்டை ஒன்றியங்களைச் சார்ந்த 34 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	6.35	0.22
4.	திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர், குஜிலியம்பாறை மற்றும் ஒட்டன்சத்திரம் ஒன்றியங்களைச் சார்ந்த 235 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் (வேடசந்தூர் பிரதான கூட்டுக் குடிநீர் திட்ட மொத்த ஒதுக்கீட்டின் கீழ்)	5.50	0.73

2016 ஆகஸ்ட் 5]

5.	தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி பேரூராட்சி, ஆழ்வார்திருநகரி (பகுதி), திருச்செந்தூர் (பகுதி), சாத்தன்குளம் (பகுதி) மற்றும் உடன்குடி (பகுதி) ஒன்றியங்களைச் சார்ந்த 30 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	9.19	0.30
6.	கோயம்புத்தூர் மாவட்டம், ஜமீன் ஊத்துக்குளி பேரூராட்சி மற்றும் 63 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	15.47	0.39
	மொத்தம்	**94.55**	**3.15**

மேலும், பின்வரும் 18 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், 20.31 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ₹640.76 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்தில் உள்ளன.

வ. எண்	திட்டத்தின் பெயர்	மொத்த மதிப்பீடு (₹ கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)	பணி முன்னேற்ற விவரம்
1.	கோயம்புத்தூர் மாவட்டம், காரமடை ஒன்றியத்திலுள்ள 9 கிராம ஊராட்சிகளைச் சார்ந்த 185 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் அபிவிருத்தித் திட்டம்	42.94	0.81	96 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
2.	ஈரோடு மாவட்டம், பவானிசாகர், நம்பியூர் ஒன்றியங்களைச் சார்ந்த காரப்பாடி மற்றும் 5 இதர கிராம ஊராட்சிகளிலுள்ள 88 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	11.72	0.19	95 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

[2016 ஆகஸ்ட் 5

வ. எண்	திட்டத்தின் பெயர்	மொத்த மதிப்பீடு (₹ கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)	பணி முன்னேற்ற விவரம்
3.	அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஒன்றியத்தைச் சார்ந்த 281 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.	26.06	1.09	87 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
4.	திருப்பூர் மாவட்டம், குடிமங்கலம் மற்றும் உடுமலைப்பேட்டை ஒன்றியங்களைச் சார்ந்த 158 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	54.14	1.23	85 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
5.	ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களைச் சார்ந்த வெள்ளக்கோயில், காங்கேயம் நகராட்சிகள் மற்றும் 528 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	91.40	4.72	85 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
6.	தூத்துக்குடி மாவட்டம் கருங்குளம் (பகுதி), ஸ்ரீவைகுண்டம் (பகுதி) மற்றும் தூத்துக்குடி (பகுதி) ஒன்றியங்களைச் சார்ந்த 90 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	17.17	0.48	75 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
7.	கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் ஒன்றியத்தைச் சார்ந்த குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட 60 குடியிருப்புகள், 59 வழிபோரக் குடியிருப்புகள் மற்றும் லால்பேட்டை பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	18.16	0.60	65 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

2016 ஆகஸ்ட் 5]

வ. எண்	திட்டத்தின் பெயர்	மொத்த மதிப்பீடு (₹ கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)	பணி முன்னேற்ற விவரம்
8.	தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி (பகுதி), கயத்தார் (பகுதி), ஒட்டப்பிடாரம் (பகுதி), விளாத்திகுளம் (பகுதி) மற்றும் புதூர் (பகுதி) ஒன்றியங்களைச் சார்ந்த 248 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	94.04	1.25	60 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
9.	தேனி மாவட்டம், கடமலைகுண்டு – மயிலாடும்பாறை ஒன்றியத்தைச் சார்ந்த ஆத்தங்கரைப்பட்டி மற்றும் 14 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	2.65	0.07	60 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
10.	திருநெல்வேலி மாவட்டம், கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு அருகிலுள்ள இராதாபுரம் மற்றும் வள்ளியூர் ஒன்றியங்களைச் சார்ந்த கூடங்குளம் மற்றும் 12 ஊராட்சிகளைச் சார்ந்த 100 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	68.10	0.88	60 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
11.	திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் மற்றும் சங்கரன்கோவில் ஒன்றியங்களைச் சார்ந்த 147 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் அபிவிருத்தித் திட்டம்	31.32	1.56	54 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

[2016 ஆகஸ்ட் 5

வ. எண்	திட்டத்தின் பெயர்	மொத்த மதிப்பீடு (₹ கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)	பணி முன்னேற்ற விவரம்
12.	திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் பேரூராட்சி (பகுதி), பாப்பாக்குடி (பகுதி), கடையம் மற்றும் கீழப்பாவூர் ஒன்றியங்களைச் சார்ந்த 163 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	46.55	1.55	54 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
13.	நீலகிரி மாவட்டம், முள்ளிகூர், இத்தலார் மற்றும் நஞ்சநாடு ஊராட்சிகளைச் சார்ந்த முள்ளிகூர் மற்றும் 54 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	25.85	0.30	52 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
14.	திருநெல்வேலி மாவட்டம், மானூர் (பகுதி) மற்றும் பாளையங்கோட்டை (பகுதி) ஒன்றியங்களைச் சார்ந்த 170 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	32.40	1.13	41 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
15.	திண்டுக்கல் மாவட்டம், தொப்பம்பட்டி ஒன்றியத்தைச் சார்ந்த 101 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் (வேடசந்தூர் பிரதான கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மொத்த ஒதுக்கீட்டின் கீழ்)	4.11	0.43	சோதனை ஓட்டத்தில் உள்ளது. 57 குடியிருப்புகளுக்கு குடிநீர் விநியோகிக் கப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2016 ஆகஸ்ட் 5]

வ. எண்	திட்டத்தின் பெயர்	மொத்த மதிப்பீடு (₹ கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)	பணி முன்னேற்ற விவரம்
16.	திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் ஒன்றியத்தைச் சார்ந்த 109 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் (வேடசந்தூர் பிரதான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மொத்த ஒதுக்கீட்டின் கீழ்)	4.08	0.59	சோதனை ஓட்டத்தில் உள்ளது. 78 குடியிருப்பு களுக்கு குடிநீர் விநியோகிக் கப்படுகிறது.
17.	திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தைச் சார்ந்த 201 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் (வேடசந்தூர் பிரதான கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மொத்த ஒதுக்கீட்டின் கீழ்)	8.96	0.86	சோதனை ஓட்டத்தில் உள்ளது. 94 குடியிருப்பு களுக்கு குடிநீர் விநியோகிக் கப்படுகிறது.
18.	பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர், வேப்பந்தட்டை, ஆலத்தூர் ஒன்றியங்களைச் சார்ந்த 306 குடியிருப்புகள், அரும்பாவூர் மற்றும் பூலம்பாடி பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	61.11	2.57	சோதனை ஓட்டத்தில் உள்ளது. 217 குடியிருப்பு களுக்கு குடிநீர் விநியோகிக் கப்படுகிறது.
	மொத்தம்	**640.76**	**20.31**	

கீழ்க்காணும் 3 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், 4.33 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ₹189.61 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.

வ. எண்	திட்டத்தின் பெயர்	மொத்த மதிப்பீடு (₹ கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)	குறிப்புரை
1.	தேனி மாவட்டம், வடுகப்பட்டி பேரூராட்சி, பெரியகுளம் ஒன்றியத்தைச் சார்ந்த 57 ஊரக குடிருப்புகள், பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் மேலும், திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	45.70	0.92	ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளது.
2.	திருப்பூர் மாவட்டம், வெள்ளக்கோயில், மூலனூர், தாராபுரம், குண்டடம், காங்கேயம் ஒன்றியங்கள் மற்றும் ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஒன்றியத்தைச் சார்ந்த 1262 ஊரக குடியிருப்பு களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் (பகுதி–2)	91.16	2.72	பணி ஆணை வழங்கும் நிலையில் உள்ளது.
3.	கரூர் மாவட்டம், குளித்தலை மற்றும் தோகமலை ஒன்றியங்களைச் சார்ந்த 253 ஊரக குடியிருப்பு களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	52.75	0.69	
	மொத்தம்	**189.61**	**4.33**	

2016 ஆகஸ்ட் 5]

6.5 பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்:

2015-2016 ஆம் ஆண்டில் 113.58 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் குறைந்தபட்ச தேவை திட்டம், தேசிய ஊரக குடிநீர் திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம், சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி நிதியம் மற்றும் தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி ஆகியவற்றின் நிதி உதவியுடன் 14 பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் ₹5192.18 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டன. விவரங்கள் பின்வருமாறு:

கீழ்க்காணும் 3 பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் 52.67 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ₹2303.92 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)	பணி முன்னேற்றம்
1.	மதுரை மாவட்டம் மேலூர், 2 நகராட்சிகள், 6 பேரூராட்சிகள் மற்றும் 1,430 ஊரக குடியிருப்புகள் மற்றும் சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.	784.00	15.92	திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 28–12–15 அன்று திட்டம் துவக்கி வைக்கப்பட்டது.

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)	பணி முன்னேற்றம்
2.	வேலூர் மாவட்டம், வேலூர் மாநகராட்சி, 11 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள் மற்றும் 944* வழியோர ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.	1295.00	24.46	
3.	கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களைச் சார்ந்த பல்லடம் நகராட்சி, 23 பேரூராட்சிகள், 965 ஊரக குடியிருப்புகளுக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.	224.92	12.29	திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 27–02–16 அன்று திட்டம் துவக்கி வைக்கப்பட்டது.
	உப மொத்தம் – I	2303.92	52.67	

*குறிப்பு: * 25 குடியிருப்புகளுக்கு தேசிய நெடுஞ்சாலை ஆணைய அனுமதி கிடைக்கப் பெற்றவுடன் குடிநீர் வழங்கப்படும்.*

கீழ்க்காணும் 10 பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் ₹2748.04 கோடி மதிப்பீட்டில் 59.23 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (₹ கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)	பணி முன்னேற்றம்
1.	புதுக்கோட்டை மாவட்டம் 1751 குடியிருப்புகள் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம் வல்லம் பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.	315.70	7.63	88 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
2.	புதுக்கோட்டை மாவட்டம் 1,766 ஊரக குடியிருப்புகள் மற்றும் சிவகங்கை மாவட்டம் 125 குடியிருப்பு களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.	301.50	6.65	85 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
3.	கடலூர் மாவட்டம், கடலூர் நகராட்சி, புவனகிரி, பரங்கிப்பேட்டை பேரூராட்சிகள் மற்றும் 812 ஊரக குடியிருப்பு களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.	260.54	7.75	84 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
4.	தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி, அதிராமபட்டினம் மற்றும் பெருமகளூர் பேரூராட்சிகள் மற்றும் 1153 ஊரக குடியிருப்பு களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.	495.70	7.00	75 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (₹ கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)	பணி முன்னேற்றம்
5.	நாகப்பட்டினம் மாவட்டம், குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட 295 குடியிருப்புகள் மற்றும் 315 வழியோர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.	105.70	3.70	70 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
6.	சேலம் மாவட்டம், நங்கவள்ளி மற்றும் மேச்சேரி ஒன்றியங்களைச் சார்ந்த 698 ஊரக குடியிருப்புகள் மற்றும் 6 பேரூராட்சி களுக்கான மொத்த ஒதுக்கீட்டுடன் கூடிய கூட்டுக் குடிநீர்த் திட்டம்.	158.64	3.93	54 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
7.	கோயம்புத்தூர் மாவட்டம், தொண்டாமுத்தூர், 6 பேரூராட்சிகள் மற்றும் 134 ஊரக குடியிருப்பு களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	130.46	1.83	45 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
8.	விருதுநகர் மாவட்டம், 755 ஊரக குடியிருப்பு களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	234.00	6.51	35 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (₹ கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)	பணி முன்னேற்றம்
9.	திண்டுக்கல் மாவட்டம், நத்தம் மற்றும் 2 பேரூராட்சிகள், 1276 ஊரக குடியிருப்பு களுக்கான (திண்டுக்கல் மாவட்டம் 2 பேரூராட்சிகள், 354 ஊரக குடியிருப்புகள் மற்றும் திருச்சி மாவட்டம் 135 ஊரக குடியிருப்புகளுக்கு மொத்த ஒதுக்கீட்டுடன் கூடிய) கூட்டுக் குடிநீர்த் திட்டம்	636.00	11.27	44 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
10.	கன்னியாகுமரி மாவட்டம், அழகியபாண்டிபுரம், 8 பேரூராட்சிகள் மற்றும் 246 ஊரக குடியிருப்பு களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	109.80	2.96	30 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
	உப மொத்தம் – II	2748.04	59.23	

கீழ்க்காணும் பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ₹140.22 கோடி மதிப்பீட்டில் 1.68 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளது.

[2016 ஆகஸ்ட் 5

வ. எண்	திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (₹ கோடியில்)	பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)	பணி முன்னேற்றம்
1.	திருச்சி மாவட்டம், முசிறி, துறையூர், தாத்தையங்கார்பேட்டை மற்றும் உப்பிலியாபுரம் ஒன்றியத்திலுள்ள 293 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்	140.22	1.68	பணி ஆணை வழங்கும் நிலையில் உள்ளது.
	உப மொத்தம் – III	140.22	1.68	
	பெரு மொத்தம்	5192.18	113.58	

6.6 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் புனரமைப்புப் பணிகள்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பில் நீண்டகாலம் பயன்பாட்டில் உள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் நீராதாரங்களின் கொடுதிறன் குறைவு, மின்னிறைப்பான்களின் செயல் திறன் குறைவு, சாலை அகலப்படுத்துதலின்போது ஏற்படும் குடிநீர் குழாய்கள் மற்றும் தடுக்கிதழ்கள் சேதம் போன்ற காரணங்களால் பயனாளிகளுக்கு வடிவமைக்கப்பட்ட அளவு குடிநீர் வழங்க இயலாத நிலை ஏற்படுகிறது. இந்நிலையைச் சீர் செய்து பயனாளிகளுக்கு வடிவமைக்கப்பட்ட அளவு குடிநீர் வழங்கும் நோக்கத்துடன் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2015-16 ஆம் ஆண்டில், மாநில அரசின் பங்களிப்பு நிதி, தேசிய ஊரகக் குடிநீர்த் திட்ட நிதி, மத்திய இயற்கை இடர்பாடு நிதி மற்றும் மாநில பேரிடர் மேலாண்மை நிதியுதவியுடன் ₹40.04 கோடி செலவில் 5262 புனரமைப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

2016 ஆகஸ்ட் 5]

முடிக்கப்பட்டப் பணிகளின் விவரம்

வ. எண்	வகை	பணிகளின் எண்ணிக்கை	தொகை (₹ கோடியில்)
	தேசிய ஊரகக் குடிநீர்த் திட்ட நிதியுதவி / மாநில அரசின் பங்களிப்பு நிதி		
1.	நீராதாரங்களை மேம்படுத்துதல்	57	4.69
2.	நீண்டகால பயன்பாட்டிலுள்ள மின் மோட்டார் மாற்றும்/ பழுது நீக்கும் பணிகள்	86	3.44
	மாநில பேரிடர் மேலாண்மை நிதி / இடைப்பாடுத் திட்டம்		
3.	நீராதார மேம்பாட்டுப் பணிகள்	53	5.00
	மாநில பேரிடர் மேலாண்மை நிதி / வெள்ள நிவாரண நிதி		
4.	மோட்டார், கேபிள், பைப்லைன் சீரமைப்புப் பணிகள்	86	2.00
	மத்திய அரசின் இயற்கை இடர்பாடு / வெள்ள நிவாரண நிதி		
5.	நீராதார மேம்பாட்டுப் பணிகள்	216	3.80
6.	மின் மோட்டார், பேனல்போர்டு, கேபிள் சீரமைப்புப் பணிகள்	2389	9.10
7.	பைப்லைன் சீரமைப்புப் பணிகள்	2375	12.01
	மொத்தம்	**5262**	**40.04**

6.7 குடிநீரின் தரப் பரிசோதனை மற்றும் கண்காணிப்பு

பொது மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதலை உறுதி செய்யும் பொருட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் மாநில அளவிலான ஒரு குடிநீர் தரப்பரிசோதனைக் கூடம், மாவட்ட அளவிலான 31 குடிநீர் தரப்பரிசோதனைக் கூடங்கள் மற்றும் உப கோட்ட அளவிலான 51 குடிநீர் தரப்பரிசோதனைக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் வாயிலாக ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் இரசாயனம் மற்றும் நுண்கிருமிகள்

[2016 ஆகஸ்ட் 5

உள்ளிட்ட அடிப்படை தரக் காரணிகளுக்கான பரிசோதனைகள் மற்றும் குடிநீர் தரக் கண்காணிப்பு பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்கீழ் உள்ள மாநில அளவிலான குடிநீர் தரப்பரிசோதனைக் கூடம் மாநில அளவிலான வழிகாட்டி பரிசோதனைக் கூடமாக மத்திய அரசினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

2015-16 ஆம் நிதியாண்டில் 52,000 குடிநீர் மாதிரிகள், மாநில மற்றும் மாவட்ட அளவிலான பரிசோதனைக் கூடங்களில் மாநில அரசின் நிதி உதவியுடன் தரப் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன. மேலும் தேசிய ஊரக குடிநீர் திட்ட நிதி உதவியுடன் 82,000 குடிநீர் மாதிரிகள் உப கோட்ட பரிசோதனை கூடங்களில் தரப் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன. 3,000 விலையில்லா நீர் பரிசோதனை பெட்டிகள் ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டன. மற்றும் 10,000 கடைநிலை பணியாளர்களுக்கு நீர் பரிசோதனை பெட்டி உபயோகத்திற்கான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

2016-17 ஆம் நிதியாண்டில் 65,000 குடிநீர் மாதிரிகள், மாநில மற்றும் மாவட்ட அளவிலான பரிசோதனைக் கூடங்களில், மாநில அரசின் நிதி உதவியுடன் தரப் பரிசோதனை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், தேசிய ஊரகக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், 1.53 இலட்சம் குடிநீர் மாதிரிகள் உப கோட்ட அளவிலான 51 குடிநீர் தரப்பரிசோதனைக் கூடங்களில் தரப் பரிசோதனை செய்யப்பட உள்ளன மற்றும் 15,000 கடைநிலை பணியாளர்களுக்கு குடிநீர் தரப் பரிசோதனை பெட்டி உபயோகத்திற்கான பயிற்சி அளிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 12524 ஊராட்சிகளுக்கு நீர்த்தரப் பரிசோதனைப்பெட்டிகள் வழங்கப்பட உள்ளன. மேலும் மாநில அளவிலான தரப்பரிசோதனைக் கூடத்தை NABL Accreditation (National Accreditation Board for Testing and Calibration Laboratories) நிலைக்கு உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

6.8 குடிநீர் பாதுகாப்பு வாரம்

தமிழக அரசு ஆண்டுதோறும் குடிநீரின் தரம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக குடிநீர் பாதுகாப்பு வாரம் நடத்தி வருகிறது.

2015-2016 ஆம் ஆண்டில் நடக்க இருந்த தேசிய ஊரக குடிநீர் மற்றும் சுகாதார விழிப்புணர்வு வாரம் (குடிநீர் பாதுகாப்பு வாரம்

2016 ஆகஸ்ட் 5]

என அழைக்கப்படுவது) இந்த வருடம் 27-6-16 முதல் 3-7-16 வரை நடத்தப்பட்டது. இதில் 31 மாவட்ட பேரணிகள், 385 ஒன்றிய பேரணிகள், 6,262 கிராமசபை கூட்டங்கள்மூலம் நீர் தர விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. ஊராட்சிகளுக்கு 3,000 விலையில்லா நீர்த்தரப் பரிசோதனைப் பெட்டிகள் வழங்கப்பட்டன. 26,374 ஆசிரியர்கள் மற்றும் 13,187 விசைப்பம்பு இயக்குபவர்களுக்கு பரிசோதனை செய்முறை பயிற்சி மற்றும் நீர் மாதிரி சேகரிப்பு பயிற்சி அளிக்கப்பட்டது. சுமார் 2 இலட்சம் நீர்மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டன.

2016-17 ஆம் ஆண்டிற்கான குடிநீர் பாதுகாப்பு வாரம் நடத்தப்பட உள்ளது. இதில் 31 மாவட்ட பேரணிகள், 385 ஒன்றிய பேரணிகள், 12,524 ஊராட்சி பேரணிகள்மூலம் நீர்த்தர விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட உள்ளது. 12,524 விலையில்லா நீர்த்தரப் பரிசோதனைப் பெட்டிகள் ஊராட்சிகளுக்கு வழங்கப்பட உள்ளன. ஆசிரியர்கள் மற்றும் விசைப்பம்பு இயக்குபவர்களுக்கு பரிசோதனை செய்முறை பயிற்சி மற்றும் நீர் மாதிரி சேகரிப்பு பயிற்சியும் அளிக்கப்பட உள்ளது . சுமார் 5 இலட்சம் நீர்மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பரிசோதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

6.9 நகர்ப்புற குடிநீர் திட்டம்

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு குடிநீர் திட்டப்பணிகளை செயலாக்கும் முகமையாக, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயல்படுகிறது. திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டவுடன், பராமரிப்புக்காக சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடம் இத்திட்டங்கள் ஒப்படைக்கப்படுகின்றன.

6.9.1 செயலாக்கத்தில் உள்ள நகர்ப்புற குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள்

2015-16 ஆம் ஆண்டில், 17 நகராட்சிகள் மற்றும் 17 பேரூராட்சிகளில் உள்ள 14.62 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், 34 தனி குடிநீர் அபிவிருத்தித் திட்டங்கள் ₹562.43 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்தில் இருந்தன. 2015-16 ஆம் ஆண்டில், 3 நகராட்சிகள் மற்றும் 9 பேரூராட்சிகளில் உள்ள 3.65 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், 12 தனி குடிநீர் அபிவிருத்தித் திட்டங்கள் ₹81.66 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டன.

மீதமுள்ள பணிகளில், 14 நகராட்சிகள் மற்றும் 8 பேரூராட்சிகளில் உள்ள 10.98 இலட்சம் மக்கள் பயன்பெறும்

வகையில், 22 தனி குடிநீர் அபிவிருத்தித் திட்டங்கள் ₹480.77 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

மேலும் 2 மாநகராட்சிகள் மற்றும் 2 பேரூராட்சிகளில் உள்ள 6.83 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், 4 தனி குடிநீர் அபிவிருத்தித் திட்டங்கள் ₹373.82 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.

6.10 கூட்டுக் குடிநீர்த் திட்டம் – இயக்குதல் மற்றும் பராமரிப்பு

அரசு ஆணை (நிலை) எண் 84, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 10-3-1994-ன்படி ஒன்றுக்கு மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 1-4-2016 நிலவரப்படி, 8 மாநகராட்சிகள், 66 நகராட்சிகள், 323 பேரூராட்சிகள், 46,438 ஊரக குடியிருப்புகள் மற்றும் 532 தொழிற்சாலைகள்/நிறுவனங்கள் பயன்பெறும் வகையில், 547 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் 4.18 கோடி மக்கள் பயன்பெறும் வண்ணம் இவ்வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

மேற்குறிப்பிட்ட 547 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் மூலமாக நாளொன்றுக்கு சராசரியாக 1,842 மில்லியன் லிட்டர் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

வ. எண்	பயனாளிகள்	பயனாளிகளின் எண்ணிக்கை	திட்டத்தில் வடிவமைக்கப் பட்டபடி வழங்கப்பட வேண்டிய குடிநீரின் அளவு (எம்.எல்.டி)	தற்போது சராசரியாக வழங்கப்படும் குடிநீரின் அளவு (எம்.எல்.டி.)
1.	மாநகராட்சிகள்	8	265	195
2.	நகராட்சிகள்	66	264	220
3.	பேரூராட்சிகள்	323	333	306
4.	ஊரகக் குடியிருப்புகள்	46,438	1,055	1,026
5.	தொழிற்சாலைகள் /வணிக நிறுவனங்கள்	532	144	95
	மொத்தம்	47,367	2,061	1,842

2016 ஆகஸ்ட் 5]

2015-16 ஆம் ஆண்டில், இயக்குதல் மற்றும் பராமரிப்பிற்காக ₹588.86 கோடி செலவிடப்பட்டுள்ளது. குடிநீர் கட்டணங்களின் மூலமாக பெறப்பட்ட வருமானம் ₹261.04 கோடி ஆகும்.

வருவாய்க்கும், செலவினத்திற்கும் உள்ள இடைவெளியை சரிசெய்ய தமிழ்நாடு அரசு 2014-15 ஆம் நிதியாண்டில் ₹140.00 கோடியும், 2015-16 ஆம் நிதியாண்டில் ₹207.11 கோடியும் சிறப்பு மானியமாக அளித்துள்ளது.

6.11 குடிநீர்த் திட்டங்களுக்கான ஆய்வு மற்றும் விரிவான திட்ட அறிக்கைகள் தயாரித்தல்

6.11.1 குடிநீர்த் திட்டங்கள்

2015-16 ஆம் ஆண்டில், ₹10,920.53 கோடி மொத்த மதிப்பீட்டில் 126.34 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 32 குடிநீர் திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் இருந்தன.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள 32 திட்டங்களின் தற்போதைய நிலை பற்றிய விவரங்கள் கீழ்க்காணும் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளது:

வ. எண்	விவரம்	குடிநீர் திட்டங்கள் (எண்ணிக்கை)	பயனாளிகள்	மக்கள் தொகை (இலட்சத்தில்)	மதிப்பீட்டுத் தொகை (₹ கோடியில்)
1.	அரசின் அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்படவுள்ள திட்டங்கள்	5	3 நகராட்சிகள், 15 பேரூராட்சிகள் மற்றும் 1479 ஊரகக் குடியிருப்புகள்	12.45	1004.40
2.	ஒப்புதல் பெறுவதற்கான பல்வேறு நிலைகளில் உள்ள திட்டங்கள்	8	7 நகராட்சிகள், 11 பேரூராட்சிகள் மற்றும் 2519 ஊரகக் குடியிருப்புகள்	17.13	2052.06

3.	ஆய்வுப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ள திட்டங்கள்	19	1 மாநகராட்சி, 12 நகராட்சிகள், 51 பேரூராட்சிகள் மற்றும் 14524 ஊரகக் குடியிருப்புகள்	96.76	7864.07
	மொத்தம்	**32**	**1 மாநகராட்சி, 22 நகராட்சிகள், 77 பேரூராட்சிகள் மற்றும் 18522 ஊரகக் குடியிருப்புகள்**	**126.34**	**10920.53**

6.11.2 கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்கள்

தமிழக அரசின் அறிவிப்பின் அடிப்படையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் குதிரைமொழியிலும், தூத்துக்குடி மாவட்டத்தில் ஆலந்தலையிலும் தலா நாளொன்றுக்கு 60 மில்லியன் லிட்டர் திறனுடைய கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்கள் அமைக்க, ₹1,355 கோடிக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் இராமநாதபுரம் மாவட்டத்தில் 3.20 இலட்சம் மக்களும், தூத்துக்குடி மாவட்டத்தில் 8.05 இலட்சம் மக்களும் பயன்பெறுவர்.

தற்போது கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்கள் அமைப்பதற்கான இடம் தெரிவு செய்யப்பட்டு இரு மாவட்ட ஆட்சியர்களின் முன்நுழைவு அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு, கடலோர ஒழுங்குமுறை மண்டல ஒப்புதல் பெறுவதற்கான செயல்முறை பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

6.11.3 சென்னை பெங்களூருக்கிடையே தொழிற்சாலைகள் தேவைக்கென பிரத்யேக நீராதார குழாய் அமைப்புத் திட்டம்

தொழிற்சாலைகளின் நீர்த்தேவையினைக் கருத்தில் கொண்டு, சென்னை பெங்களூர் வழித் தடத்தில், புதிய தொழிற்சாலைகள் அமைவதை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் விரிவான ஆய்வு மேற்கொண்டது. சென்னை மற்றும் ஓசூருக்கு இடையே 10,881 தொழிற்சாலைகள் கண்டறியப்பட்டு

2016 ஆகஸ்ட் 5]

46 தொகுப்புகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலைத் தொகுப்புகளுக்கு போதுமான நீர் வழங்கும் திட்டத்திற்கான முன்சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு உட்கட்டமைப்பு வளர்ச்சி வாரியத்தின் (TNIDB) அறிவுரையின்படி, முதற்கட்டமாக பொன்னேரி மற்றும் ஒசூர் தொழிற்சாலை முனையங்களுக்கான விரிவான திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

தற்போது பொன்னேரி தொழிற்சாலை முனையம் சார்ந்த பணிகளை சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்திடம் அரசு ஒப்படைத்துள்ளது.

6.12 பாதாள சாக்கடைத் திட்டங்கள்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பாதாள சாக்கடைத் திட்டங்களை தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட தலைநகரங்கள் மற்றும் பிற நகரங்களில் செயல்படுத்தி வருகின்றது.

தமிழ்நாடு அரசின் வழிகாட்டுதலுக்கிணங்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் அனைத்து நகரங்களிலும் பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கும் நோக்கில் 3 மாநகராட்சிகள் 117 நகராட்சிகள் மற்றும் 516 பேரூராட்சிகள் ஆகிய உள்ளாட்சி அமைப்புகளுக்கென 636 விரிவான திட்ட மதிப்பீடுகள் ₹20,820 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ளன.

6.12.1 செயலாக்கத்தில் உள்ள பாதாள சாக்கடைத் திட்டங்கள்

2015-16 ஆம் ஆண்டில், தேனி-அல்லி நகரம், கடலூர், உடுமலைப்பேட்டை, புதுக்கோட்டை, நாகப்பட்டினம், திருவள்ளூர் நகராட்சிகள் மற்றும் மாமல்லபுரம், திருச்செந்தூர், ஒரத்தநாடு பேரூராட்சிகளுக்கான 9 பாதாள சாக்கடைத் திட்டங்கள் ₹387.01 கோடி மதிப்பீட்டில் 6.08 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

நடப்பாண்டில் 19 பாதாள சாக்கடைத் திட்டங்கள் ₹1012.16 கோடி மதிப்பீட்டில் 14.29 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

மேலும், சத்தியமங்கலம், இராமேஸ்வரம், பொள்ளாச்சி நகராட்சிகள் மற்றும் வேளாங்கண்ணி பேரூராட்சிக்கான 4 பாதாள

[2016 ஆகஸ்ட் 5

சாக்கடைத் திட்டங்கள் ₹233.15 கோடி மதிப்பீட்டில் 1.88 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.

6.12.2 கழிவுநீர் கசடு மேலாண்மை (Septage Management)

நடப்பாண்டில், கருங்குழி பேரூராட்சிக்கான கழிவுநீர் கசடு மேலாண்மை திட்டப்பணி ₹4.93 கோடி மதிப்பீட்டில் 12,000 மக்கள் பயன்பெறும் வகையில் செயலாக்கத்தில் உள்ளது.

பரிட்சார்த்த முறையில் கருங்குழி பேரூராட்சியில் முன்னோடியாக செயல்படுத்தப்படும் கழிவுநீர் கசடு மேலாண்மை திட்டம் முடிவுற்றபின் திட்ட செயல்பாட்டினை ஆராய்ந்து இத்தொழில் நுட்பம் மக்கள் தொகை அடர்த்தி குறைவாக உள்ள இதர பேரூராட்சிகளுக்கும் விரிவுபடுத்துவது குறித்து பரிசீலிக்கப்படும்.

6.13 நிலநீர் பிரிவின் செயல்பாடுகள்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் மேற்கொள்ளப்படும் குடிநீர் திட்டங்களுக்கான நீராதாரம் தோற்றுவிக்கும் பணிகள் விஞ்ஞான அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தொலையுணர்வு நுட்பம் மற்றும் புவியியல் தகவல் முறைமை ஆகிய நவீன தொழில் நுட்பம், நீராதாரங்களை தோற்றுவிக்கும் பணிகள், நீராதாரங்களின் நீடித்த நிலைத்தன்மைக்கு மேற்கொள்ளப்பட்டு வரும் நீர் செறிவூட்டுக் கட்டமைப்பு பணிகள் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் அமையப் பெற்றுள்ள நிலத்தடி நீர் வளங்களை குறிக்கும் வரைபடங்களை தயாரிக்கும் பணிகள் மத்திய அரசின் நிதியாதாரத்துடன் மேற்கொள்ளப்பட்டு மாவட்டங்களின் வரைபடங்கள் தயாரிக்கும் பணிகள் முடிவடைந்துள்ளன.

இவ்வரைபடங்களில் நீரின் தன்மை குறித்த விவரங்களை ஒருங்கிணைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு வரைவு வரைபடங்கள் இறுதி ஒப்புதலுக்காக தேசிய தொலை உணர்வு மையம், ஐதராபாத் மற்றும் மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2016 ஆகஸ்ட் 5]

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களின் பகுதிகளை உள்ளடக்கிய தாமிரபரணி ஆற்று வடிநிலப் பகுதியில், குடிநீர் ஆதாரங்களின் நீடித்த நிலைத் தன்மையை உறுதி செய்யும் வகையில், மத்திய அரசின் நிதி உதவியுடன் 3 ஆண்டுகளில் முடித்திட ஓர் ஆய்வுத் திட்டத்தை மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பு ₹2.75 கோடி ஆகும்.

இத்திட்டம் 2014 ஆம் ஆண்டு ஜுன் மாதம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்மூலம் 10 இடங்களில் தானியங்கி நீர் அளவை கருவிகள் நிறுவப்பட்டுள்ளது. 5 இடங்களில் தானியங்கி தட்பவெப்ப அளவுக் கருவிகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. மிகத் துல்லியமான செயற்கைக் கோள் தொலை உணர்வு படங்கள் தேசிய தொலை உணர்வு மையம், ஐதராபாத்தில் இருந்து வாங்கப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. தற்போது ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் 2017 மே மாதம் முடிக்கப்படும்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள பயனற்ற கற்குவாரிகளை குடிநீர் ஆதாரங்களுக்காகவும் மற்றும் மழைநீர் சேகரிக்கும் அமைப்பாகவும் உபயோகப்படுத்தும் வகையில் ஓர் ஆய்வினை தமிழ்நாடு அரசு நிதியுதவியுடன் ₹48.20 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் 2014 நவம்பர் மாதம் தொடங்கப்பட்டது.

இத்திட்டத்தின்மூலம் காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள 6 பயனற்ற கற்குவாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆய்வுப் பணிகள் ஜுன் 2016-ல் முடிக்கப்பட்டு ஆய்வு அறிக்கை இறுதி செய்யும் நிலையில் உள்ளது.

தமிழ்நாட்டில் காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள பயனற்ற கற்குவாரிகளை மழைநீர் சேகரிப்பு மற்றும் குடிநீர் வழங்கும் குளங்களாக மாற்றும் ஒரு திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் முடிவடைந்துள்ளன.

குடிநீர் வழங்கல் அபிவிருத்தி செய்யும் பொருட்டு ஆய்விற்கு 4 கற்குவாரிகள் முன்மாதிரியாக எடுத்துக் கொள்ளப்படும். இந்த 4 கற்குவாரிகளிலும் பருவ மழைக் காலங்களில் 0.75 மில்லியன்

கன மீட்டர் நீர் சேகரிக்க இயலும். இவ்வாறு சேகரிக்கப்பட்ட நீரின் மூலம் விழுப்புரம் மாவட்டம், வானூர் ஒன்றியம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம், தாமஸ் மலை ஒன்றியத்திலுள்ள சுமார் 1,60,000 மக்களின் கோடை கால குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய இயலும்.

6.14 மேலாண்மை தகவல் அமைப்பு

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அனைத்து திட்டங்களின் தகவல் விவரங்களைச் சேகரிக்க மேலாண்மை தகவல் அமைப்பின் மூலமாக ஒருங்கிணைக்கப்பட்ட மின் ஆளுமை இணையம்மூலம், வாரியத்தின் அனைத்து அலுவலகங்களில் மேற்கொள்ளப்படும் திட்ட மேலாண்மை, நிதி கணக்கீடு, மனித வள மேலாண்மை மற்றும் அனைத்து குடிநீர் திட்டங்கள், பாதாள சாக்கடைத் திட்டங்கள், பராமரிப்பிலுள்ள குடிநீர்த் திட்டங்கள், மழைநீர் சேகரிப்பு, நீர் செறிவூட்டும் தடுப்பணைகள் ஆகிய பணிகளின் முன்னேற்ற விவரங்கள் ஒரே மென்பொருள் உதவியுடன் இணைத்து கணினி வழியாக உடனுக்குடன் பெறப்படுகிறது. கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் தலைமை நீரேற்று நிலையங்கள்மூலம் தினசரி வழங்கப்படும் நீரின் அளவுகள் பற்றிய விவரங்கள் கணினி வழியாக உடனுக்குடன் அறிந்து கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில், மின்னணு ஒப்பந்தப்புள்ளி (e-Tender) கோரல் முறை அனைத்து அலுவலகங்களிலும் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. வாரியத்தில் குடிநீர் திட்டங்கள் மிகச் சிறப்பான முறையில் திட்டமிட்டு வடிவமைக்க ஏதுவாக வடிவமைப்பு மென்பொருளை (CAD Software) பயன்படுத்தி குடிநீர் பகிர்மானக் கட்டமைப்பு மற்றும் கழிவுநீர் குழாய் இணைப்புகளின் கட்டமைப்புகள் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

TWADNEST எனப்படும் ஒருங்கிணைக்கப்பட்ட மின் ஆளுமை இணையம் வாரியத்தின் தேவைக்கேற்ப அவ்வப்பொழுது திருத்தி அமைக்கப்படுகிறது. மேலும் அதன் உபயோகத்திற்கேற்ப உள்ள வன்பொருட்கள் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டும், திறன் உயர்த்தப்பட்டும் வருகிறது.

வாரியத்தால் நடைமுறைப்படுத்தப்படும் குடிநீர்த் திட்ட செயலாக்கத்தின் பணி முன்னேற்றத்தினை உடனுக்குடன் ஆய்வு

2016 ஆகஸ்ட் 5]

செய்யும் பொருட்டு, சென்னை தலைமை அலுவலகம், கோவை, மதுரை, தஞ்சாவூர், தருமபுரி மற்றும் வேலூரில் உள்ள தலைமைப் பொறியாளர் அலுவலகங்கள் மற்றும் திருச்சி, கடலூர், சேலம், திருநெல்வேலியில் உள்ள நான்கு மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகங்கள் காணொளி காட்சிமூலம் இணைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்து சிறப்பாக கண்காணித்து செயல்படுத்தி வருகின்றது.

வாரியத்தில் நடைபெற்று வரும் குடிநீர்த் திட்டங்களின் பணி முன்னேற்றத்தினை, களப் பணியிடத்திலிருந்து உடனுக்குடன் தெரிவிக்கும் பொருட்டு (Android-Mobile) கைத்தொலைபேசி பயன்பாட்டு இணையம் உருவாக்கப்பட்டு செயலாக்கத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. தளவாடப் பொருள்களின் தரக் கட்டுப்பாட்டை உறுதிபடுத்த இணையதள சேவையின் மூலமாக செயல்படும் உடன் நிகழ்வு (Online) இணையம், மண்டல பரிசோதனை கூடங்களுடன் இணைக்கப்பட்டு செயலாக்கத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2016 ஆகஸ்ட் 5

7. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம்

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் (TNUDF), தமிழக அரசு மற்றும் தனியார் பங்களிப்பில் ஒரு பொறுப்பாட்சியாக, ICICI வங்கி, HDFC மற்றும் IL&FS ஆகிய தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன் தோற்றுவிக்கப்பட்டது.

இம்மாநிலத்தின் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் தனியார் முதலீடுகளை அதிகரிப்பதற்கான நிதி இடையீட்டாளராக செயல்படுதல் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் திறம்பட்ட மற்றும் நீடித்த நிலைத்தன்மையுடைய அமைப்புகளாக வளரவும் அவை தொடர்புடைய அனைத்து தரப்பினருக்கும் மிகத் தரமான நகர்ப்புற சேவைகளை வழங்குவதற்கும் ஏதுவாக செயல்படுவது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் தொலைநோக்குப் பார்வை ஆகும்.

நகர்ப்புற உட்கட்டமைப்பு சொத்துக்களை உருவாக்குதல் மற்றும் புதுமையான திட்டங்களை உருவாக்குதல், தற்சார்பற்ற மதிப்பீடுகள் மற்றும் நீடித்த நிதி உதவி வழங்குதல் ஆகியவற்றின்மூலம் இம்மாநிலத்தின் நகர்ப்புற மக்களின் வாழ்க்கை தர மேம்பாட்டிற்கு பங்களிப்பது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் குறிக்கோளாகும்.

7.1 தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் நோக்கங்கள் வருமாறு:

- நகர்ப்புற உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு, நிதி அளிப்பதன் மூலம், நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.
- பொது மற்றும் தனியார் கூட்டு முயற்சி மூலமாக, உட்கட்டமைப்புகளில் தனியார் பங்கேற்க உதவுதல்.
- நகர்ப்புற வளர்ச்சி அமைப்புகள் மூலதன சந்தையில் நிதி திரட்ட ஏதுவாக, அவற்றின் நிதி நிருவாகத்தை மேம்படுத்துதல்.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் செயல்படுத்தப்படும் அடிப்படை வசதி திட்டங்களான சாலைகள், பாலங்கள், மழை நீர் வடிகால்கள், கழிவுநீர் அகற்றுதல் மற்றும் சுகாதாரத் திட்டங்கள், குடிநீர் வழங்கல், திடக்கழிவு மேலாண்மை ஆகியவற்றுக்கு நிதி உதவி அளிப்பதோடு மட்டுமல்லாமல், வணிக நோக்குடைய திட்டங்களான பேருந்து நிலையங்கள், வணிக

2016 ஆகஸ்ட் 5]

வளாகங்கள் போன்றவற்றுக்கும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் நிதி உதவி அளிக்கிறது.

இந்த நிதியமானது, தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு பொறுப்பாட்சி நிறுவனத்தின் (TNUITCL) மூலம் நிருவகிக்கப்படுகிறது மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின் (TNUIFSL) மூலம் இயக்கப்படுகிறது.

இந்த நிறுவனத்தின் மொத்த மூலதனம் தமிழக அரசின் பங்குத் தொகையான ₹142.91 கோடியையும் சேர்த்து ₹199.60 கோடியாகும். மீதமுள்ள ₹56.69 கோடியை ICICI வங்கி, HDFC மற்றும் IL&FS ஆகிய மூன்று நிறுவனங்கள் பங்களிப்பு செய்துள்ளன.

7.2 வெளி ஆதாரத் திட்டங்கள்

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியமானது, ஜெர்மானிய நிதி நிறுவனத்தின் நிதியுதவியுடன் நீடித்த நகர்ப்புற கட்டமைப்பு நிதியுதவி - தமிழ்நாடு (SMIF-TN) திட்டம் நிலை II-பகுதி 1 & பகுதி-2 மற்றும் உலக வங்கியின் நிதி உதவியுடன் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (TNSUDP) ஆகிய இரண்டு வெளி ஆதாரக் கடன்களை நிருவகித்து வருகிறது. மேற்சொன்ன வெளி நிதி ஆதாரங்களின் மொத்த அளவு ₹5286.55 கோடியாகும் (அட்டவணை 1). இதில், ₹3022.22 கோடி பல்வேறு திட்டங்களுக்காக / பணிகளுக்காக உறுதி செய்யப்பட்டுள்ளது.

அட்டவணை 1– வெளி ஆதாரக் கடன் அளவு

(₹ கோடியில்)

வ. எண்	உட்கூறுகள்	TNSUDP	SMIF-TN		மொத்தம்
			நிலை II பகுதி 1	நிலை II பகுதி 2	
1.	நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான கடன்	1225.92	289.08	407.15	1922.15
2.	நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான மூலதன மானியம்	1225.92	289.08	407.15	1922.15
3.	மாதிரி நகரங்களுக்கான மானியம்	389.48	0	0	389.48
4.	தொழில்நுட்ப உதவி மானியம்	344.80	0	22.39	367.19
5.	பங்கு பத்திரம் & மற்றவை	644.88	0	40.70	685.58
	மொத்தம்	**3831.00**	**578.16**	**877.39**	**5286.55**

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

a) KfW (ஜெர்மானிய நாட்டு நிதி நிறுவனம்) நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட உள்ள நீடித்த நகர்ப்புற உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி – தமிழ்நாடு (SMIF-TN) திட்டம்

இரண்டு நிலைகளைக் கொண்ட இத்திட்டத்தின் முதல் நிலை டிசம்பர் 2015-ல், நிறைவடைந்தது. இரண்டாவது நிலை இரண்டு பகுதிகளை (பகுதி 1 & பகுதி 2) கொண்டது.

ஜெர்மானிய நாட்டு நிதி நிறுவனமான KFW நிதியுதவியுடன் நீடித்த நகர்ப்புற உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி தமிழ்நாடு இரண்டாம் நிலையின் பகுதி 1 ஆம் திட்டம் 2012-லும், இரண்டாம் நிலையின் பகுதி 2 ஆம் திட்டம் 2014-லும், சுற்றுப்புறச் சூழ்நிலையை மேம்படுத்தி இயற்கை வளங்களைப் பாதுகாத்து நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் இரண்டாம் நிலையின் பகுதி 1-ன் செயல்பாட்டு கால அளவு டிசம்பர் 2012-ல் இருந்து ஜூன் 2018 வரை மற்றும் இரண்டாம் நிலையின் பகுதி 2-ன் செயல்பாட்டு கால அளவு ஜூன் 2014-ல் இருந்து டிசம்பர் 2019 வரை ஆகும்.

இரண்டாம் நிலையின் பகுதி 1 ஆம் திட்டத்தின் மொத்த மதிப்பீடு ₹578.16 கோடி (80 மில்லியன் யூரோ). இது நகர்ப்புற அடிப்படை வசதி திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நிதியுதவியாக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு கடன் மற்றும் மூலதன மானியமாக வழங்கப்படும்.

இரண்டாம் நிலை பகுதி 2 ஆம் திட்டத்தின், மொத்த மதிப்பீடு ₹877.39 கோடி (107.75 மில்லியன் யூரோ). இதில் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நிதியுதவியாக ₹814.30 கோடி (100 மில்லியன் யூரோ) கடன் மற்றும் மூலதன மானியமாக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தொழில்நுட்பத் திறன் மேம்பாட்டிற்கு மானியமாக ₹22.39 கோடி (2.75 மில்லியன் யூரோ) வழங்கப்படும். மூலதனச் சந்தையிலிருந்து நிதி திரட்டுவதற்காக குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியத்திற்கு ₹40.70 கோடி (5 மில்லியன் யூரோ) கடனாக வழங்கப்படும்.

இத்திட்டங்களின்கீழ், 24 துணை திட்டப் பணிகளுக்காக ₹1038.38 கோடி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

2016 ஆகஸ்ட் 5]

b) உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட உள்ள தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் (TNSUDP)

நகர்ப்புற அடிப்படை உட்கட்டமைப்பு வசதி திட்டங்களை நிறைவேற்ற தேவைப்படும் நிதியை கருத்திற்கொண்டு ₹2554 கோடி உலக வங்கியின் நிதியுதவியுடன் (400 மில்லியன் அமெரிக்க டாலர்) ₹3831 கோடி (600 மில்லியன் அமெரிக்க டாலர்) மதிப்பீட்டில், தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (TNSUDP), *மார்ச் 2015-ல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்திற்கான கால அளவு ஜூன் 2015 முதல் மார்ச் 2022 வரை ஆகும்.*

இத்திட்டத்தின்கீழ், 13 துணைதிட்டப் பணிகளுக்காக ₹1966.62 கோடி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

7.3 குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் (WSPF)

2002-ல் தொடங்கப்பட்ட குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் (WSPF), *அரசுக்குச் சொந்தமான ஒரு அறக்கட்டளையாகும். சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டிற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கும் மற்றும் மூலதனச் சந்தையில் நிதி திரட்டி இலாப நோக்கமற்று, இந்த அறக்கட்டளை செயல்பட்டு வருகிறது. இந்த நிதியத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:*

- *உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதி உதவியளித்தல்*
- *கூட்டு நிதி அமைப்பின்கீழ் மூலதனச் சந்தையிலிருந்து நிதி திரட்டுதல்*
- *நேரடி, பொது மற்றும் தனியார் துறை கூட்டு முதலீட்டின் மூலம் குடிநீர் மற்றும் கழிவுநீர் துறைகளில் தனியார் பங்களிப்பை ஊக்குவித்தல்*
- *நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மூலதனச் சந்தையிலிருந்து நேரடியாக நிதி திரட்ட உதவுதல்*
- *குடிநீர், சுகாதாரம் மற்றும் பிற உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு மத்திய / மாநில அரசின் நேரடி முகவராக செயல்படுதல்.*

[2016 ஆகஸ்ட் 5

குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம், பத்திர வெளியீட்டின் மூலமாக ₹222.30 கோடி மூலதனச் சந்தையிலிருந்து நிதி திரட்டியுள்ளது.

அட்டவணை—2 – கடன் பத்திரங்கள் வெளியீட்டின் மூலமாக திரட்டப்பட்ட தொகை

வ. எண்	விவரங்கள்	₹ கோடியில்
1.	**9.20 சதவீதம் – 15 ஆண்டுகள் –மாற்ற இயலாத திரும்பப் பெறத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு** 2002 ஆம் ஆண்டு 13 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை ஒருங்கிணைத்து வரி விதிக்கத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு மூலமாக திரட்டப்பட்ட தொகை	30.41
2.	**7.25 சதவீதம் – 10 ஆண்டுகள் – கூட்டு நிதி வளர்ச்சி திட்டத்தின்கீழ் வரியில்லாத மாற்ற இயலாத திரும்பப் பெறத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு** 2008 ஆம் ஆண்டு 7 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை ஒருங்கிணைத்து மத்திய அரசின் கூட்டு நிதி வளர்ச்சி திட்டத்தின்கீழ் வரியில்லா கடன் பத்திரங்கள் (முதல் பகுதி) வெளியீடு மூலமாக திரட்டப்பட்ட தொகை	6.70
3.	**7.50 சதவீதம் – 10 ஆண்டுகள் – கூட்டு நிதி வளர்ச்சி திட்டத்தின்கீழ் வரியில்லாத மாற்ற இயலாத திரும்பப் பெறத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு** 2010 ஆம் ஆண்டு 7 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை ஒருங்கிணைத்து மத்திய அரசின் கூட்டு நிதி வளர்ச்சி திட்டத்தின்கீழ் வரியில்லா கடன் பத்திரங்கள் (இரண்டாம் பகுதி) வெளியீடு மூலமாக திரட்டப்பட்ட தொகை	83.19
4.	**10.60 சதவீதம் – 10 ஆண்டுகள் – மாற்ற இயலாத திரும்பப் பெறத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு** 2012 ஆம் ஆண்டு 10 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை ஒருங்கிணைத்து தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி திட்டத்திற்கு வரி விதிக்கத்தக்க கடன் பத்திரங்கள் (முதல் பகுதி) வெளியீடு மூலமாக திரட்டப்பட்ட தொகை	51.00

2016 ஆகஸ்ட் 5]

5.	**8.71 சதவீதம் – 10 ஆண்டுகள் – மாற்ற இயலாத திரும்பப் பெறத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு** **2013** ஆம் ஆண்டு **10** நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை ஒருங்கிணைத்து தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி திட்டத்திற்கு வரி விதிக்கத்தக்க கடன் பத்திரங்கள் (இரண்டாம் பகுதி) வெளியீடு மூலமாக திரட்டப்பட்ட தொகை	**51.00**
	மொத்தம்	**222.30**

மேலும் நிதி ஆண்டு 2016-17-ல், ஜெர்மானிய நாட்டு நிதி நிறுவனமான KFW *நிதியுதவி அளிக்கும், நீடித்த நகர்ப்புற உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி தமிழ்நாடு நிலை* II *பாகம் -2* (SMIF-TN II-2) *திட்டத்தின்கீழ் ₹80 கோடி நிதி திரட்ட உத்தேசித்துள்ளது.*

7.4 சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் (Chennai Mega City Development Mission)

சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் (CMCDM) *அரசால் தொடங்கப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தை* (TNUIFSL) *மைய முகவராக அரசு நியமித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் பல்வேறு உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால், தெரு விளக்குகள், குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு திட்டங்களைச் செயல்படுத்த பெருநகர சென்னை மாநகராட்சிக்கும், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்திற்கும் நிதியுதவி வழங்கப்படும். இதற்கான நிதி, ஒவ்வொரு ஆண்டும், அரசின் வரவு-செலவு திட்ட ஒதுக்கீட்டின் வாயிலாக வழங்கப்படும்.*

இதுவரை ₹3209.16 கோடி மதிப்பீட்டிலான திட்டங்களுக்கு ஒப்பளிக்கப்பட்டு, மானிய தொகையாக ₹2500.00 கோடியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இதில், ₹1700 கோடி, அரசிடமிருந்து பெறப்பட்டு, அவற்றில், ₹1699.96 கோடி பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் மற்றும் ஆலோசனை மற்றும் கட்டணங்களுக்காக வழங்கப்பட்டுள்ளது (அட்டவணை-3).

[2016 ஆகஸ்ட் 5

அட்டவணை—3

சென்னை பெருநகர வளர்ச்சி திட்டத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட நிதி

(₹ கோடியில்)

வ. எண்	முகமை பெயர்	திட்ட மதிப்பீடு	ஒப்பளிக்கப் பட்ட மானியம்	வழங்கப் பட்ட மானியம்
1.	பெருநகர சென்னை மாநகராட்சி	1487.55	1274.24	1071.37
2.	சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம்	1721.61	1217.86	625.89
3.	ஆலோசனை மற்றும் கட்டணங்கள்	7.90	7.90	2.70
	மொத்தம்	3217.06	2500.00	1699.96

7.5 தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம்

தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் (TNUIFSL) *1956 ஆம் ஆண்டு இந்திய நிறுவனங்கள் சட்டத்தின்கீழ், ஒரு பொது வரையறை நிறுவனமாக ₹2 கோடி அனுமதிக்கப்பட்ட பங்குத் தொகையைக் கொண்டு நிறுவப்பட்டது. இதில் செலுத்தப்பட்ட பங்குத் தொகையான ₹1 கோடியில், தமிழக அரசின் பங்கு ₹49 இலட்சம் ஆகும். இதன் மற்ற பங்குதாரர்கள்,* ICICI *வங்கி,* HDFC *மற்றும்* IL & FS *ஆகிய நிறுவனங்கள் ஆகும்.*

இந்நிறுவனம், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம், குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம், மானிய நிதியங்கள் ஆகிய அரசு அறக்கட்டளைகளை நிர்வகித்து வருகிறது. மேலும், திட்ட மேம்பாடு, திட்ட மதிப்பீடு, திட்ட வடிவமைப்பு, மூலதன திரட்டு மற்றும் நிதி மேலாண்மை ஆகிய பல பணிகளையும் இந்நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

நகர்ப்புற உட்கட்டமைப்பு வளர்ச்சிக்கான, ஆரம்பம் முதல் திட்டச் செயலாக்கம் வரையிலான அனைத்திற்குமான முழு தீர்வையும் தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் அளித்து வருகிறது. இந்நிறுவனம் தொடங்கப்பட்டது முதல் இன்று வரை ஆதாயம் ஈட்டி வருவதோடு ஆதாயப் பங்குத் தொகையையும் தொடர்ந்து வழங்கி வருகிறது.

2016 ஆகஸ்ட் 5]

8. சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை

சென்னை பெருநகரத்திற்குட்பட்ட நீர்நிலைகள் மற்றும் நீர்வழிப் பாதைகள் வரலாற்று காலம் முதல் கலாச்சார மற்றும் இயற்கையின் சிறப்பம்சமாக கருதப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளாக நகர்ப்புற வளர்ச்சியின் விளைவால் நீர் ஆதாரங்களின் சுற்றுச்சூழல் வெகுவாக பாதிப்படைந்து வருவதுடன், நீர்நிலைகளுக்கான பாரம்பரிய தொடர்பு, மனிதர்களின் செயலால் பாதிப்படைந்துள்ளது. தமிழ்நாடு அரசு, நீர் நிலைகளுக்குள்ளான இத்தொடர்பினை சீரமைத்திட உறுதி கொண்டு, அனைத்து சார் துறைகளுடன் ஒருங்கிணைந்து செயலாற்றும் பணியை சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளைமூலம் மேற்கொண்டு வருகிறது. அரசு, 2014-15 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், நீர்நிலைகள் மற்றும் நீர்வழிப்பாதைகளை பாதுக்காக்க எடுக்கப்பட்ட தீர்மானங்களை முனைப்புடன் செயலாற்ற கூவம், அடையாறு, கொசஸ்தலையாறு, பக்கிங்காம் கால்வாய், பிற சிறு கால்வாய்கள் மற்றும் சென்னை பெருநகரத்திற்குட்பட்ட நீர்நிலைகளின் சுற்றுச்சூழலை மேம்படுத்துவதாக அறிவித்துள்ளது.

அரசு, சென்னை பெருநகரப் பகுதிக்கு உட்பட்ட ஆறுகள் மற்றும் நீர்நிலைகளின் நிலையைக் கண்டறிந்து, சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள, தேவையான திட்டங்களைத் தயாரித்தல், ஒருங்கிணைத்தல், நிதி ஆதாரங்களை கண்டறிதல் மற்றும் சீரமைப்பு நடவடிக்கைகளை கண்காணித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையை அறிவுறுத்தியுள்ளது. ஆறுகள் மற்றும் நீர்நிலைகளை சீரமைப்பது என்பது ஒருங்கிணைந்த செயலாகும் என்பதால் அனைத்து சார் துறைகளும் சீரமைப்பு பணிகளில் ஈடுபட அரசு பணித்துள்ளது. மேற்கண்ட இலக்கினை அடைய, சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை பல ஆயத்த பணிகளை மேற்கொண்டு வருகிறது.

அடையாறு கழிமுகப் பகுதியின் சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டம் – முதற்கட்டப் பணி

தமிழ்நாடு அரசு ஈரப்புலங்களை பாதுகாக்கும் திட்டத்தின் கீழ் முன்னோடி முயற்சியாக, 358 ஏக்கர் பரப்பினைக் கொண்ட அடையாறு நதியின் முகத்துவாரம் மற்றும் உப்பங்கழியின் சுற்றுச்சூழல் சீரமைப்பு திட்டத்தை உருவாக்கியுள்ளது. அரசு, இதன்

[2016 ஆகஸ்ட் 5

முதற்கட்டமாக, 58 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள அடையாறு உப்பங்கழியினை சீரமைத்துள்ளது.

இச்சுற்றுச்சூழல் பூங்கா, சுற்றுச்சூழல் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையமாக செயல்பட்டு வருகின்றது. சுற்றுச்சூழல் கல்வியினை சமுதாயத்திற்கு, குறிப்பாக பள்ளி மாணவர்களுக்கு அளிப்பதற்காக, சுற்றுச்சூழல் கல்வி நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. 2016 ஆம் ஆண்டு ஜூலை, 15 ஆம் தேதி வரை 769 பள்ளிகளைச் சேர்ந்த 53,961 மாணவர்கள் மற்றும் 3415 ஆசிரியர்கள், இப்பூங்காவில் நடத்தப்பட்டு வரும் சுற்றுச்சூழல் கல்வி நிகழ்ச்சியில் பங்கு பெற்று பயனடைந்ததுடன், சுற்றுச்சூழல் சீரமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தினை உணர்ந்துள்ளனர். மேலும், தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு கட்டுமான நிதி சேவைகள் நிறுவனத்தின் (TNUIFSL) சமூகப் பொறுப்பு நிதியைப் (CSR) பெற்று, அடையாறு பூங்காவில் சுற்றுச்சூழல் கல்வி பணிகள் நடத்தப்பட்டு வருகின்றன. எதிர்வரும் காலங்களில், பொதுத் துறை நிறுவனங்களை அணுகி சமூகப் பொறுப்பு நிதியைப் பெற்று, அடையாறு சுற்றுச்சூழல் பூங்காவில் நடத்தப்படும் சுற்றுச்சூழல் கல்வி பணிகளுக்கு பயன்படுத்திக்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வு மற்றும் உயிரின பாதுகாப்பு குறித்து, அரசு மேற்கொள்ளும் முயற்சிகளை பொதுமக்கள் உணர்ந்திடும் வகையில் 11-07-2014 அன்று முதல் ஒவ்வொரு செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் ஆர்வமுள்ள பொதுமக்கள் இணையதளம்மூலம் முன்பதிவு செய்து அடையாறு சுற்றுச்சூழல் பூங்காவை பார்வையிட அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஜூலை, 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு, ஜூலை 15 ஆம் தேதி வரை, 1800 நபர்கள் அடையாறு சுற்றுச்சூழல் பூங்காவை பார்வையிட்டு சென்றுள்ளனர்.

மேலும், இச்சீரமைப்பினால் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை மதிப்பீடு செய்வதற்காக சுற்றுச்சூழல் மற்றும் பல்லுயிர்களைக் குறித்த கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நீரின் தன்மை மற்றும் தரம் மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் கையேட்டில் குறிப்பிட்டுள்ளபடி, அடையாறு சுற்றுச்சூழல் பூங்காவின் நீரின் தன்மை ‘வகுப்பு D’ பிரிவில் உள்ளது. இத்தன்மையினால் தண்ணீரில் மீன்கள் மற்றும் பிற உயிரினங்கள் வாழ்வதற்கான சூழலைக் கொண்டுள்ளதால் அடையாறு பூங்காவின்

2016 ஆகஸ்ட் 5]

சீரமைப்பு நிலையை மேம்படுத்தும் வகையில் நீரின் தன்மை அமைந்துள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது.

அடையாறு பூங்காவில் காணப்படும் பல்லுயிரிகள்

அடையாறு முகத்துவாரச் சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டம் (300 ஏக்கர்) இரண்டாம் கட்டப் பணி

பல்லுயிரிகள்	2007–2008	2009–2010	2011–2012	2013–2014	2014–2015	2015–2016
மெல்லுடலிகள்	–	–	–	6	6	6
நண்டுகள்	–	–	4	9	9	9
தும்பிகள்	–	–	12	15	17	19
பட்டாம்பூச்சிகள்	–	–	51	55	56	60
மீன்கள்	14	27	27	10	10	6
இருவாழ்விகள்	7	10	10	10	10	10
ஊர்வன	19	19	19	19	19	19
பறவைகள்	88	90	98	100	97	99
பாலூட்டிகள்	13	13	13	15	15	16
மொத்தம்	141	159	234	239	239	244

சீரமைப்புத் திட்டத்தின் தொடர்ச்சியாக, அரசு அடையாறு முகத்துவாரச் சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளை ₹24.93 கோடி செலவில் மேற்கொள்ள, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை எண் 106 நாள் 1-3-2013-ன்படி, அனுமதி வழங்கியுள்ளது. இச்சீரமைப்பு திட்டத்தின்கீழ், குப்பைகள் மற்றும் கட்டடக் கழிவுகளை அகற்றுதல், உப்பங்கழியில் மிதக்கின்ற மட்காத பொருட்கள் மற்றும் சகதிகளை அகற்றுதல், உயிர் பொறியியல் தொழில்நுட்பங்களை அடிப்படையாகக் கொண்டு அடையாறு உப்பங்கழியின் கரைகளை திடப்படுத்தி அடையாறு உப்பங்கழி மற்றும் கழிமுகப் பகுதியின் பல்லுயிர் பெருக்கத்தினை ஏற்படுத்துதல் போன்ற முக்கிய பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

இத்திட்டத்தினைச் செயல்படுத்திட, மத்திய அரசின் வனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. சீரமைப்பின் தொடக்கப் பணியாக, அடையாறு உப்பங்கழியின் நீர் பரப்பினை அதிகரித்து, ஓதங்களின் தொடர்பை இணைக்கும்

வகையில் நெகிழி மற்றும் கட்டடக் கழிவுகளை அகற்றி, உப்பங்கழியில் மிதக்கின்ற மட்காத பொருட்கள் மற்றும் சகதிகள் அப்புறப்படுத்தப்பட்டுவருகிறது. மேலும், முட்புதர்களை அகற்றி, அடையாறு உப்பங்கழியின் கரைகளைத் திடப்படுத்திட சோழ மண்டல கடற்கரைத் தாவரங்கள் 50,000 மற்றும் 35,000 சதுப்புநில தாவரங்கள் நடும் பணி துவங்கப்பட்டுள்ளது.

இச்சீரமைப்பு பணிகள் வரும் ஆகஸ்டு மாத இறுதிக்குள் நிறைவு பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டம்

சென்னை ஆவடி அருகேயுள்ள பருத்திப்பட்டு அணையிலிருந்து முகத்துவாரம் வரையிலான (32 கி.மீ.) கூவம் நதி பகுதிகளை சீரமைக்க ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய கூறுகளாக, கழிவுநீர் கூவம் நதியில் கலப்பதை தடுக்க மாற்று ஏற்பாடுகளை செய்தல், திடக்கழிவு மேலாண்மை, நதியின் வெள்ளநீர் கொள்ளளவை மேம்படுத்தி பராமரித்தல், கூவம் நதிக் கரையில் வாழும் மக்களுக்கான மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வுக்கான திட்டமிடல், பல்லுயிர் பெருக்கத்தை மீட்டு சுற்றுச்சூழலை மேம்படுத்தி நகர்ப்புறங்களில் நதியின் கரையோரங்களில் வளர்ச்சி பணிகளை மேற்கொள்ளுதல் ஆகும். ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டப் பணிகள் மூன்று கட்டங்களாக செயல்படுத்தப்படவுள்ளது. குறுகிய கால திட்டம் 2014-15-லிருந்து 2016-17 வரை மூன்று ஆண்டுகள் நடைபெறும். இத்திட்டம் அதிக எண்ணிக்கையிலான துணைத் திட்டங்களை கொண்டுள்ளது. குறுகிய கால திட்டப் பணிகளை மேற்கொள்ளவிருக்கும் சார் துறைகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து, சுமார் 1646.52 கோடி மதிப்பிலான 60 துணைத் திட்டங்களை முன்மொழிந்துள்ளன. குறுகிய கால திட்டப் பணிகளுக்காக ₹604.77 கோடிக்கான நிருவாக அனுமதி பெறப்பட்டுள்ளது. இதற்கான துணைத் திட்டங்கள் பொதுப் பணித் துறை, சென்னை மாநகராட்சி, நகராட்சி நிருவாக ஆணையரகம், ஊரக வளர்ச்சி இயக்குநரகம், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் ஆகிய துறைகளின்மூலம் தொடங்கப்பட்டுள்ளது. ₹604.77 கோடி மதிப்பீட்டிற்கான பணிகளில்

2016 ஆகஸ்ட் 5]

₹135.38 கோடிக்கு பணிகள் சார் துறைகளால் தொடங்கப்பட்டுள்ளது. மேலும் ₹71.32 கோடி மதிப்பீட்டிலான பணிகளுக்கு சார் துறைகளால் பணியாணை வழங்கப்பட்டுள்ளது. விரைவில் பணிகள் தொடங்கப் படவுள்ளன. ₹156.83 கோடி மதிப்பீட்டிலான திட்டங்களுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

அடையாறு நதியின் தொடக்கம் முதல் முகத்துவாரம் வரையிலான மூன்றாம் கட்டப் பணியின் பெருந்திட்டம்

நகரமயமாதல் மற்றும் நகர்ப்புற பகுதிகளின் சுற்றுச்சூழல் நவீனமயமாக்கலின் விளைவாக அடையாறு நதி மாசுப்பட்டு சீர்கெட்டுள்ளது. ஆகவே, அடையாறு நதியின் தொடக்கம் (ஆதனூர் ஏரி) முதல் முகத்துவாரம் வரை சீரமைக்க வரைவு இறுதி திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் முக்கிய கூறுகளாக, கழிவுநீர் நதியில் கலப்பதை தடுக்க மாற்று ஏற்பாடுகளை செய்தல், திடக்கழிவு மேலாண்மை, நதியின் வெள்ளநீர் கொள்ளளவை மேம்படுத்தி பராமரித்தல், நகர்ப்புறத்தில் நதியின் கரையோரங்களில் வளர்ச்சி பணிகளை மேற்கொள்ளுதல். மறுகுடியமர்வு மற்றும் மறுவாழ்வு பணிகளை மேற்கொள்ளுதல் ஆகும். அடையாறு நதியின் தொடக்கம் முதல் முகத்துவாரம் வரையிலான திட்ட அறிக்கை சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் ஒப்புதல் பெற்று, அரசின் நிருவாக அனுமதி கோரி கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

சென்னை பெருநகர பகுதிக்குட்பட்ட நீர்வழிகள் மற்றும் நீர்நிலைகளின் சீரமைப்பிற்கான பெருந்திட்டம்

சென்னை பெருநகர பகுதிக்குட்பட்ட மாசடைந்த ஏரிகள், குளங்கள், நதிகள் மற்றும் நீர்வழிகளை சீரமைக்கும் நோக்குடன் அரசு, சென்னை பெருநகர பகுதிக்குட்பட்ட 1189 கி.மீ. நீளம் கொண்ட நீர்வழிகள் மற்றும் நீர்நிலைகளுக்கான திட்ட அறிக்கை தயாரிக்க சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையை அறிவுறுத்தியுள்ளது.

இதன்படி, 280 நீர்நிலைகள் சென்னை பெருநகர பகுதியில் கண்டறியப்பட்டுள்ளது. இதற்கான இறுதி அறிக்கை வரும் ஆகஸ்டு மாதத்திற்குள் நிறைவு பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[2016 ஆகஸ்ட் 5

நீர்நிலைகளின் சீரமைப்பு மற்றும் பாதுகாப்பிற்கான விரிவான திட்ட அறிக்கை

அரசு, சென்னை பெருநகரப் பகுதிக்குட்பட்ட கீழ்க்காணும் நீர்நிலைகளை சீரமைப்பதற்கான முயற்சியை மேற்கொண்டுள்ளது. இதற்கான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

அரசு துறை/ நிறுவனம்	**நீர்நிலைகளின் பெயர்**	**நிலை**
பொதுப் பணித் துறை	மாதவரம், அம்பத்தூர், கொரட்டூர் ஏரி	சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கதக்க ஆற்றல் நிதி பெறப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.
சென்னை மாநகராட்சி	நாராயணபுரம் ஏரி	விரிவான திட்ட அறிக்கை சென்னை மாநகராட்சி மற்றும் பல்லாவரம் நகராட்சியிடம் சமர்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் உலக வங்கி நிதியின் (TNSUDP) கீழ் செயல்படுத்தப்பட உள்ளது.
பல்லாவரம் நகராட்சி	ஜமீன் பல்லாவரம் பெரிய ஏரி, கீழ்கட்டளை ஏரி	
சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்	பருத்திப்பட்டு ஏரி, ஆவடி	விரிவான திட்ட அறிக்கை முடிக்கப்பெற்றுள்ளது.
சென்னை மாநகராட்சி	காடம்பாக்கம் ஊராட்சி ஏரி, நெசவாளர் நகர் ஏரி	ஆலோசகரால் இடைக்கால அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. இறுதி அறிக்கை ஆகஸ்டு, 2016–க்குள் எதிர்பார்க்கப்படுகிறது.
சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்	கொளத்தூர் ஏரி, வேளச்சேரி ஏரி	
சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்	நன்மங்கலம் ஏரி, கோவிலம்பாக்கம் ஏரி	

2016 ஆகஸ்ட் 5]

9. தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனமானது (டுபிட்கோ) 21-03-1990 அன்று கம்பெனிகள் சட்டம் 1956-ன்கீழ் நிறுவப்பட்டது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி உதவி அளித்தல் மற்றும் வழிகாட்டுதல் ஆகியன இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

சீர்மிகு நகரங்கள் திட்டம் (Smart Cities Mission) *மற்றும் அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான திட்டங்களுக்கு* (AMRUT) *டுபிட்கோ நிறுவனம் இயக்குனரகமாக செயல்படுகிறது.*

மேலும் இந்நிறுவனம் மத்திய, மாநில அரசுகளின் கீழ்க்கண்ட திட்டங்களை செயல்படுத்தும் முகவரமைப்பாகவும் உள்ளது:

1. *ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் - நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் ஆளுகைக்கான திட்டம்* (Jawaharlal Nehru National Urban Renewal Mission-Urban Infrastructure and Governance)

2. *சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்* (Urban Infrastructure Development Scheme for Small and Medium Towns)

3. *துணை நகரங்களில் நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டம்* (Urban Infrastructure Development Scheme for Satelite Towns)

4. *பெருநகர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி* (Metropolitan Infrastructure Development Fund)

5. *ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்* (Integrated Urban Development Mission)

மேலும், கேளிக்கை வரி ஈடு செய்யும் நிதி, கல்வி பணி (நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளி மாணவ, மாணவியருக்கான கல்வி உதவித் தொகை), உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி, இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி ஆகியவற்றிற்கும் தமிழக அரசு டுபிட்கோவை நிதி மேலாளராக நியமித்துள்ளது.

[2016 ஆகஸ்ட் 5

9.1 சீர்மிகு நகரத் திட்டம்

பொருளாதார வளர்ச்சிக்காகவும் மற்றும் மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்காகவும் சீர்மிகு நகரங்கள் எனும் திட்டம் ஜுன் 2015 ஆம் ஆண்டு மத்திய அரசின் முன்முயற்சித் திட்டமாக துவக்கப்பட்டது.

இந்தியா முழுவதும் ஐந்து ஆண்டுகளில் 109 சீர்மிகு நகரங்களை உருவாக்க மத்திய அரசு திட்டமிட்டு அதில் 2015-16 நிதியாண்டில் மட்டும் 20 சீர்மிகு நகரங்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. மேலும் இரண்டாவது நிதி ஆண்டில் (2016-17) 40 சீர்மிகு நகரங்களுக்கு ஒப்புதல் வழங்க உள்ளது. அதற்கடுத்த நிதியாண்டில் (2017-18) மேலும் 49 சீர்மிகு நகரங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாநில அளவிலான போட்டியின்மூலம் தேர்வு செய்யப்பட்ட அனைத்து 12 மாநகராட்சிகளும் தமிழ்நாடு அரசின் பரிந்துரையின்படி சீர்மிகு நகரங்களாக அறிவிக்கப்பட்டன. மேற்கூறிய 12 மாநகராட்சிகளும் தங்களுடைய சீர்மிகு நகரத்திற்கான கருத்துருவை மத்திய அரசிடம் சமர்பித்தன. 2015-16 ஆம் நிதியாண்டில், முதல் சுற்றில் மத்திய அரசு நாடு முழுவதும் உள்ள 20 நகரங்களை தேர்ந்தெடுத்து சீர்மிகு நகரங்களாக அறிவித்துள்ளது. இதில் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆகியவை முதல் சுற்றில் தேர்ந்தெடுக்கப்பட்டன. இத்திட்டத்தின்கீழ், பகுதி சார்ந்த மேம்பாட்டு வளர்ச்சி மற்றும் நகர முழுமைக்குமான தகவல் தொழில்நுட்ப வளர்ச்சித் திட்டம் ஆகியவை செயல்படுத்தப்படும்.

மத்திய அரசின் ஆலோசனைக்கிணங்க, மீதமுள்ள 10 மாநகராட்சிகள் தங்களுடைய சீர்மிகு நகரத் திட்டங்களை மேம்படுத்தி இரண்டாம் கட்ட தேர்வுக்காக மத்திய அரசிடம் சமர்பித்துள்ளன.

9.2 அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான திட்டம் (AMRUT)

அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான திட்டத்தை (அம்ரூத்) மத்திய அரசு 2015 ஆம் ஆண்டு துவக்கியது. இத்திட்டம் கீழ்க்காண்பவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது:

2016 ஆகஸ்ட் 5]

1. குடிநீர் வசதி

2. கழிவு நீர் வசதி மற்றும் கழிவு நீர் கசடு அகற்றும் மேலாண்மை

3. மழை நீர் வடிகால் வசதி

4. நடந்து செல்வதற்கான வசதிகளை ஏற்படுத்துதல், பொது மக்களுக்கான வாகனம் சாராத போக்குவரத்துகள் அமைத்தல், வாகனங்களை நிறுத்தும் வசதி அமைத்தல் மற்றும்

5. சிறுவர்களுக்கான பூங்காக்கள், பொழுதுபோக்கு பகுதிகள் உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்.

தமிழ்நாட்டில் பின்வரும் நகரங்கள் இத்திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ளன:

வ.எண்	உள்ளாட்சியின் பெயர்	வ.எண்	உள்ளாட்சியின் பெயர்
1.	பெருநகர சென்னை மாநகராட்சி	15.	தாம்பரம்
2.	கோயம்புத்தூர் மாநகராட்சி	16.	கடலூர்
3.	மதுரை மாநகராட்சி	17.	காஞ்சிபுரம்
4.	திருச்சி மாநகராட்சி	18.	ஈரோடு மாநகராட்சி
5.	சேலம் மாநகராட்சி	19.	திருவண்ணாமலை
6.	திருநெல்வேலி மாநகராட்சி	20.	கும்பகோணம்
7.	திருப்பூர் மாநகராட்சி	21.	இராஜபாளையம்
8.	ஆவடி	22.	புதுக்கோட்டை
9.	தூத்துக்குடி மாநகராட்சி	23.	ஒசூர்
10.	நாகர்கோவில்	24.	ஆம்பூர்
11.	தஞ்சாவூர் மாநகராட்சி	25.	காரைக்குடி
12.	பல்லவபுரம்	26.	நாகப்பட்டினம்
13.	திண்டுக்கல் மாநகராட்சி	27.	வேளாங்கண்ணி
14.	வேலூர் மாநகராட்சி	28.	இராமேஸ்வரம்

[2016 ஆகஸ்ட் 5

நிதிக்கூறு:

இத்திட்டத்திற்கு மத்திய, மாநில அரசுகள் கீழ்க்கண்டவாறு நிதி பங்களிப்பு செய்கின்றன.

வ. எண்	மக்கள் தொகை	மத்திய அரசின் பங்கு – மானியம்	மாநில அரசின் பங்கு – மானியம்	நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு
1.	10 இலட்சத்திற்கு மேல் மக்கள் தொகைக் கொண்ட நகரங்கள்	33.33%	20%	46.67%
2.	10 இலட்சத்திற்கு கீழ் மக்கள் தொகைக் கொண்ட நகரங்கள்	50%	20%	30%
3.	பசுமை பகுதி அமைத்தல் (அனைத்து அம்ரூத் நகரங்கள்)	50%	20%	30%

அம்ரூத் திட்டத்திலுள்ள அனைத்து நகரங்களும் தங்களுடைய நகர்ப்புற சேவைகளின் தரத்தினை முழு அளவில் மேம்படுத்துவதற்கான திட்டத்தை (Service Level Improvement Plan) ₹50,013 கோடி மதிப்பீட்டில் வழிகாட்டு நெறிமுறைகளின்படி தயாரித்துள்ளன.

அ) மாநில ஆண்டு செயல் திட்டம் (SAAP) 2015–16

2015-16 ஆம் ஆண்டுக்கான மாநில ஆண்டு செயல் திட்டமானது, மத்திய அரசின் பங்கு தொகையான ₹1374.31 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

2016 ஆகஸ்ட் 5]

ஆ) மாநில ஆண்டு செயல் திட்டம் (SAAP) 2016–17

2016-17 நிதியாண்டில் அம்ரூத் திட்டத்தின்கீழ் மத்திய அரசு ₹1582.80 கோடி ஒதுக்கியுள்ளது. தமிழக அரசு, ₹3834.49 கோடி மதிப்பீட்டில் மாநில ஆண்டு செயல் திட்டத்தை தயாரித்து மத்திய அரசின் ஒப்புதலை பெற்றுள்ளது.

9.3 ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் (JnNURM) நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் ஆளுகைக்கான திட்டம் (UIG)

இத்திட்டத்தின்கீழ், 2005 முதல் 2014 ஆம் ஆண்டு வரையிலான 9 ஆண்டு காலத்தில் தமிழகத்தில் 3 திட்ட செயலாக்க மாநகரங்கள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் எடுத்துக்கொள்ளப்பட்டன.

மத்திய அரசு இந்த துணை திட்டத்தின்மூலம் ₹5250.15 கோடியில் 48 திட்டங்களைச் செயல்படுத்த ஒப்புதல் வழங்கியது.

(₹ கோடியில்)

மாநகரங்களின் பெயர்கள்	திட்டங்களின் எண்ணிக்கை	திட்ட மதிப்பீடு	மத்திய அரசின் பங்கு	மாநில அரசின் பங்கு	நகர்ப்புற உள்ளாட்சி / தன்னாட்சி அமைப்புகளின் பங்கு
சென்னை	35	3585.43	1294.40	533.42	1757.61
மதுரை	8	838.52	419.26	167.70	251.56
கோயம்புத்தூர்	5	826.20	413.10	165.24	247.86
மொத்தம்	**48**	**5250.15**	**2126.76**	**866.36**	**2257.03**

இத்துணைத் திட்டத்தின்கீழ் ஒப்புதல் பெறப்பட்ட 48 திட்டங்களில், 31 திட்டங்கள் நிறைவுற்றன. மீதமுள்ள 17 திட்டங்கள் பல்வேறு நிலையில் செயலாக்கத்தில் உள்ளன.

இடைப்பட்ட காலத் திட்டங்கள் (ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்திற்கும் புதிய திட்டத்திற்கும் இடைப்பட்ட கால திட்டம்)

[2016 ஆகஸ்ட் 5

நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் ஆளுகைக்கான துணைத் திட்டத்தின்கீழ் ₹867.83 கோடியிலான 17 திட்டங்களுக்கு மத்திய அரசு இடைப்பட்ட காலத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. ஒப்புதல் வழங்கப்பட்ட 17 திட்டங்களில் 14 திட்டங்கள் செயலாக்கத்தில் உள்ளன மற்றும் 3 திட்டங்கள் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.

9.4 சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (UIDSSMT)

இத்திட்டத்தின் நோக்கமானது நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் ஆளுகைக்கான திட்டத்தின்கீழ் வரும் 67 நகரங்கள் தவிர மற்ற அனைத்து நகரங்களின் உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதாகும். இத்துணைத் திட்டத்தின்மூலம் ₹882.73 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் வழங்கப்பட்ட 122 திட்டங்களில், 116 திட்டங்கள் நிறைவுற்றன. மீதமுள்ள 6 திட்டங்கள் செயலாக்கத்தில் உள்ளன.

இடைப்பட்ட காலத் திட்டங்கள் (ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்திற்கும் புதிய திட்டத்திற்கும் இடைப்பட்ட கால திட்டம்)

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மத்திய அரசு, இடைப்பட்ட காலத்தில் 13 திட்டங்களுக்கு ₹507.41 கோடியில் ஒப்புதல் வழங்கியுள்ளது. ஒப்புதல் பெறப்பட்ட 13 திட்டங்களில், 12 திட்டங்கள் செயலாக்கத்தில் உள்ளன. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான நிலத்தை ஜோலார்பேட்டை நகராட்சி தேர்வு செய்யவேண்டி உள்ளது.

9.5 துணை நகரங்களில் நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாடு (UIDSST)

துணை நகரங்களில் நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டமானது பெரிய மாநகரங்களின் அருகேயுள்ள துணை நகரங்களில் நகர்ப்புற அடிப்படை வசதி உருவாக்குவதற்கான ஒரு திட்டமாக மத்திய அரசு துவக்கியது. இத்திட்டத்தின்கீழ் தமிழகத்தில் ஸ்ரீபெரும்புதூர் பேரூராட்சி தேர்வு செய்யப்பட்டது. கீழ்க்காணும் மூன்று திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது:

2016 ஆகஸ்ட் 5]

(₹ கோடியில்)

வ. எண்	திட்டத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு
1.	குடிநீர் வழங்கல்	40.71
2.	பாதாளச் சாக்கடை	56.22
3.	திடக்கழிவு மேலாண்மை	4.43
	மொத்தம்	101.36

மேற்காணும் மூன்று திட்டங்களில், திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் நிறைவு பெற்றுள்ளது. மீதமுள்ள இரண்டு திட்டங்கள் செயலாக்கத்தில் உள்ளன.

9.6 பெருநகர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்ட நிதி (MIDF)

டுபிட்கோ, பெருநகரத் திட்டத்தின்மூலம் சுழற்சி நிதியாக ₹1852.07 கோடி உருவாக்கியுள்ளது. இது பெருநகர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்கான மூலதன நிதியாகும். இத்திட்டத்தின் நோக்கமானது சென்னை பெருநகரப் பகுதிகளுக்கு (அதனைச் சுற்றியுள்ள உள்ளாட்சி அமைப்பு பகுதிகள் உட்பட) உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நிதி உதவி செய்வதாகும்.

இத்திட்டத்தின்கீழ் ₹4342.65 கோடி மதிப்பீட்டிலான 34 திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதில் பெருநகர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்ட நிதியின் பங்கு தொகை ₹1141.82 கோடியாகும். ஒப்புதல் வழங்கப்பட்ட 34 திட்டங்களில், 19 திட்டங்கள் நிறைவுற்றுள்ளன. எஞ்சியுள்ள 15 திட்டங்கள் பணி முன்னேற்ற நிலையில் உள்ளன.

9.7 டுபிட்கோ உட்கட்டமைப்பு வசதி நிதித் திட்டம்

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் அரசு நிறுவனங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நிதியளிக்கும் பொருட்டு டுபிட்கோ, உட்கட்டமைப்பு வசதி நிதித் திட்டம் என்னும் திட்டத்தை உருவாக்கியது. டுபிட்கோ நிறுவனத்தின் பங்கு மூலதனம், சேமநிதி, உபரிநிதி மற்றும் வங்கிகளில் இருந்து பெறப்படும் கடன் ஆகியவை இத்திட்டத்திற்கான நிதி ஆதாரமாகும்.

[2016 ஆகஸ்ட் 5

இத்திட்டத்தின்கீழ் ₹260.24 கோடி மதிப்பீட்டிலான கீழ்க்காணும் 5 திட்டங்கள் 2015-16 ஆம் ஆண்டு ஒப்புதல் அளிக்கப்பட்டன.

(₹ கோடியில்)

வ. எண்	பெயர்	திட்டத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு	டுபிட்கோ உட்கட்டமைப்பு வசதி நிதித் திட்டத்தின் கீழ் கடன் தொகை	நகர்ப்புற உள்ளாட்சியின் பங்கு
1.	பொள்ளாச்சி	காந்தி வாரச் சந்தையில் மொத்த விற்பனை நிலையம் கட்டுதல்	3.00	2.50	0.50
2.	கோயம்புத்துார்	சேதமடைந்த சாலைகள் சீரமைத்தல்	44.07	39.66	4.41
3.	திருப்பூர்	சேதமடைந்த சாலைகள் சீரமைத்தல்	52.17	46.95	5.22
4.	ஈரோடு	சேதமடைந்த சாலைகள் சீரமைத்தல்	86.53	77.88	8.65
5.	சேலம்	சேதமடைந்த சாலைகள் சீரமைத்தல்	74.47	67.02	7.45
		மொத்தம்	**260.24**	**234.01**	**26.23**

9.8 ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (IUDM)

மாநில அரசு "ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்" என்னும் முன்னோடித் திட்டத்தை 2011 ஆம் ஆண்டு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதற்காக துவக்கியது.

2016 ஆகஸ்ட் 5]

ஒப்புதல் வழங்கப்பட்ட திட்டங்கள்

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் உட்கட்டமைப்பின் தேவைக்காக (முழு நிதி/ பகுதி நிதி), ₹10773.22 கோடி மதிப்பீட்டிலான 13445 திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டன. இதன் விவரங்கள் பின்வருமாறு:

(₹ கோடியில்)

திட்டப் பணிகள்	மொத்த திட்டங்கள்	திட்ட மதிப்பீடு	பிற திட்டங்களின் நிதி / உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு	IUDM பங்கு
குடிநீர் வழங்கல்	1061	3900.83	2558.47	1342.36
பாதாளச்சாக்கடை	66	4589.96	3587.92	1002.04
சாலைகள்	3713	923.13	82.51	840.62
மழைநீர் வடிகால்	2078	366.42	63.24	303.18
திடக்கழிவு மேலாண்மை	1091	231.3	4.93	226.37
தெரு விளக்குகள்	2963	551.8	315.87	235.93
திறந்தவெளி மலம் கழித்தலை ஒழிக்கும் திட்டம்	2066	160.1	105.65	54.45
மற்றவை	407	49.68	6.44	43.24
மொத்தம்	**13445**	**10773.22**	**6725.03**	**4048.19**

ஒப்புதல் வழங்கப்பட்ட 13445 திட்டங்களில் 12350 திட்டங்கள் நிறைவுற்றுள்ளன. எஞ்சிய திட்டங்கள் செயலாக்கத்தின் பல்வேறு நிலையில் உள்ளன.

9.9 அரசு திட்டப் பணிகளுக்கான நிதி மேலாண்மை

தமிழக அரசு, கேளிக்கை வரி ஈடு செய்யும் நிதி, கல்வி நிதி (நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளி மாணவ, மாணவியருக்கான கல்வி உதவித் தொகை), உட்கட்டமைப்பு இடைவெளியை நிரப்பும் நிதி, இயக்குதல் மற்றும் பராமரிப்பு

இடைவெளியை நிரப்பும் நிதி போன்ற திட்டங்களை மாநிலத்தில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உட்கட்டமைப்புகளை மேம்படுத்தும் பொருட்டு ஏற்படுத்தியது.

இத்திட்டங்களுக்கு டுபிட்கோ நிறுவனத்தை தமிழக அரசு நிதி மேலாளராக நியமித்துள்ளது. *2015-16* ஆம் ஆண்டில், உட்கட்டமைப்பு இடைவெளியை நிரப்பும் நிதியின்கீழ் (IGFF) ₹*234.45* கோடி மற்றும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளியை நிரப்பும் நிதியின்கீழ் (O&MGFF) ₹*104.42* கோடியும் விடுவிக்கப்பட்டது.

2016 ஆகஸ்ட் 5]

10. புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம்

நாட்டிலேயே முதன் முறையாக திருப்பூரில், பொது மக்கள் மற்றும் தனியார் நிறுவனங்களின் பங்களிப்பின்மூலம் திருப்பூர் நகராட்சி, அதன் சுற்றுப்புற பகுதிகள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு, நீர் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டங்களை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டது. தமிழ்நாடு அரசு, முன்னாள் திருப்பூர் நகராட்சி (தற்போது மாநகராட்சி) மற்றும் சிறப்பு நோக்கு நிறுவனமாகத் துவக்கப்பட்ட புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் ஆகியவற்றுடன் சலுகை ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொண்டுள்ளது. முக்கியமாக திருப்பூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள உள்ளாடை மற்றும் அதனைச் சார்ந்த தொழிற்சாலைகளின் நீர் தேவையை நிறைவு செய்யும் திட்டமான 185 MLD நீர் திட்டத்தை அமலாக்குவது இந்த ஒப்பந்தத்தின் முக்கிய அம்சமாகும். இத்திட்டத்திற்கான அடிக்கல் 20-06-2002 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் நாட்டப்பட்டு, திட்டப் பணிகள் முடிவடைந்து, பிப்ரவரி 2006-ல் இத்திட்டம், பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.

இத்திட்டத்திற்கான செலவு தொகை ₹1023 கோடியாகும். 15 நிறுவனங்கள்மூலம் பெறப்பட்ட அசல் சமபங்கு தொகை ₹322.70 கோடியாகும் மற்றும் 19 நிதிநிறுவனங்கள் மூத்த கடனாக அளித்த தொகை ₹613.80 கோடியாகும் மற்றும் இரண்டாம் தர கடனாக அளித்த தொகை ₹86.50 கோடியாகும் .

திருப்பூர் மாநகராட்சியின் குடிநீர் தேவை, இத்திட்டத்தின் மூலம் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது (சுமார் 38.2 MLD) மற்றும் 8 ஊராட்சிகள் மற்றும் 5 வழியோர ஒன்றியங்களுக்குட்பட்ட சுமார் 600 கிராமப்புற குடியிருப்புகள் இத்திட்டத்தின்மூலம் பயனடைந்து வருகின்றன (சுமார் 17 MLD). இத்திட்டத்தின்மூலம் திருப்பூர் மாநகராட்சியின் பெரும்பாலான பகுதிகளில் பாதாள கழிவுநீர் அகற்றும் வசதியும் நிறைவேற்றப்பட்டு, செயல்பட்டு வருகிறது. 15246 பாதாள கழிவுநீர் இணைப்புகள்மூலம் பெறப்படும் சுமார் 7 MLD கழிவுநீர் தற்போது சுத்திகரிக்கப்படுகிறது. மேலும், திருப்பூர் மாநகராட்சியில் உள்ள நகர்ப்புற ஏழை மக்களுக்கு குறைந்த செலவில் கழிப்பறை வசதிகள் (31 சுகாதார வளாகங்கள்) செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

[2016 ஆகஸ்ட் 5

சென்னை உயர் நீதிமன்ற ஆணை நாள் 31-01-2011-ன்படி பல்வேறு சாய தொழிற்சாலைகள் மூடப்பட்டதாலும் தண்ணீரை மறு உபயோகம் செய்வதற்கான பொது கழிவுநீர் சுத்திகரிப்பு வசதிகள் கொண்டுவரப்பட்டதாலும், திருப்பூர் மாவட்டத்தில் தொழிற்சாலைகளுக்கு தேவையான தண்ணீரின் அளவு பிப்ரவரி 2011 முதல் வெகுவாக குறைந்துவிட்டது. இருப்பினும், புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் திருப்பூர் மாநகராட்சி, ஊராட்சிகள் மற்றும் வழியோர கிராமங்கள் ஆகியவற்றிலுள்ள மக்களுக்கு குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்து வருகிறது.

திருப்பூரிலுள்ள தொழிற்சாலைகள் தண்ணீரை குறைந்த அளவில் நுகர்வு செய்வதால், புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்திற்கு ஏற்பட்டுள்ள நிதிப் பற்றாக்குறை நிலைமை கடன் மறுசீரமைப்புத் திட்டத்தின்மூலம் சமாளிக்கப்பட்டது. அதன்படி கடனுதவி செய்த நிதி நிறுவனங்கள் கடனை மறுபரிசீலனை செய்து, கடனுக்கான வட்டி விகிதத்தை குறைத்தும், 15% கடன் தொகையினை சமபங்குகளாக மாற்றியும், மேலும் அரசாங்கம் கூடுதலாக நாள் ஒன்றிற்கு 100 மில்லியன் லிட்டர் வரை குடிநீரை வீட்டு உபயோகத்திற்காக இந்நிறுவனம்மூலம் வாங்கிக் கொள்ளவும் வழிமுறைகள் செய்யப்பட்டன. தற்சமயம் இந்நிறுவனத்தின்மூலம் நாள் ஒன்றிற்கு 54 மில்லியன் லிட்டர் குடிநீரை திருப்பூர் மாநகராட்சிக்கு கூடுதலாக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் அரசாங்கம் ₹150 கோடி சமபங்குகளை உள்முதலீடு செய்வதற்காக ஒப்புதல் அளித்தது.

தமிழ்நாடு அரசு இந்நிறுவனத்திற்கு திருப்பூர் உட்கட்டமைப்பு பகுதிக்கு வெளியே அமைந்துள்ள குறிப்பிட்ட பகுதிகளில் குடிநீர் விநியோக அமைப்பினை விரிவாக்கம் செய்ய அனுமதி அளித்துள்ளது. அதன்படி, இந்நிறுவனம் திருப்பூர் மாவட்டத்தில் பல்லடம் பகுதியிலும், ஈரோடு மாவட்டத்தில் பெருந்துறை பகுதியிலும், வாடிக்கையாளர்களை அடையாளம் கண்டுள்ளது. மேலும், தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் மூன்று கூட்டுக் குடிநீர் திட்டங்களை ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களைச் சேர்ந்த ஈரோடு, பெருந்துறை, சென்னிமலை மற்றும் ஊத்துக்குளி யூனியன் பகுதிகளுக்குட்பட்ட 68 கிராம பஞ்சாயத்துக்களைச் சார்ந்த 461 குடியிருப்புகளுக்கு கோணவாய்க்கால், கங்காபுரம், வாவிக்கடை, சரளை, பெருந்துறை, விஜயமங்கலம், பல்லக்கவுண்டம்பாளையம்,

2016 ஆகஸ்ட் 5]

சர்க்கார்பெரியபாளையம், அக்ரஹாரப்-பெரியபாளையம் ஆகிய இடங்களில் இருந்து குடிநீர் வழங்க திட்டப் பணிகளை நிறைவேற்றியுள்ளது. இதன்மூலம் 9 MLD *குடிநீர் கூடுதலாக விநியோகம் செய்யப்படுகிறது.*

தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு தற்சமயம் விநியோகத்தில் உள்ள 35 MLD *தண்ணீரின் அளவு படிப்படியாக அதிகரித்து வருகிறது. தமிழக அரசின் சமபங்கு முதலீடு, திருப்பூர் மாநகராட்சி நாள் ஒன்றிற்கு 50 மில்லியன் லிட்டர் தண்ணீரை கூடுதலாக வாங்குவது மற்றும் நிறுவனத்தின் சேவைப் பகுதியை விரிவுபடுத்தி திருப்பூர் உட்கட்டமைப்பு பகுதிக்கு வெளியே அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கும் தண்ணீர் விநியோகம் செய்வதற்கான ஒப்புதல் அளித்து திட்ட செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் ஆகியவைகள் இந்நிறுவன வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு சாதகமாக அமைந்துள்ளன. இதனால், இந்நிறுவனமானது இப்பகுதியிலுள்ள பொது மக்களுக்கு தனது சேவையை தொடர்ந்து செய்ய இயலும்.*

திருப்பூர் மாநகராட்சியில் குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீர் அகற்றுவதற்கான வசதிகளை மேலும் மேம்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கையையும் புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் தயார் செய்து உள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2016 ஆகஸ்ட் 5

11. தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம்

தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம், இந்திய நிறுவனச் சட்டம், 1956-ன்கீழ் 27-01-2000 அன்று ILFS மற்றும் தமிழ்நாடு அரசால் ஒரு சிறப்பு நோக்க அமைப்பாக உருவாக்கப்பட்டது. இந்நிறுவனத்தின் நோக்கம் அரசாங்க அமைப்புகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுடன் முதலீடு செய்து அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் திட்டங்களை உருவாக்கி, குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீர் திட்டங்களைச் செயல்படுத்துவதும் ஆகும்.

தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனத்தால் புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் உருவாக்கப்பட்டது. இந்நிறுவனத்தின் மொத்த பங்கு முதலீட்டில் 46.15% தமிழக அரசுடையது. இந்நிறுவனம் புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்தில் முதலீடு செய்வது மட்டுமல்லாமல் மற்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பல்வேறு அமைப்புகளிலும் முதலீடு செய்ய ஆயத்தமாக உள்ளது.

மேலும், இந்நிறுவனத்தின் நோக்கம் அடிப்படை வசதிகளுக்கான முதலீடு மற்றும் வளர்ச்சிப் பணிகளை செயல்படுத்துவது மட்டுமல்லாமல் (பொதுவான மற்றும் தனிப்பட்ட முறையில் திட்டங்களைச் செயல்படுத்துவது உட்பட) பல்வேறு குடிநீர் விநியோக திட்டங்களைச் செயல்படுத்துவதாகும். மேலும், கீழ்க்கண்ட பல்வேறு குடிநீர் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான ஆலோசனை சேவைகளையும் வழங்கி வருகிறது.

தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின்மூலம், பொன்னேரி, திருப்போரூர், ஆயக்குடி, கன்னியாகுமரி, வல்லம் மற்றும் தெ.கண்ணனூர் பேரூராட்சிகளுக்கும் மற்றும் தூத்துக்குடி, கோயமுத்தூர், சங்கரன்கோவில் நகராட்சிகளுக்கான திட்ட அறிக்கை சரிபார்த்தல் பணிக்காக நியமிக்கப்பட்டுள்ளது.

மேலும், போடிநாயக்கனூர், வேலூர், கோயம்புத்தூர், ஈரோடு, ஓசூர் நகராட்சிகளுக்கான குடிநீர் பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் பணிக்காகவும் மேலும் IWL நிறுவனத்தில் இருந்து ஜார்கன்ட் மாநிலத்திற்கு உட்பட்ட நகரங்களுக்கு 24x7 குடிநீர் வழங்கல் திட்ட அறிக்கை தயாரித்தல் பணிக்காக நியமிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்

2016 ஆகஸ்ட் 5]

கழிவுநீரகற்று வாரியத்தின்மூலம் பெரும்பாக்கம், நெற்குன்றம், குடபாக்கம் பகுதிகளுக்கு திட்ட அறிக்கை சரிபார்க்கும் பணிக்காக நியமிக்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனம் திருப்பூர் மாவட்டத்திலுள்ள தொழிற்சாலைகளுக்கான ஏழு கூட்டு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் (அருள்புரம், ராயபுரம், முருகம்பாளையம், சினனக்கரை, காசிப்பாளையம், குனகல்பாளையம், ச.பெரியபாளையம்) சாயக்கழிவுகளுக்கான கழிவுநீர் சுத்திகரிப்பு செய்து பூஜ்ஜிய அளவு கழிவு நீர் வெளியேற்ற ஏதுவாக இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிகளைச் செய்து வருகின்றது. தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம் குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு பராமரிப்புப் பணிகளில் மிகுந்த அனுபவம் பெற்றுள்ளது.

இந்நிறுவனம் பெற்றுள்ள குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு பராமரிப்புப் பணிகள் செய்வதற்கான அனுபவத்தை சிறந்த முறையில் செயல்படுத்த தமிழக அரசு முடிவு செய்து, தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம், கீழ்க்கண்ட சேவைகளைச் செய்யும் நோக்கத்துடன் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

- *பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் வளர்ச்சி மற்றும் இயக்குதல்/ பராமரிப்பு செய்வதற்கான தனிச் சேவை மையம்*
- *கழிவுநீர் உப்புத்தன்மை நீக்கம் மற்றும் கழிவுநீரை மறு உபயோகம் செய்து தொழிற்சாலைகளுக்கு தண்ணீர் வழங்குதல்*

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஈரோடு, நாமக்கல், சேலம் மற்றும் கரூர் சார்ந்த ஜவுளித் துணி வெளுத்தல், சாயம் ஏற்றுதல் மற்றும் அவை தொடர்பான குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கான மறுவாழ்வு திட்டமொன்றை தமிழக சட்டமன்றத்தில் 11-08-2014 அன்று அறிவித்துள்ளார். அதன்படி இந்த 4 மாவட்டங்களில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர ஜவுளித் துணி வெளுத்தல், சாயம் ஏற்றுதல் மற்றும் அவை தொடர்பான தொழில் நிறுவனங்களுக்கு பூஜ்ய கழிவு நீர் வெளியேற்றம் என்ற அடிப்படையில் பொதுவான கழிவு சுத்திகரிப்பு அமைப்புகள் உடைய ஒருங்கிணைந்த ஜவுளி செயல்முறை பூங்காக்களை நிறுவும் செயல்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு

திட்டத்திற்கும் கண்டறியும் ஆய்வு மேற்கொள்வது, விரிவான திட்ட அறிக்கையை தயார் செய்வது மற்றும் நிதி தொடர்பான முடிவுகள் மற்றும் திட்ட மேலாண்மை ஆலோசனை (PMC) / O&M வழங்குதல் ஆகியவற்றிற்கான பொறுப்புகளை தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது.

தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம் ஒரு அறிவுசார்ந்த கூட்டாளி மற்றும் ஜவுளி அமைச்சகத்தின் இந்திய அரசின் 12-வது திட்டத்தின்கீழ் ஆறு /கடலில் பூஜ்ஜிய கழிவு நீர் வெளியேற்றும் பொது சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவ IPDS திட்டத்திற்கான பட்டியலிடப்பட்ட ஆலோசனை நிறுவனமாக நியமிக்கப்பட்டுள்ளது.

மேலும், மத்திய அரசின் நமாமி கங்கை திட்டத்தின்மூலம் 5 ஜவுளித் துணி நிறுவனத்திற்கும் மற்றும் பொது தோல் பதனிடும் தொழில் கூட்டமைப்பிற்கும் மேலும், ஹரியானா நகர்ப்புற மேம்பாட்டு ஆணையத்தின்மூலம், பானிபட்டில் உள்ள ஜவுளி தொழிற்சாலைகளின் பூஜ்ஜிய கழிவு நீர் வெளியேற்றும் அமைப்புகளை செயல்படுத்தும் நோக்கத்திற்காக தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனத்தை நியமித்துள்ளது. மேலும், உலக வங்கி குழுவின்மூலம் பங்களாதேஷ் கொனபாரி ஜவுளித் துணி தொழிற்சாலைகளின் பூஜ்ஜிய கழிவு நீர் வெளியேற்றும் பணிகளுக்கான தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் சாத்தியக் கூறுகளுக்கான அறிக்கை தயாரிக்கும் பணிக்காக தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனத்தை நியமித்துள்ளது.

இந்நிறுவனத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிகளின் மூலமாக ஆண்டு வருவாய் 2014-2015 நிதி ஆண்டில் ₹12.88 கோடியில் இருந்து 2015-2016 நிதியாண்டில் ₹18.89 கோடியாக உயர்ந்துள்ளது. மேலும், கலந்தறிதற்குரிய சேவை வாயிலாக கிடைக்கக்கூடிய வருவாய் நிதியாண்டு 2014-2015 ₹4.11 கோடியில் இருந்து 2015-2016 நிதியாண்டு ₹5.16 கோடியாக உயர்ந்துள்ளது.

கோரிக்கை எண் 34

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

2016 – 2017–ல் செலவிற்கு வேண்டியுள்ள தொகை பற்றிய மதிப்பீடு

2016 – 2017 வரவு–செலவு திட்ட மதிப்பீடு

(ரூ. ஆயிரத்தில்)

	வருவாய்	மூலதனம்	கடன்	மொத்தம்
மானியக் கோரிக்கை அனுமதித்தது	6,953,95,79	4,590,12,58	275,93,62	11,820,01,99
மொத்த தொகை சாட்டியது	3	––	––	3

நிகரச் செலவு

(ரூ. ஆயிரத்தில்)

கணக்குத் தலைப்பு	2014–2015 கணக்குகள்	2015–2016 திருத்த மதிப்பீடு	2016–2017 இடைக்கால வரவு செலவுத் திட்ட மதிப்பீடு	2016 – 2017 திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு
2215 குடிநீர் வழங்கலும் துப்புரவும்	241,70,89	312,93,03	319,21,06	319,21,06
2217 நகர்ப் பகுதி வளர்ச்சி	991,21,39	484,16,61	508,46,95	603,64,48
2251 தலைமைச் செயலகம் – சமூகப் பணிகள்	7,44,77	7,50,69	8,41,96	8,41,96
2215 ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள்	8,09,52	8,15,74	9,09,74	9,26,60
3475 ஏனைய பொதுவான பொருளாதாரப் பணிகள்	9,27,70	321,77,51	259,13,94	259,13,94
3604 உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்	4,254,59,27	4,842,56,62	6,112,41,73	5,753,73,74
4215 குடிநீர் வழங்கல், துப்புரவு குறித்த மூலதனச் செலவு	1,340,77,38	1,104,19,03	1,664,12,54	1,364,12,54

	கணக்குத் தலைப்பு	2014–2015 கணக்குகள்	2015–2016 திருத்த மதிப்பீடு	2016–2017 இடைக்கால வரவு செலவுத் திட்ட மதிப்பீடு	2016 – 2017 திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு
4217	நகர்ப் பகுதி வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு	1,124,10,00	2,260,77,02	2,956,85,03	3,076,00,04
4515	ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு	117,59,00	77,53,00	80,00,00	50,00,00
6215	குடிநீர் வழங்கல் துப்புரவுக்கான கடன்கள்	63,36,72	17,28,54	24,63,62	24,63,62
6217	நகர்ப்பகுதி வளர்ச்சிக்கான கடன்கள்	272,93,84	196,47,00	250,00,00	250,00,00
7610	அரசு பணியாளர் முதலியோருக்குக் கடன்கள்	––	60,00	50,00	50,00
7615	பல்வகைக் கடன்கள்	26,84	80,00	80,00	80,00

கோரிக்கை எண்.34

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை – 2016 –2017 திருத்திய

வரவு – செலவுத் திட்ட மதிப்பீடு

(ரூ. ஆயிரத்தில்) (தொகு. மொத்தம்)

துறைத் தலைமை				வருவாய்	மூலதனம்	கடன்	மொத்த
1.	34 01	தலைமைச் செயலகம்	சாட்டியது	1	--	--	1
			அனுமதித்தது	10,56,76	--	50,00	11,06,76
2.	34 02	நகராட்சி நிருவாக ஆணையரகம்	சாட்டியது	1	--	--	1
			அனுமதித்தது	5,010,52,03	3,076,00,05	261,00,00	8,347,52,08
3.	34 03	பேரூராட்சி இயக்ககம்	சாட்டியது	1	--	--	1
			அனுமதித்தது	1,694,91,63	50,00,00	--	1,744,91,63
4.	34 04	தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரியம்	அனுமதித்தது	54,01	1,232,44,81	14,43,62	1,247,42,44

5.	34 05	சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்	அனுமதித்தது	231,95,63	231,67,72	——	463,63,35
6.	34 06	தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதி மேம்பாட்டு நிறுவனம்	அனுமதித்தது	5,45,73	——	——	5,45,73
மொத்தம்			**சாட்டியது**	**3**	**——**	**——**	**3**
			அனுமதித்தது	**6,953,95,79**	**4,590,12,58**	**275,93,62**	**11,820,01,99**

இணைப்பு II

(91 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 42—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2016—2017

முன்னுரை:

“தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் பீடுநடை போடச் செய்ய வேண்டும் என்பதும், இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக ஆக்க வேண்டும் என்பதும்தான் இந்த அரசினுடைய குறிக்கோள்”

-மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

கிராமப்புற மக்களது சமூகப் பொருளாதார நலனே, இந்த அரசின் பல்வேறு முன்னோடித் திட்ட செயலாக்கத்தின் மையக் கருத்தாக அமைந்துள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஒப்பற்ற தொலைநோக்குத் தலைமையின்கீழ், இம்மாநிலம் பல தனித்துவம்வாய்ந்த மற்றும் புதுமையான திட்ட செயலாக்கத்தினைக் கண்டது. அது, ஊரகப் பகுதிகளை முன் எப்போதும் இல்லாத அளவு முன்னேற்றம் அடையச் செய்துள்ளது. வறுமை ஒழிப்பு மற்றும் உயர்தர சேவை வழங்குதல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே ஊரக வளர்ச்சித் திட்ட செயலாக்கம் அமைந்துள்ளது.

அனைத்து குடியிருப்புப் பகுதிகளுக்கும், வள ஆதாரங்களை சீரான முறையில் விநியோகிக்கவும், குறைந்தபட்ச அடிப்படை வசதிகளை அனைத்து குடியிருப்புகளுக்கும் வழங்கும் நோக்குடனும், தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் (தாய்) திட்டத்தினை இந்த அரசு 2011-2012-ல் அறிமுகப்படுத்தியது. இத்திட்டம் 2011-2012 முதல் 2015-2016 வரை ஐந்து ஆண்டுகளில் ரூ.3680 கோடி மொத்த ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது.

மேலும், சில கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த/ மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில், இந்த அரசு, தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் (தாய்) திட்டத்தினை 2016-2017 முதல்

2016 ஆகஸ்ட் 5]

2020-2021 வரை மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு நீட்டிக்க முடிவு செய்துள்ளது.

முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது, நம் நாட்டின் வளர்ச்சித் திட்ட வரலாற்றில், ஈடு இணையற்ற மற்றுமொரு திருப்புமுனைத் திட்டமாகும். இத்திட்டம், அதிக இருப்பிட இடவசதியுடன், சூரிய சக்தி விளக்குடன்கூடிய அனைத்து அடிப்படை வசதிகளுடன், ஒரு சுற்றுச்சூழல் நேய, கண்ணியமான இருப்பிடத்தை ஊரகப் பகுதி மக்களுக்கு கிடைக்கச் செய்கிறது. இத்திட்டம், தூய்மையான மற்றும் பசுமையான சக்தியை ஊரகப் பகுதிகளில் பெறுவதற்கான சூழலை உருவாக்குவதாகவும் அமைப்பதாகவும் உள்ளது. இத்திட்டம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி ஆகியவற்றிற்கிடையே ஓர் இணைப்பை ஏற்படுத்தும் தனித்தன்மை வாய்ந்த, அரிதான முன்மாதிரியாகும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023-ன் குறிக்கோள், இந்தியாவிலேயே தமிழகத்தில் சிறந்த கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி அதன்மூலம் அனைவருக்கும் குடிநீர் மற்றும் முழு சுகாதாரம் ஆகியவற்றை கிடைக்கச் செய்வதாகும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 2001 ஆம் ஆண்டு முதல், சுகாதார வசதிகளை ஏற்படுத்துவதில் பல முன்னோடித் திட்டங்களை செயல்படுத்தி, இம்மாநிலத்தில் தூய்மைப் புரட்சி ஏற்படுத்தியுள்ளார்கள். அப்போதைய 12,618 கிராம ஊராட்சிகளில் ஒரு ஊராட்சிக்கு ஒன்று வீதம் 2001 முதல் 2004 வரை ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டு, ஊரக மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு சுகாதார வசதிகள் ஏற்படுத்தித் தரப்பட்டன. இந்த சுகாதார வளாகங்கள், 2011-2012-ல் புதுப்பிக்கப்பட்டதுடன் இதேபோன்று ஊரக ஆண்களின் சுகாதார வசதிக்காக ஆண்கள் ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள், 2012-2013-ல் கட்டப்பட்டன. 2003-ல் முதலில் ஆரம்பிக்கப்பட்ட தூய்மை கிராம இயக்கம், 2011-2012-ல் மீள அறிமுகப்படுத்தப்பட்டதால், திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத கிராமங்கள் அதிக அளவில் உருவாக்கப்படுதலில் புதிய உத்வேகத்தை அளித்துள்ளது.

மாநில அளவில் மிகப்பெரிய அளவிலான தகவல் மற்றும் கல்வி வழியில் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த களப்பணி ஜூலை 2013-ல் துவக்கப்பட்டது மற்றும் பல்வேறு

[2016 ஆகஸ்ட் 5

அரசுத் துறைகளின் களப் பணியாளர்கள்மூலம் நேர்முகத் தகவல் பரிமாற்றம் செய்தது, தனிநபர் கழிப்பறைக்கான தேவையை உருவாக்கி உத்வேகம் அளித்துள்ளது. தனிநபர் கழிப்பறை அமைத்தல் மற்றும் பயன்பாட்டினை கண்காணித்தலில், சமூகம் சார்ந்த அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்பு சங்கம், சுய உதவிக் குழுக்களின் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ஆகியவற்றின் ஈடுபாடு, தமிழ்நாட்டினை திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற மாநிலமாக மாற்றுவதில் ஓர் அடிப்படை மாற்றத்தையே உருவாக்கி உள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட 9,000 கிராம ஊராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை நடவடிக்கையை செம்மைப்படுத்தும் பொருட்டு தூய்மைக் காவலர்கள் அறிமுகப்படுத்தப்பட்டனர். இந்த ஊராட்சிகளில், தூய்மைப் பராமரிப்பில் ஒரு வியக்கத்தகு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. கிராமப் பகுதிகளிலுள்ள அரசுப் பள்ளிகளில் சுகாதார வசதிகளை நிலைபெறச் செய்யவும், கழிவறைகள் தூய்மையாக பயன்படத்தக்க வகையில் பராமரிக்கப்படுவதை உறுதி செய்யவும், தேவையான நிதி வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல்மிக்க தலைமையின்கீழ் எடுக்கப்பட்ட இதுபோன்ற முன்னோடி முயற்சிகள் மாநிலத்தை "முழு சுகாதார தமிழகம்" என்ற திசையை நோக்கி செலுத்துகிறது.

பொருளாதார முன்னேற்றத்திற்கு, ஒரு சிறந்த மற்றும் திறன்வாய்ந்த உட்கட்டமைப்பு முதற்கண் தேவையாகும். வளர்ந்து வரும் ஊரகப் பொருளாதாரத்திற்கு, துணைபுரியும் உட்கட்டமைப்பு அனைத்து நிலைகளிலும் தேவை. எந்த ஊரக வளர்ச்சித் திட்டமாக இருப்பினும், கிராமச் சாலைத் தொகுப்பு அதன் முக்கிய அங்கமாக உள்ளது. புதிய சாலைகள் அமைப்பதற்கான அதிகரித்துவரும் தேவைகள், மற்றும் ஏற்கெனவே அமைக்கப்பட்ட சாலைகளின் மேம்பாட்டிற்கான தொடர் வேண்டுகோள் ஆகியவற்றிற்கிடையே ஒரு சமநிலைப்பாட்டை ஏற்படுத்த, திட்டமிடலும், சரியான நிதிப் பயன்பாடும் இன்றியமையாததாகும். மேற்கண்ட நோக்கத்தினை கருத்திற்கொண்டு, சாலைகளை தேர்ந்தெடுப்பதில் மாவட்டங்களுக்கு நெகிழ்தன்மையை வழங்கிடவும், 'தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்' என்ற ஒருங்கிணைந்த சாலைத் திட்டம் தமிழக அரசால் துவங்கப்பட்டது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை சிறந்த முறையில் செயல்படுத்த இந்த அரசு பல முயற்சிகளை

2016 ஆகஸ்ட் 5]

எடுத்ததன்மூலம், தமிழ்நாடு தேசிய அளவில் திட்டச் செயலாக்கத்தில் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. உடல் மற்றும் மன அளவிலான மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காக, தனித்துவம் வாய்ந்த ஒரு முயற்சியாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகளில் அவர்களை பங்கேற்றிட ஏதுவாக சிறப்பு விலை விகித அட்டவணையினை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த முயற்சிக்காக, 2012-2013 ஆம் ஆண்டு 'சமூகப் பங்களிப்பு' என்ற தலைப்பின்கீழ் சிறந்த மாநிலத்திற்கான தேசிய அளவிலான விருது தமிழ்நாட்டிற்கு கிடைக்கப்பெற்றது.

திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ள மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் பணிபுரியும் பணியாளர்களை தூய்மைக் காவலர்களாக நியமனம் செய்து, தினசரி திடக்கழிவுகளை ஊரக குடியிருப்புகளிலிருந்து அகற்ற பயன்படுத்துவது இந்த அரசின் மற்றுமொரு தனித்துவம் வாய்ந்த முன்முயற்சியாகும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் உரக்குழிகளைத் தோண்டி, சேகரிக்கப்படும் கழிவுகள், மக்கும் மற்றும் மக்காத கழிவுகளாகப் பிரிக்கப்பட்டு, அவைகள் முறையே, உரமாகவும், மறுசுழற்சிக்கும் பயன்படுத்தப்படுகின்றன.

சுற்றுச்சூழல் மாசுபடுவதன் தீமைகளைத் தடுக்க, பசுமைச் சூழலை அதிகரிக்கும் கொள்கையை இந்த அரசு பின்பற்றுகிறது. புவி வெப்பமயமாதல், மண் அரிப்பு மற்றும் சுற்றுச்சூழல் மாசுபடுவதை தடுக்கவும், உயிர் பன்முகத்தன்மையைக் காத்து உயிரியல் சமநிலையை பேணும் நோக்கத்திலும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் மிக அதிக அளவில் காடு வளர்க்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய காடு வளர்ப்புப் பணிகள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் தனியாகவும், வனத் துறையோடு ஒருங்கிணைந்தும் மேற்கொள்ளப்படுகின்றன. ஊராட்சி/வருவாய்த் துறைக்கு சொந்தமான மற்றும் பொது இடங்களிலும், சாலையோரங்களில் நிழல் தரும் வகையிலும் மரக்கன்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அரசின் ஊரகக் குடியிருப்புத் திட்டப் பயனாளிகள் அனைவருக்கும் வீட்டுத் தோட்டம் அமைக்க, நான்கு பழ மரக்கன்றுகள் வழங்கப்படுகின்றன.

[2016 ஆகஸ்ட் 5

கிராமப்புறங்களில் உள்ள ஏழை எளிய மக்களை அவர்கள் பங்கேற்புடன் கண்டறிந்து அவர்களது வறுமையை அகற்றிடவும், பெண்களின் ஆற்றலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டும் புது வாழ்வுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த முன்னோடி வறுமை ஒழிப்புத் திட்டம், உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. ஏழை மக்களைக் கொண்டு வலுவான சமூக அமைப்புகள் ஏற்படுத்துவதையும், திறன் வளர்ப்பதிலும், வங்கிகள்மூலம் கடன் இணைப்பினை வழங்கி வருமானம் ஈட்டக்கூடிய சிறு தொழில்கள்மூலம் வாழ்வாதாரத்தை பெருக்குவதையும் குறிக்கோளாகக் கொண்டு இத்திட்டம் செயல்படுகிறது.

சமுதாயம் சார்ந்த அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவிக் குழுக்கள், ஒத்தத் தொழில் குழுக்கள், ஒத்தத் தொழில் கூட்டமைப்புகள் மற்றும் மக்கள் கற்றல் மையங்கள் (மகமைகள்) மூலம் இச்செயல்பாடுகள் நிறைவேற்றப்படுகின்றன. இத்திட்டம், 26 மாவட்டங்களில் 120 பின்தங்கிய வட்டாரங்களில் அமைந்துள்ள 4,174 ஊராட்சிகளில் செயல்படுத்தப்படுகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல்மிக்க வழிகாட்டுதலில், மகளிருடைய, குறிப்பாக ஊரகப் பகுதிகளில் வாழும் மகளிரின் வாழ்வில், மகளிர் சுய உதவிக் குழு இயக்கம் விரைவான மாற்றத்தையும் சமூகப் பொருளாதார முன்னேற்றத்தையும் கொண்டு வந்துள்ளது. 1983 ஆம் ஆண்டு மகளிரின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்காக துவக்கப்பட்ட தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், மகளிர் திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஆகிய முக்கிய திட்டங்களின்மூலம் மகளிரின் வாழ்வாதாரங்களை மேம்படுத்தி, தொழில் வாய்ப்புகளை உருவாக்கி, வறுமையின் பிடியிலிருந்து அவர்களை விடுவித்து, அவர்களின் வளமான வாழ்வுக்கு வழிகாட்டி வருகிறது. மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு சேமிப்பு பழக்கம் ஏற்படுத்துதல், அடிப்படைப் பயிற்சியை வழங்குதல், அவர்களுக்குள் உட்கடன் பழக்கம் ஏற்படுத்துதல், சுழல்நிதி வழங்குதல், தொழில் தொடங்குவதற்கான வங்கிக் கடன் இணைப்பு தருதல் என பல்வேறு வழிகளில், சுய உதவிக் குழுக்கள் சுய சார்புடன் இருப்பதற்கு, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் அவர்களை ஊக்கப்படுத்தி வருகிறது.

2016 ஆகஸ்ட் 5]

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது, விடுபட்ட ஏழை மக்கள், குறிப்பாக விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், சமூகத்தில் விளிம்பு நிலையில் வாழும் மக்கள் ஆகியோரை சுய உதவிக் குழுக்கள் இயக்கத்திற்குள் கொண்டு வந்து, இதற்கு துணைபுரிகின்ற சமுதாய நிறுவனங்களை ஏற்படுத்தி அவைகளை வலுப்படுத்தவும், சமூக மூலதனம் மற்றும் நிதி உள்ளாக்கம் உள்ளிட்ட பல்வேறு நீடித்த வாழ்வாதார வாய்ப்புகளை ஏழை மக்களுக்கு உருவாக்கி, அவர்களின் திறமையை வளர்த்து, முழுமையாக வறுமையை ஒழிப்பதையும் தலையாய நோக்கங்களாக கொண்டுள்ளது. இத்திட்டம் தமிழ்நாட்டில் உள்ள 265 ஊராட்சி ஒன்றியங்களில் 3 கட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்ற விதி 110-ன்கீழ் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற இயக்கம் ஆகியவற்றின் செயல்பாடுகள், 2016-2017 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது நகர்ப்புற வறுமை குறைப்பிற்கு ஒரு உத்வேகத்தை அளிக்கும்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையானது, வேலையற்ற இளைஞர்களே இல்லாத, வறுமை முற்றிலும் அகற்றப்பட்ட, அனைத்து அடிப்படை வசதிகளும் ஒவ்வொரு குடிமகனுக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய, இவை எல்லாவற்றிற்கும் மேலாக, அனைத்து மக்களும் வளம், பாதுகாப்பு மற்றும் அமைதியினைப் பெற வேண்டும் என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது தொலைநோக்கு எண்ணத்தினை நிறைவேற்றிட, தொடர்ந்து அயராது பாடுபடும்.

[2016 ஆகஸ்ட் 5

2. ஊராட்சி நிருவாகம்

தமிழ்நாட்டில் சோழப் பேரரசர்கள் காலந்தொட்டு, உள்ளாட்சி அமைப்புகள் செயல்பட்டு வந்துள்ளன. மன்னர் பராந்தக சோழர் ஆட்சிக் காலத்தைச் சார்ந்த (கி.பி.907-955) காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூரிலுள்ள ஸ்ரீ வைகுண்டப்பெருமாள் கோயில் கல்வெட்டுகளும், வரைவுகளும் உள்ளாட்சி அமைப்புகள் மிக சிறப்பாகச் செயல்பட்டதற்கான உறுதியான வரலாற்றுச் சான்றுகளாக விளங்குகின்றன. கிராமக் குழுக்களின் உறுப்பினர்கள் இரகசியக் 'குடவோலை' முறைமூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு கிராம அளவில் பொருளாதார மற்றும் நிருவாகப் பொறுப்புகளை முழுமையான சுதந்திரத்துடன் செயல்படுத்தி வந்ததன்மூலம் மக்களாட்சி முறை கடைப்பிடிக்கப்பட்டது. மன்னராட்சி அமைப்பில் மக்களாட்சி தோற்றம் கொண்ட இம்முறையில் கிராமக் குழுவின் உறுப்பினராகப் போட்டியிடுவதற்கான தகுதிகள் மற்றும் தகுதியின்மைக்கான விதிகளும் வகுக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

சுதந்திரத்திற்குப் பின், அரசியலமைப்புச் சட்டம் பகுதி-IV, பிரிவு 40-ல் கிராம ஊராட்சிகளை அமைத்து அவற்றுக்கு அதிகாரங்களும், பொறுப்புகளும் வழங்க வழிவகை செய்யப்பட்டது. மத்திய அரசால் அமைக்கப்பட்ட திரு. பல்வந்த்ராய் மேத்தா அவர்கள் தலைமையிலான குழு, 1957 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சமர்ப்பிக்கப்பட்ட தனது அறிக்கையில் மக்களாட்சி பரவலாக்கம் என்ற தத்துவத்தின் அடிப்படையில் ஊராட்சி அமைப்புகளை ஏற்படுத்திட பரிந்துரைத்தது.

அதன்படி, மதராஸ் அரசு இயற்றிய 1958 ஆம் ஆண்டு மதராஸ் பஞ்சாயத்துச் சட்டம் மற்றும் மதராஸ் மாவட்ட வளர்ச்சி மன்றச் சட்டம் ஆகியவற்றில் அடங்கிய முக்கிய அம்சங்களாவன:

1. *ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகள் என்ற இரண்டு அடுக்கு முறை*

2. *ஊராட்சி ஒன்றியங்கள் உருவாக்கப்பட்டு சமுதாய வளர்ச்சி வட்டாரங்களாக ஒருங்கிணைக்கப்பட்டன.*

3. *கிராம ஊராட்சித் தலைவர்கள் ஊராட்சி ஒன்றியக் குழுவின் உறுப்பினராகவும், ஊராட்சி ஒன்றியக் குழுவின் பெருந்தலைவராகவும் நேரடியாகவும், மறைமுகமாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.*

2016 ஆகஸ்ட் 5]

4. பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மற்றும் சமூக நலப் பணிகளைச் செயல்படுத்தும் பொறுப்புகளை ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு வழங்குதல்.

5. மாவட்ட போர்டுகளை கலைத்தல்

6. ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட நிருவாகத்தில் ஆலோசனை வழங்க மாவட்ட வளர்ச்சி மன்றக் குழு ஏற்படுத்தப்பட்டது.

2.1 73–வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம்.

73-வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம், 1992 ஆம் ஆண்டு இயற்றப்பட்டு 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இந்திய அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 243ஜி-ன்படி ஊராட்சி அமைப்புகளுக்குப் பல்வேறு பொருள்களில் திட்டங்களைச் செயல்படுத்தும் முழுமையான அதிகாரங்களும், பொறுப்புகளும் கிடைப்பதற்கு அதிகமான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டன. அரசியலமைப்புச் சட்டத்தில் 11-வது அட்டவணையில் 29 பொருள்கள் குறித்து வரையறுக்கப்பட்டுள்ளன. 74-வது அரசியலமைப்பு சட்டத் திருத்தத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 'மாவட்ட திட்டக் குழு' உருவாக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, 22-4-1994-ல் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 (தமிழ்நாடு சட்டம் 21, 1994) தமிழ்நாடு அரசு நடைமுறைக்குக் கொண்டு வந்தது.

2.2 தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994-ன்படி தமிழ்நாட்டில் உள்ள ஊராட்சி அமைப்புகளில், பல்வேறு முக்கியமான மாறுதல்கள் கொண்டு வரப்பட்டன.

i) *தமிழ்நாட்டில் கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி என மூன்றடுக்கு ஊராட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டது.*

ii) *மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளில் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மற்றும் காலியிடம் ஏற்பட்ட 6 மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்பட்டு உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கான பதவியிடங்கள் நிரப்பப்படுதல்.*

iii) ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பிலும் உள்ள மொத்த மக்கள் தொகையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் விகிதாச்சாரத்தின் அடிப்படையில் பதவியிடங்கள் (வார்டு உறுப்பினர்கள்) மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கு (ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் / ஊராட்சித் தலைவர்) சுழற்சி முறையுடன்கூடிய இட ஒதுக்கீடு கொண்டு வருதல்.

iv) மொத்தப் பதவி மற்றும் தலைமைப் பதவியிடங்களில் மூன்றில் ஒரு பங்கு பெண்களுக்கு சுழற்சி முறையுடன் கூடிய இட ஒதுக்கீடு செய்யும் முறையைக் கொண்டு வருதல்.

v) ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு தொடர்ந்து தேர்தல் நடத்த தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் என்ற தன்னாட்சி அமைப்பினை ஏற்படுத்துதல்.

vi) மாநில நிதி ஆதாரங்களை ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளித்திட பரிந்துரை செய்யும் வகையில் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை மாநில நிதி ஆணையத்தினை ஏற்படுத்துதல்

vii) மாவட்ட அளவில் விரிவான வளர்ச்சித் திட்டத்தினைத் தயாரித்திட ஏதுவாக ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தயாரித்துள்ள திட்டங்களைத் தொகுத்திட மாவட்ட திட்டக் குழுவினை ஏற்படுத்துதல்.

viii) கிராம ஊராட்சியிலுள்ள அனைத்து வாக்காளர்களையும் உள்ளடக்கிய ‘கிராம சபை’ என்ற அமைப்பினைக் கொண்டு வருதல்.

2.3 தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994—ன்கீழ் வெளியிடப்பட்ட முக்கிய விதிகள்

1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்கீழ் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் தொடர்புடைய அனைத்து விதிகளையும் வெளியிட அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அரசால் வெளியிடப்படும் விதிகள் 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் தெரிவிக்கப்பட்ட அம்சங்களை செயல்படுத்த தொடர்புடைய அமைப்புகளுக்கும், அலுவலர்களுக்கும் உறுதுணையாகத் திகழ்கின்றன.

2016 ஆகஸ்ட் 5]

i) தமிழ்நாடு ஊராட்சிகள் (கிராம ஊராட்சி கூட்டத்தினை நடத்துவதற்கான குறைவெண் வரம்பு மற்றும் நடைமுறைகள்) விதிகள், 1999:

ஊராட்சி மன்றக் கூட்டங்களுக்கிடையிலான கால இடைவெளி, கூட்டம் நடத்துவதற்கான அறிவிப்பு மற்றும் பொருள்கள், குறைவெண் வரம்பு, வருகைப் பதிவு, தீர்மானம் இயற்றுதல், கூட்ட நடவடிக்கைக் குறிப்புகள் தயார் செய்தல் மற்றும் ஆவணங்களைப் பாதுகாத்தல் ஆகியவை குறித்து இவ்விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

ii) கிராம சபை நடத்துவதற்கான விதிகள்:

தமிழ்நாடு கிராம சபை (கிராம சபை கூட்டுதல் மற்றும் நடத்துவதற்கான நடைமுறைகள்) விதிகள் 1998 மற்றும் அவ்விதிகளுக்கு 2006 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட திருத்தங்களில் கிராம சபை கூட்டுவதற்கான நடைமுறைகள் மற்றும் நடத்துவதற்கான வழிமுறைகள் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்விதிகளின்படி, ஆண்டுக்கு 4 முறை, அதாவது ஜனவரி 26, மே 1, ஆகஸ்டு 15 மற்றும் அக்டோபர் 2 ஆகிய நாட்களில் கிராம சபை நடத்த வேண்டியது அவசியமாக்கப்பட்டுள்ளது.

கிராம சபை நடத்துவதற்கான குறைவெண் வரம்பு, கூட்டப் பொருள், வருகைப் பதிவு, தீர்மானங்கள் இயற்றுதல் மற்றும் கூட்ட நடவடிக்கைக் குறிப்புகளைத் தயார் செய்தல் ஆகியவை குறித்த நெறிமுறைகள் இவ்விதிகளில் விரிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

iii) தமிழ்நாடு ஊராட்சிகள் (தேர்தல்) விதிகள், 1995:

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு நேரடி மற்றும் மறைமுகத் தேர்தல்களை நடத்துவது குறித்து இவ்விதிகள் விளக்குகின்றன. தேர்தல் நடத்தும் அலுவலர்கள், வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் வெளியிடுதல், தேர்தல் அறிவிப்பு வெளியிடுதல், வேட்பு மனு தாக்கல், வாக்குப்பதிவு, வாக்குகளை எண்ணுதல், ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்தல், கிராம ஊராட்சித் தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்தல், தேர்தல் செலவினங்கள், தேர்தல் வழக்குகள் ஆகியவை குறித்து இவ்விதிகளில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

[2016 ஆகஸ்ட் 5

iv) **தமிழ்நாடு ஊராட்சிகள் (இட ஒதுக்கீடு மற்றும் இட ஒதுக்கீட்டிற்கான சுழற்சி முறை) விதிகள், 1995:**

மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள பதவியிடங்களில் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கான இட ஒதுக்கீடு மற்றும் இட ஒதுக்கீட்டிற்கான சுழற்சிமுறை குறித்து இவ்விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

v) **தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டட விதிகள், 1997:**

ஊரகப் பகுதிகளில் மனைப் பிரிவுகள் அங்கீகாரம் மற்றும் கட்டட வரைபடங்களை அங்கீகரித்தல் ஆகியவற்றுக்கான விதிமுறைகள் இவ்விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விதிகளின்படி, ஊராட்சி மன்றத் தலைவர் சில வரைமுறைகளுக்குட்பட்டு கட்டட வரைபட அனுமதி அளிக்க அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. குறிப்பிடப்பட்ட பரப்பளவிற்கு மிகையான கட்டட வரைபடங்களுக்கும், அனைத்து மனைப் பிரிவுகளுக்கும் நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநரின் தொழில்நுட்ப அனுமதி பெற்று கிராம ஊராட்சி மன்றத் தலைவர் அனுமதி அளிக்க இவ்விதிகள் வகை செய்கின்றன.

vi) **தமிழ்நாடு ஊராட்சிகள் (வரி விதிப்பு மற்றும் வசூலித்தல்) விதிகள், 1999:**

கிராம ஊராட்சிகளில் வீட்டு வரி நிர்ணயித்தல், வீட்டு வரி செலுத்துவோர் பட்டியல் தயாரித்தல், வீட்டு வரி விதிப்பின் மீதான மேல்முறையீடு, வீட்டு வரியை வசூல் செய்வதற்கான வழிமுறைகள் ஆகியவை இவ்விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

vii) **தமிழ்நாடு ஊராட்சிகள் (பணிகளுக்கான திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரித்தல் மற்றும் ஒப்பந்தங்களுக்கான வழிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்) விதிகள், 2007:**

கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் ஆகியவற்றின் பொது நிதி, மத்திய மற்றும் மாநில அரசுகளின்மூலம் பெறப்படும் திட்ட நிதி ஆகியவற்றைக் கொண்டு மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரித்தல் மற்றும் ஒப்பந்தங்களுக்கான வழிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவை குறித்து இவ்விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2016 ஆகஸ்ட் 5]

viii) **தமிழ்நாடு ஊராட்சிகள் (கிணறுகள் தோண்டுதல் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஒழுங்கு முறைப்படுத்துதல்) விதிகள், 2015:**

ஊரகப் பகுதிகளில் ஆழ்துளைக் கிணறுகள், குழாய் கிணறுகள் மற்றும் திறந்தவெளிக் கிணறுகள் ஆகிய பணிகளை மேற்கொள்ளும்போது எதிர்பாராத விதமாக குழந்தைகளுக்கு நேரக்கூடிய விபத்துக்களை தவிர்த்திட மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள் குறித்து இவ்விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. கிணறு தோண்டுவதற்கான அனுமதியினை விண்ணப்பதாரருக்கு வழங்குதல், கிணறு தோண்டும் நிறுவனங்களுக்கு பதிவுச் சான்று வழங்குதல், அதற்கான பதிவேட்டினை பராமரித்தலுக்கான படிவங்கள் மற்றும் மாதாந்திர அறிக்கைகள் அனுப்புதல் ஆகியவை குறித்து இவ்விதிகளில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ix) **குடிமை பணிகளுக்கான பயன்பாடு மற்றும் பராமரிப்பு செலவின வழிமுறைகள்:**

அரசு ஆணை எண் 157 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.தி) துறை நாள். 21-12-2015-ல் பயன்பாடு மற்றும் பராமரிப்பிற்கான செலவினத்திற்கு வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

(i) கை பம்பு

கை பம்பு	ரூ.1000/- (கூலி வகை மட்டும்)

(ii) மின்விசை பம்பு

2 குதிரை திறன்	ரூ.7,500
5 குதிரை திறன்	ரூ.10,000
7.5 குதிரை திறன்	ரூ.12,000

(iii) தெரு விளக்குகள் உபகரணங்கள் பொருத்துதல் மற்றும் மாற்றுதல்

தெரு விளக்கு மற்றும் சோடியம் ஆவி விளக்கு	ரூ.50/-
சோக் / ஸ்டார்ட்டர் / கன்டன்ஸர்	ரூ.25

x) கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம் தயாரிப்பதற்கான வழிகாட்டி நெறிமுறைகள்:

உள்ளாட்சி அமைப்புகளான கிராம ஊராட்சிகள் உள்ளூர் மக்களின் அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்தல் மற்றும் அடித்தட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திட கடமைப்பட்டனவாகும். சரியான திட்டமிடல் மற்றும் செம்மையாகவும் பொறுப்புணர்வுடனும் வளங்களைப் பயன்படுத்துதல் ஆகியவற்றின்மூலம் கிராம ஊராட்சிகள் சிறப்பாக செயல்பட இயலும்.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 240-ன்படி கிராம ஊராட்சிக்கான வளர்ச்சித் திட்டம் ஒவ்வோர் ஆண்டும் கிராம ஊராட்சிகளால் தயார் செய்யப்பட வேண்டும். வெளிப்படையிலான மற்றும் பயனுள்ள வகையில் நிதி மற்றும் வளங்களை பயன்படுத்திட பங்கேற்பின் அடிப்படையிலான திட்டமிடுதல் மிகவும் முக்கியமானது. அதற்கிணங்க 14-வது நிதிக் குழு மானியத்தை அடித்தள அளவிலான திட்டமிடல் அடிப்படையில் பயன்படுத்திட அரசாணை எண் 34, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா.1) துறை நாள் 02-03-2016-ல் விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2.4 மாநிலத் தேர்தல் ஆணையம்

அதிகாரப் பரவலாக்கம் மற்றும் ஜனநாயகத்தை வலுப்படுத்தும் விதமாக சுதந்திரமான மற்றும் சுய சார்புடைய அமைப்பாக தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் 1994 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. கிராம ஊராட்சிகளில் வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள் உள்ளிட்ட அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் முறையாக தேர்தலை நடத்துதல், அதனைக் கண்காணித்தல், இயக்குதல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகிய பணிகள் ஆணையரைத் தலைவராகக் கொண்ட தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தைச் சார்ந்ததாகும்.

1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 239 உட்பிரிவு (3)-ன்படி தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு,

2016 ஆகஸ்ட் 5]

ஆணையர் மற்றும் நிருவாகப் பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள். மாநிலத் தேர்தல் ஆணையரின் பணி விதிகள், பதவிக் காலம் ஆகியவை குறித்த விதிகளை ஆளுநர் நிர்ணயிப்பார். ஆணையர் இரண்டு ஆண்டுகளுக்குப் பதவி வகிப்பார். மேலும், இப்பதவியினை ஆறு ஆண்டுகளுக்கு மிகாமல் இரண்டு முறை நீட்டிப்பு செய்யலாம். மாநிலத் தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்டவருக்கு 65 வயது நிறைவடையும் நிலையில் அவருக்கு ஓய்வளிக்கப்பட வேண்டும். மாநிலத் தேர்தல் ஆணையரை அவருடைய பணியிலிருந்து நீக்க முடியாது. அவ்வாறு நீக்குவதாக இருந்தால், உயர் நீதிமன்ற நீதிபதியை நீக்கும் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். மேலும், மாநிலத் தேர்தல் ஆணையர் நியமிக்கப்பட்ட பின்னர் அவருடைய பணி விதிகள் தொடர்பான நிபந்தனைகள் எதுவும் அவரைப் பாதிக்கக்கூடிய வகையில் இருக்கக் கூடாது.

2.5 உள்ளாட்சித் தேர்தல் நடத்துதல்

தமிழ்நாட்டில், 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் இயற்றப்பட்ட பின் மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல்கள் அக்டோபர் 1996 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. உள்ளாட்சி அமைப்புகளுக்கான இரண்டாவது சாதாரண தேர்தல் அக்டோபர் 2001 ஆம் ஆண்டும், அதேபோல மூன்றாவது சாதாரண தேர்தல் அக்டோபர் 2006 ஆம் ஆண்டும் நடத்தி முடிக்கப்பட்டன. உள்ளாட்சி அமைப்புகளுக்கான நான்காவது சாதாரண தேர்தல் அக்டோபர் மாதம் 2011 ஆம் ஆண்டு வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டது.

மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்களுக்கான தேர்தல்கள் கட்சி அடிப்படையில் நடத்தப்பட்டன. ஆனால், கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கான பதவியிடங்களுக்கு கட்சி சாரா அடிப்படையில் தேர்தல்கள் நடத்தப்பட்டன. 2011 ஆம் ஆண்டு அக்டோபர் மற்றும் நவம்பர் மாதம் நடைபெற்ற தேர்தல்களில் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கான பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கான விபரங்கள் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளன.

[2016 ஆகஸ்ட் 5

அட்டவணை 2.1

மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளில் பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்கள் விவரம்

வ. எண்	பதவியிடம் குறித்த விபரம்	எண்ணிக்கை
1.	கிராம ஊராட்சி வார்டுகள்	99,333
2.	ஊராட்சி ஒன்றிய வார்டுகள்	6,471
3.	மாவட்ட ஊராட்சி வார்டுகள்	655
4.	கிராம ஊராட்சித் தலைவர்கள்	12,524
5.	ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள்	385
6.	மாவட்ட ஊராட்சித் தலைவர்கள்	31
மொத்தம்		1,19,399

2.6 கிராம ஊராட்சிகளில் பல உறுப்பினர் வார்டுகளை ஓர் உறுப்பினர் வார்டுகளாக மாற்றியமைத்தல்

2006 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வரை ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு ஓர் உறுப்பினர் வார்டுகள் அடிப்படையிலும், கிராம ஊராட்சிக்கு பல உறுப்பினர் கொண்ட வார்டுகள் அடிப்படையிலும் தேர்தல் நடைபெற்று வந்தது.

கிராம ஊராட்சியில் வழக்கத்திலிருந்த பல உறுப்பினர் வார்டு முறையினால் பெண்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்கு கிராம ஊராட்சி வார்டுகளில் இட ஒதுக்கீடு செய்வதில் மிகுந்த சிரமங்கள் இருந்தன. மேலும், இந்த முறையால் கிராமத்திலுள்ள வாக்காளர்களுக்கு வாக்குச் சீட்டுக்களில் குழப்பமும், வாக்கு எண்ணிக்கையின்போது அலுவலர்களுக்கு சிரமங்களும் ஏற்பட்டன. பல உறுப்பினர்களைக் கொண்ட வார்டுகளின் எல்லைகள் தெளிவாக வரையறை செய்யப்படாததால் ஒவ்வொரு வார்டு உறுப்பினருக்குரிய பகுதி தெளிவுபடுத்தப்படவில்லை. எனவே, 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாவது திருத்தச் சட்டம்) (தமிழ்நாடு சட்டம் 20, 2009)-ன்படி, 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 12-க்கு திருத்தம் செய்யப்பட்டது. ஆனால், அச்சட்ட திருத்தத்திற்கு தொடர்பான விதி திருத்தம் வெளியிடப்படாததால் பல உறுப்பினர் வார்டுகளை ஓர் உறுப்பினர் வார்டாக மாற்றி அமைக்கும் பணி நடைமுறைப்படுத்தப்படவில்லை.

2016 ஆகஸ்ட் 5]

அரசாணை எண் 63 ஊரக வளர்ச்சி (பரா 2) ஊராட்சித் துறை நாள் 14-9-2011-ன்படி, 2011 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தமிழ்நாடு ஊராட்சிகள் (உறுப்பினர்கள் எண்ணிக்கை நிர்ணயம் செய்தல் மற்றும் வார்டுகளை பிரித்தல்) விதிகள் 1995-ல் திருத்தம் கொண்டு வரப்பட்டு, கிராம ஊராட்சியில் ஓர் உறுப்பினர் வார்டு முறை கொண்டுவரப்பட்டது.

1991 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, கிராம ஊராட்சியில், 40,879 பல உறுப்பினர் வார்டுகளில் 97,458 வார்டு உறுப்பினர்கள் இருந்தனர். எனவே, தேர்தல் நடைமுறைகள் தங்குதடையின்றி நடைபெறும் வகையிலும், கிராம ஊராட்சி வார்டுகளின் எல்லைகளை தெளிவாக வரையறை செய்யும் பொருட்டும், கிராம ஊராட்சியில் உள்ள பல உறுப்பினர் வார்டுகளை ஓர் உறுப்பினர் வார்டுகளாக மாற்ற முடிவு செய்யப்பட்டது. 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்அடிப்படையில் ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் பல உறுப்பினர் வார்டுகளை ஓர் உறுப்பினர் வார்டுகளாக மாற்றியமைக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வாயிலாக, கிராம ஊராட்சி வார்டுகள் மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 99,333 ஆக அதிகரித்து, அதே எண்ணிக்கையிலான வார்டுகளும் ஏற்படுத்தப்பட்டன. கிராம ஊராட்சிகளின் வார்டு உறுப்பினர்களுக்கான சாதாரண தேர்தல் ஓர் உறுப்பினர் வார்டு முறையில் அக்டோபர் 2011-ல் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

2.7 ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஊராட்சி அமைப்புகளின் பல்வேறு பதவியிடங்களுக்கு மக்கள் தொகை விகிதத்தின் அடிப்படையில் உரிய இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும். இந்திய அரசியலமைப்புச் சட்டம், சட்டக்கூறு 243 D-ன்படி ஊராட்சி அமைப்புகளில் ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினருக்கான பதவியிடங்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை செய்யப்பட வேண்டும். அதில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாமல் ஆதி திராவிடர், பழங்குடியினப் பெண்களுக்கு ஒதுக்கப்படும் எண்ணிக்கையையும் உள்ளடக்கி மொத்த ஒதுக்கீட்டில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாமல் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்திட வேண்டும். இதற்காக,

[2016 ஆகஸ்ட் 5

1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவுகள் 11, 20, 32, 57 மற்றும் 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (பதவியிடங்களுக்கான இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை) விதிகள் ஆகியவற்றில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு இடஒதுக்கீடு செய்வது குறித்து தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 2.2

வ.எண்	இட ஒதுக்கீடு வகை	மொத்த பதவி இடங்கள்	மகளிருக்கான ஒதுக்கீடு	விழுக்காடு	ஆதி திராவிடருக்கான ஒதுக்கீடு	விழுக்காடு	பழங்குடியினருக்கான ஒதுக்கீடு	விழுக்காடு
1.	மாவட்ட ஊராட்சித் தலைவர்கள்	31	11	35%	7	24%	0	0%
2.	ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள்	385	140	36%	87	23%	4	1%
3.	கிராம ஊராட்சித் தலைவர்கள்	12,524	4,289	34%	3,136	25%	156	1%
4.	மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள்	655	228	35%	154	24%	8	1%
5.	ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள்	6,471	2,286	35%	1,526	24%	64	1%
6.	கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள்	99,333	33,121	33%	25,360	26%	1,039	1%

2.8 ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு உயர்த்தி வழங்கப்பட்ட இட ஒதுக்கீடும் பதவிகளும் (50 விழுக்காடு ஒதுக்கீடு)

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 (தமிழ்நாடு சட்டம் 21, 1994)-ல் கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியக் குழு மற்றும் மாவட்ட ஊராட்சிகளில் உள்ள பதவியிடங்கள் மற்றும் தலைமை பதவியிடங்கள் மூன்றில் ஒரு பங்கு மகளிருக்கு ஒதுக்கீடு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2016 ஆகஸ்ட் 5]

ஆனால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஊரக வளர்ச்சியில் மகளிர் பங்கேற்பினை அதிகப்படுத்தவும் மகளிருக்குரிய அதிகாரம் வழங்கப்படுவதை மேம்படுத்திடவும் மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீட்டினை 50 விழுக்காடாக உயர்த்துவது அவசியம் என கருதியதால், மகளிருக்கு இடஒதுக்கீடு மூன்றில் ஒரு பங்கு என்பதை உயர்த்தி 50 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்யும் வகையில், தமிழ்நாடு ஊராட்சிகள் (இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை இட ஒதுக்கீடு) விதிகள் 1995-ல் திருத்தம் செய்து அரசு ஆணை எண் 60 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா1) துறை, நாள். 23-05-2016-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாணையின்படி, எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் மகளிர்க்கான உயர்த்தப்பட்ட இட ஒதுக்கீடு நடைமுறைக்கு வரும்.

2.9 கிராம ஊராட்சி

31 மாவட்டங்களில் உள்ள 12,524 கிராம ஊராட்சிகளில் 79,394 குக்கிராமங்கள் உள்ளன. கிராம ஊராட்சி என்பது, அதற்கென உள்ள கிராமங்களை உள்ளடக்கி, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு ஊராட்சிகளின் ஆய்வாளர் அறிவிக்கையில் குறிப்பிட்ட தேதியிலிருந்து அமைக்கப்படும். ஒவ்வொரு ஊராட்சியும் உரிய காரணங்களால் கலைக்கப்படாதவரை ஒவ்வொரு சாதாரணத் தேர்தலுக்குப்பின்னர் நடைபெறும் முதற்கூட்டத்திலிருந்து 5 ஆண்டு காலம் செயல்பாட்டில் இருக்கும். கிராம ஊராட்சியின் தலைவர், கிராம ஊராட்சியின் செயல் அலுவலர் ஆவார்.

2.10 கிராம சபை

கிராம சபை என்பது ஒவ்வொரு கிராம ஊராட்சியில் உள்ள ஜனநாயகத்தின் ஆணிவேராகும். கிராம ஊராட்சிகள் செவ்வனே செயல்படத் தேவையான, வெளிப்படையான மற்றும் பொறுப்பான நிருவாகத்தினை ஊக்குவிக்கவும், திட்டமிடுதல், திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் பயனாளிகளை தேர்வு செய்தல் ஆகியவற்றில் பொதுமக்களின் பங்கேற்பினை அதிகரித்தல் மற்றும் சமூகத் தணிக்கைக்கு வழிவகுத்திட செயல்திறன்மிக்க ஒரு கிராம சபை அவசியமாகிறது. சட்டப்படி, இரண்டு கிராம சபைக் கூட்டங்களுக்கு இடையே உள்ள காலம் ஆறு மாதங்களுக்கு மிகாமல் இருக்கும் வகையில் கிராம சபைக் கூட்டங்கள்

[2016 ஆகஸ்ட் 5

கூட்டப்பட வேண்டும். ஆயினும், ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் ஆண்டில் குறைந்தது நான்கு முறை, அதாவது ஜனவரி 26, மே 1, ஆகஸ்டு 15, அக்டோபர் 2 ஆகிய நாட்களில் கிராம சபைக் கூட்டம் நடத்த தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது. கிராம ஊராட்சியில் உள்ள மக்கள்தொகை அடிப்படையில் அரசு கீழ்க்கண்டவாறு குறைவெண் வரம்பு நிர்ணயம் செய்துள்ளது.

அட்டவணை 2.3

கிராம சபைக் கூட்டத்திற்கான திருத்திய குறைவெண் வரம்பு

வ. எண்	கிராம ஊராட்சியின் மக்கள் தொகை	கிராம சபைக் கூட்டத்திற்கான குறைவெண் வரம்பு
1.	500 வரை	50
2.	501 முதல் 3,000 வரை	100
3.	3,001 முதல் 10,000 வரை	200
4.	10,000க்கு மேல்	300

கிராம சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளுதல் மற்றும் கூட்ட நடவடிக்கைகளை முறையான பதிவேடுகள் மற்றும் புகைப்படம்மூலம் பதிவு செய்யவும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

கிராம சபை பின்வரும் முக்கியமான பணிகளை நிறைவேற்றுகின்றது.

1. *கிராம வளர்ச்சித் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குதல்.*
2. *கிராம ஊராட்சியின் வரவு-செலவு திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குதல்.*
3. *தணிக்கை அறிக்கைக்கு ஒப்புதல் வழங்குதல்*
4. *திட்டப் பணிகள் செயல்பாட்டின் முன்னேற்றத்தை ஆய்வு செய்தல்.*
5. *பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் பயனாளிகளின் பட்டியலுக்கு ஒப்புதல் வழங்குதல்.*

2016 ஆகஸ்ட் 5]

6. கிராமத்தில் உள்ள பல்வேறு இன மக்களிடையே சமுதாய மற்றும் சமூக நல்லிணக்கத்தை ஊக்குவித்தல்.

2.11 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி ஊராட்சிவாரியான மக்கள் தொகை விபரம்

மக்கள்தொகை கணக்கெடுப்பு இயக்குநரகத்துடன் ஒருங்கிணைந்து கிராம ஊராட்சி வாரியாக 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, 31 மாவட்டங்களில் உள்ள 12,524 கிராம ஊராட்சிகளுக்கும் ஊரக மக்கள்தொகை விவரம் ஆகஸ்ட் 2014-ல் வெளியிடப்பட்டுள்ளது. அவ்வாறு கிராம ஊராட்சி வாரியாக வெளியிடப்பட்ட மக்கள் தொகையில் தாழ்த்தப்பட்ட / பழங்குடி இனத்தவர் மற்றும் பெண்கள் குறித்த விவரங்களும் அடங்கும். மேலும், மேற்கண்ட விவரங்கள் www.tnrd.gov.in *என்ற இணையதளத்திலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மக்கள் தொகை அடிப்படையில் கீழ்க்கண்டவாறு கிராம ஊராட்சிகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.*

அட்டவணை 2.4

2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அடிப்படையில் கிராம ஊராட்சிகளை வகைப்படுத்துதல்

வ. எண்	மக்கள் தொகை	கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை
1.	500 மற்றும் அதற்குக் கீழ்	46
2.	501–1000	833
3.	1001–3000	6,821
4.	3001–5000	2,781
5.	5001–10000	1,753
6.	10,000க்கு மேல்	290
	மொத்தம்	12,524

[2016 ஆகஸ்ட் 5

மாவட்ட வாரியாக தாழ்த்தப்பட்ட / பழங்குடி இனத்தவர் மற்றும் பெண்கள் உள்ளடக்கிய ஊரக மக்கள் தொகை விவரம் பின்வருமாறு:

அட்டவணை 2.5

மாவட்ட வாரியான ஊரக மக்கள் தொகை விவரம்

வ. எண்	மாவட்டம்	ஊரக மக்கள் தொகை	பெண்கள்	பழங் குடியினர்	ஆதி திராவிடர்	ஆதி திராவிடர் விழுக்காடு
1.	காஞ்சிபுரம்	18,61,789	9,24,124	29,706	6,24,458	33.54
2.	திருவள்ளூர்	15,85,280	7,90,170	37,708	5,04,115	31.80
3.	கடலூர்	18,00,133	8,91,507	10,082	6,25,788	34.76
4.	விழுப்புரம்	29,12,960	14,45,062	71,289	9,19,308	31.56
5.	வேலூர்	24,82,556	12,41,612	65,230	6,05,248	24.38
6.	திருவண்ணாமலை	20,39,049	10,14,486	87,096	5,02,044	24.62
7.	சேலம்	19,57,105	9,45,014	1,12,334	3,54,545	18.12
8.	நாமக்கல்	10,87,895	5,37,918	55,417	2,48,100	22.81
9.	தருமபுரி	12,90,530	6,24,646	60,609	2,13,538	16.55
10.	கிருஷ்ணகிரி	14,65,743	7,17,175	20,980	2,20,945	15.07
11.	ஈரோடு	11,30,722	5,59,797	19,084	2,16,689	19.16
12.	திருப்பூர்	11,39,466	5,68,772	1,947	2,63,539	23.13
13.	கோயம்புத்தூர்	10,21,359	5,10,409	19,565	2,13,492	20.90
14.	நீலகிரி	3,10,591	1,59,447	22,767	91,446	29.44
15.	தஞ்சாவூர்	16,67,809	8,46,926	1,465	3,84,291	23.04
16.	நாகப்பட்டினம்	12,61,288	6,37,194	2,214	4,60,876	36.54
17.	திருவாரூர்	10,06,482	5,06,528	939	3,88,740	38.62
18.	திருச்சிராப்பள்ளி	14,71,945	7,39,563	14,519	3,05,109	20.73
19.	கரூர்	6,68,360	3,36,684	201	1,59,718	23.90
20.	பெரம்பலூர்	4,68,017	2,34,113	2,136	1,50,504	32.16
21.	அரியலூர்	6,71,100	3,37,847	9,946	1,63,770	24.40
22.	புதுக்கோட்டை	13,41,111	6,75,896	845	2,51,552	18.76
23.	மதுரை	13,00,481	6,44,431	4,896	2,72,494	20.95
24.	தேனி	5,75,394	2,84,527	1,377	1,43,589	24.95
25.	திண்டுக்கல்	14,57,412	7,25,917	4,580	3,34,064	22.92
26.	இராமநாதபுரம்	10,09,270	5,01,016	526	2,13,583	21.16
27.	விருதுநகர்	12,86,543	6,44,603	1,197	3,15,796	24.55
28.	சிவகங்கை	9,52,610	4,77,215	518	1,88,454	19.78
29.	திருநெல்வேலி	16,45,509	8,32,916	4,099	3,58,487	21.79
30.	தூத்துக்குடி	9,71,273	4,92,268	1,921	2,48,752	25.61
31.	கன்னியாகுமரி	6,46,441	3,25,257	3,893	26,546	4.11
	மொத்தம்	404,86,223	201,73,040	6,69,086	99,69,580	24.62

2016 ஆகஸ்ட் 5]

2.12 ஊராட்சி வாரியான பரப்பளவு விவரம்

2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, ஊராட்சிக்கான மொத்த மக்கள்தொகை, ஆதி திராவிடர், பழங்குடியினர் மக்கள் தொகை மற்றும் ஊராட்சியின் பரப்பளவு அடிப்படையில் ஊராட்சிகளுக்கு வழங்கப்படும் பகிர்வு மானியத்தினை வழங்க நான்காவது மாநில நிதி ஆணையம் பரிந்துரைத்துள்ளது. இப்பரிந்துரையினை மாநில அரசு ஏற்றுக்கொண்டு, அதனடிப்படையில் கிராம ஊராட்சிகளுக்கான பகிர்வு மானியத்தினை விடுவித்திட ஆணையிட்டுள்ளது. ஊரகப் பகுதிகளின் மொத்தப் பரப்பளவு 1,04,149.61 சதுர கி.மீ. ஆகும். மாவட்ட வாரியான பரப்பளவு விவரம் பின்வருமாறு:

அட்டவணை 2.6

மாவட்ட வாரியாக கிராம ஊராட்சிகளின் பரப்பளவு விவரம்

வ.எண்	மாவட்டம்	ஊராட்சிகளின் எண்ணிக்கை	குக்கிராமங்களின் எண்ணிக்கை	குக்கிராமங்களின் சராசரி எண்ணிக்கை	பரப்பளவு (சதுர கி.மீ)	ஊராட்சியின் சராசரி பரப்பளவு (சதுர கி.மீ)
1.	காஞ்சிபுரம்	633	3,512	6	3,851.45	6.08
2.	திருவள்ளூர்	526	3,862	7	2,859.84	5.44
3.	கடலூர்	683	2,403	4	2,942.24	4.31
4.	விழுப்புரம்	1,099	3,487	3	6,509.43	5.92
5.	வேலூர்	743	6,109	8	4,022.30	5.41
6.	திருவண்ணாமலை	860	4,267	5	4,826.27	5.61
7.	சேலம்	385	5,109	13	4,561.41	11.85
8.	நாமக்கல்	322	2,520	8	3,119.43	9.69
9.	தருமபுரி	251	2,835	11	4,407.43	17.56
10.	கிருஷ்ணகிரி	333	3,983	12	4,965.73	14.91
11.	ஈரோடு	225	3,199	14	2,626.99	11.68
12.	திருப்பூர்	265	2,455	9	4,545.50	17.15
13.	கோயம்புத்தூர்	228	1,200	5	2,534.24	11.12
14.	நீலகிரி	35	1,282	37	1,170.39	33.44
15.	தஞ்சாவூர்	589	2,260	4	3,657.67	6.21
16.	நாகப்பட்டினம்	434	2,054	5	2,400.31	5.53
17.	திருவாரூர்	430	1,704	4	2,322.69	5.40
18.	திருச்சிராப்பள்ளி	404	2,210	5	4,028.00	9.97

[2016 ஆகஸ்ட் 5

வ.எண்	மாவட்டம்	ஊராட்சிகளின் எண்ணிக்கை	குக்கிராமங்களின் எண்ணிக்கை	குக்கிராமங்களின் சராசரி எண்ணிக்கை	பரப்பளவு (சதுர கி.மீ)	ஊராட்சியின் சராசரி பரப்பளவு (சதுர கி.மீ)
19.	கரூர்	157	2,179	14	2,656.25	16.92
20.	பெரம்பலூர்	121	314	3	1,609.54	13.30
21.	அரியலூர்	201	710	4	1,710.17	8.51
22.	புதுக்கோட்டை	497	4,062	8	4,433.78	8.92
23.	மதுரை	420	1,946	5	3,183.18	7.58
24.	தேனி	130	607	5	1,159.89	8.92
25.	திண்டுக்கல்	306	3,083	10	4,401.34	14.38
26.	இராமநாதபுரம்	429	2,306	5	4,116.19	9.59
27.	விருதுநகர்	450	1,760	4	3,282.08	7.29
28.	சிவகங்கை	445	2,723	6	3,075.90	6.91
29.	திருநெல்வேலி	425	2,337	5	4,283.06	10.08
30.	தூத்துக்குடி	403	1,761	4	4,260.78	10.57
31.	கன்னியாகுமரி	95	1,155	12	626.14	6.59
மொத்தம்		12,524	79,394	6	1,04,149.61	8.32

2.13 கிராம ஊராட்சிகளின் சட்டரீதியான கடமைகள்

1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 110-ன்படி கீழே குறிப்பிட்டுள்ள பணிகளை மேற்கொள்ளுதல் கிராம ஊராட்சிகளின் முக்கியக் கடமையாகும்.

i) அனைத்து கிராமச் சாலைகள், பாலங்கள், சிறுபாலங்கள், தடுப்புச் சுவர்கள் மற்றும் தரைப் பாலங்களை அமைத்தல், பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல் (நெடுஞ்சாலைகள் மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் தவிர)

ii) பொது இடங்களில் தெரு விளக்குகள் அமைத்தல்.

iii) கழிவு நீர்க் கால்வாய் அமைத்துக் கழிவுநீரை வெளியேற்றுதல்.

iv) தெருக்களை சுத்தம் செய்தல் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துதல்.

v) பொதுக்கழிப்பிட வசதி ஏற்படுத்துதல்

2016 ஆகஸ்ட் 5]

vi) இடுகாடுகள் மற்றும் சுடுகாடுகளை ஏற்படுத்திப் பராமரித்தல்.

vii) குடிநீர் வழங்குதல்.

viii) அவ்வப்போது அரசு அறிவிக்கை வாயிலாகப் பணிக்கக்கூடிய பிற கடமைகள்.

2.13.1 குடிநீர் வழங்கல்

ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்கும் பணி, கிராம ஊராட்சியின் அடிப்படைக் கடமைகளில் ஒன்றாகும். கிராம ஊராட்சிகளில், கைப்பம்புகள் மற்றும் விசைப்பம்புகள் முதன்மைக் குடிநீர் ஆதாரமாகவும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் சிறிய நீர்த்தேக்கத் தொட்டிகள் முதன்மைக் குடிநீர் சேகரிப்பு அமைப்புகளாகவும் விளங்குகின்றன. ஊரகப் பகுதிகளில் உள்ள குடிநீர் ஆதாரங்கள் மற்றும் குடிநீர் சேகரிப்பு அமைப்புகளின் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளன.

அட்டவணை 2.7

மாவட்ட வாரியான குடிநீர் ஆதாரங்கள் குறித்த விவரம்

வ.எண்	மாவட்டம்	கைப்பம்பு எண்ணிக்கை	மின்விசைப்பம்பு எண்ணிக்கை	சிறு மின்விசைப்பம்பு எண்ணிக்கை	கூட்டுக் குடிநீர் திட்டங்களின் எண்ணிக்கை	கூட்டுக்குடிநீர் வழங்கப்படும் கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை
1.	காஞ்சிபுரம்	9,150	6,816	4,174	20	69
2.	திருவள்ளூர்	4,762	4,038	2,416	9	36
3.	கடலூர்	16,813	4,370	1,788	12	60
4.	விழுப்புரம்	15,741	6,014	10,428	11	78
5.	வேலூர்	9,964	7,350	13,468	20	46
6.	திருவண்ணாமலை	11,350	5,064	7,016	25	240
7.	சேலம்	7,737	5,402	5,078	9	262
8.	நாமக்கல்	3,123	4,403	2,804	12	298
9.	தருமபுரி	11,542	3,038	5,602	8	66
10	கிருஷ்ணகிரி	9,700	3,743	3,640	17	93
11.	ஈரோடு	4,980	4,929	2,330	40	192
12	திருப்பூர்	4,750	3,457	1,276	17	265
13	கோயம்புத்தூர்	2,837	3,661	646	9	228

[2016 ஆகஸ்ட் 5

வ.எண்	மாவட்டம்	கைப்பம்பு எண்ணிக்கை	மின்விசைப்பம்பு எண்ணிக்கை	சிறு மின்விசைப்பம்பு எண்ணிக்கை	கூட்டுக் குடிநீர் திட்டங்களின் எண்ணிக்கை	கூட்டுக்குடிநீர் வழங்கப்படும் கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை
14.	நீலகிரி	25	1,241	183	1	4
15.	தஞ்சாவூர்	7,069	5,254	2,755	6	90
16.	நாகப்பட்டினம்	25,454	2,152	2,071	12	291
17.	திருவாரூர்	12,663	2,804	1,392	4	96
18.	திருச்சிராப்பள்ளி	9,603	3,261	3,432	25	327
19.	கரூர்	3,455	2,726	3,349	12	92
20.	பெரம்பலூர்	3,147	823	879	4	65
21.	அரியலூர்	1,628	1,408	882	7	168
22.	புதுக்கோட்டை	6,925	4,028	5,383	46	208
23.	மதுரை	6,854	3,422	4,816	7	182
24.	தேனி	1,079	1,054	1,170	24	106
25.	திண்டுக்கல்	4,384	6,255	5,245	32	116
26.	இராமநாதபுரம்	2,152	2,098	1,396	52	429
27.	விருதுநகர்	10,839	3,629	3,696	12	153
28.	சிவகங்கை	6,000	3,232	5,052	33	129
29.	திருநெல்வேலி	5,038	2,682	3,448	26	388
30.	தூத்துக்குடி	8,399	1,939	1,758	22	354
31.	கன்னியாகுமரி	748	1,387	1,456	13	44
	மொத்தம்	2,27,911	1,11,680	1,09,029	547	5,175

ஏற்கெனவே உள்ள குடிநீர் ஆதாரங்களுடன், 2015-2016-ம் ஆண்டில் 49,681 குடிநீர்ப் பணிகள் வெவ்வேறு திட்டங்களான தமிழ்நாடு குக்கிராம வளர்ச்சித் திட்டம், உட்கட்டமைப்பு இடைநிரவல் திட்டம், மாநில நிதிக் குழு மானியம் மற்றும் கிராம ஊராட்சியின் பொது நிதி ஆகிய திட்டங்களில் ரூ.871.89 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2.13.2 குக்கிராம அளவில் தினசரி குடிநீர் விநியோகத்தினை இணையதளம் மூலம் கண்காணித்தல்

மாவட்ட ஆட்சித் தலைவர்களால் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் தமிழ்நாடு மின்வாரிய அலுவலர்களுக்கான ஒருங்கிணைந்த

2016 ஆகஸ்ட் 5]

கண்காணிப்புக் கூட்டம் வாரந்தோறும் நடத்தப்பட்டு ஊரகப் பகுதிகளில் சீரான குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படுவது உறுதி செய்யப்பட்டு வருகிறது. ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து குக்கிராமங்களுக்கும் அன்றாடம் குடிநீர் விநியோகம் செய்வதை இணையதளம் மூலம் கண்காணித்திட தேசிய தகவல் மையம் மூலம் மென்பொருள் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

அனைத்து கிராம ஊராட்சிகளும் தினந்தோறும் குக்கிராமம் வாரியான குடிநீர் விநியோகம் குறித்து இணையதளம் வாயிலாக பதிவுகள் மேற்கொண்டு வருகின்றன. அதன்படி, தினந்தோறும் குக்கிராம வாரியான அன்றாட குடிநீர் விநியோகத்தினை கண்காணித்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) ஆகியோர் மாவட்ட அளவில் கிராம ஊராட்சிகளில் அன்றாட குடிநீர் விநியோக நிலையினை இம்மென்பொருள்மூலம் கண்காணித்து வருகின்றனர். அதேபோல, ஊரகப் பகுதிகளில் குக்கிராம வாரியாக குடிநீர் விநியோகம் செய்தலை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரகம், இணையதளம் வாயிலாக மாநில அளவில் கண்காணித்து அனைத்து குக்கிராமங்களிலும் நாள்தோறும் சீரான குடிநீர் விநியோகம் செய்தல் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இணையதளம்மூலம் பெறப்படும் அறிக்கைகள் ஒவ்வொரு வாரமும் பரிசீலிக்கப்பட்டு மூன்று நாட்களுக்கு மேல் குடிநீர் வழங்கப்படாத குக்கிராமங்கள் கண்டறியப்பட்டு ஊரகப் பகுதிகளில் சீராக குடிநீர் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வட்டார வளர்ச்சி அலுவலர்களால் குடிநீர்ப் பற்றாக்குறை உள்ள குக்கிராமங்களில் சிறப்பு நடவடிக்கைககள்மூலம் குடிநீர்ப் விநியோகம் தடங்கலின்றி முறையாக வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2.13.3 தெரு விளக்குகள் பராமரித்தல்

தெரு விளக்குகள் இல்லாத இடங்களுக்கு விரிவுபடுத்துதல் மற்றும் பராமரித்தல் ஆகியவை கிராம ஊராட்சிகளின் அவசியமான பணிகளில் ஒன்றாகும். கிராம ஊராட்சிகளில் பராமரிக்கப்படும் பல்வேறு வகையான தெரு விளக்குகள் விவரம் பின்வருமாறு:

[2016 ஆகஸ்ட் 5

அட்டவணை 2.8

மாவட்ட வாரியான தெரு விளக்குகள் விவரம்

வ.எண்	மாவட்டம்	குழல் விளக்கு	பாதரச ஆவி விளக்கு	சோடியம் ஆவி விளக்கு	ஆர் ஒளி விளக்கு	சூரியசக்தி தெரு விளக்கு	எல்இடி விளக்கு	மொத்தம்
1.	காஞ்சிபுரம்	75,180	514	12,163	23,082	1,538	69	112,546
2.	திருவள்ளூர்	33,186	856	8,230	69,926	1,115	60	113,373
3.	கடலூர்	69,980	596	10,150	30,461	2,001	0	113,188
4.	விழுப்புரம்	62,656	26	10,166	56,279	1,020	2,420	132,567
5.	வேலூர்	85,279	772	4,767	9,784	2,529	340	103,471
6.	திருவண்ணாமலை	59,952	883	5,792	21,110	1,485	0	89,222
7.	சேலம்	78,103	406	1,970	20,348	1,519	782	103,128
8.	நாமக்கல்	52,041	44	2,640	2,824	1,496	262	59,307
9.	தருமபுரி	36,959	543	1,287	11,343	420	0	50,552
10.	கிருஷ்ணகிரி	21,117	295	864	39,470	1,235	240	63,221
11	ஈரோடு	60,810	170	1,975	3,069	1,075	730	67,829
12.	திருப்பூர்	47,231	349	1,451	3,627	1,611	335	54,604
13.	கோயம்புத்தூர்	54,685	370	1,828	12,342	840	960	71,025
14.	நீலகிரி	9,857	0	1,173	1,415	220	441	13,106
15.	தஞ்சாவூர்	127,358	1,887	6,478	46,083	2,025	0	183,831
16.	நாகப்பட்டினம்	67,190	104	2,116	29,074	1,315	360	100,159
17.	திருவாரூர்	64,451	151	1,853	18,928	1,230	0	86,613
18.	திருச்சிராப்பள்ளி	81,515	611	3,394	5,720	1,546	60	92,846
19.	கரூர்	30,741	182	750	12,083	760	82	44,598
20.	பெரம்பலூர்	15,047	37	618	8,337	180	54	24,273
21.	அரியலூர்	27,690	369	2,565	8,340	645	0	39,609
22	புதுக்கோட்டை	69,005	135	2,238	14,285	1,915	1,200	88,778
23.	மதுரை	53,126	110	1,261	5,786	1,225	0	61,508
24.	தேனி	21,611	14	539	140	524	0	22,828
25.	திண்டுக்கல்	33,457	259	646	29,551	1,369	0	65,282
26.	இராமநாதபுரம்	40,429	181	2,695	38,569	510	0	82,384
27.	விருதுநகர்	42,411	511	1,700	15,699	1,574	8	61,903
28.	சிவகங்கை	44,173	119	1,133	16,678	1,173	4,148	67,424
29.	திருநெல்வேலி	78,260	410	3,840	1,190	1,860	0	85,560
30.	தூத்துக்குடி	62,177	88	1,435	3,926	1,500	0	69,126
31.	கன்னியாகுமரி	40,182	7	1,440	10,560	440	67	52,696
	மொத்தம்	**16,45,859**	**10,999**	**99,157**	**5,70,029**	**37,895**	**12,618**	**23,76,557**

2016 ஆகஸ்ட் 5]

2.13.4 கிராம ஊராட்சிகளில் தூய்மை மற்றும் சுகாதாரத்தினைப் பேணிக் காத்தல்.

ஊரகப் பகுதிகளில் தூய்மை மற்றும் சுகாதாரத்தைப் பேணிக் காத்தல், கிராம ஊராட்சியின் கட்டாயக் கடமைகளில் ஒன்றாகும். அதன்படி, கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்ட சுகாதார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன:

i) *தெருக்கள் மற்றும் ஊராட்சி சாலைகளை சுத்தம் செய்தல்.*

ii) *கழிவு நீர்க் கால்வாய் அமைத்தல், சுத்தம் செய்தல் மற்றும் கழிவு நீரை வெளியேற்றுதல்.*

iii) *உபயோகமற்ற கட்டுமானப் பொருட்கள் மற்றும் முட்புதர்களை அகற்றுதல்.*

iv) *பொதுக் கழிப்பிடங்களில் சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.*

v) *பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல்*

vi) *சுடுகாடு/இடுகாடு ஆகியவற்றை அமைத்தல் மற்றும் பராமரித்தல்*

vii) *பயன்பாட்டில் இல்லாத கிணறுகள், சுகாதாரமற்ற குட்டைகள், குளங்கள், சாக்கடைகள், குழிகள் அல்லது பள்ளங்கள் ஆகியவற்றை மூடுதல் மற்றும் ஊராட்சியில் இதர சுகாதார மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுதல்.*

கிராம ஊராட்சிகளில் சுகாதாரத்தை பேணிக்காத்திட 26,622 துப்புரவுப் பணியாளர்கள் தற்போது பணியாற்றி வருகின்றனர். ஊரகப் பகுதிகளில் சுகாதாரத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையிலும், ஊராட்சிகளுக்கு போதிய அளவில் துப்புரவுப் பணியாளர்கள் இருப்பதை உறுதி செய்திட ஏதுவாக, தமிழ்நாடு அரசு, 16,726 துப்புரவுப் பணியாளர்களைக் கூடுதலாக நியமித்திட 2013-ல் ஆணை வெளியிட்டதன் அடிப்படையில் அனைத்து ஊராட்சிகளிலும் துப்புரவுப் பணியாளர்கள் கூடுதலாக நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகின்றனர்.

[2016 ஆகஸ்ட் 5

2.13.5 ஊரகப் பகுதிகளில் டெங்கு காய்ச்சலைத் தடுப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

கிராமப்புறங்களில் டெங்கு காய்ச்சல் பரவலைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் அனைத்துக் கிராம ஊராட்சிகளால் கீழ்க்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

i) ஒருங்கிணைந்து செயல்படும் அலகாக கிராம ஊராட்சி செயல்பட்டு கிராம மக்களிடையே டெங்கு காய்ச்சல் பரவும் விதம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

ii) ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், மாவட்ட மலேரியா அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலர், ஊரக சுகாதார மேற்பார்வையாளர்கள், ஊரக சுகாதார செவிலியர் ஆகியோரை ஒருங்கிணைத்து வட்டார அளவில் தொடர்ச்சியான கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்து தூய்மை மற்றும் சுகாதாரம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

iii) மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த உள்ளூர் அளவில் மின்னணு மற்றும் அச்சு ஊடகங்கள் பயன்படுத்தப்பட்டு டெங்கு காய்ச்சல் குறித்த விவரங்கள் எடுத்துரைக்கப்படுகின்றன.

iv) கொசுக்கள் மற்றும் இளம்பருவ புழுக்களை ஒழிப்பதன்மூலம் டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்துதல் குறித்த துண்டு பிரசுரங்கள் மக்களிடையே விநியோகிக்கப்பட்டதுடன் தண்டோராமூலம் டெங்கு காய்ச்சலைப் பற்றியும் கொசுக்கள் பரவாமல் தடுப்பது குறித்தும் அறிவிப்பு செய்யப்படுகிறது.

v) அனைத்து சுய உதவிக் குழு உறுப்பினர்களையும் ஊரக வளர்ச்சி மற்றும் சுகாதார பணியாளர்களுடன் ஒருங்கிணைத்து தேவையான விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2016 ஆகஸ்ட் 5]

vi) *மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் கைப்பம்புகளை ஒட்டியுள்ள பகுதிகளைச் சுத்தம் செய்து குளோரின் முறையாக கலந்து குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

vii) *கிராம ஊராட்சிகளில் உள்ள தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்காமல் இருக்க சரளை மண் கொண்டு நிரப்ப வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.*

viii) *நீர் தேங்குவதால் கொசுக்கள் உற்பத்தியாவதை தடுக்கும் நோக்கத்தில் உபயோகப்படுத்தப்பட்ட பழைய உருளிப்பட்டைகள், தேங்காய் ஓடுகள், உடைந்த பானைகளின் ஓடுகள் ஆகியவற்றை முறையாக அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

ix) *கிராம ஊராட்சிகளில் டெங்கு காய்ச்சல் பரவுவதை முற்றிலுமாக தடுத்திட ஊராட்சி ஒன்றிய அளவில் 20 பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு, அவர்கள் வட்டார மருத்துவ அலுவலர்களின்கீழ் உள்ள சுகாதார ஆய்வாளர்களுடன் ஒருங்கிணைந்து முழு வீச்சில் செயல்பட்டு, தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

x) *தற்போது 9,000 கிராம ஊராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ், ஊரகப் பகுதிகளில் குப்பைகளை அகற்ற 52,998 தூய்மைக் காவலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.*

xi) *ஊராட்சி ஒன்றியங்கள் / கிராம ஊராட்சிகளின் பொது நிதியிலிருந்து 3,308 புகைமூட்ட இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, ஒவ்வொரு ஊராட்சியிலும் சுழற்சி முறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.*

xii) *கிராம ஊராட்சிகளில் துப்புரவுப் பணிகள் மேற்கொள்வதைக் கண்காணித்திட ஒவ்வொரு வட்டாரத்திற்கும் உதவி இயக்குநர் நிலையில் மண்டல*

அலுவலர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் நியமனம் செய்யப்பட்டு கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

xiii) மூடி வைக்கப்பட்ட பாத்திரங்களில் மட்டுமே நீர் சேகரித்து வைக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி வீடு வீடாகப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

xiv) முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக இயக்குநரகத்திலிருந்து விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

2.14 விருப்புரிமைப் பணிகள்

1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 111-ன்படி ஊராட்சியின் தேவைக்கேற்பவும், நிதி ஆதாரங்களைக் கணக்கில் கொண்டும் பின்வரும் கடமைகளை நிறைவேற்றிட வேண்டும்.

i) மரங்களை நட்டுப் பாதுகாத்தல்.

ii) கிராமத்திலுள்ள சாலையோரங்களில் மற்றும் பொது இடங்களில் தெரு விளக்குகள் அமைத்தல்.

iii) சந்தைகள் ஏற்படுத்தி பராமரித்தல்.

iv) விழாக்கள் மற்றும் பொருட்காட்சிகளை கட்டுப்படுத்துதல்.

v) வண்டிகள் நிறுத்துமிடங்கள், கால்நடைத் தொழுவங்கள், இறைச்சிக்கூடங்கள் மற்றும் படிப்பகங்களை ஏற்படுத்தி பராமரித்தல்.

vi) விளையாட்டுத் திடல்கள் ஏற்படுத்தி பராமரித்தல்.

2.15 நிதி ஆதாரங்கள்

மூன்றடுக்கு கிராம ஊராட்சி அமைப்புகளில் வரி விதிப்பு செய்ய அதிகாரம் பெற்ற ஒரே அமைப்பு கிராம ஊராட்சியாகும்.

2016 ஆகஸ்ட் 5]
கிராம ஊராட்சிகள், கீழ்க்கண்ட வரி மற்றும் வரியில்லா வருவாய் ஆதாரங்களைப் பெற அதிகாரம் பெற்றுள்ளன.

2.15.1 வரி வருவாய்

கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்ட வரி இனங்களிலிருந்து வருவாயாகப் பெற அதிகாரம் பெற்றுள்ளன.

i) *வீட்டு வரி / சொத்து வரி*

ii) *தொழில் வரி*

iii) *விளம்பர வரி*

2.15.2 வீடு/சொத்து வரி

1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 172 மற்றும் அரசாணை எண் 255, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 13-12-1999-ன்படி ஊரகப் பகுதிகளில் கட்டப்படும் ஒவ்வொரு கட்டடத்திற்கும் வீட்டு வரி/சொத்து வரி, தொடர்புடைய கிராம ஊராட்சிக்கு செலுத்தப்படவேண்டும். மேலும், அரசு உதவி பெறாமல் சுய நிதியிலிருந்து பாடத் திட்டத்தினை அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்கள், செயல்படுத்தும்போது அக்கட்டடங்களுக்கு வீட்டு வரி / சொத்து வரி விதிக்கப்படும். அதனடிப்படையில், 2008-2009 ஆம் ஆண்டு முதல் சுயநிதிக் கல்வி நிறுவனங்களின் கட்டடங்களுக்கு கிராம ஊராட்சிகளால் சொத்து வரி நிர்ணயித்து வசூலிக்கப்பட்டு வருகிறது. மாவட்ட வாரியாக வசூலிக்கப்பட்ட வீட்டு வரி/சொத்து வரி விவரம் பின்வருமாறு:

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2016 ஆகஸ்ட் 5

அட்டவணை 2.9

2015–2016 ஆம் ஆண்டில் மாவட்ட வாரியான வீட்டு வரி/ சொத்து வரி கேட்பு விவரம்

(ரூபாய் கோடியில்)

வ.எண்	மாவட்டம்	வீட்டு வரி	சுயநிதி கல்வி நிறுவனங்கள் மீதான சொத்து வரி	மொத்தம்
1.	காஞ்சிபுரம்	30.82	3.16	33.98
2.	திருவள்ளூர்	12.73	2.29	15.02
3.	கடலூர்	7.78	0.55	8.33
4.	விழுப்புரம்	5.95	0.45	6.4
5.	வேலூர்	5.2	1.41	6.61
6.	திருவண்ணாமலை	5.72	0.73	6.45
7.	சேலம்	5.7	2.17	7.87
8.	நாமக்கல்	3.03	2.09	5.12
9.	தருமபுரி	1.75	0.39	2.14
10.	கிருஷ்ணகிரி	5.23	0.44	5.67
11.	ஈரோடு	5.68	1.45	7.13
12.	திருப்பூர்	7.46	0.49	7.95
13.	கோயம்புத்தூர்	14.11	1.71	15.82
14.	நீலகிரி	2.52	0.13	2.65
15.	தஞ்சாவூர்	7.64	0.72	8.36
16.	நாகப்பட்டினம்	2.92	0.37	3.29
17.	திருவாரூர்	2.38	0.16	2.54
18.	திருச்சிராப்பள்ளி	6.74	1.1	7.84
19.	கரூர்	4.5	0.56	5.06
20.	பெரம்பலூர்	1.81	0.65	2.46
21.	அரியலூர்	2.02	0.06	2.08
22.	புதுக்கோட்டை	4.52	0.8	5.32
23.	மதுரை	8.01	0.65	8.66
24.	தேனி	2.46	0.22	2.68
25.	திண்டுக்கல்	8.04	0.61	8.65
26.	இராமநாதபுரம்	4.83	0.28	5.11
27.	விருதுநகர்	7.84	0.79	8.63
28.	சிவகங்கை	4.05	0.28	4.33
29.	திருநெல்வேலி	5.32	0.36	5.68
30.	தூத்துக்குடி	4.34	0.27	4.61
31.	கன்னியாகுமரி	3.46	0.44	3.9
மொத்தம்		**194.56**	**25.78**	**220.34**

2016 ஆகஸ்ட் 5]

2.15.3. தொழில் வரி

ஊரகப் பகுதிகளில் தொழில் வரி வசூலிக்கும் அதிகாரம் கிராம ஊராட்சிகளிடம் உள்ளது. 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 121-ல் விவரிக்கப்பட்டவாறு தொழிலாளர்களின் ஊதியம் அல்லது கூலித் தொகையிலிருந்து தொழில் வரி விதிக்கவும், வசூல் செய்யவும் வழிவகை உள்ளது. தொழிலாளர்களின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும் தொகை தொடர்புடைய கிராம ஊராட்சிகளுக்கு செலுத்திட வேண்டும். தொழில், வணிகம் மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றை ஒருங்கிணைத்து வரி விதிக்க வழிவகை செய்து தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 ஆம் ஆண்டு பிரிவு 198 அ-க்கு திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி 2015-2016 ஆம் ஆண்டிற்கான தொழில் வரி கேட்பு ரூ.97.84 கோடி என நிர்ணயம் செய்யப்பட்டது.

அட்டவணை 2.10

மாவட்ட வாரியான தொழில் வரி கேட்பு விவரம் – 2015–2016 (ரூபாய் கோடியில்)

வ.எண்	மாவட்டத்தின் பெயர்	கேட்பு
1.	காஞ்சிபுரம்	11.93
2.	திருவள்ளூர்	5.97
3.	கடலூர்	2.75
4.	விழுப்புரம்	4.42
5.	வேலூர்	5.65
6.	திருவண்ணாமலை	4.43
7.	சேலம்	3.35
8.	நாமக்கல்	2.2
9.	தருமபுரி	1.85
10.	கிருஷ்ணகிரி	3.33
11.	ஈரோடு	2.12
12.	திருப்பூர்	1.72
13.	கோயம்புத்தூர்	5.22
14.	நீலகிரி	0.58
15.	தஞ்சாவூர்	2.9
16.	நாகப்பட்டினம்	1.84
17.	திருவாரூர்	1.72
18.	திருச்சிராப்பள்ளி	3.93
19.	கரூர்	1.98

வ.எண்	மாவட்டத்தின் பெயர்	கேட்பு
20.	பெரம்பலூர்	0.86
21.	அரியலூர்	0.99
22.	புதுக்கோட்டை	2.55
23.	மதுரை	2.79
24.	தேனி	1.5
25.	திண்டுக்கல்	3.24
26.	இராமநாதபுரம்	3.29
27.	விருதுநகர்	4.96
28.	சிவகங்கை	2.36
29.	திருநெல்வேலி	3.18
30.	தூத்துக்குடி	2.88
31.	கன்னியாகுமரி	1.35
	மொத்தம்	**97.84**

2.15.4 வரியல்லாத வருவாய்

கீழ்க்கண்ட இனங்களிலிருந்து வரியல்லாத வருவாய் பெற கிராம ஊராட்சிகள் அதிகாரம் பெற்றுள்ளன.

i) *மனைப் பிரிவுகள் மற்றும் கட்டட வரைபட அனுமதிக்கான உரிமக் கட்டணம்*

ii) *அபாயகரமான, அருவருக்கத்தக்க தொழில்களுக்கான கட்டணங்கள்*

iii) *சந்தைக் கட்டணம்*

iv) *குடிநீர்க் கட்டணம்*

v) *வண்டி நிலையங்களுக்கான கட்டணம்*

vi) *சமூகக் காடுகள் ஏலம்*

vii) *மீன்பாசி குத்தகை*

viii) *2சி பட்டா கட்டணம்*

ix) *சந்தை மற்றும் பொருட்காட்சிகளிலிருந்து பெறப்படும் வருமானங்கள்*

x) *படகுக் குழாம்மூலம் பெறப்படும் கட்டணங்கள்*

xi) *அபராதங்கள் மற்றும் தண்டத் தீர்வை*

2016 ஆகஸ்ட் 5]

2.15.5 மனைப் பிரிவுகள் மற்றும் கட்டட வரைபட அனுமதிக்கான உரிமக் கட்டணம்

ஊரகப் பகுதிகளில் உள்ள மனைப் பிரிவுகள் மற்றும் கட்டட வரைபடங்களுக்கு அனுமதி அளித்தல் தொடர்பாக தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டட விதிகள் 1997-ல் விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டட விதிகள், 1997 விதி 3-ன்படி கிராம ஊராட்சித் தலைவரால், நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநர் அல்லது அவரால் அங்கீரிக்கப்பட்ட இணை இயக்குநர் அல்லது துணை இயக்குநர் அனுமதியுடன் மனைப் பிரிவு அனுமதி வழங்கப்படவேண்டும். மனைப் பிரிவு அனுமதிக்கான விண்ணப்பத்தினை கிராம ஊராட்சித் தலைவரிடம் விண்ணப்பதாரரால் அளிக்கப்பட வேண்டும். கிராம ஊராட்சித் தலைவர், அவ்விண்ணப்பத்தை நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநருக்கு தொழில்நுட்ப அனுமதிக்காக பரிந்துரைக்க வேண்டும். விண்ணப்பதாரரால் கிராம ஊராட்சிகளுக்கு ஒப்பளிப்பு செய்திட வேண்டிய பொது உபயோகத்திற்கான திறந்த வெளி இடம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் உள்ளிட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநரால் மனைப் பிரிவுகளுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்படும். அதனடிப்படையில் கிராம ஊராட்சித் தலைவரால் மனைப் பிரிவுகளுக்கான இறுதி ஒப்புதல் வழங்கப்படும்.

தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டட விதிகள், 1997 விதி 4-ன்படி குறிப்பிட்ட வரையறைகளுக்குட்பட்டு கட்டட வரைபட அனுமதி கிராம ஊராட்சித் தலைவரால் வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. 4,000 சதுர அடி பரப்பளவுக்கு மிகாத குடியிருப்பு கட்டடங்கள் மற்றும் 2,000 சதுர அடி பரப்பளவுக்கு மிகாத வணிகக் கட்டடங்களுக்கு வரைபட அனுமதியினை கிராம ஊராட்சித் தலைவர் வழங்கலாம். இவ்வரம்பிற்கு மேற்பட்ட கட்டடங்களுக்கு நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநரின் தொழில்நுட்ப அனுமதியுடன் கட்டட வரைபட அனுமதியினை கிராம ஊராட்சித் தலைவர் வழங்கலாம்.

காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள குறிப்பிட்ட கிராம ஊராட்சிகள், சென்னை பெருநகரப் பகுதிக்குள் கொண்டு வரப்பட்டு மனைப் பிரிவு மற்றும் கட்டட வரைபட அனுமதிக்காக சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் அதிகார வரம்பெல்லைக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

[2016 ஆகஸ்ட் 5

2.15.6 அபாயகரமான, கேடு விளைவிக்கக்கூடிய தொழில்களுக்கான உரிமக் கட்டணம்

ஊரகப் பகுதிகளில் அபாயகரமான, கேடு விளைவிக்கக்கூடிய தொழில்களுக்கான உரிமங்களை கிராம ஊராட்சிகள் வழங்குகின்றன. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 159-ல் தெரிவித்துள்ளபடி, புதிய தொழில் தொடங்க விண்ணப்பிக்கவோ அல்லது புதுப்பிக்கவோ விரும்பும் விண்ணப்பதாரர் தொடர்புடைய கிராம ஊராட்சியில் விண்ணப்பித்திட வேண்டும்.

அதன்படி 2015-2016 ஆம் ஆண்டில் 2,46,153 வணிக நிறுவனங்களுக்கு கிராம ஊராட்சிகளில் தொழில் தொடங்க / புதுப்பிக்க உரிமம் வழங்கப்பட்டதுடன் உரிமக் கட்டணமாக ரூ.11.84 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.

2.15.7 குடிநீர்க் கட்டணங்கள்

ஊரகப் பகுதிகளில் வீட்டிற்கான, குடிநீர் இணைப்பிற்கு கட்டணம் விதித்திட கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. குடிநீர் இணைப்பு பெறுவதற்கு பிணையத் தொகையாக கிராம ஊராட்சிக்கு ரூ.1,000/- செலுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு வீட்டு குடிநீர் இணைப்பிற்கும் மாதக்கட்டணம் ரூ.30/- செலுத்தப்படவேண்டும். அதன்படி 2015-2016 ஆம் ஆண்டில் குடிநீர் கட்டணத்திற்கான கேட்பு ரூ.72.82 கோடி ஆகும். மாவட்ட வாரியான குடிநீர்க் கட்டண விபரம் பின்வருமாறு:

அட்டவணை 2.11

2015–2016 ஆம் ஆண்டிற்கான மாவட்ட வாரியான குடிநீர் கட்டணங்கள் கேட்பு விபரம்

(ரூபாய் கோடியில்)

வ.எண்	மாவட்டத்தின் பெயர்	கேட்பு
1.	காஞ்சிபுரம்	2.95
2.	திருவள்ளூர்	2.12
3.	கடலூர்	1.45
4.	விழுப்புரம்	0.32
5.	வேலூர்	4.38
6.	திருவண்ணாமலை	2.78
7.	சேலம்	1.98
8.	நாமக்கல்	2.09

2016 ஆகஸ்ட் 5]

வ.எண்	மாவட்டத்தின் பெயர்	கேட்பு
9.	தருமபுரி	0.22
10.	கிருஷ்ணகிரி	0.27
11.	ஈரோடு	2.26
12.	திருப்பூர்	3.7
13.	கோயம்புத்தூர்	6.24
14.	நீலகிரி	0.14
15.	தஞ்சாவூர்	4.76
16.	நாகப்பட்டினம்	1.03
17.	திருவாரூர்	1.97
18.	திருச்சிராப்பள்ளி	5.63
19.	கரூர்	2.76
20.	பெரம்பலூார்	0.89
21.	அரியலுார்	1.59
22.	புதுக்கோட்டை	1.23
23.	மதுரை	2.22
24.	தேனி	2.96
25.	திண்டுக்கல்	3.1
26.	இராமநாதபுரம்	1.09
27.	விருதுநகர்	2.09
28.	சிவகங்கை	2.77
29.	திருநெல்வேலி	2.28
30.	துாத்துக்குடி	1.35
31.	கன்னியாகுமரி	4.2
மொத்தம்		72.82

2.16 மானியங்கள்

2.16.1 மாநில நிதி ஆணைய மானியம்

73-வது அரசியலமைப்பு சட்டத் திருத்தம் மற்றும் 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 198-ன்படி, தமிழ்நாட்டில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மாநில நிதி ஆணையம் அமைக்கப்பட்டு வருகிறது. மாநில நிதி ஆணையத்தின் வரம்பெல்லைகள் மற்றும் வரையறைகளாவன:

1. அரசால் விதிக்கப்படும் வரி, தீர்வை, சுங்கம் மற்றும் கட்டணங்கள்மூலம் பெறப்படும் மொத்த வருவாயில் மாநிலத்திற்கும், உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பிரித்து வழங்கும் முறை.

2. ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட வேண்டிய வரிகள், தீர்வை, சுங்கங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றை நிர்ணயித்தல்.

3. மாநிலத்தின் மொத்தத் தொகுப்பு நிதியிலிருந்து ஊராட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டிய மானியங்கள்.

4. ஊராட்சிகளின் நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்கான வழிமுறைகள்.

2.16.2 நான்காவது மாநில நிதி ஆணையம்

மாநில அரசால் அமைக்கப்பட்ட நான்காவது மாநில நிதி ஆணையம், 2012 முதல் 2017 வரையுள்ள ஐந்தாண்டு காலத்திற்கான பரிந்துரைகளை 2011 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அரசுக்கு அறிக்கையாக அளித்தது. இப்பரிந்துரைகள் அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன் மீதான நடவடிக்கை விவரங்கள் 14-5-2013-ல் சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது. மேற்கண்ட பரிந்துரைகளின்மீது அரசால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளில் கீழ்க்கண்டவை முக்கியமானவைகளாகும்.

அ) மாநில அரசின் சொந்த வரி வருவாயில் 10 விழுக்காடு ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும்.

ஆ) ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 58:42 என்ற விகிதத்தில் பகிர்வு மானியம் பகிர்ந்தளிக்கப்படும்.

இ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியத் தொகை, கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு 60 : 32 : 8 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படும்.

ஈ) கிராம ஊராட்சிகளைப் பொறுத்தவரை, 2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கீட்டின்படி ஊராட்சியின் மொத்த மக்கள் தொகை, ஆதி திராவிடர்/பழங்குடியினர் மக்கள்தொகை மற்றும் ஊராட்சியின் பரப்பளவு ஆகியவற்றின் அடிப்படையில் 60:20:20 என்ற விகிதத்தில் நிதி

2016 ஆகஸ்ட் 5]

விடுவிக்கப்படுகிறது. ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 100 விழுக்காடு நிதி விடுவிக்கப்படுகிறது.

உ) வரி விதிப்பில் 100 விழுக்காடு வரி நிர்ணயம், வசூல் மற்றும் மறுநிர்ணயம் மேற்கொள்ளும் கிராம ஊராட்சிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படும்.

ஊ) 2013-14 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் குறைந்தபட்ச மானியம் ரூ.5 இலட்சம் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படும்.

எ) ஊராட்சி ஒன்றியங்களுக்கான குறைந்தபட்ச மானியம் ரூ.30 இலட்சம் ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்படும்.

ஏ) ஊரகப் பகுதிகளில் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைக்கென ரூ.150 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2015-16 ஆம் ஆண்டில் ரூ. 5222.07 கோடி நிதியினை பகிர்வு மானியமாக ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசு வழங்கியுள்ளது.

2.16.3 ஐந்தாவது மாநில நிதி ஆணையம் அமைத்தல்

அரசாணை நிலை எண் 281, நிதி (நிதி ஆணையம்-IV) துறை, நாள் 1-12-2014ன்படி ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின், அதாவது, கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் ஆகியவற்றின் நிதி நிலையை பரிசீலித்து மேம்படுத்திட ஐந்தாவது மாநில நிதி ஆணையத்தினை அமைத்துள்ளது. இந்த ஆணையம் பரிந்துரை செய்ய வேண்டிய இனங்கள் பின்வருமாறு:

அ) மேற்கொள்ள வேண்டிய வழிகாட்டி நெறிமுறைகள்:

i) *மாநில அரசு விதிக்கத்தக்க வரிகள், தீர்வைகள், சுங்கங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றின் நிகர வருவாயினை மாநில அரசுக்கும், மேற்கண்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கும் இடையே பகிர்ந்து கொள்ளுதல், அத்தகைய வருவாயில் மேற்சொன்ன உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே அவைகளுக்கான பங்குகளைப் பிரித்தளித்தல்.*

ii) மேற்கண்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் அல்லது அவைகளே தக்க வைத்துக் கொள்ளக்கூடிய வரிகள், தீர்வைகள், சுங்கங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றை தீர்மானித்தல்.

iii) மாநில அரசின் தொகுப்பு நிதியிலிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படவேண்டிய மானியங்கள்.

ஆ) உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலையை மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மற்றும் பிற மாநிலங்களில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளின் வரி விவரத்தினைக் கருத்தில்கொண்டு, ஊரக மற்றும் நகர்ப் பகுதி உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்குத் தேவையான புதிய வாய்ப்புகளைக் கண்டறிதல்.

உள்ளாட்சி அமைப்புகளின் நிதிநிலையை ஆய்வு செய்யும்போது உள்ளாட்சி அமைப்புகளின் நிதிநிலையை மார்ச் 31, 2015-ல் உள்ளவாறு ஆணையம் மதிப்பீடு செய்ய வேண்டும். 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதியிலிருந்து தொடங்கும் ஐந்தாண்டுகளுக்கு பொருந்தும் வகையில் 2016 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ஆம் தேதிக்குள் தனது அறிக்கையை அரசுக்கு அளித்திட ஆணையம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

2.16.4 உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதி 2015–16

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு விடுவிக்கப்படும் பகிர்வு மானியத்தில் 10 விழுக்காடு கணக்கிட்டு அதனை கிராம ஊராட்சிகளுக்கான ஒதுக்கீட்டில் பிடித்தம் செய்து உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதி ஏற்படுத்தப்படும் என தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது. இந்நிதி, திட்டப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்படும். இவ்வொதுக்கீட்டில் 50 விழுக்காடு தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டத்திற்காகவும், எஞ்சிய 50 விழுக்காடு நிதியில் ஒரு பகுதி, மாவட்டங்களில் அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கும், மீதித் தொகை மக்கள் தொகை அடிப்படையில் மாவட்டங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 2012 ஆம் ஆண்டு டிசம்பர் 17 மற்றும் 18 ஆகிய நாட்களில் நடைபெற்ற

2016 ஆகஸ்ட் 5]

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில், மாவட்டங்களுக்கு விடுவிக்கப்படும் உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதி 2013-14 ஆம் ஆண்டு முதல் ரூ.5 கோடியாக அதிகரிக்கப்படும் என அறிவித்தார்கள். அதன்படி ரூ.3 கோடி ஊரக உட்கட்டமைப்பு இடை நிரவல் நிதியிலிருந்தும் ரூ.2 கோடி நகர்ப்புற உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதியிலிருந்தும் பகிர்ந்து கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது.

2015-16 ஆம் ஆண்டிற்கான உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதியாக ரூ.219.08 கோடி மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. இந்நிதியின்மூலம் பணிகளைத் தேர்வு செய்யும்போது கீழ்க்கண்ட பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என வழிகாட்டி நெறிமுறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அ) தாய் திட்டம் செயல்படுத்தப்படும் குக்கிராமங்களில் குடிநீர் விநியோகம், தெரு விளக்கு, சாலைகள், இடுகாடு, இடுகாட்டுப் பாதை போன்ற அடிப்படை வசதிகளில் உள்ள இடைவெளிகளை நிரப்பும் வகையில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் குக்கிராமங்கள் உள்ள ஊராட்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும்.

ஆ) 2015 ஆம் ஆண்டுக்குள் திறந்தவெளி மலம் கழித்தல் நிலையற்ற கிராம ஊராட்சிகளாக மாற்ற முனைப்பான நடவடிக்கை எடுக்கும் கிராம ஊராட்சிகளுக்கு முன்னுரிமை.

இ) தமிழ்நாடு மின்வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய நீண்டகால நிலுவைத் தொகையினை செலுத்துதல்.

ஈ) தார்ச்சாலை அல்லாத அனைத்து ஊரகச் சாலைகளையும் தார்ச்சாலைகளாக மேம்படுத்திட தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள நிலையில் மண் மற்றும் கிராவல் சாலைகளை தார்ச்சாலைகளாக மாற்ற முன்னுரிமை அளித்தல்.

உ) ஊராட்சி / ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான கட்டடங்களில் ஒரே தவணையில் பராமரிப்புப் பணிகளை முழுமையாக மேற்கொள்ளுதல்.

2015-16 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட 3,045 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அட்டவணை 2.12

2015–16 ஆம் ஆண்டில் உட்கட்டமைப்பு இடை நிரவல் நிதியில் எடுக்கப்பட்ட பணிகள் விவரம்

(ரூபாய் கோடியில்)

வ.எண்	பணியின் வகைப்பாடு	பணிகளின் எண்ணிக்கை	தொகை
1.	அங்கன்வாடி மையங்கள்	32	7.35
2.	பாலங்கள் / கல்வர்ட்	169	18.66
3.	தார் சாலைகள்	593	67.39
4.	சிமெண்ட் சாலைகள்	113	6.79
5.	பாதாள சாக்கடை	333	14.11
6.	குடிநீர் பணிகள்	873	35.24
7.	இதர பணிகள்	932	53.07
8.	மின் கட்டணம்	--	26.47
9.	குடிநீர் கட்டணம்	--	2.40
	மொத்தம்	3045	231.48

2.16.5 மத்திய நிதி ஆணைய மானியம்

பதினான்காவது நிதி ஆணையக் குழு கிராம ஊராட்சிக்கு அடிப்படை மானியம் மற்றும் செயலாக்க மானியம் ஆகியன பரிந்துரை செய்துள்ளது. மொத்த மானிய தொகையில் 90 விழுக்காடு அடிப்படை மான்யமாகும். 10 விழுக்காடு செயலாக்க மானியமாகும். 2015-16-ம் ஆண்டுக்கு அடிப்படை மானியமாக ரூ.947.65 கோடி ஏற்கெனவே விடுவிக்கப்பட்டுள்ளது. பதினான்காவது நிதி குழு ஆணையத்தின் பரிந்துரையின்படி 2016-17 ஆம் ஆண்டு முதல் கிராம ஊராட்சியின் செயல்பாட்டுடன்கூடிய நிபந்தனைக்கு உட்பட்ட மானியமாக செயலாக்க மானியம் விடுவிக்கப்படும். 2015-16 முதல் 2019-20 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு தமிழ்நாட்டுக்குரிய பங்கு விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணை 2.13

(ரூபாய் கோடியில்)

மானியம்	2015-16	2016-17	2017-18	2018-19	2019-20	மொத்தம் (2015-20)
அடிப்படை மானியம்	947.65	1312.19	1516.12	1753.87	2369.86	7899.69
செயலாக்க மானியம்	--	172.12	194.78	221.20	289.64	877.74
மொத்தம்	**947.65**	**1484.31**	**1710.90**	**1975.07**	**2659.50**	**8777.43**

2016 ஆகஸ்ட் 5]

i) மத்திய நிதி ஆணைய அடிப்படை மானியம்

2015-16-ம் ஆண்டிற்கான பதினான்காவது மத்திய நிதி ஆணைய அடிப்படை மானியத் தொகையாக ரூ.947.65 கோடியை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இத்தொகை முழுவதும் மக்கள் தொகை அடிப்படையில் கிராம ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. ஊராட்சிகளில் அடிப்படை பணிகளான குடிநீர் விநியோகம், தெரு விளக்குகள் பராமரிப்பு, சுகாதாரம், மின்கட்டணம் மற்றும் குடிநீர்க் கட்டணம் ஆகியவற்றிற்காக இம்மானியம் பயன்படுத்தப்படுகிறது.

ii) மத்திய நிதி ஆணைய செயலாக்க மானியம்

கிராம ஊராட்சிகள் பதினான்காவது நிதிக் குழு ஆணைய செயலாக்க மானியம் பெறுவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் அரசு ஆணை எண் 55 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ப.ரா.1) துறை நாள் 5-5-2016-ல் வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசிதழ் எண் 117 நாள் 20-5-2016-ல் இதற்கான அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

பதினான்காவது மத்திய நிதிக் குழு, கிராம ஊராட்சிகளுக்கு செயலாக்க மானியம் வழங்கிட விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் பரிந்துரை செய்துள்ளது. கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு நிபந்தனைகளுக்குட்பட்டு கிராம ஊராட்சிகளுக்கு செயலாக்க மானியம் வழங்கப்படுவதை மாநில அரசே தீர்மானித்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

1. *கிராம ஊராட்சிகள், செயலாக்க மானியம் கோரும் ஆண்டுக்கு முந்தைய இரண்டு ஆண்டுகளுக்குரிய ஊராட்சி கணக்கு தணிக்கை அறிக்கையினை சமர்ப்பிக்க வேண்டும்.*
2. *கிராம ஊராட்சிகளின் முந்தைய ஆண்டைவிட சொந்த வருவாய் அதிகரித்திருப்பது, அத்தணிக்கை அறிக்கையில் பிரதிபலிக்க வேண்டும்.*

2.16.6 ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் முத்திரைத்தாள் வரி, கேளிக்கை வரி ஆகியவற்றிலிருந்து

பெறப்படும் வருவாயினை மாநில அளவில் ஒருங்கிணைத்து ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு பிரித்து வழங்கப்படுகிறது. அதன்படி, 2015-16 ஆம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் ரூ.713.01 கோடியினை பின்வருமாறு அனுமதித்து அரசு ஆணையிட்டது.

i) ஐம்பது விழுக்காடு தொகை ரூ.356.50 கோடி நிதியினை கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு 67:33 என்ற விகிதத்தில் 2011 மக்கள் தொகை அடிப்படையில் பிரித்தளித்துள்ளது. அவ்வாறு ரூ.238.86 கோடி, கிராம ஊராட்சிகளுக்கும், ரூ.117.64 கோடி, ஊராட்சி ஒன்றியங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

ii) மீதமுள்ள 50 விழுக்காடு நிதியான ரூ.356.50 கோடி குறிப்பிட்ட வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் ஊரகப் பகுதிகளில் முன்னுரிமைத் திட்டங்களுக்காகவும், தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டத்திற்காகவும் (தாய்) 50:50 என்ற விகிதத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.16.7 ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக் கூறு நிதி

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை செயலரைத் தலைவராகக் கொண்ட குழுவிற்கு ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக் கூறு நிதியிலிருந்து பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள், கிராம ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள், பெரிய பாலங்கள், தரைப் பாலங்கள், இணைப்புச் சாலைகள், பேருந்து நிறுத்தங்கள் போன்ற பெரிய அளவிலான பணிகள் இத்திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டுள்ளன. அதன்படி, 2015-16 ஆம் ஆண்டில் ரூ.221.92 கோடி மதிப்பீட்டில் 810 பணிகள் கீழ்க்கண்டவாறு எடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 2.14

2015–16 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக்கூறு நிதியில் எடுக்கப்பட்ட பணிகள் விவரம்

(ரூபாய் கோடியில்)

வ.எண்	வகைப்பாடு	பணிகளின் எண்ணிக்கை	தொகை
1.	ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டடங்கள்	2	5.23
2.	பேருந்து நிறுத்தங்கள்	2	2.16
3.	சாலைகள்	518	164.00
4.	பாலங்கள்	20	17.59
5.	இதர உட்கட்டமைப்புப் பணிகள்	268	32.94
	மொத்தம்	**810**	**221.92**

2.16.8 ஊராட்சிகளின் வருவாய் வரம்பு

தமிழ்நாட்டில் 12,524 கிராம ஊராட்சிகள் உள்ளன. 2015-16 ஆம் ஆண்டு வருவாய் அடிப்படையில் கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

அட்டவணை 2.15

ஊராட்சிகளின் வருவாய் வரம்பு

வருவாய் வரம்பு	கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை
ரூ. 5 லட்சம் முதல் 7 லட்சம் வரை	150
ரூ. 7லட்சம் முதல் 10 லட்சம் வரை	861
ரூ.10 லட்சம் முதல் 20 லட்சம் வரை	6309
ரூ.20 லட்சம் முதல் 50 லட்சம் வரை	4370
ரூ.50 லட்சம் முதல் 1 கோடி வரை	705
ரூ.1 கோடிக்கு மேல்	129
மொத்தம்	**12524**

2.17 கிராம ஊராட்சிகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகள்

2.17.1. அலுவலகக் கட்டடங்கள்

தமிழ்நாட்டில் உள்ள 12,524 கிராம ஊராட்சிகளுக்கும் சொந்த அலுவலகக் கட்டடங்கள் உள்ளன. மாநில அரசின் நிதி ஆதாரத்தைக் கொண்டு நீண்டநாள் பயன்பாட்டிற்குப் பின் பழுதடைந்த கிராம ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் இடிக்கப்பட்டு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதி மற்றும் மத்திய அரசின் ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் திட்டம் ஆகியவற்றின்கீழ் 2011-12 முதல் 2014-15 ஆம் ஆண்டு வரை ரூ.128.75 கோடி செலவில் 1,481 ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. உள்ளாட்சி நிதி/மாநில அரசு நிதியைக் கொண்டு பழுதுநீக்கம் மற்றும் புனரமைப்பு பணிகளும் ஒவ்வோர் ஆண்டும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி, 2011-12 ஆம் ஆண்டு முதல் 2014-15 ஆம் ஆண்டு வரை ரூ.64.64 கோடி செலவில் 6,561 ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன.

2.17.2 கணினி மற்றும் இணைய வசதிகள்

12,524 கிராம ஊராட்சிகளிலும் தடையில்லா மின்சார வசதியுடன் கணினி மற்றும் பிரிண்டர் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன. இதுவரை 10,010 கிராம ஊராட்சிகளில் அகன்ற அலைவரிசை இணையதள வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2.17.3 கிராம ஊராட்சி சேவை மையம்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் 2013-14 ஆம் ஆண்டில் ரூ.547.63 கோடி மதிப்பீட்டில் 4,174 கிராம ஊராட்சி சேவை மையங்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதேபோல 2014-15 ஆம் ஆண்டில் ரூ.648.93 கோடி மதிப்பீட்டில் 4,460 கிராம ஊராட்சி சேவை மையப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. இந்த சேவை மையங்கள், தகவல் அளிக்கக்கூடிய மையங்களாகவும், வளர்ச்சிக்கு உறுதுணையான இணையதள தகவல் பரிமாற்றம் மேற்கொள்ள வழிவகுக்கும் மையங்களாகவும் செயல்படும். அரசு ஆணை எண் 83 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ம.அதி-1) துறை நாள்

2016 ஆகஸ்ட் 5]

26-5-2015-ல் வழிகாட்டுதல் ஆணையிடப்பட்டுள்ளது. 2015-16 ஆம் ஆண்டில் 3890 கிராம ஊராட்சி சேவை மையங்கள் ரூ.661 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

2.18 ஊராட்சி ஒன்றியம்

தமிழ்நாட்டில் இடைநிலை அளவில் 385 ஊராட்சி ஒன்றியங்கள் (வட்டார ஊராட்சிகள்) உள்ளன. ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியமும், ஊராட்சி ஒன்றிய வார்டுகளை உள்ளடக்கிய வளர்ச்சி வட்டாரங்களாகும். ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் தொடர்புடைய வார்டில் உள்ள மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்களால், மறைமுகத் தேர்தலின்மூலம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் தேர்வு செய்யப்படுவார்.

2.19 தருமபுரி மற்றும் கடலூர் மாவட்டங்களில் புதியதாக ஊராட்சி ஒன்றியம் தோற்றுவித்தல்:

தருமபுரி மாவட்டத்தில் உள்ள பென்னாகரம் மற்றும் மொரப்பூர் ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து ஏரியூர் மற்றும் கடத்தூர் என்ற இரண்டு ஊராட்சி ஒன்றியங்களை புதிதாக தோற்றுவித்திட அரசாணை எண் 176 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள் 9-12-2013-ல் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, 10 கிராம ஊராட்சிகளைக் கொண்டு, ஏரியூர் ஊராட்சி ஒன்றியமும், 25 கிராம ஊராட்சிகளைக் கொண்டு கடத்தூர் ஊராட்சி ஒன்றியமும் செயல்படும்.

அதுபோல, கடலூர் மாவட்டத்தில் உள்ள காட்டுமன்னார்கோயில், கீரப்பாளையம் மற்றும் கம்மாபுரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஊராட்சிகளைப் பிரித்து, ஸ்ரீமுஷ்ணத்தினைத் தலைமையிடமாகக் கொண்டு 41 ஊராட்சிகளுடன் புதிய ஊராட்சி ஒன்றியம் ஏற்படுத்திட அரசாணை எண் 97, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (ஊ.து.II) நாள் 5-8-2014-ல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த மூன்று ஊராட்சி ஒன்றியக் குழுக்களும் 2016 ஆம் ஆண்டு நடைபெற உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரணத் தேர்தலில் பிரதிநிதிகள் தேர்வு செய்யப்பட்டு செயல்படத் துவங்கும்.

[2016 ஆகஸ்ட் 5

அட்டவணை 2.16

கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களின் வகைப்பாடு

ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஊராட்சிகளின் வரம்பு விவரம்	ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை
10 மற்றும் அதற்கு குறைவாக	23
11 முதல் 20 வரை	80
21 முதல் 30 வரை	80
31 முதல் 40 வரை	83
41 முதல் 50 வரை	65
51 மற்றும் அதற்கு அதிகமாக	54
மொத்தம்	385

மாவட்ட வாரியான ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் பரப்பளவு விவரம் பின்வருமாறு:

அட்டவணை 2.17

மாவட்ட வாரியாக ஊராட்சி ஒன்றியங்களின் விவரம்

வ.எண்	மாவட்டம்	ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை	கிராம ஊராட்சி களின் எண்ணிக்கை	ஊராட்சிகளின் சராசரி எண்ணிக்கை	ஊரக பரப்பளவு (ச.கிமீ)	ஊராட்சி ஒன்றியத்தின் சராசரி பரப்பளவு (ச.கிமீ)
1.	காஞ்சிபுரம்	13	633	**49**	3,851.45	296.27
2.	திருவள்ளூர்	14	526	**38**	2,859.84	204.27
3.	கடலூர்	13	683	**53**	2,942.24	226.33
4.	விழுப்புரம்	22	1,099	**50**	6,509.43	295.88
5.	வேலூர்	20	743	**37**	4,022.30	201.12
6.	திருவண்ணாமலை	18	860	**48**	4,826.27	268.13
7.	சேலம்	20	385	**19**	4561.41	228.07
8.	நாமக்கல்	15	322	**21**	3,119.43	207.96
9.	தருமபுரி	8	251	**31**	4,407.43	550.93
10.	கிருஷ்ணகிரி	10	333	**33**	4,965.73	496.57
11.	ஈரோடு	14	225	**16**	2,626.99	187.64
12.	திருப்பூர்	13	265	**20**	4,545.50	349.65

2016 ஆகஸ்ட் 5]

வ.எண்	மாவட்டம்	ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை	கிராம ஊராட்சி களின் எண்ணிக்கை	ஊராட்சிகளின் சராசரி எண்ணிக்கை	ஊரக பரப்பளவு (ச.கிமீ)	ஊராட்சி ஒன்றியத்தின் சராசரி பரப்பளவு (ச.கிமீ)
13.	கோயம்புத்தூர்	12	228	19	2,534.24	211.19
14.	நீலகிரி	4	35	9	1,170.39	292.60
15.	தஞ்சாவூர்	14	589	42	3,657.67	261.26
16.	நாகப்பட்டினம்	11	434	39	2,400.31	218.21
17.	திருவாரூர்	10	430	43	2,322.69	232.27
18.	திருச்சிராப்பள்ளி	14	404	29	4,028.00	287.71
19.	கரூர்	8	157	20	2,656.25	332.03
20.	பெரம்பலூர்	4	121	30	1,609.54	402.39
21.	அரியலூர்	6	201	34	1,710.17	285.03
22.	புதுக்கோட்டை	13	497	38	4,433.78	341.06
23.	மதுரை	13	420	32	3,183.18	244.86
24.	தேனி	8	130	16	1,159.89	144.99
25.	திண்டுக்கல்	14	306	22	4,401.34	314.38
26.	இராமநாதபுரம்	11	429	39	4,116.19	374.20
27.	விருதுநகர்	11	450	41	3,282.08	298.37
28.	சிவகங்கை	12	445	37	3,075.90	256.33
29.	திருநெல்வேலி	19	425	22	4,283.06	225.42
30.	தூத்துக்குடி	12	403	34	4,260.78	355.07
31.	கன்னியாகுமரி	9	95	11	626.14	69.57
	மொத்தம்	385	12,524	33	1,04,149.61	270.52

வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), ஊராட்சி ஒன்றியத்தின் செயல் அலுவலர் ஆவார். அவருக்கு உதவியாக நிருவாகப் பிரிவு மற்றும் பொறியியல் பிரிவில் உள்ள பணியாளர்கள் இருப்பார்கள். 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 112-ன்படி ஊராட்சி ஒன்றியக் குழு மேற்கொள்ளும் பணிகளில் முக்கியமானவை பின்வருமாறு:

1. *மத்திய மற்றும் மாநில அரசின் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துதல்.*

[2016 ஆகஸ்ட் 5

2. ஊராட்சி ஒன்றிய சாலைகள், சிறுபாலங்கள், பாலங்கள், தடுப்புச் சுவர்கள், தரைப் பாலங்கள் அமைத்தல், பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்.

3. ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கான கட்டடங்கள் கட்டுதல் மற்றும் பராமரித்தல்.

4. ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நீர்நிலைகளான சிறுபாசனக் குளங்கள், குட்டைகள், ஊரணிகள் ஆகியவற்றை பராமரித்தல் மற்றும் புதிதாக அமைத்தல்

5. தொற்றுநோய் பரவாதவண்ணம் இருக்கத் தடுப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

6. ஊராட்சி ஒன்றியக் குழுக்களால் வரையறுக்கப்பட்ட கண்காட்சி மற்றும் விழாக்கள் நடத்துதல்.

7. ஊராட்சி ஒன்றியச் சந்தைகளாக வகைப்படுத்தப்பட்டவற்றை பராமரித்தல்.

1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 114-ன்படி பொருளாதார வளர்ச்சி குறித்த திட்டங்கள் மற்றும் இதர செயல்பாடுகளை ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் செயல்படுத்தும்படி அரசு பணிக்கலாம்.

2.20 நிதி

1. ஊராட்சி ஒன்றிய குழுவிடம் வரி நிர்ணயம் செய்யும் அதிகாரம் இல்லை.

2. வரியில்லா வருவாய், ஒப்படைக்கப்பட்ட/ பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாயில் ஒரு பகுதி, கட்டணங்கள், வாடகை, அபராதம் மற்றும் தண்டத்தீர்வை.

3. மாநில நிதிக் குழு மானியம், மத்திய மற்றும் மாநில அரசுகள் விடுவிக்கும் திட்டங்களுக்கான வளர்ச்சி நிதி ஆகியன நிதி ஆதாரங்களாக உள்ளன.

2016 ஆகஸ்ட் 5]

2.21 ஊராட்சி ஒன்றியங்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகள்

2.21.1 அலுவலகக் கட்டடங்கள்

தமிழ்நாட்டிலுள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் சொந்த அலுவலகக் கட்டடங்கள் உள்ளன. நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்டு பழுதடைந்த பழைய கட்டடங்களுக்குப் பதிலாக மாநில அரசின் நிதியைக் கொண்டு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. 2011-12 ஆம் ஆண்டு முதல் 2015-16 ஆம் ஆண்டு வரை ரூ.148.25 கோடி செலவில் 78 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

2.21.2 கணினி மற்றும் இணையதள வசதிகள்

அனைத்து 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் தடையில்லா மின்சார வசதியுடன் கூடிய கணினி, பிரிண்டர் மற்றும் இணையதள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளன.

2.21.3 ஊராட்சி ஒன்றிய சேவை மையம்

வட்டார அளவில் பல்வேறு துறைகள் சார்ந்த சேவைகளை வழங்குவதற்கும், வளர்ச்சிப் பணிகளுக்கு உறுதுணையான இணையதள பரிமாற்றங்களுக்கும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் 2013-14 ஆம் ஆண்டில் ரூ.32.88 கோடி மதிப்பீட்டில் 120 ஊராட்சி ஒன்றிய சேவை மையப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அதேபோல, 2014-15 ஆம் ஆண்டில் ரூ.45.45 கோடி மதிப்பீட்டில் 150 ஊராட்சி ஒன்றிய சேவை மையப் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

2.21.4 ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள்

மாநிலம் முழுவதும் 28,031 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் உள்ளன. அதன் உட்கட்டமைப்பு பணிகளான வகுப்பறைகள், சமையலறை, குடிநீர், கழிவறை மற்றும் சுற்றுச்சுவர் வசதிகள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைமூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின் வாயிலாகவும் ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்தும் மேற்கொள்ளப்படுகின்றன. மாவட்ட வாரியாக

[2016 ஆகஸ்ட் 5

ஊராட்சி ஒன்றியத் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் விவரம் பின்வருமாறு:

அட்டவணை 2.18

ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் விவரம்

வ. எண்	மாவட்டம்	ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை	மொத்தம்
1.	காஞ்சிபுரம்	737	284	1,021
2.	திருவள்ளூர்	839	242	1,081
3.	கடலூர்	758	251	1,009
4.	விழுப்புரம்	1,222	397	1,619
5.	வேலூர்	1,156	401	1,557
6.	திருவண்ணாமலை	1,190	306	1,496
7.	சேலம்	975	345	1,320
8.	நாமக்கல்	649	148	797
9.	தருமபுரி	785	313	1,098
10.	கிருஷ்ணகிரி	1,091	286	1,377
11.	ஈரோடு	743	283	1,026
12.	திருப்பூர்	840	227	1,067
13.	கோயம்புத்தூர்	665	216	881
14.	நீலகிரி	215	65	280
15.	தஞ்சாவூர்	796	190	986
16.	நாகப்பட்டினம்	489	176	665
17.	திருவாரூர்	535	209	744
18.	திருச்சிராப்பள்ளி	712	203	915
19.	கரூர்	497	163	660
20.	பெரம்பலூர்	343	117	460
21.	அரியலூர்	170	59	229
22.	புதுக்கோட்டை	1,001	294	1,295
23.	மதுரை	639	207	846
24.	தேனி	237	82	319
25.	திண்டுக்கல்	857	200	1,057
26.	இராமநாதபுரம்	756	155	911
27.	விருதுநகர்	600	150	750
28.	சிவகங்கை	705	243	948
29.	திருநெல்வேலி	555	99	654
30.	தூத்துக்குடி	476	112	588
31.	கன்னியாகுமரி	280	95	375
மொத்தம்		**21,513**	**6,518**	**28,031**

2016 ஆகஸ்ட் 5]

2.21.5 நீராதார அமைப்புகள்

ஊரகப் பகுதிகளில் உள்ள குளங்கள், குட்டைகள் மற்றும் சிறுபாசன ஏரிகள் ஆகியன ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் முக்கியமான சொத்துகளில் சிலவாகும். மாவட்ட வாரியாக சிறுபாசன ஏரிகள் மற்றும் குளங்கள்/குட்டைகள் எண்ணிக்கை பின்வருமாறு:

அட்டவணை 2.19

மாவட்ட வாரியாக சிறுபாசன கண்மாய்கள், குட்டைகள் / ஊரணிகள் விவரம்

வ.எண்	மாவட்டம்	சிறுபாசன கண்மாய்கள்	ஊரணிகள்/ குட்டைகள்	மொத்தம்
1.	காஞ்சிபுரம்	1,100	1,240	2,340
2.	திருவள்ளூர்	649	2,059	2,708
3.	கடலூர்	254	2,304	2,558
4.	விழுப்புரம்	1,257	3,551	4,808
5.	வேலூர்	633	854	1,487
6.	திருவண்ணாமலை	1,250	2,027	3,277
7.	சேலம்	242	375	617
8.	நாமக்கல்	152	422	574
9.	தருமபுரி	555	628	1,183
10.	கிருஷ்ணகிரி	1,172	1,211	2,383
11.	ஈரோடு	19	597	616
12.	திருப்பூர்	10	1,434	1,444
13.	கோயம்புத்தூர்	9	709	718
14.	நீலகிரி	0	225	225
15.	தஞ்சாவூர்	63	3,131	3,194
16.	நாகப்பட்டிணம்	0	3,979	3,979
17.	திருவாரூர்	0	3,602	3,602
18.	திருச்சிராப்பள்ளி	1,406	705	2,111
19.	கரூர்	108	388	496
20.	பெரம்பலூர்	477	1,615	2,092
21.	அரியலூர்	138	753	891
22.	புதுக்கோட்டை	3,824	1,795	5,619
23.	மதுரை	1,029	3,233	4,262
24.	தேனி	26	319	345
25.	திண்டுக்கல்	1,577	1,000	2,577
26.	இராமநாதபுரம்	818	2,499	3,317
27.	விருதுநகர்	300	1,730	2,030
28.	சிவகங்கை	2,776	4,156	6,932
29.	திருநெல்வேலி	769	769	1,538
30.	தூத்துக்குடி	397	1,148	1,545
31.	கன்னியாகுமரி	599	300	899
	மொத்தம்	21,609	48,758	70,367

[*2016 ஆகஸ்ட் 5*

2.22 மாவட்ட ஊராட்சி

தமிழ்நாட்டில் 31 மாவட்ட ஊராட்சிகள் உள்ளன. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 24-ன்படி ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் மாவட்ட ஊராட்சி அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள், மக்களால் நேரடித் தேர்தல்மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்களால் மறைமுகத் தேர்தல்மூலம் மாவட்ட ஊராட்சித் தலைவர் தேர்வு செய்யப்படுகிறார்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில், உதவி இயக்குநர் நிலையில் ஒரு அலுவலர் ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிக்கும் செயலராக நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகிறார். அவருக்கு உறுதுணையாகப் பணியாளர்கள் உள்ளனர். மாவட்ட ஊராட்சி, பின்வரும் நிலைக் குழுக்களை அமைக்கலாம்.

1. *உணவு மற்றும் வேளாண்மை*
2. *தொழிற்சாலைகள் மற்றும் தொழிலாளர்கள்*
3. *பொதுப் பணிகள்*
4. *கல்வி*
5. *மது விலக்கு உள்ளிட்ட சுகாதாரம் மற்றும் மக்கள் நலவாழ்வு*

இக்குழுக்கள் தவிர, தேவையின் அடிப்படையில் மாவட்ட ஊராட்சியால் கூடுதல் நிலைக் குழுக்களை அமைத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு நிலைக் குழுவும், தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களில் ஒருவரைத் தலைவராகத் தேர்வு செய்திட வேண்டும். மாவட்ட ஊராட்சித் தலைவர், மேற்படி நிலைக் குழுக்களின் பதவி வழி உறுப்பினர் ஆவார்.

2.22.1 செயல்பாடுகள்

1. *மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரித்தல்.*
2. *ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் நிருவாக அறிக்கையினை ஒருங்கிணைத்தல் மற்றும் மாவட்டத்தின் ஆண்டறிக்கையைத் தயாரித்தல்.*
3. *விவசாயம், நிலவள மேம்பாடு, கால்நடை பராமரிப்பு, பால் வளம், கோழிப்பண்ணை, மீன் வளம் மற்றும் கிராமத்*

தொழில்கள் ஆகியவற்றைத் திட்டமிடல் மற்றும் ஆய்வு செய்தல்.

4. ஊரக வீட்டு வசதிக்கான திட்டமிடல் மற்றும் ஆய்வு செய்தல் (குறிப்பாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு.)

5. பெரிய அளவிலான குடிநீர்த் திட்டப் பணிகளைக் கண்டறிதல்.

2.22.2 நிதி

மாவட்ட ஊராட்சிகளுக்கு வரி விதிக்கும் அதிகாரம் ஏதும் இல்லை. மாநில நிதி ஆணைய மானியம் மட்டுமே முதன்மையான வருவாயாகும். குறிப்பிட்ட சில இனங்களில் மாவட்ட ஊராட்சிக்குச் சொந்தமான நிலம் மற்றும் கட்டடம் மூலமாக கிடைக்கும் வருவாய் முக்கியமானவையாகும். ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் 58 விழுக்காடு நிதியில் 8 விழுக்காடு மாவட்ட ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த மானியம் ஒவ்வொரு மாதமும் மாவட்ட ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்படுகிறது.

2.22.3 மாவட்டத் திட்டக் குழு

மாவட்டத் திட்டக் குழு என்ற அமைப்பினை ஏற்படுத்திட 74-வது இந்திய அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் வழிவகுத்துள்ளது. அதன்படி மாவட்டத் திட்டக் குழு 31 மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளது. மாவட்டத் திட்டக் குழுவின் தலைவராக மாவட்ட ஊராட்சித் தலைவரும், துணைத் தலைவராக மாவட்ட ஆட்சித் தலைவரும் உள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விகிதாச்சாரத்திற்கேற்ப உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாவர். மாவட்டத் திட்டக் குழுவின் பணிகள் பின்வருமாறு:

1. மாவட்டப் பரவலாக்கப்பட்ட திட்டம் தயாரிப்பதற்குத் தேவையான மாவட்ட அளவிலான வள ஆதாரங்கள் விவரங்களை சேகரித்தல், தொகுத்தல் மற்றும் நாளது தேதிவரையிலான விவரங்களைப் பெறுதல்.

2. தேவைகளைக் கண்டறிந்து முன்னுரிமை அளித்தல்.

[2016 ஆகஸ்ட் 5

3. மாவட்டத்தின் வளர்ச்சிக்குத் தேவையான கொள்கைகள், திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் முன்னுரிமை அளித்தல்.

4. மாவட்டத்தில் உள்ள ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தயாரித்த திட்டங்களை ஒருங்கிணைத்து மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரித்தல். மாவட்டத் திட்டக் குழு தயாரிக்கும் வளர்ச்சித் திட்டம், மாநிலத் திட்டக் குழு தயாரிக்கும் மாநில அளவிலான திட்டத்திற்கு உதவியாக இருத்தல்.

5. மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைக் கண்காணித்தல் மற்றும் ஆய்வு செய்தல்.

6. வளர்ச்சித் திட்டங்களில் தொண்டு நிறுவனங்களின் பங்கேற்பை ஊக்குவித்தல்.

7. மாநில அரசுத் திட்டங்களைச் செயல்படுத்துதல் தொடர்பான ஆலோசனைகளை மாநில அரசுக்கு வழங்குதல்.

8. மாநில அரசால் அவ்வப்போது ஒப்படைக்கப்படும் இதர பணிகளை நிறைவேற்றுதல்.

2.23 மாவட்ட ஊராட்சிகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகள்

2.23.1 அலுவலகக் கட்டடங்கள்

மாநில அளவில் 31 மாவட்ட ஊராட்சிகளுக்கும் சொந்தக் கட்டடங்கள் உள்ளன. திருவள்ளூர், வேலூர் மற்றும் விருதுநகர் ஆகிய சொந்தக் கட்டடம் இல்லாத மூன்று மாவட்டங்களுக்கு ரூ.75 லட்சம் வீதம் மொத்தம் ரூ.2.25 கோடி மதிப்பீட்டில் 2014-15 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதியில் இருந்து புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசு ஆணையிட்டதன்படி திருவள்ளூர், வேலூர் மற்றும் விருதுநகர் ஆகிய 3 மாவட்ட ஊராட்சி அலுவலகங்கள் இறுதியாக கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

2.23.2 கணினி மற்றும் இணையதள வசதி

31 மாவட்ட ஊராட்சிகளிலும் கணினி, பிரிண்டர் மற்றும் இணையதள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளன.

2016 ஆகஸ்ட் 5]

2.23.3 வாகனங்கள்

அனைத்து மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்ட ஊராட்சி செயலர்களுக்கும் ஊரகப் பகுதிகளில் மத்திய மற்றும் மாநில அரசு திட்டச் செயல்பாடுகளை கண்காணிப்பதற்காக வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

2.24 மத்திய அரசின் ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் திட்டம்

இத்திட்டத்தில் 2014-15 ஆம் ஆண்டு ரூ 2.60 கோடி மதிப்பீட்டில் முறையே சத்திய விஜய நகரம், கிருஷ்ணகிரி, பட்டுக்கோட்டை, பவானிசாகர் மற்றும் டி.கல்லுப்பட்டி ஆகிய ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனங்களில் மாவட்ட ஊராட்சி வள மையங்கள் கட்டுமான பணிகளுக்காக கீழ்க்காணும் விவரப்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வ.எண்	நிறுவனத்தின் பெயர்	மதிப்பீடு
1.	ச.வி. நகரம்	50.00
2.	கிருஷ்ணகிரி	50.00
3.	பட்டுக்கோட்டை	60.00
4.	பவானிசாகர்	50.00
5.	டி. கல்லுப்பட்டி	50.00
	மொத்தம்	**260.00**

இதேபோன்று, இத்திட்டத்தின்கீழ் மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனங்களில் ஏற்கெனவே உள்ள கட்டடங்களில் ரூ.2.38 கோடி மதிப்பீட்டில் கீழ்க்காணும் விவரப்படி புதுப்பித்தல் மற்றும் பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வ.எண்	நிறுவனத்தின் பெயர்	பணி	தொகை ரூபாய் லட்சத்தில்
1.	ச.வி. நகரம்	ஏழு கட்டடங்கள் புதுப்பித்தல்	50.00
2.	கிருஷ்ணகிரி	மூன்று விடுதிகள் மற்றும் பிரதான கட்டடங்கள் பழுதுநீக்கம் செய்தல்	50.00
3.	பட்டுக்கோட்டை	உணவு விடுதி, விருந்தினர் குடியிருப்பு, நூல் நிலையம் மற்றும் விடுதி கட்டடங்கள் புதுப்பித்தல்	38.00
4.	பவானிசாகர்	விடுதி, வகுப்பறை மற்றும் பயிற்சி கூடம் ஆகியன பழுதுநீக்கம் செய்து புதுப்பித்தல்	50.00
5.	டி. கல்லுப்பட்டி	ஐந்து முந்தைய கட்டடங்கள் பழுதுநீக்கம் மற்றும் புதுப்பித்தல்	50.00
		மொத்தம்	**238.00**

[2016 ஆகஸ்ட் 5

2.25 மத்திய அரசின் ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் திட்டம் – 2014–15–ல் ஊராட்சி மன்ற அலுவலக கட்டுமான பணிகள்

இத்திட்டத்தில், 5,000-க்கும் குறைவாக மக்கள் தொகையுள்ள 56 ஊராட்சிகளில் புதிய ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு அலுவலகம் ஒன்றுக்கு ரூ.12.00 லட்சம் வீதம் ரூ.672.00 லட்சம் மதிப்பீட்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதேபோன்று, 5000-க்கும் மேற்பட்ட மக்கள் தொகையுடைய 6 கிராம ஊராட்சிகளில் கட்டடம் ஒன்றுக்கு ரூ.15.00 லட்சம் வீதம், ரூ.90.00 லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் ரூ.762.00 லட்சம் புதிய ஊராட்சிமன்ற கட்டுமானப் பணிகளுக்கு அனுமதிக்கப்பட்டு, அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று 2015-16-ம் ஆண்டு இத்திட்டத்தில் ரூ.896.00 லட்சம் மதிப்பீட்டில் 10 மாவட்டங்களில் மாவட்ட ஊராட்சி சேவை மையங்களும், 5 மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனங்களில் ரூ.40.00 லட்சம் மதிப்பீட்டில் பயிற்சிக்கான கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.

2.26 விருதுகள்

மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் சிறந்த முயற்சிகள் மற்றும் நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய அரசு பல்வேறு விருதுகளை ஏற்படுத்தியுள்ளன. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் பல்வேறு விருதுகள் விவரம் பின்வருமாறு:

1. ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் விருது
2. ராஷ்டிரிய கௌரவ கிராம சபை விருது
3. ஊராட்சிகளில் மின்னணு ஆளுமைக்கான தேசிய விருது
4. சிறந்த நடைமுறைகள்/புதுமையான திட்டங்களுக்கான விருது

2.26.1 ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் விருது

ஊராட்சிகளுக்கு அதிக அதிகாரங்கள், கூடுதல் நிதி மற்றும் பணியாளர்களை அளிப்பதுடன் ஊராட்சிகளின் திறனை மேம்படுத்த ஏதுவாக மாநில அரசுகளுக்கு உறுதுணையாக, ஊராட்சிகளுக்கு அதிகாரமளித்தல் மற்றும் பொறுப்புணர்வு

2016 ஆகஸ்ட் 5]

ஆகியவற்றிற்கு ஊக்கத் தொகை அளிக்கும் விருதினை ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் விருது என மாற்றி மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகம் அறிவித்துள்ளது.

2012-13 ஆம் ஆண்டில் மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகம், சிறந்த கிராம ஊராட்சிக்கு ரூ.7 இலட்சம், சிறந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு ரூ.20 இலட்சம் மற்றும் சிறந்த மாவட்ட ஊராட்சிக்கு ரூ.40 இலட்சம் வீதம் தமிழ்நாட்டில் உள்ள 6 கிராம ஊராட்சிகள், 2 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஒரு மாவட்ட ஊராட்சிக்கு ரொக்கப் பரிசுடன் விருது வழங்கி மொத்தம் ரூ.1.22 கோடி நிதியினை விடுவித்துள்ளது.

அதேபோல 2013-14 ஆம் ஆண்டில் 6 சிறந்த கிராம ஊராட்சிகளுக்கு ரூ.8 லட்சம் வீதமும், 2 சிறந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.25 லட்சம் வீதமும் மற்றும் சிறந்த ஒரு மாவட்ட ஊராட்சிக்கு ரூ.50 லட்சமும் நிதியினை மத்திய அரசு விடுவித்துள்ளது.

அதேபோல 2014-15 ஆம் ஆண்டில் 6 சிறந்த கிராம ஊராட்சிகளுக்கு தலா ரூ.8 லட்சம் வீதமும், 2 சிறந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு தலா ரூ.20 லட்சம் வீதமும் மற்றும் சிறந்த ஒரு மாவட்ட ஊராட்சிக்கு ரூ.30 லட்சம் நிதியும் கொண்ட விருதினை மத்திய அரசு வழங்கியுள்ளது.

இதே போன்று 2015-16 ஆம் ஆண்டில் 6 கிராம ஊராட்சிகளுக்கும் 2 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் மற்றும் ஒரு மாவட்ட ஊராட்சிக்கும் விருதுடன் ஊக்கத் தொகையும் வழங்கப்பட்டுள்ளது. விவரங்கள் வருமாறு:

வ. எண்	உள்ளாட்சி அமைப்பின் பெயர்	மாவட்டம்
1.	திருப்பூர் மாவட்ட ஊராட்சி	திருப்பூர்
2.	மதுக்கரை ஊராட்சி ஒன்றியம்	கோயம்புத்தூர்
3.	கே.மயிலாடும்பாறை	தேனி
4.	மலுமிச்சம்பட்டி கிராம ஊராட்சி	கோயம்புத்தூர்
5.	அரியநந்தல் கிராம ஊராட்சி	இராமநாதபுரம்
6.	ஓடந்துரை கிராம ஊராட்சி	கோயம்புத்தூர்
7.	கொடநாடு கிராம ஊராட்சி	நீலகிரி
8.	இராசிங்கபுரம் கிராம ஊராட்சி	தேனி
9.	இராஜக்கமங்கலம் கிராம ஊராட்சி	கன்னியாகுமரி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2016 ஆகஸ்ட் 5

2.26.2 ராஷ்ட்ரிய கௌரவ கிராம சபை விருது

வலுவான கிராம சபையின்மூலம் சிறப்பான சாதனைகள்புரியும் கிராம ஊராட்சிகளை அங்கீகரிக்கவும், ஊக்கமளிக்கவும் ஏதுவாக 2012 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகம், ராஷ்ட்ரிய கௌரவ கிராம சபை விருதினை ஏற்படுத்தியுள்ளது.

2011-12 ஆம் ஆண்டிற்கான விருதுக்கு இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மேதலோடை கிராம ஊராட்சியை மத்திய அரசு தேர்வு செய்து ரு.5 லட்சம் ரொக்கப் பரிசாக வழங்கியது. 2012-13 ஆம் ஆண்டிற்கான விருதிற்கு, திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள நெடுங்குணம் கிராம ஊராட்சியினை மத்திய அரசு தேர்வு செய்து ரூ.10 லட்சம் ரொக்கப் பரிசாக வழங்கியது. அதேபோல 2013-14 ஆம் ஆண்டிற்கான விருதிற்கு இராமநாதபுரம் மாவட்டம், போகலூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கருத்தனேந்தல் கிராம ஊராட்சியை மத்திய அரசு தேர்வு செய்து ரூ.10 லட்சம் ரொக்கப் பரிசாக வழங்கியது.

அதேபோல 2014-15 ஆம் ஆண்டிற்கான விருதிற்கு நீலகிரி மாவட்டம், குன்னூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பேரட்டி கிராம ஊராட்சியை மத்திய அரசு தேர்வு செய்து ரூ.10 லட்சம் ரொக்கப் பரிசாக வழங்கியது.

இதேபோன்று 2015-16 ஆம் ஆண்டிற்கான விருதிற்கு திண்டுக்கல் மாவட்டம் தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அக்கரைப்பட்டி கிராம ஊராட்சியை மத்திய அரசு தேர்வு செய்து விருதுடன் ரொக்கப் பரிசும் வழங்கியுள்ளது.

2.26.3 ஊராட்சிகளில் மின் ஆளுகைக்கான தேசிய விருது

ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாட்டில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புத்தன்மை ஆகியவற்றை மேம்படுத்திடவும் அதிகாரப் பரவலாக்கத்தின் அடிப்படையிலான திறன்மிக்க தன்னாட்சி அமைப்புகளாக மாற்றிடவும் தேசிய மின்னாளுகைத் திட்டத்தின்கீழ் ஊராட்சிகளில் மின்னாளுகைக்கான செயல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகம், ஊராட்சி அமைப்புகளுக்காக, பத்து வகையிலான மென்பொருள் தொகுப்புகளை உருவாக்கியுள்ளது. ஊராட்சிகளில் மின்னாளுமைத்

2016 ஆகஸ்ட் 5]

திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தியமைக்காக மத்திய அரசின் 2014 ஆம் ஆண்டிற்கான ஊராட்சி மின்னாளுமை விருதுக்காக தமிழ்நாடு மாநிலம் தேர்வு செய்யப்பட்டது. மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களால் மேற்கண்ட விருது 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், 24 ஆம் நாளன்று வழங்கப்பட்டது.

2.26.4 சிறந்த நடைமுறைகளுக்கான மாநில அரசு விருது (குக்கிராமவாரியாக குடிநீர் வழங்குதலை இணையதளம் மூலமாக கண்காணித்தல்)

ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து குக்கிராமங்களுக்கும் அன்றாடம் குடிநீர் விநியோகம் செய்வதை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கண்காணித்து வருகிறது. அதன்படி ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை இணையதளம்மூலம் குக்கிராம அளவில் தினசரி குடிநீர் விநியோகத்தினை கண்காணிப்பதற்கான மென்பொருள் உருவாக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இம்முயற்சியினை பாராட்டும்விதமாக தமிழ்நாடு அரசு சிறந்த நடைமுறைகள்/ புதுமையான திட்டங்களுக்கான விருதினை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு வழங்கியுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு, 2014 ஆம் ஆண்டு சுதந்திர தினத்தன்று இவ்விருதினை வழங்கினார்கள்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2016 ஆகஸ்ட் 5

3. மாநில அரசு திட்டங்கள்

3.1 தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் (தாய்) திட்டம்

பொதுவாக திட்டச் செயலாக்கம் மற்றும் நிதி ஒதுக்கீட்டிற்கு "கிராம ஊராட்சி"-யினையே அடிப்படை வளர்ச்சிக்கான அலகாகக் கொண்டு ஊரக வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி ஊரக வளர்ச்சித் துறைத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தற்போதுள்ள நடைமுறையைவிட ஒரு படி மேலாக, திட்டமிடுதல், நிதியளித்தல் மற்றும் திட்டச் செயலாக்கம் ஆகியவற்றிற்கு கிராம ஊராட்சியில் உள்ள குக்கிராமங்களை அலகாக எடுத்துத் திட்டங்களைச் செயல்படுத்தி வந்தது. அனைத்து குக்கிராமங்களுக்கும் சமமான நிதி ஆதாரம் வழங்கும் பொருட்டும், வள ஆதாரங்களை பகிர்ந்தளிப்பதில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளைக் களையும் நோக்கிலும், குறைந்தபட்ச அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் அனைத்து குக்கிராமங்களுக்கும் சென்றடையும் வகையிலும் ஒரு முன்னோடித் திட்டமாக "தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் (தாய்) திட்டம்" என்னும் புதிய திட்டம் 2011-12 ஆம் ஆண்டு முதல் இவ்வரசால் செயல்படுத்தப்பட்டது. தேசிய அளவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், தமிழகத்தில் மட்டும்தான் குக்கிராமங்களை வளர்ச்சி அலகாகக் கொண்டு முதன்முறையாக, இம்முன்னோடித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

தமிழகத்தில், சென்னை நீங்கலாக உள்ள 31 மாவட்டங்களில் 12,524 கிராம ஊராட்சிகள் உள்ளன. மொத்தமுள்ள 12,524 கிராம ஊராட்சிகளில் 79,394 குக்கிராமங்கள் உள்ள நிலையில், சராசரியாக ஒரு கிராம ஊராட்சியில் 6 குக்கிராமங்கள் உள்ளன. எனினும், கிராம ஊராட்சியில் உள்ள குக்கிராமங்களின் எண்ணிக்கை மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடுகிறது. நீலகிரி மாவட்டத்தில் ஒரு கிராம ஊராட்சியில் சராசரியாக 37 குக்கிராமங்களும், விழுப்புரம் மாவட்டத்தில் சராசரியாக 3 குக்கிராமங்களும் உள்ளன. பல்வேறு எண்ணிக்கையிலான குக்கிராமங்களைக் கொண்ட கிராம ஊராட்சிகளுக்குச் சம அளவிலான நிதி ஒதுக்கீடு அளித்தது, வளர்ச்சி நிலையில் வேறுபாட்டினையும், பொதுச் சொத்துகள் உருவாக்குவதில் மாறுபாட்டினையும் முன்னேற்றத்தில் ஏற்றத் தாழ்வுகளையும் உருவாக்கியது. எனவே, இந்த

2016 ஆகஸ்ட் 5]

வேறுபாடுகளைக் களையும் வகையிலும், சம அளவிலான நிதி மற்றும் அடிப்படை வசதிகளை உருவாக்கும் நோக்குடனும், தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டத்தில் "குக்கிராமங்கள்" அடிப்படை அலகாக எடுத்துக்கொள்ளப்பட்டது.

தமிழ்நாட்டில் உள்ள சில கிராம ஊராட்சிகளில் மக்கள் தொகை 500-க்குக் குறைவாகவும், சில ஊராட்சிகளில் மக்கள் தொகை 10,000-க்கு அதிகமாகவும் உள்ளது. குக்கிராமங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

அட்டவணை 3.1

குக்கிராமங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் கிராம ஊராட்சிகளை வகைப்படுத்துதல்

வ.எண்	குக்கிராமங்களின் எண்ணிக்கை	கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை
1.	5–க்கும் கீழ்	6,241
2.	5–15	5,434
3.	16–25	637
4.	26–50	189
5.	50–க்கு மேல்	23
	மொத்தம்	12,524

3.1.1 நிதி ஒதுக்கீடு

குக்கிராமங்களின் எண்ணிக்கையையும், ஊராட்சியில் உள்ள மக்கள்தொகையையும் ஒப்புநோக்கும்போது, குக்கிராமங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மக்கள் தொகையும் கூடுகிறது என்பது தெளிவாகிறது. அதிகமான குக்கிராமங்களை கொண்டுள்ள கிராம ஊராட்சிகளின் தேவைகளும் அதிகமான அளவில் இருக்கும். இதைக் கருத்திற்கொண்டு, நிதி ஒதுக்கீட்டிற்காக குக்கிராமங்களின் அடிப்படையில் கிராம ஊராட்சிகள் 5 பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதிக அளவிலான மக்கள் தொகையும், அதிக குக்கிராமங்களும் கொண்டுள்ள கிராம ஊராட்சிகள் அதிக அளவிலான நிதி ஒதுக்கீட்டினைப் பெறுகின்றன. பின்வரும் அட்டவணையே இதற்குச் சான்றாகும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[*2016 ஆகஸ்ட் 5*

அட்டவணை 3.2

‘‘தாய்’’ திட்டத்திற்குத் தேவைப்படும் நிதி

வ. எண்	குக்கிராமங்களின் எண்ணிக்கை	கிராம ஊராட்சி களின் எண்ணிக்கை	மொத்த மக்கள் தொகை (2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி)	ஒரு ஊராட்சிக்கான சராசரி மக்கள் தொகை	ஒரு ஊராட்சிக்கான ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்)		
					குறைந்தபட்ச அடிப்படை மானிய நிதி	கூடுதல் நிதி	மொத்த நிதி
1.	5—க்கும் கீழ்	6,241	1,25,34,047	2,008	20	0	20
2.	5—15	5,434	1,73,92,688	3,201	20	10	30
3.	16— 25	637	35,53,429	5,578	20	20	40
4.	26—50	189	15,57,132	8,239	20	30	50
5.	50—க்கு மேல்	23*	3,07,557	13,372	20	30	50
மொத்தம்		12524	3,53,44,853	2,822		—	—

** 23 கிராம ஊராட்சிகளில் 50-க்கும் மேற்பட்ட குக்கிராமங்கள் உள்ளன. இக்குக்கிராமங்களுக்கு மேலும் தேவைப்படும் பணிகளை கண்டறிந்து 2014-15 ஆம் ஆண்டிற்கான ஊரக வளர்ச்சித் துறையின்கீழ் செயல்படுத்தப்படும் பிற திட்டங்களின்மூலம் ஒருங்கிணைந்து செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.*

2011-12 ஆம் ஆண்டில் ரூ.680 கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டது. 2012-13 ஆம் ஆண்டு முதல் ஊரக குக்கிராமங்களில் தேவைப்படும் அடிப்படை உட்கட்டமைப்பினை நிறைவு செய்வதில் உள்ள இடைவெளிகளை (Infrastructural gaps) *நிரப்பிடும் நோக்கில் இத்திட்டத்திற்கான நிதியை ரூ.750 கோடியாக அரசு உயர்த்தியது. மேற்படி கூடுதல் நிதி ஒதுக்கீடான ரூ.70 கோடி “தாய்” திட்ட கிராமங்கள் மற்றும் அவற்றிற்கு அருகில் உள்ள கிராமச் சாலைகளை மேம்படுத்த ஒதுக்கீடு செய்யப்பட்டது.*

3.1.2 திட்டக் கூறுகள்

“தாய்” திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் பணிகள் மூன்று பிரிவுகளாக பின்வரும் அட்டவணையில் உள்ளபடி வகைப்படுத்தப்பட்டுள்ளன.

அட்டவணை 3.3

''தாய்'' திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் பணிகள்

வ. எண்	குறைந்த பட்ச அடிப்படை தேவைகள்	கூடுதல் தேவைகள்	இதர பணிகள்
1.	குடிநீர் விநியோகம்	அங்கன்வாடி மையம்	அனுமதிக்கப் பட்ட இதரப் பணிகள்
2.	தெரு விளக்குகள்	பொது விநியோகக் கடை	
3.	சாலைகள்	சுய உதவிக்குழு கட்டடம்	
4.	சுடுகாடு / இடுகாடு	கதிரடிக்கும் களம்	
5.	சுடுகாடு / இடுகாட்டிற்கு சாலை வசதிகள்	விளையாட்டு மைதானம்	

அட்டவணை 3.4

ஆண்டுவாரியான திட்ட செயலாக்கம்

ஆண்டு	கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை	குக்கிராமங்களின் எண்ணிக்கை	நிதி ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்)
2011–12	2020	25335	680.00
2012–13	2250	18581	750.00
2013–14	2500	15115	750.00
2014–15	2741	12095	750.00
2015–16	3013	8268	750.00
மொத்தம்	12,524	79,394	3680.00

3.1.3 சாதனைகள்

2011-12 ஆம் ஆண்டு முதல் 2015-16 ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தின்கீழ் 51,178 குடிநீர் பணிகளான மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், சிறுமின்விசை இறைப்பான்கள், தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் கைப்பம்புகள், 1,05,714 தெரு விளக்குகள், 47,491 சிமெண்ட் மற்றும் தார்ச் சாலைப் பணிகள், 23,302 சுடுகாடு/இடுகாடு மற்றும் சுடுகாடு/இடுகாட்டிற்கு சாலை வசதி செய்தல், 610 பொது விநியோகக் கடைகள், அங்கன்வாடிகள், சுய உதவிக்குழு கட்டடங்கள், கதிரடிக்கும் களம் மற்றும் விளையாட்டு மைதானம் ஆகிய அத்தியாவசிய கூடுதல் பணிகள் மற்றும் 3153 இதரப் பணிகள் ஆகமொத்தம் 2,31,769 பணிகள் ரூ.3680 கோடி மதிப்பீட்டில் மாநிலத்திலுள்ள 79,394 குக்கிராமங்களிலும் மேற்கொள்ளப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

[2016 ஆகஸ்ட் 5

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் கிராம ஊராட்சிகளில் உள்ள குக்கிராமங்களில் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை நிலைத்த தன்மையுடன் உருவாக்கிடவும், மேம்பாடு செய்திடவும் தாய் திட்டத்தினை மேலும் 5 ஆண்டுகளுக்கு 2016-17 முதல் 2020-21 வரை நீட்டித்து செயல்படுத்திட தீர்மானித்துள்ளார்கள்.

3.2 முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடு திட்டம்

முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடு திட்டம் ஊரகப் பகுதிகளில் வசிக்கும் ஏழைகளின் வீடுகளுக்கான தேவையை நிறைவு செய்யும் பொருட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்ட தமிழக அரசின் முன்னோடி திட்டம் ஆகும். நமது நாட்டிலேயே 2011-12 ஆம் ஆண்டில் 300 சதுர அடி பரப்பளவில் ரூ.1.80 இலட்சம் அலகுத் தொகையில், மாநில அரசின் முழு நிதி உதவியுடன் சூரிய மின்சக்தி விளக்குகளுடன்கூடிய வீடுகள் வழங்குவது இதுவே முதன் முறையாகும்.

அதன்படி, அரசு ஆணை (நிலை) எண் 46, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(மாஅதி-1)த் துறை, நாள் 17-08-2011-ன் வழியாக 2011-12 ஆம் ஆண்டு முதல் அடுத்து வரும் 5 ஆண்டுகளில், ஆண்டிற்கு 60,000 வீடுகள் வீதம் 3 இலட்சம் வீடுகள் கட்ட அரசு ஆணையிட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 09-04-2013 அன்று சட்டமன்றப் பேரவையில் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மக்களின் வேண்டுகோளுக்கிணங்க “முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடு திட்டத்திற்கான அலகுத் தொகை ரூ.1.80 இலட்சத்திலிருந்து ரு.2.10 இலட்சமாக 2013-14 ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தப்படும்” என அறிவித்தார்கள். இதில் ரூ.1.80 இலட்சம் வீடு கட்டுவதற்கும், ரூ.30,000/-சூரிய மின்சக்தி விளக்குகள் அமைக்க தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமைக்கும் நேரடியாக வழங்கப்படும். இம்முகமையானது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர்களுடன் ஒருங்கிணைந்து இப்பணியினை மேற்கொள்ளும்.

2016 ஆகஸ்ட் 5]

3.2.1 இத்திட்டத்தின் சிறப்பம்சங்கள்

- *ஊரகப் பகுதிகளில் வறுமைக்கோட்டிற்குகீழ் வாழும் மக்கள் அனைவரும் சூரிய மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் பெற தகுதியானவர்கள்.*

- *ஒவ்வொரு வீடும் 300 சதுர அடி பரப்பளவில், ரூ.2.10 இலட்சம் அலகுத் தொகையுடன் மாநில அரசின் முழு நிதி உதவியுடன் கட்டப்படுகிறது.*

- *ஒவ்வொரு வீடும், வசிக்கும் அறை, படுக்கை அறை, சமையல் அறை, கழிப்பறை மற்றும் தாழ்வாரம் ஆகிய வசதிகள் மற்றும் மழைநீர் சேகரிப்பு அமைப்புடன் கட்டப்படுகிறது.*

- *ஒவ்வொரு வீட்டிலும் சூரிய ஒளி சக்தியில் எரியும் 5 அடர்குறு விளக்குகள் அமைக்கப்படும். இவை படுக்கை அறை, வசிக்கும் அறை, சமையல் அறை, கழிப்பறை மற்றும் தாழ்வாரம் ஆகிய பகுதிகளில் ஒரு விளக்கு வீதம் அமைக்கப்படும். பயனாளிகளின் விருப்பத்தின்படி தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்து மின் இணைப்பு பெறும் விருப்பத்திற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.*

- *சூரிய சக்தி விளக்குகள் அமைக்கும் பணியினை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை செயல்படுத்தும்.*

- *பசுமை வீடுகள், பயனாளிகளின் குடியிருப்பு அமைந்துள்ள இடம் (அவர்/அவளின் வசிப்பிடத்தை மாற்றியமைத்து) அல்லது கிராம ஊராட்சியின் பிற பகுதியில் அமைந்துள்ள பயனாளிக்குச் சொந்தமான இடங்களில் கட்டித் தரப்படும். மேலும், இத்திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டப்படுவதற்கென நில எடுப்புகள் ஏதும் செய்யப்படமாட்டாது. வீட்டுமனைப் பட்டா அல்லது சரியான நில உரிமை உள்ளவர்கள் மட்டுமே இத்திட்டத்தின்கீழ் வீடு பெறத் தகுதியானவர்கள் ஆவர்.*

[2016 ஆகஸ்ட் 5

3.2.2 தூய்மை பாரத இயக்கம் (கிராமின்) (SBM(G)) / மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டங்களுடன் ஒருங்கிணைப்பு

i. *மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து ஒரு பயனாளிக்கு தினக்கூலி அடிப்படையில் 90 மனித நாட்களுக்கான ஊதியம் அளிக்கப்பட வேண்டும்.*

ii. *தூய்மை பாரத இயக்கம் (கிராமின்)* (SBM(G)) *திட்டத்துடன் ஒருங்கிணைந்து கழிப்பறை கட்ட ரூ.12,000/- வழங்கப்பட வேண்டும்.*

3.2.3 பயனாளிகளின் தகுதிகள்

பயனாளிகள் கீழ்க்கண்ட தகுதிகளை பெற்றிருக்க வேண்டும்:-

- *சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சியில் வசிப்பவராக இருக்க வேண்டும்.*
- *சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சியில் உள்ள வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களின் நிரந்தர காத்திருப்போர் பட்டியலில் இடம் பெற்றிருக்க வேண்டும்.*
- *300 சதுர அடிக்கு குறையாத வீட்டுமனை இடத்திற்கு சொந்தக்காரராக இருக்க வேண்டும்.*
- *குடும்பத் தலைவரின் பெயரிலோ அல்லது குடும்ப உறுப்பினரில் எவரேனும் ஒருவர் பெயரிலோ வில்லங்கமற்ற வீட்டுமனைப் பட்டா இருக்க வேண்டும்.*
- *தொடர்புடைய கிராம ஊராட்சியில் அல்லது வேறு எங்கும் கான்கிரீட் கூரை போடப்பட்ட சொந்த வீடு எதுவும் இருக்கக் கூடாது.*
- *அரசின் இதர வீடு கட்டும் திட்டங்களில் பயன்பெற்றவராக இருக்கக் கூடாது.*

3.2.4 பயனாளிகள் தேர்வு செய்யும் முறை

- *ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளோரின் நிரந்தர காத்திருப்புப் பட்டியல் தயாரிக்கப்பட்டு, அதில் மிகவும் வறிய நிலையில் உள்ளோர் தேர்வு செய்யப்பட வேண்டும்.*

2016 ஆகஸ்ட் 5]

- *மொத்தம் 60,000 வீடுகளில், 17,400 வீடுகள் அதாவது 29 விழுக்காடு ஆதி திராவிடர்களுக்கும், 600 வீடுகள் அதாவது 1 விழுக்காடு பழங்குடியினர்களுக்கும், மீதமுள்ள 42,000 வீடுகள் அதாவது 70 விழுக்காடு இதர இனங்களுக்கும் (ஆதி திராவிடர், பழங்குடியினர் அல்லாதோர்) வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள கிராமப்புற மக்களுக்கு வழங்கப்பட வேண்டும்.*

- *மாவட்ட வாரியான ஒதுக்கீட்டில் 3 விழுக்காடு மாற்றுத் திறனாளிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.*

- *பயனாளிகள் பட்டியல் தயாரிக்கப்படும்போது, மாற்றுத் திறனாளிகள், விதவைகள், ஆதரவற்ற மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், பெண்களைத் தலைவராகக் கொண்ட குடும்பங்கள், முன்னாள் இராணுவத்தினர் மற்றும் முன்னாள் துணை இராணுவ படையினர்,* ICDS *துறையினரால் அடையாளம் காணப்பட்ட கிராமப் பகுதிகளில் வாழும் ஊட்டச்சத்து குறைவினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளைக் கொண்ட குடும்பங்கள், திருநங்கைகள்,* HIV/AIDS/TB *ஆகிய நோய்களால் பாதிக்கப்பட்டு, துணை இயக்குநர் (மருத்துவப் பணிகள்) சான்றிதழ் பெற்றவர்கள், வெள்ளம், தீ விபத்து போன்ற இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும். மேலும், மனநலம் குன்றியோர் உள்ள குடும்பங்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படவேண்டும்.*

- *கிராம ஊராட்சிகள் வறுமைக் கோட்டிற்குக்கீழ் இருக்கும் தகுதியுள்ள பயனாளிகளின் பட்டியலை தயார் செய்து கிராம சபையின் ஒப்புதலுக்காக வைக்கவேண்டும்.*

- *பயனாளிகள் தேர்வு, வீடுகள் ஒதுக்கீடு, கட்டுமானப் பொருட்கள் விநியோகம் மற்றும் இத்திட்டம் தொடர்பான நடைமுறைபடுத்தப்படும் வழிகாட்டு நெறிமுறைகள் அரசாணை (நிலை) எண் 64, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(மாஅதி-1) துறை, நாள் 24-4-2015-யில் உள்ளது. இதனை* http://tnrd.gov.in/scheme/stcmspghs.php *என்ற இணையதள முகவரியில் காணலாம்.*

[2016 ஆகஸ்ட் 5

3.2.5 முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன்கூடிய பசுமை வீடு திட்ட சாதனைகள்

2011-12 முதல் 2015-16 ஆம் ஆண்டு வரை ரூ.5,940 கோடி மதிப்பீட்டில் 3 இலட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டம், 2016-17 முதல் 2020-21 வரையுள்ள அடுத்த 5 ஆண்டுகளுக்கும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். 2016-17 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.420 கோடியில் 20,000 வீடுகள் கட்டப்படும்.

3.3 நெசவாளர்களுக்கான முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் திட்டம்

ஊரகப் பகுதிகளில் வசிக்கும் நெசவாளர்கள் பயன்பெறும் வகையில் 2013-14 ஆம் ஆண்டில் 10,000 வீடுகள் கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண் 231, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் (டி2) துறை, நாள் 22-10-2013-ன்படி, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறையினரால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டுமானப் பணிகள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைமூலம் மேற்கொள்ளப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு வீடும் 365 சதுர அடி பரப்பளவில் ரூ.2.60 இலட்சம் அலகுத் தொகையில் கட்டப்படும். இதில் ரூ.2.30 இலட்சம் வீட்டின் கட்டுமானப் பணிக்கும், ரூ.30,000 சூரிய மின்சக்தி விளக்குகள் அமைப்பதற்கும் பயன்படுத்தப்படும். மொத்தமுள்ள 10,000 வீடுகளும் ரூ.260 கோடி ஒதுக்கீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

3.4 தானே வீடு வழங்கும் திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சரால் "தானே" புயலால் பாதிக்கப்பட்ட இடர்பாடுகளை குறைக்க வீடுகளை இழந்த மக்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்க ஆணையிடப்பட்டதன் பேரில் தானே புயலால் முழுமையாக சேதமடைந்த வீடுகளை மாற்ற ரூ.1,000 கோடி நிதி ஒதுக்கிட்டில் கடலூர் (90,000) மற்றும் விழுப்புரம்

2016 ஆகஸ்ட் 5]

(10,000) மாவட்டங்களுக்கு ரூ.1 இலட்சம் அலகு தொகையில் 1 இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்ட "தானே வீடு வழங்கும் திட்டம்" தொடங்கப்பட்டு வீடுகள் கட்டப்பட்டன.

3.5 ஊரக உட்கட்டமைப்பு – சாலைகள்

தமிழ்நாட்டிலுள்ள மொத்த இணைப்புச் சாலைகளில், கிராமச் சாலைகளின் பங்கு 86 விழுக்காடு ஆகும். வாழ்வாதார வாய்ப்புகள், கல்வி, சுகாதாரம் மற்றும் சந்தைகளைச் சென்றடைய வழிவகுப்பதன்மூலம், கிராமங்களது சமூகப் பொருளாதார மாற்றத்திற்கான காரணியாக கிராமச்சாலைகள் விளங்குகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஊரகச் சாலைத் தொகுப்பினை மேம்படுத்தி அதன்மூலம், மாநிலத்தின் தொலைதூரப் பகுதிகளுக்கும் சாலை வசதியினை உறுதிப்படுத்தும் தொலைநோக்குப் பார்வையினை கொண்டுள்ளார்கள்.

3.5.1. மேம்படுத்தப்பட்ட புள்ளிவிவரங்கள் (Strengthening of Database)

i. *ஊரகச் சாலைகளின் தொகுப்பு முறைப்படுத்தப்பட்டு நாளது வரை சரி செய்யப்பட்டதன்மூலம், 2011-க்கு முன்னர் 1.03 இலட்சம் கி.மீ. ஆக இருந்த சாலைத் தொகுப்பின் நீளம், 2015-16 ஆம் ஆண்டில் 1.47 இலட்சம் கி.மீ. நீளமாக அதிகரித்துள்ளது.*

ii. *ஒவ்வொரு கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தனி 'சாலைக் குறியீடு' வழங்கப்பட்டுள்ளது.*

iii. *ஒவ்வொரு பேருந்து செல்லும் சாலைக்கும் தனி "பேருந்து தட குறியீடு" வழங்கப்பட்டுள்ளது.*

iv. *கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளின் முழு விவரப் பட்டியல், www.tnrd.gov.in என்ற வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.*

கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளின் விவரங்கள் பின்வருமாறு:

[2016 ஆகஸ்ட் 5

அட்டவணை 3.5

கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள்

வ. எண்	மேற்பரப்பு வகை	கிராம ஊராட்சி சாலை	ஊராட்சி ஒன்றிய சாலை	மொத்தம்
		நீளம் (கி.மீ)		
1.	தார்ச் சாலை	66,727	29,189	**95,916**
2.	சிமெண்ட் சாலை	2,633	274	**2,907**
3.	ஈரடுக்கு கப்பி சாலை	2,148	244	**2,392**
4.	ஓரடுக்கு கப்பி சாலை	7,249	514	**7,763**
5.	சரளைக்கல் சாலை	5,947	266	**6,213**
6.	மண் சாலை	31,254	1,098	**32,352**
	மொத்தம்	**1,15,958**	**31,585**	**1,47,543**

3.5.2 கொள்கை முன்முயற்சிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஊரகச் சாலைகள் மேம்பாட்டிற்காக பல்வேறு சாலைத் திட்டங்களை இணைத்து, தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒட்டுமொத்த திட்டத்தினை அறிவித்தார்கள்.

இத்திட்டம், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு, ஊரகச் சாலை மேம்பாட்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்வதில் நெகிழ்தன்மை அளிக்கிறது. 2015-16 ஆம் ஆண்டில், தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை மேம்படுத்த 800 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில், 50% மக்கள்தொகை அடிப்படையிலும், மீதமுள்ள 50% மாவட்டத்தில் உள்ள சாலைகள் தொகுப்பின் நீளத்தின் அடிப்படையிலும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டம் இரண்டு பிரிவுகளாக செயல்படுத்தப்படுகிறது.

2016 ஆகஸ்ட் 5]

பிரிவு–I

தார் இடப்படாத சாலைகளை 400 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் தார்ச் சாலைகளாக மேம்பாடு செய்தல்.

பிரிவு–II

ஏற்கெனவே உள்ள பழுதடைந்த தார்ச் சாலைகளை 400 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் வலுப்படுத்துதல் மற்றும் பழுதடைந்த தார்ச் சாலைகளை பராமரித்தல். இப்பிரிவின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதியில், குறைந்தபட்சம் 50% பேருந்து செல்லும் சாலைகளுக்காகவும், 25%-க்கு குறைவில்லாமல் சாலை பராமரிப்பிற்காகவும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

ஆக மொத்தம், 4,225 கி.மீ. நீளமுள்ள 2,387 சாலைகள் 800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டத்தின்கீழ் மேம்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டம் 2016-17 ஆம் ஆண்டிலும் தொடரும்.

அட்டவணை 3.6

திட்ட வாரியாக கடந்த 5 ஆண்டுகளில் எடுக்கப்பட்ட சாலைப் பணிகளின் விவரம்:

வ.எண்	திட்டத்தின் பெயர்	நீளம் (கி.மீ)	தொகை (ரூ. கோடியில்)
1.	தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டு (தாய்) திட்டம்	7,170.29	1,167.38
2.	நபார்டு–ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி	5,522.51	1,252.21
3.	பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்	2,818.28	1,160.78
4.	தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்	4225.10	800.00
5.	ஊரக உட்கட்டமைப்புத் திட்டம்	4,318.92	616.67
6.	பேருந்து செல்லும் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்	1,399.28	300.00
7.	பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு தார்ச் சாலை அமைத்தல்	429.87	37.50
8.	மாநில நிதிக் குழு மானியம்	1,552.46	304.30
9.	ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதி	1,191.46	406.73

[2016 ஆகஸ்ட் 5

வ.எண்.	திட்டத்தின் பெயர்	நீளம் (கி.மீ)	தொகை (ரூ. கோடியில்)
10.	13–வது நிதிக் குழு மானியம்	6,573.13	622.00
11.	ஊரகச் சாலைகள் பராமரிப்புத் திட்டம்	3,649.19	381.07
12.	சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்	1,175.11	187.66
13.	பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்	660.52	106.70
14.	இதர திட்டங்கள்	5,848.78	1,442.85
	மொத்தம்	**46,534.90**	**8,785.85**

3.5.3 பசுமை முன்முயற்சிகள்

பிளாஸ்டிக் கழிவுகளை பாதுகாப்பான முறையில் அகற்றுவதை உறுதிப்படுத்தும்வகையில், இத்துறை, பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி தார்ச் சாலைகள் அமைப்பதை அதிக அளவில் மேற்கொண்டு வருகிறது. மொத்தம், 1,285.17 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 9,650.08 கி.மீ. நீளமுள்ள சாலைகள், பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி இதுவரை அமைக்கப்பட்டுள்ளன. பிளாஸ்டிக் கழிவுகளை சேகரிப்பதற்கான மையங்கள், 1.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 31 மாவட்டங்களிலும் நிறுவப்பட்டுள்ளன.

3.5.4 வடிவமைப்பு பிரிவு

இத்துறையின்மூலம் சமீபகாலமாக பல உயர் மதிப்புப் பாலங்கள் மற்றும் கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதைக் கருத்திற்கொண்டு, மாநில அளவில் ஒரு வடிவமைப்பு பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. இப்பிரிவு அனைத்து உயர் மதிப்புப் பணிகளுக்கான வடிவமைப்பு தொடர்பான ஆவணங்களை கூர்ந்தாய்வு செய்தல் மற்றும் பல்வேறு வகையான கட்டடங்களின் மாதிரி வடிவமைப்பினை தயார் செய்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது.

3.5.5 தொழில்நுட்ப முன்முயற்சிகள்

இத்துறை, சாலைப் பணிகளின் நிகழ்நேர கண்காணிப்பை, நுண்ணறிவு கைபேசிமூலம் பதிவேற்றம் செய்ய ஒரு

சட்டமன்ற LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மென்பொருளை உருவாக்கியுள்ளது. இந்த நுண்ணறிவு கைபேசியினால் புவிசார் இடம் காட்டும் புகைப்படங்களுடன்கூடிய பணியின் நிலையினை எவ்வித காலதாமதமுமின்றி பணித்தளத்திலிருந்தே பதிவேற்றம் செய்ய வழிவகை செய்கிறது.

3.5.6 தரக் கட்டுப்பாடு

தரக் கட்டுப்பாட்டிற்குத் தேவையான சரிபார்ப்பு முறைகளை வெளிப்படையானவகையில் வழங்கும் பொருட்டு, இத்துறை சுதந்திரமான மூன்றாம் தரப்பு தரக்கட்டுப்பாட்டு முறையை செயல்படுத்த, மாநில தரக்கட்டுப்பாடு கண்காணிப்பாளராக ஓய்வு பெற்ற பொறியாளர்களை ஈடுபடுத்தியுள்ளது. இவர்கள் மாதந்தோறும் மாவட்டங்களில் நடைபெறும் பணிகளை ஆய்வு மேற்கொண்டு அதற்கான அறிக்கையினை சமர்ப்பிப்பார்கள். தரக்கட்டுப்பாடு கண்காணிப்பாளர்களின் ஆய்வு குறிப்புகளின்மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அவ்வப்பொழுது சீராய்வு செய்யப்படுகிறது.

பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளின் தரத்தை ஆய்வு செய்ய, தேசிய கிராமச் சாலைகள் மேம்பாட்டு நிறுவனமும், தேசிய தரக் கட்டுப்பாடு கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்தி வருகின்றது.

இந்த அரசு, ஊரகச் சாலைகளின் தரத்தை மேலும் ஊக்குவிக்கும்பொருட்டு, 5 மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனங்களில் தரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் மற்றும் 5 நடமாடும் தரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் ஆகியவற்றை அமைக்க 5.60 கோடி ரூபாயினை ஒதுக்கீடு செய்துள்ளது. கள ஆய்வு மேற்கொள்வதற்குத் தேவையான அனைத்து பரிசோதனைக் கருவிகளும் இவ்வாய்வகங்களில் இருக்கும்.

3.5.7 நபார்டு–ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி (NABARD-RIDF)

மாநில அரசுகள் செயல்படுத்தும் ஊரக உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதி வழங்கிட நபார்டு வங்கியின்கீழ், "ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி"-யினை மத்திய அரசு அமைத்துள்ளது.

[2016 ஆகஸ்ட் 5

நபார்டு – ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி XX (2014–15)

நபார்டு-ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி XX-ன்கீழ், 1,183 கி.மீ. நீளமுள்ள 589 சாலைப் பணிகள் மற்றும் 26 பாலங்கள் 339.61 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

நபார்டு – ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி XXI (2015–16)

நபார்டு-ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி XXI-ன்கீழ், 372.74 கி.மீ. நீளமுள்ள 193 சாலைப் பணிகள் மற்றும் 41 பாலங்கள் 162.76 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

கடந்த 5 ஆண்டுகளில் நபார்டு திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட பணிகளின் விவரம் பின்வருமாறு:

அட்டவணை 3.7

கடந்த 5 ஆண்டுகளில் நபார்டு திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட பணிகளின் விவரம்

வ. எண்	ஆண்டு	எண்ணிக்கை	நீளம் (கி.மீ)	மதிப்பு (ரூ. கோடியில்)
1.	2011–12	958	2,598.65	451.77
2.	2012–13	381	1,000.46	198.07
3.	2013–14	185	367.63	100.00
4.	2014–15	615	1183.03	339.61
5.	2015–16	234	372.74	162.76
	மொத்தம்	2373	5,522.51	1252.21

3.5.8. மாநில உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதி

நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநரால், மாநில உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதி நிருவகிக்கப்படுகிறது. குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள் மற்றும் தொழில் துறை கட்டடங்களில் இருந்து உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் கட்டணம் 2007 ஆம் ஆண்டில் இருந்து சேகரிக்கப்படுகிறது. இந்நிதி குடிநீர் விநியோகம், சாலைகள், வடிகால் வசதிகள் மற்றும்

2016 ஆகஸ்ட் 5]

மெட்ரோ இரயில் போன்ற வசதிகளின் தொடர்ச்சியான வளர்ச்சியினை உறுதிசெய்ய தேவையான திட்டங்களை செயலாக்க பயன்படுத்தப்படுகிறது.

கடந்த 2014-15 ஆம் ஆண்டில், 9 மாவட்டங்களில், 69.12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 53 பாலங்கள் கட்ட உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதியின்கீழ் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2015-16 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் 13 பணிகள் 3.21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

3.6. ஒருங்கிணைந்த பள்ளிகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை செய்திட அதிக முன்னுரிமை அளித்து வருகிறார்கள். அதன்படி இந்த அரசு, 2011-12 ஆம் ஆண்டு முதல் ஒருங்கிணைந்த பள்ளிகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம் ஊரகப் பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளான புதிய வகுப்பறைகள், சமையல் கூடங்கள், குடிநீர் வழங்குதல், கழிப்பறைகள் இதர பிற வசதிகள் ஏற்படுத்தப்படும். பழுதுபார்த்தல்/புதுப்பித்தல் ஆகிய பணிகளும் மேற்கொள்ளப்படும். மேலும், இத்திட்டம் பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலும் செயல்படுத்தப்படும்.

பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப புதிய கட்டடங்கள் எடுத்துக்கொள்ளப்படும். புதிய பள்ளிக் கட்டடங்கள் அனைத்தும், தட்டோடு பதித்த கான்கிரீட் கூரைகளுடன் தண்ணீர் கசியாதவகையில் கட்டப்படும். பள்ளிக் கட்டடம் கட்டத் தேவையான காலி இடம் இல்லாத நிலையில், ஏற்கெனவே உள்ள கான்கிரீட் பள்ளிக் கட்டடத்தின் உறுதித் தன்மையை சரிபார்த்து அதன் மேல் தளத்தில் புதிய கட்டடம் அமைக்கப்படும்.

சமையலறை இல்லாத ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் புதிய சமையலறைகள் அமைக்கப்படும். சமையலறைக் கூடங்கள் பழுதடைந்த நிலையில் இருப்பின், பழுது பார்த்தல்/புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளப்படும்.

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

புதிய சமையல் அறைக் கட்டடங்கள் உணவுப் பொருட்களை இருப்பு வைத்துக்கொள்ளும் கூடுதல் அறைகளுடன் எடுத்துக்கொள்ளப்படும். அவசியமான இடங்களில் தேவையின் அடிப்படையில் பழுதுபார்த்தல் மற்றும் குடிநீர் குழாய் நீட்டிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும், தேவைப்படும் இடங்களில் புதிய குடிநீர் இணைப்புகள் ஏற்படுத்தப்படும்.

அனைத்து ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலும் பயிலும் மாணவ மாணவிகளுக்குத் தனித்தனியாக, போதுமான அளவில் கழிப்பறைகள் அமைப்பதை இந்த அரசு உறுதி செய்துள்ளது. மாணவிகளின் வசதிக்காக எரியூட்டிகள் (Incinerator) அமைக்கப்பட்டுள்ளன. மேலும், மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் பள்ளிகளில் சுற்றுச்சூழல் சுகாதாரத்தை மேம்படுத்தும்வகையில் பள்ளிகளுக்கு சுற்றுச் சுவர் கட்டும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3.6.1 திட்ட செயலாக்கம் 2011 – 12 முதல் 2015 – 16 வரை

2011-2012 முதல் 2015-16 வரை இத்திட்டத்திற்காக ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மொத்தம் 48,011 பணிகள் எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. ஆண்டு வாரியான பணிகளின் விவரம் கீழ்க்கண்டவாறு:

அட்டவணை 3.8

வ. எண்	பணிகளின் விவரம்	பணிகளின் எண்ணிக்கை					
		2011–12	2012–13	2013–14	2014–15	2015–16	கூடுதல்
புதிய பணிகள்							
1.	பள்ளிக் கட்டடம்	155	58	113	84	152	562
2.	சமையல் கூடம்	1049	618	232	107	41	2047
3.	கழிப்பறை	847	523	563	375	302	2610
4.	குடிநீர் வழங்கல்	2217	893	1267	924	455	5756
5.	சுற்றுச் சுவர்	9	1191	544	1108	571	3423
துணை மொத்தம்		4277	3283	2719	2598	1521	14398

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2016 ஆகஸ்ட் 5]

பழுதுபார்ப்பு பணிகள்							
1.	பள்ளிக் கட்டடம்	1228	2063	3536	4590	4664	16081
2.	சமையல் கூடம்	1397	1189	1099	839	652	5176
3.	கழிப்பறை	3516	2534	2686	2024	1596	12356
துணை மொத்தம்		6141	5786	7321	7452	6912	33613
பெரு மொத்தம்		10418	9069	10040	10051	8433	48011

மேலும், இத்திட்டம் 2016-17 ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்படும்.

3.7 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

சட்டமன்ற உறுப்பினர் ஒவ்வொருவரும் தங்களது தொகுதியின் உட்கட்டமைப்புத் தேவைகளைக் கண்டறிந்து, அதன் அடிப்படையில் நிறைவேற்ற வேண்டிய பணிகளை இத்திட்டத்தின்கீழ் பரிந்துரை செய்வர். இத்திட்டம் ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில், ஒவ்வொரு தொகுதிக்கும், ஒவ்வொரு ஆண்டிற்கும் ரூ.2.00 கோடி வழங்கப்பட்டு வருகிறது.

தேர்வு செய்யப்பட்ட பணிகளுக்கு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் நிருவாக அனுமதி வழங்கி செயல்படுத்தும் முகமையினை நிர்ணயிப்பார். தொகுதிக்கான மொத்த ஒதுக்கீட்டில் ரூ.1.10 கோடி நிதியை அரசால் குறிப்பிடப்பட்ட முன்னுரிமைப் பணிகளுக்கும், மீதமுள்ள ரூ.90 இலட்சம் நிதியினை சட்டமன்ற உறுப்பினர் தனது விருப்பப்படி திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் குறிப்பிட்டுள்ள பணிகளுக்காகவும் ஒதுக்கீடு செய்யலாம்.

3.7.1 சிறப்பம்சங்கள்

வரையறுக்கப்பட்ட நிதித் தொகையான ரூ.1.10 கோடியில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள்

1.	ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள பள்ளிகளுக்கான (மாநகராட்சி/நகராட்சி/ ஊராட்சி ஒன்றியம்/அரசு பள்ளிகள் மட்டும்) கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணி	:	ரூ.25.00 இலட்சம்

[2016 ஆகஸ்ட் 5

2.	ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் அங்கன்வாடிக் கட்டடங்கள், சத்துணவு மையக் கட்டடங்கள், சத்துணவு சமையற்கூடங்கள் கட்டுதல் அங்கன்வாடி சமையல் அறையை நவீனப்படுத்துதல்	:	ரூ.20.00 இலட்சம்
3.	குடிநீர் வழங்கல் பணிகள்	:	ரூ.15.00 இலட்சம்
4.	சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்தம் விருப்பத்தின் அடிப்படையில் தடைசெய்யப்பட்ட பணிகள் நீங்கலாக கீழ்க்கண்டவாறு பணிகளைத் தேர்வு செய்யலாம்.	:	ரூ.50.00 இலட்சம்

ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில்

1. ஊரகப் பகுதிகளில் சூரிய சக்தி தெரு விளக்குகள் நிறுவுதல்/அரசு கட்டடங்களின் கூரை மேல் சூரிய ஒளி சக்தி நிறுவுதல்/நகர்ப்புறங்களில் LED தெரு விளக்குகள் அமைத்தல்.

2. சரளை மற்றும் கப்பிச் சாலைகளை தார்ச் சாலையாக மேம்படுத்துதல்.

3. மிகவும் பழுதடைந்துள்ள தார்ச் சாலைகளைப் புதுப்பித்தல் (தேவையின் அடிப்படையில் சாலையில் உள்ள பள்ளங்களை நிரப்பி தார்ச் சாலைப் பணி மட்டும் மேற்கொள்ளல்).

4. சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல்.

5. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்பு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கால்நடை மருத்துவமனைகள், அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள் மற்றும் அரசு விடுதிகள், அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் அரசு பல்தொழில் பயிலகங்கள் ஆகியவைகளுக்கு கட்டடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டுதல்.

6. மாற்றுத் திறனாளிகளுக்காக அரசு நடத்தும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு ஆதரவற்றோர் விடுதிகள் ஆகியவைகளுக்கு உள்கட்டமைப்பு வசதி செய்தல்.

2016 ஆகஸ்ட் 5]

7. பாலங்கள் கட்டுதல்

8. இடுகாடு மற்றும் சுடுகாடு வசதி இல்லாத கிராம ஊராட்சிகளில் கூடுதலாக இவ்வசதிகளை அமைத்தல். நகர்ப்புற பகுதிகளில் அமைந்துள்ள சுடுகாடு/இடுகாடுகளில் சுற்றுச் சுவர் மற்றும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.

9. வக்ஃப் வாரியத்தில் (Wakf Board) பொது சொத்தாக பதிவு செய்யப்பட்ட மயானங்களுக்கு சுற்றுச்சுவர்/வேலி அமைத்தல். தற்போது வக்ஃப் வாரியத்திற்கென பொறியியல் பிரிவு இல்லை என்பதால், இப்பணிகளை மேற்கொள்ள தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்படைப்பு செய்யப்படுகிறது.

10. பொது விநியோகக் கடைகளுக்கு கட்டடங்கள் கட்டுதல்.

11. உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொத்துகளாக இருக்கும்வகையில் உபகரணங்களுடன்கூடிய உடற்பயிற்சிக் கூடம்/ஜிம்னாசியம் கட்டடங்கள் கட்டுதல்.

ஊரகப் பகுதிகளில் மேற்குறிப்பிட்ட பணிகளுடன் கூடுதலாக பெண்கள் மற்றும் ஆண்களுக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் கட்டும் பணிகளையும் மேற்கொள்ளலாம்.

நகர்ப்புற பகுதிகளில் மேற்குறிப்பிட்ட பணிகளுடன் கூடுதலாக, மழைநீர் வடிகால் வசதிகளுடன்கூடிய சிமெண்ட் கான்கிரீட் நடைபாதைகள் அமைத்தல், புதிய பொதுப் பூங்காக்கள் அமைத்தல், பொதுக் கழிப்பிடங்கள் கட்டுதல், ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் ஹைட்ராலிக் விசையால் இயக்கப்படுகின்ற கழிவகற்றும் இயந்திரங்களை வாங்குதல் ஆகிய பணிகளையும் மேற்கொள்ளலாம்.

வரையறுக்கப்படாத தொகையான ரூ.90 இலட்சத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள்

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தடை செய்யப்பட்ட பட்டியலில் உள்ள கீழ்க்கண்ட பணிகளைத் தவிர, ஏனைய பணிகளை வரையறுக்கப்படாத திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (பயணிகள் நிழற் குடை அமைப்பது இக்கூறில் எடுத்துச்செய்ய அனுமதிக்கப்படுகிறது).

[2016 ஆகஸ்ட் 5

தடை செய்யப்பட்ட பணிகள்

1. மத்திய, மாநில அரசுத் துறைகள், பொதுத் துறை நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் சங்கங்கள் ஆகியவைகளுக்கான அலுவலக கட்டடங்கள் மற்றும் வசிப்பிடங்கள் கட்டுதல். விதிவிலக்கு (i) நேரடிக் கொள்முதல் நிலையங்கள், கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கக் கட்டடங்கள், மொத்த குளிர்பதன மையக் கட்டடங்கள். (ii) அரசாணை நிலை எண் 179 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி) துறை நாள் 19-12-2013-ன்படி மொத்த மதிப்பீட்டு தொகை ரூ213.15 இலட்சத்தில் 84 சட்டமன்ற உறுப்பினர்கள் அலுவலகங்களுக்கு சுற்றுச்சுவர் கட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.
2. தனி நபர்/குடும்பப் பயனுக்காக சொத்துக்களை உருவாக்குதல், (விதிவிலக்கு இந்திரா நினைவு குடியிருப்புத் திட்ட வழிகாட்டுதலின்படி பேரூராட்சிகளில் புதிய வீடுகள் கட்டுதல்).
3. அனைத்து வகையான பராமரிப்பு, பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளுதல். விதிவிலக்கு - அரசுத் திட்டங்களான இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், தாட்கோ திட்டம் மற்றும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின்மூலம் 31-12-2006 வரை கட்டப்பட்ட வீடுகளை வீடு ஒன்றுக்கு ரூ.50,000/-க்கு மிகாமல் பழுது நீக்கும் பணிகளை மேற்கொள்ளுதல். இருப்பினும், இப்பணிகளை எடுத்துக்கொள்ளும் முன்னர் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் மற்றும் தாட்கோ நிறுவனத்திடமிருந்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.
4. அசையும் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தளவாடச் சாமான்கள் வாங்குதல்-விதிவிலக்கு (i) அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள், அரசு தங்கும் விடுதிகள், அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கால்நடை மருத்துவமனைகள், அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் அரசு பல்தொழில் பயிலகங்கள் ஆகியவற்றிற்கு தளவாடச் சாமான்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல். (ii) மாற்றுத் திறனாளிகளுக்கு கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல்.

2016 ஆகஸ்ட் 5]

(iii) போலியோ மற்றும் மூளை முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்டோருக்காக CP Chair வாங்குதல் மற்றும் மனவளர்ச்சி குன்றிய சிறப்பு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு அறிவுத்திறனை மேம்படுத்தும் பொருட்டு, மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு கற்பிக்கும் கருவி கலப்பெட்டிகள் வாங்குதல். (iv) உடற்பயிற்சிக் கூடம்/ஜிம்னாசியம் ஆகியவற்றிற்கு தேவையான உபகரணங்கள் வாங்குதல். (v) தற்போதுள்ள அரசு கட்டடங்களில் சூரிய மின் ஒளிகலன்கள் நிறுவுவதற்காக உபகரணங்கள் வாங்குதல்.

5. அரசு உதவி பெறும் பள்ளிகள், சுயநிதிப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் எவ்விதப் பணிகளையும் மேற்கொள்ளுதல்.

6. அனைத்து வணிக நிறுவனங்கள்/அலகுகள் குறித்த பணிகள்.

7. மானியம் மற்றும் கடன், மத்திய, மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிவாரண நிதிக்கு பங்களித்தல்.

8. நில எடுப்பு அல்லது நில எடுப்பிற்கான ஈட்டுத் தொகை வழங்குதல்.

9. முழுமையாக முடிக்கப்பட்ட பணிகள், பகுதியாக முடிக்கப்பட்ட பணிகள் அல்லது இனங்களுக்கான தொகை மீளச் செலுத்துதல்.

10. அனைத்து வரவினங்கள் மற்றும் தொடர் செலவினங்கள்.

11. மத வழிபாட்டு இடங்களில் பணிகள் மற்றும் மத அமைப்புகள்/குழுக்களுக்கு சொந்தமான நிலங்களில் பணிகள்.

12. குட்டைகள், ஊரணிகள், ஆறுகள், குளங்கள், கால்வாய்கள் மற்றும் வாய்க்கால் போன்றவைகளைத் தூர் வாருதல்.

13. சரளை/கப்பி சாலைகள் (தார்ச் சாலை வரை அமைக்கும் சாலைப் பணிகளை மட்டுமே எடுத்துக்கொள்ளலாம்).

14. உயர் மின்கம்ப விளக்குகள் பொருத்துதல்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்படும் மொத்த நிதியில் 21 சதவீத ஊரகப் பகுதிகளில் ஆதி திராவிடர்/பழங்குடியினர் அதிக எண்ணிக்கையில் வாழும் பகுதிகளிலும் அல்லது நகர்ப்புறங்களில் குடிசை பகுதிகளில் வாழும் மக்களும் பயன்பெறும்வகையில் அப்பகுதிக்கென ஒதுக்கப்பட வேண்டும்.

[2016 ஆகஸ்ட் 5

3.7.2 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட செயலாக்கம்

இத்திட்டத்தின்கீழ் 2015-16 ஆம் ஆண்டில் ரூ.470 கோடி நிதி ஒதுக்கீட்டில் 14,682 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

2016-17 ஆம் ஆண்டிலும் இத்திட்டத்திற்கு ரூ.470 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.8 தன்னிறைவுத் திட்டம்

தன்னிறைவுத் திட்டம், திட்டமிடுதல், நிதி ஆதாரங்களை திரட்டுதல், செயல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்ற வளர்ச்சிப் பணிகளில் சமுதாயத்தினை நேரடியாக ஈடுபடுத்திட வழிவகை செய்கிறது. தொழில்நுட்ப உதவி மற்றும் நிதி உதவி அளித்து அரசு இத்திட்டத்தினை செயல்படுத்துகிறது.

இத்திட்டம் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் 2011-12 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது.

3.8.1 பொதுமக்கள் பங்களிப்பு

கண்டறியப்படும் பணிக்கான மதிப்பீட்டுத் தொகையில் மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாமல் பொதுமக்களின் பங்களிப்பு இருக்கவேண்டும்.

3.8.2 பணிகளை தேர்வு செய்தல்

1) *தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் பணிகளை எடுத்து செய்வதற்கான தேவை குறித்த கருத்து, தனிநபர், குழுக்கள், நிறுவனங்கள், பொது அல்லது தனியார் நிறுவனங்கள் அல்லது சமுதாயம் ஆகியவற்றின் மூலமாக உருவாகலாம்.*

2) *மாவட்ட ஆட்சித் தலைவர், மேற்கொள்ளப்பட வேண்டிய பணியின் அத்தியாவசியத் தேவை மற்றும் அதனை நடைமுறைப்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் குறித்து திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி பரிசீலனை செய்வார். பணியின் தேவை நிறைவு அளிக்கும்பட்சத்தில், திட்டப் பணியினை மேற்கொள்ளவிருக்கும் முகமையிடம் விளக்கமான மதிப்பீட்டினை மாவட்ட ஆட்சித் தலைவர் கோருவார். அனுமதி வழங்க ஏதுவாக, விண்ணப்பதாரர் உரிய தொகைக்கான கேட்பு வரைவோலையை மாவட்ட*

2016 ஆகஸ்ட் 5]

ஆட்சியர் அல்லது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநரிடம் செலுத்தவேண்டும்.

3) உள்ளாட்சி அமைப்பு, பல்கலைக்கழகங்கள் வழங்கும் பங்களிப்பு நிதி இத்திட்டத்தின்கீழ் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

4) பணிகளை மேற்கொள்ள உள்ளாட்சி அமைப்பு அல்லது சம்மந்தப்பட்ட துறையின் அனுமதி தேவையெனில் அதற்கான அனுமதி, நிருவாக அனுமதி வழங்குவதற்கு முன் பெறப்படவேண்டும்.

5) உருவாக்கப்படும் சொத்துக்கள், உள்ளாட்சி அமைப்பு அல்லது துறையின் பராமரிப்பின்கீழ் இருக்கவேண்டியிருப்பின், அச்சொத்துக்களை உருவாக்க, உள்ளாட்சி அமைப்பு/துறையின் ஒப்புதலைப் பெறவேண்டும்.

6) இத்திட்டத்தின்கீழ் குறைவாக நிதி இருக்கும் பட்சத்தில், பல்வேறு பணிகளைச் செய்ய கோரிக்கைகள் வரப்பெறின் அவற்றுள் மிக அதிக அளவில் சமுதாயத்திற்கு பயன்தரும் பணிகளை மாவட்ட ஆட்சியர் கண்டறிந்து அத்தகைய பணிகளுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும்.

3.8.3 பணிகளை நிறைவேற்றுதல்

சம்மந்தப்பட்ட துறைகள் அல்லது உள்ளாட்சி அமைப்புகளின்மூலம் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998-ன்படி ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் செயல்படுத்தப்படும்.

மக்கள் இத்திட்டத்தில் பெரிய அளவில் பங்கேற்க ஏதுவாக, பொதுமக்களோ அல்லது பணிக்கான பங்களிப்பை அளித்தவர்களோ, பணியை தாங்களாகவோ அல்லது அவர்களின் முகவர்கள் மூலமாகவோ செய்திட விரும்பினால் மாவட்ட ஆட்சித் தலைவர் இந்தக் கோரிக்கையை ஆய்வு செய்து, அப்பணியின் மதிப்பீட்டில், பொதுமக்களின் பங்களிப்பு 50 சதவீதம் அல்லது அதற்கு மேல் இருந்தால் பங்களித்தவரையோ அல்லது அவரின் முகவரையோ, அப்பணியை செயல்படுத்த அனுமதி வழங்குவார். ஆனால், பொதுப் பணித் துறை கட்டுப்பாட்டில் உள்ள குளங்கள் மற்றும் நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் கட்டுப்பாட்டில்

[2016 ஆகஸ்ட் 5

உள்ள நீராதாரக் குளங்களைத் தூர்வாரும் பணியின் மதிப்பீட்டில் 50 விழுக்காட்டிற்கும் மேலாக பொதுமக்களின் பங்களிப்புத் தொகை இருப்பினும், ஒப்பந்தப்புள்ளி முறையைப் பின்பற்றியே அப்பணியை மேற்கொள்ள வேண்டும்.

3.8.4 2011–12 முதல் 2015–16 வரையிலான திட்ட செயல்பாடு

2011-12 முதல் 2015-16 வரை மொத்தம் 10,801 சமுதாயத்திற்கு பயன்தரத்தக்க சொத்துக்கள் ரூ.694.34 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்பட்ட விவரம் கீழ்கண்ட அட்டவணையில் உள்ளது.

அட்டவணை 3.9

வ. எண்	பணிகள்	பணிகளின் எண்ணிக்கை					மொத்தம்
		2011–12	2012–13	2013–14	2014–15	2015–16	
1.	குடிநீர் வழங்குதல்	390	443	460	271	181	1745
2.	கொள்முதல் மற்றும் விநியோகம்	496	425	295	501	509	2226
3.	பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்	20	8	5	42	36	111
4.	நீர்ப்பாசன பணிகள்	463	425	463	407	374	2132
5.	கட்டடங்கள்	473	440	355	377	299	1944
6.	கதிரடிக்கும் கலம்	8	8	15	8	14	53
7.	சாலைகள்	715	485	432	531	413	2576
8.	இதர பணிகள்	0	0	7	5	2	14
மொத்தம்		2565	2234	2032	2142	1828	10801

மேலும், இத்திட்டம் 2016-17 ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்படும்.

3.9 முழு சுகாதார தமிழகம்

மாநில அரசின் முன்முயற்சிகள்

தண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளை அனைவரும் பெறுவதற்குத் தேவையான சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளை இந்தியாவிலேயே தமிழ்நாடு பெற வேண்டும் என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தமிழ்நாடு தொலைநோக்கு 2023-ன்

2016 ஆகஸ்ட் 5]

இலக்காகும். திறந்தவெளி மலம் கழித்தல் அற்ற "முழு சுகாதார தமிழகம்" என்ற இலக்கினை விரைந்து அடைய, அனைத்து பங்கேற்பாளர்களையும் ஒருங்கிணைத்து மக்கள் இயக்கமாக செயல்படுத்துவது அவசியமாகிறது.

மாநிலத்தில் சுகாதாரப் புரட்சி ஏற்படுத்தும்விதமாக தமிழ்நாடு அரசு பல்வேறு முன்னோடி முன்முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. ஊரக மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு அடிப்படை சுகாதார வசதிகள் மேற்கொள்ளும் பொருட்டு ஊராட்சிக்கு ஒன்று வீதம் அப்போது இருந்த 12,618 கிராம ஊராட்சிகளில், ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் 2001-04 வரையிலான காலத்தில் கட்டப்பட்டன. முழுமையான சுகாதாரத்தை எய்துவதற்கான தாக்கத்தினை ஏற்படுத்தும் பொருட்டு, 2003 ஆம் ஆண்டு, தூய்மையான கிராம இயக்கம் அறிமுகப்படுத்தப்பட்டது. தனிநபர் இல்லக் கழிப்பறை கட்ட அப்போது இருந்த அலகுத் தொகை குறைவாக இருந்ததால் தமிழ்நாடு அரசு, 2012 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மாநில அரசின் கூடுதல் பங்குத் தொகையாக கழிப்பறை ஒன்றுக்கு ரூபாய் 1,500 வழங்க ஆணையிட்டது. ஊரக மகளிருக்கு சுகாதார வசதிகள் ஏற்படுத்தப்பட்டதைப் போன்று, 2012-13 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டது. ஜூலை 2013 ஆம் ஆண்டு, மாநில அளவில், தகவல், கல்வி மற்றும் தொடர்பு இயக்கம் தொடங்கப்பட்டது. மேலும், அனைத்துத் துறையைச் சார்ந்த கிராம அளவிலான அலுவலர்கள் மற்றும் களப்பணியாளர்களை ஈடுபடுத்தி நேர்முக தகவல் பரிமாற்றம் வாயிலாக தனிநபர் இல்லங்களில் சுகாதார வசதியின் தேவையை ஏற்படுத்துவதன்மூலம் ஒட்டுமொத்த சுகாதார வசதிகள் அடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கிராம அளவில் சமூகம் சார்ந்த அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்/ஊராட்சி அளவிலான மகளிர் சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்பு ஆகியவற்றை தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுதல் மற்றும் அதன் பயன்பாட்டைக் கண்காணித்தல் ஆகியவற்றில் ஈடுபடுத்தப்படுதல் என்பது சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கான ஒரு சிறப்பான உத்தியாக அமைந்துள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட 9,000 கிராம ஊராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதில், "தூய்மைக் காவலர்கள்"

அறிமுகப்படுத்தியதன்மூலம் மேற்படி கிராமங்கள் தூய்மையாக பராமரிக்கப்படுவதை தெளிவாக உணர முடிவதுடன் அது வெளிப்படையான ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது. ஊரகப் பகுதியில் உள்ள அரசுப் பள்ளிகளில் சுகாதார வசதிகளை தொடர்ந்து பராமரித்திட வேண்டி, தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பள்ளி கழிப்பறைகள் சுத்தமாக பராமரிப்பதுடன், அவை பயன்பாட்டில் உள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது. தேசிய அளவில் மேற்படி முன்முயற்சிகள் முன்னோடியாக திகழ்கின்றன.

3.10 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் புனரமைத்தல்.

மகளிருக்கான சுகாதாரத் தேவைகளை நிறைவேற்றும் விதமாக, தமிழகத்திலுள்ள, அப்போதிருந்த அனைத்து 12,618 கிராம ஊராட்சிகளிலும் சுமார் 750 சதுர அடி பரப்பளவில், ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் கட்ட, 2001 ஆம் ஆண்டில் இந்த அரசால் முடிவெடுக்கப்பட்டது. ஒவ்வொரு வளாகமும் 14 கழிப்பறைகள், 2 குளியலறைகள், 1 விசைப்பம்பு அறை, 1 தண்ணீர் தொட்டி மற்றும் துணி துவைக்கும் மேடை ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். குளிக்கவும், துணி துவைக்கவும், தேவையான தண்ணீர் வசதி ஏற்படுத்தப்பட்டது. தண்ணீர் வசதி மற்றும் விளக்குகளுக்குத் தேவையான மின் வசதியைக் கிராம ஊராட்சிகள் வழங்கி தொடர்புடைய குடும்பங்கள் அதனைப் பராமரித்திட நடவடிக்கை எடுக்கப்பட்டன. ஒவ்வொரு வளாகத்திலும் பெண்கள் பயன்படுத்திய நாப்கின்களை சுகாதாரமாக அப்புறப்படுத்திட எரியூட்டிகள் அமைக்கப்பட்டுள்ளது.

2006 முதல் 2011 ஆம் ஆண்டு வரை, போதுமான கவனிப்பு இல்லாததால், பெரும்பாலான மகளிர் சுகாதார வளாகங்கள் முறையான பயன்பாடு மற்றும் பராமரிப்பு இல்லாமல் போனது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில், பழுதடைந்திருந்த 12,796 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள், 2011-12 ஆம் ஆண்டில் ரூ.170 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டு ஊரகப் பெண்களுக்கு அடிப்படை சுகாதாரம் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த வளாகங்களின் தினசரி பராமரிப்பினை பயன்படுத்துவோர் குழுக்களே எடுத்துச் செய்வதுடன், இதன் தொடர் பராமரிப்பு சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சியால் மேற்கொள்ளப்படுகிறது.

TRUTH ALONE TRIUMPHS

2016 ஆகஸ்ட் 5]

3.11 ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஊரக மகளிருக்கு ஏற்படுத்திக்கொடுத்த ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாக வசதியைப் போல, ஊரகப் பகுதிகளிலுள்ள ஆடவர்களும் இது போன்ற வசதிகளை வழங்கக் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில், 2012-13 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் அமைத்திட ஆணையிட்டார்கள். தமிழ்நாட்டில் ரூ.35 கோடி மதிப்பீட்டில், 770 ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டன.

ஒவ்வொரு வளாகமும், 570 சதுர அடி பரப்பளவில், 8 கழிப்பறைகளை உள்ளடக்கியதாகவும், இதில் முதியோர்/ மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் வகையில் ஒரு நவீன கழிப்பறையும் (Western Closed), *இளம் சிறார்கள் பயன்படுத்தக் கூடிய வகையில் குழந்தை நேயக் கழிப்பறையும்* (Baby Friendly Toilet) *இருக்கும். தண்ணீர் வசதியுடன்கூடிய குளிக்கும் இடம், துணி துவைக்கும் மேடை ஆகியவையும் இருக்கும். இதன் தொடர் பயன்பாட்டிற்காக ஒவ்வொரு வளாகத்திலும் தனியாக தண்ணீர் வசதி உறுதி செய்யப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் பராமரிக்கப்படுவதுபோல, இந்த வளாகங்களின் தினசரி பராமரிப்பினை பயன்படுத்துவோர் குழுக்களால் எடுத்துச் செய்யப்படுகிறது. தேவையின் அடிப்படையில், 429 கிராம ஊராட்சிகளில் ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் 2014-15 ஆம் ஆண்டில் கட்டப்பட்டுள்ளன.*

3.12 தூய்மையான கிராம இயக்கம்

தமிழ்நாட்டில் சுகாதாரப் புரட்சியின்மூலம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும்பொருட்டு, இந்த அரசால் 2003 ஆம் ஆண்டில் "தூய்மையான கிராம இயக்கம்" துவக்கப்பட்டது. இவ்வியக்கம், சுற்றுச்சூழல் சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகளை உள்ளடக்கியதாகும். திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற தூய்மையான சுற்றுச்சூழல் உடைய கிராம ஊராட்சிகள் மாநில அரசு வழங்கும் விருதுத் தொகை ரூபாய் 5 இலட்சம் பெற பரிந்துரை செய்ய தகுதியானதாக இருந்தன.

2006 ஆம் ஆண்டு கைவிடப்பட்ட இத்திட்டம் 2011-12 ஆம் ஆண்டில் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டு, ஆண்டுதோறும் ரூ.1.55 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும்

ஒரு கிராம ஊராட்சி வீதம் தேர்வு செய்யப்பட்டு, 31 கிராம ஊராட்சிகளுக்கும் ஒரு ஊராட்சிக்கு ரூ.5 இலட்சம் என்ற அடிப்படையில் பரிசுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

3.13 தனிநபர் இல்லக் கழிப்பறை அமைக்கப்படுவதில் அரசினால் மேற்கொள்ளப்படும் உத்திகள்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழ்நாட்டை திறந்தவெளி மலம் கழித்தல் அற்ற மாநிலமாக ஆக்குவதற்கு பல்முனை உத்திகளை மேற்கொண்டு அனைத்து பங்கேற்பாளர்களையும் ஒருங்கிணைத்து மக்கள் இயக்கமாக சுகாதார எழுச்சி உருவாக்கி அதன்மூலம் திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் வேரறுக்கப்படும். தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டுவதற்கு திட்டமிடுதல், நடைமுறைபடுத்துதல் மற்றும் அதன் பயன்பாட்டைக் கண்காணித்தல் குறித்த விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் அரசாணை எண் 68, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி-1) துறை, நாள் 16-6-2016-ல் தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது.

இந்த வழிகாட்டு நெறிமுறையின் நோக்கமானது, கிராம ஊராட்சி அளவில் சுகாதாரத் திட்டத்திற்கு மக்களிடம் ஆர்வத்தை ஏற்படுத்துதல், திட்டமிடுதல், நடைமுறைப் படுத்துதல், ஊக்கத்தொகை அளித்தல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றிற்கு விரிவான செயல் திட்டமளித்தல் ஆகும். இந்த வழிகாட்டி நெறிமுறைகளின் விரிவான குறிக்கோள்கள் கீழ்வருமாறு:

➢ திறந்தவெளியில் மலம் கழிக்கும் பழக்கமற்ற மாநிலமாக தமிழகத்தை குறிப்பிட்ட கால வரையறைக்குள் மாற்றும்பொருட்டு, ஊரகப் பகுதிகளில் சுகாதாரத் திட்டத்தினை முடுக்கி விடுதல்.

➢ திட்டப் பங்கேற்பாளர்களான ஊராட்சி அமைப்பின் பிரதிநிதிகள், சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்பு சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, பல்வேறு அரசுத் துறைகளின் களப்பணியாளர்கள், ஊக்குவிப்பாளர்கள் ஆகியோரைத் தீவிரமாக ஈடுபடுத்தி திறந்தவெளி மலம் கழித்தலை அறவே ஒழித்தல்.

➢ முழு சுகாதாரத்திற்கு சமூக அணுகுமுறையினைப் பயன்படுத்தி, பயிற்சி பெற்ற ஊக்குவிப்பாளர்கள் மற்றும்

2016 ஆகஸ்ட் 5]

இதர பங்கேற்பாளர்கள்மூலம், திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையை அடைய வேண்டிய முக்கியத்துவத்தை சமூகத்திற்கு கற்பித்தல்.

- *தொடர் மனமாற்ற நடவடிக்கைகள்* (Behavioural change) *மூலம் நீடித்து நிலைத்த, பாதுகாப்பான சுகாதார நடைமுறையை தொடந்து பின்பற்றச் செய்தல்.*

மேற்குறிப்பிட்ட விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் வாயிலாக கிராம ஊராட்சி அளவில் செயல்படும் சமூகம் சார்ந்த அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றின் ஈடுபாட்டுடன் உரிய நோக்கத்தினை அடைய ஏதுவாகும். தற்போது திறந்தவெளியில் மலம் கழிக்கும் குடும்பத்தினர், கழிப்பறையைக் கட்டிப் பயன்படுத்திட மக்களிடையே நேர்முக தகவல் பரிமாற்றம் (Inter Personal Communication) *மற்றும் தகவல் தொடர்பினால் அவர்களின் பழக்க வழக்கத்தை மாற்றம் செய்வது சாத்தியம் ஆகும். எனவே, சமூகம் சார்ந்த அமைப்புகள் திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத கிராமங்களை உருவாக்கும் நோக்கத்தினை அடைய பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவர்களாக உள்ளனர்.*

இத்திட்டத்தைப் பயனுள்ள வகையில் செயல்படுத்திட கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அவை தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன:

- *கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்/ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினால் ஈடுபடுத்தப்படும் சமூக பயிற்றுநர்கள் (சுகாதாரம்) / சமூக வல்லுநர்கள் (சுகாதாரம்) ஆகியோர்களுக்கு ஒரு அடிப்படைத் திறன் கட்டமைப்பு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. கிராம ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி செயலர்கள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கும் இதேபோன்ற பயிற்சிகள் அளிக்கப்பட்டன.*

- *ஒவ்வொரு தனிநபர் இல்லக் கழிப்பறைக்கும் அதிகபட்ச ஊக்க நிதியாக ரூ.300 கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்/ ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு இரண்டு தவணைகளில் விடுவிக்கப்படுகிறது. முதல் தவணையாக,*

[2016 ஆகஸ்ட் 5

தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டி தொடர்ந்து ஆறு மாத காலத்திற்கு பயன்படுத்தப்பட்ட பின்பு ரூ.200/- மற்றும் மேற்படி கழிப்பறை ஒரு ஆண்டிற்கு மேல் தொடர்ச்சியாக பயன்பாட்டில் இருப்பதை உறுதி செய்த பின்னர் இரண்டாவது தவணையாக ரூ.100/- விடுவிக்கப்படும்.

- *மாதிரி வடிவமைப்புகள் மற்றும் விரிவான மதிப்பீடு வழங்கப்பட்டதன்மூலம் கழிப்பறை கட்டுமானத்தில் தொழில்நுட்பத் தன்மை உறுதி செய்யப்பட்டுள்ளது. கழிப்பறை கட்டுமானத்தில் தொழில்நுட்பத் தன்மை குறித்த குறும்படம் ஒன்று யுனிசெஃப் உதவியுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி குறும்படத்தில் கழிப்பறை கட்டுமானத்தில் பல்வேறு மாதிரிகளான உறிஞ்சு குழி முறை (தேன்கூடு முறை மற்றும் வட்ட வடிவிலான உறை கட்டுமானம்) மற்றும் கழிவுத் தொட்டி முறை கட்டமைப்பு முதலியன கட்டுவது குறித்து எளிதாக புரிந்து கொள்ளும்வகையில் எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டச் செயல்பாட்டில் ஈடுபடுத்தப்படும் தொழில்நுட்பம் அறிந்த மற்றும் தொழில்நுட்பம் அறியாத இரு தரப்பினரும் இதன் மூலம் பயனடைந்துள்ளனர்.*

- *இத்திட்டத்தின்கீழ் பயனாளிக்கு இரண்டு தவணைகளில் நிதி விடுவிப்பதை விரைவுபடுத்த வேண்டி, பணி மதிப்பீட்டுச் சான்று அறிமுகப்படுத்தப்பட்டதன்மூலம் தொழில்நுட்ப அலுவலர் (பணி மேற்பார்வையாளர்) அளவீடுகள் செய்யும் நடைமுறை எளிமைப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் பணிப் பார்வையாளர்கள் தங்கள் பகுதிக்குட்பட்ட தனிநபர் இல்லக் கழிப்பறைகளைப் பார்வையிட்டு பணி முன்னேற்றத்தின் அடிப்படையில் பணி மதிப்பீட்டுச் சான்று வழங்குவார்கள். இதன்மூலம் தொகை விடுவிப்பு நடைமுறை எளிமைப்படுத்தப்பட்டுள்ளது.*

- *ஏழ்மை நிலையில் உள்ள பயனாளிகளுக்குப் போதுமான நிதி வசதி இல்லாத காரணத்தால் கட்டுமானப் பணிகள் தொடங்குவதில் சிரமம் ஏற்படுவதை கருத்திற் கொண்டு, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்/ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றின் நிதியில் இருந்து ரூ.5,000/- முன்பணமாக வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.*

2016 ஆகஸ்ட் 5]

- *கழிப்பறைகள் தரமான முறையில் கட்டுவதையும், அதன் தொடர் பயன்பாட்டினை உறுதி செய்யும் வகையிலும் வட்டார, மாவட்ட அளவிலான உயர் அலுவலர்கள்மூலம் தொடர்ந்து கள ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. மேலும், மாநில தர கண்காணிப்பு அலுவலர்மூலம் தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுமானம் குறித்து சிறப்பினமாக ஆய்வு மேற்கொள்ள அனுப்பப்படுகின்றனர்.*

- ***மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கொத்தனார் பயிற்சி அளித்தல்:*** *நடப்பாண்டில் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் கட்டுமான பணியாளர்களில் குறைந்தபட்சம் ஐந்து மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு கொத்தனார் பயிற்சி மற்றும் கழிப்பறை கட்டுதலில் தொழில் நுட்பரீதியாக பயிற்சி அளிக்கப்படும்.*

3.14 திறந்தவெளியில் மலம் கழித்தலை ஒழித்தல் குறித்த திட்டம் தயாரித்தல் மற்றும் திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையை அடைய சமூக அணுகுமுறையை பயன்படுத்துதல்.

- *மாவட்ட ஆட்சித் தலைவர்கள், கண்டறியப்பட்ட ஒவ்வொரு கிராம ஊராட்சி மற்றும் வட்டாரத்திற்கும் திறந்த வெளியில் மலம் கழித்தலை ஒழித்தல் குறித்த திட்டம் தயாரித்து அதன்மூலம் திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையினை அடைவதற்கான மைல்கல்லை, உன்னிப்பாக கண்காணிப்பதற்கு ஏதுவாகும்.*

- *கிராம ஊராட்சிகள் திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையினைஅடைவதற்கு சமூக அணுகுமுறை விரிவாக பயன்படுத்தப்படுகிறது. சமூக அணுகுமுறை என்பது கிராம சமுதாயத்தில் சுகாதார நிலையை ஆய்வு செய்தல், நடைப்பயணம் மேற்கொள்ளுதல், மலம் கழிக்கும் இடத்தை கிராம வரைபடம்மூலம் விளக்குதல், அருவறுப்பைத் தூண்டச் செய்தல், தீப்பொறிபோல் சுகாதாரத்தைப் பரவச்செய்தல், செயல்முறை திட்டம் தயாரித்தல், சமூக நடவடிக்கை மற்றும் தொடர் நடவடிக்கை மூலம் கண்காணித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.*

- *திறந்தவெளியில் மலம் கழித்தலை ஒழித்தல் குறித்த திட்டத்தின்படி, நடப்பாண்டில் திறந்தவெளியில் மலம்*

கழித்தல் அற்ற நிலையை அடைய இலக்கிடப்பட்ட கிராம ஊராட்சிகளில் சமூக அணுகுமுறை அறிமுகப்படுத்தப்படும்.

- இலக்கிடப்பட்ட கிராம ஊராட்சிகளில், சமூக அணுகுமுறையில் பயிற்சி அளிக்கப்பட்ட அதிகபட்சமாக இரண்டு ஊக்குவிப்பாளர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள். கிராம ஊராட்சி திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையினை அடைந்ததை, மாநில அளவிலான சரிபார்க்கும் குழு உறுதி செய்த பிறகு ஒவ்வொரு ஊக்குவிப்பாளருக்கும் தலா ரூபாய் 5,000/- ஊக்கத்தொகையாக வழங்கப்படும்.

3.14.1 திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையினை அடைதல்:

- திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையினை அடைந்த பிறகு கிராம ஊராட்சியானது அதனை கிராம சபை கூட்டத்தில் அறிவிப்பு செய்ய வேண்டும். அதே நிலை தொடர்ந்து நீடித்து நிலைக்க தீர்மானம் நிறைவேற்றப்படவேண்டும். மேற்படி அறிவிப்பானது, சட்டரீதியாக நடைபெறும் கிராம சபைக் கூட்டங்களான, மே மாதம் 1-ம் தேதி, ஆகஸ்ட் மாதம் 15-ம் தேதி, அக்டோபர் மாதம் 2-ம் தேதி அல்லது ஜனவரி மாதம் 26-ம் தேதி அல்லது இதற்காக பிரத்யேகமாக கூட்டப்படும் சிறப்பு கிராம சபைக் கூட்டங்களில் மேற்கொள்ளப்பட வேண்டும். மேற்படி கிராம ஊராட்சியின் அறிவிப்பின் அடிப்படையில், வழிகாட்டு நெறிமுறைகளின்படி மாவட்ட அளவிலான சரிபார்த்தல் அதன் பிறகு, மாநில அளவிலான சரிபார்த்தல் நடத்தப்பட்டு, திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற நிலை அடைந்ததற்கான அங்கீகாரம் மற்றும் உறுதி செய்யப்படும்.

2015-16 ஆம் ஆண்டு 1,632 கிராம ஊராட்சிகள், திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற ஊராட்சியாக, 2-10-2015 மற்றும் 26-1-2016 ஆகிய தேதிகளில் நடைபெற்ற கிராம சபை கூட்டங்களில் சுயமாக அறிவிப்பு செய்துள்ளன.

3.15 ஊரகப் பகுதிகளில் திடக் கழிவு மேலாண்மைத் திட்டம்

கிராம ஊராட்சிகள் தூய்மையாகவும் மற்றும் சுகாதாரமாகவும் இருப்பதற்கு அரசு தொடர்ந்து அதிக முன்னுரிமை அளித்து

2016 ஆகஸ்ட் 5]

வருவதுடன் கிராம ஊராட்சிகளில் மறுசுழற்சி மற்றும் குப்பைகள் அகற்றுவதற்கான வசதிகளுடன் கூடிய முறையான திடக்கழிவு மேலாண்மை அமைப்புகள் ஏற்படுத்த, விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, 10,000-க்கும் மேற்பட்ட மக்கள்தொகை உள்ள கிராம ஊராட்சிகள், பெரிய நகர்ப்புறத்தை ஒட்டிய கிராம ஊராட்சிகள், முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலா மற்றும் புனிதத்தலங்கள் உள்ள கிராம ஊராட்சிகள், பெரிய தொழிற்சாலைகள்/வணிக அமைப்புகள்/கல்வி நிறுவனங்கள் அடங்கிய கிராம ஊராட்சிகள் ஆகிய ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தன்மைகள் கொண்ட கிராம ஊராட்சிகள் கண்டறியப்பட்டு, முதற்கட்டமாக 2,000 கிராம ஊராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

மேலும் இத்திட்டம், மாநகராட்சி ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகள், சிறப்பு நிலை நகராட்சிகள், மாவட்ட தலைநகரங்கள் உள்ள ஊராட்சிகள் மற்றும் 300 குடும்பங்களுக்கு மேலாக உள்ள கிராம ஊராட்சிகள் போன்ற குறிப்பிட்ட தன்மைகள் உடைய கிராம ஊராட்சிகள் கண்டறியப்பட்டு இரண்டாம் கட்டமாக 7,000 கிராம ஊராட்சிகளில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய சிறப்பம்சங்கள் பின்வருமாறு:

i. ஒரே ஒரு குக்கிராமத்தைக் கொண்ட கிராம ஊராட்சியாக இருப்பின் இத்திட்டம் செயல்படுத்துவதற்கு அந்த கிராம ஊராட்சியே ஒரு தனி அலகாகும். பெரிய ஊராட்சியாக இருப்பின் ஒரு குக்கிராமத்தையோ அல்லது குக்கிராமங்கள் தொகுப்பாகவோ இத்திட்டம் செயல்படுத்த அலகாக எடுத்துக்கொள்ளப்படுகிறது.

ii. திடக்கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கு முன்பு அவை மக்கும் குப்பை (Bio-degradable) மற்றும் மக்காத குப்பைகளாக (Non-Biodegradable) பிரிக்கப்படுகிறது.

iii. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், மக்கும் கழிவுகள்மூலம் உரம் தயாரிப்பதற்கு இரண்டு குழிகளும், மீதமுள்ள திடக்கழிவுகளை அப்புறப்படுத்த ஒரு குழியும் தோண்டப்படுகிறது.

iv. தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம ஊராட்சியில் 150 குடும்பத்திற்கு ஒரு பணியாளர் வீதம் திடக்கழிவு

மேலாண்மைத் திட்ட நடவடிக்கைகளில் மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்டப் பணியாளர்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

v. "தூய்மைக் காவலர்கள்" என்று அழைக்கப்படும் இவர்கள், வீடு வீடாக குப்பைகளை சேகரித்தல், பிரித்தல் மற்றும் திடக் கழிவுகளை குழிகளுக்கு எடுத்துச் சென்று கொட்டுதல் போன்ற பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

vi. இப்பணியாளர்களுக்கான ஊதியம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணியாளர்களுக்கு 100 நாட்களுக்கு மட்டுமே பணி வழங்க முடியும் என்பதால் குறிப்பிட்ட நிதியாண்டில் ஏற்கெனவே 100 நாட்கள் பணி முடித்த தூய்மைக் காவலர்களாக ஈடுபடுத்தப்படும் நபர்களுக்குப் பதில், புதிய தொகுப்பு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணியாளர்கள் தூய்மைக் காவலர்களாக ஈடுபடுத்தப்படுவார்கள். அதேபோல, பணித்தள மேற்பார்வையாளர்கள் ஒவ்வொரு 100 நாட்களுக்குப் பிறகு மாற்றப்படுவதன்மூலம் புதிய நபர்கள் மேற்பார்வை பணியில் அனுபவம் பெற உறுதி செய்யப்படுகிறது.

vii. திட்ட நிதியிலிருந்து மூன்று சக்கர மிதிவண்டிகள், தூய்மைப்படுத்தத் தேவையான உபகரணங்கள், தூய்மைக் காவலர்களுக்கு மேல் சட்டை, கையுறை மற்றும் தொப்பி ஆகியவை, பிரித்தல் மற்றும் சேமிப்பதற்கான கொட்டகைகள், தெருவில் வைக்கும் குப்பைத் தொட்டிகள், நறுக்கும் இயந்திரம் மற்றும் தூய்மைப்படுத்தும் இயந்திரம் ஆகியவை வழங்கப்படுகிறது.

viii. கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்/ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவை தூய்மைக் காவலர்களை கண்காணிக்கும் ஒருங்கிணைப்பு முகமையாக செயல்படுகிறது.

3.15.1 பயிற்சி திட்டங்கள்:

இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தும்பொருட்டு, மாவட்ட, வட்டார மற்றும் கிராம ஊராட்சி அளவில் அலுவலர்களுக்கும், ஊராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் இதர

2016 ஆகஸ்ட் 5]

பங்கேற்பாளர்கள் ஆகியோர்களுக்கு தகுந்த பயிற்சியும், திட்டம் குறித்த விழிப்புணர்வும் ஏற்படுத்தப்படுகிறது.

3.15.2 கணக்குகளை பராமரித்தல்:

திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கென பெறப்படும் நிதியினை கண்காணிக்கவும், திட்டம் நீடித்து செயல்படுவதை உறுதி செய்யவும் கிராம ஊராட்சிகள் இதற்கென சேமிப்பு வங்கி கணக்கினை தனியாக பராமரிக்க வேண்டும். மக்கிய உரம், மண்புழு உரம், மறு சுழற்சி கழிவுகளை விற்பனை செய்வதன்மூலம் கிராம ஊராட்சிக்கு கிடைக்கும் வருமானத்தை, கிராம ஊராட்சியின் திடக் கழிவு மேலாண்மை வங்கிக் கணக்கில் மட்டுமே செலுத்த வேண்டும்.

3.15.3 கிராம ஊராட்சி அளவிலான திடக்கழிவு மேலாண்மைக் குழு:

தினசரி செயல்பாடுகளைக் கண்காணிக்க, சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சி அளவில் திடக்கழிவு மேலாண்மைக் குழு ஒன்று கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட வேண்டும்.

> *(1) கிராம ஊராட்சித் தலைவர், (2) கிராம ஊராட்சித் துணைத் தலைவர், (3) சம்மந்தப்பட்ட வார்டு உறுப்பினர், (4) சம்மந்தப்பட்ட குக்கிராமத்தைச் சார்ந்த கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பிரதிநிதி மற்றும் (5) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் ஈடுபடுத்தப்படும் பணித்தளப் மேற்பார்வையாளர்.*

வார்டு உறுப்பினர் மற்றும் குக்கிராமம் பிரதிநிதித்துவம் உடைய/ கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்கள் தங்களின் பகுதிகளில் செயல்படுத்தப்படும் திடக்கழிவு மேலாண்மைத் திட்ட நடவடிக்கைகளைக் கண்காணிப்பார்கள்.

3.15.4 சமூகத் தணிக்கை:

சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சியைப் பொறுத்தமட்டில் திடக்கழிவு மேலாண்மைத் திட்ட செயல்பாடுகளுக்கான சமூகத் தணிக்கையை கிராம சபை மேற்கொள்ளும். இத்திட்டத்தின் வெளிப்படை தன்மையை உறுதிப்படுத்தும் வகையிலும், ஆலோசனைக்காகவும் மற்றும் மேம்பாட்டிற்காகவும், அனைத்து

[2016 ஆகஸ்ட் 5

செயல்பாடுகள் குறித்த வரவு செலவுத் திட்டம் மற்றும் செலவீனங்கள் ஆகியவை எல்லா கிராம சபை கூட்டங்களிலும் வைக்கப்படவேண்டும்.

3.16 பள்ளிக் கழிப்பறை பராமரித்தல்

ஊரகப் பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய பள்ளிகளிலும் மற்றும் அரசு பள்ளிகளிலும் மாணவ மாணவியருக்கு போதுமான கழிப்பிட வசதிகள் செய்து தருவதை இந்த அரசு உறுதி செய்துள்ளது. ஊரகப் பகுதிகளில் 28,031 ஊராட்சி ஒன்றிய ஆரம்ப/ நடுநிலைப் பள்ளிகளும் மற்றும் 6,916 அரசுப் பள்ளிகளும் உள்ளன. ஆக மொத்தம் ஊரகப் பகுதிகளில் 34,947 அரசுப் பள்ளிகள் உள்ளன. மாணவ மாணவிகளின் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதில் சுகாதார வசதிகள் ஒரு முக்கிய அங்கமாக உள்ளது. அரசுப் பள்ளிகளில் சுகாதார வசதிகள் நீடித்து நிலைப்பதற்கு ஏதுவாக, பள்ளி கழிப்பறைகளை சுத்தமாக பராமரிப்பதை உறுதி செய்வதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிராம வறுமை ஒழிப்பு சங்கம் அல்லது ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலமாகவோ அல்லது தனியார் நிறுவனம் மூலமாகவோ ஒவ்வொரு அரசு/ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் உள்ள கழிப்பறையை சுத்தம் செய்வதற்கு ஒரு சுகாதாரப் பணியாளரை ஈடுபடுத்த, அரசாணை நிலை எண் 151, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (CGS-1) நாள் 30-11-2015-ல் அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அந்தந்த பள்ளிகளில் மாணவ மற்றும் மாணவியர்களின் கழிப்பறையை சுத்தப்படுத்துவதே சுகாதாரப் பணியாளரின் பொறுப்பாகும். மகளிர் பள்ளிகளில் பெண் சுகாதாரப் பணியாளரை மட்டுமே ஈடுபடுத்த வேண்டும். தினந்தோறும் இரண்டு முறை அதாவது காலையிலும் மாலையிலும் கண்டிப்பாக சுத்தம் செய்ய வேண்டும். 2015-16 ஆம் ஆண்டில், சுகாதாரப் பணியாளர்களின் மாத ஊதியத்திற்கும் தூய்மைப்படுத்த தேவையான பொருட்களை வாங்குவதற்கும் அரசு ரூ.57.63 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. பள்ளியில் உள்ள கழிப்பறை சுத்தமாக இருப்பதை கண்காணிப்பது, சம்பந்தப்பட்ட பள்ளி தலைமையாசிரியரின் பொறுப்பாகும்.

குறைந்தபட்சம் வாரத்தில் ஒரு முறை, கிராம ஊராட்சித் தலைவர், சம்பந்தப்பட்ட வார்டு உறுப்பினர் மற்றும் பெற்றோர்

2016 ஆகஸ்ட் 5]

ஆசிரியர் கழக உறுப்பினர்கள் பள்ளியில் உள்ள கழிப்பறை சுத்தமாக இருப்பதைப் பார்வையிட்டு ஆய்வு செய்வார்கள். வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), வட்டார வள மையத்தின் மேற்பார்வையாளர் மற்றும் உதவி தொடக்க கல்வி அலுவலர்/கூடுதல் உதவி தொடக்கக் கல்வி அலுவலர் ஆகியோர்கள் இணைந்து ஒவ்வொரு காலாண்டும் பள்ளி கழிப்பறை சுத்தமாக பராமரிப்பது குறித்து பள்ளி தலைமையாசிரியர்களை ஆய்வு செய்வார்கள். மேலும், பள்ளிக் கழிப்பறையை சுத்தமாக பராமரிப்பதை ஆய்வு செய்வதற்கும், கண்காணிப்பதற்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், பள்ளிக் கல்வித் துறை மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையைச் சார்ந்த மாவட்ட அலுவலர்களை ஒவ்வொரு வட்டாரத்திற்கும் மண்டல அலுவலர்களாக நியமனம் செய்துள்ளார்கள்.

3.17 சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்

நக்சலைட்டுகளின் நடவடிக்கைகளைத் தடுத்திடும் வகையில் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான சிறப்புத் திட்டமாக 2003-04 ஆம் ஆண்டு சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கு முறையே தலா ரூ.700 இலட்சம் மற்றும் ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் பசுமை வீடுகள் கட்டுதல், ஆவின் பாலகம் கட்டுதல், வேளாண் கூலி விவசாயிகளுக்கு பூச்சி மருந்து தெளிப்பான் வாங்குதல், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருத்துவ உபகரணங்கள் வாங்குதல், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் குடிநீர் குழாய் விரிவாக்கம் செய்தல், அங்கன்வாடி மையங்களை நவீனப்படுத்துதல் உள்ளிட்ட பணிகளும் பல்வேறு பயிற்சித் திட்டங்களும் 2015-16 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டது.

2016-17 ஆம் நிதியாண்டிற்கும் இத்திட்டத்திற்காக ரூ.7.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இவ்வாண்டில், இத்திட்டத்தின்கீழ், கிராமப்புற சுய உதவிக் குழுக்களில் உள்ள மகளிர் மேம்பாடு அடையும்விதமாக, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலமாக செயல்படுத்திட நிதி ஒதுக்கீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளன.

[2016 ஆகஸ்ட் 5

4. மத்திய திட்டங்கள்

4.1 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (MGNREGS)

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் 2-2-2006-ல் தொடங்கப்பட்டது. ஒவ்வொரு நிதியாண்டிலும் ஊரகப் பகுதிகளில் திறன்சாரா, உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் 100 நாட்களுக்குக் குறையாமல் வேலைவாய்ப்பினை அளிக்க இத்திட்டம் உறுதி செய்கிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் 'வேலை செய்யும் உரிமையை' நிலைநிறுத்துவதற்காக உருவாக்கப்பட்ட முக்கியமான படியாகும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட இத்திட்டம் மட்டுமே சட்டப்பூர்வ பாதுகாப்பு கொண்ட ஒரே வறுமை ஒழிப்புத் திட்டமாகும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் திருத்திய அட்டவணை I-ன்படி முக்கிய குறிக்கோள்கள் கீழ்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளன:

அ) ஒவ்வொரு நிதியாண்டிலும், ஊரகப் பகுதிகளில் திறன்சாரா, உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் 100 நாட்களுக்குக் குறையாமல் வேலைவாய்ப்பினை அளிப்பதன்மூலம் நிர்ணயிக்கப்பட்ட தரமான மற்றும் நிலையான சொத்துக்களை உருவாக்குதல்.

ஆ) ஏழை மக்களின் வாழ்வாதார அடிப்படை வளத்தை வலுப்படுத்துதல்.

இ) சமூகப் பங்களிப்பை உறுதி செய்ய திறம்பட செயலாற்றுதல்.

ஈ) ஊராட்சி அமைப்பு முறையை வலுப்படுத்துதல்.

தமிழ்நாட்டில், முதலில் இத்திட்டம் 6 மாவட்டங்களில் 2-2-2006-ல் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் மூன்று கட்டங்களாக கீழ்க்கண்ட அட்டவணையின்படி, அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

2016 ஆகஸ்ட் 5]

அட்டவணை எண் 4.1

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மூன்று கட்டங்களில் விரிவாக்கம்

முதற் கட்டம் (2–2–2006–லிருந்து)	இரண்டாம் கட்டம் (1–4–2007–லிருந்து)	மூன்றாம் கட்டம் (1–4–2008–லிருந்து)	
1. கடலூர்	1. தஞ்சாவூர்	1. காஞ்சிபுரம்	11. திருச்சி
2. விழுப்புரம்	2. திருவாரூர்	2. திருவள்ளூர்	12. பெரம்பலூர்
3. திருவண்ணாமலை	3. கரூர்	3. வேலூர்	13. அரியலூர்
4. நாகப்பட்டினம்	4. திருநெல்வேலி	4. சேலம்	14. புதுக்கோட்டை
5. திண்டுக்கல்		5. நாமக்கல்	15. மதுரை
6. சிவகங்கை		6. தருமபுரி	16. தேனி
		7. கிருஷ்ணகிரி	17. இராமநாதபுரம்
		8. ஈரோடு	18. விருதுநகர்
		9. கோயம்புத்தூர்	19. தூத்துக்குடி
		10. நீலகிரி	20. கன்னியாகுமரி
			21. திருப்பூர்

4.1.1. திட்டத்தின் சிறப்பம்சங்கள்

1. *ஊரகப் பகுதிகளில் திறன்சாரா உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோர் உள்ள, பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு நிதியாண்டிலும் 100 நாட்களுக்கு வேலை வாய்ப்பினை உறுதி செய்தல்.*

2. *திறன்சாரா உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்கான* (unskilled labour) *ஊதியச் செலவு 100 விழுக்காடு மத்திய அரசால் வழங்கப்படுகிறது. கட்டுமானப் பொருட்களின் செலவினம், திறன் சார்ந்த* (skilled labour) *மற்றும் பகுதி திறன் சார்ந்த தொழிலாளர்களின்* (semi-skilled labour) *ஊதியச் செலவு, மத்திய அரசு மற்றும் மாநில அரசால் 75:25 என்ற விகிதாச்சாரத்தில் வழங்கப்படுகிறது.*

3. *ஒப்பந்ததாரர்கள் அல்லது தொழிலாளர்களுக்கு மாற்றான இயந்திரங்களுக்கு அனுமதி இல்லை.*

4. *அனைத்து ஊராட்சிகள் (ம) முகமைகள்மூலம் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் அனைத்துப் பணிகளுக்குண்டான ஊதியம் (ம) பொருட்கள் 60:40 எனும் விகிதாச்சார அடிப்படையில் மாவட்ட அளவில் கணக்கிடப்படும்.*

[2016 ஆகஸ்ட் 5

5. அனுமதியளிக்கப்பட்ட மொத்த பணிகளில் 50% பணிகள் கிராம ஊராட்சிகள்மூலம் செயல்படுத்தப்பட வேண்டும்.

6. திறன்சாரா உடல் உழைப்பு மேற்கொள்ள விருப்பம் உள்ள ஊரகக் குடும்பங்களைச் சேர்ந்த வயது வந்த உறுப்பினர்கள் தனது விருப்பத்தினை வாய் மொழியாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ, கிராம ஊராட்சிக்கு தெரிவித்து பதிவு செய்துகொள்ள வேண்டும்.

7. ஊரக பகுதிகளில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் வேலைக்கு விண்ணப்பித்து அவ்வேலையினை பெறும்பொருட்டு வேலை அட்டையினை பெற உரிமை பெற்றுள்ளது.

8. புதிய வேலை அட்டையினை பதிவு செய்தலை எளிதாக்குவதற்கும், தொழிலாளர்களின் குறைகளை சீர்செய்வதற்கும், ரோஜ்கார் திவாஸ் (வேலைவாய்ப்பு தினம்), அனைத்து கிராம ஊராட்சிகளிலும் மாதத்திற்கு ஒரு முறை நடத்தப்படுகிறது.

9. கிராம சபா கூட்டங்களில் பங்கேற்பதற்கும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் அந்த கிராம ஊராட்சிகளில் எடுத்து செய்ய இருக்கும் பணிகளின் தொகுப்பு மற்றும் முன்னுரிமை அடிப்படையில் பணிகளை தெரிவு செய்வதற்கும் அனைத்து தொழிலாளர்களுக்கும் உரிமை உள்ளது.

10. வேலை நடைபெறும் இடம் கிராமத்திலிருந்து 5 கி.மீ. தூரத்திற்கு மேல் இருக்கும்பட்சத்தில், போக்குவரத்து மற்றும் வாழ்வாதாரத் தொகையாக ஊதியத்தில் 10 விழுக்காடு கூடுதலாக வழங்கப்படும். இருப்பினும் தமிழ்நாட்டில் வேலை நடைபெறும் இடம் 2 கி.மீ சுற்றளவிற்குள் இருக்குமாறு பணித் தளங்கள் அமைக்கப்படுகின்றன.

11. திறன்சாரா தொழிலாளர்களுக்கான ஊதியம் ஊரக விலைப் பட்டியலின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படுகிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டத்தின் திருத்திய அட்டவணை I-ன்படி திறன்சாரா தொழிலாளர்களுக்கான விலைப்

பட்டியலின்படியான ஊதியமானது ஒரு வயது வந்த நபர் 1 மணி நேர உணவு இடைவேளையுடன் கூடிய 8 மணி நேர பணியில் பெறக்கூடிய (அதாவது 7 மணி நேர வேலை) ஊதியத்திற்கு சமமாக இருக்கும்.

12. *ஆண்கள் மற்றும் பெண்களுக்குச் சம அளவிலான ஊதியம் வழங்கப்படும். 2016-17 ஆம் ஆண்டிற்கான அறிவிக்கப்பட்ட ஊதியம் நாளொன்றுக்கு ரூ.203/- ஆகும்.*

13. *தொழிலாளர்களுக்கான ஊதியம் பொது நிதி மேலாண்மை அமைப்பு* (PFMS) *மூலம் வழங்கப்பட்டு தொழிலாளர்களின் வங்கிக் கணக்கிற்கு 15 நாட்களுக்குள் ஈடுசெய்யப்படுகின்றது.*

14. *மூன்றில் ஒரு பங்கு பயனாளிகள் பெண்களாக இருக்க வேண்டும்.*

15. *வேலை நடைபெறும் இடங்களில் குடிநீர், முதலுதவிப் பெட்டி, நிழற் கூடங்கள் போன்ற வசதிகள் செய்து தரப்படும்.*

16. *மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் சமூகத் தணிக்கையினை கிராம சபை, அதற்காக அமைக்கப்பட்டுள்ள "கிராம சமூகத் தணிக்கையாளர்கள்" மூலம் மேற்கொள்கின்றது.*

17. *குறைகளை துரிதமாக தீர்க்கும்வகையில் குறை தீர்க்கும் அமைப்பின் ஒரு பகுதியாக கட்டணம் இல்லாத் தொலைபேசி சேவை* (Toll free Helpline) *"1299" ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்படுகிறது.*

18. *இத்திட்டச் செயல்பாடு குறித்து அறிவுரைகள் வழங்கிடவும், கண்காணிக்கவும் மற்றும் மதிப்பீடு செய்யவும், தமிழக அரசால் "மாநில வேலை உறுதி மன்றம்" என்ற அமைப்பு தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் பிரிவு 12-ன்படி அமைக்கப்பட்டுள்ளது.*

4.1.2 அனுமதிக்கப்பட்ட பணிகள்

மத்திய அரசு வழிகாட்டு நெறிமுறைகளின்படி அனுமதிக்கப்பட்ட பணிகளின் விவரம் பின்வருமாறு:

[2016 ஆகஸ்ட் 5

அட்டவணை 4.2

மத்திய அரசு வழிகாட்டு நெறிமுறைகளின்படி அனுமதிக்கப்பட்ட பணிகளின் விவரம்

வகைப்பாடு – அ	வகைப்பாடு – ஆ	வகைப்பாடு – இ	வகைப்பாடு – ஈ
இயற்கை வள மேலாண்மையுடன் தொடர்புடைய பொதுப் பணிகள்	**நலிவுற்ற இனத்திற்கான தனிநபர் சொத்துக்கள் / பொது சொத்துக்களை உருவாக்குதல்.**	**பொது உட்கட்டமைப்பு வசதிகள் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு இணக்கமான சுய உதவிக் குழுக்கள் உட்பட.**	**ஊரக உட்கட்டமைப்பு வசதிகள்**
• நீராதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் • நீர் மேலாண்மைப் பணிகள் • சிறு மற்றும் குறு நீர்ப்பாசனப் பணிகள் • பாரம்பரிய நீராதாரங்களை சீரமைத்தல் • காடு வளர்ப்பு • மரக் கன்றுகள் நடுதல் • பழ மரக் கன்றுகள் நடுதல். • பொது இடங்களில் நில மேம்பாட்டுப் பணிகள்	• கிணறுகள் • பண்ணைக் குட்டைகள் • இதர நீராதாரப் பணிகள், • தோட்டக்கலை சார்ந்த பணிகள், பட்டு வளர்ப்பு, மரக் கன்றுகள் நடுதல், மற்றும்காடு வளர்ப்பு. • தரிசு நிலம் அல்லது பயனற்ற நிலங்களை மேம்படுத்தி விவசாய நிலங்களாக மாற்றுதல் • மாநில அல்லது மத்திய அரசு திட்டங்களின்கீழ் அனுமதிக்கப்பட்ட வீடுகள் கட்டு வதற்கான திறன்சாரா செலவினத் தினை மேற்கொள்ளல் • மாட்டுக் கொட்டகை, ஆட்டுக் கொட்டகை கோழிக் கொட்டகை பன்றிக் கொட்டகை அமைத்தல் • கால்நடைத் தீவனத் தொட்டிகளை அமைத்தல். • மீன் உலர் களம் • சேமிப்பு வசதிகள் • பொது இடங்களில் உள்ள நீர்நிலைகளில் மீன் வளர்த்தல் • தனி நபர் இல்லக் கழிப்பறைகள்	தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு இணக்கமான சுய உதவி குழுக்கள் உள்ளிட்ட சுய உதவிக் குழுக்களுக்கான பொது பணிமனை தளங்களை அமைத்தல்.	• ஊரக சுகாதார பணிகள் • சாலை வசதி இல்லாத ஊரகப் பகுதிகளில் இணைப்புச் சாலைகள் ஏற்படுத்துதல் • விளையாட்டு மைதானம் அமைத்தல் • பேரழிவினை தடுக்கும் ஆயத்தப் பணிகள், சாலைகளை சீரமைத்தல் • வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் தடுப்புபணிகள் உட்பட பொது உட்கட்டமைப்பு பணிகள் • கிராம ஊராட்சிக் கட்டடங்கள் கட்டுதல் • மகளிர் சுய உதவிக் குழு மற்றும் கூட்டமைப்பிற்கான கட்டடங்கள் கட்டுதல் • புயல் நிவாரணக் கூடங்கள் • அங்கன்வாடி கட்டடங்கள் • கிராம சந்தை, கிராமங்களில் இடுகாடு மற்றும் சுடுகாட்டு கொட்டகைகளை ஊராட்சி மற்றும் வட்டார அளவில் கட்டுதல்‘ • உணவு சேமிப்பு கட்டடங்கள் கட்டுதல். • சட்டத்தில் அனுமதிக்கப்பட்ட கட்டட பணிகளுக்கு தேவையான கட்டுமானப் பொருட்களை அந்த கட்டடத்தின் மதிப்பீட்டில் ஒரு அங்கமாக மேற்கொள்ளுதல். • இச்சட்டத்தின்கீழ் உருவாக்கப் பட்ட ஊரக பொது சொத்துக்களை பராமரித்தல்.

4.1.3 2011–12 முதல் 2015–16 வரை எடுக்கப்பட்ட சிறப்பு முயற்சிகள்

- *ஒரு கிராம ஊராட்சியில் ஒரு பணி என்பதற்குப் பதிலாக ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் ஒன்றுக்கும் மேற்பட்ட பணிகளை எடுத்து செய்ய அக்டோபர் 2011 முதல் அனுமதிக்கப்பட்டது. இதன்மூலம் தொழிலாளர்களின் பங்கேற்பு பன்மடங்கு அதிகரித்தது.*

- *2012-13 ஆம் ஆண்டில் வறட்சியைப் போக்கும் விதமாக, ஒரு குடும்பத்திற்கான வேலைவாய்ப்பு 100 நாட்கள் என்பதிலிருந்து 150 நாட்களாக உயர்த்தப்பட்டது. 21-2-2013 முதல் 31-3-2013 வரையிலான காலத்தில் 12.73 இலட்சம் குடும்பங்களுக்கு 100 நாட்களுக்கு மேல் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது. இதனால் இக்குடும்பங்களுக்கு கூடுதல் ஊதியமாக ரூ.271 கோடி வழங்கப்பட்டது.*

- *அண்ணா பல்கலைக்கழக தொலை உணர் தொடர்பு நிறுவனம்* (IRS) *மூலம் வள ஆதார வரைபடங்கள்* (Resource Map) *அனைத்து மாவட்டங்களுக்கும் கிடைக்கும் வகையில் தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வரைபடங்களின் அடிப்படையில், முந்தைய காலங்களில் பெற்றிருந்த கொள்ளளவை நீராதார அமைப்புகள் பெறும்வகையிலும், நிலத்தடி நீர் அளவை உயர்த்தும்பொருட்டும், செயற்கைக் கோள் உதவியுடன் தயார் செய்யப்பட்ட படங்களின் உதவியுடன் நீராதாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

- *ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால், சராசரி ஊதிய விகிதத்தினை அதிகரிக்க கால நிர்ணய வேலை அளவீடு* (Time & Motion) *மூலம் திருத்திய ஊரக விலைப் புள்ளிப் பட்டியல் வழங்குவது மற்றும் இதுகுறித்து தொழிலாளர்களுக்கு தெரிவிக்க ஏதுவாக பணித்தளப் பொறுப்பாளருக்கு பயிற்சியளிப்பது உள்ளிட்ட உறுதியான பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.*

- *2012-13 முதல் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகள் மற்றும் சிறு மற்றும் குறு விவசாயிகளின் நிலங்களில் தனி நபர் நில மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.*

[2016 ஆகஸ்ட் 5

- பசுமைப் பகுதிகளை அதிகரிக்கும்பொருட்டு அரசுக்குச் சொந்தமான இடங்கள், பொது இடங்கள், கிராம ஊராட்சிக்கு சொந்தமான இடங்கள் மற்றும் தனி நபர் விவசாயிகளது நிலங்களில் மரம் வளர்ப்புப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- ஊராட்சி/ஊராட்சி ஒன்றியச் சாலைகள், பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம், நபார்டு நிதியுதவித் திட்டம் ஆகிய திட்டங்களில் அமைக்கப்பட்ட சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைத் துறையினால் அமைக்கப்பட்ட சாலைகள் ஆகியவற்றில், சாலைகளின் இரு மருங்கிலும் மரக் கன்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- கிராம ஊராட்சிகள்/ஊராட்சி ஒன்றியங்களே காடு வளர்ப்புப் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக பல்வேறு மாவட்டங்களில், கிராம ஊராட்சிகள்/ஊராட்சி ஒன்றியங்களே நாற்றங்கால் அமைக்க ஊக்குவிக்கப்படுகின்றன.

- ஊரக மக்களுக்கு அதிகாரம் அளித்திடும்வகையில், கிராம ஊராட்சி சேவை மையங்கள் மற்றும் வட்டார ஊராட்சி சேவை மையங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

4.1.4 உன்னத முயற்சிகள்:

4.1.4.1 மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு பணிகள்

- மாற்றுத் திறனாளிகள் உரிமை (சமவாய்ப்பு, உரிமைப் பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம், 1995-ல் தெரிவித்துள்ளவற்றை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் செயல்படுத்தும் வகையில், தமிழக அரசு மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பு வழிவகைகள் செய்துள்ளது. இதற்கான அரசாணையில் மாற்றுத் திறனாளிகள், சிறப்புப் பணிகளை மேற்கொள்ளும்வகையில் அல்லது மண் வேலை தொடர்பான பணிகளை மேற்கொள்ள ஏதுவாக சிறப்பு நடவடிக்கைகள் செய்யப்பட்டுள்ளது.

- மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு நடவடிக்கைகளாக பணித் தளத்தில் தொழிலாளர்களுக்கு குடிநீர் வழங்கும்

2016 ஆகஸ்ட் 5]

பணி, குழந்தைகளைப் பராமரிக்கும் பொறுப்பு, பணித்தள பொறுப்பாளருக்கு முன் அளவீட்டினை மேற்கொள்ள உதவுதல், பணித் தளத்தில் அகற்றப்பட்ட மரங்களை அப்புறப்படுத்துதல் (இலை, தழைகள் மற்றும் சிறு மரங்கள்) ஆழப்படுத்தப்படும் இடங்களில் தண்ணீர் தெளித்தல் (குறிப்பாக கோடை காலங்களில்) மண்வெட்டி, கடப்பாறை போன்றவற்றை கொண்டு கரைகளில் கொட்டப்படும் மண்ணை சமன்படுத்துதல், கரைகளை சமன்படுத்துதல் (benching) மற்றும் கரைகளின் சரிவுப்பகுதியினை சீர்செய்தல் போன்றவை அடங்கும்.

- உடல் உழைப்பினை மேற்கொள்ளத் தகுதியுள்ள மாற்றுத் திறனாளிகளை மண் வேலை தொடர்பான பணிகளான முட்புதர்களை அகற்றுதல், ஆழப்படுத்துதல், மரம் நடுதல், மண் நிரப்புதல் மற்றும் நீர்பாய்ச்சுதல் போன்ற பணிகளுக்கு பயன்படுத்தலாம். மண் வேலையைப் பொறுத்தவரை மாற்றுத்திறனாளிகள் 50 சதவிகித வேலை செய்தாலே அல்லது நான்கு மணி நேரம் முழுமையாக வேலை மேற்கொண்டாலே போதுமானதாகும்.

- தமிழ்நாட்டின் இத்தகைய சிறப்பு முயற்சியினை மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் பாராட்டியதோடு மற்ற மாநிலங்களும் தமிழகத்தை முன்னுதாரணமாக கொண்டு செயல்படுத்த கேட்டுக்கொண்டுள்ளது.

- மாற்றுத் திறனாளி தொழிலாளர்களுக்கு சிறப்பு ஊரக விலைப்பட்டியலோடு சிறப்பு பணிவகைப்பாடும் தமிழகத்தால் ஏற்படுத்தப்பட்டதை அடிப்படையாகக் கொண்டு, மத்திய அரசால், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்ட அட்டவணை-1-ல் மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பு ஊரக விலைப்பட்டியல் இடம்பெறும்வகையில் திருத்தம் வெளியிடப்பட்டது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் (2011-12 முதல் 2015-16 வரை) மாற்றுத்திறனாளிகள்மூலம் 148.65 இலட்சம் மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டு ரூ.230.05 கோடி ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது.

[2016 ஆகஸ்ட் 5

4.1.4.2 பண்ணைக் குட்டைகள் அமைத்தல்

ஆதி திராவிடர்/பழங்குடியினர், சிறு மற்றும் குறு விவசாயிகளின் நிலங்களில் 15,000 பண்ணைக் குட்டைகள் அமைக்கும் பணி 8 டெல்டா மாவட்டங்களில் மேற்கொள்ளப் பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. விவசாயிகளிடமிருந்து வரப்பெற்ற பெருமளவிலான வரவேற்பினைத் தொடர்ந்து 23 டெல்டா அல்லாத பிற மாவட்டங்களிலும், டெல்டா அல்லாத பகுதிகள் அடங்கிய டெல்டா மாவட்டங்களிலும் பண்ணைக் குட்டைகள் அமைக்கும் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

4.1.4.3 பிற துறைகளுடன் ஒருமுகப்படுத்துதல்

கிராமப்புற மக்கள் குறுகிய காலத்தில் அதிக அளவில் பயனடையும்வகையில், பிற துறைகளுடன் ஒருங்கிணைத்து மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

ஊரக குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தவும், நில மேம்பாட்டு நடவடிக்கைகளை ஊக்குவிக்கவும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் இதர துறைகளான விவசாயம், தோட்டக் கலை, தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, கால்நடை பராமரிப்பு, மீன் வளம், வனத் துறை, பட்டு வளர்ப்பு, சமூக நலம், நெடுஞ்சாலை, பொதுப் பணித் துறை மற்றும் குடிமைப் பொருள் வழங்கல் போன்ற துறைகளுடன் ஒருமுகப்படுத்தப்பட்டுள்ளது. மீன் வளர்ப்பு நடவடிக்கைகளை மீன் வளத் துறையுடன் ஒருமுகப்படுத்தியும், அரசு பட்டு பண்ணைகளில் பண்ணைக் குட்டைகள் அமைத்தலை பட்டு வளர்ப்புத் துறையுடன் ஒருமுகப்படுத்தியும் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

4.1.4.4 மரக் கன்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ளுதல்

ஊரகப் பகுதிகளை பசுமைமயமாக்கும் முயற்சியாக, ஊராட்சி சாலைகள், ஊராட்சி ஒன்றிய சாலைகள், நெடுஞ்சாலைகள், பிரதம மந்திரியின் கிராம சாலைகள் ஆகியவற்றின் இருமருங்கிலும் 2,000 கி.மீ. நீளத்திற்கு நிழல்தரும் மரக் கன்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாபெரும் மரம் நடவு (Massive Tree Plantation) பணிகள் வனத் துறையுடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2016 ஆகஸ்ட் 5]

இதன்மூலம் பசுமையாக்குதல் அதிகரிக்கப்படுவதுடன், சுற்றுச்சூழல் மாசுபடுத்தும் காரணிகள் கட்டுப்படுத்தப்பட்டு மனித மற்றும் விலங்கினங்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்படுகின்றது. அரசு நிலங்கள், அரசு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், தொழிற்சாலைகள், பள்ளிகள், கல்லூரிகள், இதர அரசு நிறுவனங்கள், பொது பூங்காக்கள் மற்றும் பொருத்தமான இடங்களில் மரக் கன்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2014-15 ஆம் ஆண்டு 25.70 இலட்சம் மரக் கன்றுகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் நடப்பட்டுள்ளன. 2015-16 ஆம் ஆண்டு 32.63 இலட்சம் மரக் கன்றுகள் நடப்பட்டுள்ளன.

குடியிருப்புகளுக்கான பிரத்தியேக மரம் வளர்க்கும் திட்டத்தின்மூலம் 54,000 இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டப் பயனாளிகள் மற்றும் 60,000 முதலமைச்சரின் சூரிய ஒளியுடன்கூடிய பசுமை வீடுகள் திட்டப் பயனாளிகள் வீடுகளில் வீட்டிற்கு 4 பலன் தரும் பழக் கன்றுகள் வீதம், ஆக மொத்தம் 4.56 இலட்சம் மரக் கன்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 1,14,000 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

மரம் வளர்க்கும் திட்டத்திற்கான மரக் கன்றுகளின் தேவையை முழுமையாக பூர்த்தி செய்யும் வகையில், 2015-16 ஆம் ஆண்டில் 70 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த கிராம ஊராட்சிகளில் 120 நாற்றங்கால்கள் அமைக்கும் பணிகள் மாதிரி முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

4.1.5 வங்கிகள்/பொது நிதி மேலாண்மை முறைமூலம் ஊதியம் வழங்குதல் (PFMS)

வங்கிகள்மூலம் ஊதியம் வழங்குவதில் தாமதம் ஏற்படாமலிருப்பதற்காக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்களுக்கு 2013-14 முதல் மின்னணு நிதி மேலாண்மை முறை (e-FMS) மூலம் ஊதியம் வழங்கப்படுகிறது.

மின்னணு நிதி மேலாண்மை முறை (e-FMS) என்பது மாநில அளவில் நிருவகிக்கப்படும் வங்கிக் கணக்கிலிருந்து தொடர்பு வங்கி மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் பணியாற்றும் தொழிலாளர்களது வங்கிக் கணக்கிற்கு ஊதியத்தினை ஈடு செய்யும் ஒரு தானியங்கி முறையாகும்.

[2016 ஆகஸ்ட் 5

மின்னணு நிதி மேலாண்மை முறை (e-FMS) காஞ்சிபுரம் மாவட்டம், காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 4 கிராம ஊராட்சிகளில் சோதனை முறையில் 17-6-2013-ல் மேற்கொள்ளப்பட்டது. மாநிலத்தில் உள்ள 385 வட்டாரங்களில் உள்ள அனைத்து 12,524 கிராம ஊராட்சிகளிலும் இம்முறை படிப்படியாக செயல்படுத்தப்பட்டு 1-4-2014 முதல் மாநிலத்திலுள்ள அனைத்து தொழிலாளர்களுக்குமான ஊதியம் மின்னணு நிதி மேலாண்மை முறைமூலம் மட்டுமே வழங்கப்பட்டு வந்தது. 10-4-2015 முதல், வங்கி பரிமாற்றம் ஒற்றைக் கணக்கு தொடர்பு வங்கி முறையில் மாற்றம் செய்யப்பட்டு பொது நிதி மேலாண்மை முறை (PFMS) மூலம் ஊதியம் வழங்கப்படுகின்றது.

4.1.6 2011–12 முதல் 2015–16 வரையிலான சாதனைகள்

2011-12 முதல் 2015-16 ஆம் ஆண்டு வரை இந்த அரசால் 173.81 கோடி மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டு, ரூ.21,770.85 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட செயலாக்கத்தில் 2015-16 ஆம் ஆண்டு தேசிய அளவில் தமிழ்நாடு கீழ்க்கண்டவாறு சிறந்து விளங்குகிறது.

அட்டவணை 4.3

2015–16 ஆம் ஆண்டில் தேசிய அளவில் தமிழ்நாட்டின் செயல்பாடு

1.	மனிதசக்தி நாட்கள் உருவாக்குதல்	36.87 கோடி மனிதசக்தி நாட்களை எய்தியதன்மூலம் நாட்டிலேயே தமிழ்நாடு **முதலிடத்தை** பெற்றுள்ளது.
2.	தொழிலாளர்களுக்கான ஊதிய செலவினம்	தொழிலாளர்களுக்கான ஊதியமாக ரூ.4901.58 கோடி செலவழித்ததன்மூலம் நாட்டிலேயே தமிழ்நாடு **முதலிடத்தை** பெற்றுள்ளது.
3.	பெண்களின் பங்களிப்பு விகிதம்	**31.41** கோடி மனிதசக்தி நாட்கள் மகளிரால் எய்தப்பட்டதன்மூலம் நாட்டிலேயே **முதலாவது** இடத்தில் உள்ளது.
4.	தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினரின் பங்களிப்பு விகிதம்.	சாதனை 30 %

2016 ஆகஸ்ட் 5]

4.1.7 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திற்கான விருதுகள்

அ) மாநிலத்திற்கான தேசிய விருது

முதன்முறையாக சிறப்பாக செயல்பட்ட மாநிலங்களுக்கான விருதுகள் மூன்று வகைப்பாட்டின்கீழ் 2012-13 முதல் மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ளன. இவற்றில் தமிழ்நாடு "சமூகப் பங்களிப்பு" (social Inclusion) *என்ற வகைப்பாட்டில் சிறந்த மாநிலமாக தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கப்பட்டுள்ளது. மேலும், சமூக பங்களிப்பு என்ற வகைப்பாட்டின்கீழ் விருது பெற்ற ஒரே மாநிலம் தமிழ்நாடு மட்டுமே.*

''ஒருங்கிணைத்தல்மூலம் நிலைத்த வாழ்வாதாரத்தை ஏற்படுத்துதல்" என்கிற முயற்சிக்காக 2014-15 ஆம் ஆண்டுக்கு தமிழ்நாடு தேசிய விருது பெற்றது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை செயல்படுத்துவதில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பான முயற்சிகள் குறித்து நடத்தப்பட்ட கண்காட்சிக்கான தேசிய விருது தமிழ்நாட்டுக்கு புது டில்லியில் நடைபெற்ற மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தின நிகழ்ச்சியில் 2-2-2016 அன்று அளிக்கப்பட்டது.

ஆ) மாவட்டம் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கான தேசிய விருதுகள்

ஒவ்வொரு ஆண்டும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் தேசிய அளவில் நன்றாக செயல்படும் மாவட்டங்கள் மற்றும் கிராம ஊராட்சிகள் மத்திய அரசால் தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2011-12 முதல் 2014-15 ஆம் ஆண்டுவரை இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தியதற்காகப் பெறப்பட்ட விருதுகள் விவரம் கீழ்க்கண்டவாறு:

[2016 ஆகஸ்ட் 5

அட்டவணை 4.4

மாவட்டம் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கான தேசிய விருதுகள்

வருடம்	மாவட்ட விருது	கிராம ஊராட்சிக்கான விருது
2011–12	1. தஞ்சாவூர் 2. திருச்சிராப்பள்ளி	1. காடம்பாடி கிராம ஊராட்சி, சூலூர் ஊராட்சி ஒன்றியம், கோயம்புத்தூர் மாவட்டம்.
2012–13	1. நீலகிரி	1. தாணிக்கோட்டகம் கிராம ஊராட்சி, வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியம், நாகப்பட்டினம் மாவட்டம்.
2013–14	1. தேனி	1. எப். கீழையூர் கிராம ஊராட்சி, மணப்பாறை ஊராட்சி ஒன்றியம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
2014–15	1. திருவள்ளூர் 2. புதுக்கோட்டை	–

4.1.8 2016–17 ஆம் ஆண்டில் திட்ட செயலாக்கம்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகளானது ஊரக வளர்ச்சித் துறையின் இதர திட்டங்களான பிரதம மந்திரி வீடுகள் திட்டம் (கிராமம்), முதலமைச்சரின் சூரிய சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் கட்டும் திட்டம் மற்றும் இதர துறைகளான வேளாண்மை, தோட்டக் கலை, வனத் துறை, பட்டு வளர்ப்புத் துறை, மீன் வளம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை ஆகிய துறைகளுடன் ஒருங்கிணைத்தும் செயல்படுத்தப்பட்டுவருகிறது.

2016-17 ஆம் ஆண்டில் 31.55 கோடி மனித சக்தி நாட்களை உருவாக்குவதற்கு தொழிலாளர் வரவு செலவு திட்டத்தில் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

மார்ச் 2016-ல் டெல்லியில் நடைபெற்ற மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திற்கான 2016-17 ஆம் ஆண்டிற்கான தொழிலாளர் வரவு செலவு திட்டம், மத்திய அரசின் அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் கூட்டத்தில் பின்வரும் இனங்களில் இத்திட்டத்தினை தீவிரமாக செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

2016 ஆகஸ்ட் 5]

(i) 7,500 பண்ணைக் குட்டைகள், 10,000 குளங்கள் மற்றும் ஊரணிகள்

(ii) 385 மண்புழு உர அலகுகள்

(iii) 7.50 இலட்சம் தனிநபர் இல்லக் கழிப்பறைகள்

(iv) 1,000 அங்கன்வாடி மையங்கள்

(v) 10,000 கி.மீ. நீளத்திற்கு சாலைகளின் இருமருங்கிலும் மரம் நடுதல்

மேற்கூறப்பட்ட இலக்குகளின் அடிப்படையில், பின்வரும் முக்கியப் பணிகள் 2016-17 ஆம் ஆண்டில் செயல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளன.

- தனிநபர் சொத்துக்களை உருவாக்கும் பணிகளான சிறு மற்றும் குறு விவசாயிகள், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் விவசாய நிலங்களில் பண்ணைக் குட்டைகள் அமைக்கும் பணிகள் மற்றும் 7.5 இலட்சம் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

- 2013-14 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட பசுமையாக்குதல் முயற்சியினை தொடர்ந்து செயல்படுத்திடும் பொருட்டு கிராம ஊராட்சி நிலங்கள், பொது இடங்கள் மற்றும் சாலை ஓரங்களில் மரம் நடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் மரக் கன்றுகள் கிடைக்க ஏதுவாக நாற்றங்கால்கள் அமைக்கப்பட்டுவருகிறது.

- நீர் சேகரிப்புப் பணிகளான பாரம்பரிய நீர் ஆதாரங்களைச் சீரமைக்கும் பணிகளுக்கு முக்கியமாக பாசனக் குளங்களை தூர்வாருதல் மற்றும் பிற நீர் நிலைகளான ஊரணிகள், குட்டைகள், சிறு பாசனக் கண்மாய்கள், நீர்வரத்துக் கால்வாய்கள் மற்றும் பண்ணைக் குட்டை பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. இத்தகைய நீர் சேகரிப்பு மற்றும் நீர் பாசனப் பணிகள் 2016-17 ஆம் ஆண்டில் சுமார் ரூ.1,000 கோடி மதிப்பீட்டில் செய்யப்படவுள்ளன.

[2016 ஆகஸ்ட் 5

4.1.9 சமூக தணிக்கை

சமூக தணிக்கை என்பது அலுவலர்களோ, வெளி அமைப்புகளோ அல்லாது பொதுமக்களே செய்யும் தணிக்கை ஆகும். நிதி செலவினம் மட்டுமல்லாது, திட்டத்தின் செயல்முறை மற்றும் சமூக அம்சங்கள் பணித்திறன் ஆகிய கோணங்களிலிருந்தும் ஆய்வு செய்வது சமூக தணிக்கையின் நோக்கமாகும். சமூக தணிக்கை ஒரு தகவல் தொடர்பு மற்றும் கல்விக்கான கருவி; இது வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புடைமையை அமல்படுத்த உதவும். சமூக தணிக்கை வளர்ச்சித் திட்டங்களில் எல்லா நிலைகளிலும் (திட்டமிடுதல், வடிவமைத்தல், செயல்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தல்) மக்களின் பங்கேற்பை அதிகப்படுத்த உதவும். சமூக தணிக்கையின் முக்கியத்துவத்தை உணர்த்தும்பொருட்டு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தில், சிறப்பு கிராம சபையால் சமூக தணிக்கை நடத்த வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. மேலும், மத்திய அரசு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்ட தணிக்கை விதிகள் 2011 மூலம் சீரான தணிக்கை நடைமுறைகளை நிர்ணயித்துள்ளது.

சமூக தணிக்கை சங்கம் தோற்றுவித்தல்

1. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தணிக்கை விதிகள் 2011-ன் அடிப்படையில் அரசாணை (நிலை) எண் 64, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, நாள் 27-7-2012-ன்படி, சமூக தணிக்கை அலகு ஒன்று உருவாக்க உத்தரவிடப்பட்டு தேவையான அலுவலர்கள் மற்றும் அவர்களின் பொறுப்புகளும் இவ்வரசாணையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

2. அரசாணை (நிலை) எண் 125, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 21-12-2012-ல் தமிழ்நாடு சமூக தணிக்கைச் சங்கம் உருவாக்கிடவும் மற்றும் அதற்கான உப விதிகளுக்கு ஒப்புதல் வழங்கியும் ஆணையிட்டுள்ளது. தமிழ்நாடு சமூக தணிக்கைச் சங்கம் 2013 ஜனவரி 9 ஆம் தேதி தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975-ன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சமூக தணிக்கை சங்கத்தின்மூலம் 6 பயிற்சி கையேடுகள் வெளியிடப்பட்டுள்ளது.

2016 ஆகஸ்ட் 5]

- *பயிற்றுநர்களுக்கான பயிற்சி கையேடுகள் 2*
- *கிராம ஊராட்சி தலைவர்களுக்கான பயிற்சி கையேடு 1*
- *கிராம ஊராட்சி செயலாளர்களுக்கான பயிற்சி கையேடு 1*
- *வார்டு உறுப்பினர்களுக்கான பயிற்சி கையேடு 1*
- *ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களுக்கான பயிற்சி கையேடு 1*

மேலும், சமூக தணிக்கை குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும்வகையில் துண்டு பிரசுரம் விநியோகம் செய்யப்பட்டது.

மாதிரி சமூகத் தணிக்கை

2013 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சமூகத் தணிக்கை சங்கம் 19 மாவட்டங்களில் 19 மாதிரி சமூகத் தணிக்கைகள் மேற்கொண்டு குறைபாடுகளைக் கண்டறிந்து திட்டத்தினை செயல்படுத்தும் அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டு குறை நிவர்த்தி அறிக்கைகள் கோரப்பட்டது.

சமூகத் தணிக்கை செயல்பாடுகள்

சமூகத் தணிக்கை பணியானது 24-1-2015 முதல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2015 -16 ஆம் நிதியாண்டில் சமூக தணிக்கை நாட்காட்டிகள் தயாரிக்கப்பட்டு 24 சுற்றுகளில் 8,344 ஊராட்சிகளில் சமூகத் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. நடப்பு நிதியாண்டில் 30-5-2016 அன்று முதல் சமூக தணிக்கை தொடங்கப்பட்டு இதுவரை 2,463 கிராம ஊராட்சிகளில் சமூக தணிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், 2014-15, 2015-16 ஆகிய ஆண்டுகளில் தணிக்கை மேற்கொள்ளப்படாமல் நிலுவையிலிருந்த ஊராட்சிகளிலும் சமூக தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சமூகத் தணிக்கையின் தாக்கம்

சமூகத் தணிக்கையானது, திட்டப் பயனாளிகளிடையேயும், திட்டத்தினை செயல்படுத்துபவர்கள் மத்தியிலும் அளப்பறிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. திட்டத்தில் பங்கு கொள்பவர்களுக்கு சமூகத் தணிக்கையின் முக்கியத்துவம் உணர வைக்கப்பட்டுள்ளது. சமூக தணிக்கை அலகின்மூலம் பயனாளிகளுக்கு அவர்களின் உரிமைகள் மற்றும் கடமைகள்

தொடர்பாக வெற்றிகரமாக விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இச்சமூக தணிக்கையினை இத்திட்டத்தில் பணியாற்றும் பணியாளர்களைக் கொண்டு சமூக தணிக்கை மேற்கொள்வதால் வட்டார அளவில் மற்றும் ஊராட்சி அளவில் பராமரிக்கப்படும் பதிவேடுகளின் பதிவுகள் மேம்படுத்தப்பட்டுள்ளதோடு அதன் முக்கியத்துவம் உணர வைக்கப்பட்டுள்ளது. சமூகத் தணிக்கை சிறப்பு கிராம சபை கூட்டத்தினால் பொது மக்கள் தங்களது உரிமைகளையும் சட்ட ரீதியான பயன்களையும் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

4.2 பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்)

மத்திய அரசின் வீட்டு வசதி திட்டமானது பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்) என சீரமைக்கப்பட்டுள்ளது. கிராமப் பகுதிகளில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும், வீடில்லாத ஆதி திராவிடர்கள், பழங்குடியினர், கொத்தடிமைகளாக இருந்து விடுவிக்கப்பட்டவர்கள், வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் அல்லாத ஊரக ஏழை மக்கள் ஆகியோருக்கு இலவச வீடுகள் கட்டித் தருதல் முந்தைய இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். கிராம சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் நபர்களின் பட்டியலிலிருந்து பயனாளிகள் தேர்வு செய்யப்படுகின்றனர். இத்திட்டத்திற்கான ஒரு நிதியாண்டின் மொத்த ஒதுக்கீட்டில் குறைந்தபட்சம் 60 விழுக்காடு, வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு (SC/ST) புதிய வீடுகள் மற்றும் கச்சா வீடுகளை மேம்பாடு செய்வதற்காகப் பயன்படுத்தப்படும். அதிகபட்சமாக 40 விழுக்காடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் அல்லாத பிற வகுப்பினைச் சார்ந்த வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழ்கின்ற மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும். மேலும், மேற்கண்ட இனங்களில் 3 விழுக்காடானது, மாற்றுத் திறனாளிகள் மற்றும் மனவளர்ச்சி குன்றியோருக்கு ஒதுக்கப்படுகிறது. 2014-15 ஆம் ஆண்டு வரை 75:25 என்ற விகிதத்தில் இருந்த மத்திய மற்றும் மாநில அரசின் நிதிப் பங்கீடு விகிதம், 2015-16 ஆம் ஆண்டு முதல் 60:40 என மாற்றப்பட்டுள்ளது. ஒவ்வொரு வீடும் 210 சதுர அடி பரப்பளவு கொண்டது. கான்கிரீட் மேற்கூரை அமைப்பதற்காக அலகுத் தொகையைவிட கூடுதல் நிதியாக ரூ.50,000/- மாநில அரசு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. 2011-12 ஆம் ஆண்டு முதல்

2016 ஆகஸ்ட் 5]

2015-16 ஆம் ஆண்டு வரை மொத்தம் 4,41,637 வீடுகள் ரூ.4,875.718 கோடி மொத்த மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன. இது மாநில அரசு நிதியிலிருந்து வழங்கப்பட்ட ரூ.3,010.655 கோடியையும் உள்ளடக்கியது ஆகும்.

- *மேலும், 2015-16 ஆம் ஆண்டு முதல் பயனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டிய தொகை பொது நிதி மேலாண்மை முறையின் (PFMS) மூலம் பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக ஈடு செய்யப்படுகிறது.*

- *மேலும், 2015-16 ஆம் ஆண்டில், 90 மனித சக்தி நாட்களை ஒரு வீட்டிற்கு வழங்குவதன்மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தை ஒருங்கிணைப்பு செய்ய அரசாணை எண் 59, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ம.அ.தி.1) துறை, நாள் 15-4-2015-ல் உத்தரவிடப்பட்டுள்ளது.*

- *மேலும், தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) திட்டத்தின்மூலம் கழிப்பறை கட்ட ரூ.12,000 வழங்கப்படுகிறது.*

4.2.1 பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்) சிறப்புத் திட்டம் (வெள்ள நிவாரணம்) – 2016–17

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்) சிறப்புத் திட்டம் (வெள்ள நிவாரணம்) - 2016-17-ன்கீழ் அனைத்து மாவட்டங்களிலும் ரூ.778.396 கோடி மொத்த மதிப்பீட்டில் 45,788 வீடுகள் கட்டப்படும். மத்திய, மாநில அரசுகளின் நிதி பங்கீடு விகிதம் 60:40 ஆகும். பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்) சிறப்புத் திட்டம் (வெள்ள நிவாரணம்)-2016-17-ல் ஒரு வீட்டிற்கான அலகுத் தொகை ரூ.70,000/-ல் மத்திய அரசின் பங்குத் தொகை ரூ.42,000/- (60%) மற்றும் மாநில அரசின் பங்குத் தொகை ரூ.28,000/- (40%) ஆகும். கான்கிரீட் மேற்கூரை அமைப்பதற்காக மாநில அரசு கூடுதல் நிதியாக ரூ.1,00,000/- வழங்குவதால், தமிழ்நாட்டில் பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்) சிறப்புத் திட்டம் (வெள்ள நிவாரணம்)-2016-17-ன்கீழ், ஒரு வீட்டிற்கான மொத்த அலகுத் தொகை ரூ.1.70 இலட்சம் ஆகும். இதில், மாநில அரசின் பங்குத் தொகை ரூ.1,28,000/- (75.29%) மத்திய அரசின் பங்குத் தொகை ரூ.42,000/- (24.71%).

4.2.2 பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்) – 2016–17

- *2016-17 ஆம் ஆண்டு முதல் இந்திரா நினைவு குடியிருப்பு திட்டம், பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்)* (Pradhan Mantri Awaas Yojana-Gramin) *என சீரமைக்கப்பட்டுள்ளது.*
- *பொருத்தமான மற்றும் புதிய தொழிற்நுட்பங்களைப் பயன்படுத்தி பயனுள்ள மதிப்பீட்டில்* (Cost Effective) *பயனாளிகளால் தரமான மற்றும் பேரிடர்களைத் தாங்கக் கூடிய வீடுகள் கட்டுவதை நோக்கமாகக் கொண்ட திட்டம் பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்) ஆகும்.*
- *சமூகப் பொருளாதார கணக்கெடுப்பு பட்டியல் 2011-ஐ பயன்படுத்தி கிராம சபைமூலம் பயனாளிகளைக் கண்டறிந்து, பயனாளிகள் தேர்வு செய்யப்பட உள்ளனர். பயனாளிகளை நீக்குதல் அல்லது முன்னுரிமைப்படுத்துதலில் ஏற்படும் குறைபாடுகளைக் களைய "மேல்முறையீட்டுக் குழு"* (Appellate Commitee) *ஒன்று மாவட்ட அளவில் ஏற்படுத்தப்பட உள்ளது.*

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 2016-17 ஆம் ஆண்டு தமிழகத்திற்கு 1,31,831 வீடுகள் கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

4.3 நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் கட்டமைப்பு வசதிகளில் உள்ள இடைவெளியினை நிரப்புவதே நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கமாகும். மத்திய அரசு, நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியினை 2011-12 ஆம் ஆண்டு முதல் ரூ.2 கோடியிலிருந்து ரூ.5 கோடியாக உயர்த்தியுள்ளது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இத்திட்ட செயலாக்கத்திற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையே தொடர்புத் துறை ஆகும். தமிழ்நாட்டில் 39 மக்களவை உறுப்பினர்களுக்கும், 18 மாநிலங்களவை உறுப்பினர்களுக்கும் மற்றும் 2 தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்

2016 ஆகஸ்ட் 5]

பணிகளுக்கான நிருவாக அனுமதி வழங்குவார். இத்திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யக்கூடிய பணிகள் குறித்த விளக்கப் பட்டியலும், தடை செய்யப்பட்ட பணிகள் குறித்தும் வழிகாட்டு நெறிமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் அனைத்து வகையான பராமரிப்புப் பணிகளும் தடை செய்யப்பட்டுள்ளன. குளங்கள், குட்டைகள், ஆறுகள், வாய்க்கால் தூர் வாருதல் போன்ற பணிகள் பராமரிப்புப் பணிகளாக கருதப்பட்டு இத்திட்டத்தின்கீழ் எடுத்து செய்ய இயலாது.

இத்திட்டத்தின்கீழ் 2015-16 ஆம் ஆண்டில் ரூ.295 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அட்டவணை 4.5

நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதி 2015–16 ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள பணிகள் விபரம்

வ.எண்	பணிகள்	பணிகளின் எண்ணிக்கை	நிதி ஒதுக்கீடு (ரூ.கோடி)
1.	கட்டடங்கள்	976	76.75
2.	சாலைகள்	1146	82.45
3.	குடிநீர் வழங்கல்	532	19.69
4.	இதர பணிகள்	1960	106.86
மொத்தம்		**4614**	**285.75**

4.3.1 வடமேற்கு பருவ மழை–2015

நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி உள்ளூர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வெள்ள நிவாரணப் பணிகள் மேற்கொள்ளல்

தமிழகத்தில் கடந்த 2015 நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் ஏற்பட்ட பெருமழை வெள்ளத்தையடுத்து, மத்திய அரசு இம்மாநிலத்தை பேரிடர் மாநிலமாக அறிவித்தது.

அதனைத் தொடர்ந்து, கடலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் வெள்ள நிவாரணப் பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர்கள் அளித்திருந்த பணிகள் பட்டியலின்படி, மத்திய அரசிற்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டது.

[2016 ஆகஸ்ட் 5

அதன்படி, மத்திய அரசு மேற்காணும் கருத்துருவை ஏற்றுக்கொண்டதையடுத்து கீழ்க்காணும் விவரப்படி பணிகள் எடுத்துச் செய்யப்பட்டு வருகின்றன.

அட்டவணை 4.6

மாவட்டம்	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை		பொ.பதுறை		நகராட்சி நிருவாகம்		ஆக மொத்தம்	
	எடுக்கப்பட்டுள்ள பணிகள் எண்ணிக்கை	மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)	எடுக்கப்பட்டுள்ள பணிகள் எண்ணிக்கை	மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)	எடுக்கப்பட்டுள்ள பணிகள் எண்ணிக்கை	மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)	எடுக்கப்பட்டுள்ள பணிகள் எண்ணிக்கை	மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)
கடலூர்	12	377.50	1	700	1	300	14	1377.50
காஞ்சிபுரம்	197	1533.20	-	-	-	-	197	1533.20
திருவள்ளூர்	11	1042.50	-	-	-	-	11	1042.50
கூடுதல்	**220**	**2953.20**	**1**	**700**	**1**	**300**	**222**	**3953.20**

4.4 பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்

500-க்கும் மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட இணைப்புச் சாலை வசதி இல்லாத குக்கிராமங்களுக்கு சாலை இணைப்பு வசதி செய்து தருவதும், ஏற்கெனவே உள்ள இணைப்புச் சாலைகளை மேம்படுத்துவதும் இத்திட்டத்தின் குறிக்கோளாகும். பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம், முன்னர் 100% மத்திய அரசு நிதி ஆதாரத்துடன் செயல்படுத்தப்பட்டது. தற்போது, 60% மத்திய அரசின் பங்களிப்புடனும், 40% மாநில அரசின் பங்களிப்புடனும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2016 ஆகஸ்ட் 5]

அட்டவணை 4.7

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் பகுதி I முதல் VII வரை

வ.எண்	பகுதி	வருடம்	எண்ணிக்கை	நீளம் கி.மீ.	மதிப்பு (ரூ. கோடியில்)
1.	I	2000-01	862	1442.123	152.911
2.	II	2001-02	444	795.088	114.265
3.	III	2003-04	491	1096.398	159.072
4.	IV	2004-05	393	778.310	111.354
5.	V	2005-06	365	799.592	170.838
6.	VI	2006-07	810	2049.019	459.819
7.	VII	2007-08	1581	3010.324	853.720
மொத்தம்			4946	9970.854	2021.98

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் பகுதி VII (அதாவது 2000 முதல் 2008 வரை) 4946 சாலைப் பணிகள் எடுக்கப்பட்டு, அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு விட்டன.

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் பகுதி VIII

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் பகுதி VIII-ன்கீழ், 3,091 கி.மீ. நீளமுள்ள, 1,295 சாலைப் பணிகள் மற்றும் 45 பாலங்கள், 1,128.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன. இதில் 254.06 கோடி ரூபாய் மாநில அரசின் பங்கு அடங்கும்.

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் பகுதி IX

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் பகுதி IX-ன்கீழ், 956 கி.மீ. நீளமுள்ள 401 சாலைப் பணிகள் மற்றும் 6 பாலங்கள் 357.12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன. இதில், 160.72 கோடி ரூபாய் மாநில அரசின் பங்கு அடங்கும்.

[2016 ஆகஸ்ட் 5

4.5 தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்)

அனைத்து வீடுகளுக்கும் சுகாதார வசதிகளை 2012-க்குள் ஏற்படுத்திடவும், ஊரகப் பகுதிகளில் சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கிலும் மத்திய அரசால் "முழு சுகாதார இயக்கம்" 1999 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, பின்னர் 2004 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டது.

இத்திட்டமானது, 1-4-2012 முதல், "நிர்மல் பாரத் அபியான்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டு மத்திய அரசு திருத்திய வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டது. இத்திட்டத்தின்கீழ் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டுவதற்காக வழங்கப்படும் ஊக்கத் தொகை, வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்கள் மட்டுமல்லாமல் வறுமைக்கோட்டிற்கு மேலுள்ள குடும்பங்களில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், சிறு மற்றும் குறு விவசாயிகள், வீடு உள்ள ஆனால் நிலமற்ற விவசாய உழைப்பாளிகள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் பெண்கள் தலைமையில் செயல்படும் குடும்பங்களுக்கு மட்டும் விரிவுபடுத்தப்பட்டது.

மகாத்மா காந்தியடிகளின் 150-வது பிறந்த நாளில் அவருக்குப் பொருத்தமான அஞ்சலி செய்யும்வகையில் அனைத்து முயற்சிகளையும் முடுக்கிவிட்டு அனைவருக்கும் சுகாதார வசதிகள் முழுமையாக அடைவதன்மூலம் தூய்மை பாரதம் என்ற நிலையை 2019 ஆம் ஆண்டிற்குள் எய்த வேண்டி, மத்திய அரசால் 2014 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2-ம் நாள் முதல், நிர்மல் பாரத் அபியான் திட்டத்தின் தொடர்ச்சி திட்டமாக "தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்)" தொடங்கப்பட்டது.

திட்டத்தின் நோக்கங்கள்

தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:

அ) திறந்தவெளியில் மலம் கழித்தலை ஒழித்து, தூய்மை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்தி ஊரகப் பகுதிகளில், மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்பாடு செய்தல்.

ஆ) 2-10-2019-க்குள் தூய்மை பாரதத்தின் இலக்கினை எய்த ஊரகப் பகுதிகளில் சுகாதார மேம்பாட்டின் செயல்பாடுகளை விரைவுபடுத்துதல்.

2016 ஆகஸ்ட் 5]

இ) *நிலையான சுகாதாரப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்திட ஊராட்சி அமைப்புகள் மற்றும் சமூகங்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் சுகாதாரக் கல்விமூலம் ஊக்குவித்தல்.*

ஈ) *நிலையான சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பான வகையில், சிக்கனமான மற்றும் பொருத்தமான தொழில்நுட்பத்தை ஊக்குவித்தல்.*

உ) *ஊரகப் பகுதியில் ஒட்டுமொத்த சுகாதாரத்தினை ஏற்படுத்தத் தேவையான இடங்களில் அறிவியல் பூர்வமான திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை முறைகளை, சமூகத்தால் நிருவகிக்கப்படும் வகையில் ஏற்படுத்துதல்.*

தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) கூறுகள்

தனிநபர் இல்லக் கழிப்பறை, சமூக சுகாதார வளாகம், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்டம் ஆகியவை தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) திட்டத்தின் முக்கிய கூறுகளாகும்.

(அ) தனி நபர் இல்லக் கழிப்பறை

முறையாக முடிக்கப்பட்ட தனிநபர் இல்ல சுகாதார கழிப்பறையானது, அடித்தள கட்டுமானம், மேல்தளக் கட்டுமானம் மற்றும் தண்ணீர் வசதி ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். அனைத்து ஊரக குடும்பங்களும் கழிப்பறை வசதி பெறுவதை உறுதி செய்வதே இவ்வியக்கத்தின் நோக்கமாகும்.

தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) கீழ், வறுமைக் கோட்டிற்குக்கீழ் மற்றும் அடையாளம் காணப்பட்ட வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பத்திற்கு தனி நபர் இல்லங்களில் கழிப்பறை கட்ட அலகுத் தொகை ரூ.12,000/- ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. மத்திய அரசு 2015-16 ஆம் ஆண்டு முதல் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்குத் தொகையினை 60:40 என்ற விகிதத்தில் மாற்றம் செய்துள்ளது. பயனாளியின் பங்களிப்பு இல்லாமல் இந்த தொகை முழுவதும் தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) கீழ், மத்திய அரசு பங்குத் தொகையாக ரூ.7,200/- மற்றும் மாநில அரசு பங்குத் தொகையாக ரூ.4,800/- வழங்கப்படுகிறது.

2013-14, 2014-15 மற்றும் 2015-16 ஆம் ஆண்டுகளில், 16,39,851 தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. தூய்மை பாரத

[2016 ஆகஸ்ட் 5

இயக்கத்தின்கீழ் (ஊரகம்) 2016-17 ஆம் ஆண்டில், ரூ.919.45 கோடி நிதி ஒதுக்கீட்டில், 7,66,208 தனிநபர் இல்லக் கழிப்பறைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டுதல்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் தனியாக தனிநபர் இல்லக் கழிப்பறைப் பணிகள், ரூ.12,000/- அலகுத் தொகையில் எடுக்கப்படுகிறது. 2016-17 ஆம் ஆண்டில் 7.51 இலட்சம் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை

திட மற்றும் திரவ கழிவுக் மேலாண்மை இத்திட்டத்தின் ஒரு கூறாகும். தூய்மை பாரத இயக்கத்தின்கீழ், (ஊரகம்) திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்ட செயலாக்கத்திற்கான மொத்த உதவித் தொகை ஒவ்வொரு கிராம ஊராட்சியின் மொத்த தனிநபர் இல்லங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கணக்கிடப்படும்.

(இ) சமூக சுகாதார வளாகங்கள்

போதிய எண்ணிக்கையிலான கழிப்பறைகள், குளியலறைகள், துணி துவைக்கும் மேடைகள், கை கழுவுவதற்கான வசதி மற்றும் இதர வசதிகளை உள்ளடக்கிய சமூக சுகாதார வளாகங்கள் கிராம மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய மற்றும் எளிதில் அணுகக்கூடிய இடத்தில் அமைத்திடலாம். ஒவ்வொரு சமூக சுகாதார வளாகத்திற்கும் அதிகபட்சமாக ரூ.2 இலட்சம் வரை நிதி உதவி அளிக்கப்படும். மத்திய அரசு, மாநில அரசு மற்றும் சமுதாயப் பங்குத் தொகை 60:30:10 என்ற விகிதத்தில் வழங்கப்படுகிறது.

4.6 நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம்

நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம் 11-10-2014-ல் மத்திய அரசால் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகள் www.saanjhi.gov.in *வலைதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.*

2016 ஆகஸ்ட் 5]

தேர்வு செய்யப்படும் கிராமங்களில் அனைத்து துறைகளின் திட்டங்களையும் ஒருங்கிணைத்து, ஒருமுகப்படுத்தி, மாதிரி கிராமங்களில் செயல்படுத்தி அனைத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். கிராம ஊராட்சியே இத்திட்ட செயலாக்கத்தின் அடிப்படை அலகாகும். சமவெளிப் பகுதிகளில் மக்கள்தொகை 3000 முதல் 5000 வரையும், மலைப் பகுதி மற்றும் பழங்குடி கிராமங்கள் எனில் மக்கள் தொகை 1000 முதல் 3000 வரையும் உள்ள கிராம ஊராட்சியை ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் தேர்ந்தெடுக்க வேண்டும். மாவட்டங்களில் இந்த அலகு அளவுக்கு மக்கள்தொகை கிடைக்கவில்லை என்றால் ஏறக்குறைய இதே அளவுக்கு மக்கள்தொகை உள்ள கிராம ஊராட்சிகளை தேர்வு செய்யலாம். நாடாளுமன்ற உறுப்பினர் தனது (அ) தனது மனைவியின்/ கணவனின் சொந்த கிராமத்தை தவிர்த்து இதர கிராமங்களிலிருந்து மாதிரி கிராமமாக உருவாக்க வேண்டிய கிராம ஊராட்சியை தங்கள் விருப்பப்படி கண்டறியலாம். மக்களவை உறுப்பினர் தனது தொகுதிக்குள்ளும், மாநிலங்களவை உறுப்பினர் தனது மாநிலத்திற்குள்ளும், நியமன உறுப்பினர் இந்திய அளவில் எந்த ஒரு மாநிலத்திலும், ஒரு கிராமத்தை தேர்ந்தெடுக்கலாம். நகர்ப்புற தொகுதியை பொறுத்தவரையில் கிராம ஊராட்சிகள் இல்லையெனில் சம்பந்தப்பட்ட மக்களவை உறுப்பினர் அருகிலுள்ள ஊரகத் தொகுதியிலிருந்து கிராமத்தை தேர்ந்தெடுக்க வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமமாக உருவாக்க வேண்டிய ஒரு கிராம ஊராட்சியை உடனடியாகவும் மற்ற இரண்டு கிராம ஊராட்சிகளை பின்னரும் தெரிவு செய்ய வேண்டும். முக்கியமாக, 2019 மார்ச் மாதத்திற்குள் மூன்று மாதிரி கிராமங்களை உருவாக்க வேண்டும். அதில் ஒன்று 2016-க்குள் உருவாக்கப்படுதல் வேண்டும். இவ்வாறாக 2024-க்குள் 5 மாதிரி கிராம ஊராட்சிகளை (ஆண்டிற்கு ஒன்று வீதம்) தேர்வு செய்து மேம்படுத்த வேண்டும்.

அரசு தலைமைச் செயலாளரின் தலைமையிலான உறுப்பினர்கள் அடங்கிய மாநில அளவிலான அதிகாரம் அளிக்கப்பட்ட குழு, அரசாணை நிலை எண் 23, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ம.அ.தி. 2) துறை, நாள் 13-2-2015-ன்படி அமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரி கிராமங்களில் பல்வேறு துறைகளின் ஏற்கெனவே நடைமுறையில் உள்ள அரசுத்

திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு என தனியாக நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. மேலும், புதிய உட்கட்டமைப்பு மற்றும் கட்டுமானம் தொடர்புடைய திட்டங்களும் அனுமதிக்கப்படவில்லை. அனைத்து வளங்களும் ஒரே இலக்கினை நோக்கி ஒருங்கிணைந்த வகையில் அதிகபட்ச பயன்களை தரும்வகையில் உபயோகிக்கப்பட வேண்டும். மத்திய அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்களில் தொடர்புடைய அமைச்சகம், மத்திய அரசுத் துறைகள் / மத்திய அரசு நிதிப் பங்களிப்போடு செயல்படுத்தப்படும் திட்டங்களில் மாதிரி கிராமங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் வழிகாட்டு நெறிமுறைகளில் தகுந்த மாற்றங்கள் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தில் அதிகபட்ச பலன்களை அடைய மாநில அரசால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்த வேண்டும்.

4.7 தேசிய கரிம வாயு மற்றும் உர மேலாண்மைத் திட்டம்

இயற்கைக் கழிவுகளை சக்தியாக மாற்றம் செய்து முழுமையாக பயன்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கம் ஆகும். இத்திட்டம் 100 விழுக்காடு மத்திய அரசு மானியத்துடன் செயல்படுத்தப்படுகிறது. பொதுப் பிரிவினருக்கு ஒரு கன மீட்டருக்கு ரூ.5,500/- மற்றும், 2-6 கன மீட்டருக்கு ரூ.9,000/- வீதம் மானியம் வழங்கப்படுகிறது, ஆதி திராவிடர்/பழங்குடியினர் மற்றும் மலைப்பாங்கான பகுதிகளில் உள்ள பயனாளிகளுக்கு ஒரு கன மீட்டருக்கு ரூ.7,000/- மற்றும் 2-6 கன மீட்டருக்கு ரூ.11,000/- என மானியம் வழங்கப்படுகிறது. மேலும், கழிவறைகளுடன்கூடிய கரிம வாயுக் கலன்களுக்கு கூடுதலாக ரூ.1,200/- வீதம் மானியம் வழங்கப்படுகிறது.

2016-17 ஆம் நிதி ஆண்டில் மத்திய அரசு 300 கரிம வாயுக் கலன்கள் அமைத்திட செயல் இலக்காக நிர்ணயித்துள்ளது.

2016 ஆகஸ்ட் 5]

5. மனித வள மேம்பாடு

5. மனித வள மேம்பாடு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையானது பணியாளர்களின் பணி நிலையினை மேம்படுத்தவும், அவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தவும் தொடர்ச்சியான மற்றும் உறுதியான முயற்சிகளை எடுத்து வருகிறது.

5.1 அரசிதழ் பதிவு பெற்ற பணியமைப்பு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் மொத்தம் 1,562 அரசிதழ் பதிவு பெற்ற பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

அட்டவணை 5.1

வகைவாரியான பணியாளர்கள் விவரம்

அரசுப் பணியாளர்கள்—அரசிதழ் பதிவு பெற்றவர்கள்

வ. எண்	பதவியின் பெயர்	அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள் எண்ணிக்கை	ஊதிய விகிதம்
1.	கூடுதல் ஊரக வளர்ச்சி இயக்குநர்	20	ரூ.37400-67000+8800 தர ஊதியம்
2.	இணை இயக்குநர்	89	ரூ.15600-39100+7600 தர ஊதியம்
3.	உதவி இயக்குநர்	407	ரூ.15600-39100+5400 தர ஊதியம்
4.	வட்டார வளர்ச்சி அலுவலர்	1046	ரூ.9300-34800+5100 தர ஊதியம் + 1000 சிறப்பு படி
மொத்தம்		**1,562**	

காலியாக உள்ள கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பணியிடங்களை நிரப்ப அரசு உத்தரவிட்டுள்ளது. அரசுப் பணியாளர்களின் உரிமைகள், பதவி உயர்வு உள்பட, உரிய காலத்தில் வழங்கப்படுவதை அரசு உறுதி செய்துள்ளது.

- *ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 16 கூடுதல் இயக்குநர்களும் இதர துறைகளில் 4 கூடுதல் இயக்குநர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.*

- *இணை இயக்குநர் நிலையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 75 இணை இயக்குநர்களும் இதர துறைகளில் 14 இணை இயக்குநர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.*
- *உதவி இயக்குநர் நிலையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 323 உதவி இயக்குநர்களும் இதர துறைகளில் 2 உதவி இயக்குநர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.*

500 ஊரட்சிகளுக்கு மேல் உள்ள விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் கூடுதலாக 5 உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மற்றும் 5 உதவி இயக்குநர் (தணிக்கை) பணியிடங்கள் தோற்றுவித்து உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி, புதியதாக தோற்றுவிக்கப்பட்ட அலுவலகங்களுக்கு உதவி இயக்குநர்கள் நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள்.

5.2 பொறியியல் பணியமைப்பு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பொறியியல் பிரிவில் மொத்தம் 5,300 பொறியியல் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

அட்டவணை 5.2

வகைவாரியாக பொறியியல் பணியாளர்கள் விவரம்

வ. எண்	பதவியின் பெயர்	அனுமதிக்கப் பட்ட பணியிடங்கள்	ஊதிய விகிதம்
1.	கண்காணிப்பு பொறியாளர்	2	ரூ.37400-67000+ தர ஊதியம் ரூ. 8700
2.	செயற் பொறியாளர்	47	ரூ.15600-39100+ தர ஊதியம் ரூ.6600
3.	உதவி செயற் பொறியாளர்	195	ரூ.15600-39100+ தர ஊதியம் ரூ.5400
4.	உதவிப் பொறியாளர்	952	ரூ.9300-34800+ தர ஊதியம் ரூ.5100
5.	முதுநிலை வரைதொழில் அலுவலர்	34	ரூ.9300-34800+ தர ஊதியம் ரூ.5100

2016 ஆகஸ்ட் 5]

வ. எண்	பதவியின் பெயர்	அனுமதிக்கப் பட்ட பணியிடங்கள்	ஊதிய விகிதம்
6.	இளநிலைப் பொறியாளர்	317	ரூ.9300-34800+ தர ஊதியம் ரூ.4400
7.	பணிப்பார்வையாளர் / இளநிலை வரைதொழில் அலுவலர்	2604	ரூ.9300-34800+ தர ஊதியம் ரூ.4200
8.	சாலை ஆய்வாளர்	1149	ரூ.5200-20200+ தர ஊதியம் ரூ.2400
மொத்தம்		**5,300**	

- *ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 39 செயற் பொறியாளர்களும், இதர துறைகளில் 6 செயற் பொறியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.*

- *உதவி செயற் பொறியாளர் நிலையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 173 உதவி செயற் பொறியாளர்களும், இதர துறைகளில் 10 உதவி செயற் பொறியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.*

- *ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 811 உதவி பொறியாளர்களும், 135 இளநிலை பொறியாளர்களும், 15 முதுநிலை வரைதொழில் அலுவலர்களும், 1,838 பணிப்பார்வையாளர்கள்/இளநிலை வரைதொழில் அலுவலர்களும் பணிபுரிந்து வருகின்றனர். மேலும், அரசாணை (நிலை) எண் 49, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் (இ3) துறை, நாள் 31-3-2015-ல் சாலை ஆய்வாளர் நிலை-2 மற்றும் சாலை ஆய்வாளர் நிலை-1 ஆகியவற்றை ஒருங்கிணைத்து சாலை ஆய்வாளர் என ஆணையிடப்பட்டுள்ளது. தற்பொழுது 635 சாலை ஆய்வாளர்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் பணிபுரிந்து வருகின்றனர்.*

5.3 முதுநிலை அலுவலர்களை பிற துறைக்கு மாற்றுப் பணியில் அனுப்புதல்

இத்துறையைச் சார்ந்த கூடுதல் இயக்குநர், இணை இயக்குநர், செயற் பொறியாளர், உதவி இயக்குநர் மற்றும் உதவி செயற் பொறியாளர் நிலையில் உள்ள முதுநிலை அலுவலர்களை சிறப்புத் திட்டங்கள் நிறைவேற்றல் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால்

வாரியம், மாநில திட்டக் குழு, கால்நடை பராமரிப்புத் துறை, பால்வளம் மற்றும் மீன் வளத் துறை, மின் வாரியம், தமிழ்நாடு நீர் வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, மோனோ ரயில் திட்டம், தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், மன்னார் வளைகுடா உயிர்க்கோளக் காப்பகம், சமூக நலம் மற்றும் சத்துணவுத் துறை, தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (TAHDCO), தமிழ்நாடு கால்நடை மற்றும் விலங்கு அறிவியல் பல்கலைக்கழகம் (TANUVAS), தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் (ஆவின்), சென்னை பெருநகர வளர்ச்சிக் கழகம் (CMDA), பேரூராட்சிகள் இயக்ககம், மாநில நலவாழ்வு சங்கம் (TNHSP), தேசிய ஊரக சாலை மேம்பாட்டு முகமை (NRRDA) போன்ற துறைகளில் மாற்றுப் பணியில் பணிபுரிய உத்தரவிடப்பட்டுள்ளது. இது இத்துறையில் அவரது பணிகளை திறம்பட செய்ய அனுபவம் மற்றும் பட்டறிவை வழங்குகிறது.

5.4 அரசிதழ் பதிவு பெறா பணியமைப்பு

தமிழக அரசு கடந்த ஐந்து ஆண்டுகளில் பணியாளர் நலன் தொடர்பான நடவடிக்கைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்துள்ளது. சிறந்த நிருவாகத்தினை உறுதி செய்யும்பொருட்டு அனைத்து மட்டங்களிலும் பணியாளர்களுக்கு உரிய காலத்தில் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. உதவியாளர் மற்றும் இளநிலை உதவியாளர் நிலையில் பல்வேறு காலிப் பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் நேரடி நியமனத்தால் நிரப்பப்பட்டுள்ளன. தமிழ்நாடு அடிப்படை பணியமைப்பின்கீழ் வரும் காலிப் பணியிடங்களும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பட்டியல் பெற்றும், செய்தித் தாள்களில் விளம்பரம் வெளியிடப்பட்டும் நேரடி நியமனத்தின் மூலம் நிரப்பப்பட்டுள்ளன. 2015-16 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகளின்கீழ் வரப்பெறும் 4375 காலிப் பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நேரடி நியமனம்மூலம் நிரப்பப்பட்டுள்ளன. மேலும், 2015-2016 ஆம் ஆண்டில் தமிழ்நாடு பொது சார்நிலைப் பணிகள் மற்றும் அடிப்படை பணிகளின்கீழ் அமையும் 381 பணியிடங்கள் நேரடி நியமனம்மூலம் நிரப்பப்பட்டுள்ளன.

மேலும், 1018 துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்களாகவும், 1316 உதவியாளர்கள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களாகவும் மற்றும் 2013 தட்டச்சர்கள்/ இளநிலை உதவியாளர்கள், உதவியாளர்களாகவும் பதவி உயர்வு

2016 ஆகஸ்ட் 5]

பெற்றுள்ளனர். 475 நபர்கள் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். 2011-2012 முதல் 2015-2016 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் பதிவறை எழுத்தர்/அலுவலக உதவியாளர்/இரவுக் காவலராக பணியாற்றிய 126 நபர்கள் 10% இட ஒதுக்கீட்டின்கீழும், 599 ஊராட்சி செயலர்கள் 20% இட ஒதுக்கீட்டின்கீழும் இளநிலை உதவியாளர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

கிராம ஊராட்சி பணியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அரசால் பிறப்பிக்கப்பட்டுள்ள பல்வேறு ஆணைகளின் விவரம் பின்வருமாறு:

- *"ஊராட்சி உதவியாளர்" என்ற பணியிடத்தின் பெயரினை "ஊராட்சி செயலாளர்" என பெயர் மாற்றம் செய்து அவர்களுக்கு சிறப்புப் படியாக மாதம் ரூ.500/- வழங்கி அரசாணை (நிலை) எண் 52, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள் 29-8-2011-ல் ஆணையிடப்பட்டுள்ளது.*
- *அரசாணை (நிலை) எண் 70, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள். 7-8-2012-ல் நிரந்தர பயணப்படியாக ரூ.300/- ஊராட்சி செயலர்களுக்கு அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது.*
- *அரசாணை (நிலை) எண் 71, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள் 7-8-2012-ல் கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்களுக்கு மாதம் ரூ.200/- சிறப்புப் படியாக அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது.*
- *அரசாணை (நிலை) எண் 39, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள் 7-5-2013-ல் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் அரசு அலுவலகங்களில் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் துப்புரவுப் பணியாளர்களாக பணிபுரிந்துள்ள 10101 துப்புரவுப் பணியாளர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் ரூ.1300-3000 + தர ஊதியம் ரூ300/- அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது.*
- *அரசாணை (நிலை) எண் 129 மற்றும் 130, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள் 14-9-2013-ல் மக்கள்தொகை அடிப்படையில் 16726 துப்புரவுப் பணியாளர்களை கிராம ஊராட்சிகளில் பணியமர்த்த*

[2016 ஆகஸ்ட் 5

ஆணையிடப்பட்டு, அவ்வரசு ஆணைகளில் குறிப்பிட்டுள்ள வழிமுறைகளின்படி 16,508 துப்புரவுப் பணியாளர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

- பெண் அரசு ஊழியர்களுக்கு அனுமதிக்கப்பட்டது போன்றே பெண் ஊராட்சி செயலர்களுக்கும் மகப்பேறு விடுப்பு 180 நாட்களாக உயர்த்தி அரசாணை (நிலை) எண் 148, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள் 27-11-2014-ல் அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.
- கிராம ஊராட்சி செயலர்கள், துப்புரவு பணியாளர்கள், மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி இயக்குபவர்கள் மற்றும் இதர கிராம ஊராட்சி பணியாளர்களுக்கு ஜூன் 2014 முதல் மாதந்தோறும் ஊதியம் மின்னணு பரிமாற்றம் (ECS) மூலம் வழங்கப்படுகிறது. கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களின் விவரங்களும் tnrd.gov.in வலைதளத்தில் பதியப்பட்டுள்ளது.
- அரசாணை (நிலை) எண் 42, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள் 24-3-2015-ல் ஊராட்சி செயலர்களுக்கு ஓய்வுபெறும்போது வழங்கப்படும் சிறப்பு ஓய்வூதியத் தொகை ரூ.700/-லிருந்து ரூ.1,000/- ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

5.4.1 பணியிட விவரங்கள்

அரசிதழ் பதிவு பெறா பணியமைப்பின்கீழ் வரும் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை மற்றும் அப்பதவிகளுக்குரிய ஊதியக் கட்டு பின்வருமாறு பட்டியலிடப்பட்டுள்ளது:

அட்டவணை 5.3

பணியாளர்களின் வகை

வரிசை எண்	பதவியின் பெயர்	அனுமதிக்கப்பட்ட பணியிட எண்ணிக்கை	ஊதிய விகிதம்
அ)	அரசுப் பணியாளர்கள்		
1.	துணை வட்டார வளர்ச்சி அலுவலர்	3938	ரூ.9300–34800 தர ஊதியம் 4800 + தனி ஊதியம் 500/–
2.	உதவியாளர்	5563	ரூ.5200–20200 + தர ஊதியம் 2800/–

2016 ஆகஸ்ட் 5]

வரிசை எண்	பதவியின் பெயர்	அனுமதிக்கப்பட்ட பணியிட எண்ணிக்கை	ஊதிய விகிதம்
அ)	அரசுப் பணியாளர்கள்		
3.	இளநிலை உதவியாளர்	3137	ரூ.5200 –20200 + தர ஊதியம் 2400/–
4.	சுருக்கெழுத்து தட்டச்சர்	182	ரூ.5200 –20200 + தர ஊதியம் 2800/–
5.	தட்டச்சர்	1042	ரூ.5200 –20200 + தர ஊதியம் 2400/–
6.	ஓட்டுநர்	899	ரூ.5200 –20200 + தர ஊதியம் 2400/–
7.	பதிவுரு எழுத்தர்	137	ரூ.4800–10000 + தர ஊதியம் 1400/–
8.	அலுவலக உதவியாளர்	716	ரூ.4800–10000 + தர ஊதியம் 1300/–
9.	இரவுக் காவலர்	128	ரூ.4800–10000 + தர ஊதியம் 1300/–
10.	மசால்ஜி	14	ரூ.4800–10000 + தர ஊதியம் 1300/–
	உள்ளாட்சிப் பணியாளர்கள் விவரம்		
ஆ)	ஊராட்சி ஒன்றிய பணியாளர்கள் விவரம்		
1.	ஓட்டுநர்	770	ரூ.5200 –20200 + தர ஊதியம் 2400/–
2.	பதிவுரு எழுத்தர்	387	ரூ.4800–10000 + தர ஊதியம் 1400/–
3.	அலுவலக உதவியாளர்	1521	ரூ.4800–10000 + தர ஊதியம் 1300/–
4.	இரவுக் காவலர்	377	ரூ.4800–10000 + தர ஊதியம் 1300/–
5.	மசால்ஜி	9	ரூ.4800–10000 + தர ஊதியம் 1300/–
இ)	கிராம ஊராட்சிப் பணியாளர்கள்		
1.	ஊராட்சி செயலர்	12,524	ரூ.2500 –5000 + தர ஊதியம் 500/–
2.	துப்புரவுப் பணியாளர்கள்	25,155	ரூ.1300–3000 + தர ஊதியம் 300/– (3வருடம் பணி முடித்தவர்களுக்கு) ரூ.2000/– தொகுப்பு ஊதியம் + ரூ40/– ஒரு அரையாண்டிற்கு (மற்றவர்களுக்கு)
3.	மேல்நிலை நீர்தேக்க தொட்டி இயக்குபவர்கள்	35,548	ரூ.2000/– தொகுப்பு ஊதியம் + அகவிலைப்படி ரூ. 40/– ஒரு அரையாண்டிற்கு.

5.4.2 வட்டார நிருவாகத்தை மறு சீரமைத்தல்

நிருவாகத் திறனை மேம்படுத்துவதற்காகவும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களிடையே தொடர்புடைய மாவட்ட மற்றும் வட்டார அளவில் வேலைப்பளுவை சரிசமமாக பகிர்ந்து வழங்குவதற்காகவும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பணியிடங்கள், தலைமையிடத்து துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் என மறு சீரமைக்கப்பட்டு, அரசாணை (நிலை) எண் 127, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள் 21-9-2015-ன்படி ஆணை வெளியிடப்பட்டது. இவ்வரசாணையின்படி ஏற்கெனவே நடைமுறையிலிருந்த வட்டார நிருவாகம் மாற்றியமைக்கப்பட்டு புதிய பணியிடம் எதுவும் தோற்றுவிக்கப்படாமல், 1925 தலைமையிடத்து துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் 1585 மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் நிலையிலான பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டன. தற்போது ஊராட்சி நிருவாகத்தை செம்மையாக வழிநடத்துவதற்கும், கண்காணிப்பதற்கும் தனிப்பட்ட முறையில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் நிலையிலான தனி அமைப்பு உள்ளது.

5.4.3 மாவட்ட மற்றும் இயக்கக அளவில் உள்ள துணை வட்டார வளர்ச்சி அலுவலர்/கண்காணிப்பாளர் நிலையிலான பணியிடங்களை வட்டார வளர்ச்சி அலுவலர்/கண்காணிப்பாளர் பணியிடங்களாக தரம் உயர்த்துதல்

ஊரக வளர்ச்சி இயக்ககம் மற்றும் மாவட்ட அளவில் உதவி இயக்குநர் (ஊராட்சி) மற்றும் உதவி இயக்குநர் (தணிக்கை) அலுவலகங்களில் பணிபுரியும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களின் வேலைப்பளுவினைக் கருத்திற்கொண்டு, கீழ்க்கண்ட 87 துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பணியிடங்களை வட்டார வளர்ச்சி அலுவலர் பணியிடங்களாக தரம் உயர்த்தி அரசாணை (நிலை) எண் 52, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ6) துறை, நாள் 6-4-2015-ல் உத்திரவிடப்பட்டது.

1. *உதவி இயக்குநர் (ஊராட்சி) அலுவலகங்களிலுள்ள 36 துணை வட்டார வளர்ச்சி அலுவலர்/தலைமை எழுத்தர் பணியிடங்கள் வட்டார வளர்ச்சி அலுவலர்/ கண்காணிப்பாளர் பணியிடங்களாக தரம் உயர்த்தப்பட்டன.*

2016 ஆகஸ்ட் 5]

2. *உதவி இயக்குநர் (தணிக்கை) அலுவலகங்களிலுள்ள 33 துணை வட்டார வளர்ச்சி அலுவலர்/தலைமை எழுத்தர் பணியிடங்கள் வட்டார வளர்ச்சி அலுவலர்/ கண்காணிப்பாளர் பணியிடங்களாக தரம் உயர்த்தப்பட்டன.*

3. *ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்திலுள்ள 18 துணை வட்டார வளர்ச்சி அலுவலர்/கண்காணிப்பாளர் பணியிடங்கள் வட்டார வளர்ச்சி அலுவலர்/ கண்காணிப்பாளர் பணியிடங்களாக தரம் உயர்த்தப்பட்டன.*

5.4.4 துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (சத்துணவு) பணியிடம் தோற்றுவித்தல்

மாநிலத்தில் உள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களில் 27 ஊராட்சி ஒன்றியங்களைத் தவிர மீதமுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் சத்துணவுத் திட்டமானது வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி)-ன்கீழ் துணை வட்டார வளர்ச்சி அலுலவர் (சத்துணவு திட்டம்) உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விடுபட்டுப்போன 27 ஊராட்சி ஒன்றியங்களில் சத்துணவுத் திட்டம், வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி)-யால் துணை வட்டார வளர்ச்சி (நிருவாகம்) உதவியுடன் தினசரி பணிகளோடு கூடுதல் பொறுப்பாக கவனிக்கப்பட்டு வந்தது. இந்த நிலை சுமார் 27 வருடங்களாக நீடித்து வந்தது.

இதனை சரிசெய்யும் பொருட்டு மேற்படி 27 ஊராட்சி ஒன்றியங்களில் அனுமதிக்கப்படாமல் இருந்த 27 துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (சத்துணவு) பணியிடங்கள் அரசாணை (நிலை) எண் 2, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள் 4-1-2016-ன்படி தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அரசாணை (நிலை) எண் 127, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள் 21-9-2015-ற்கு உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, 27 மண்டலங்களை கூடுதலாக உருவாக்கி அரசாணை (நிலை) எண் 15, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ6) துறை, நாள் 1-2-2016-ன்படி ஆணையிடப்பட்டுள்ளது.

5.4.5 அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் அடிப்படை பயிற்சி

சீரிய முயற்சிகள் மேற்கொண்டதன் விளைவாக இளநிலை உதவியாளர் / நேரடி நியமன உதவியாளர்கள் தகுதிகாண் பருவம்

[2016 ஆகஸ்ட் 5

பூர்த்தி செய்ய மற்றும் அடுத்தகட்ட பதவி உயர்வு பெறுவதற்கு தேவைப்படும் பணித் தகுதியை அடைவதற்காக பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்திற்கு அடிப்படைப் பயிற்சி பெற அனுப்புவதில் இருந்த பின்னடைவுகள் களையப்பட்டன. இதன் விளைவாக நேரடி நியமன உதவியாளர் உட்பட 1515 பணியாளர்கள் அடிப்படைப் பயிற்சிக்கு அனுப்பப்பட்டு வெற்றிகரமாக பயிற்சியினை நிறைவு செய்துள்ளனர்.

5.4.6 கிராம ஊராட்சி பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள்

நிருவாகத்தின் கீழ் நிலையில் உள்ள கிராம ஊராட்சி பணியாளர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு அரசு பல்வேறு சலுகைகளை அவர்களுக்கு வழங்கியுள்ளது.

- கிராம ஊராட்சி பணியாளர்களுக்கு உரிய காலத்தில் ஊதியம் வழங்கப்படுவதை உறுதி செய்ய அரசாணை (நிலை) எண் 89, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ப.ரா.I) துறை, நாள் 15-6-2015-ல் கூடுதலாக, கிராம ஊராட்சிகளில் 'கணக்கு எண் 7 கிராம ஊராட்சி பணியாளர்களின் சம்பளக் கணக்கு' உருவாக்கப்பட்டது. மேற்கண்ட அரசாணையின்படி உரிய நேரத்தில் ஊதியம் கிடைப்பதை உறுதி செய்ய மாநில நிதிக் குழு மானியத்திலிருந்து சம்பளம் மற்றும் இதரபடிகளுக்கு தேவையான தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டு 7-வது கணக்குக்கு வழங்கப்படுகிறது.

- அரசாணை (நிலை) எண் 101, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ம.அ.தி-1) துறை, நாள் 10-7-2015-ல் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்ட பணிகள் மேற்கொள்வதற்கு ஊராட்சி செயலர்களுக்கு பிரதி மாதம் ரூ.1000/- சிறப்புப்படி அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது.

- அரசு ஊழியர்களுக்கு இணையாக, கருணையடிப்படை நியமனத்தின் பலனை பணியிடை மரணமடையும் ஊராட்சி செயலர்களின் வாரிசுகளுக்கும் நீட்டித்து அரசாணை (நிலை) எண் 102, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள் 13-07-2015-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

2016 ஆகஸ்ட் 5]

5.5 திறன் மேம்பாடு

பயிற்சியானது எந்தவொரு செயலாக்கத்திற்கும் அல்லது திட்டத்திற்கும் முதுகெலும்பு போன்றதாகும். அரசின் திட்டமானது பெருமளவில் வெற்றி பெறுவது திறன் மேம்படுவதிலும் மற்றும் அதனைச் சிறப்பாக செயல்படுத்துவதிலுமே சார்ந்துள்ளது. பயிற்சி என்பது, பயிற்சி பெறுபவருடைய தனித்திறன், அறிவு, திறமை, பயிற்சி பெறுபவருடைய திறமை, சக்தி, செயல்படும் திறனை மேம்படுத்துதல் ஆகியவை பயிற்சி மூலமாக மேம்படுகிறது.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினைச் சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் தத்தம் கடமைகளையும், பொறுப்புகளையும் சிறப்பாக நிறைவேற்றிடவும், ஊரக வளர்ச்சிக்கான திட்டங்களை செவ்வனே செயல்படுத்திடவும் திறன் மேம்பாடானது ஒரு முக்கிய கருவியாகும். மாநில அளவில் மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் திருவண்ணாமலை மாவட்டத்தில் சத்தியவிஜயநகரம், ஈரோடு மாவட்டத்தில் பவானிசாகர், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி, தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை மற்றும் மதுரை மாவட்டத்தில் தே.கல்லுப்பட்டி ஆகிய மண்டலங்களில் அமைந்துள்ள 5 மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் மூலம் பயிற்சிகள் வழங்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 5.4

மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களின் அடிப்படை விவரம்

வ. எண்	மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் பெயர்	மாவட்டத்தின் பெயர்	எல்லைக்குட்பட்ட மாவட்டங்கள்	துவக்க ஆண்டு	நிறுவனத்தின் பரப்பளவு (ஏக்கரில்)
1.	ச.விநகரம்	திருவண்ணாமலை	காஞ்சிபுரம், விழுப்புரம், திருவள்ளூர், கடலூர், திருவண்ணாமலை	1956	34.59
2.	கிருஷ்ணகிரி	கிருஷ்ணகிரி	கிருஷ்ணகிரி, நாமக்கல், சேலம், தருமபுரி, வேலூர்	1958	55.05

[2016 ஆகஸ்ட் 5

வ. எண்.	மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் பெயர்	மாவட்டத்தின் பெயர்	எல்லைக்குட்பட்ட மாவட்டங்கள்	துவக்க ஆண்டு	நிறுவனத்தின் பரப்பளவு (ஏக்கரில்)
3.	பட்டுக்கோட்டை	தஞ்சாவூர்	தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டிணம், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை	1954	20.92
4.	பவானிசாகர்	ஈரோடு	ஈரோடு, கோயம்புத்தூர், திண்டுக்கல், நீலகிரி, கரூர், பெரம்பலூர், அரியலூர், திருப்பூர்	1972	71.89
5.	டி.கல்லுப்பட்டி	மதுரை	மதுரை, தேனி, விருதுநகர், இராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி	1948	49.00

5.5.1 மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களின் பயிற்சி பங்கேற்பாளர்கள்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், கிராம ஊராட்சித் தலைவர்கள், சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் சார்பு துறையில் பணிபுரியும் அலுவலர்கள் ஆகியோருக்கு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

5.5.2 பயிற்சி திட்டங்கள்

மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் நடைபெறும் பயிற்சிகளில், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, ஊராட்சி நிருவாகம், கணக்குகள் மற்றும் தணிக்கை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் திட்டங்கள், ஊரக சுகாதாரம், திடக் கழிவு மேலாண்மை, மரபு சாரா எரிசக்தி, மனவியல் மேலாண்மை, கணினி மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஆகிய பொருள்கள் குறித்து பயிற்சிகள்

2016 ஆகஸ்ட் 5]

அளிக்கப்படுகின்றன. இவை தவிர சாலைகள் அமைத்தல், பாலங்கள் கட்டுதல் மேற்படி பணிகள் குறித்த பயிற்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களின்மூலம் குறைந்தபட்சம் 5,000 (உள் வளாகம்) முதல் அதிகபட்சம் 25,000 (வெளி வளாகம்) நபர்களுக்கு பயிற்சி அளித்திட திட்டமிடப்பட்டுள்ளது.

5.5.3 பணியமைப்பு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கூடுதல் இயக்குநர்/இணை இயக்குநர் நிலையிலான முதல்வர்களால் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் நிருவகிக்கப்படுகின்றன.

5.5.4 நிதி

ஊதியம் மற்றும் ஊதியம் சாராத வழக்கமான செலவினங்களுக்கு தமிழ்நாடு அரசு, ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களுக்கு நிதி வழங்குகிறது. மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் ஒவ்வொரு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி திட்டம் தொடர்பான செலவினங்களை மேற்கொள்ள ரூ.20 இலட்சம் தொடர் செலவின மானியமாக வழங்குகிறது. மேலும், இந்நிறுவனங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட மத்திய அரசு தொடரா செலவினத்தின்கீழ் நிதியினை வழங்குகிறது.

அட்டவணை 5.5

2015–16 ஆம் ஆண்டில் ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் எய்தப்பட்ட பயிற்சி சாதனைகள்

வ. எண்	பயிற்சியின் பெயர்	அணிகள்		பயிற்சியாளர்கள்	
		இலக்கு	சாதனை	இலக்கு	சாதனை
1.	வழமையான பயிற்சி	435	446	13050	11643
2.	கணினி பயிற்சி	232	238	5850	4804
3.	புது வாழ்வு பயிற்சி	2	2	85	82
4.	மகளிர் திட்டம் (சுய உதவி குழு)/ ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்கள்	5	5	260	255
5.	சட்ட மன்ற பொது தேர்தல் 2016 ஆண்டிற்கான தேர்தல் அலுவலர்களுக்கான பயிற்றுநர் பயிற்சி	10	10	460	460
	மொத்தம்	**684**	**701**	**19,705**	**17,244**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[2016 ஆகஸ்ட் 5

2015-16 ஆம் ஆண்டில் இலக்கைவிட அதிக எண்ணிக்கையிலான அணிகள் ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் பயிற்சி பெற்று 102 விழுக்காடு இலக்கு எய்தப்பட்டுள்ளது. ஆனால், எதிர்பாராத பெருமழை மற்றும் பெருவெள்ளம், மீட்பு மற்றும் நிவாரண பணிகள் மற்றும் 2016 சட்டமன்ற பொதுத் தேர்தல் ஆகிய காரணங்களால் பயிற்சியாளர்கள் எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டுள்ளது.

2016-17 ஆம் ஆண்டில் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் ஏறக்குறைய 38,150 எண்ணிக்கையிலான பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், இந்நிறுவனங்களுக்கு மாநில அரசு 2016-17 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தின்கீழ் ரூ.606.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.5.5 மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம்

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் 1961 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்நிறுவனமானது தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975-ன்கீழ் ஓர் சங்கமாக 1990 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. 1991 ஆம் ஆண்டு முதல் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள மறைமலைநகரில் தனது சொந்த இடத்தில் 25 ஏக்கர் பரப்பளவில் செயல்பட்டு வருகிறது.

5.5.6 மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் குறிக்கோள்

பல்வேறு நிலையிலான பயிற்சியாளர்களின் அறிவினை மேம்படுத்துவதும், அவர்களின் தனிநபர் திறமையை உயர்த்துவதும் மற்றும் அவர்களின் செயல்பாடுகளை மாற்றுவதின்மூலம் அரசின் திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்த வைப்பதே இந்நிறுவனத்தின் முதன்மை குறிக்கோளாகும்.

5.5.7 விரிவுரையாளர்கள் மற்றும் நிருவாக பணியாளர்கள்

இந்நிறுவனத்தில் பயிற்சிகள் நடத்துதல் மற்றும் அது சார்ந்த பணிகளை செய்திட விரிவுரையாளர்கள் மற்றும் நிருவாகப் பணியாளர்கள் பணியிடங்களை தமிழ்நாடு அரசு அனுமதித்துள்ளது. மேலும், மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் ஐந்து விரிவுரையாளர்களை ஒப்பந்த அடிப்படையில்

2016 ஆகஸ்ட் 5]

ஒழுங்கு மேலாண்மை, வாழ்வாதாரம், தகவல் தொழில்நுட்பம் (கணினி வல்லுநர்) ஒருங்கிணைத்தல் மற்றும் விரிவாக்க கல்வி ஆகிய பயிற்சிகள் எடுக்க பயன்படுத்திக் கொள்ள மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்திற்கு அனுமதி அளித்துள்ளது.

5.5.8 பயிற்சிக்கான நிதி ஆதாரம்

இந்நிறுவனம் பல்வேறு வகையான பயிற்சிகளை நடத்துவதற்கு மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம், மத்திய அரசின் பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம், தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், ஐதராபாத் மற்றும் மத்திய அரசின் பணியாளர்கள் மற்றும் பயிற்சித் துறை, மாநில அரசு ஆகியவற்றிடமிருந்து நிதியினை பெறுகிறது. மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் அதன் பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் நிருவாகச் செலவினங்களுக்கு நிதி உதவியினை (Grants-in-aids) தொடர் செலவினத் தலைப்பில் மத்திய மற்றும் மாநில அரசு பங்குத்தொகையாக 50:50 அடிப்படையில் பெறுகின்றது. பயிற்சி தொடர்பான அடிப்படை ஆதார வசதிகளான பயிலரங்கு கூடங்கள், பயிற்சியாளர் தங்கும் விடுதிகள் கட்டுதல் மற்றும் பயிற்சி உபகரணங்கள் வாங்குதல் ஆகியவற்றிற்கு மத்திய அரசின் ஊரக அமைச்சகம் 100 விழுக்காடு நிதி உதவி வழங்குகிறது.

5.5.9 பயிற்சி பங்கேற்பாளர்கள்

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், சுய உதவிக் குழு, கூட்டமைப்பு உறுப்பினர்கள், சமுதாய பயிற்றுநர்கள், கிராம தன்னார்வலர்கள், பயிற்சி வல்லுநர்கள், பயிற்றுநர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர நபர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது.

5.5.10 பயிற்சி முறைகள்

இந்நிறுவனத்தில் நடத்தப்படும் பயிற்சிகளில் 'விரிவுரை மற்றும் கலந்துரையாடல் அடிப்படையிலான பயிற்சி முறை' மற்றும் பயிற்சி சார்ந்த விளையாட்டுகள், தனி நடிப்பு, புத்துணர்வு நடவடிக்கைகள்,

பங்கேற்பு அணுகுமுறைகள், குழு விவாதங்கள், களப் பணி வெற்றி கதைகளை கூறுதல், அனுபவ பகிர்வு, பட்டறிவுப் பயணங்கள், பயிற்சி அட்டைகள் (Charts Preparation) தயாரித்தல், செயல்முறை பயிற்சி ஆகியவற்றோடு குழு அடிப்படையிலான பணிகள் ஆகிய பல்வேறு விதமான பயிற்சி முறைகள் கடைபிடிக்கப்படுகின்றன.

5.5.11 பயிற்சிகள் நடத்துதல்

இந்நிறுவனமானது உறைவிடப் பயிற்சிகளை மறைமலைநகரில் உள்ள நிறுவன வளாகத்தில் நடத்துகின்றது. பிற பயிற்சிகள் வெளி வளாக பயிற்சிகளாக மாவட்ட, வட்டார மற்றும் கிராம ஊராட்சி அளவில் மாவட்ட நிருவாகம் மற்றும் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள்மூலம் வழங்கப்படுகிறது.

5.5.12 பயிற்றுநர்கள்

இந்நிறுவனத்தில் பணிபுரியும் பல்வேறு விரிவுரையாளர்கள் தவிர தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், ஐதராபாத், தேசிய தகவல் தொழில்நுட்ப மையம், சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தில் உள்ள தொலையுணர்வு மையம், சென்னை, அண்ணா மேலாண்மை பயிற்சி நிறுவனம் போன்ற நிறுவனங்களிலிருந்து சிறப்பு விரிவுரையாளர்கள் பயிற்சிக்கு பயன்படுத்தப்படுகின்றனர். இவர்களைத் தவிர சிறப்பாக பணியாற்றும் கிராம ஊராட்சித் தலைவர்கள், பணியில் உள்ள மற்றும் ஓய்வு பெற்ற அலுவலர்கள், மகளிர் திட்டம் மற்றும் புதுவாழ்வு திட்டத்தின் மாவட்ட முதன்மை பயிற்றுநர்கள், சமுதாய வள பயிற்றுநர்கள் ஆகியோரும் பயிற்சிகளில் பயிற்றுநராக பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றனர்.

5.5.13 நிறுவன உட்கட்டமைப்பு வசதிகள்

பயிற்சிகளை நடத்துவதற்குத் தேவையான குளிரூட்டப்பட்ட பயிற்சி அரங்குகள், பயிற்சி உபகரணங்கள், ஒலி, ஒளி அமைப்பு சாதனங்கள், படிப்பகத்துடன்கூடிய நூலகம், இணையதள வசதியுடன் கூடிய கணினி பயிற்சி கூடங்கள், பயிற்சியாளர்கள் தங்கி உணவருந்தக்கூடிய வகையில் விடுதி வசதி, தானியங்கி மின்னாக்கி ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் உள்ளன.

2016 ஆகஸ்ட் 5]

அட்டவணை 5.6

2015–16 ஆம் ஆண்டின் சாதனைகள்

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், மறைமலைநகர் – ஆண்டு முன்னேற்ற அறிக்கை

எண்	திட்டங்கள்	இலக்கு		சாதனை (பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை)						
		அணிகளின் எண்ணிக்கை	பயிற்சியாளர்களின் எண்ணிக்கை	அணிகளின் எண்ணிக்கை	தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கை	அலுவலர்கள்	உள்ளாட்சி அமைப்புகள்	சுய உதவிக் குழுக்கள்	தன்னார்வலர்கள்/ ஊராட்சி செயலர்/ இதரர்	மொத்த பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)
1.	தேசிய கிராம சுயாட்சி திட்டம் கணினி பயிற்சி	**20**	598	16	130	295	0	0	0	425
2.	ஊரக தொழில நுட்ப வள மையம் (RTRC)	**17**	582	7	0	0	0	164	0	164
3.	பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான மானிய நிதி (BRGF)	**6**	172	6	140	32	0	0	0	172
4.	மக்களை நோக்கி / கிராம தன்னார்வலர் திட்டம்	**28**	841	25	0	0	0	694	61	755
5.	சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மைத் திட்டம்	**1750**	200000	1705	0	1064	195057	0	0	196121
6.	ராஜீவ்காந்தி பஞ்சாயத்து சஷக்திகரன் அபியான் (RGPSA)	**444**	17149		0	0	0	0	0	0
7.	மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (MGNREGS)	**6**	464	6	0	464	0	0	0	464
8.	ஊராட்சி நிறுவனங்கள் குறித்த பயிற்சி (PRI - II)	**74**	2261	24	285	259	89	0	0	633
9.	மத்திய பணியாளர் (ம) பயிற்சித் துறை (DoPT)	**3**	127	3	0	127	0	0	0	127

எண்	திட்டங்கள்	இலக்கு		சாதனை (பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை)						
		அணிகளின் எண்ணிக்கை	பயிற்சியாளர்களின் எண்ணிக்கை	அணிகளின் எண்ணிக்கை	தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கை	அலுவலர்கள்	உள்ளாட்சி அமைப்புகள்	சுய உதவிக் குழுக்கள்	தன்னார்வர்கள்/ ஊராட்சி செயலர்/ இதரர்	மொத்த பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)
10.	தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவன வெளிவளாக பயிற்சி	**10**	349	10	17	332	0	0	0	349
11.	தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் Net Working பயிற்சி	**14**	420	6	0	135	0	0	0	135
12.	பாலினம சாரந்த வரவு செலவு திட்டம்(Gender Budgeting)	**2**	79	2	79	0	0	0	0	79
13.	பயிற்சி நிதி(TCF)	**38**	1021	38	0	1021	0	0	0	1021
14.	சுகாதாரம் மாநில அளவிலான பயிற்றுனர்களுக்கான பயிற்றுனர் பயிற்சி (State Level Master Training)	**6**	322	6	6	8	0	302	6	322
15.	இந்திரா நினைவு குடியிருப்பு திட்டம்(IAY)	**1**	81	1	0	81	0	0	0	81
16.	பிற நிறுவனங்கள் மூலம் நடத்தப்படும் பயிற்சி (Venue Programme)	**16**	934	16	0	379	249	55	251	934
	மொத்தம்	**2,435**	**2,25,400**	**1,871**	**657**	**4,197**	**1,95,395**	**1,215**	**318**	**2,01,782**

- *2015-16 ஆம் ஆண்டில், இந்நிறுவனம், 2,01,782 எண்ணிக்கையிலான தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களாலும், தன்னார்வலர்கள், பேரிடர் மீட்பு மேலாண்மை திட்டத்தின்கீழ் அலுவலர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கும் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.*

2016 ஆகஸ்ட் 5]

- *புதிய விடுதிக் கட்டடம் ரூ.1100 இலட்சம் மதிப்பீட்டிலும், பல்நோக்கு கருத்தரங்கு கூடம் ரூ.1271.36 இலட்சம் மதிப்பீட்டிலும் இந்நிறுவன வளாகத்தில் கட்டப்பட்டு வருகின்றன. இப்பணிகள் காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் செயல்படுத்தப்படுகின்றன. புதிய விடுதிக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. பல்நோக்கு கருத்தரங்கு கூடம் கட்டட பணி முன்னேற்றத்தில் உள்ளது.*

- *2015-16 ஆம் ஆண்டில், மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்திற்கு அரசு கீழ்க்கண்ட பணிகளுக்கு ஒருங்கிணைந்த ஒப்படைப்பு வருவாய் திட்டத்தின்கீழ் ஒப்புதல் அளித்துள்ளது.*

அட்டவணை 5.7

வ. எண்	**வேலை**	**மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)**
1.	மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தை சுற்றிலும் மதில் சுவர் கட்டும் பணி	156.00
2.	உயர் மின் அழுத்த கம்பி லைன்அமைத்தல்	200.00
	மொத்தம்	**356.00**

மேற்படி இரு பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன.

5.5.14 2016–17 ஆம் ஆண்டில் வழங்கப்படும் பயிற்சிகள்

2016-17 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் 13,264 எண்ணிக்கையிலான அணிகளுக்கும், அதன்மூலம் 5,26,147 பயிற்சியாளர்களுக்கும் பயிற்சி அளிக்க உத்தேசித்துள்ளது. இதில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கிராம பிரதிநிதிகள், ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள், உள்ளாட்சியின் அமைப்புகளுக்கும், தொடர்புடைய துறை களப் பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதில் ராஜ்ய கிராம் ஸ்வராஜ் யோஜனா (RGSY) திட்டத்தின்கீழ், கிராம ஊராட்சி மேம்பாட்டுத் திட்டம் (VPDP), மின்-பஞ்சாயத்து பயிற்சி. மேலும், சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மைத் திட்டம் மற்றும் சென்ற வருடங்களில் நிலுவையிலுள்ள பயிற்சிகளும் அடங்கும்.

[2016 ஆகஸ்ட் 5

5.5.15 சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மைத் திட்டம்

சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மைத் திட்டம் என்பது கடலோர பேரிடர் இன்னல் குறைப்பு திட்டத்தின் ஒரு பகுதி ஆகும். இத்திட்டத்தினை உலக வங்கி உதவியுடன் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் இத்திட்டத்தினை செயல்படுத்தும் அமைப்பாக உள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் இயற்கை சீற்றங்கள் மற்றும் பேரிடர் கால கட்டங்களில் கடலோர பகுதி வாழ் மக்களின் பாதிப்புகளைக் குறைக்க மற்றும் அவ்வாறான காலங்களில் ஏற்படும் இடையூறுகளை சமாளிக்க அவர்களுக்குத் தேவையான திறன்களை வலுப்படுத்த ஆபத்து குறைப்பு திட்ட வரைவினை தயார் செய்தல் ஆகும். கடலோர பகுதிகளில் வசிக்கக் கூடிய பாதிப்புக்குள்ளாகும் சமுதாயத்தினர் மற்றும் பள்ளி மாணவர்கள் இத்திட்டத்தின் முக்கிய பங்காளர்களாக உள்ளனர். மேலும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளும், சமுதாயம் சார்ந்த அமைப்புகளும் அப்பகுதியில் பணியாற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், பயிற்றுநர்கள், அரசுத் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோரும் இத்திட்டத்தின் பங்காளர்கள் ஆவர்.

தமிழ்நாட்டில் 12 கடலோர மாவட்டங்களில் உள்ள 561 கடலோர கிராமங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.15 கோடி ஆகும். ஜுன் 2013 முதல் ஜுலை 2018 வரையிலான காலகட்டத்திற்கு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது

இத்திட்டத்தின்கீழ் கிராம பேரிடர் மேலாண்மைக் குழு மற்றும் கிராம அளவிலான 5 வகை குழுக்களை உருவாக்குதல், அவர்களை கொண்டு பேரிடர் காலங்களை எதிர்கொள்ளக்கூடிய உத்திகளை கையாளும் முறைகுறித்த பயிற்சியினை அளித்தல், சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மைத் திட்டம் தயாரித்தல், கிராம பேரிடர் அபாய மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் மற்றும் 5 பேரிடர் தடுப்பு அணிகள் அமைத்து, அவர்களுக்கு சிறப்பு வல்லுநர்களின் மூலமாக பயிற்சி அளித்து, பேரிடர் காலங்களில் சவால்களை எதிர் கொள்ளக்கூடிய திறனுடையவர்களில் முதன்மையானவர்களாக உருவாக்குதல் போன்ற செயல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2016 ஆகஸ்ட் 5]

சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் 1,705 பயிற்சிகள் நடத்தப்பட்டு 1,96,121 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

மாநில அளவிலான கருத்தரங்குகள்	:	6 பயிற்சிகள்
புத்தாக்க பயிற்சிகள்	:	139 பயிற்சிகள்
பயிற்றுநர்களுக்கான பயிற்றுநர் பயிற்சி	:	**5** பயிற்சிகள்
மாவட்ட/வட்டார/ஊராட்சி அளவிலான பயிற்சிகள்	:	1,550 பயிற்சிகள்
பட்டறிவு பயணம்	:	5 பயிற்சி

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் 2016-17 ஆம் ஆண்டில் சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மை திட்டத்தின்கீழ் 12 கடலோர மாவட்டங்களில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் 1,48,561 நபர்களுக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

2016-17 ஆம் ஆண்டில் மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் 5,26,147 எண்ணிக்கையிலான நபர்களுக்கு பயிற்சி அளித்திட இலக்கும் மற்றும் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் 38,150 நபர்களுக்கு பயிற்சி அளித்திட இலக்கும், ஆக மொத்தம் 5,64,297 நபர்களுக்கு 14,004 அணிகளில் பயிற்சி அளித்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கு 2016-17 வரவு செலவு திட்டத்தின்கீழ் மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மற்றும் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்திற்கு ரூ.7,583.23 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. 2016-17 ஆம் ஆண்டில் அனைத்து விதங்களிலும் பயிற்சியாளர்களின் திறனை மேம்படுத்துவதே குறிக்கோள் ஆகும்.

[2016 ஆகஸ்ட் 5

6. தமிழ்நாடு புதுவாழ்வு திட்டம்

6 தமிழ்நாடு புது வாழ்வு திட்டம்

தமிழக அரசின் முன்னோடித் திட்டமான புது வாழ்வு திட்டம், 2005 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம் நாள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் துவக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் மிகவும் ஏழை எளிய மக்களை, மக்களின் பங்கேற்புடன் கண்டறிந்து அவர்களின் வறுமையை அகற்றுவதையும் மற்றும் அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதையும் நோக்கங்களாக கொண்டு செயல்படுத்தப்படுகிறது. ஏழை, எளிய மக்களை உள்ளடக்கிய சமுதாய அமைப்புகளைத் தோற்றுவித்து, பயிற்சிகள் மூலமாக அவர்களுடைய ஆற்றலை மேம்படுத்தி தேவைப்படும் நிதி ஆதாரத்தைப் பெற வழிவகை செய்து, பிற சமூக பாதுகாப்புத் திட்டங்கள்மூலம் பலன் பெறவும், மீண்டும் அவர்கள் ஏழ்மை நிலைக்கு உள்ளாவதை தவிர்ப்பதற்கான வாழ்வாதார செயல் திட்டங்கள்மூலம் உறுதி செய்வது போன்ற பல்முனை வறுமை போக்கும் அணுகுமுறையை இத்திட்டம் பின்பற்றி வருகிறது. உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் இத்திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தொலை நோக்கு பார்வையான “அனைத்து தரப்பு மக்களின் தேவைகளை உள்ளடக்கிய உயரிய வளர்ச்சியை வெளிப்படுத்தும் - மிகவும் பின்தங்கிய, நலிவுற்றோர் மற்றும் ஆதரவற்றோர் நலனில் அக்கறை கொண்டு சமமான வாய்ப்புகளும், வசதிகளும் பெற்று, வேண்டுவோருக்கு வேலை கிடைக்கச்செய்து, வறுமை முற்றிலும் அகன்ற முதன்மையான மாநிலமாக தமிழ்நாடு உருவாகும்.” என்ற கனவை நனவாக்கும் முயற்சிகளை மேற்கொள்கிறது.

இத்திட்டத்தின்கீழ், சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், ஒத்த தொழில் குழுக்கள் மற்றும் மக்கள் கற்றல் மையங்கள் போன்ற வலுவான, துடிப்பான செயல்பாடுகள் கொண்ட சமுதாய அமைப்புகள் உருவாக்கப்படுகின்றன. இவை கிராம சபையின் ஒப்புதலுக்குட்பட்டவையாகும். இச்சமுதாய அமைப்புகளின் மூலமாக அனைத்து திட்ட செயல்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இலக்கு மக்களின் திறன் வளர்த்து,

2016 ஆகஸ்ட் 5]

நீடித்த நிலைத்த வாழ்வாதாரங்களை உருவாக்கவும், வெளிப்படையான நிருவாக செயல்பாடுகள் மற்றும் சமுதாய பங்கேற்பினை இச்சமுதாய அமைப்புகள் உறுதிபடுத்துகின்றன.

6.1 திட்ட செயலாக்க பகுதிகள்

இத்திட்டம் 2005 ஆம் ஆண்டில் 15 மாவட்டங்களில் துவக்கப்பட்டு, தற்போது 26 மாவட்டங்களில் மிகவும் பின்தங்கிய 120 வட்டாரங்களில் உள்ள 4,174 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 9.8 இலட்சம் ஏழை குடும்பங்கள் பயனடையும்வகையில் ரூ.1,667.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6.2 திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் கீழ்க்கண்டவாறு:

- *வலுவான மற்றும் பொறுப்புணர்வுடன்கூடிய மக்கள் அமைப்புகள்மூலம் ஏழை மற்றும் நலிவுற்றோரின் வாழ்க்கைத்தர மேம்பாடு மற்றும் சமூக பொருளாதார வளர்ச்சி அடைய வழிவகை செய்தல்.*
- *ஏழை, எளிய, நலிவுற்ற மக்களின் ஆற்றலை மேம்படுத்தி அவர்களின் வாழ்வாதார வளர்ச்சிக்கு தேவையான நிதி மற்றும் இதர உதவிகளை "மாறா கோட்பாடு அணுகுமுறையினை" பின்பற்றி நுகரச் செய்தல்.*
- *ஏழை மக்கள் குறிப்பாக பெண்கள் மற்றும் நலிவுற்றோர் திறன் மேம்பாட்டில் தனிக் கவனம் செலுத்துதல்*

6.3 திட்ட செயலாக்க முறை

புது வாழ்வு திட்டம் ஏழை மக்களின் தேவைகளை கண்டறிந்து மக்களுக்காக மக்களே திட்டமிட்டு செயலாற்றும் அணுகுமுறையைப் பின்பற்றி, நிலையான வாழ்வாதாரம் மூலம் வருவாய் பெருகிட முனைப்புடன் செயல்படுகிறது. மேலும், பல்வேறு அரசு திட்டங்களின் மூலம் வழங்கப்படும் பயன்களை உறுதிப்படுத்தவும், தங்கள் உரிமைகளை பெற்றிட மக்களை ஆற்றல்படுத்திடவும் பிற துறைகளுடன் சீரிய முறையில் இணைந்து செயல்படுகிறது. திட்ட நோக்கங்களை அடைந்திட கீழ்க்கண்ட வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

- சமூக அமைப்புகளின் வாயிலாக சமுதாய ஒருங்கிணைப்பு மற்றும் பொருளாதார உயர்வு
- நிதி சேவை மற்றும் நலிவடைவு நீக்கம்
- இளைஞர்களுக்கான திறன் வளர்ப்புப் பயிற்சிகள்
- வாழ்வாதார மேம்பாடு

6.4 திட்ட செயலாக்க அமைப்பு

6.4.1 மாநில அலகு

தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975-ன்கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கமான தமிழ்நாடு மாநில புது வாழ்வு சங்கம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலர் தலைமையில் செயல்படுகிறது. இச்சங்கம் மாநில அளவில் திட்ட நிருவாகத்தினை மேற்கொள்கிறது. திட்ட இயக்குநர் தலைமையில் மாநில திட்ட மேலாண்மை அலகு செயல்படுகிறது. திட்ட செயல்பாடுகளை சரியான முறையில் வழிநடத்தும் பல் துறை வல்லுநர் குழுவும் இதில் அடங்கும். திட்டத்தின் நிருவாகம், செயலாக்கம், வழிநடத்துதல், நிதி விடுவித்தல் மற்றும் கண்காணிப்பு ஆகிய பணிகளை மாநில அலகு மேற்கொள்கிறது.

6.4.2 மாவட்ட அலகு

மாவட்ட அளவில் இத்திட்டத்தினை செயல்படுத்த பதிவு செய்யப்பட்ட புது வாழ்வு மாவட்ட சங்கங்கள், மாவட்ட ஆட்சியர்களது தலைமையில் செயல்படுகின்றன. மாவட்ட திட்ட அலகின்மூலம் இத்திட்டத்தின் செயல்பாடுகள் மாவட்ட திட்ட மேலாளர் மற்றும் உதவித் திட்ட மேலாளர்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

6.4.3 பகுதி அலகு

அடித்தள மக்கள் அமைப்புகளுக்கு உறுதுணையாக செயல்பட 10 முதல் 15 கிராம ஊராட்சிகள் இணைந்து களப்பகுதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இக்களப்பகுதி அமைப்புகளை ஒரு அணித் தலைவர் மற்றும் 4 ஒருங்கிணைப்பாளர்கள் கொண்ட திட்ட ஒருங்கிணைப்பு குழு நிருவகிக்கிறது.

2016 ஆகஸ்ட் 5]

6.4.4 கிராம அலகு

கிராம அளவில் கண்டறியப்பட்ட திட்ட இலக்கு மக்களை உள்ளடக்கிய தன்னாட்சி அமைப்பாக கிராம வறுமை ஒழிப்பு சங்கம் செயல்படுகிறது. இச்சங்கம், வலுவான அடித்தள சமுதாய அமைப்புகளை ஏற்படுத்துவதுடன் அவற்றிற்கு நிதி உதவி செய்வதையும், இவ்வமைப்புகள் மூலமாக நலிவுற்ற மிகவும் ஏழை, மாற்றுத் திறனாளிகள் மற்றும் பழங்குடியினர் உள்ளிட்ட திட்ட இலக்கு மக்களது திறன் வளர்த்து அவர்கள் வறுமையில் இருந்து மீள்வதற்கான ஆற்றல் பெறுவதையும், தங்களுக்கு தேவையான சேவைகள் பெறுவதையும் வழிவகை செய்கிறது.

கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் கிராம அளவில், திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், மேம்பட்ட நிலையான கிராம கற்றல் மையங்களாக செயல்படுகின்றன. இதன் வாயிலாக பல்வேறு அரசு நலத் திட்ட பயன்கள் கடைநிலை மக்களுக்கும் மின் ஆளுமை மற்றும் மின் வணிக சேவைமூலம் பெற்று தரப்படுகின்றது. ஊராட்சிமன்றத் தலைவரே கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கத்தின் கௌரவத் தலைவராக செயல்படுவார்.

6.5 திட்ட செயல்பாடுகள்

6.5.1 தகவல் தொடர்பு

புது வாழ்வு திட்டத்தின் நோக்கங்கள், உயிர்மூச்சுக் கொள்கைகள் மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்த தகவல்கள் தேவையின் அடிப்படையில் தகவல் தொடர்பு பிரச்சாரம்மூலம் முனைப்புடன் மக்களிடையே பரவலாக்கப்படுகிறது. தெருமுனை நாடகங்கள், கொள்கை பரப்பு ரதம், துண்டுப்பிரசுரங்கள் மற்றும் சுவர் விளம்பரங்கள் போன்றவை இத்திட்டத்தின் பிரபலமான பிரச்சார முறைகளாகும்.

6.5.2 மக்களின் பங்கேற்புடன் இலக்கு மக்களைக் கண்டறிதல்

கிராமம் முழுவதிலும் நடைப்பயணம், சமூக வரைபடம் மற்றும் பொருளாதார நிலை மதிப்பீடு ஆகியவற்றின் அடிப்படையில் மக்கள் பங்கேற்புடன் திட்டத்தின் இலக்கு மக்களாகிய ஏழைகள், நலிவுற்றோர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் பழங்குடியினர்

கண்டறியப்பட்டுள்ளனர். இத்தகைய மக்கள் பங்கேற்புடன்கூடிய வெளிப்படையான இலக்கு மக்கள் தேர்வு, கிராம சபை மற்றும் அனைத்து தரப்பினரது அங்கீகாரத்தை பெற்றுள்ளது.

6.5.3 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள்

இலக்கு மக்கள் பிரதிநிதித்துவம் கொண்டு உருவாக்கப்படும் கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மக்களது தேவைகளை நிறைவேற்றும் ஒரு சுய சார்புடைய அமைப்பாகும். திட்டத்தில் வலியுறுத்தப்படும் செயல்பாடுகளுக்காகவும், இலக்கு மக்களின் அனைத்து தேவைகளை நிறைவேற்ற ஏதுவாகவும் மக்கள்தொகை அடிப்படையில் ரூ.6 இலட்சம் முதல் ரூ.12 இலட்சம் வரை 3 தவணைகளில் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு நிதி விடுவிக்கப்படுகிறது. இந்நிதியில் 40 விழுக்காடு ஆற்றல் வளர்ப்புக்கும், 40 விழுக்காடு மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர் சிறப்பு கடன் உதவிக்கும், 20 விழுக்காடு இளைஞர்கள் திறன் மேம்பாட்டிற்காகவும் செலவிடப்படுகிறது.

அட்டவணை 6.1

கிராம வறுமை ஒழிப்பு சங்க நிதி செலவினம் 31–5–2016 வரை

ஊராட்சிகளின் எண்ணிக்கை	கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களின் எண்ணிக்கை	கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கான நிதி செலவினம்			
		2015–16		31–05–2016 வரை	
		எண்ணிக்கை	நிதி செலவினம் (ரூ.கோடியில்)	எண்ணிக்கை	நிதி செலவினம் (ரூ. கோடியில்)
4,174	4,465	600	27.03	4,465	623.23

6.5.4 சமூகத் தணிக்கை குழுக்கள்

திட்டத்தின் உயிர் மூச்சு கொள்கைகளான அனைவரும் சேர்ந்து முடிவு எடுத்தல், நலிவுற்றோருக்கு முன்னுரிமை அளித்தல், பொறுப்புணர்வுடன் நடத்தல் மற்றும் வெளிப்படைத் தன்மை ஆகியவற்றை பின்பற்றி மக்கள் அமைப்புகள் செயல்படுகின்றனவா என்பதை உறுதி செய்வதற்காக 5 முதல் 7 உறுப்பினர்கள் கொண்ட சமூகத் தணிக்கை குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. திட்டப் பகுதிகளில் 4,465 சமூக தணிக்கை குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள்மூலம் திட்ட செயலாக்கம் கண்காணிக்கப்படுகிறது.

2016 ஆகஸ்ட் 5]

6.5.5 சுய உதவிக் குழுக்கள்

இத்திட்டத்தின்கீழ் விடுபட்ட இலக்கு மக்களிலிருந்து 12 முதல் 20 மகளிரை உறுப்பினர்களாகக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. மாற்றுத் திறனாளிகளுக்கான தனி சுய உதவிக் குழுக்கள் 5 அங்கத்தினர்களைக் கொண்டதாகக்கூட இருக்கலாம். உறுப்பினர்களின் திறன் வளர்ப்பு மற்றும் அவர்களுக்குத் தேவையான கடன் வசதி பெற்றுத்தர இத்திட்டம் வழிவகை செய்கிறது. மேலும், கிராம ஊராட்சிகளில் ஏற்கெனவே செயல்பட்டுவரும் சுய உதவிக் குழுக்களையும் இணைத்து, குழுக்களுக்குத் தேவையான திறன் வளர்ப்புப் பயிற்சி, வங்கி கடன் இணைப்புமூலம் வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

அட்டவணை 6.2

சுய உதவிக் குழுக்களின் விவரம் 31.05.2016 வரை

விவரம்	31.05.2016 வரை சாதனை
அ. புதிய குழுக்கள்	
பெண்களுக்கான சுய உதவிக் குழுக்கள்	22,861
மாற்றுத் திறனாளிகளுக்கான சுய உதவிக் குழுக்கள்	13,286
திட்டத்தினால் உருவாக்கப்பட்ட மொத்த சுய உதவிக் குழுக்கள்	**36,147**
ஆ. ஏற்கெனவே செயல்பட்டு வரும் சுய உதவிக் குழுக்கள்	**71,289**
மொத்தம் (அ+ஆ)	**1,07,436**

6.5.6 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள்

சுய உதவிக் குழுக்களை உள்ளடக்கிய ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, குழுக்களுக்கான நிதி மற்றும் பிற சேவைகளை பெற்றுத் தரும் அமைப்பாக செயலாற்றுகிறது. திட்ட செயல்பாடுகளின் அடிப்படையில் ஒவ்வொரு கூட்டமைப்புக்கும் வாழ்வாதார மேம்பாட்டிற்காக ரூ.12 இலட்சம் முதல் ரூ.18 இலட்சம் வரை அமுதசுரபி நிதி திட்டத்திலிருந்து இரண்டு தவணைகளில் விடுவிக்கப்படுகிறது. இந்த அமைப்பு தனது சீரிய சேவையின் மூலம் கந்து வட்டிக்காரர்கள், நுண்நிதி கடன் நிறுவனங்களது பிடியிலிருந்து குழு உறுப்பினர்களை விடுவிப்பதில் பெறும் பங்கு வகிக்கிறது.

அட்டவணை 6.3

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கான நிதி செலவினம் 31-5-2016 வரை

ஊராட்சிகளின் எண்ணிக்கை	கூட்டமைப்புகள் எண்ணிக்கை	அமுதசுரபி நிதி விடுவிப்பு			
		2015 –2016		31.05.2016 வரை செலவினம்	
		எண்ணிக்கை	நிதி செலவினம் (ரூ. கோடியில்)	எண்ணிக்கை	நிதி செலவினம் (ரூ. கோடியில்)
4,174	4,464	971	108.77	4,464	518.92

6.5.7 ஒத்த தொழில் குழுக்கள்

கிராமங்களில், ஒரே மாதிரியான வாழ்வாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோரை ஒருங்கிணைத்து அவர்களுக்குத் தேவைப்படும் பொது உட்கட்டமைப்பு வசதி, கொள்முதல், சந்தைப்படுத்துதல் மற்றும் திறன் வளர்ப்பு ஆகிய தேவைகளைப் பெற்றுத் தருவதற்காக ஒத்த தொழில் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒத்த தொழில் குழுக்கள், உறுப்பினர்களின் வருமானம் மற்றும் வாழ்வாதாரத்தை உருவாக்குவதன்மூலம் பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகுக்கிறது. திட்ட நிதியிலிருந்து பொது உட்கட்டமைப்பு வசதி உருவாக்கவும், பிற ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்காகவும் ஒவ்வொரு குழுவிற்கும் அதிகபட்சமாக ரூ.1.00 இலட்சம் வழங்கப்படுகிறது.

அட்டவணை 6.4

ஒத்த தொழில் குழுக்கள் நிதி செலவினம் 31.05.2016 வரை

ஊராட்சிகளின் எண்ணிக்கை	ஒத்த தொழில் குழுக்களின் எண்ணிக்கை	குழுக்களுக்கு விடுவிக்கப்பட்ட நிதி			
		2015 – 2016 சாதனை		31.05.2016 வரை செலவினம்	
		எண்ணிக்கை	நிதி செலவினம் (ரூ. கோடியில்)	எண்ணிக்கை	நிதி செலவினம் (ரூ. கோடியில்)
4,174	5,869	1500	15.00	5,059	51.82

2016-2017-ல் மேலும் 280 ஒத்த தொழில் குழுக்களுக்கு ரூ.2.80 கோடி நிதி வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2016 ஆகஸ்ட் 5]

6.5.8 ஒத்த தொழில் கூட்டமைப்புகள்

ஒரே மாதிரியான தொழிலில் ஈடுபடுகின்ற, ஒத்த தொழில் குழுக்களை வட்டாரம் / மாவட்ட அளவில் ஒருங்கிணைத்து பதிவு செய்யப்பட்ட சங்கங்களாக ஒத்த தொழில் கூட்டமைப்புகள் அமைக்கப்படுகின்றன. இக்கூட்டமைப்பின்கீழ் உள்ள குழுக்களுக்கு பலதரப்பட்ட சேவைகள் மற்றும் தொழில் வளர்ச்சிக்கான மேல் நிலை ஆலோசனைகள் கூட்டமைப்பின்மூலம் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு கூட்டமைப்பிற்கும் அவர்களது செயல் திட்ட அறிக்கை அடிப்படையில் திட்டத்திலிருந்து தொகை வழங்கப்படுகிறது. ஒவ்வொரு கூட்டமைப்பிற்கும் - 75 விழுக்காடு திட்ட நிதி, 20 விழுக்காடு வங்கி இணைப்பு மற்றும் 5 விழுக்காடு உறுப்பினர்கள் பங்களிப்பு என்ற வகையில் நிதி ஆதாரம் ஏற்படுத்தப்படுகிறது. இதுவரை விவசாயம், பால் பண்ணை தொழில், வெள்ளாடு வளர்ப்பு மற்றும் காபி பயிர்சார் தொழில் போன்ற ஒத்த தொழில்களுடைய 15 கூட்டமைப்புகள் அமைக்கப்பட்டு அவை ரூ.3.82 கோடி திட்ட நிதி ஆதாரம் பெற்றுள்ளன.

மேலும் 2016-2017 நடப்பாண்டில் 10 ஒத்த தொழில் கூட்டமைப்புகள் அமைத்து ரூ.2 கோடி திட்ட நிதி உதவி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

6.5.9 மக்கள் கற்றல் மையங்கள் (மகமை)

புது வாழ்வு திட்டத்தின்மூலம் உருவாக்கப்பட்ட சமூக அமைப்புகளான சுய உதவிக்குழுக்கள், கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் ஒத்த தொழில் குழுக்கள் ஆகியவை நிலைத்து வேரூன்றி செயல்படுவதற்கு உதவியாக மக்கள் கற்றல் மையங்கள் (மகமை) 16 மாவட்டங்களில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டம் 1975ன்கீழ் மக்கள் கற்றல் மையங்கள் (மகமை) பதிவு செய்யப்பட்டுள்ளன. மக்கள் கற்றல் மையங்கள் (மகமை) செயல்பாட்டிற்கு உறுதுணையாக 6024 சமூக வல்லுனர்கள் உருவாக்கப்பட்டு திறன் பயிற்சி பெற்று செயல்பட்டு வருவது இத்திட்டத்தின் சிறப்பம்சமாகும். இவ்வமைப்பு, திட்ட காலத்திற்கு பின்னரும் புது வாழ்வு திட்ட செயல்பாடுகள் நீடித்து நிலைப்பதை கண்காணித்து உறுதி செய்யும் உயர்மட்ட அமைப்பாக செயல்படும். இதுவரை மக்கள் கற்றல் மைய நிறுவன மேம்பாட்டு நிதியாக ரூ.7 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

[2016 ஆகஸ்ட் 5

2016-2017 ஆம் ஆண்டில் 10 மாவட்டங்களில் 9 மக்கள் கற்றல் மையங்களும் 120 வட்டார அளவிலான அமைப்புகளும் ரூ.5.82 கோடியில் உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

6.5.10 சுய உதவிக் குழுக்களின் வங்கி இணைப்பு

சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடன் இணைப்பு முக்கிய நிதி ஆதாரமாகும். சுய உதவிக் குழுக்களின் நிதி தேவை மிகுதியின் காரணமாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வங்கியிலிருந்து பெருங்கடன் பெற்று உறுப்பினர்களின் நிதி தேவையைப் பூர்த்தி செய்கின்றன. சுய உதவிக் குழு உறுப்பினர்கள் எளிதாக தொடர்ந்து கடன் இணைப்பு பெறுவதற்கு சுய உதவிக் குழுக்கள் தங்களது தரத்தையும் நம்பகத் தன்மையையும் தொடர்ந்து நிலைநிறுத்திக் கொள்ள இத்திட்டத்தின்கீழ் தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அட்டவணை 6.5

சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் வங்கி கடன் இணைப்பு 31-5-2016 வரை

விவரம்	2015 – 2016 சாதனை		31.05.2016 வரை சாதனை	
	குழுக்களின்/ கூட்டமைப்பு எண்ணிக்கை	நிதி சாதனை (ரூ. கோடியில்)	குழுக்களின்/ கூட்டமைப்பு எண்ணிக்கை	நிதி சாதனை (ரூ. கோடியில்)
அ. முதல் வங்கி கடன் இணைப்பு பெற்ற சுய உதவி குழுக்கள்	3,089	158.99	1,05,739	687.50
ஆ. வங்கிலிருந்து இரண்டாம் மற்றும் அதற்கு மேல் வங்கிக் கடன் இணைப்பு பெற்ற குழுக்கள்	38,768	936.55	93,021	3698.55
வங்கி இணைப்பு பெற்ற மொத்த குழுக்கள் விவரம் (அ+ஆ)	**41,857**	**1095.54**	**1,98,760**	**4386.05**
ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் பெருங்கடன்	122	43.79	783	211.78
மொத்த கடன் நுகர்வு		**1139.33**		**4597.83**

2016 ஆகஸ்ட் 5]

2016-2017-ல் 36,123 சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி இணைப்பு மூலம் ரூ.1211.61 கோடி கடன் பெற்றுத்தர திட்டமிடப்பட்டுள்ளது.

6.5.11 நலிவுற்ற தன்மை மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலம்

நலிவுற்ற ஏழைகள், மாற்றுத் திறனாளிகள், பழங்குடியினர் மற்றும் இளைஞர்கள் ஆகியோரின் நலிவு தன்மை குறைப்பு மற்றும் சமூக பாதுகாப்பினை உறுதி செய்ய முனைப்புடன் கூடிய சிறப்பான சேவைகளை இத்திட்டத்தின்மூலம் உருவாக்கப்பட்ட சமூக அமைப்புகள் வழங்குகின்றன. கிராம வறுமை ஒழிப்பு சங்க நிதியில் இருந்து 40 விழுக்காடு நிதி நலிவுற்ற தன்மை குறைப்பு மற்றும் மாற்றுத் திறனாளிகள் வாழ்வாதார நலம் பேணுவதற்கு செலவிடப்படுகிறது. காப்பீடுகள், மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டைகள், தொழிலாளர் நல வாரிய அடையாள அட்டைகள், ஓய்வூதியங்கள் போன்ற சேவைகளைப் பெற்றுத் தருதல் மற்றும் மருத்துவ உதவி, உணவு பாதுகாப்பு போன்ற இதர தேவைகளை பிற துறைகளுடன் இணைந்து பெற்றுத் தருவதன் வாயிலாக இலக்கு மக்களின் சமூகப் பாதுகாப்பு உறுதி செய்யப்படுவதோடு சமூக நிருவாக பங்கேற்றலையும் உறுதி செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அட்டவணை 6.6

மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கான திட்டம் மற்றும் பிற துறை உதவிகள் 31-5-2016 வரை

விவரம்	2015 – 2016		31.05.2016 வரை சாதனை	
	எண்ணிக்கை	நிதி சாதனை (ரூ. கோடியில்)	எண்ணிக்கை	நிதி சாதனை (ரூ. கோடியில்)
நிதி உதவி	25,550	9.72	3,04,086	208.62
உபகரணங்கள்	2,072	2.09	35,704	13.21
பராமரிப்பு நிதி	4063	0.40	19,901	1.65
ஓய்வூதியம்	20,640	0.33	1,71,232	144.78
சிறப்பு சுய உதவிக் குழுக்களுக்கான கடன் உதவி	1,659	3.42	10,122	61.28

[2016 ஆகஸ்ட் 5

2016-2017 ஆம் ஆண்டில் 120 ஒன்றியங்களில் வட்டார அளவில் பயிற்சி அளிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளை கொண்டு கிராம கற்றல் மையங்களின்மூலம் சேவை புரியும் வகையில் தொழில்நுட்ப மையங்கள் அமைக்கப்படும். மேலும் கணினி சேவை, வீட்டு உபயோகப் பொருட்கள் பழுது நீக்குதல் போன்ற தொழில்களில் திறன் பயிற்சி வழங்கப்பட்டு, அதன் மூலம் அவர்களுக்கு நிலையான வாழ்வாதார முன்னேற்றத்திற்கு வழிவகை செய்யப்படும்.

6.5.12 இளைஞர்கள் திறன் வளர்ப்பு பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு

சந்தை தேவையின் அடிப்படையில் இளைஞர்களுக்கு வேண்டிய திறன் வளர்ப்பு பயிற்சிகள் அளித்து, அதன்மூலம் நிலையான வேலைவாய்ப்பு பெற்றிடச் செய்வது திட்டத்தின் ஒரு முக்கிய அம்சமாகும். 18 முதல் 35 வயதுடைய வேலையில்லாத அல்லது தகுதி குறைவான வேலையிலுள்ள இளைஞர்களை ஊராட்சி வாரியாகக் கண்டறிந்து அவர்களின் ஆர்வம் மற்றும் தகுதிக்கு ஏற்ப வேலைவாய்ப்பு பெற்றிடும் வகையில் பல்வேறு வகையான தொழில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. மேலும், தொழில் நிறுவனங்களை வேலை வாய்ப்பு முகாம்களில் பங்கேற்கச் செய்து அவர்களுக்குத் தேவைப்படும் பணியாளர்களை முகாம்கள் மூலம் தேர்வு செய்து பணியமர்த்தியும், பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பு பெற்றுத் தரவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அட்டவணை 6.7

இளைஞர்கள் வேலைவாய்ப்பிற்கான திறன் வளர்ப்பு பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு 31.05.2016 வரை

விவரம்	2015 – 2016	31.05.2016 வரை சாதனை
	எண்ணிக்கை	எண்ணிக்கை
பயிற்சி பெற்ற இளைஞர்கள்	92,654	4,33,361
வேலைவாய்ப்பு பெற்ற இளைஞர்கள்	83,587	3,69,367

2016 ஆகஸ்ட் 5]

அட்டவணை 6.8

இளைஞர் திறன் வளர்ப்பு பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு தொழில் வாரியாக 31–5–2016 வரை

தொழில்திறன்	பயிற்சி பெற்றோர்	வேலைவாய்ப்பு பெற்றோர்	வேலைவாய்ப்பு பெற்றோர் விழுக்காடு
இலகு மற்றும் கனரக வாகன ஓட்டுநர் மற்றும் பழுதுபார்த்தல்	1,48,374	1,32,273	89
ஆயத்த ஆடை தயாரித்தல்	73,272	63,576	87
கணினி பணி	65,015	53,570	82
தொழில் நுட்பம் சார்ந்த பணி	43,292	35,285	82
கைபேசி பழுதுபார்த்தல்	6,537	5,804	89
தோல் பொருள் உற்பத்தி	6,211	5,383	87
மருத்துவம் சார்ந்த தொழில்	13,880	11,057	80
கட்டுமானத் தொழில்	19,275	16,216	84
பிற தொழில்கள்	57,505	46,203	80
மொத்தம்	**4,33,361**	**3,69,367**	**85**

நடப்பாண்டில் (2016-17) 4,500 இளைஞர்களுக்கு ரூ.4.5 கோடி நிதி ஒதுக்கீட்டில் பல்வேறு திறன் வளர்ப்பு பயிற்சி அளித்து வேலைவாய்ப்பு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

6.5.13 புது வாழ்வு மனநலத் திட்டம்

ஜப்பான் நாட்டின் ''மனிதவள மேம்பாட்டு திட்ட'' நிதியுதவியுடன் புது வாழ்வு மனநலத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள்மூலம் மனநலம் பாதிக்கப்பட்டோர், மனநலம் குன்றியோர் மற்றும் அவர்கள் குடும்பத்தார் பயன்பெறும் விதமாக அரசால் செயல்படுத்தப்படும் முன்னோடித் திட்டமாகும். 15 மாவட்டங்களில் 15 வட்டாரங்களில் 578 கிராம ஊராட்சிகளில் உள்ள 609 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் வாயிலாக செயல்படுத்தப்படும் இத்திட்டம், சமூகம் சார்ந்த நடவடிக்கைகள் மூலமாக மனநலம் பேணுதலின் அவசியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. மேலும், மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்ந்து மருந்து உட்கொள்ளுதல் மற்றும் சிகிச்சை பெறுதல் ஆகியவற்றை உறுதி செய்வதன்மூலம் அவர்கள் பாதிப்பிலிருந்து

[2016 ஆகஸ்ட் 5

விடுபட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. முழுமையாக குணம் அடைந்தவர்கள் சுய உதவிக்குழுவில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்படுவதன்மூலம் தங்களுடைய வாழ்வை பொருள்பொதிந்த வாழ்வாக மறுமலர்ச்சி அடைய வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கும் வழிவகை செய்யப்படுகிறது.

அட்டவணை 6.9

மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மனநலம் குன்றியோர்களுக்கான உதவிகள் 31–5–2016 வரை

வ. எண்	விவரம்	எண்ணிக்கை
1.	கண்டறியப்பட்ட மனநலம் பாதிக்கப்பட்டோர்கள்	2,736
2.	மனநல ஆலோசனை பெற்றவர்கள்	2,679
3.	மருத்துவ உதவி பெற்றவர்கள்	2,558
4.	வாழ்வாதார உதவி பெற்றவர்கள்	2,460
5.	மருத்துவமனை சிகிச்சை பெற்றவர்கள்	440
	மொத்த நிதி செலவினம்	**ரூ.13.89 கோடி**

6.5.14 கிராம கற்றல் மையம்

திட்ட பகுதியில் உள்ள 4,174 ஊராட்சிகளிலும் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் கிராம கற்றல் மையங்களாக செயல்பட வலுப்படுத்தப்பட்டுள்ளன. அனைத்து கிராம கற்றல் மையங்களுக்கும் இணையதள வசதியுடன் கூடிய கணினி, கல்வி கற்பதற்கான குறுந்தகடுகள், போட்டித் தேர்வுகளுக்கான புத்தகங்கள், நாளேடுகள் ஆகியன மக்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் கடைநிலை மக்களும் சந்தை நிலவரம், தொலை மருத்துவ வசதி, இளைஞர்களுக்கான தொழில் மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டல் மற்றும் மாணவர்களுக்கான உயர்கல்வித் தகவல்கள் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கிராம கற்றல் மையங்கள் தமிழக அரசின் மின் ஆளுமை மற்றும் மின் வணிக திட்டங்களின் சேவை மையங்களாக செயல்படுகின்றன. இதன்மூலம் மக்கள் சாதி, வருமானம், பிறப்பு, இறப்பு மற்றும் மதிப்பெண் சான்றிதழ்களும் உதவித்தொகை மற்றும்

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2016 ஆகஸ்ட் 5]

சமூக பாதுகாப்பு திட்டப்பயன்கள் பெற அந்தந்த கிராமங்களிலேயே விண்ணப்பித்து பெற்றுக்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. திட்டப் பகுதிகளில் உள்ள மின் ஆளுமை மையங்களின் மூலம் இதுவரை 5,04,958 சான்றிதழ்களும், அரசு திட்ட பயன்களும் வழங்கப்பட்டுள்ளன. மேலும், அலைபேசி கட்டணம் செலுத்துதல், ஆதார் அட்டை அச்சடித்தல் போன்ற மின் வணிக பரிவர்த்தனைகள் மூலமாக 1,20,576 நபர்கள் சேவைகளைப் பெற்றுள்ளனர். கிராமப்புற மக்கள் தங்களின் மின் கட்டணத்தை எளிய முறையில் செலுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2016-2017 ஆம் ஆண்டில் மேற்கண்ட சேவைகளைத் திறம்பட செய்யவும் மேலும் பல புதிய சேவைகளை அறிமுகப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

6.5.15 தேசிய வள மையம்

தமிழ்நாடு மாநில புது வாழ்வு சங்கம்மூலம் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு புது வாழ்வு திட்டம் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முக்கிய கூறுகளான மக்களின் பங்கேற்புடனான ஏழ்மை நிலை கண்டறிதல், சமூக ஒருங்கிணைப்பு, நிறுவன கட்டமைப்பு, நிதி செயல்பாடு, வாழ்வாதார மேம்பாடு, திறன் மேம்பாடு மற்றும் வேலை வாய்ப்பு, ஊராட்சி நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பு போன்ற நடவடிக்கைகளை மிகப்பெரிய அளவில் சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது. இதன் அடிப்படையில், தேசிய வாழ்வாதார மேலாண்மை இயக்க அலகு வறுமை நீக்கும் திட்ட செயல்பாடுகளில் நீண்ட கால அனுபவம் உள்ள தமிழ்நாடு புது வாழ்வு சங்கத்தினை வள மையமாக கண்டறிந்து, தேசிய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின்கீழ் செயல்படும் தேசிய வாழ்வாதார மேலாண்மை அலகு வெளியிட்டுள்ள - வள மையங்களுடனான கூட்டு செயல்பாடுகளின் வழிகாட்டி நெறிமுறைகளின்படி, அனைத்து மாநில ஊரக வாழ்வாதார இயக்கங்களுடன் இணைந்து செயல்படவும், திட்ட செயல்பாடுகளை தெளிவாக கற்றறிய மற்றும் தொழில்நுட்ப உதவி புரியவும் தமிழ்நாடு புது வாழ்வு சங்கத்தினை தேசிய வள மையமாக அங்கீகரித்துள்ளது.

தேசிய வள மையத்தின் 26 மாநிலங்களைச் சார்ந்த உயர் அலுவலர்களுக்கு மக்கள் நிலை ஆய்வைப்பற்றிய கருத்துப்பட்டறை

நடத்தப்பட்டது. இதன் மூலம் இதர மாநிலங்களைச் சார்ந்தவர்கள் நமது மாநிலத்திற்கு வந்து திட்டத்தின் செயல்பாடுகளையும், பணிகளையும் களப்பயணம் மூலம் பார்வையிட்டு சென்றுள்ளனர். இதன் தாக்கமாக புதுச்சேரி, மேற்கு வங்காளம் மற்றும் பீகார் மாநிலங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு புது வாழ்வு திட்டத்தினின்று 20 பணியாளர்கள் மேற்கண்ட மாநிலங்களில் மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் வாழ்வாதார திட்ட செயல்பாட்டு பணிகளை நடைமுறைப்படுத்த உதவி வருகின்றனர்.

6.6 திட்டத்தின் தாக்கம்

திட்டத்தின் செயலாக்கம், இலக்கு மக்களிடையே ஏற்படுத்திய தாக்கம் குறித்து உலக வங்கி உதவியுடன் தனியார் நிறுவனம் மூலம் நடத்திய ஆய்வின் முக்கிய முடிவுகள்:

- அதிக வட்டி சுமை புதுவாழ்வு திட்ட முயற்சியால் 29 விழுக்காடு குறைந்துள்ளது.
- தொழில்திறன் பெற்ற பயனாளிகள் எண்ணிக்கை 32 விழுக்காடாக உயர்ந்துள்ளது.
- சொத்து குறியீடு 22.42 அலகுகள் உயர்ந்துள்ளதன்மூலம் இப்பகுதி மக்கள் கூடுதல் உடைமைகளை பெற்றுள்ளனர்.
- திட்ட செயலாக்க பகுதிகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி அளிப்பு திட்டத்தின்கீழ் பணி பெறுவோரின் எண்ணிக்கை 15 விழுக்காடுகள் உயர்ந்துள்ளது.
- கிராம சபைகளில் பெண்களின் பங்கேற்பு 65 விழுக்காடு உயர்ந்துள்ளது.
- திட்ட பகுதிகளில் தங்களது வாழ்வாதாரம் குறித்து முடிவெடுக்கும் பெண்கள் விகிதம் 21 விழுக்காடு உயர்ந்துள்ளது.

2016 ஆகஸ்ட் 5]

6.7 நிதி செயலாக்கம்

2015-2016 ஆம் ஆண்டில் ரூ.202.73 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. 2016-17 ஆம் ஆண்டிற்கு ரூ.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் அந்நியச் செலாவணிக்கு எதிரான பணத்தின் மதிப்பு வேறுபாட்டினால் ஏற்பட்ட கூடுதல் தொகையையும் திட்ட ஒதுக்கீட்டுத் தொகையான ரூ.1667.10 கோடியுடன் திட்ட செயல்பாட்டிற்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை இத்திட்டத்தின்கீழ் ரூ.1718.53 கோடி ஒட்டுமொத்த திட்ட செலவினமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2016 ஆகஸ்ட் 5

7. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாடு மற்றும் சுய சார்பு தன்மை மூலம் பெண்களின் நிலையை மேம்பாடு அடையச் செய்யும் நோக்கத்துடன் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் 1983 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்நிறுவனம், மகளிர் சுய உதவிக் குழு இயக்கத்தினை தமிழ்நாடு முழுவதும் பரவலாக்கி, சமுதாயத்தில் ஆண்களுக்கு நிகராக பெண்கள் அவர்களின் உரிமைகளைப் பெறுவதை உறுதி செய்து சரிநிகர் சமுதாயம் உருவாகிட தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் இடைவிடாது தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மூன்று முக்கிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

I. மகளிர் திட்டம்: மாநில அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம்.

II. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்: மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியுடன் 60:40 என்ற விகிதத்தில் செயல்படுத்தப்படும் திட்டம்.

III. தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்: மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியுடன் 60:40 என்ற விகிதத்தில் செயல்படுத்தப்படும் திட்டம்.

7.1 மகளிர் திட்டம்

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் முதன்முதலில், தருமபுரி மாவட்டத்தில் பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தின் (IFAD) நிதியுதவியுடன் சுய உதவிக் குழுக்களை அமைத்து, மகளிர் திட்டத்தினை செயல்படுத்தியது. பின்னர் இத்திட்டம் சேலம், தென்னாற்காடு (கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம்), மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டது. மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் வெற்றியினை அடிப்படையாகக் கொண்டு மாநில அரசு 'மகளிர் திட்டம்' என்ற பெயரில் இத்திட்டத்தினை

2016 ஆகஸ்ட் 5]

அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தியது. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், மகளிரைக் கொண்டு சுய உதவிக் குழுக்களை உருவாக்கி, அவர்களின் திறன்களை மேம்படுத்தி, கூட்டமைப்புகள்மூலம் ஒருங்கிணைத்து, வருமானம் ஈட்டும் தொழில் தொடங்க வங்கிக்கடன் இணைப்புகளை ஏற்படுத்தி, அவர்களை சமூக மற்றும் பொருளாதார சுயசார்பு அடையச் செய்ய ஆற்றல்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

7.1.1 சுய உதவிக் குழுக்கள்

ஒரே பகுதியில் வசிக்கும் 18 முதல் 60 வயதிற்குட்பட்ட 12 முதல் 20 ஏழை மகளிரை உறுப்பினர்களாகக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. பொருளாதார சுரண்டலை ஏற்படுத்தக்கூடிய கந்துவட்டிக்காரர்கள், அடகுகாரர்கள் மற்றும் இதர சமுதாய கொடுமைகளிலிருந்து மகளிரை விடுவிப்பதை ஒரே நோக்கமாகக் கொண்டு, சுய உதவிக் குழுக்களுக்கு சேமிப்பு பழக்கம், முறையான கணக்குப் பதிவேடுகள் பராமரித்தல், வங்கிக்கடன் பெறுதல் மற்றும் திரும்பச் செலுத்துதல் ஆகியவற்றில் பயிற்சியும் ஆலோசனையும் வழங்கப்படுகிறது.

அட்டவணை 7.1

சுய உதவிக் குழுக்கள் பற்றிய விவரம்

1.	சுய உதவிக் குழுக்களின் மொத்த எண்ணிக்கை	6.14 இலட்சம்
	மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை	92.84 இலட்சம்
2.	ஊரகப் பகுதி சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை	4.30 இலட்சம்
	மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை	64.51 இலட்சம்
3.	நகர்ப்புற பகுதி சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை	1.84 இலட்சம்
	மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை	28.33 இலட்சம்
4.	மொத்த சேமிப்பு	ரூ.6004.53 கோடி
5.	சுழல் நிதி/ஆதார நிதி பெற்ற சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை	5.23 இலட்சம்
6.	சுய உதவிக் குழுக்கள் பெற்ற ஒட்டு மொத்த கடன் இணைப்பு	ரூ.38,064.56 கோடி

[2016 ஆகஸ்ட் 5

7.2. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

தமிழ்நாடு அரசு 2012-13 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் என்ற திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. இந்த திட்டத்தின் செயல்பாடுகளுக்கான நிதி, மத்திய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற விகிதத்தில் வழங்கப்படுகிறது. ஊரகப் பகுதிகளில் வறுமை கோட்டிற்குக்கீழ் வாழும் ஏழை மக்களுக்காக, வலுவான மற்றும் துடிப்பான சமுதாய அடிப்படையிலான அமைப்புகளை உருவாக்கி நீடித்த வாழ்வாதாரத்துடன் கூடிய குடும்ப வருமானத்தை உயர்த்தி, நிதி மற்றும் பல்வேறு சேவைகளை முறையாகப் பெறுவதற்கு வழிவகை செய்வதே இவ்வியக்கத்தின் நோக்கமாகும்.

7.2.1 தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முக்கிய அம்சங்கள்

- விடுபட்ட ஏழை மக்களை கண்டறிந்து அவர்களை சுய உதவிக் குழுவில் ஒருங்கிணைத்தல்.
- ஊரக பகுதிகளில் ஏழைகளைக் கொண்ட சமுதாய நிறுவனங்களை உருவாக்கி வலுப்படுத்துதல்.
- திறன் வளர்ப்புப் பயிற்சிகளின் மூலம் ஊரக ஏழை மக்களை சமூக மேம்பாடு அடையச் செய்தல்.
- நலிவுற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்ட ஏழைகளின் வாழ்வாதாரத்தை உயர்த்துதல்.
- சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களின் தரத்தினை மேம்படுத்தி அவற்றைச் சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்துதல்.
- சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பொருளாதார நடவடிக்கை மேற்கொள்ள அவர்களுக்கு கடன் வழங்கும் பொருட்டு குழுக்களுக்கு நிதியுதவி வழங்குதல்.
- ஊரக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன்கூடிய திறன்பயிற்சி அளித்தல்.
- அரசுத் துறைகள் நிதி மற்றும் நிதி சாரா சேவைகளை முறையாகப் பெற்று திறம்பட பயன்படுத்திட வழிவகை செய்தல்.

2016 ஆகஸ்ட் 5]

- *கிராமப்புற ஏழை மக்கள் அடிப்படை வசதிகள் பெறக்கூடிய வாய்ப்புகளை உருவாக்குதல், சுகாதாரம் மற்றும் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்கான பயிற்சிகள் வழங்குதல்.*

7.2.2 திட்டச் செயலாக்கப் பகுதி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், சென்னை நீங்கலாக, தமிழ் நாட்டின் 31 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மொத்தமுள்ள 385 வட்டாரங்களில், புதுவாழ்வுத் திட்டம் 120 வட்டாரங்களிலும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மீதமுள்ள 265 வட்டாரங்களிலும் மூன்று கட்டங்களாக செயல்படுத்தப்படுகிறது. அவற்றுள் 4 மாவட்டங்களில் உள்ள 16 வட்டாரங்களில் உலக வங்கி நிதியுதவியுடன் தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டம் (NRLP) *செயல்படுத்தப்படுகிறது.*

அட்டவணை 7.2

திட்டம் வாரியாக செயல்படுத்தப்படும் வட்டாரங்களின் விபரம்

வ. எண்	திட்டம்	மாவட்டங்கள்	வட்டாரங்கள்	பகுதிகள்	ஊராட்சிகள்
1.	தமிழ்நாடு புதுவாழ்வு திட்டம்	26	120	302	4,211
2.	தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்	31	249	694	7,855
3.	தேசிய ஊரக வாழ்வாதார திட்டம்	4	16	48	458
மொத்தம்		31	385	1,044	12,524

முதற் கட்டம்: *இத்திட்டம் 2012-2013 ஆம் ஆண்டு முதல் 15 மாவட்டங்களின் 60 வட்டாரங்களில் உள்ள 2,323 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

இரண்டாம் கட்டம்: *இத்திட்டம் 2013-14 ஆம் ஆண்டு முதல் 27 மாவட்டங்களில் 110 வட்டாரங்களில் உள்ள 3,458 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

[2016 ஆகஸ்ட் 5

மூன்றாம் கட்டம்: 2014-15 ஆம் ஆண்டில் 21 மாவட்டங்களில் 95 வட்டாரங்களில் 2,451 கிராம ஊராட்சிகளுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

7.2.3 செயலாக்க அமைப்பு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தை செயல்படுத்த மாநில இயக்க மேலாண்மை அலகாக, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தை, மாநில அரசு நியமித்துள்ளது. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க செயல்பாடுகள் மாநில, மாவட்ட, வட்டார மற்றும் பகுதி அளவில் தனிப்பட்ட நிர்வாக பணியாளர்கள் அமைப்பின்மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த இயக்கத்தின் செயல்பாடுகளுக்கு கொள்கை வடிவிலான வழிகாட்டுதல் மற்றும் திட்டச் செயல்பாடுகளை கண்காணித்தல் போன்ற பணிகளுக்காக மாண்புமிகு அமைச்சர், நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அவர்களின் தலைமையில் உயர்நிலை அதிகாரம் பெற்ற குழு அமைக்கப்பட்டுள்ளது. இவ்வியக்கத்தின் இயக்குநராக அரசு முதன்மைச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்களும், முதன்மைச் செயல் அலுவலராக தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண் இயக்குநரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.


7.2.4 தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முக்கிய செயல்பாடுகள்

- தகவல் கல்வி மற்றும் தொடர்பு செயல்பாடுகள்
- சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் நிலவரங்கள் தொடர்பான அடிப்படை தகவல் சேகரித்தல் மற்றும் பராமரித்தல் (செயல்பாட்டிலுள்ள, செயலிழந்த மற்றும் கலைந்த குழுக்கள்)
- மக்கள் நிலை ஆய்வு
- கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அமைத்தல்
- திட்டப் பணியாளர்களுக்கான பயிற்சிகள்
- கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி வழங்குதல்

2016 ஆகஸ்ட் 5]

- *விடுபட்ட ஏழை மக்களைக் கொண்டு புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்*
- *நிதி உள்ளாக்கத்தின்மூலம் வங்கி இணைப்பு*
- *பணியமர்வு தொடர்பான திறன் பயிற்சி*
- *வாழ்வாதார மேம்பாடு*
- *சுய உதவிக் குழுக்களின் பொருட்களை சந்தைப்படுத்தல்*

7.2.5 வரிசைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள்



7.3 திட்ட செயல்பாடுகள்

7.3.1 தகவல், கல்வி மற்றும் தொடர்பு மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் பற்றிய விழிப்புணர்வு பொது மக்களிடையே பேரணி, தெரு நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள், ரதம், சுவரொட்டிகள், ஒட்டுப்படங்கள், துண்டுப் பிரசுரங்கள் மற்றும் இயக்க தகவல் பலகைகள் போன்றவற்றின் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

[2016 ஆகஸ்ட் 5

7.3.2 அடிப்படை விவரக் கணக்கெடுப்பு

அனைத்து கிராம ஊராட்சிகளிலும் செயல்பாட்டில் உள்ள சுய உதவிக் குழுக்கள், செயல்பாட்டில் இல்லாத மற்றும் கலைந்துவிட்ட சுய உதவிக் குழுக்கள் குறித்த கணக்கெடுப்பு, புது வாழ்வு திட்ட சமூக வல்லுநர்களால் நடத்தப்பட்டுள்ளது. இதில் கண்டறியப்பட்ட, செயல்பாட்டில் இல்லாத சுய உதவிக் குழுக்களை திறன் வளர்க்கும் பயிற்சிகள் மூலமாக புத்துயிர் அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

7.3.3 மக்கள் நிலை ஆய்வு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், ஏழைக் குடும்பங்கள் எதுவும் விடுபடாமல் இருப்பதை உறுதி செய்ய, மக்கள் பங்கேற்புடன் கூடிய ஊரக பங்கேற்பு மதிப்பீட்டு முறையில் நடைப்பயணம், சமுதாய வரைபடம், பொருளாதார மதிப்பீடு மற்றும் மூன்று வெவ்வேறு பகுதிகளில் அதனை சரிபார்த்தல் போன்ற யுத்திகளை பின்பற்றுகிறது. அனைத்து கிராம ஊராட்சிகளிலும் உள்ள குக்கிராமங்களில் குடியிருப்புகள் வாரியாக மிகவும் ஏழைகள், ஏழைகள், மாற்றுத்திறனாளிகள், நலிவுற்றோர், பழங்குடியினர் மற்றும் விளிம்பு நிலைச் சமூகத்தினரைக் கண்டறிந்திட சமுதாய பங்கேற்புடன் கூடிய மக்கள் நிலை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தேர்வு செய்யப்பட்ட மக்கள் நிலை பட்டியலை அனைத்து குக்கிராமத்திலுள்ள முக்கியமான இடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு, எதிர்ப்புகள் மற்றும் புதிதாக சேர்ப்பதற்கான கோரிக்கை ஏதேனும் இருப்பின் அவற்றினைப் பெற்று அதனை இறுதி செய்து, பின்னர் இறுதி இலக்கு மக்கள் பட்டியல் கிராம சபையில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மக்கள் நிலை ஆய்வு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டங்களிலும் முடிக்கப்பட்டுள்ளது.

7.3.4 கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்

கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், இலக்கு மக்களை உள்ளடக்கிய ஒரு சுய சார்பு அமைப்பாகவும், கிராம அளவில் இயக்கத்தின் செயல்பாடுகளை நிறைவேற்றுவதற்கு முழுப் பொறுப்பு ஏற்பதோடு

2016 ஆகஸ்ட் 5]

கிராம சபைக்கு விளக்கம் அளிக்கக்கூடிய அமைப்பாகவும் திகழ்கிறது. இந்த அமைப்புகள் சமுதாயத்திற்கும், திட்டத்திற்கும் இடையே மிக முக்கிய இணைப்பாக செயல்படுகிறது. ஊராட்சி மன்ற தலைவரே கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் பதவி வழித் தலைவராகவும் இருப்பார்.

ஒவ்வொரு கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திலும் 10 முதல் 20 உறுப்பினர்கள் கீழ்க்கண்டவாறு கிராம சபை ஒப்புதலுடன் தேர்வு செய்யப்படுகின்றனர்.

1. ஒவ்வொரு குடியிருப்பிலும் உள்ள இலக்கு மக்கள் பட்டியலிலிருந்து ஒரு சுய உதவிக் குழு உறுப்பினர்.
2. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தவர் 30 விழுக்காடு.
3. மாற்றுத்திறனாளி மற்றும் இளைஞர் பிரதிநிதி ஒருவர்.
4. 50 விழுக்காடு பெண்களாக இருத்தல் வேண்டும்.

இதுவரை மூன்று கட்டங்களிலும் 7,456 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 7.3

வறுமை ஒழிப்புச் சங்கங்களின் விவரங்கள்

வட்டாரங்கள் – கட்டங்கள்	ஊராட்சிகளின் எண்ணிக்கை	பொது கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் எண்ணிக்கை	பழங்குடியினர் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் எண்ணிக்கை	மொத்த கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் எண்ணிக்கை
முதல் கட்ட மாவட்டம்	2,323	2,322	66	2,388
இரண்டாம் கட்ட மாவட்டம்	3,458	3,457	81	3,538
மூன்றாம் கட்ட மாவட்டம்	2,451	1,530	0	1,530
மொத்தம்	**8,232**	**7,309**	**147**	**7,456**

7.3.5 சமூகத் தணிக்கை குழு

கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அமைக்கப்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும் 5 முதல் 7 உறுப்பினர்களைக் கொண்ட சமூகத் தணிக்கை குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு திட்டச் செயல்பாட்டினை கண்காணித்து கிராம சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்.

7.3.6 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்

2015-16 ஆம் ஆண்டில், விடுபட்ட ஏழை மகளிரைக் கொண்டு 11,496 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. குழுவிலுள்ள ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கும் மற்றும் குழுவின் உறுப்பினர்களுக்கும் குழுச் செயல்பாடுகள் மற்றும் கணக்குப் புத்தகப் பராமரிப்பு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த குழுக்கள் தரமதிப்பீடு செய்யப்பட்டு, பொருளாதாரச் செயல்பாடுகளை மேற்கொள்வதற்காக நிதியுதவி வழங்கப்படுகிறது.

7.3.7 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு

நிதி சார்ந்த மற்றும் இதர சேவைகளை சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கி அவைகளை வழி நடத்திடும் பொருட்டு சமுதாயம் சார்ந்த அமைப்புகளாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் தமிழ்நாடு சங்க பதிவுச் சட்டம் 1975-ன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவை கிராம சுய உதவிக் குழுக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு அடிப்படைத் தளமாக விளங்குகின்றன.

7.4 திறன் வளர்ப்பு

7.4.1 திட்டப் பணியாளர்களுக்கான பயிற்சிகள்

மாநில, மாவட்ட, வட்டார மற்றும் பகுதி அளவில் உள்ள அனைத்து திட்ட பணியாளர்களுக்கும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலமாக கீழ்க்கண்டவாறு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

- தூண்டல் பயிற்சி I - கிராம அளவிலான ஆழ்ந்து கற்றல் பயிற்சி 7 நாட்களுக்கும், நிறுவன கட்டமைப்பு பயிற்சி 16 நாட்களுக்கும் மற்றும் 5 நாட்கள் களப்பணி பயிற்சியும் வழங்கப்படுகிறது.

2016 ஆகஸ்ட் 5]

- *தூண்டல் பயிற்சி II - முதல் தூண்டல் பயிற்சி முடிவுற்ற பிறகு அனைத்து அலுவலர்களுக்கும் இரண்டாம் நிலை தூண்டல் பயிற்சி 12 நாட்களுக்கு அளிக்கப்படுகிறது.*

- *கருப்பொருள் சார்ந்த பயிற்சி — தூண்டல் பயிற்சி I மற்றும் II-க்குப் பின்னர், திட்டப் பணியாளர்களுக்கு அவர்களுடைய சிறப்புப் பணி சார்ந்த கருப்பொருள் பயிற்சி 6 நாட்களுக்கு வழங்கப்படுகிறது.*

- *பிற பயிற்சிகள் — மாவட்ட அளவில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் பற்றிய அறிமுகப் பயிற்சி, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கும், தொண்டு நிறுவனங்களுக்கும், கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கும் மற்றும் தொடர்புடைய பிற அரசுத் துறை அலுவலர்களுக்கும் வழங்கப்படுகிறது.*

7.4.2 சமுதாய அடிப்படையிலான அமைப்புகள்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், சமுதாய அடிப்படையிலான அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு கீழ்க்கண்ட பயிற்சிகளை வழங்குகிறது.

- *சமுதாய செயல்பாட்டிற்கான விளக்க கையேடு குறித்து கிராம வறுமை ஒழிப்புச் சங்க உறுப்பினர்களுக்கு பயிற்சிகள்.*

- *சமூகத் தணிக்கை குறித்து சமூக தணிக்கை குழு உறுப்பினர்களுக்கு பயிற்சிகள்.*

- *புதிதாக உருவாக்கப்பட்ட சுய உதவிக் குழுவின் ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கான பயிற்சி மற்றும் குழு உறுப்பினர்களுக்கான பயிற்சிகள்.*

- *ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கு, நிர்வாகம் மற்றும் நிதி மேலாண்மை குறித்த பயிற்சிகள்.*

- *ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயற்குழு உறுப்பினர்களுக்கான பயிற்சிகள்.*

[2016 ஆகஸ்ட் 5

- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் துணைக் குழுக்களான குடியிருப்பு அளவிலான கூட்டமைப்பின் நிர்வாகிகளுக்கான பயிற்சி மற்றும் சமூக தணிக்கை குழு உறுப்பினர்களுக்கான பயிற்சிகள்.

7.4.3 முதன்மைப் பயிற்றுநர்களை உருவாக்குதல்

மாவட்ட, வட்டார மற்றும் கிராம அளவிலான பயிற்சிகளுக்கான பயிற்றுநர்களை பயிற்றுவிக்க மாநில மற்றும் மாவட்ட அளவில் முதன்மைப் பயிற்றுநர்கள் கருப்பொருள் வாரியாக உருவாக்கப்படுகின்றனர்.

7.4.4 சமுதாய வளப் பயிற்றுநர்களை உருவாக்குதல்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் கீழ்க்கண்ட சமுதாய வள பயிற்றுனர்களை உருவாக்க முனைகிறது.

- சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர்கள் - சுய உதவிக் குழுக்களுக்குப் பயிற்சி அளித்து கண்காணித்திடும் பொருட்டு, 10 முதல் 15 சுய உதவிக் குழுக்களுக்கு ஒருவர் என்ற விகிதத்தில் பயிற்றுநர்கள் உருவாக்கப்படுகின்றனர்.

- சமுதாய வல்லுநர் (வேலைவாய்ப்பு) - ஒரு ஊராட்சிக்கு ஒருவர் என்ற அளவில், இளைஞர்கள் பற்றிய அடிப்படை விவரங்கள் பராமரிக்கவும், திறன் பயிற்சி நிகழ்ச்சிகளை கண்காணித்திடவும் மற்றும் கிராம வறுமை ஒழிப்பு சங்க உறுப்பினர்களுக்கு சமுதாய விளக்க கையேடு குறித்த பயிற்சி அளிக்கவும் பயிற்றுநர்கள் உருவாக்கப்படுகின்றனர்.

- சமுதாய மாற்றுத் திறனாளி வழிநடத்துனர் - ஒரு ஊராட்சிக்கு ஒருவர் என்ற விகிதத்தில், மாற்றுத் திறனாளிகள் பற்றிய புள்ளிவிவரங்கள் பராமரிக்கவும், அவர்களின் தேவையைக் கண்டறியவும் மற்றும் இதர அரசுத்துறை நிறுவனங்களுக்கு தொடர்பு அலுவலராக செயல்படவும் பயிற்சி வழங்கப்படுகிறது.

- சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர் — ஒரு தொகுப்பிற்கு 4 நபர்கள் வீதம் சுய உதவிக் குழுக்களிலிருந்து, சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்— படுகின்றனர். அவர்களுக்கு வங்கி மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு இடையே இணைப்பை ஏற்படுத்துதல்,

2016 ஆகஸ்ட் 5]

உறுப்பினர்களுக்கு கடன் பெற வழிகாட்டுதல், கடன் திரும்ப செலுத்தல், காப்பீடு மற்றும் நிதிக்கல்வி ஆகியவற்றில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

7.4.5 வங்கியாளர்கள்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது, பல்வேறு நிலைகளிலும் நிதி உள்ளாக்கத்திற்கு கவனம் செலுத்தி வருகிறது. ஓய்வு பெற்ற வங்கியாளர்களை ஒருங்கிணைத்து, வளப் பயிற்றுநர்களாக உருவாக்கி அவர்கள்மூலம் மாநிலத்தில் உள்ள அனைத்து வங்கிக் கிளை மேலாளர்களுக்கும் சுய உதவிக் குழு வங்கிக் கடன் இணைப்பு மற்றும் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் குறித்த பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

7.5 திறன் மற்றும் பணியமர்வு பயிற்சி திட்டம்

1) பணியமர்வு தொடர்பான திறன் பயிற்சி

திறன் மேம்பாடானது தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் ஓர் அங்கமாக திகழ்கின்றது. "தீன தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்யா யோஜனா" (ஆஜீவிக்கா திறன் பயிற்சி திட்டம்) மூலம் பணியமர்வுடன் கூடிய தொழில் பயிற்சி ஊரக பகுதிகளில் உள்ள இளைஞர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான நிதியானது மத்திய, மாநில அரசுகளுக்கிடையே 60:40 என்ற விகிதத்தில் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 15 முதல் 35 வயது வரை உள்ள கிராமப்புற ஏழை இளைஞர்கள் பயனாளிகள் ஆவர். இத்திட்டத்தின்கீழ் பயன்பெற பெண்கள், மாற்றுத்திறனாளிகள், நலிவுற்றோர்கள், விளிம்புநிலை பழங்குடியினர்கள் மற்றும் திருநங்கைகள் ஆகியோர் அதிக பட்ச வயது வரம்பு 45 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரம், தகவல் தொழில்நுட்ப சேவை, ஆயத்த ஆடை வடிவமைப்பு, ஓட்டுநர், ஆட்டோமொபைல், விருந்தோம்பல், வெல்டிங், கட்டுமானம் போன்ற துறைகளில் பெரும்பான்மையான திறன் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

தமிழக அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசாணை எண் 35, நாள் 02-03-2016 வாயிலாக ஏற்படுத்தப்பட்டுள்ள மாநில அளவிலான உயர்மட்ட குழுவின் மூலமாக பயிற்சிக்கான ஒப்புதல் வழங்கப்பட உள்ளது.

[2016 ஆகஸ்ட் 5

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

- நிரந்தர பதிவெண்கள் பெற்ற திறன் வளர்ப்பு பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு ஏற்படுத்துதலில் திறமையும் அனுபவமும் நிறைந்த அங்கீகரிக்கப்பட்ட திறம் வாய்ந்த பயிற்சி நிறுவனங்கள் மட்டுமே பயிற்சி வழங்குவதற்கு தேர்வு செய்யப்படுகின்றன.
- இத்திட்டத்தின்கீழ் அட்டவணை வகுப்பினர் 50 விழுக்காடும், சிறுபான்மையினர் 15 விழுக்காடும், மாற்றுத் திறனாளிகள் 3 விழுக்காடும் மற்றும் அனைத்து பிரிவினரையும் சார்ந்த பெண்கள் 33 விழுக்காடும் பயன்பெறுவர்.
- தொழில்களுக்கு ஏற்றவாறு பயிற்சி காலமானது 3 முதல் 12 மாதங்கள் வரை வேறுபடும்.
- தொழில்சார் அறிவு மென்திறன் மற்றும் வேலையிடத்தில் பயிற்சி ஆகியவை பயிற்சி பாடத்திட்டத்தின் பகுதிகளாகும்.
- பயிற்சி அளிக்கப்பட்ட இளைஞர்களில் குறைந்தது 75 விழுக்காட்டினர் பணியமர்த்தப்பட வேண்டும்.
- பயிற்சி பெற்ற இளைஞர்கள், பணியில் நீடித்திருப்பதை உறுதி செய்வதற்காக பணியமர்வுக்கு பின்னும் ஆதரவு அளிக்கப்படுகிறது.
- பயிற்சியாளர்கள் பயிற்சிக்குப் பின்னர் தொடர்ந்து ஒரு வருடத்திற்கு பணியில் நீடிப்பதற்கும், பணியமைப்பில் கூடுதல் ஊதியத்தில் முன்னேறுவதற்கும், வெளிநாடுகளில் பணியமர்த்தப்படுவதற்கும் பயிற்சி நிறுவனங்களுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.
- பயிற்சியாளர்களுக்கு பயிற்சிக்குப் பின்னர் தொழிற்பயிற்சி தேசிய கவுன்சில்/துறை திறன் சபைகள் (NCVT/SSC) மூலமாக தகுதிச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.
- 2016-17 முதல் உண்டு உறைவிட வசதியுடனும் இப்பயிற்சி வழங்கப்பட உள்ளது.
- 2012-13 நிதியாண்டு முதல் 2015-16 ஆம் ஆண்டு வரை, 40,029 இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, அதில் 27,383 இளைஞர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

2016 ஆகஸ்ட் 5]

அட்டவணை 7.4.

மாவட்ட வாரியாக கிராமப்புற இளைஞர்களுக்கான திறன் வளர்ப்பு இலக்கு மற்றும் சாதனை 2013–16

வ. எண்	மாவட்டம்	இலக்கு	முடிவுற்றது	பணி அமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை
1.	அரியலூர்	285	285	221
2.	கோயம்புத்தூர்	2,245	2,245	1,347
3.	கடலூர்	1,560	1,560	1,087
4.	தர்மபுரி	325	325	255
5.	திண்டுக்கல்	1,180	1,180	906
6.	ஈரோடு	1,745	1,745	1,509
7.	காஞ்சிபுரம்	1,914	1,914	1,037
8.	கன்னியாகுமரி	620	620	316
9.	கரூர்	510	510	443
10.	கிருஷ்ணகிரி	960	900	689
11.	மதுரை	660	660	301
12.	நாகப்பட்டினம்	907	907	687
13.	நாமக்கல்	1,156	1,156	682
14.	நீலகிரி	345	345	222
15.	பெரம்பலூர்	492	492	394
16.	புதுக்கோட்டை	1,410	1,410	913
17.	இராமநாதபுரம்	1,200	1,200	743
18.	சேலம்	1,055	939	502
19.	சிவகங்கை	840	840	704
20.	திருவண்ணாமலை	1,910	1,910	1,337
21.	தஞ்சாவூர்	1,533	1,513	695
22.	தேனி	613	613	533
23.	திருவள்ளூர்	1,720	1,720	979
24.	தூத்துக்குடி	150	150	36
25.	திருநெல்வேலி	980	980	556

வ. எண்	மாவட்டம்	இலக்கு	முடிவுற்றது	பணி அமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை
26.	திருப்பூர்	2,850	2,850	2,498
27.	திருவாரூர்	745	745	370
28.	திருச்சி	1,060	1,060	574
29.	வேலூர்	2,340	2,340	1,492
30.	விழுப்புரம்	1,775	1,745	1,277
31.	விருதுநகர்	1,570	1,570	1,138
	புது வாழ்வுத்திட்டம்	3,600	3,600	2,940
	மொத்தம்	**40,255**	**40,029**	**27,383 ***

மீதமுள்ள இளைஞர்களுக்கு சம்பந்தப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் மூலம் வேலையில் அமர்த்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அட்டவணை 7.5

திறன் மற்றும் பணியமர்வு திட்டத்தின்கீழ் தொழில் வாரியான இலக்கு மற்றும் சாதனை (2013–14 மற்றும் 2014–15)

வ. எண்	தொழில் துறைகள்	பயிற்சி பெற்றவர்கள்	பணியமர்வு செய்யப்பட்டவர்கள்
1.	தொழில்கள்	3,783	2,779
2.	தகவல் தொழில் நுட்பம்	12,876	9,938
3.	ஆடைகள் மற்றும் ஆயத்த ஆடை	9,423	5,968
4.	விருந்தோம்பல்	2,837	1,956
5.	கட்டுமானம்	771	467
6.	ஆட்டோ மொபைல்	3,938	2,721
7.	அழகு கலை	786	511
8.	தீ மற்றும் பாதுகாப்பு	8	7
9.	சுகாதாரம்	1,539	982
10.	சில்லறை வணிகம்	1,683	798
11.	தோல் துறை	270	233
12.	ஓட்டுநர்	2,115	1,023
	மொத்தம்	**40,029**	**27,383**

2016 ஆகஸ்ட் 5]

2) வேலைவாய்ப்பு முகாமின் மூலம் நேரடி வேலைவாய்ப்பு

வேலைவாய்ப்பு முகாமானது, வேலை கொடுப்பவர் மற்றும் வேலை தேடுபவர்களை ஒரு குடையின் கீழ் இணைக்க தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்ட நிகழ்வாகும். மாவட்ட அளவில் நடத்தப்படும். இம்முகாம்களில் இளைஞர்களின் தகுதி மற்றும் திறன்களுக்கேற்றவாறு பணி வாய்ப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன.

வேலைவாய்ப்பு முகாம்களில் புகழ்பெற்ற தொழில் மற்றும் உற்பத்தி நிறுவனங்கள் தங்களின் தேவையின் அடிப்படையில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்படுகிறது. இம்முகாம்களை நடத்துவதற்கு ஊரக பகுதிகளில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு முகாம்கள் நடைபெறும் நாள், இடம் முதலியவற்றை மாவட்ட நிர்வாகம் முடிவு செய்கிறது. முகாம்களில் முறையான பதிவு, கலந்தாய்வு மேற்கொள்ளப்பட்டு நிறுவனங்களின் தேவைக்கேற்ப இளைஞர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

அட்டவணை 7.6

வேலைவாய்ப்பு முகாம்கள் 2015–16

வ. எண்	மாவட்டம்	தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்		புதுவாழ்வு திட்டம்		மொத்தம்	
		நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம்களின் எண்ணிக்கை	பணியமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை	நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம்களின் எண்ணிக்கை	பணியமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை	நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம்களின் எண்ணிக்கை	பணியமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை
1	அரியலூர்	1	66	4	1,410	5	1,476
2	கோயம்புத்தூர்	4	3,169	4	1,380	8	4,549
3	கடலூர்	3	790	5	1,197	8	1,987
4	தர்மபுரி	1	5,463	5	1,542	6	7,005
5	திண்டுக்கல்	3	3,248	4	1,726	7	4,974
6	ஈரோடு	4	1,876	0	0	4	1,876
7	காஞ்சிபுரம்	3	1,581	6	1,623	9	3,204
8	கன்னியாக்குமரி	3	509	0	0	3	509
9	கரூர்	1	311	4	1,400	5	1,711
10	கிருஷ்ணகிரி	1	125	4	1,071	5	1,196

[2016 ஆகஸ்ட் 5

வ. எண்	மாவட்டம்	தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்		புதுவாழ்வு திட்டம்		மொத்தம்	
		நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம்களின் எண்ணிக்கை	பணியமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை	நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம்களின் எண்ணிக்கை	பணியமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை	நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம்களின் எண்ணிக்கை	பணியமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை
11.	மதுரை	4	2,113	4	1,381	8	3,494
12.	நாகப்பட்டினம்	2	844	4	962	6	1,806
13.	நாமக்கல்	3	421	4	986	7	1,407
14.	நீலகிரி	1	206	0	0	1	206
15.	பெரம்பலூர்	1	664	4	1,301	5	1,965
16.	புதுக்கோட்டை	3	3,117	3	1,217	6	4,334
17.	இராமநாதபுரம்	2	484	3	891	5	1,375
18.	சேலம்	6	334	3	1,175	9	1,509
19.	சிவகங்கை	2	275	5	1,876	7	2,151
20.	திருவண்ணாமலை	6	510	2	742	8	1,252
21.	தஞ்சாவூர்	4	208	0	0	4	208
22.	தேனி	2	306	3	808	5	1,114
23.	திருவள்ளூர்	2	325	4	1,251	6	1,576
24.	திருவாரூர்	2	172	4	1,561	6	1,733
25.	தூத்துக்குடி	2	972	5	1,201	7	2,173
26.	திருநெல்வேலி	4	1,086	4	1,327	8	2,413
27.	திருப்பூர்	3	1,145	0	0	3	1,145
28.	திருச்சி	5	988	0	0	5	988
29.	வேலூர்	5	1,141	4	1,012	9	2,153
30.	விழுப்புரம்	5	1,633	4	1,107	9	2,740
31.	விருதுநகர்	2	2,571	4	1,380	6	3,951
	மொத்தம்	**90**	**36,653**	**100**	**31,527**	**190**	**68,180**

2016 ஆகஸ்ட் 5]

அட்டவணை 7.7

வேலைவாய்ப்பு முகாம் மூலம் வேலை வழங்கப்பட்ட துறைகள் வாரியான பட்டியல் 2015–16

வ. எண்	தொழிலின் பெயர்	பணி அமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை		
		தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்	புதுவாழ்வுத் திட்டம்	மொத்தம்
1.	கைபேசி ஒருங்கிணைத்தல்	102	241	343
2.	கணினி	4111	4729	8840
3.	கட்டட பணி	1801	946	2747
4.	ஆயத்த ஆடைகள்	6827	9458	16285
5.	தொழில் நிறுவனங்கள்	5145	5195	10340
6.	ஓட்டுநர்	2222	6749	8971
7.	மருத்துவ பயன்பாடுகள்	1583	550	2133
8.	அழகுக்கலை	273	1048	1321
9.	கோழி வளர்ப்பு	51	0	51
10.	சமையல் கலை	695	415	1110
11.	சில்லறை வர்த்தகம்	3636	620	4256
12.	சேவை சார்பு	3267	0	3267
13.	இதர (பொதுவானவை)	6940	1576	8516
மொத்தம்		36653	31527	68180

7.6 நிதி உள்ளாக்கம்

7.6.1 சுய உதவிக் குழுக்களுக்கான ஆதார நிதி

விடுபட்ட ஏழை மகளிர், மக்கள் நிலை ஆய்வு மூலம் கண்டறியப்பட்டு சுய உதவிக் குழுக்களாக உருவாக்கப் படுகின்றனர். மூன்று மாத கால முடிவில் இந்த சுய உதவிக் குழுக்களை, நிர்ணயிக்கப்பட்ட காரணிகளின் அடிப்படையில் தரம் பிரித்து குழுவின் சேமிப்பினை பெருக்குவதற்கு ஏதுவாக ஆதார நிதி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு சுய உதவிக் குழுவிற்கும் தலா 15,000 ரூபாய் வழங்கப்படுகிறது. உறுப்பினர்களிடையே கடன் வழங்குவதற்கு இத்தொகை பயன்படுத்தப்படுகிறது.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

[2016 ஆகஸ்ட் 5

7.6.2 சுய உதவிக் குழு – வங்கி இணைப்பு

தொடர்ந்து சேமித்தல், கணக்குப் புத்தகங்களை முறையாகப் பராமரித்தல், குழு உறுப்பினர்களிடையே கடன்கள் வழங்குதல் மற்றும் அவற்றைத் தவறாமல் திரும்பச் செலுத்துதல் ஆகியவை நமது மாநிலத்தில் உள்ள சுய உதவிக் குழுக்களிடையே நிலவி வரும் சிறந்த செயல்பாடுகளாகும். இந்த செயல்பாடுகளின் அடிப்படையில் சுய உதவிக் குழுக்கள் உருவாகி 6 மாதத்திற்கு பிறகு தர மதிப்பீடு செய்யப்பட்டு, வங்கிகளிலிருந்து கடன் பெற தகுதியாக்கம் செய்யப்படும். சுய உதவிக் குழுக்கள் தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற பின்னரே வங்கிகள் மூலம் கடன் பெற தகுதி பெறுகின்றன. சுய உதவிக் குழு-வங்கி இணைப்பின் மூலம், உறுப்பினர்கள் வாழ்வாதார நடவடிக்கைகளில் முதலீடுகள் செய்ய ஊக்கப்படுத்தி கூடுதல் வருவாய் ஈட்டிடவும், கடன் சுமையிலிருந்து விடுபட்டு பொருளாதார ரீதியாக மேம்பாடு அடைந்திடவும் வழிவகை செய்யப்படுகிறது.

சுய உதவிக் குழு - வங்கிகள் இணைப்பு திட்ட செயலாக்கத்தில் இந்தியாவில் தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. 2015-16 ஆம் ஆண்டில் வங்கிக் கடன் இணைப்பு இலக்காக 6,000 கோடி ரூபாய் நிர்ணயிக்கப்பட்டு, அவ்விலக்கு எய்தப்பட்டுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் 26,460.73 கோடி ரூபாய் கடனாக குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

7.6.3 சுய உதவிக் குழுக்களுக்கான வட்டி மானியம்

வட்டி மானிய திட்டம் மத்திய அரசால் தர்மபுரி, வேலூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய 4 மாவட்டங்களில் நேரடியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மீதமுள்ள 27 மாவட்டங்களில் இத்திட்டம் தமிழ்நாடு அரசால் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார திட்டம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகளிடமிருந்து பெறப்படும் 3 இலட்சம் ரூபாய் வரையிலான கடன் தொகையின் மீது 7 விழுக்காட்டிற்கு மேல் விதிக்கப்படும் வட்டித் தொகையில் அதிகபட்சமாக 5.5 விழுக்காடு வரை வட்டி மானியமாக மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படுகிறது. இதுவரை 1,13,314 சுய உதவிக் குழுக்களுக்கு வட்டி மானிய தொகையாக 24.86 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது. சுய உதவிக் குழுக்கள் வட்டி மானியத் திட்டத்தில் பயன்பெற ஏதுவாக தனியார் வங்கிகளின்

2016 ஆகஸ்ட் 5]

புள்ளி விவரங்களையும் பகிர்ந்து கொள்ள மாநில அரசால் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

7.6.4 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கான பெருங்கடன்

வங்கிகளிடமிருந்து சுய உதவிக் குழுக்கள் பெற்றுவரும் கடன் அளவு போதுமானதாக இல்லாததால், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வங்கிகளிடமிருந்து பெருங்கடன் பெற்று, சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு நுகர்வு மற்றும் பொருளாதார தேவைகளுக்கான கடன்களாக வழங்குகின்றன. பெருங்கடன், கூடுதல் நிதி ஆதாரமாகப் பயன்படுகிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் மாநிலத்தில் 521 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பல்வேறு வங்கிகள் மூலம் பெருங்கடனாக 114.12 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

7.7 வாழ்வாதார மேம்பாடு

7.7.1 ஒத்த தொழில் குழு

வேளாண் சார் மற்றும் வேளாண் சாராத ஒத்த தொழில் புரியும் ஒரே பகுதியை சார்ந்த சுய உதவிக் குழு உறுப்பினர்களை ஒருங்கிணைத்து ஒத்த தொழில் குழு உருவாக்கப்படுகிறது. ஒவ்வொரு தொழில் குழுவிற்கும் வடிவமைக்கப்பட்ட காரணிகளின் அடிப்படையில் பொதுவான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தவும், மூலப்பொருட்கள் வாங்குவதற்கும், சந்தை இணைப்புகள் ஏற்படுத்துவதற்கும், உறுப்பினர்களுக்கு நிர்வாகம் மற்றும் தொழில் முனைவோர் பயிற்சிகளுக்கும் தொகுப்பு நிதி வழங்கப்படுகிறது. இந்த நடவடிக்கை அவர்களின் உற்பத்தித் திறனை அதிகரித்து வருவாயை பெருக்க வழிவகை செய்கிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் 919 ஒத்த தொழில் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

7.7.2 பெண் விவசாயிகள் மேம்பாட்டு திட்டம் – மகிளா கிசான் சசக்திகரன் பரியோஜனா (MKSP)

நீடித்த வேளாண்மை அடிப்படையிலான வாழ்வாதாரத்தில் மகளிரின் தற்போதைய நிலையை மேம்படுத்தும் பொருட்டும், முறையான முதலீட்டின் மூலம் அவர்களது பங்களிப்பு மற்றும் உற்பத்தி திறன் ஆகியவற்றை உயர்த்தும் பொருட்டும், தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் துணைக் கூறாக பெண்

[2016 ஆகஸ்ட் 5

விவசாயிகள் மேம்பாட்டு திட்டம் என்ற திட்டத்தினை மத்திய அரசு துவக்கியுள்ளது.

மத்திய அரசின் உயர்நிலைக் குழு 2015-16 ஆம் ஆண்டில் 15.96 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. திட்ட காலம் 3 ஆண்டுகள் ஆகும். இத்திட்டமானது கீழ்க்கண்ட 3 மாவட்டங்களில் உள்ள 10 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்படுகிறது.

அட்டவணை 7.8

பெண் விவசாயிகள் மேம்பாட்டு திட்டம்
மகிளா கிசான் சசக்திகரன் பரியோஜனா

வருடம்	மாவட்டத்தின் பெயர்	வட்டாரத்தின் பெயர்	கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை	பயனாளிகள்	தொண்டு நிறுவன பெயர்
2015–16 மற்றும் 2016–17	விழுப்புரம்	செஞ்சி, விக்கிரவாண்டி,	40	4000	ரிவார்டு,
		கோலியநல்லூர், திருவெண்ணை நல்லூர்	20	3800	கல்வி கேந்திரா, பல்மிரா
		வானூர், மரக்காணம்	20	3000	
	காஞ்சிபுரம்	திருப்போரூர்	30	2000	நேஷனல் அக்ரோ பவுண்டேஷன்
	திருவள்ளூர்	கும்மிடிப்பூண்டி	13	1000	
2016–17	காஞ்சிபுரம்	திருக்கழுக்குன்றம்	30	2000	
	திருவள்ளூர்	சோழவரம்	13	1000	
		மொத்தம்	**166**	**16,800**	

7.7.3 ஏழை மகளிரை தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கான சிறப்பு வாழ்வாதாரத் திட்டம்

ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ள ஏழை மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கு உதவி செய்யும் பொருட்டு வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி வழங்கிடும் புதிய திட்டம் அரசு ஆணை எண். 82, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (சிஜிஎஸ் 3) துறை, நாள் 25.5.2015 மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கு தேவைப்படும் நிதி

2016 ஆகஸ்ட் 5]

ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் செயல்படுத்தப்படும் பல்வேறு வாழ்வாதார இயக்க திட்டங்களின் மூலம் பெறப்படும்.

தமிழ்நாடு திறன் வளர்ச்சி இயக்கம் மூலம் 313.95 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதுவரை 29,155 நபர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2015-16 ஆம் ஆண்டில் 400 சிறப்பு வாழ்வாதாரக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

7.7.4 சந்தைப்படுத்துதலுக்கு ஆதரவு

i) கண்காட்சி

மகளிர் சுய உதவிக் குழு பொருட்களின் விற்பனையை அதிகரிக்கவும், பிரபலப்படுத்தவும் ஒவ்வொரு ஆண்டும் மாநில அளவில் பொங்கல், சித்திரை மற்றும் நவராத்திரி சமயங்களில் "மகளிர் மேளா" என்ற பெயரில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. கைவினைப் பொருட்கள், செயற்கை ஆபரணங்கள், சணல் பொருட்கள், தோல் பொருட்கள், சிறு தானியப் பொருட்கள் ஆகியவை இந்த கண்காட்சிகளில் விற்பனை செய்யப்படுகின்றன.

2015-16 ஆம் ஆண்டில் 360 மகளிர் சுய உதவிக் குழுக்கள் இக்கண்காட்சிகளில் கலந்து கொண்டு 184.28 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்களை விற்பனை செய்துள்ளன.

தேசிய அளவில், தில்லியில் நடைபெறும் இந்திய சர்வதேச வர்த்தக கண்காட்சி மற்றும் பிற மாநிலங்களில் நடத்தப்படும் மண்டல அளவிலான "சாராஸ்" கண்காட்சிகள் ஆகியவற்றில் சுய உதவிக் குழுக்கள் பங்கேற்கின்றன. 2015-16 ஆம் ஆண்டில், தேசிய அளவில் நடைபெற்ற 15 "சாராஸ்" கண்காட்சிகளில் 199 மகளிர் சுய உதவிக் குழுக்கள் பங்கேற்று 54.45 இலட்சம் ரூபாய் மதிப்பிலான உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்துள்ளன.

ii) மாநில/மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கம்

தேசிய, மாநில மற்றும் மாவட்ட அளவில் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களின் விற்பனையை மேம்படுத்தும் பொருட்டு, மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் தோற்றுவிக்கப்பட்டு, தமிழ்நாடு சங்க பதிவுச் சட்டம்

1975-ன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கங்கள் அனைத்தும் மாநில வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் மாநில, மாவட்ட, வட்டார அளவில் சிறப்பு விற்பனை கண்காட்சிகளை நடத்துவதுடன், மதிப்பு கூட்டுதல் முறை மற்றும் கவர்ந்திழுக்கும் உறைகளுடன் கூடிய பொட்டலமிடுதல் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களின் விற்பனையை போட்டிச் சந்தையில் அதிகரிக்கவும் ஊக்குவிக்கின்றன.

iii) மதி அங்காடி (Mathi KIOSK)

மதி அங்காடி என்பது மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களின் விற்பனையை மேம்படுத்த ஏற்படுத்தப்பட்ட பிரத்யேகமான விற்பனை மையம் ஆகும். இம்மையங்கள், நகர்ப்புற பகுதிகளில் மக்கள் அதிகமாக கூடும் இடங்களான பேருந்து நிலையங்கள், கோயில்கள், அரசு அலுவலகங்கள்/நிறுவனங்கள் போன்ற இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. மூலிகைப் பொருட்கள், கைவினைப்பொருட்கள், நவீன சணல் பொருட்கள். செயற்கை ஆபரணங்கள், சிறுதானியங்கள், பொம்மைகள் ஆகியவை சுய உதவிக் குழுக்களால் உற்பத்தி செய்யப்படும் முக்கிய பொருட்கள் ஆகும். இதுவரை ரூ.59.78 இலட்சம் மதிப்பிலான பொருட்கள் மதி அங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

7.8 2015–16 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள்

- 95 வட்டாரங்களில் உள்ள 2,451 கிராம ஊராட்சிகளில் 1,530 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களும், சமூக தணிக்கைக் குழுக்களும் துவங்கப்பட்டுள்ளன.
- 20,859 இளைஞர்களுக்கு திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு, இதுவரை 12,055 இளைஞர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.
- 1,18,920 கிராம வறுமை ஒழிப்பு சங்க உறுப்பினர்களுக்கு 1 முதல் 4 கட்டங்களாக இயக்க வழிகாட்டி கையேடு குறித்த பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- திட்ட அலுவலர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், இளம் வல்லுநர்கள் மற்றும் களப்பகுதி ஒருங்கிணைப்பாளர்கள்

என மொத்தம் 1,605 நபர்களுக்கு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், திட்டம் குறித்த கட்டமைப்பு பயிற்சி - II அளிக்கப்பட்டுள்ளது.

- சுய உதவிக் குழுக்களின் புத்தக பராமரிப்பு பயிற்சியில் மொத்தம் 12,116 சமூக சுய உதவிக் குழு பயிற்றுநர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.
- கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களை கண்காணிக்கும் சமூக தணிக்கை குழு குறித்து 1,969 களப்பகுதி ஒருங்கிணைப்பாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- 190 வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் 68,180 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.
- 5,000 சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- "ஒரு கிராமம் ஒரு உற்பத்திப் பொருள்" திட்டத்தின்கீழ் 224 ஒத்த தொழில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

7.9 மாநில அரசின் இதர திட்டங்கள்

7.9.1 கலாச்சாரப் போட்டிகள்

மகளிர் சுய உதவிக் குழு மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களுக்குள் திறமைகளை வெளிப்படுத்தவும், அவர்களுக்கிடையே கூட்டு முயற்சி மற்றும் ஒற்றுமையை ஊக்குவிக்கும் முகமாகவும் விளையாட்டுப் போட்டிகளுடன் கூடிய கலாச்சாரப் போட்டிகள், வட்டாரம் மற்றும் மாவட்ட அளவில் நடத்தப்படுகின்றன. கலாச்சாரப் போட்டிகளுக்கென ரூ.160 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கிடையே இக்கலாச்சார போட்டிகள் 2016-17 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நடத்தப்படும்.

7.9.2 கல்லூரிச் சந்தைகள்

இளைய சமுதாயத்தினரிடையே மகளிர் சுய உதவிக் குழு பொருட்களை பிரபலப்படுத்தும் நோக்கத்துடன் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளின் போதும் விழாக்காலங்களிலும் கல்லூரிச் சந்தைகள் நடத்தப்படுகின்றன.

2015-16 ஆம் ஆண்டில் 122 கல்லூரிச் சந்தைகள் நடத்தப்பட்டுள்ளன. இதில் 2,677 மகளிர் சுய உதவிக் குழுக்கள் பங்கேற்று, 203.74 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்களை விற்பனை செய்துள்ளனர்.

7.9.3 பிளாஸ்டிக் கழிவுகள் மறுசுழற்சி மையம்

சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தா பொருளாதார நடவடிக்கைகளிலும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ஈடுபட ஊக்கப்படுத்தப்படுகின்றன. சுற்றுச்சூழலை பாதுகாப்பதில், சிறப்பு முயற்சியாக 35 பிளாஸ்டிக் கழிவுகள் மறுசுழற்சி மையங்கள் தலா 4 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ளன. இந்தச் செயல்பாடுகளுக்கு சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையின் "பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு நிதி" பயன்படுத்தப்பட்டுள்ளது.

2015-16 ஆம் ஆண்டில் மேலும் 5 பிளாஸ்டிக் கழிவுகள் மறுசுழற்சி செய்யும் மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இந்த மையங்களில் பிளாஸ்டிக் கழிவுகள் சேகரிக்கப்பட்டு, துகள்களாக்கப்பட்டு அந்த பிளாஸ்டிக் துகள்கள் தார்ச் சாலைகள் அமைப்பதில் பயன்படுத்தப்படுகின்றன.

இதுவரை 215.67 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 645.31 டன் பிளாஸ்டிக் கழிவுகள் துகள்களாக்கப்பட்டு, அவற்றைக் கொண்டு 1020.32 கி.மீ. தார்ச் சாலைகள் போடப்பட்டுள்ளன.

7.10 தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம்

தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம், தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975ன்கீழ் பதிவு செய்யப்பட்டு, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் ஓர் அங்கமாக செயல்படுகிறது. இந்த மையம் மாநில அளவில், திட்டப் பணியாளர்கள், சமுதாயம் சார்ந்த அமைப்புகள், வள பயிற்றுநர்களுக்கு பயிற்சி வழங்குதல் பல்வேறு பயிற்சிகளை ஏற்பாடு செய்து நடத்துதல் மற்றும் பயிற்சிப் புத்தகங்கள்/வழிகாட்டி கையேடுகள் தயாரித்தல், போன்ற முக்கியப் பணிகளை மேற்கொள்கிறது. மேலும் இம்மையமானது, திறன் மற்றும் பணியமர்த்துதல் அலகாக தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரத் திட்டத்தில் செயல்பட்டு வருகிறது.

2016 ஆகஸ்ட் 5]

7.11 முற்றம் – மாத இதழ்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு உடல் நலம், சுகாதாரம், மகளிர் மேம்பாடு, கிராமப்புற வளர்ச்சி, வறுமை ஒழிப்பு, நுகர்வோர் உரிமைகள் மற்றும் கடமைகள், பெண்களுக்கான சட்ட உரிமைகள், பெண்களுக்கு தேவைப்படும் இதர சேவைகள், பொருளாதார மேம்பாட்டின் வெற்றி கதைகள் குறித்த விவரங்களை பரப்பும் பொருட்டு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் வெளியிடப்படும் மாத இதழ் முற்றம் ஆகும்.

மேலும், முற்றம் மாத இதழ் மூலம் 70,000 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 14 இலட்சம் மகளிர் பயன் பெறுகின்றனர். இம்மாத இதழ், சுய உதவிக் குழுக்களின் நடவடிக்கைகளை அனைவருக்கும் தெரிவிக்கும் பொருட்டும், இதழை மேலும் செறிவூட்டும் பொருட்டும் பல்வேறு அரசுத் துறைகளுக்கும், நிறுவனங்களுக்கும் அனுப்பப்படுகிறது.

7.12 2015–16 ஆம் ஆண்டில் மகளிர் திட்டத்தின் செயல்பாடுகள்

- *6,191.49 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பாக மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.*
- *25 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு 5.85 கோடி ரூபாய் பெருங்கடன் வழங்கப்பட்டுள்ளது.*
- *32 மாவட்டங்களில் 122 கல்லூரிச் சந்தைகள் நடத்தப்பட்டு அவற்றில் 2,677 மகளிர் சுய உதவிக் குழுக்கள் கலந்து கொண்டு 203.74 இலட்சம் ரூபாய்க்கு தங்களது பொருட்களை விற்பனை செய்துள்ளனர்.*
- *5 மாவட்டங்களில் பிளாஸ்டிக் கழிவுகள் மறுசுழற்சி மையங்கள் தலா 4 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டுள்ளன.*
- *2015-16 ஆம் ஆண்டு மாநில அளவில் நடத்தப்பட்ட மூன்று விற்பனை கண்காட்சிகளில், மொத்தம் 360 மகளிர் சுய உதவிக் குழுக்கள் கலந்து கொண்டு 184.28 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்களை விற்பனை செய்துள்ளன. 15 தேசிய அளவிலான சாராஸ் கண்காட்சிகளில் 199 மகளிர் சுய உதவிக் குழுக்கள் கலந்து கொண்டு, தங்களது பொருட்களின் விற்பனையின் மூலம் 54.45 இலட்சம் ரூபாய் ஈட்டியுள்ளன.*

[2016 ஆகஸ்ட் 5

7.13 தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்

இந்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வறுமை ஒழிப்பு அமைச்சகம் 2014-15-ல் பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தினை (SJSRY) தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கமாக மறுசீரமைத்துள்ளது.

அதனடிப்படையில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் 60:40 என்ற விகிதத்தில் மத்திய மற்றும் மாநில அரசினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் ஆறு கூறுகள் பின்வருமாறு:

1. சமூக அணி திரட்டல் மற்றும் நிறுவன மேம்பாடு
2. திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி
3. திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு பயிற்சி மூலம் வேலைவாய்ப்பினை உருவாக்குதல்
4. சுய வேலைவாய்ப்புத் திட்டம்
5. நகர்ப்புற தெரு வியாபாரிகளுக்கு வாழ்வாதாரம்
6. நகர்ப்புற வீடற்றோருக்கு உறைவிடம்

தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கங்களை செயல்படுத்திடும் அலகாக தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் நியமிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சட்ட மன்றத்தில் விதி எண் 110-ன்கீழ் அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில் அரசாணை(நிலை) எண்.62, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.2) துறை, நாள் 4-3-2016 அன்று வெளியிடப்பட்டது.

இதனடிப்படையில் இத்திட்டம் 2016-17 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தினால் செயல்படுத்தப்படுகிறது.

7.14 அம்மா கைபேசி திட்டம்

தமிழ்நாட்டில் 92.84 இலட்சம் உறுப்பினர்களை கொண்ட 6.14 இலட்சம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. சுய உதவிக் குழுக்களை ஒருங்கிணைத்து, ஊராட்சி அளவிலான

2016 ஆகஸ்ட் 5]

கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கூட்டமைப்பின் கீழ் 20 முதல் 25 சுய உதவிக் குழுக்கள் இயங்கி வருகின்றன. இந்த சுய உதவிக் குழுக்களை மேற்பார்வையிட 20,000 சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர்கள் உள்ளனர். இந்த சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர்கள், சுய உதவிக் குழு கூட்டங்கள் நடத்துதல், புத்தக பராமரித்தல் போன்ற செயல்பாடுகளை மேற்பார்வையிட ஏதுவாக, தமிழ் மொழியில் சிறப்பு மென்பொருள் ஒன்று உருவாக்கப்பட்டு கைபேசியில் ஏற்றம் செய்யப்பட்டு "அம்மா கைபேசி" திட்டத்தின்கீழ் அனைத்து மகளிர் சுய உதவிக் குழு பயிற்றுநர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

அட்டவணை 7.9

மாவட்ட வாரியாக வழங்கப்பட்டுள்ள கைப்பேசிகள் பற்றிய விவரங்கள்

வ. எண்	மாவட்டம்	கைப்பேசிகள் வழங்கப்பட்டுள்ள விவரங்கள்
1.	அரியலூர்	410
2.	கோயம்புத்தூர்	399
3.	கடலூர்	855
4.	தர்மபுரி	675
5.	திண்டுக்கல்	427
6.	ஈரோடு	560
7.	காஞ்சிபுரம்	1,147
8.	கன்னியாகுமரி	290
9.	கரூர்	305
10.	கிருஷ்ணகிரி	573
11.	மதுரை	495
12.	நாகப்பட்டினம்	817
13.	நீலகிரி	145
14.	நாமக்கல்	515
15.	பெரம்பலூர்	260
16.	புதுக்கோட்டை	675
17.	இராமநாதபுரம்	500
18.	சேலம்	695
19.	சிவகங்கை	529
20.	திருவண்ணாமலை	1,304

[2016 ஆகஸ்ட் 5

வ. எண்	மாவட்டம்	கைப்பேசிகள் வழங்கப்பட்டுள்ள விவரங்கள்
21.	தஞ்சாவூர்	640
22.	தேனி	335
23.	திருவள்ளூர்	1,020
24.	திருவாரூர்	770
25.	தூத்துக்குடி	560
26.	திருநெல்வேலி	575
27.	திருச்சி	690
28.	திருப்பூர்	344
29.	வேலூர்	1,190
30.	விழுப்புரம்	1,375
31.	விருதுநகர்	514
	மொத்தம்	19,589

7.15 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொடர் வேலைவாய்ப்பிற்கான வாழ்வாதார திட்டம் (MGNREGS-Project LIFE)

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் 2005-ன்படி ஊரக குடும்பங்களுக்கு நிரந்தர வருவாய் ஈட்டிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் பயன்பெற்ற பயனாளி குடும்பங்களுக்கு நிரந்தர வருமானத்தை ஏற்படுத்தும் நோக்கில் இப்பயிற்சி திட்டம் உருவாக்கப்பட்டது ஆகும்.

இத்திட்டமானது 2015-16 முதல் இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கு தொழில் திறன் பயிற்சிகள் வழங்கி வேலையில் அமர்த்தப்பட்டு தற்பொழுது அக்குடும்பங்கள் பெற்று வருகின்ற பகுதிநேர வேலைவாய்ப்பு நிலையிலிருந்து முழு நேர வேலைவாய்ப்பு நிலைக்கு செல்வதை உறுதி செய்கிறது.

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

- இத்திட்டமானது மக்கள் பங்கேற்பு முறையிலான திட்ட உருவாக்க செயலாக்க (IPPE-II) நடைமுறைப்படி மகாத்மா

2016 ஆகஸ்ட் 5]

காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணியில் ஈடுபட்ட பணியாளர்களில் இருந்து பட்டியல் தயாரித்து, அதன்மூலம் இத்திட்டத்திற்கான பயனாளிகளை ஊரகப்பகுதி வாரியாக கண்டறிந்துள்ளது.

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொடர் வேலைவாய்ப்பிற்கான வாழ்வாதார திட்டத்தை (MGNREGS-Project LIFE) செயல்படுத்திடும் பொறுப்பு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.
- இப்பயிற்சியின் மூன்று முக்கிய கூறுகள்: ஊதியம் சார்ந்த வேலைவாய்ப்பு பயிற்சிகள், சுய வேலைவாய்ப்பு திறன் சார்ந்த பயிற்சிகள் மற்றும் வாழ்வாதார முன்னேற்ற பயிற்சிகள்.
- இத்திட்டமானது ஏற்கெனவே நடைமுறையில் உள்ள DDU-GKY திட்டத்தின் கோட்பாடுகளின் அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது.
- பயிற்சி நிறுவனங்களான (PIAs) திட்ட செயலாக்க நிறுவனங்களை அவற்றின் உள்கட்டமைப்பு மற்றும் வேலை வாய்ப்பு பெற்று தரும் திறனை அடிப்படையாகக் கொண்டு தேர்வு செய்யப்படும்.
- பயிற்சியாளர்களுக்கு நாளொன்றுக்கு ரூ.100 வீதம் ஊக்கத்தொகையாக அவர்களுடைய உணவு மற்றும் போக்குவரத்து செலவாக வழங்கப்படுகிறது.
- பல்வேறு வகையான திறன்மேம்பாட்டு பயிற்சிகள்: ஓட்டுநர் பயிற்சி, தகவல் தொழில் நுட்பம், ஆடைகள் மற்றும் ஆயத்த ஆடை, விருந்தோம்பல், கட்டுமானம், சுகாதாரம், சில்லறை வணிகம் மற்றும் அழகு கலை.
- சுய வேலைவாய்ப்பிற்கான பயிற்சிகள் அந்தந்த மாவட்டங்களில் உள்ள முன்னோடி வங்கிகளால் நடத்தப்படும் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் (RSETIs) மூலமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில் கீழ்க்கண்டவாறு மூன்று வகையான திட்டக் கூறுகளுக்கு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

[2016 ஆகஸ்ட் 5

அட்டவணை 7.10

வ. எண்	திட்ட கூறுகள்	பயனாளி எண்ணிக்கை
1.	ஊதியம் சார்ந்த வேலைவாய்ப்பு பயிற்சிகள்	23,100
2.	சுய வேலைவாய்ப்பு திறன் பயிற்சிகள்	5,775
3.	வாழ்வாதார முன்னேற்ற பயிற்சிகள்	4,040
	மொத்தம்	32,915

இத்திட்டத்திற்கான மொத்த நிதியான ரூ.92.28 கோடி இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை அவர்களால் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.46.14 கோடி பெறப்பட்டுள்ளது.

இதுவரையிலும் 2,336 பயனாளிகளுக்கு மேற்கூறப்பட்ட திட்ட கூறுகளில் பயிற்சிகள் தொடங்கப்பட்டு 2,296 பயனாளிகளுக்கு பயிற்சிகள் முடிவடைந்துள்ளன. நடப்பு ஆண்டில் மேற்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ள இலக்கை அடைவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2016 ஆகஸ்ட் 5]

8. பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

தமிழ்நாட்டின் கடலோரப் பகுதியை 26 டிசம்பர் 2004-ல் எதிர்பாராதவிதமாக தாக்கிய ஆழிப்பேரலையால் பல்லாயிரக்கணக்கான மனித உயிர்கள், கால்நடை, உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கடலோர சமுதாய மக்களின் உடமைகள் கடுமையாக பாதிக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்களுக்காக தமிழ்நாடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் எடுக்கப்பட்ட மிகத் துரிதமான நிவாரணம் மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் பன்னாட்டவராலும் பாராட்டப்பட்டதுடன், கடலோர சமுதாய மக்களின் நிலைத்த வாழ்வாதாரத்தை உறுதி செய்ய அரசின் தொலைநோக்குப் பார்வையின் அடிப்படையில், "பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின்" உதவியுடன் கூடிய ''சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்'' துவங்கப்பட்டது.

சுனாமியால் கடுமையாக பாதிக்கப்பட்ட கடலோர மாவட்டங்களில் வாழும் சமுதாய மக்களின் நிலைத்த வாழ்வாதாரத்தை மீட்பதும், அவற்றை மேம்படுத்துவதுமே இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். கடற்கரை வள ஆதாரங்களை திறம்பட நிர்வகித்தல் குறித்த திறன் மேம்பாட்டு பயிற்சி அளிப்பதுடன், நீடித்து செயல்படுத்தக் கூடிய நுண் தொழில்கள் வளர்ச்சிக்கு வழிவகை செய்தும், பல்வகை காப்பீடு வசதிகளை ஏற்படுத்தி தருவதன் மூலம் எதிர்பாராத விதமாக எழுகின்ற ஆபத்துக்களை ஈடுசெய்திட கடலோர சமுதாய மக்களை தயார்படுத்துவதும் இதன் முக்கிய நோக்கங்களாகும்.

இத்திட்டத்தின் மூன்று முக்கிய உட்கூறுகள் பின்வருமாறு: 1) கடலோர வள ஆதார மேலாண்மை, 2) ஊரக நிதி மற்றும் இடர்பாடு நீக்கும் நடவடிக்கைகள், 3) வேலைவாய்ப்பு உருவாக்குதல் மற்றும் தொழில் திறன் பயிற்சி.

8.1.1 திட்டப் பகுதிகள்:

இத்திட்டம், 2007-2008 ஆண்டில் ஆறு கடலோர மாவட்டங்களில் முதல் கட்டமாக செயல்படுத்தப்பட்டு, தற்போது,

[2016 ஆகஸ்ட் 5

தமிழ்நாட்டில், சென்னை தவிர இதர ஆறு கடலோர மாவட்டங்களுக்கும் 2016-17-லிருந்து விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

அ. ஏற்கெனவே செயல்பட்டு வரும் மாவட்டங்கள்

திட்டக் காலம்	:	9 ஆண்டுகள் (2007 –08 முதல் 2016–17 வரை) தற்போது 31.03.2019 வரை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
திட்ட மதிப்பீடு	:	ரூ.283.69 கோடி
திட்டப் பகுதிகள்	:	திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி

ஆ. கூடுதலாக செயல்படுத்தப்படும் புதிய மாவட்டங்கள்

திட்டக் காலம்	:	3 ஆண்டுகள் (2016 – 17 முதல் 2018–19 வரை)
திட்ட மதிப்பீடு	:	ரூ.279.49 கோடி
திட்டப்பகுதி	:	திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி

8.1.2 செயலாக்க அமைப்பு:

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறையின் முதன்மை செயலாளர் அவர்களை தலைவராகக் கொண்டும், திட்ட இயக்குநர் அவர்களை உறுப்பினர் செயலராகக் கொண்டும் “மாநில திட்ட வழிகாட்டுக் குழு” அமைக்கப்பட்டு, இத்திட்டத்தின் செயல்பாடுகள் நிர்வகிக்கப்படுகின்றன. திட்ட இயக்குநர் தலைமையில், கூடுதல் இயக்குநர், நிதி (ம) நிர்வாக மேலாளர், முதுநிலை ஊரக நிதி மேலாளர், செயற்பொறியாளர், நிறுவன வளர்ச்சி மேலாளர், கண்காணிப்பு (ம) மதிப்பீடு மேலாளர் மற்றும் தகவல் (ம) தொழில் நுட்ப மேலாளர் ஆகியோரைக் கொண்டு திட்ட மேலாண்மை அலகு மாநில அளவில் செயல்பட்டு வருகின்றது. மாவட்ட ஆட்சியர் தலைமையில் ‘‘மாவட்ட அளவிலான செயல்பாட்டு ஆலோசனைக் குழு” அமைக்கப்பட்டு, மாவட்ட செயலாக்க அலுவலர், உதவி செயற்பொறியாளர், கணக்கு அலுவலர், சமுதாய வளர்ச்சி அலுவலர், நிறுவன வளர்ச்சி அலுவலர், கண்காணிப்பு (ம) மதிப்பீடு அலுவலர் மற்றும் உதவிப்

2016 ஆகஸ்ட் 5]

பொறியாளர் ஆகியோருடன் மாவட்ட செயலாக்க அலகு மாவட்ட அளவில் செயல்பட்டு வருகின்றது.

8.1.3 திட்டத்தின் நோக்கங்கள்:

கடலோர சமுதாய மக்களின் தற்சார்புடைய நீடித்த வாழ்வாதாரத்தை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய அம்சமாகும். ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சமுதாய மக்களின் ஒத்துழைப்புடனும், பல்வேறு நிறுவனங்களின் உதவியுடனும், நீடித்து செயல்படக்கூடிய நுண் தொழில்களை ஏற்படுத்தி, திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்கி, கடன் வசதிகளை ஏற்படுத்தி கொடுத்து, இடர்பாடுகளை தவிர்க்க காப்பீடு வசதிகள் செய்து தருவதுடன், மீன்வள ஆதாரத்தை மேம்படுத்தும் முயற்சிகளையும் உருவாக்கி நீடித்த வாழ்வாதார நடவடிக்கைகளை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

8.1.4 திட்டப் பயனாளிகள்:

சுனாமியால் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பாதிக்கப்பட்ட கடலோர கிராமங்களில் வசிக்கும் கீழ்க்கண்ட பிரிவினர்:

- *வள்ளம், சிறு படகு போன்றவற்றை பயன்படுத்தி கரையோரங்களில் மீன்பிடிக்கும் மீனவர்கள்*
- *சிறிய அளவில் வியாபாரம் செய்யும் பெண் மீன் வியாபாரிகள் மற்றும் பதப்படுத்துவோர்*
- *கடலோரப் பகுதிகளில் மீன்பிடி தொழில் மற்றும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள கூலித் தொழிலாளர்கள், சிறு மற்றும் குறு விவசாயிகள், பிற சிறு தொழில் செய்வோர் (உ.ம்: சங்கு, சிப்பி சேகரிப்போர்)*
- *சமுதாய பங்கேற்புடன் கண்டறியப்பட்ட மிகவும் ஏழைகள் மற்றும் ஏழைகள்*

8.2 கடலோர வள ஆதார மேலாண்மை:

1. சமுதாய ஆதரவு:

5 முதல் 7 வரையிலான கடலோர ஊராட்சிகளை உள்ளடக்கிய கூட்டு வள மையம் அடித்தட்டளவில் அரசு சாரா நிறுவனங்களின் உதவியுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்போது, திட்டம்

[2016 ஆகஸ்ட் 5

செயல்பட்டு வரும் 6 மாவட்டங்களில் 28 கூட்டு வள மையங்களுடன், புதிதாக ஆரம்பிக்கப்படும் 6 மாவட்டங்களில் 36 கூட்டு வள மையங்களும் இந்த ஆண்டு துவங்கப்படும். ஒவ்வொரு கூட்டு வள மையத்திலும், திட்ட ஒருங்கிணைப்பாளர், திட்ட செயலாக்குநர், வியாபார ஊக்குநர் மற்றும் கூடுதல் வியாபார ஊக்குநர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். கூட்டு வள மையங்களுக்கு அலுவலகக் கட்டடம், தகவல் தொழில்நுட்ப வசதிகளான கணினி, தொலைபேசி மற்றும் இணைய தள வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தை கள அளவில் செய்யக்கூடிய சமுதாய அமைப்பாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மறுசீரமைக்கப்பட்டு, தனியாக அலுவலகக் கட்டடம், கணினி, தொலைபேசி மற்றும் இணைய தள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளன. சமுதாய மக்கள் மற்றும் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வூட்டும் நோக்கில், திறமையான நிர்வாகம், சிறந்த செயல்பாடுகள் மற்றும் இலாபகரமாக செயல்படும் நுண்தொழில்கள் உள்ள இடங்களுக்கு பட்டறிவுப் பயணங்கள் ஆண்டுதோறும் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

2. சமுதாய வள ஆதாரங்களுக்கான திட்டமிடுதல்:

திட்ட செயல்பாடுகள் ஆரம்பிக்குமுன், ஒரு அடிப்படை வள ஆதாரக் கணக்கெடுப்பு, வாழ்வாதார வரைபடம், தர மதிப்பீடு போன்ற பணிகள் கடலோர சமுதாய பங்கேற்புடன் மேற்கொள்ளப்படுகின்றன. வாழ்வாதார வாய்ப்புகள், சுற்றுச்சூழல் மற்றும் பாலினப் பிரச்சினைகளை பிரதிபலிக்கக் கூடிய ஒவ்வொரு கிராமத்திற்கும் நுண்திட்டங்கள் வடிவமைக்கப்படுகின்றன. மீன் உலர் களம், மீன் கொள்முதல் நிலையம், மீன் ஏலக்கூடம், மீன்வலை பின்னும் தளம், மீன் விற்பனைக் கூடம், கூட்டமைப்பு அலுவலகக் கட்டடம், தார்ச்சாலை, சிமெண்ட் சாலை, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் கலன்கள் போன்ற வாழ்வாதாரத்தின் தொடர்புடைய சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி தரப்படுகின்றன.

3. மீன் வள ஆதார மேலாண்மை:

இத்திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில், மீன் வளத்தை மேம்படுத்தும் பொருட்டு கடலில் சோதனை அடிப்படையில் செயற்கை பவளப் பாறைகள் அமைக்கப்பட்டுள்ளன. கடல்பாசி வளர்த்தல் போன்ற பணிகளும்

2016 ஆகஸ்ட் 5]

செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மீன் வள மேலாண்மை தொடர்பான பிரச்சினைகளை கண்டறிந்திட மாநில மற்றும் மாவட்ட அளவிலான கருத்தரங்குகள் நடத்தப்படுவதுடன், கண்டறியப்படும் பிரச்சினைகளுக்கு தக்க வல்லுநர்களின் உதவியுடன் தீர்வு காணப்படுகின்றன.

8.3 ஊரக நிதி மற்றும் இடர்பாடு நீக்கும் நடவடிக்கைகள்:

1. சுய உதவிக் குழுக்களுக்கு நுண் கடனுதவி:

தேவைப்படும் நேரத்தில் உடனடி கடனுதவி கிடைக்கச் செய்வதே சுய உதவிக் குழுக்களின் நீடித்த செயல்பாட்டினை உறுதி செய்யும் முக்கிய காரணியாக அமைகிறது. மாவட்ட மற்றும் மாநில அளவிலான கருத்தரங்குகள் மூலம் திட்டப் பகுதியிலுள்ள திறன்மிகு சுய உதவிக் குழுக்கள் வங்கியாளர்களுக்கு அறிமுகப்படுத்தப்படுகின்றன. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் சிறப்பு வளமைகள் மற்றும் சீரிய நுண்தொழில்களை நேரடியாக அறிந்து கொள்ளும் பொருட்டு வங்கியாளர்களுக்கு பட்டறிவுப் பயணம் ஏற்பாடு செய்யப்படுகிறது. சுய உதவிக் குழுக்களுக்கு வங்கியிலிருந்து நேரடி வங்கிக் கடன் இணைப்பு பெற்றுத் தருவதோடு, ஐசிஐசிஐ வங்கி, தேசிய வேளாண் வளர்ச்சி வங்கி நிறுவனமான நாபின்ஸ், பல்லவன் கிராம வங்கி போன்ற வங்கி நிறுவனங்களின் வியாபார மேம்பாடு முகவர்களாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் நியமனம் செய்யப்பட்டு சிறப்பு கடனுதவி பெற வழிவகை செய்யப்படுகிறது.

2. இடர்பாடு மேலாண்மை:

1. துயர் குறைப்பு நிதி:

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் துயர் குறைப்பு நிதி நிர்வகிக்கப்பட்டு எதிர்பாராமல் ஏற்படும் வாழ்வாதார இழப்பை ஈடுசெய்ய ஏதுவாக குறைந்த வட்டியில் மக்களுக்கு சிறு கடன்களாக வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிதியின் 4/5 அளவு பங்கு திட்ட நிதியாகவும், 1/5 அளவு பங்கு பயனாளிகளின் பங்குத் தொகையாகவும் வரையறுக்கப்படுகிறது. இக்கடன் தொகை ரூ.1,000/- முதல் ரூ.7,500/- வரை வழங்கப்படுகிறது. 10 மாதத் தவணையில் இக்கடன் திருப்பி செலுத்தப்படுகின்றது.

மெய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2016 ஆகஸ்ட் 5

துயர் குறைப்பு நிதியின் பயன்பாடு விவரம்

வருடம் வாரியாக	பயனடைந்த பயனாளிகள்	தொகை (ரூ.இலட்சத்தில்)
2011 – 12	1598	64.00
2012 – 13	3385	152.47
2013 – 14	3708	207.71
2014 – 15	5421	240.59
2015 – 16	6787	344.75
மொத்தம்	**20899**	**1009.52**

2. நுண் தொழில் மேம்பாடு மற்றும் புதிய உத்திகளுக்கான நிதி:

தற்போது திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் 6 மாவட்டங்களில், சமையல் கழிவுகளிலிருந்து எரிவாயு உற்பத்தி செய்யும் கலன்கள் 363 எண்ணிக்கையில் பயனாளிகளின் வீடுகளில் அமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. பயனாளிகள் இக்கலன்களை அமைப்பதற்கு ஏதுவாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் கடன், பயனாளிகளின் பங்குத் தொகை மற்றும் திட்ட மானியம் ஆகியவற்றுடன் சேர்த்து ரூ.19,100/- மதிப்பீட்டில் கடனுதவி வழங்கப்படுகிறது.

3. நலிவுற்ற தொழில் முனைவோர் மூலதன நிதி:

இத்திட்டம் செயல்படும் மாவட்டங்களில் அதிக அளவில் நுண்தொழில்கள் ஏற்படுத்திட, நாபின்ஸ் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு, ரூ.5.00 கோடி நலிவுற்ற தொழில் முனைவோர் மூலதன நிதியாக நாபின்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு, இதிலிருந்து ஒவ்வொரு தொழில் கடன் மொத்த தொகையில் 25 சதவீதமும், மீதமுள்ள தொகையில் 70 சதவீதம் நாபின்ஸ் நிறுவனத்தின் கடன் தொகையாகவும் வழங்கப்படுகிறது. 5 சதவீதம் பயனாளிகளின் பங்குத் தொகையாகும். இதுவரை 890 வருவாய் ஆதார நுண் தொழில்கள் ரூ.1,872.00 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டு, 4,174 மகளிர் பயனடைந்துள்ளனர்.

2016 ஆகஸ்ட் 5]

8.4 வேலைவாய்ப்பு உருவாக்குதல் மற்றும் தொழில் திறன் பயிற்சி:

1. சுய உதவிக் குழுக்களுக்கு ஆதரவு:

கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கு நிர்வாகம் மற்றும் நிதி மேலாண்மை, கணினி இயக்குதல், மகளிரை வலிமைப்படுத்துதல் தொடர்பான திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. சுய உதவிக் குழு உறுப்பினர்களின் அன்றாட நடவடிக்கைகள் உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் சேகரித்து பராமரிக்க ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கென தனியாக டேலி மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளிலிருந்து சுமார் 200 சமுதாய வள பணியாளர்களுக்கு திட்டக் காலம் முடிவடைந்த பின்னர் திட்டச் செயல்பாடுகளைத் தொடர்ந்திட தேவையான பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

2. மீன் விற்பனை சங்கங்கள் உருவாக்குதல்:

தென்னிந்திய மீனவர் சங்கங்களின் கூட்டமைப்புடன் இணைந்து, சிறு படகுகள், கட்டுமரம் மற்றும் வள்ளம் மூலம் மீன் பிடிப்போர் ஆகியோரை மட்டுமே உறுப்பினர்களாகக் கொண்ட 60 மீன் விற்பனை சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மீன் விற்பனை சங்கங்களுக்கு அலுவலகக் கட்டடங்கள், கணினி மற்றும் இதர தளவாடங்கள் வசதி அளிக்கப்பட்டுள்ளன. சங்க உறுப்பினர்களை கடனிலிருந்து மீட்க, மீன் விற்பனை சங்கங்கள் மூலமாக கடனுதவி அளிக்கப்பட்டு வருகிறது. மாவட்ட அளவில் திருவள்ளூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மீனவர்கள் சங்கங்களின் கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு, ரூ.51 இலட்சம் நடைமுறை மூலதன நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. படகு பழுது பார்த்தலை எளிதாக்கிட வெளி பொருத்து மோட்டார் என்ஜின் பழுது நீக்கும் நிலையங்கள் மற்றும் படகு கட்டும் தளங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன. மேலும், மீன்களை சுகாதார முறையில் கையாள்வதற்காக மீன் இறங்கு தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

3. வருமானத்தை பெருக்கும் நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சி:

மக்களிடையே நிலைத்த வருமானத்தை ஈட்டக்கூடிய நுண் தொழில்கள் தொடங்குவதற்கு இருக்கும் வாய்ப்புகள் மற்றும் இதர வசதிகள் பெறுவதற்கான நடைமுறை குறித்து 17,092 சமுதாய

மக்களுக்கு வருமானத்தைப் பெருக்கும் நடவடிக்கை குறித்த பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

4. நுண் தொழில் மேம்பாடு:

உற்பத்திக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், மீன் விற்பனை சங்க உறுப்பினர்கள் மற்றும் ஏழ்மை நிலையிலுள்ளோர் நுண் தொழில்களை துவங்க ஊக்குவிக்கப்படுகின்றனர். தகுதியான பயனாளிகளைக் கண்டறிந்து அவர்களுக்கு வெற்றிகரமாக நுண்தொழில்களை உருவாக்குவதற்கு வழிகாட்ட ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வருவாய் பெருக்கும் நடவடிக்கைகளிலிருந்து நகர்ந்து மரபு சார்ந்த மற்றும் புதுமையான உத்திகளின் அடிப்படையிலான நுண்தொழில்களை பயனாளிகள் மேற்கொள்ளச் செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும். காய்கறி, மூலிகை மற்றும் மா விவசாயம், மலர்த்தோட்டம், கருவாடு, மீன் விற்பனை, கோழி வளர்ப்பு, கொப்பரை எண்ணெய் தயாரித்தல், கயிறு தயாரித்தல், தென்னை ஓலை முடைதல், பொம்மை செய்தல், கடற்சிப்பி பொருட்கள் தயாரித்தல், முந்திரி பருப்பு பதனிடுதல், புடவை வண்ணம் தீட்டுதல், மளிகை வியாபாரம், சிற்றுண்டியகம், அழகுக் கலை நிலையம், மின்னணு சேவை மையம் போன்ற தொழில்களுக்கு இத்திட்டம் நிதி உதவி அளிக்கிறது.

5. வேலையற்ற இளைஞர்களுக்கு தொழில்திறன் பயிற்சி:

திட்டப் பகுதிகளில் வாழும் வேலையற்ற இளைஞர்களுக்கு மூன்று மாதம் முதல் ஒரு வருடம் வரையிலான காலத்திற்கு தகுந்த தொழில் பிரிவுகளில் தொழில் திறன் பயிற்சி வழங்கப்படுகிறது. இதுவரை 6,821 ஊரக இளைஞர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.

8.5 கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு:

மாநிலம், மாவட்டம், கூட்டு வள மையம் மற்றும் ஊராட்சி அளவில் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. திட்ட செயல்பாடுகளின் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளின் அடிப்படையிலான முன்னேற்றம் இணையதளம் வாயிலாக தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றது. மாதாந்திர நேரடி ஆய்வுக் கூட்டங்கள், ஸ்கைப் மூலம் காணொலி

2016 ஆகஸ்ட் 5]

ஆய்வு செய்தல் மற்றும் முகநூல் மூலம் கண்காணிக்கப்படுகிறது. மேலும், வாட்ஸ்அப் போன்ற சமூக ஊடகங்களின் மூலம் ஒவ்வொரு திட்டக் கூறின் செயல்பாடுகள் உரிய கால வரையறைக்குள் நிறைவேற்றப்படுவதை தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது. தகவல் பரிமாற்றம், சாதனைகளை அறிந்து கொள்ளுதல் மற்றும் யுக்திகள் பகிர்வு போன்ற பணிகள் ஊராட்சி அளவில் சமுதாய தொடர்பு மூலம் அறிய செய்யப்படுகிறது.

8.6 அறிவுசார் மேலாண்மை:

அடித்தட்டளவில் பல்வேறு பட்டறிவுப் பயணங்கள் நடத்தப்பட்டு வருவதன் மூலமும் திட்டம் குறித்த அறிவுத்தகவல்கள் உறுதி செய்யப்படுகிறது. சிறந்த செயல்பாடுகள் மற்றும் பயிற்சிகள் போன்றவை "முற்றம்" மாத இதழில் கட்டுரைகளாக வெளியிடப்படுகின்றன. துண்டுப் பிரசுரங்கள், குறும்படங்கள் ஆகியவையும் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

8.7 2015–16 ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சாதனைகள்:

- *ரூ.43.10 இலட்சம் செலவில் 5 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு அலுவலகக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.*
- *ரூ.124.30 இலட்சம் செலவில் 4 மீன் உலர் தளங்கள் மற்றும் 16 வலை பின்னும் தளங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.*
- *நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ரூ.176.90 இலட்சம் செலவில் நான்கு மீன் ஏலக் கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.*
- *திருவள்ளூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் நான்கு மீன் கொள்முதல் மையங்கள் ரூ.104.70 இலட்சம் செலவில் துவக்கப்பட்டுள்ளன.*
- *திருவள்ளூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் இரண்டு மீனவர்கள் சங்கக் கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன மற்றும் ரூ.56.00 இலட்சம் செலவில் மாவட்ட கூட்டமைப்பு கட்டடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன.*

[2016 ஆகஸ்ட் 5

- 10 மீன் விற்பனை சங்கங்கள் அமைக்கப்பட்டு இச்சங்க அலுவலகக் கட்டடங்கள் ரூ.40.27 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- 432 மீனவர்கள் ரூ.89.90 இலட்சம் கடனிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர்.
- மீன் பிடி தொழிலாளர்களுக்கு ரூ.10.95 இலட்சம் செலவில் 487 சூரிய சக்தி மின் விளக்குகள் வழங்கப்பட்டுள்ளன.
- திருவள்ளூர், கடலூர், காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் ரூ.46.00 இலட்சம் செலவில் நான்கு குடிநீர் சுத்திகரிக்கும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- ரூ.39.06 இலட்சம் மதிப்பீட்டில் 794 குளிரூட்டும் பெட்டிகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.
- 476 தலைச்சுமை மீன் வியாபாரம் செய்யும் மகளிரை இணைத்து 119 கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு பிணையில்லா கடனாக ரூ.71.40 இலட்சம் வழங்கப்பட்டுள்ளன.
- நுண் தொழில்கள் செயல்பாடுகளை மேம்படுத்தும் வகையில் ஆறு திட்ட மாவட்டங்களில் 428 நுண்தொழில்கள் ரூ.1079 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டுள்ளது.
- 1,275 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.3,964 இலட்சம் வங்கி கடன் இணைப்பு பெற்றுத் தரப்பட்டது.
- துயர் குறைப்பு நிதியாக 6,787 பயனாளிகளுக்கு ரூ.344 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.
- 1,000 பெண்களுக்கு வருமானத்தைப் பெருக்கும் நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- 521 ஊரக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய தொழில் திறன் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

2016 ஆகஸ்ட் 5]

9. வரவு செலவுத் திட்டம் 2016–2017

2016-2017 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.21,186.577 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் வருவாய் செலவினங்களுக்காக ரூ.20,276.576 கோடியும், மூலதனச் செலவினங்களுக்காக ரூ.910.001 கோடியும் மற்றும் அரசு ஊழியர்களுக்கான கடன் தொகைக்காக ரூ.0.25 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[*2016 ஆகஸ்ட் 5*

10. முடிவுரை

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பல்வேறு திருப்புமுனை மற்றும் முன்னோடித் திட்டங்களின் மூலம் உருவாக்கப்பட்ட ஊரக உட்கட்டமைப்பானது, வாழ்வாதார வாய்ப்புகளை விரிவடையச் செய்து, அதன் விளைவாக கிராமப்புற மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துள்ளது.

இத்துறையின் நிர்வாக இயந்திரத்தினை வலுப்படுத்தும் விதமாக பல்வேறு தீர்க்கமான முயிற்சிகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. இத்தகைய முயற்சிகள் 2016-17 ஆம் ஆண்டிலும் தொடரும்.

ஊராட்சி அமைப்புகளை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன், கிராம ஊராட்சிகளுடன் நெருங்கிய ஒருங்கிணைப்புடன் செயல்படும் வகையில், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் என்ற நிர்வாக நிலையினை அறிமுகப்படுத்தியதன் மூலம், இந்த அரசு, கிராம ஊராட்சிகளின் நிர்வாக அமைப்பினை வலுப்படுத்த தீர்க்கமான முயற்சிகளை எடுத்துள்ளது.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் உதவி மற்றும் பங்கேற்பின்றி ஊரக வளர்ச்சித் திட்டங்களின் நோக்கங்களை முழுமையாக அடைய இயலாது. ஊராட்சி அமைப்பின் ஒவ்வொரு அடுக்கின் தன்னாட்சியை பாதுகாக்கும் அதே நேரத்தில், அவற்றை வலுப்படுத்தவும் பல்வேறு முன்முயற்சிகளை அரசு மேற்கொண்டுவருகிறது.

மகளிருக்கு அதிகாரமளிப்பதில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எப்போதுமே முன்னிலையில் இருந்துள்ளார்கள். இந்த இலக்கிற்கு மற்றுமொரு உத்வேகம் அளிக்கும் வகையில், இந்த அரசு, உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள பதவிகளில், 50 விழுக்காட்டினை மகளிருக்கு ஒதுக்கீடு செய்துள்ளது.

கிராமச் சாலைகளை தரம் உயர்த்துதல், வலுப்படுத்துதல் மற்றும் பராமரித்தலில் முறையான நிதிப் பயன்பாட்டினை தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் உறுதி செய்துள்ளது. இது, ஊரகப் பகுதிகளின் உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு உத்வேகத்தை அளித்து, கிராமப்புற மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுத்துள்ளது.

2016 ஆகஸ்ட் 5]

ஏழைக் குடும்பங்களின் வருவாயினை உயர்த்துவதற்காக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட செயலாக்கத்திற்கு புதிய உத்வேகம் அளிக்கப்பட்டுள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் மூலம், காடு வளர்ப்பிற்கு அளிக்கப்பட்டுள்ள முக்கியத்துவம், வனப்பரப்பை அதிகப்படுத்துவதிலும், நவீன நாகரிகத்தின் விளைவான சுற்றுச்சூழல் சமநிலைக் குலைவைச் சரி செய்வதிலும் நிரந்தர மாற்றத்தை ஏற்படுத்தும்.

தமிழகத்தில், திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையை அடைய எடுக்கப்பட்டுள்ள முன்னோடி முயற்சிகள் மற்றும் ஊராட்சி அமைப்புகள் மற்றும் சுய உதவிக் குழுக்களோடு ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்பட்ட திடக்கழிவு மேலாண்மை, விரும்பத்தக்க மாற்றங்களை அளித்துள்ளன.

தமிழ்நாடு புதுவாழ்வுத் திட்டத்தின் முன்னோடி முயற்சிகள் மூலம், 9.8 இலட்சம் இலக்கு குடும்பங்கள் பயன்பெற்று வறுமை நிலையினின்று முன்னேறி வருகின்றன. புதுவாழ்வு திட்டம் ஏற்படுத்தியுள்ள தாக்கமானது, சுய உதவி, சுய மேலாண்மை, தன்னம்பிக்கை, சுய கண்காணிப்பு மற்றும் பிற துறை திட்டங்களோடு ஒருங்கிணைத்து செயல்படுவது, எப்போதும் வளர்ச்சியில் பங்கேற்று ஒருவருக்கொருவர் நன்மை பெற முடியும் என்ற நம்பிக்கையை வலுப்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனமானது, மகளிர் திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஆகிய திட்டங்கள் மூலமாக மகளிர், ஏழை மக்கள், நலிவடைந்தோர் போன்ற சமூகத்தின் விளிம்பு நிலையில் வாழும் மக்களின் வறுமையைக் குறைத்து, நிலையான வாழ்வாதாரத்தை வழங்கி, அவர்கள் வாழ்வில் ஏற்றம் பெற அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

ஒப்பற்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் ஆற்றல்மிக்க வழிகாட்டுதலின்கீழ் செயல்படுத்தப்பட்ட பல்வேறு முன்னோடித் திட்டங்கள் மூலம், இந்த அரசால், கடந்த 5 ஆண்டுகளில் எடுக்கப்பட்ட தொடர் முயற்சிகள், ஊரகப் பகுதி மக்களது வாழ்க்கைத் தரத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை

[*2016 ஆகஸ்ட் 5*

ஏற்படுத்தியுள்ளது. ஒவ்வொருவர் முகத்திலும் புன்னகை, மக்கள் மனதில் பொதுவான நல்லுணர்வு, தங்களது எண்ணமெல்லாம் நிறைவேறும் என்ற இளைஞர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்ட முதன்மை மாநிலமாக தமிழகத்தை ஆக்க வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சரின் எண்ணத்தினை முன்னெடுத்துச் செல்வதில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை என்றும் முன்னிலையில் இருக்கும்.

இணைப்பு III

(91 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 53—சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2016—2017

1. முன்னுரை:

நாட்டிலேயே முதன்மை மாநிலமாக தமிழகத்தை உருவாக்குவதே தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023-ன் நோக்கமாகும். மேலும், தமிழகத்தை வறுமை இல்லாத மற்றும் பொது மக்களின் மேம்பட்ட வாழ்க்கைத் தரத்தை அளிக்கக்கூடிய வளமான மற்றும் முன்னேற்றமான மாநிலமாகவும் இத்தொலைநோக்குத் திட்டம் கருதுகிறது.

சமூகத்தின் பல்வேறு பிரிவினர்கள், குறிப்பாக பின்தங்கிய மற்றும் நலிந்த பிரிவினர்களின் உள்ளடங்கிய வளர்ச்சிக்காக செயல்படுத்தப்பட்டு வரும் ஏராளமான சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் இந்த அரசால் அறிமுகப்படுத்தப்பட்டன. மக்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கும் அவர்களின் நல்வாழ்விற்காகவும் பல்வேறு முதன்மைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தொழில்நுட்ப இடைவெளியைக் குறைப்பதற்காக மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்குதல், மகளிருக்கு மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் போன்ற வீட்டு உபயோகப் பொருட்கள் வழங்குதல், உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசி வழங்குதல், ஏழைகளின் பொருளாதார நிலையை மேம்படுத்த அவர்களுக்கு கறவைப்பசு / வெள்ளாடு / செம்மறியாடுகள் வழங்குதல் மற்றும் ஏழைப் பெண்களின் திருமணத்திற்காகவும் உயர் கல்வியினைத் தொடர்வதற்கு ஏதுவாகவும் அவர்களுக்குத் திருமண நிதியுதவியுடன் "திருமாங்கல்யத்திற்கு" 8 கிராம் தங்க நாணயம் வழங்குதல் போன்றவை இந்த அரசின் குறிப்பிடத்தக்க முதன்மைத் திட்டங்கள் ஆகும்.

[2016 ஆகஸ்ட் 5

ஒட்டுமொத்த சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கான சகாப்தத்தை ஏற்படுத்துவதற்காக பன்முகச் சிறப்புத் திட்டங்கள் இந்த அரசின் முயற்சியால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வேளாண்மை, எரிசக்தி, குடிநீர், கல்வி, நல்வாழ்வு, ஊரக வளர்ச்சி, தொழில் மற்றும் உள்கட்டமைப்பு போன்ற முக்கிய இனங்களில் நிலையான மற்றும் சீரான வளர்ச்சியை எய்திட தொடர்புடைய துறைகளுடன் இணைந்து இத்துறை செயல்படுகிறது.

அரசின் பல்வேறு முதன்மைத் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதையும் ஒருங்கிணைக்கப்படுவதையும் மற்றும் கண்காணிக்கப்படுவதையும் முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையினை அரசு உருவாக்கி உள்ளது. சிறப்புத் திட்டங்களின் பயன்கள் தேவைப்படுகின்ற மக்களுக்குச் சென்றடைவதை உறுதி செய்யப்படுவதும் திட்டங்கள் விரைவாகவும், பயனுள்ளதாகவும் செயல்படுத்தப்படுவதும் இத்துறையின் முக்கிய குறிக்கோளாகும். சிறப்பாக செயல்படுத்துவதற்கான முயற்சியில், இத்துறை பங்கேற்பாளர்கள் அனைவரையும் மற்றும் தொடர்புடைய துறைகளையும் இத்துறை ஈடுபடுத்துகிறது.

2. துறையின் செயல்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள்:

2.1 தமிழ்நாடு அரசின் கொள்கைகள், பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மூலம் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்வதற்காக பின்வரும் பொறுப்புகள் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன:

- *அரசின் பல்வேறு சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதை தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து கண்காணித்தல்.*
- *கள ஆய்வுகள் மேற்கொள்ளுதல், மண்டல மற்றும் மாவட்ட அளவில் திட்டங்கள் குறித்த ஆய்வு கூட்டங்கள் நடத்துதல் மற்றும் திட்டச் செயலாக்கத்தில் உள்ள இடர்ப்பாடுகளைக் களைவதற்குப் பரிந்துரைத்தல்.*
- *திட்டங்களின் தரம் மற்றும் அளவீடு போன்ற அம்சங்கள் குறித்து அரசுக்குத் தேவையான குறிப்புகள் வழங்குதல் மற்றும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள பரிந்துரைத்தல் .*

2016 ஆகஸ்ட் 5]

- *மாவட்டக் கண்காணிப்பு அலுவலர்களின் அறிக்கைகளை (கள ஆய்வு மற்றும் ஆய்வறிக்கைகளின் அடிப்படையில்) தொகுத்து, கொள்கை அளவில் திருத்தங்கள் தேவைப்படும் இனங்கள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தலைமைச் செயலாளர் வழியாக அறிக்கையாகச் சமர்ப்பித்தல்.*

- *வழங்கப்படும் சேவையின் தரத்தினை உயர்த்துவதற்கு, பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து பல்வேறு திட்டங்களின் வழிகாட்டி நெறிமுறைகளில் தற்போதைய நிலைக்கேற்ப திருத்தங்கள் மேற்கொள்ள பரிந்துரைத்தல்.*

- *தொழில்நுட்ப மாற்றங்களைக் கருத்திற்கொண்டு கூர்ந்தாய்வு மூலம் திட்டங்கள் சீரமைத்தல், நடைமுறையை எளிதாக மேம்படுத்துதல், அரசு நிறுவனங்களுக்கும் பொது மக்களுக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைப்பதற்கு வழிவகை செய்தல்.*

- *அரசுக்குத் தேவையான சிறப்பு அறிக்கைகளைத் தயாரித்து அளித்தல்.*

2.2 அரசின் திட்டங்கள் சிறப்பாக நிறைவேற்றப்படுவதை உறுதி செய்ய விழிப்புடன் கூடிய திறமையான ஆய்வு மற்றும் கண்காணிப்பு அமைப்பினை பிரத்யேகமாக தலைமைச் செயலகத்தில் அரசு ஏற்படுத்தியுள்ளது. ஏராளமான திட்டங்களைக் கண்காணிப்பது ஒரு மாபெரும் பணியாகும். இதனை நிறைவேற்றுவதற்காக மாவட்ட அளவில் காலமுறை ஆய்வு மற்றும் மேற்பார்வை செய்வதற்கு அரசின் செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

3. கண்காணிப்பு:

3.1 கண்காணிப்பு என்பது ஒரு முக்கியமான செயலாகும். ஏனெனில், இன்றைய நிலைக்கேற்ப விவரங்களைத் தொடர்ந்து பராமரிப்பதில் முக்கியப் பங்கினை வகிப்பதுடன் திட்டங்கள் திறமையாக நிறைவேற்றப்படுவதற்கு ஓர் உள்தணிக்கை செயல்பாடு போன்றதொரு பணியையும் மேற்கொள்கிறது. கண்காணிப்பு ஒரு திட்டத்தின் முன்னேற்றம் குறித்து அதன் ஆரம்ப கட்ட நிலையிலேயே அரசுக்கு முதன்மையாக வழங்குகிறது. திட்டங்களின் பயன்கள் சென்றடைவதை சீர்படுத்துவதற்கு உதவுவதோடு

திட்டங்கள் தொடர்வதற்கான ஆதாரங்கள் அளிப்பதற்கும் கண்காணிப்பு இன்றியமையாதது.

திட்டம் உரிய மக்களுக்கு பொருத்தமானதுதானா என்பதை அறியவும், அதனைச் செயல்படுத்துவதில் கள அளவில் உள்ள இடர்ப்பாடுகளைக் கண்டறியவும் மற்றும் அதன் சிறப்புத் தன்மைகள் குறித்தும் கண்காணிப்பு அத்தியாவசியமான கருத்துகளை வழங்குகிறது. மேலும், திட்டத்தின் முன்னேற்றம் குறித்து நிர்ணயிக்கப்பட்ட கால அளவில் மதிப்பீடு செய்வதற்கு கண்காணிப்புப் பணி உதவுகிறது. திட்டங்கள் செயல்படுத்தப்படும்போதே அவற்றின் முன்னேற்றம் குறித்த விவரங்களை முறையாகச் சேகரிக்கவும் அதனைப் பகுப்பாய்வதற்கும் தொடர் கண்காணிப்பு வழிவகை செய்கிறது.

இத்துறையின் கண்காணிப்பு, திட்டங்கள் சரியான பாதையில் செயல்படுத்தப்படுகின்றனவா, நிர்ணயிக்கப்பட்ட கால அட்டவணையின்படி திட்டங்களில் முன்னேற்றம் உள்ளனவா மற்றும் எந்தெந்த இனங்களில் முன்னேற்றம் செய்யப்பட வேண்டும் என்பதைக் கண்டறிவதிலும் நுட்பமான தகவல்களை அனைத்துத் துறைகளுக்கும் வழங்குவதிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றது.

அரசின் பல்வேறு திட்டங்கள் குறிப்பாக முதன்மைத் திட்டங்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் பலன்களை சிறப்புடன் நிர்வகிக்கும் பொருட்டு பல்வேறு துறைகளின் செயல்திறன்களை சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை கண்காணிக்கிறது.

3.2 அரசின் சிறப்புத் திட்டங்களைக் கண்காணித்தல்:

ஏழ்மையிலும் ஏழ்மை நிலையிலுள்ள மக்களின் மேம்பாட்டுக்காகவும், மக்களின் நீண்ட நாள் தேவைகளை நிறைவு செய்யும்பொருட்டும் அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. பல்வேறு திட்டங்களின் முன்னேற்றத்தினைக் கண்காணிக்கும் பொறுப்பு, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதால், பிற துறைகளிடமிருந்து காலமுறையிலான முன்னேற்ற விவரங்களைச் சேகரிப்பதற்கு உரிய தகவல் தொழில்நுட்பங்களைக் கொண்டு, முழுமையான உடன்நிகழ் (on-line) அமைப்பினை இத்துறை உருவாக்கி உள்ளது.

2016 ஆகஸ்ட் 5]

3.3 செயல்திறன்மிக்க கண்காணிப்பிற்காக ஏற்படுத்தப்பட்ட நுட்பங்கள்:

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை முழுமையான கண்காணிப்பு அமைப்பினை உறுதி செய்வதற்காக பின்வரும் வழிமுறைகளை வகுத்துள்ளது:

(அ) அறிவிப்புகளைக் கண்காணித்தல்:

சட்டமன்றப் பேரவையில், மேதகு ஆளுநர் உரை மற்றும் நிதிநிலை அறிக்கையில் உள்ள அறிவிப்புகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் அறிவிக்கப்படும் அறிவிப்புகள், மாவட்ட ஆட்சியர்களின் மாநாட்டில் அறிவிக்கப்படும் அறிவிப்புகள் மற்றும் இதர நிகழ்வுகளில் அறிவிக்கப்படும் அறிவிப்புகளின் முன்னேற்றங்களை இத்துறை கூர்ந்து கண்காணிக்கிறது. மேலும், சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு அமைச்சர்களால் அறிவிக்கப்படும் அறிவிப்புகளையும் இத்துறை கண்காணிக்கின்றது.

இந்த அறிவிப்புகளின் முன்னேற்றங்களை தொடர்புடைய துறைகளுடன் இணைந்து இத்துறை கூர்ந்து கண்காணிக்கிறது. மேலும், தலைமைச் செயலாளர் தலைமையில் நடத்தப்படும் 'அனைத்துச் செயலாளர்கள் கூட்டத்தில்' ஆய்வு செய்யப்படுகிறது மற்றும் இரண்டு வாரத்திற்கு ஒரு முறை, அறிவிப்புகளின் முன்னேற்ற அறிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது. அறிவிப்புகளின் முன்னேற்றத்தை ஆய்வு செய்வதற்காக இத்துறையால் உருவாக்கப்பட்ட மென்பொருள், தலைமைச் செயலகத்தின் உள்வலையதளத்தில் (intranet) நிறுவப்பட்டு, சம்பந்தப்பட்ட துறைகளும் அறிவிப்புகளின் நிலையினை உடன்நிகழ் (online) முறையில் அவ்வப்போது பதிவு செய்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. அரசின் ஒவ்வொரு துறைகளும் தங்களின் துறைத் தலைவர்களைத் தொடர்பு கொள்வதற்கும், அறிவிப்புகளின் நிலையினை உடனுக்குடன் பதிவு செய்வதற்கும் தொடர்பு அலுவலர்களை நியமித்துள்ளன.

பல்வேறு துறைகளிடமிருந்து பெறப்பட்ட முன்னேற்ற அறிக்கைகள் தொகுக்கப்பட்டு மற்றும் அறிவிப்புகளின்

[2016 ஆகஸ்ட் 5

முன்னேற்றங்கள் வகைப்படுத்தப்பட்டு காலமுறை அறிக்கையாக அரசுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன. இவ்வாறு தொகுக்கப்பட்ட அறிக்கைகள் உயர்நிலை ஆய்வுக் கூட்டங்களில் பயன்படுத்தப்படுகின்றன.

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையால் மேற்கொள்ளப்படும் கண்காணிப்பு பணியின் மூலம் ஒதுக்கீட்டினை அதிகப்படுத்தவும், விரிவுபடுத்தவும் அல்லது புதிய திட்டங்களாக அறிமுகப்படுத்துவதற்கும் அல்லது நடைமுறையில் உள்ள திட்டங்களில் மாற்றங்களைச் செய்வதற்கும் முக்கிய விவரங்களை வழங்குகிறது.

(ஆ) அரசின் முதன்மைத் திட்டங்களைக் கண்காணித்தல்:

கிராமப்புற ஏழை மக்களின் வருமானத்தை உயர்த்துதல் மற்றும் அதன் வாயிலாக அவர்களின் வாழ்வாதாரத்தை ஏற்படுத்திட கறவைப் பசு/வெள்ளாடு/செம்மறி ஆடுகள் வழங்குதல், தகவல் தொழில்நுட்பத்திறன் இடைவெளியைக் குறைப்பதற்காக மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்குதல், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக மகளிருக்கு மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் போன்ற வீட்டு உபயோகப் பொருட்கள் வழங்குதல், ஏழைகளின் நல்வாழ்வினைப் பாதுகாத்திட முழுமையான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், கருவுற்ற பெண்களுக்கு டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம், தேவையுள்ள ஏழை மற்றும் நலிவடைந்த மகளிருக்கு பல்வேறு திருமண உதவித் திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்குதல் மற்றும் முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் போன்ற முதன்மைத் திட்டங்கள் இந்த அரசின் புரட்சிகரமான நடவடிக்கைகள் ஆகும். பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படுகின்ற இத்திட்டங்களை, இணைந்து கண்காணிக்கும் பணி சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களின் முன்னேற்றம் குறித்த அறிக்கைகளைக் குறிப்பிட்ட கால இடைவெளியில் பல்வேறு துறைகளிடமிருந்து இத்துறை சேகரிக்கிறது. இவ்வாறு சேகரிக்கப்படும் அறிக்கைகள் இத்துறை அலுவலர்களால் முறையாகத் தொகுக்கப்படுகின்றன. இந்த முன்னேற்ற அறிக்கைகள் ஆய்வுக் கூட்டங்களுக்கு அடிப்படை விவரங்களாக அமைகின்றன.

2016 ஆகஸ்ட் 5]

(இ) உயர்நிலை கண்காணிப்புக் குழு:

அரசின் சிறப்புத் திட்டங்களை ஆய்வு செய்வதற்காகவும், கண்காணிப்பதற்காகவும் உயர்நிலை கண்காணிப்புக் குழு ஒன்று அரசால் பின்வருமாறு அமைக்கப்பட்டுள்ளது:

வ. எண்	அலுவலரின் பதவி	நிலை
1.	அரசு தலைமைச் செயலாளர்	தலைவர்
2.	அரசு முதன்மைச் செயலாளர், நிதித்துறை	உறுப்பினர்
3.	அரசு முதன்மைச் செயலாளர், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை	உறுப்பினர் – செயலர்
4.	தொடர்புடைய துறைகளின் அரசு முதன்மைச் செயலாளர்கள்/ செயலாளர்கள்	உறுப்பினர்கள்

இந்த உயர்நிலை கண்காணிப்புக் குழு, முதன்மைத் திட்டங்கள் செயல்படுத்தப்படும் விவரங்கள் குறித்து விவாதிப்பதுடன், பிரச்சினைகள் ஏதேனும் இருப்பின் அது குறித்தும் முடிவு செய்கிறது. பொதுவாக மாதத்திற்கு ஒருமுறை கூட்டப்படும் உயர்நிலை கண்காணிப்புக் குழுவின் கூட்டங்களில் முதன்மைத் திட்டங்களின் தற்போதைய நிலை, செயல்படுத்துவதில் உள்ள சவால்கள் மற்றும் பிரச்சினைகள் போன்றவை விரிவாக விவாதிக்கப்படுகின்றன. இக்கூட்டத்தில் நடைபெறும் விவாதங்கள், மாவட்டக் கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் துறை அலுவலர்களின் கருத்துகளின் அடிப்படையில் கொள்கை அளவிலான மாற்றங்கள் மற்றும் முதன்மைத் திட்டங்களின் வழிகாட்டு நெறிமுறைகள் மேன்மைப்படுத்தப்படுகின்றன.

(ஈ) மாவட்ட ஒருங்கிணைப்பு அலுவலர்கள்:

மாவட்ட அளவில் செயல்படுத்தப்படும் முதன்மைத் திட்டங்களின் செயல்பாட்டினை கண்காணிப்பதற்கென மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் போன்ற உயர் அலுவலர்கள் தொடர்பு அலுவலர்களாக மாவட்ட ஆட்சியர்களால் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த தொடர்பு

அலுவலர்கள் பிற துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து பணியாற்றவும், பின்புல தகவல்களைப் பெற்றிடவும் மற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மாவட்டங்களில் மையப் பொறுப்பாளர்களாக செயல்பட்டு வருகின்றனர். இத்துறையின் அலுவலர்கள், கள ஆய்வு மேற்கொள்ளும்போது மாவட்ட தொடர்பு அலுவலர்கள் தேவையான உதவிகளை வழங்குகின்றனர்.

(உ) கள ஆய்வுகள்:

மாவட்ட அளவில் பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் செயல்திறன்கள் குறித்து இத்துறையின் அலுவலர்கள் கள ஆய்வு மேற்கொண்டு அறிக்கைகளை அரசுக்கு சமர்ப்பிக்கின்றனர்.

(ஊ) மண்டல ஆய்வுக் கூட்டங்கள்:

அரசின் முதன்மைத் திட்டங்கள் மற்றும் குறிப்பிட்ட பிற திட்டங்களின் செயலாக்கம் குறித்த ஆய்வுக் கூட்டங்கள், மண்டல அளவில் மாவட்ட ஆட்சியர்களுடன் நடத்தப்படுகின்றன. இதுபோன்ற மண்டல ஆய்வுக் கூட்டங்களில் தொடர்புடைய துறைகளின் உயர் அலுவலர்கள் திட்டங்கள் செயல்படுத்தப்படும் நடைமுறைகள் குறித்த விரிவான கலந்துரையாடல்களில் கலந்துகொண்டு பயன்பெறுகின்றனர். வழங்கப்படும் சேவையின் தரத்தினை உயர்த்தும்பொருட்டு கள அளவிலான பிரச்சினைகள்/ திட்டங்களில் மாறுதல்கள் / முன்னேற்றங்கள் ஆகியன குறித்து மாவட்ட அலுவலர்கள் எடுத்துரைப்பதற்கு மண்டல ஆய்வுக் கூட்டங்கள் வழிவகை செய்கின்றன.

3.4 கண்காணிப்பு அலுவலர்கள்:

அரசுச் செயலாளர்கள்/சிறப்புச் செயலாளர்கள்/ கூடுதல் செயலாளர்கள்/ கூடுதல் தலைமைச் செயலாளர்களை மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களாக அரசு நியமித்துள்ளது. இந்த மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள், அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட மாவட்டங்களில் மாதந்தோறும் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி, பல்வேறு திட்டங்கள் குறிப்பாக முதன்மைத் திட்டங்கள் குறித்து கள ஆய்வு மேற்கொண்டு திட்டங்கள் விரைவாக செயல்படுத்திட தக்க ஆலோசனைகளையும், தீர்வுகளையும் மாவட்ட அலுவலர்களுக்கு வழங்கி வழிவகை செய்கின்றனர்.

2016 ஆகஸ்ட் 5]

மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள், துறைகளுக்கிடையேயான பிரச்சினைகளைக் களைவதற்கு துறைத் தலைவர்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதோடு நடைமுறையிலுள்ள பல்வேறு திட்டங்களின் வழிகாட்டு நெறிமுறைகளின் சிறப்புத் தன்மைகளை மதிப்பிடுதல் மற்றும் அரசு அளவில் மேற்கொள்ளப்படவேண்டிய கொள்கை அளவிலான மாற்றங்கள் குறித்தும் பரிந்துரைகளை அளிக்கின்றனர். பொது மக்களின் பெருகிவரும் எதிர்பார்ப்புகள் மற்றும் கள அளவிலான தேவைகளை நிறைவு செய்யும் வகையில் கொள்கைகளைத் தொடர்ந்து ஆய்வு செய்திட தற்போதைய நடைமுறை ஏதுவாக உள்ளது. கண்காணிப்பு அலுவலர்கள், திட்டங்கள் வாரியாக முக்கியமான கருத்துக்கள், எடுக்கப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகள், திட்டத்தின் மேம்பாடு மற்றும் மாறுதல்கள் ஆகியவை குறித்த பரிந்துரைகளை அளிக்கின்றனர். கண்காணிப்பு அலுவலர்களால் அளிக்கப்படும் பரிந்துரைகள் தொகுக்கப்பட்டு தலைமைச் செயலாளர் வழியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

4. சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்:

2011 ஆம் ஆண்டு அரசால் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை உருவாக்கப்பட்டு பின்வரும் இரண்டு முன்னோடி திட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பு இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(i) *மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்குதல் மற்றும்*

(ii) *மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்கள் வழங்குதல்.*

அரசின் பல்வேறு சிறப்புத் திட்டங்களைக் கண்காணிப்பதுடன் மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம் நடப்பாண்டில் இத்துறையால் செயல்படுத்தப்படும்.

4.1 மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்குதல்:

தேசிய மற்றும் பன்னாட்டு தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் விரும்பும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்வதோடு, வெளிநாட்டு நேரடி

[2016 ஆகஸ்ட் 5

முதலீடுகளையும் பெருமளவில் பெற்று வருகின்றது. இந்த நவீன தகவல் யுகத்தில், கணினித் திறன், முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு இன்றியமையாததாக விளங்குகிறது. ஏனெனில், தகவல் தொடர்பு தொழில்நுட்பம் (ICT) உலக அளவில் சமூக பொருளாதார மாற்றத்திற்கான நுழைவாயிலாக உள்ளது. இருப்பினும், நகர்ப்புற மற்றும் கிராமப்புற பகுதிகளுக்கிடையேயும், கணினிப் பெற்றிருப்போர் மற்றும் கணினி இல்லாதவர்களிடையேயும் மிகப்பெரிய தகவல் தொழில்நுட்ப இடைவெளி உள்ளது.

இந்த தகவல் தொழில்நுட்ப இடைவெளியைக் குறைப்பதற்காக, தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல்தொழில்நுட்ப கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டத்தினை தமிழ்நாடு அரசு 2011-12 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது.

நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் பொருளாதார மற்றும் சமுதாயத்தில் பின்தங்கியுள்ள மாணவர்கள், கணினி தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்குவதற்கும், அவர்களுக்கு தகவல் தொழில்நுட்ப கல்வி அறிவில் உள்ள இடைவெளியைக் குறைப்பதுடன் சமநிலையில் போட்டியிட தகுந்த தளத்தினை வழங்குவதை குறிக்கோளாகக் கொண்ட இந்த திட்டம் நாட்டிலேயே ஒரு முன்னோடித் திட்டமாக திகழ்கின்றது.

மாணவர்கள், தொழில்நுட்பத்தின் சமீபத்திய கண்டுபிடிப்புகளை அறிந்துகொள்வதையும், கணினிகளில் அறிவுத்திறன் பெற்று அவர்கள் வேலைவாய்ப்பு போட்டிகளில் வெற்றி பெற்றிடுவதையும் இந்த அரசு குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இந்த திட்டத்தின் வாயிலாக, மாநில அரசின் கல்விக் கொள்கை சம்பந்தப்பட்ட மூன்று முக்கிய அம்சங்களான அணுகுதல், பங்கேற்பு, வெற்றி பெறல் ஆகியவற்றிற்கு இந்த அரசு வழி அமைத்துக் கொடுத்துள்ளது.

2011-12 மற்றும் 2012-13 ஆண்டுகளில், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயின்ற மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டன. 2013-14 ஆம் ஆண்டு முதல் அரசு மற்றும் அரசு உதவி பெறும்

2016 ஆகஸ்ட் 5]

பள்ளிகளில் உள்ள பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்கள், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன் அடைகின்றனர்.

ஆண்டுவாரியாக / கல்வி நிறுவனங்கள் வாரியாக மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்குதல்

ஆண்டு	பள்ளிகள்	கலை/ அறிவியல் கல்லூரிகள்	பொறியியல் கல்லூரிகள்	பல்தொழில் நுட்பக் கல்லூரிகள்
2011–12	12–ம் வகுப்பு	முதல் மற்றும் மூன்றாம் ஆண்டு	இரண்டாம் மற்றும் நான்காம் ஆண்டு	முதல் மற்றும் மூன்றாம் ஆண்டு
2012–13	12–ம் வகுப்பு	மூன்றாம் ஆண்டு	இரண்டாம் மற்றும் நான்காம் ஆண்டு	முதல் மற்றும் மூன்றாம் ஆண்டு
2013–14 முதல்	12–ம் வகுப்பு	–	–	முதலாம் ஆண்டு

'தமிழ்நாடு மின்னணு நிறுவனம்' (ELCOT) *இத்திட்டத்தின்கீழ் மடிக்கணினிகள் கொள்முதல் செய்யும் பணிக்கான முகமை நிறுவனமாகச் செயல்பட்டு வருகிறது. 2011-12 மற்றும் 2012-13 ஆகிய ஆண்டுகளுக்கான மடிக்கணினிகள், தொடர்புடைய துறைகளான பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி இயக்ககங்கள் மூலமாக வழங்கப்பட்டன. 2013-14 ஆம் ஆண்டு முதல் மடிக்கணினிகள் பள்ளிக் கல்வி மற்றும் தொழில் நுட்பக் கல்வி இயக்ககங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.*

இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்ற மடிக்கணினிகள் "Windows 7" *தொடக்கம்* (Starter) *மற்றும் உயர் கணினி பயன்பாடு வளர்ச்சி மையத்தின்* BOSS LINUX *ஆகிய இரட்டை தொடக்க வசதி உடையதாகவும், தமிழ் இணைய தொடக்கக் கல்விக் கழகம்*

மற்றும் கல்வித் துறைகளின் பாடத்திட்டங்கள் உள்ளடங்கியதாகவும் உள்ளன. பார்வைத் திறன் அற்ற மாணவர்களுக்கு வழங்கப்படும் மடிக்கணினிகளில் அவர்கள் பயன்படுத்தும் வகையில் சிறப்பு மென்பொருள் நிறுவப்பட்டுள்ளது. இத்தகைய மடிக்கணினியை வழங்குவதன் மூலமாக மாணவர்கள் அடிப்படை அலுவலகப் பயன்பாட்டு மென்பொருள்களான பரவுத்தாள் (Spread Sheet), விளக்கக் காட்சி (Power Point Presentation) மற்றும் சொற்செயலி (Word Processing) ஆகியவற்றை விரைவாக கற்றுக்கொள்ள இயலுகிறது.

இந்த மடிக்கணினிகளுக்கு அதனில் உள்ள மின்கலனையும் சேர்த்து ஓராண்டு உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளன. மடிக்கணினிகள் நன்கு செயல்படுவதற்கும் மற்றும் தொடர் பராமரிப்பை உறுதி செய்யும் பொருட்டும் அனைத்து மாவட்டங்களிலும் தொடர்புடைய நிறுவனங்கள் சேவை மையங்களை அமைத்துள்ளன. இவ்வசதிகள் குறித்து மாணவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டமானது இந்தத் தலைமுறை மாணவர்களுக்கு முழு அறிவுசார் வாய்ப்புகளுக்கு வழிவகை ஏற்படுத்தியுள்ளது. மாணவர்கள் வேலை தேடத் துவங்கும் காலத்திலேயே நவீன தொழில்நுட்பத்தின் பயன்களை இத்திட்டத்தின் வாயிலாக அவர்களுக்கு அரசு வழங்குகிறது.

மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம் ஒரு மாபெரும் வெற்றியை அளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் பயனடைந்த மாணவர்கள் கணினியின் பலதரப்பட்ட பயன்பாடுகளைக் கண்டறிந்து, அதனை உபயோகித்துக்கொள்ள முடிகிறது. குடும்பத்தில் உள்ள பிற உறுப்பினர்கள், குறிப்பாக இளம் தலைமுறையினர் கணினி குறித்த தொழில்நுட்பத்தை அறிந்துகொள்வதற்கும், இயக்குவதற்கும் மிகுந்த ஈடுபாடு காட்டுகின்றனர் என்பதும் தெரிய வருகிறது.

இந்த வளர்ச்சியானது எதிர்காலத் தலைமுறையினர் கணினி தொழில்நுட்ப கல்வியறிவிற்கு தங்களைத் தயார்படுத்திக் கொள்ளவும் மற்றும் கணினி தொழில்நுட்ப உலகின் அபரிமிதமான வாய்ப்புகள் மூலம் உலக அளவில் திகழவும் வழிவகை செய்துள்ளது.

2016 ஆகஸ்ட் 5]

குடும்பத்தின் இளம் தலைமுறையினர் இதன்மீது கொண்டுள்ள ஆர்வம் சமூகத்தில் நிகழவிருக்கும் ஒரு மாற்றத்தின் அறிகுறியினை இத்திட்டம் வெளிக்கொணர்கிறது.

மொத்தத்தில், மாணவர்கள் மடிக்கணினியை ஒரு கருவியாக மட்டும் பார்க்காமல், ஏற்றமிகு எதிர்காலத்திற்கான சாளரமாகவும் மற்றும் அவர்களின் சகாக்கள் மத்தியில் சமூக நிலையை உயர்த்துவதாகவும் கருதுகின்றனர்.

இந்த திட்டம் மாணவர் சமுதாயத்திற்கு திறன் மதிப்பை கூடுதலாக்குவதோடு, காலப்போக்கில் கணினி பயன்பாடு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு காலகட்டத்திற்கு மேல் அவர்களின் 'படைப்புத் திறனை தூண்டுவதற்கு' ஒரு முன்னோடித் திட்டமாகத் திகழும். இந்த மாற்றமானது இத்திட்டத்தின் நிறைவான வெற்றியின் அடையாளமாக திகழும்.

தமிழக அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பல்வேறு புதுமையான திட்டங்கள் பிற மாநிலங்களால் பின்பற்றப்படுவதைப்போல இத்திட்டமும் பின்பற்றப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2011-12 முதல் 2015-16 ஆண்டுகள் வரை 31.78 இலட்சம் மடிக்கணினிகள் மாணவ மாணவிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கும் திட்டம் 2016-17 ஆம் நிதியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். உத்தேசமாக 5.35 இலட்சம் மாணவர்கள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற உள்ளனர். இதற்கென நிதிநிலை அறிக்கையில் ரூ.890.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.2 மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்கள் வழங்கல்:

மகளிருக்கு வீட்டுப் பணிகளை எளிதாக்கவும், வளர்ந்துவரும் பொருளாதாரத்தில் பங்கேற்று வளம் பெறச்செய்யவும் அரசு மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டரை ஒரு தொகுப்பாக வழங்கும் திட்டத்தை அறிவித்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 2011-12 முதல் 2015-16 ஆண்டுகள் வரை 1.75 கோடி மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் அடங்கிய தொகுப்புகள் மகளிருக்கு வழங்கப்பட்டுள்ளன.

4.3 நிறுவன வளத் திட்டமிடல் (Enterprise Resource Planning-ERP):

இந்தத் துறையால் செயல்படுத்தப்படும் மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் மடிக்கணினிகள் மாணவர்களுக்குச் சென்றடைவதைக் கண்காணிக்க நிறுவன வளத் திட்டமிடல் குறித்த ஒரு உயரிய மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மேலாண்மை மென்பொருள், நிறுவனத்தின் அனைத்து பணிகளையும் ஒருங்கே நிர்வகிக்க உதவுகிறது. இந்த நிறுவன வளத் திட்டமிடல் மென்பொருள், பொருட்கள் வாங்குதல், வழங்குதல் மற்றும் விநியோகித்தல் போன்ற அனைத்து அம்சங்களையும் ஒருங்கே உள்ளடக்கிய ஒரு மென்பொருளாகும். மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்திற்காக இந்த மென்பொருள் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால் (எல்காட்) உருவாக்கப்பட்டுள்ளது. பள்ளிக் கல்வித் துறை, உயர் கல்வித் துறை மற்றும் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்) ஆகியவற்றில் மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்திற்கு இம்மென்பொருள் பயன்படுத்தப்படுகிறது.

5. முடிவுரை:

தமிழ்நாட்டில் பல்வேறு நலத் திட்டங்கள் சிறப்பான முறையில் உருவாக்கப்பட்டு, செயல்படுத்தப்படுவதன் மூலம் சமுதாயத்தில், பொருளாதாரத்தில் பின்தங்கிய ஏழை எளிய மக்களின் வாழ்வில் மாபெரும் தாக்கமும், மாற்றமும் ஏற்பட்டுள்ளன.

அரசின் திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்படுவதன் மூலம் மாநிலத்தில் ஆரோக்கியமான தாய்மார்கள் ஆரோக்கியமான மகவை பெற்றிடுவதை உறுதி செய்தல், மாணவ/மாணவியர்களது திறன் மற்றும் வேலைவாய்ப்பினை அதிகப்படுத்துதல், ஏழை எளியோருக்கு வாழ்வாதாரங்களை வழங்கி அவர்களது வருமானத்தைப் பெருக்குதல், ஊரக ஏழை மக்களுக்கு சுற்றுச்சூழலுக்குத் தகுந்த வீடுகள், சமுதாயத்தில் கைம்பெண்கள் மற்றும் நலிவடைந்தோருக்கு உதவுதல் மற்றும் தேவையுள்ள அனைவருக்கும் மருத்துவக் காப்பீடு போன்ற சிறப்புத் திட்டங்கள்

2016 ஆகஸ்ட் 5]

ஆதாரமாக விளங்குகின்றன. தொடர் மற்றும் நீடித்த கண்காணிப்பின் வாயிலாக பல்வேறு அரசு திட்டங்களின் செயல்திறன்களை மேம்படுத்துவதற்கு வலுவான மற்றும் அத்தியாவசிய கட்டமைப்பினை சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை வழங்கி வருகிறது.

தலைமைச் செயலகத்தில் உள்ள துறைகள் பல்வேறு திட்டங்களை கண்காணிப்புக்கு பயன்படுத்துவதற்காக சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை எளிதான மற்றும் பயன்படுத்துவோருக்கு உபயோகமாக உள்வலையதள மென்பொருளினை வடிவமைத்துள்ளது. திட்டங்களை மேம்படுத்துவதற்கான வழிவகைகளை இத்துறை கண்டறிவதன் வாயிலாக திட்ட செயல்பாட்டின் திறனை அதிகப்படுத்தவும், எளிமைப்படுத்தவும், நிர்வாகத் திறன் தரத்தை உயர்த்தவும் இயலுகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு மற்றும் எழுச்சியூட்டும் தலைமையின் கீழ் சமுதாயத்தின் பல்வேறு சமூகத்தினரின் நலனுக்காக உருவாக்கப்பட்ட முன்னோடித் திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதை சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை தொடர்ச்சியாக கண்காணித்து வருகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

**Copies can be had from the Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the
Director of Stationery and Printing,
Chennai-600 002.**